பாரதத்தின் பொருளாதார வரலாறு

(கி.பி. 1857 முதல் 1970 வரை)

(இரண்டாம் பகுதி)

ஆசிரியர்
ம. திருநாவுக்கரசு, எம்.ஏ., பி.எச்டி.,
துணைப்பேராசிரியர், பொருளாதாரத் துறை,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி,
கோயம்புத்தூர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—497

பாரதத்தின் பொருளாதார வரலாறு

(கி.பி. 1857 முதல் 1970 வரை)

(இரண்டாம் பகுதி)

ஆசிரியர்
ப. திருநாவுக்கரசு, எம்.ஏ., பி.எச்டி.,
துணைப்பேராசிரியர், பொருளாதாரத் துறை,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி,
கோயம்புத்தூர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—September, 1973

T.N.T.B.S. (C.P.) No. 497

© Tamil Nadu Text Book Society

ECONOMIC HISTORY OF INDIA (1857 TO 1970)—PART II

M. THIRUNAVUKKARASU

Price Rs. 7-55

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
SUNRISE PRINTERS,
92, Karaneeswaran Koil St.,
Madras-4.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின் மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'பாரதத்தின் பொருளாதார வரலாறு' (இரண்டாம பகுதி)** என்ற இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **497**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **532** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பக்கம்

13. நாட்டு வருமானம் ... 1
14. தொழில் வளர்ச்சி ... 29
15. தொழில் கொள்கையும் தொழில் அனுமதிக் கொள்கையும் ... 53
16. வாணிகக் கொள்கை ... 84
17. தொழில் நிதியும், நிருவாகப் பதிலாளி முறையும் ... 99
18. பஞ்சாலைத் தொழில் ... 121
19. இரும்பு, எஃகு தொழில் ... 141
20. சிறுதொழில்கள் ... 167
21. தொழிலாளர் இயக்கம் ... 192
22. இருப்புப்பாதை ... 228
23. வெளிநாட்டு வாணிகம் ... 255
24. செலாவணி ... 298
25. பாங்கு அமைப்பு ... 325
26. இணைப்பு அரசு அமைப்பில் நிதித்தொடர்புகள் ... 352

மேற்கோள் நூற்பட்டியல் ... 384

கலைச்சொற்கள் ... 391

13. நாட்டு வருமானம்

முன்னுரை

நாட்டு வருமானம் ஒரு குறியீட்டு எண்ணாகும். தொகு அளவு உற்பத்தியை இது குறிப்பிடுகிறது. ஓராண்டு காலத்தில் தொகு அளவில், நாட்டு மக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் பண மதிப்பை நாட்டின் மொத்த உற்பத்தி (Gross National Product) என்பர். பொருள்களை உற்பத்தி செய்வதற்காக மூலதனக்கருவிகள் பயன் படுத்தப்படு கின்றன. எனவே மூலதனக் கருவிகளின் தேய்மானத்தை மொத்த உற்பத்தியிலிருந்து கழிவு செய்த பின்னர் நிகர நாட்டு உற்பத்தி (Net National Product) கிடைக்கிறது. உற்பத்திக் காரணிகளுக்குச் சன்மானமாக வழங்கப்படும் ஊதியங்களின் கூட்டுத்தொகையைவிட நிகர நாட்டு உற்பத்தி அதிகமாக இருக்கும். அதாவது நிகர நாட்டு உற்பத்தியிலிருந்து மறைமுக வரிகளைக் கழித்த பின்னர் உற்பத்திக்காரணிகளின் தொகு வருமானம் கண்டு அறியப்படுகிறது. இதை உற்பத்திக்காரணிச் செலவாலாகிய நாட்டு வருமானம் என்றோ, நாட்டு வருமானம் என்றோ அழைக்கலாம்.

நீண்டகால ரீதியில் நாட்டுவருமானம் உயர்ந்து செல்லுமானால், நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்திருப் பதையும், மக்களின் வேலை வாய்ப்பு உயர்ந்திருப்பதையும், அவர்களின் நுகர்வுமட்டம் உயர்த்தப்பட்டிருப்பதையும் அறியலாம். சுருக்கமாக நாட்டு வருமானத்தைக் குறிக்கும் புள்ளி விவரங்களைக் கொண்டு ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கை வளத்தை அறிந்து கொள்ளலாம்.

நாட்டுவருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தலா வருமானத்தை அறியலாம். தலா வருமானம் (per captia income) உயர்ந்து செல்லுமானால் நாட்டின் பொருளாதார உற்பத்தி, மக்கள் தொகைப் பெருக்கத்தை விட அதிக வேகமாக உயர்ந்து செல்கிறதென்பதை அறியலாம். மக்கள் அனைவருக்கும்

(வருமானப் பங்கீட்டில் அதிக மாறுதல்கள் ஏற்படாத வரை) கூடுதலான நுகர்வுப் பொருள்கள் கிடைக்கும். முன்பு உள்ளதை விட நல இழப்பு அதிகம் இல்லாமல் சேமிக்கவும், முதலீடு செய்யவும் முடியும். வருமானம் உயர்ந்து செல்கின்ற காரணத்தால் நாட்டில் இயல்பாகக் காணப்படும் செல்வ, வருமான ஏற்றத் தாழ்வுகளால் தோன்றக்கூடிய வர்க்க உணர்ச்சியும், போராட்டமும் அநாவசியமாகி விடுகின்றன. மக்கள் அனைவரின் அடிப்படை விருப்பங்களும் எளிதில் நிறைவேற்றப்படுவதே இதற்குக் காரணம். தொழிலாளர்களின் அடிப்படை விருப்பங்கள் நிறைவேற்றப்படுவதால் அவர்கள் மன நிறைவுடன் இருப்பார்கள் என்று கூறமுடியாது. மேலும் மேலும் தங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காகக் கடினமாக உழைக்க முன் வருவார்கள். ஓரளவு பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட பின்னர் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய சக்திகள் தீவிரமாகச் செயல்படும். இவ்வகையில் பொருளாதார வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் தூண்டக்கூடிய ஊக்க சக்தியாகச் செயல்படுகிறது. வளர்ச்சி அடைந்த ஒரு நாட்டில்தான் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சிறப்பு ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்த முடியும். இது தவிரப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில்தான் ஒரு நாட்டின் அரசியல் செல்வாக்கு அமைந்திருக்கும்.

இந்தியாவில் நாட்டு வருமான மதிப்பீடுகள்

பிரிட்டிஷ் ஆட்சியின்போது இந்தியாவின் தலைசிறந்த அறிஞர்களும், நிருவாகிகளும் நாட்டு வருமானத்தையும். தலா வருமானத்தையும் அறியும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இவர்கள் தங்களுடைய அறிவாற்றல்களை நிரூபிக்கும் சிறந்த வாய்ப்பாகக் கருதி இந்த முயற்சியில் ஈடுபடவில்லை. இவர்கள் ஆராய்ந்து கூறிய விவரங்கள் தேசியவாதிகளுக்கும், ஏகாதிபத்தியவாதிகளுக்கும் தங்கள் தங்கள் கட்சியை எடுத்துக் கூறுவதற்குச் சிறந்த சான்றுகளாகக் கருதப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியர்கள் சுரண்டப்பட்டனர் என்றும், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தேக்கமுற்றது என்றும் நிரூபிப்பதற்காகத் தேசியவாதிகள் நாட்டு வருமானத்தை மதிப்பிடும் முயற்சியில் ஈடுபட்டனர். இதைப் போலவே ஏகாதிபத்தியவாதிகளும், தலைசிறந்த நிருவாக அதிகாரிகளும், —காட்டாக, அரசப் பிரதிநிதியாக இருந்த கர்ஸன் பிரபு —பிரிட்டிஷ் ஆட்சியின் பயனாக அமைதியான சூழல் ஏற்பட்டது என்றும், போக்குவரத்து வசதிகள் நாட்டின் வளமான வாழ்க்கைக்கு வழிவகுத்தன என்றும் நிரூபிக்க விரும்பினார்கள். இவ்வாறு இரு தரப்பினரும் போட்டியிட்டுக்கொண்டு தங்கள்

தங்கள் கட்சியை வற்புறுத்திக் கூறுவதற்கு நாட்டுவருமானம், தலா வருமானம் ஆகியவற்றைக் கணிக்கத் தலைப்பட்டனர்.

பொருளாதார வரலாற்றைத் தொகுத்துக் கூறும் பணியை ஏற்றுக்கொண்டவர்கள் கூடியவரைத் தங்கள் விருப்பு வெறுப்புகளை வெளிக்காட்டாமல், நிலைமையை உள்ளது உள்ளபடி விளக்கக் கடமைப்பட்டவர்கள். இருதரப்பு வாதங்களிலும் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்று ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டும். ஆனால் நீண்ட காலத்திற்கான வருமான மதிப்பீட்டைச் செய்து—முக்கியமாக 19-வது நூற்றாண்டிற்கான வருமான மதிப்பீடு ஒரு சிறப்பு ஆய்வுப் பணியாக இருக்கும். ஆனால் அந்த அளவிற்கு வசதியோ வாய்ப்போ இல்லாத காரணத்தால் இரு கட்சியினரின் வாதங்களையும் சீர்தூக்கிப் பார்க்க இயலவில்லை. இந்த வகையில் எம். முகர்ஜி[1] அவர்களின் கட்டுரை நடுநிலைமையுடன் விளங்குகிறது. ஆகையால் அவர் பரிந்துரைக்கும் கருத்துகளை இந்த அத்தியாயத்தின் மையமாக அமைத்துள்ளோம். அதன் முன்னர் தேசியவாதிகளின் கருத்துக்குச் சாதகமான சில மதிப்பீடுகளையும் குறிப்பிட்டுள்ளோம். இவர்கள் எந்த அடிப்படையில் இந்த மதிப்பீட்டை உருவாக்கினார்கள் என்பதையும் சுருக்கமாகக் கூறியுள்ளோம். இதில் யாருடைய மதிப்பீட்டை ஏற்கலாம், அல்லது ஒதுக்கிவிடலாம் என்பதை வாசகர்களே முடிவு செய்யவேண்டும்.

நாட்டுவருமானத்தைக் கணிப்பவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை இங்கே குறிப்பிடவேண்டும். பத்தொன்பதாவது நூற்றாண்டில் பலர் நாட்டுவருமானத்தையும், தலா வருமானத்தையும் மதிப்பீடு செய்துள்ளார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்கள் வெவ்வேறு ஆய்வு முறைகளைப் பயன்படுத்தினார்கள். ஒரே சொல்லிற்கு அவர்கள் கூறிய இலக்கணம் – விளக்கவுரை – வேறுபட்டது. ஆகையால் இவர்கள் கண்டு அறிந்த உண்மைகள் ஒப்பிடக்கூடிய மதிப்பீடுகளாக இல்லை. அக்காலத்தில் பதிவு செய்யப்பட்ட புள்ளி விவரங்கள் மிகவும் குறைவு. எனவே நேரிடையான புள்ளி விவரங்கள் இல்லாமையால் மறைமுகமான ஆதாரங்களைக்கொண்டு தேவையான விவரங்களை உருவாக்க வேண்டும். உற்பத்தியோ, வருமானமோ முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் அக்காலத்தில் பண பேரங்கள் மிகக் குறைந்த அளவிற்கு இருந்தன என்பதும், பண்டமாற்றுப் பேரங்கள் அதிகமான அளவிற்கு இருந்தன என்பதும் குறிப்பிடத் தக்கவை. இதனால் உற்பத்தியில் பெரும்பகுதி நேரடியாக நுகரப்

[1] M. Mukerji, 'National Income', Chap. 25—Economic History of India, 1857-1956. (Ed.) V. B. Singh

பட்டது, அல்லது முதலீடு செய்யப்பட்டது. பெரும்பாலானவர்கள் சொந்த உபயோகத்திற்காக உற்பத்திசெய்ததாலும், பண்டமாற்றுப் பேரங்கள் பெருமளவிற்கு இருந்தமையாலும், நேரிடையான புள்ளி விவரங்கள் இல்லாமையாலும் உற்பத்தியைக் கணிப்பது கடினமாக உள்ளது. சிலர் நிலத்தீர்வை விவரங்களைக் கொண்டு விவசாய உற்பத்தியை மதிப்பிட்டுள்ளார்கள். இந்த விவரங்கள் எந்த அளவிற்கு நம்பக்கூடியவை என்பதை உறுதியாகக் கூறமுடியாது. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை அளவிடும் முயற்சியில் அரசாங்கமோ, அரசாங்க ஆதரவு பெற்ற அமைப்போ நேரிடையாக ஈடுபடவில்லை. தனிநபர்கள் தங்கள் சொந்த முயற்சியின் பயனாகத் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய விவரங்களைக்கொண்டு, தங்களுக்கு மிகவும் அறிமுகமான ஒன்று அல்லது இரண்டு துறைகளின் ஒன்று அல்லது இரண்டு மாநிலங்களின் விவரங்களைக்கொண்டு நாடு முழுவதற்குமான உற்பத்தியை மதிப்பிட்டுள்ளார்கள்.

பிரிட்டிஷார் ஆட்சி செய்த நிலப்பகுதி காலப்போக்கில் அதிக அளவுக்கு மாறி வந்துள்ளது. பிரிட்டிஷ் ஆட்சியில் பர்மாவும் ஒரு பிரிவாக - ஒரு மாநிலமாக - இருந்து வந்தது. பிரிட்டிஷ் இந்தியா என்று அழைக்கப்பட்ட நிலப்பகுதி ஒரு இனமாகவும், சுதேச சமஸ்தானங்கள் மற்றொரு இனமாகவும் இருந்தன. 1947-க்குப் பின்னர் இந்தியத் துணைக்கண்டம் பாரதம், பாக்கிஸ்தான் என்று பிரிக்கப்பட்டது. இவ்வாறு நிலப்பகுதிகள் காலத்திற்குக் காலம் வேறுபட்டதால் வருமான மதிப்பீடுகள் யாவும் ஒன்றோடு ஒன்று ஒப்பிடக்கூடியதாக இல்லை.

நாட்டுவருமானத்தை மதிப்பீடு செய்வதில் புள்ளியியல் அடிப்படையிலும், அமைப்பு அடிப்படையிலும், தனி நபர்களின் இயலாமை அடிப்படையிலும் பல குறைபாடுகள் ஏற்படுகின்றன. ஆகையால்தான் இந்த மதிப்பீடுகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'விவரம் அறிந்தவர்களின் கற்பனை' என்று கூறியுள்ளனர்.[2]

தேசியவாதிகளின் மதிப்பீடு

19-வது நூற்றாண்டில் நாட்டுவருமானத்தை மதிப்பிடும் முயற்சியில் முதலாவதாகத் தாதாபாய் நௌரோஜி ஈடுபட்டார். இவர் 1867-68-க்கான நாட்டுவருமானத்தை மதிப்பீடு செய்துள்ளார். அவ்வாண்டில் நாட்டுவருமானம் ரூ 340 கோடி (அல்லது 340 மில்லியன்) என்றும், மக்கள் தொகை 17 கோடி

[2] S. J. Patel, 'Essays on Economic Transition - (Asia)', 1965, p. 47.

என்றும் மதிப்பிட்டுள்ளதால், தலா வருமானம் ரூ20/-ஆக இருந்தது. இந்தியர்கள் எந்த அளவிற்கு ஏழ்மையில் உழலுகிறார்கள் என்பதைத் தாதாபாய் நௌரோஜி பின்வருமாறு விளக்கியுள்ளார். அக்காலத்தில் சிறைச்சாலையில் நிலவிய உணவுப் பங்கீட்டு அளவை எடுத்துக்கொண்டார். அவ்வாறு சிறைச்சாலையில் அளிக்கப்படும் உணவை வாங்குவதற்கு அக்காலத்தில் ஒருவருக்கு ரூ 34/-தேவைப்படும் என்று கணக்கிட்டுள்ளார்.[3] சிறைக்கைதிகளின் வாழ்க்கைத்தரத்தைவிட (நாட்டின்) பாமர மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்து காணப்பட்டதைச் சுட்டிக் காட்டினார். சிறைக்கைதிகளின் வாழ்க்கைத்தரம் பிழைப்பு மட்ட நிலையைப் பிரதிபலிக்குமானால், பாமர மக்களின் வாழ்க்கைத்தரம் பிழைப்பு மட்டத்திற்கும் குறைவான ஏழ்மையைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

இருபதாம் நூற்றாண்டில் நாட்டுவருமானத்தை மதிப்பீடு செய்த டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் தாதாபாய் நௌரோஜியின் மதிப்பீட்டைக் குறைமதிப்பீடு என்று கூறியுள்ளார். முக்கியமாக இறைச்சி, பால், மீன் முதலிய இனங்களின் உற்பத்தியைத் தாதாபாய் நௌரோஜி குறைவாக மதிப்பிட்டுள்ளார் என்றும், அதைச் சரி செய்த பின்னர் தலா வருமானம் ரூ 23 முதல் ரூ 24 வரை இருக்கலாம் என்றும் கூறியுள்ளார். ராவ் அவர்களின் மதிப்பீட்டை உண்மை என்று ஏற்றுக்கொண்டாலும், அது பிழைப்பு மட்டத்திற்கும் குறைவான வாழ்க்கைத் தரத்தைத்தான் சுட்டிக் காட்டுகிறது என்பதை அறியலாம்.

தேசியவாதிகளின் கட்சிக்கு ஆதரவு நல்கும் வகையில் வில்லியம் டிக்பி (William Digby)யின் மதிப்பீடு இருந்தது. அவர் ஒரு இந்தியருக்கான தினசரி வருமானத்தைக் கண்டுபிடித்தார். சராசரியாக ஒரு இந்தியரின் தினசரி வருமானம் 1850-ல் 2 பென்ஸ் ஆக இருந்தது என்றும், 1880-ல் இது $1\frac{1}{2}$ பென்ஸ் ஆகக் குறைந்தது என்றும், 1900-ல் இது $\frac{3}{4}$ பென்ஸ் ஆக மேலும் வீழ்ச்சி அடைந்தது என்றும் மதிப்பிட்டுள்ளார். இந்த அடிப்படையில் ஒரு நபரின் ஆண்டு வருமானம் (தலா வருமானம்) 1850-ல் ரூ 30 = 44 ஆகவும், 1880-ல் ரூ 22 = 82 ஆகவும், 1900-ல் ரூ 11 = 41 ஆகவும் இருக்கும்.[4] வில்லியம் டிக்பியின் மதிப்பீட்டை எல்லோரும் குறை மதிப்பீடு என்று கருதுகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தலா வருமானம் வீழ்ச்சி அடைந்ததை இவர் சுட்டிக் காட்டுகிறார்.

[3] 'Indian Economics' -by G.B. Jathar and S.G. Beri, Vol. II, p. 101-102., Oxford - 9th edition (1952).

[4] £ 1 = ரூ 10/-, ஆதாரம். S. J. Patel-Lon-term changes in output and income in India, 1896-1960. Printed in Essays on Economic Transition, 1965, (Asia) p. 33.

தற்கால எழுத்தாளர்களில் சுரேந்திரா பட்டேல் இக்கருத்தை மீண்டும் வற்புறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இருபதாம் நூற்றாண்டிலும், தலா வருமானம் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்தது என்று பட்டேல் விளக்கியுள்ளார். இவர் பின்பற்றிய முறையை அடுத்து விளக்கவேண்டும்.

வளர்ச்சியுற்ற நாடுகளில் உள்ளதைப்போல வளரும் நாடுகளிலும் வருமானத்தை மதிப்பிட முயலுவது பெரும்பாலும் வெற்றி அளிப்பதில்லை. போதிய புள்ளி விவரங்கள் கிடைக்காத காரணங்களால், மறைமுகமான ஆதாரங்களைக்கொண்டு, ஆய்வாளர்களே தேவையான விவரங்களை நிரப்ப வேண்டியது அவசியமாகிறது. இதனால் வருமான மதிப்பீட்டு முயற்சிகள்,- முக்கியமாகக் கடந்த காலத்திற்கானவை-வெற்றி அளிக்கவில்லை, ஆகையால் வளரும் நாடுகளுக்கான வருமானத்தை மதிப்பிடுபவர்கள், பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக அளந்து அறியக்கூடிய உற்பத்தியை எடுத்துக்கொள்வது சிறப்பாக இருக்கும் என்று சைமன் குஸ்நட்ஸ் (Simon Kuznets) கருதுகிறார். இவ்வாறு கணக்கிடப்பட்ட உற்பத்திக் குறியீட்டு எண்களைக் கொண்டு நாட்டு உற்பத்தியின் தோராயமான நீண்டகால மாறுதல்களை அளந்து அறியலாம் என்கிறார். சுரேந்திரப் பட்டேல் இந்த அடிப்படையில்தான் இந்தியத் துணைக் கண்டத்தின் நீண்டகால வருமான மாற்றங்களை (1896 முதல் 1960 வரை) மதிப்பிட்டுள்ளார். இதற்காக இவர் தனிப்பட்ட முறையில் நீண்ட கால வருமானத்தை மதிப்பிடும் ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபடவில்லை. வேளாண்மை, தொழில்துறை ஆகியவற்றின் நீண்டகால உற்பத்தி மாற்றங்களைத் தனித் தனியாகப் பலர் கணித்து இருக்கின்றனர். அவற்றை இணைத்தும், விரிவு படுத்தியும், தேவையான இடங்களில் நிரப்பியும் தொடர்ச்சியாகச் சுமார் 60 ஆண்டுகளில் ஏற்பட்ட வருமான மாற்றங்களை எடுத்துக்காட்டி உள்ளார். இவ்வகையில் அவர் ஜார்ஜ் ப்ளீன் (George Blyn) அவர்களின் வேளாண் உற்பத்தி மதிப்பீட்டையும் (1893-94முதல் 1945-46 வரை) டி. ப. மீக் (D. B. Meek) அவர்களின் தொழில்துறை, சுரங்கம் ஆகியவற்றின் உற்பத்திக் குறியீட்டு எண்களையும் (முறையே 1896 முதல் 1932 வரை; மற்றும் 1909 முதல் 1935 வரை) முக்கியமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

ஜார்ஜ் ப்ளீன் அவர்களின் வேளாண்மை உற்பத்தி மதிப்பீடு முழுமையானது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். நெல், கோதுமை, பார்லி, சோளம், மக்காச் சோளம், கம்பு, கேழ்வரகு, இதர தானியங்கள், பருப்பு வகைகள் முதலிய உணவுப் பயிர்களும், ஆளிவிதை, எள், காட்டுக்கடுகு, கடுகு, ஆமணக்கு,

நிலக்கடலை, கரும்பு, பருத்தி (பஞ்சு), சணல், அவுரி, காப்பி, தேயிலை, புகையிலை முதலிய வர்த்தகப் பயிர்களும் எடுத்துக் கொள்ளப்பட்டன. பெரும்பாலான வேளாண் பயிர்களை எடுத்துக் கொண்டதாலும், அவற்றின் சராசரி விளைச்சலின் அடிப்படையில் உற்பத்திக் குறியீட்டு எண்ணை உருவாக்கியதாலும் ப்ளேனின் மதிப்பீட்டை உண்மையான மதிப்பீடு என்று யாவரும் ஏற்றுக் கொள்ளுவார்கள். இதைப் போலவே மீக் அவர்களின் மதிப்பீட்டை மையமாகக் கொண்டு தொழிற்றுறையின் உற்பத்தியைச் சுரேந்திரா பட்டேல் மதிப்பீடு செய்துள்ளார், இவ்விரு மதிப்பீடுகளையும் தகுந்த முறையில் இணைத்து, நீண்டகால உற்பத்தி மதிப்பீட்டை உருவாக்கியுள்ளார். இவை 1952–53 ஆண்டு விலைக்கு மாற்றப்பட்டன. மாருத விலையில் உற்பத்தியை மதிப்பிட்டதன் மூலம் மெய் உற்பத்தியின் மாற்றத்தை அறிய முடிகிறது. இதற்கு இரு முக்கிய அனுமானங்கள் தேவைப்பட்டன. இவரது புள்ளி விவரங்கள் இத்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும் தயாரிக்கப்பட்டவை. இரண்டாவதாக, மொத்த உற்பத்தியிலிருந்து, நிகர உற்பத்தியைக் கண்டு அறிவதற்காகப் பத்தாண்டுச் சராசரி குறியீட்டு எண்கள் எடுத்துக் கொள்ளப் பட்டன. இதனுல் ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங் களைக் குறைக்க முடிந்தது. (அட்டவணை...13.1 பார்க்கவும்)

நீண்டகால ரீதியில் தலா வருமானம் குறைந்ததற்கான காரணங்களைப் பட்டேல் பின்வருமாறு கூறுகிருர். 1890 முதல் 1950 வரை உள்ள ஆண்டுகளில் ஒரு ஏக்கரின் உற்பத்தித் திறன் பெரும்பாலும் மாற்றம் அடையாமல் இருந்துள்ளது. உற்பத்தி நுட்ப முறையில் குறிப்பிடத் தக்க மாறுதல்கள் ஏற்படாத காரணத்தால், வேளாண் உற்பத்தி பெரும்பாலும் சாகுபடி நிலப் பரப்பின் சார்பாக இருந்தது. இக்காலத்தில் சாகுபடி நிலப்பரப்பு 10% அதிகரித்தது, ஆனுல் மக்கள் தொகை சுமார் 54% அதிகரித் துள்ளது. எனவே ஒரு நபருக்கான சராசரி வேளாண் உற்பத்தி யில் மூன்றில் ஒரு பகுதி குறைந்திருக்கவேண்டும்.

வேளாண் உற்பத்தி ஓரளவிற்கு மட்டுமே அதிகரித்தது என்றுலும், அனைத்து விவசாயப் பொருள்களும் சம அளவில் வளர்ச்சியுறவில்லை. இக்காலத்தில் உணவுத் தானியங்களின் உற்பத்தி கிட்டத்தட்ட தேக்கமடைந்திருந்தது. இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் உணவுத் தானியங்களை நிகர அளவில் இந்தியா ஏற்றுமதி செய்தது. ஆனுல் இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் நிகர அளவில் தானியங்களை இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கு மக்கள் தொகை வளர்ச்சி ஒரு முக்கிய காரணமாக இருந்தது. எனவே சராசரி

அட்டவணை - 13·1

இந்திய நிகர உற்பத்தியில் நீண்டகால மாற்றங்கள் 1896—1960
(1952-53 விலைகளில்)

இனங்கள்	1896-1906	1906-1915	1916-1925	1926-1935	1936-1945	1946-1955	1960 திட்டம்
	100 கோடி ரூபாய்கள்						
1. உணவுத் தானியங்கள்	28·1	28·8	28·6	27·3	27·2	27·5	34·0
2. வர்த்தகப் பயிர்கள்	6·7	8·0	9·1	11·1	11·9	13·7	18·0
3. =(1)+(2)							
I. விவசாய உற்பத்தி	34·8	36·8	37·7	38·4	39·1	41·2	52·0
4. ஆலை உற்பத்தி	1·3	2·0	2·6	3·5	5·6	6·5	13·8
5. சுரங்கம்	0·2	0·3	0·4	0·5	0·7	0·8	1·5
II. தொழில், சுரங்கம்	1·5	2·3	3·0	4·0	6·3	7·3	15·3
6. =(4)+(5)							
7. =(3)+(6)							
I+II. மொத்தம்	36·3	39·1	40·8	42·4	45·4	48·5	67·3
	ரூபாய்களில்						
8. தலா உற்பத்தி	158	159	164	155	144	136	164

குறியீட்டு எண்கள் : 1896—1905 = 100

1. உணவுத் தானியம்	100	103	102	97	97	98	121
2. வர்த்தகப் பயிர்	100	120	136	166	177	204	270
3. =[(1)+(2)] விவசாய உற்பத்தி	100	106	108	110	112	118	149
4. ஆலைத்தொழில்	100	154	200	270	430	500	1060
5. சுரங்கம்	100	133	176	220	280	346	650
6. =[(4)+(5)] தொழில் சுரங்கம்	100	153	200	267	420	487	1020
7. =(3)+(6) மொத்த நிகர உற்பத்தி	100	107	112	116	124	133	185
8. தலா உற்பத்தி	100	101	104	98	91	86	104
9. மக்கள் தொகை	100	107	108	119	134	154	178

ஆதாரம் : Surendra J. Patel—Essays on Economic Transition—p-44. (Asia) 1965.

அட்டவணை - 13·2

நீண்டகால வருமான மாற்றங்கள்—(இந்தியா)—1896—1960
பல்வேறு துறைகளின் ஆக்கம்

	1896-1905	1906-1915	1916-1925	1926-1935	1936-1945	1946-1955	1960 திட்டம்
	100 (கோடி ரூபாய்களில்)						
நிகரப் பொருள் உற்பத்தி							
1. விவசாய உற்பத்தி	34·8	36·8	37·8	38·4	39·1	41·2	52·0
2. இதர விவசாய உற்பத்தி	6·7	7·1	7·2	7·4	7·5	7·9	9·7
3. ஆலைகள், சுரங்கம்	1·6	2·3	3·0	4·0	6·3	7·3	15·3
4. சிறு தொழில்கள்	8·3	8·8	9·0	9·7	9·3	7·8	10·8
5. நிகரப் பொருள் உற்பத்தி (1)+(2)+(3)+(4)=(5)	51·4	55·0	57·0	59·0	62·2	66·2	87·8
பணிகள்—வருமானம்							
6. வாணிபம், போக்குவரத்து	10·8	12·2	13·2	14·8	16·7	18·5	23·0
7. இதர பணிகள்	12·1	12·9	13·4	13·9	14·9	15·8	21·0
8. மொத்த பணிகள் வருமானம் =(6)+(7)	22·9	25·1	26·6	28·9	31·6	34·3	44·0

9. நிகர உள்நாட்டு உற்பத்தி =(5)+(8)	75·0	81·0	84·0	88·0	94·0	101·0	135·0
			ரூபாயில்				
10. தலா வருமானம் ரூ.	325	330	340	320	300	280	330
			குறியீட்டு எண்கள் (1896—1905 = 100)				
11. பொருள் உற்பத்தி	100	107	111	115	121	129	171
12. பணிகள்	100	110	116	125	138	150	192
13. மொத்த உள்நாட்டு உற்பத்தி	100	108	112	117	125	135	180
14. தலா வருமானம்	100	101	105	98	92	86	101

ஆதாரம் : S. J. Patel, *ibid*, p. 49.

ஒருவருக்கான உணவுத் தானிய உற்பத்தி மூன்றில் ஒரு பகுதியிலிருந்து நான்கில் ஒரு பகுதிவரைக் குறைந்திருக்க வேண்டும்.

இவ்வாறு ஒருவருக்கான உணவுத்தானிய உற்பத்தி குறைந்தது உண்மையாக இருக்குமேயானுல் மால்தஸின் மக்கள் தொகைக் கோட்பாட்டிற்கு ஏற்ப, மக்கள் தொகைப் பெருக்கம் ஏன் தடைப் படவில்லை என்று நினைக்கலாம். அதற்குப் பட்டேலின் பதில் இதுதான்: இந்தியாவில் விளையும் உணவுத் தானியங்களில் சுமார் 10% சேதம் அடைகிறது. தலா தானிய உற்பத்தி குறையும் ஆண்டுகளில் மேற்படி சேதாரம் குறைக்கப்படலாம். கால்நடைகளுக்கும் மிருகங்களுக்கும் கொடுக்கப்படும் அளவு குறைக்கப் படலாம். இவ்வாறு பல சிக்கன முறைகளைப் பின்பற்றுவதால் சராசரியாக ஒவ்வொருவரின் உணவிலும் இருக்கவேண்டிய கலோரி சக்தி குறிப்பிடத்தக்க அளவிற்கு—தலா தானிய உற்பத்தி குறைந்த அளவிற்கு-குறைவதில்லை. இவ்விளக்கத்திற்கு ஆதாரமாக மேற்கோள் எதையும் பட்டேல் குறிப்பிடவில்லை. தானியங்களை அறுவடை செய்தல், சேமித்து வைத்தல், உணவு தயாரித்தல், அதைச் சேதப்படுத்தாமல் உட்கொள்ளுதல் ஆகியவற்றில் இவ்வாண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்து, இவ்வாண்டுகளில் வர்த்தகப் பயிர்களின் உற்பத்தி இரண்டு மடங்கிற்கும் அதிகமாகப் பெருகியுள்ளது. வர்த்தகப் பயிர்களின் உற்பத்தி அளவை மொத்த வேளாண் உற்பத்தியின் விகிதமாக்கிக் காட்டலாம். இவ்விதம் ஆரம்பத்தில் 20%க்கும் குறைவாக இருந்தது இறுதியில் 33% ஆக உயர்ந்தது.

தொழிற்றுறை உற்பத்தி இக்காலத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. சிறப்பாக முதல் உலகப் போருக்குப் பின்னர் வேகமாக அதிகரித்தது எனலாம். வேளாண்மை, தொழில்கள் ஆகிய துறைகளின் நிகர உற்பத்தியில் 5%க்கும் குறைவாக இருந்த ஆலைத்தொழில்கள், சுரங்கம் ஆகிய துறைகளின் உற்பத்தி விகிதம், இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் 15% ஆக உயர்ந்தது. வேளாண்மை உற்பத்தி வேகம் தேக்கமுற்றதை ஈடுசெய்யும் அளவிற்குத் தொழில்துறையின் உற்பத்தி பெருக்கம் அடையாத காரணத்தாலும், நாட்டின் உற்பத்திவேகத்தைவிட அதிக வேகமாக மக்கள் தொகை பெருக்கம் அடைந்ததாலும் தலா வருமானம் வீழ்ச்சி அடைந்தது என்று பட்டேல் கூறுகிறுர். இந்த நூற்றுண்டில் முதல் முப்பது ஆண்டுகளுக்குத் தலா வருமானம் ஓரளவுக்கு உயர்ந்து சென்றது என்றும், அதன் பின்னர் அடுத்த முப்பது ஆண்டுகளில் சுமார் 14% வீழ்ச்சி அடைந்தது என்றும் கூறுகிறுர்.

எம். முகர்ஜியின் மதிப்பீடு

திரு முகர்ஜியின் வருமான மதிப்பீட்டைப் பல காரணங்களுக்காக ஏற்றுக்கொள்ளலாம். 1857முதல் 1957வரை நூறு ஆண்டு கால அளவாக இருப்பதாலும், இது தொடர் மதிப்பீடாக (Series Estimate) இருப்பதாலும், புள்ளி விவரங்கள் மேற்படி ஆண்டுகளுக்குத் திட்டவட்டமாகக் கிடைக்காமலிருப்பதாலும் இதை ஏற்றுக்கொள்ளலாம். இவர் மிகையான மதிப்பீட்டையும், குறை மதிப்பீட்டையும் சிறந்த முறையில் திறனாய்வு செய்துள்ளார். நீண்ட கால ரீதியில் தொடர் மதிப்பீடு செய்தவர்களின் ஆராய்ச்சி முறை, எடுத்துக்கொண்ட புள்ளி விவரங்கள் முதலியவற்றை முழுமையாகப் பரிசீலனை செய்து உள்ளார். தமது மதிப்பீட்டை மாறாத விலையில் பொருத்தியுள்ளார். இதற்காக நூறு ஆண்டு கால விலை மாற்றங்கள், கூலி விகிதங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து உள்ளார். எனவே இவரது மதிப்பீட்டின் மூலம் ஓரளவுக்கு உண்மை வருமானம், வாழ்க்கை நிலை முதலியவற்றை அறிய முடியும். (அட்டவணை – 13·3 பார்க்கவும்)

நாட்டு வருமான மதிப்பீடுகளை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று–ஓராண்டிற்கு மட்டும் உள்ள மதிப்பீடு. இதை நிலை மதிப்பீடு அல்லது புள்ளிமதிப்பீடு (Point Estimate) எனலாம். இதைப் போன்று பல ஆண்டுகளுக்கான நிலை மதிப்பீட்டை ஒருவர் கணித்து இருப்பாரேயானால் அதைத் தொடர் மதிப்பீடு (Series Estimate) எனலாம். பொருளாதார வளர்ச்சியை ஆராய்பவர்களுக்குத் தொடர் மதிப்பீடுதான் கட்டாயமாகத் தேவைப்படுகிறது. தனித்தனியாகக் கணக்கிடப்படும் நிலை மதிப்பீடுகள் வருமான மட்டத்தைப் பிரதிபலிக்கின்றனவே தவிர வருமான மாற்றங்களை விளக்குவதில்லை. நிலை மதிப்பீடுகள் ஒப்பிடக்கூடியனவாக இருக்குமானால், அவற்றின் அடிப்படையில் தொடர் மதிப்பீட்டைக் கணக்கிடலாம்.

சென்ற நூற்றாண்டில் ஏழு நிலைமதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன. இவற்றை வி. கே. ஆர். வி. ராவ் திறனாய்வு செய்துள்ளார். (அட்டவணை 13·4 பார்க்கவும்) அட்டவணையில் முதலில் தாதாபாய் நௌரோஜியின் மதிப்பீடு இடம் பெற்றுள்ளது. தலா வருமானம் ரூ 20/–என்று கூறியுள்ளதைக் குறை மதிப்பீடு என்றும், அதை ரூ. 23/–அல்லது ரூ. 24/–ஆகத் திருத்த வேண்டும் என்றும் ராவ் கூறியுள்ளார். அடுத்து, குறை மதிப்பீட்டில் 'டிக்பி'யின் மதிப்பீடு முக்கியமானது. இது குறைந்த மதிப்பீடாக இருப்பதுடன், உண்மை நிலைக்கு மாறுபட்டதாகவும் உள்ளது என்று கூறி (இதை) ஒதுக்கியுள்ளார். மூன்றாவதாக 1895–க்கான

அட்டவணை - 13·3

1948-49 விலைகளில் 1857 முதல் 1900 இந்தியத் தலா வருமான மதிப்பீடு

ஆண்டு	தலா வருமானம் ரூ.	ஆண்டு	தலா வருமானம் ரூ.
1867	169	1888	205
1867—68	169	1889	204
1873	192	1890	208
1874	175	1891	201
1875	202	1892	187
1876	210	1893	19
1877	159	1894	207
1878	145	1895	208
1879	171	1896	204
1880	205	1897	172
1881	223	1898	225
1882	227	1899	214
1883	224	1900	188
1884	209	—	—
1885	214	—	—
1886	219	—	—
1887	218	—	—

ஆதாரம்: V. B. Singh, *ibid* p. 689-690.

அட்டவணை - 13·4

இந்தியாவின் நாட்டுவருமான மதிப்பீடு 1857-1900

வரிசை எண்	ஆசிரியர்	ஆண்டு	நாட்டு வருமானம் கோடி ரூ.	தலா வருமானம் ரூ.
1.	தாதாபாய் நௌரோஜி	1867—68	340	20
2.	அட்கின்சன், F. J.	1875	574	30·5
3.	மேஜர்பாரிங்	1881	525	27
4.	ரிச்சார்டு, T.	1881	223	10†
5.	ஹார்ணி	1891	—	28
6.	அட்கின்சன், F. J.	1895	877	39·5
7.	டிக்பி, W,	1898—99	428	18·9
8.	கர்ஸன் பிரபு	1901	675	30
9.	கிஃபின், R.	1903	900	30

ஆதாரம்: M. Mukerji—National Income. Chap-25. Economic History of India, V. B. Singh (Ed) p. 670-671. (Allied)

†இதைப் பரிசீலனை செய்யவில்லை என்று முகர்ஜி கூறியுள்ளார்.

'அட்கின்ஸனின்' மதிப்பீட்டை எடுத்துக்கொண்டார். இதை மிகையான மதிப்பீடு என்று கூறியுள்ளார். எனவே இதை ரூ. 39·5-லிருந்து ரூ. 31·5 ஆகக் (அதாவது 20%) குறைக்க வேண்டும் என்று கூறியுள்ளார். 1875-க்கான அட்கின்ஸனின் மதிப்பீட்டை 15% குறைத்தோமானால் தலா வருமானம் ரூ. 30·5 லிருந்து ரூ. 25·9 ஆகக் குறையும். அல்லது 1875-ஆண்டிற்கான (அட்கின்ஸனின்) மதிப்பீட்டை 20% குறைத்தோமானால் அது ரூ. 24·4 ஆக இருக்கும். இவ்வாறு திருத்தம் செய்யப்படும் புள்ளி விவரங்கள் தோராயமான போக்கை எடுத்துக் காட்டப் போதுமானதாக இருக்கும். பிழையற்றதும், துல்லியமானதுமான தொடர் மதிப்பீட்டைக் கணக்கிடுவதற்கு இவை போதுமானதாக இல்லை.

பத்தொன்பதாம் நூற்றூண்டிற்கான தொடர் மதிப்பீட்டைக் கணக்கிடுவதற்கு ராவ் அவர்களின் திறனாய்வை முக்கியமாக ஏற்றுக்கொண்டுள்ளார். ராவ் அவர்களால் திருத்தப்பட்ட அட்கின்ஸனின்' (1875) மதிப்பீட்டை மையமாக எடுத்துக் கொண்டார். அதற்கு முன்பு உள்ள ஆண்டுகளுக்கும், அதன் பின்னரும் இதர விவரங்களைக்கொண்டு தலா வருமானம் கணக்கிடப்பட்டது. முக்கியமாக மக்கள் தொகை மாற்றம், கூலி விகித மாற்றம், விலைமாற்றம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு பத்தொன்பதாம் நூற்றூண்டிற்கான தொடர் மதிப்பீட்டை உருவாக்கியுள்ளார்.

தொடர் மதிப்பீட்டைக் கணக்கிடுவதற்கு இரு முறைகளைப் பின்பற்றலாம். மரபாக நடப்பு விலைகளில் கணிக்கப்பட்ட வருமானத்தை மாருத விலைக்கு மாற்றுவார்கள். மெய் வருமானத்தைக் கணிப்பதற்கு இன்னும் ஒருமுறையைப்பின்பற்றலாம். முதலில் பல வகைத் தொழிலாளர்களின் பணக் கூலி விகிதத்தை அறிதல். இதிலிருந்து சராசரி கூலி வருமானத்தையும், மெய்யான கூலி வருமானத்தையும் அறிதல். இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட மெய்யான கூலியின் அடிப்படையில் மெய்யான வருமானத்தைக் கணக்கிடலாம்.

உண்மையான தலா வருமானம் உயர்ந்து செல்லும் ஆண்டுகளில் மெய்யான கூலி விகிதங்களும் அதிகரித்துச் செல்லுகின்றன. இதே அடிப்படையில், உண்மையான தலா வருமானம் குறைந்து செல்லும் ஆண்டுகளில், மெய்யான கூலி விகிதங்களும் வீழ்ச்சி அடையும். இந்த அனுமானம் பெரும்பாலும் உண்மையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. நாட்டு வருமானத்தில் தொழிலாளர்களுக்குக் கூலியாகக் கிடைக்கும் விழுக்காடு மாருத விகிதமாக உள்ளது என்று இங்கிலாந்தின் வரலாற்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கும் இவ்வுண்மை பொருந்தக்கூடும் என்று அனுமானிக்கப்படுகிறது. இந்த அடிப்படையில்தான் மெய்க் கூலி விகிதத்தை மெய்யான வருமானத்தின் குறியீடாகக் கருதலாம். நெடுங்காலத்திற்கான தலா வருமானம், மற்றும் நாட்டு வருமானம் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்ய இயலாதபோது மெய்க் கூலி விகிதங்களைப் பயன்படுத்தித் தலா வருமானத்தைக் கணக்கிடுவது எளிதாக இருக்கும். இவ்வாறு கணக்கிடப்படும் மதிப்பீடுகளை முழுமையான தொடர் மதிப்பீடுகளாகக் கருத முடியாது என்றாலும், இவை ஓரளவிற்கு உண்மை நிலையைப் பிரதிபலிக்கும்.

பத்தொன்பதாவது நூற்றூண்டிற்கான நிலை மதிப்பீடுகளில் பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இவை ஒருமைமையை

எடுத்துக்காட்டுகின்றன. அதாவது தலா வருமானம் வளரவில்லை என்றாலும், அவை தேசியவாதிகள் கூறுவதைப் போல வீழ்ச்சி அடையவில்லை; அதாவது தலா வருமானம் கிட்டத்தட்ட மாறாத அளவில் இருந்துள்ளது. இது தேக்கச் சமநிலையைப் பிரதிபலிக்கிறது.

அடுத்து முகர்ஜியின் தொடர்மதிப்பீட்டைக் கருதுவோம்.[5]

திரு. முகர்ஜியின் தொடர் மதிப்பீடு ஓரளவிற்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய விவரங்களைத் தருகின்றது. இதற்கு நேரிடையான பதிவு செய்யப்பட்ட ஆதாரங்கள் இல்லை என்பது உண்மை. அதே சமயம் பல மறைமுக ஆதாரங்கள் உள்ளன. இந்திய அரசால் வெளியிடப்பட்ட நிருவாக ஏடுகளும், பஞ்ச ஆணைக் குழுக்களின் அறிக்கைகளும் அவ்வப்போது உள்ள நிலைமையைப் பிரதிபலிக்கின்றன. இதைத்தவிர நிலத்தீர்வை பற்றிய விவரங்கள் முக்கியமானவை. கிடைக்கக்கூடிய மறைமுக ஆதாரங்களுடன் இணைத்துப் பார்ப்போமானால் முகர்ஜியின் மதிப்பீடு திருப்தி அளிப்பதாக உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பஞ்சங்கள் ஏற்பட்ட ஆண்டுகளைத் தவிர இதர ஆண்டுகளின் தலா வருமானம் தேக்கமடையவில்லை என்பதை இவை நிரூபிக்கின்றன.

அட்கின்ஸனின் மதிப்பீடு மிகையானது என்று ராவ் திறனாய்வு செய்ததை நினைவிற் கொள்வோமானால், 1857 முதல 1879 வரை உள்ள ஆண்டுகளில், 1873, 1875, 1876 ஆகிய மூன்று ஆண்டுகள் நீங்கலாகத் தலா வருமானத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை என்பதும், இது தேக்கமுற்று இருந்தது என்பதும் புலனாகும். அதன் பின்னர் 1880-லிருந்து 1891-வரைத் தலா வருமானம் சற்று உயர்வான மட்டத்தில் ஏற்ற இறக்கங்களுடன்

5எம். முகர்ஜிதமது தொடர்மதிப்பீட்டைத் தயாரிப்பதற்குப் பின்வரும் முறையையும், புள்ளிவிவரங்களையும் பயன்படுத்தி உள்ளார். 1857 முதல் 1861-வரைத் தரமான விலைக் குறியீட்டு எண்களைக் கண்டுபிடித்து உள்ளார். 1861 முதல் 1900 வரை இந்திய விலைக் குறியீட்டு எண்கள் உபயோகிக்கப்பட்டன அதன்பின்னர் 1957 வரை அ. ரா. ஐயங்கார் ஆகியோரின் குறியீட்டு எண்கள் உபயோகிக்கப்பட்டன. இவற்றின் உதவியால் பணக்கூலியை மெய்க்கூலியாக மாற்றியுள்ளார்.

திறன் அடிப்படையில் வேறுபடும் தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதன்பின்னர் சராசரி கூலி விகிதங்கள் கணக்கிடப்பட்டன. இவை தயாரிக்கப்பட்ட கூலிவிகிதங்கள், விலை விகிதங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மெய்வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டது. சராசரி படைப்பு விகிதங்களைக் கண்டுபிடிக்கவும், கூலி வருமானத்திற்கும் நாட்டு வருமானத்திற்கும் உள்ள விகிதத்தை அறியவும், விவசாயத்துறைக்கும் ஏனைய துறைகளுக்கும் உள்ள விகிதத் தொடர்பைக் கண்டு அறியவும் அட்கின்ஸனின் புள்ளிவிவரங்கள் உபயோகிக்கப்பட்டன. நடப்பு விலையில் உள்ள புள்ளி விவரங்கள் 1948-49 விலைக்கு மாற்றப்பட்டன. இவ்வாறு உருவாக்கப்பட்ட தொடர் மதிப்பீட்டைத்தான் அட்டவணை-13·3-இல் பார்க்கிறோம்.

இருப்பதை அறியலாம். (பஞ்சங்கள் ஏற்பட்ட ஆண்டுகளை நீக்கி விடவேண்டும்.) இது கிட்டத்தட்ட 1899-வரை நீடித்தது என்று கூறலாம். [அட்டவணை 13·5 பார்க்கவும்]

இந்த நூற்றூண்டிற்கான வருமான மதிப்பீடுகள் கிட்டத்தட்ட முழுமையாகவும், நேரிடையான ஆதாரங்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன. இங்கு பலர் மதிப்பீடு செய்துள்ளனர். அவர்களில் சுரேந்திர பட்டேலைத் தவிர, அரோரா-ஐயங்கார், கே. எம். முகர்ஜி, எம். முகர்ஜி ஆகியோரும், ஷிராஸ், தேசாய் ஷா-கம்பாதா முதலியோரும் தொடர்ச்சியாக வருமானத்தை மதிப்பீடு செய்துள்ளனர்.

பல ஆசிரியர்கள் தொடர்-மதிப்பீட்டைத் தயாரித்துள்ளார்கள் என்றாலும் அவற்றை முழுமையாக ஏற்க முடியவில்லை. எனவே நிலை மதிப்பீட்டையும் ஆங்காங்கே இணைக்க வேண்டியது அவசியமாயிற்று. இவ்வாறு எடுத்துக்கொண்ட நிலையான மதிப்பீட்டு ஆண்டிற்கு முன்னும், பின்னும் தொடர் மதிப்பீட்டை உருவாக்கலாம். இதற்கு உற்பத்திக் குறியீட்டு எண்கள் பெரிதும் உதவியாக இருந்தன. இவ்வாறு பல்வேறு நபர்களின் ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்தி, (தேவையானபோது அதைத் திருத்தி) ஒரு நூற்றூண்டிற்கான தொடர் மதிப்பீட்டை இவர் உருவாக்கியுள்ளது[6] பாராட்டுதற்குரியது. இதைப்போன்ற தொடர் மதிப்பீடு நூறு ஆண்டுகளுக்குக் கிடைக்காத காரணத்தினுல் இதைக் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் இவ்விவரங்கள் ஓரளவிற்கு ஏற்கக் கூடியவை என்பதை மறைமுக ஆதாரங்கள் வலியுறுத்துகின்றன.

இவர் தமது மதிப்பீடுகளைத் தனித் தனியாக ஒவ்வொரு ஆண்டிற்கும் வெளியிடாமல் அடுக்கு அடுக்காக உள்ள 9 ஆண்டுச் சராசரி தலா வருமான எண்களாகக் கொடுத்திருக்கிறுர். [அட்டவணை 13·5]

அடுக்கடுக்காக உள்ள 9-ஆண்டுச் சராசரி தலா வருமானத்தின் தொகுப்பிலும் ஏற்ற இறக்கங்கள் இருக்கின்றன. 1857-லிருந்து 1885 வரை மிகவும் நிதானமான வேகத்தில் தலா வருமானம் உயர்ந்து சென்றது. அதன் பின்னர் 19-வது நூற்றூண்டு முடிவு பெறும் வரைத் தலா வருமானம் குறைந்து சென்றது. இருபதாம் நூற்றூண்டின் துவக்கத்திலிருந்து 1926-வரை மீண்டும் தலா வருமானம் உயரத் தொடங்கியது. அடுத்த பத்து ஆண்டுகளில் (உலக மந்தம் காரணமாக) தேக்க நிலையை

6 அட்டவணை - 13·5.

அட்டவணை - 13·5

1948—49 விலையில் ஒன்பது ஆண்டுகாலத்திற்கான சராசரி இந்தியத் தலாவருமானம் 1857—1957

காலம்	மைய ஆண்டு	தலா வருமானம் 1948—49 விலையில்
1857—1863	1860 (7 ஆண்டு)	169
1861—1869	1865	169
1866—1874	1870	172
1871—1879	1875	177
1876—1884	1880	197
1881—1889	1885	216
1886—1894	1890	204
1891—1899	1895	201
1896—1904	1900	199
1901—1909	1905	203
1906—1914	1910	220
1911—1919	1915	241
1916—1924	1920	253
1921—1929	1925	261
1926—1934	1930	260
1931—1939	1935	260
1936—1944	1940	265
1941—1949	1945	255
1946—1954	1950	253
1952—1958	1955 (7 ஆண்டு)	275

ஆதாரம்: முன் கூறியபடி பக். 701-702.

அடைந்தது: இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற ஆண்டுகளில் இறுதி நிலையில் உயர்வு அடைந்தது. அதன் பின்னர் மீண்டும் குறைந்தது. முதல் திட்டம் ஆரம்பமான பின்னர்தான் கடந்த நூறு ஆண்டுகளில் காண முடியாத அளவிற்கு உச்ச நிலையை அடைந்தது. இவ்வாறு தலா வருமானத்தில் ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும் நீண்ட கால ரீதியில் உயர்ந்து இருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தலா வருமானம் உயர்ந்துள்ள வேகம் பலருக்கும் திருப்தியளிக்காமல் இருக்கலாம். ஆனால் வளர்ச்சி ஏதுமில்லாமல் தலா வருமானம் தேய்ந்து சென்றது என்றோ, வளர்ச்சி ஏதும் இல்லாமல் தேக்கமுற்றது என்றோ கூறுவதற்கில்லை.

விடுதலைக்குப் பின்னர் :

1949-ல் நாட்டு வருமானக் கமிட்டி ஒன்று நியமிக்கப் பட்டது. இதில் பேராசிரியர்கள் பி. சி. மகலநோபிஸ், ஆர். சி. காட்கில். வி. கே. ஆர். வி. ராவ் முதலியோர் உறுப்பினர் களாக இருந்தனர். இக்கமிட்டியின் முதல் அறிக்கை 1951-லும், இறுதி அறிக்கை 1954-லும் சமர்ப்பிக்கப்பட்டன. இக்கமிட்டி 1948-49, 1949-50, 1950-51 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான நாட்டு வருமானத்தை மதிப்பீடு செய்தது. விடுதலைக்குப் பின்னர் நாட்டு வருமானத்தை மதிப்பிடுவதற்காக முதன் முதலில் நியமிக்கப்பட்டதாலும், அதிகார பூர்வமான கமிட்டியாக இருந்ததாலும் இதன் அறிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங் களாகக் கருதப்படுகின்றன. அதன் பின்னர் ஆண்டுதோறும் நிதி அமைச்சகத்தில் உள்ள நாட்டு வருமானப் பிரிவு வருமானத்தை மதிப்பீடு செய்யும் பணியை ஏற்றுக்கொண்டது. ஆனால் நிதி அமைச்சகத்திலிருந்து இப்பிரிவை மத்திய புள்ளியியல் அமைப்பிற்கு (Central Statistical Organization) மாற்றினார்கள். 1951-52 ஆண்டிற்கும், அதன்பின் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டிற்குமான வருமானத் தொடர் மதிப்பீடுகள் இந்தப் புள்ளியியல் அமைப்பால் வெளியிடப்படுகின்றன. 1948-49 முதல் 1959-60 வரை உள்ள 11-ஆண்டுகளுக்கான தலா வருமானத்தை 1948-49-விலையில் எம். முகர்ஜி தொகுத்துள்ளார். [அட்டவணை 13·6 பார்க்கவும்] விடுதலைக்குப்பின்னர் உள்ள பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டு களில் தலா வருமானம் படிப்படியாகத் தொடர்ந்து[6] அதி கரித்தது. இந்தப் பதினொரு ஆண்டுகளில் சுமார் 18% தலா வருமானம் உயர்ந்துள்ளது.

[7]அட்டவணை - 13·5 1857—1957 வரை உள்ள தலாவருமானமும், அட்டவணை 13·6 1948—49 முதல் 1959—60 வரை உள்ள தலா வருமானமும் 1948—49 விலையில் கணிக்கப்பட்டுள்ளன என்றாலும், இவற்றை ஒப்பிடமுடியாது

அட்டவணை - 13·6

1948—49 விலையில் பாரதத்தின் தலாவருமானம் (1948—49 முதல் 1959—60 வரை)

ஆண்டு	தலா வருமானம் ரூ.	குறியீட்டு எண்
(1)	(2)	(3)
1948—49	246·9	100·0
1949—50	248·6	100·7
1950—51	246·3	99·8
1951—52	250·1	101·3
1952—53	256·6	103·9
1953—54	268·7	108·8
1954—55	271·9	110·1
1955—56	273·6	110·8
1956—57	283·5	114·8
1957—58	277·1	112·2
1958—59	293·6	118·9
1958—60	291·3	118·0

ஆதாரம் : M. Mukerjee—National Income of India during the last decade—Printed as Chap. x in the book "A decade of Economic Development and Planing In India."

Asian Studies Press–1962, P. 108.

முதல் இரண்டு ஐந்தாண்டுத்திட்டங்களிலும் தலா வருமானம் 16% அதிகரித்தது என்றும், நாட்டு வருமானம் 42% அதிகரித்தது என்றும், மக்கள் தொகை 21% உயர்ந்தது என்றும் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் கூறுகிறது.

1960-61-லிருந்து, அதாவது மூன்றுவது திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து கணக்கிடப்படும் தலா வருமானம், நாட்டு-

அட்டவணை - 13·7

நடப்பு விலையிலும், மாறுத விலையிலும் நாட்டுவருமானம்
(உற்பத்திக்காரணிச் செலவில் நிகர நாட்டு உற்பத்தி)

	1960-61	1961-62	1962-63	1963-64	1964-65	1965-66	1966-67†	1967-68†	1968-69†	1969-70†
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
நிகர நாட்டு உற்பத்தி (ரூ. கோடி)										
1. நடப்பு விலையில்	13294	14050	14873	17094	20061	20621	23903	28374	28678	31174
2. 1960–61 விலையில்	13294	13763	14045	14845	15917	15021	15243	16660	17057	17955
தலாவருமானம்–நிகர நாட்டு உற்பத்தி										
3. நடப்பு விலையில்	306·3	316·4	327.6	368·4	423·2	426·1	482.9	560·8	554·7	589·3
4. 1960–61 விலையில்	306·3	310·0	309·4	319·9	335·8	310·4	307·9	329·2	329·9	339·4

நிகர நாட்டு உற்பத்திக் குறியீட்டு எண் : (அடிப்படை ஆண்டு 1960–61)										
5. நடப்பு விலையில்	100·0	105·7	111·9	128·6	150·9	155·3	179·8	213·4	215·7	234·5
6. 1960–61 விலையில்	100·0	103·5	105·6	111·7	119·7	113·0	114·7	125·3	128·3	135·1
நிகர நாட்டு உற்பத்தி—தலாவருமான—குறியீட்டு எண் : (அடிப்படை ஆண்டு 1960–61)										
7. நடப்பு விலையில்	100·0	103·3	107·0	120·3	138·2	139·1	157·7	183·1	181·1	192·4
8. 1960–61 விலையில்	100·0	101·2	101·0	104·4	109·6	101·3	100·5	107·5	107·7	110·8

† தற்காலிகமானவை.

ஆதாரம் : RBI Bulletin—August 1971, p. 1322.

வருமானம் முதலியன 1960-61 விலையில் வெளியிடப்பட்டுள்ளன. [அட்டவணை 13·7] 1960-61 முதல் 1969-70 வரையிலான ஆண்டுகளில் நாட்டு வருமானம் 35·1% அதிகரித்தது என்றாலும், தலா வருமானம் இவ்வாண்டுகளில் 10·8% மட்டுமே அதிகரித்துள்ளது. மூன்றாவது திட்ட காலத்திலும், அதன் பின்னரும் பல நிகழ்ச்சிகளின் காரணமாக நாட்டு வருமானம் எதிர்பார்த்த அளவுக்கு வளர்ச்சி அடையவில்லை. மூன்றாவது திட்ட ஆரம்பத்தில் தேக்க நிலை இருந்தது 1963-64, 1964-65, ஆகிய இரு ஆண்டுகளில் ஓரளவுக்கு உற்பத்தி உயர்ந்தது. ஆனால் எதிர்பாராத வகையில் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டதால், 1965-66-லும், 1966-67-லும் தலா வருமானம் வெகுவாகக் குறைந்தது, அதன் பின்னர் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டது.

1970-71க்கான நிகர நாட்டு வருமானம் (1960-61 விலையில்) ரூ. 18855/கோடி என்றும், தலா வருமானம் ரூ. 347/-என்றும் தற்காலிக மதிப்பீட்டு அறிக்கைகள் கூறுகின்றன.[8] நாட்டு வருமானமும், தலா வருமானமும் அதிகரித்துள்ளன என்றாலும், அவை அதிகரித்த வேகம் சென்ற ஆண்டில் இருந்ததைவிடக் குறைவாக உள்ளது.

பொருளாதார வளர்ச்சியும், வருமானக் கட்டமைப்பு மாற்றங்களும் :

பொருளாதார வளர்ச்சியைப் பல்வேறு சக்திகள் ஏற்படுத்துகின்றன ; அதில் பல்வேறு கூறுகள் உள்ளன. இருந்தபோதிலும் தனி ஒரு குறியீட்டு எண்ணைக்கொண்டு பொருளாதார வளர்ச்சியைஅளந்துஅறியவேண்டுமானால்அதற்கு வருமானத்தைப் பயன்படுத்தலாம் என்று கூறுகிறார்கள். நிகர நாட்டு வருமானத்தைச் சிலரும், தலா வருமானத்தைப் பலரும் பரிந்துரைத்தார்கள். பல்வேறு துறைகளின் வளர்ச்சியைத் தனி ஒரு குறியீட்டுஎண்ணைக்கொண்டுஅளந்துஅறியமுற்படுவதில்இயல்பாகவே சில குறைபாடுகள் இருக்கின்றன. ஆகையால் பொருளாதார வளர்ச்சியில் வெவ்வேறு நிலைகளில் உள்ள நாடுகளை அறிவதற்கு வருமானக் கட்டமைப்பை முக்கியமாகக் கருதுகிறார்கள். இதற்காக நாட்டு வருமானத்திற்கு ஆதாரமான உற்பத்தி நடவடிக்கைகளை மூன்று முக்கிய துறைகளாகப் பிரிக்கிறார்கள். முதலாவது துறையில் வேளாண்மையும், அதைச் சார்ந்த துணைத் தொழில்களும்-காட்டாக, கால்நடை, கோழிப்

[8]The Hindu, Dec. 28, 1971.

பண்ணை, மீன்வளர்ப்பு, பழம், காய்கறித்தோட்டங்கள் முதலியன-முதல்நிலைத் துறை (Primary Sector) என்று அழைக்கப்படும். இரண்டாவதாக உள்ள துறையில்-இரண்டாம் நிலைத்துறை (Secondary Sector)இல் செய்பொருள் தொழில்கள், சிறு தொழில்கள், சுரங்கம் முதலியன இடம்பெறுகின்றன. மூன்று வதாகப் பணிகள் (Services). மூன்றும் நிலைத் துறையில் (Tertiary Sector) போக்குவரத்து, பாங்குகள், கல்வி, சுகாதாரம், வாணிபம் சேர்க்கப்பட்டுள்ளன. முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றும் நிலை ஆகிய துறைகளின் தொகுஅளவு மதிப்பு ஆக்கம் நாட்டு வருமானமாக இருக்கும்.

அட்டவணை - 13·8

துறைவாரியாக நாட்டுவருமானக் கட்டமைப்பு
1955—56 1969—70

வரிசை எண்		1955—56	1960—61	1969—70
1.	முதல் நிலைத்துறை	54·0%	51·0%	43·7%
	(அ) வேளாண்மை		49·1	41·6
	(ஆ) மற்றவை		1·9	2·1
2.	இரண்டாம் நிலைத் துறை	18·1%	20·1%	22·9%
	(அ) செய்தொழில் (ஆ) சுரங்கம்	13·0	15·0	17·2
	(இ) மற்றவை	5·1	5·1	5·7
3.	மூன்றும் நிலைத் துறை	27·9%	28·9%	33·4%
	(அ) போக்குவரத்து செய்தித்தொடர்பு	3·8	4·3	5·2
	(ஆ) வாணிபம்	9·1	9·7	10·7
	(இ) பிறபணிகள்	15·0	14·9	17·5
		100·0	100·0	100·0

Based on C.S.O. Estimates: Published in Economic Times - Dt 3—8—71.

அட்டவணை - 13·9

1955—56 முதல் 1965—66 வரை, நாட்டுவருமான-மதிப்பீடுகள்
1948—49 விலைகளில்

வரிசை எண்	இனங்கள்	1955—56 மில்லியன் டாலர்கள்	1955—56 %	1958—59 மில்லியன் டாலர்கள்	1958—59 %	1960—61† மில்லியன் டாலர்கள்	1960—61† %	1965—66† மில்லியன் டாலர்கள்	1965—66† %
1.	வேளாண்மை	10,540	47·8	11,685	47·7	12,250	46·5	15,925	45·7
2.	சுரங்கமும், செய்தொழில்களும்	3,700	16·8	3,930	16·2	4,390	16·7	6,675	19·1
	(அ) சுரங்கம்	200	0·9	260	1·0	290	1·1	370	1·1
	(ஆ) ஆலைத்தொழில்கள்	1,560	7·1	1,820	7·5	2,075	7·9	3,365	9·6
	(இ) சிறுதொழில்கள்	1,940	8·8	1,870	7·7	2,025	7·7	2,940	8·4
3.	வாணிபமும், போக்குவரத்தும்	4,140	18·8	4,570	18·7	5,060	19·3	6,320	18·2
4.	பணிகள்	3,630	16·6	4,260	17·4	4,600	17·5	5,920	17·0
5.	மொத்தம்	22,010	100·0	24,465	100·0	26,330	100·0	34,840	100·0

ஆதாரம்: Wilfred Malenbaum— Prospects for Indian Development George Allen+Unwin Ltd, London (1992) p-300. Table-35.

†மாலன்பாம் அவர்களின் மதிப்பீடு (Estimate)

தனித்தனியாக இம்மூன்று துறைகளின் ஆக்கமும் மொத்த நாட்டு உற்பத்தியில் எந்த அளவிற்கு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது என்பதைக்கொண்டு அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையை அறிந்துகொள்ளலாம். காட்டாக முதல் நிலை அதிக முக்கியத்துவம் பெற்றிருக்குமானால் அந்நாட்டுத் தொழில் துறையில் வளர்ச்சி அடையவில்லை என்பதுடன், பொதுவாகப் பின் தங்கிய அல்லது குறை வளர்ச்சி உடைய நாடு என்பதை அறிந்து கொள்ளலாம். பெரும்பாலான மக்கள் முதல்நிலைத்துறையை நம்பியிருந்த போதிலும், நாட்டின் வருமானத்தில் பெரும்பகுதி இத்துறையில் உற்பத்தி செய்யப்பட்டபோதிலும் இந்த நாடுகள் வேளாண்துறையில் தன்னிறைவு பெற்றிருக்கும் என்று கூற முடியவில்லை. பொதுவான உற்பத்தித்திறன் மிகவும் குறைந்து இருப்பதை இது பிரதிபலிக்கிறது.

முதல்நிலைத்துறை போலவே இரண்டாம்நிலைத் துறையும் சம அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ள ஒரு நாடு தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்த நாடாக இருக்கும். பொதுவாக வேளாண்துறை உள்பட-அனைத்துத் துறைகளின் உற்பத்தித் திறனும் இந்நாட்டில் உயர்ந்து காணப்படும்.

தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் வேலை வாய்ப்புகள் (ஒப்புமையாக) அதிகம் காணப்படுகின்றன- ஆகையால் முதல் நிலைத்துறையைவிட அதிக மக்கள் இரண்டாம் நிலைத்துறையிலும் மூன்றும் நிலைத்துறையிலும் (தனித்தனியாக) ஈடுபட்டிருக்கக் கூடும்.

இங்ஙனம் நாட்டின் உற்பத்தியைத் தொகு அளவில் கருதாமல் துறை அளவில் பிரித்துப் பார்ப்பதாலும், ஒவ்வொரு துறையின் முக்கியத்துவத்தைக் கருதுவதாலும், நாட்டின் வருமானக் கட்டமைப்பின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியை ஒருவாறு அறிந்துகொள்ள முடியும். பாரதம் பொருளாதார வளர்ச்சியை எய்தி உள்வது என்ற கருத்தைத் தலா வருமான உயர்வு எடுத்துக்காட்டுகிறது என்றாலும், வருமானக் கட்டமைப்பின் அடிப்படையில் இக்கருத்து மேலும் வலியுறுத்தப் படுகிறது.

முதல் நிலைத்துறையில் உணவுத் தானிய உற்பத்தி முக்கியமான கூறாகும். 1950-1960 ஆண்டுகளில் தானிய உற்பத்தி இரண்டு மடங்கு (200%) பெருகியுள்ளது. இது முதல்நிலைத் துறையின் உற்பத்தி தனிப்பட்ட முறையில் உயர்ந்து செல்வதைக் குறிப்பிடு கிறது. இருந்தாலும் நாட்டின் நிகர உற்பத்தி அடிப்படையில்

கருதுவோமானல் முதல் நிலைத் துறையின் முக்கியத்துவம் குறைந்து செல்கிறது. (அட்டவணை 13.8, 13.9 பார்க்கவும்). அதே சமயம் இரண்டாம் நிலைத்துறையின் முக்கியத்துவம் தராதரமாக உயர்ந்து சென்றுள்ளது என்றாலும், இத்துறையின் ஒப்புமையான விரிவாக்கம் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு இல்லை. மூன்றாம் நிலைத் துறையின் ஆக்கம் தனியாகவும், ஒப்புமையாகவும் வளர்ந்து சென்றுள்ளது.

14. தொழில் வளர்ச்சி

தொழில் வளர்ச்சி ஏன் ?

உலக நாடுகள் அனைத்தையும் வளர்ச்சியுற்ற நாடுகள் என்றும், வளர்ச்சி குறைந்த நாடுகள் என்றும் இரு வகையாகப் பிரிக்கின்றனர். நாடுகளுக்கு இடையே செல்வ வருமான ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்திருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இருந்தபோதிலும் இதற்குத் தொழில் வளர்ச்சி வேறுபாடு முக்கியமானதாகும். தொழில் வளர்ச்சி அடைந்த பெரும்பாலான நாடுகள் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்த நாடுகளாக—அதாவது தலா வருமானம் உயர்வாக இருப்பதால் செல்வ மிகுந்த நாடுகளாக—இருக்கின்றன. தொழில் துறையில் முன்னேற்றம் அடையாத நாடுகள் பொருளாதார வளர்ச்சியிலும் பின்தங்கியுள்ளன. தலா வருமானம் மிகவும் குறைவாக இருப்பதால், இவை ஏழை நாடுகளாக இருக்கின்றன. பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரக் குறிக்கோள் தலா வருமானத்தையும், மக்களின் வாழ்க்கை வசதிகளையும் அதிகரிப்பதாகும். வருமான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்குத் தொழில் வளர்ச்சி அவசியமாக உள்ளது; ஆகையால் நாடுகள் பெரிய அளவில் நவீன தொழில்களைத் தம்மில் உடனடியாக ஏற்படுத்த விரும்புகின்றன: தொன்று தொட்டு நிலவி வரும் வறுமைத் தளைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்குத் தொழில் வளர்ச்சி என்னும் அரிய வாய்ப்பை எதிர்நோக்கியவாறு உள்ளன.

தொழில்கள் வளர்ச்சியுற்ற நாடுகளில் உற்பத்தித்திறன் அதிகமாகவும், வளர்ச்சி குறைந்த நாடுகளில் உற்பத்தித்திறன் குறைந்தும் காணப்படுகின்றன. வளர்ச்சி குறைந்த நாடுகள், வளரும் நாடுகள் என்று இவை அழைக்கப்படுகின்றன. இந்நாடுகள் பெருமளவுக்கு வேளாண் துறையை எதிர் நோக்கியபோதிலும், இத்துறையின் உற்பத்தித்திறன் வளர்ச்சியுற்ற நாடுகளில் உள்ளதை விட – வேளாண் துறையில் – குறைவாக இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட நிலைமைக்குப் பின்னர், தொழில் துறையும்

வளர்ந்தாலன்றி, வேளாண்துறையின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடிவதில்லை. முக்கியமாக, தீவிரச் சாகுபடி முறையைக் கொண்டு நிலத்தின் உற்பத்தித்திறனை உயர்த்தக் கருதும் நாடுகள், தங்கள் வேளாண் துறையின் முன்னேற்றத்திற்கு வளர்ச்சி அடைந்த தொழில்துறை இன்றியமையாதது என்று உணருகின்றன. ஆகையால்தான் தொழில் வளர்ந்துள்ள நாடுகளில் வேளாண் துறையின் உற்பத்தித்திறனும் அதிகமாக இருக்கின்றது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய நாடுகளில் இவ்விரு துறையின் உற்பத்தித்திறன்களும் குறைவாக இருக்கின்றன. உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான முதல் முயற்சியாகத் தொழில்வளர்ச்சியை ஒவ்வொரு நாடும் கருதுகின்றது.

நிலையான தொழில் வளர்ச்சிக்கு அறிவியல் முன்னேற்றம் அடிப்படையாக உள்ளது. அறிவியல் சாதனைகள், விஞ்ஞான, தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் முதலியன நடைமுறையில் உற்பத்தித் திறனுக்காகப் பயன்படுத்துவதைப் புதுமை புகுத்தல் (Innoavation) என்பர். புதுமைபுகுத்தலின் அடிப்படையில் ஏற்படும் தொழில்கள், தொழில்முயற்சிகள் குறிப்பிட்ட துறையின் வளர்ச்சிக்கு உறுதி அளிப்பதுடன் இதர துறைகளின் வளர்ச்சிக்கும் வழி வகுக்கின்றன. எனவே புதுமை புகுத்தலின் காரணமாக ஏற்படும் முன்னேற்றங்கள் நேர் வளர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன. மாறாக, பழைய தொழில் நுட்பத்தின் அடிப்படையில் அமைந்துள்ள தொழில் முயற்சிகள் கிடையான தொழில் பெருக்கத்தை ஏற்படுத்துகின்றன.

புதுமைபுகுத்தலால் சிக்கன நலன்கள் அதிகரிக்கின்றன; ஆக்கச் செலவுகள் குறைகின்றன. இதனால் லாப விழுக்காடுகள் அதிகரிக்கும்; மக்கள் நலஇழப்பு இன்றிப் புதிய முதலீட்டிற்குத் தேவையான தொகையைச் சேமிக்க முடியும். புதுமை புகுத்தல்கள் முதலீட்டின் பெருக்கத்திற்குத் தூண்டுகோலாக இருக்கின்றன. இதனால் மூலதன ஆக்கம் உயருவதால் உற்பத்தித் திறனும், பொருளாதார வளர்ச்சியும் ஏற்படுகின்றன.

தொழில்துறையில் வளர்ச்சி அடையாத நாடுகளில் உற்பத்தித்திறன் குறைவாக இருக்கிறது. குறைந்த உற்பத்தித் திறனுக்குத் தொழிலாளர்களின் கடின உழைப்பை விடப் புராதன தொழில் நுட்ப முறைகள்தான் முக்கிய காரணமாக இருக்கின்றன. இதனால் உடனடியாக நிகழ்காலத்தில், உற்பத்தி வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன. இருந்தபோதிலும் இந்நாட்டு மக்கள் மேலை நாட்டவர்களுடன் தொடர்பு கொண்டு இருப்பதால், அவர்களைப்போலவே பொருள்களை நுகர விழை

கின்றனர்; அவரைப் போன்று மேலான வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்திக்கொள்ள முனைசின்றனர். விருப்பங்கள் பெருகிச் செல்லும் வேகத்தில் இவர்களின் உற்பத்தித்திறன் உயர்ந்து செல்லவில்லை. எனவே நாட்டின் உற்பத்திக்கும், மக்களின் தேவைகளுக்கும் இடையே அதிக இடைவெளி ஏற்படுகிறது. இதை ஈடு செய்வதற்காக இந்நாடுகள் அதிக அளவு இறக்குமதி செய்கின்றன. இறக்குமதி நிகர அளவில் உயர்ந்து செல்வதால் நடப்புக் கணக்கில் இந்நாடுகளின் செலுத்தல் நிலை பாதகம் அடைந்து காணப்படுகின்றது. மக்களின் நுகர்வுத் தேவையை முற்றிலும் நிறைவு செய்ய இயலாத அளவிற்கு நாட்டின் உற்பத்தி இருக்கின்ற காரணத்தால் மூலதன ஆக்கத்திற்கு உதவக்கூடிய முதலீட்டு முயற்சிகளை மேற்கொள்வது கடினமாக இருக்கிறது. இவ்வாறு வளர்ச்சி குன்றைந்த நாடுகள் நெடுங்காலமாகத் தேக்கச் சமநிலையில்[1] உழன்று வருகின்றன.

தொழில் துறையில் முன்னேறிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சி ஒரு தொடர் நிகழ்ச்சியாக இருக்கிறது; இது ஒரு இயல்பான நிகழ்ச்சியாகவும் தோன்றுகிறது. இங்ஙனம் தொழில்கள் வளர்ச்சி அடையாத நாடுகள் தேக்கச் சமநிலையில் இருக்கின்றன என்பதையும், தொழில்கள் வளர்ந்துள்ள நாடுகள் இயக்கச் சமநிலையில்[2] இருக்கின்றன என்பதையும் அறியலாம். இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலையை 'எழுநிலை' (Take-off Stage) என்று ரஸ்டவ் குறிப்பிடுகிறார். எழுநிலையைக் கடந்துவிட்ட நாடுகள் ஏழ்மை என்னும் நச்சுச் சுழலிலிருந்து[3] தங்களை விடுவித்துக் கொள்கின்றன. அதன் பின்னர் இந்நாடுகள் சுய முயற்சியால் வளர்ச்சியை ஏற்படுத்திக்கொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றன.

பொருளாதார வளர்ச்சிக்கு அமைப்புக் காரணிகள் மிகவும் முக்கியமானவை. மக்களின் ஆற்றல்கள் அனைத்தையும் ஆக்க ரீதியாகப் பயன்படுத்தவும், புதிய கண்டுபிடிப்புகள், புதுமை புகுத்தல்கள் முதலியன தொடர்ந்து ஏற்படவும் இவை உதவியாக இருக்கின்றன. எழுநிலைக்கு முன் நிபந்தனையாகச் சாதக நிறுவன அமைப்புகள் இருக்கின்றன என்று கூறுகிறார். சமூக, அரசியல், பொருளாதார அமைப்புகள் யாவும் பொருளாதார வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். இந்நாடுகள் முக்கியமாக அரசியல் தன்னுரிமை பெற்றிருக்க வேண்டும். சமூக, பொருளாதார அமைப்புகளை மக்கள் விரும்பிய வண்ணம்

[1]Static Equilibrium.
[2]Dynamic Equilibrium.
[3]Vicious Circle of Poverty.

மாற்றி அமைத்துக் கொள்ளும் அளவிற்கு அவை நெகிழ்வுடைய னவாக இருக்க வேண்டும். வளர்ச்சிக்கு ஏற்றாற்போல மரபுகளும் பழக்கவழக்கங்களும் மாறக்கூடியவையாக இருப்பது அவசியம்.

அடுத்து, நாட்டு வருமானத்தில் முதலீட்டின் விழுக்காடு உயர்ந்து செல்ல வேண்டும். முதலீட்டின் காரணமாக மக்கட் பெருக்கத்தைவிட அதிக வேகத்தில் தலா வருமானம் உயர வேண்டும். மூன்றாவதாக, உற்பத்தித்திறனை அதிகரிக்கக்கூடிய ஆலைத்தொழில்கள் ஏற்படவேண்டும். உயர்ந்த உற்பத்தித்திறன் உடைய துறை பொருளாதார முன்னேற்றத்தைத் தோற்று விக்கும் உந்துசக்தியாகச் செயல்படுகிறது. பேரளவு உற்பத்தி யாலும், சிக்கன நலன்களாலும் இத்துறை நாளடைவில் விரிவடை கிறது. ஒரு துறையில் காணப்படும் உயர்ந்த உற்பத்தித்திறன் இதர துறைகளுக்கும் பரவுகிறது. இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படும் ஒவ்வொரு துறையின் எழுச்சியும் பொருளாதார வளர்ச்சியை ஒரு தொடர் நிகழ்ச்சியாக ஆக்குகின்றது. இதைத் தன் ஆற்றலில் தொடர்ந்த பொருளாதார வளர்ச்சி (Self-sustaining Growth) என்று ரஸ்டவ் (W. W. Rostow) கூறியுள்ளார்.[4] ஆரம்பத்தில் ஒரே ஒரு முக்கிய துறையின் எழுச்சியால் தோற்று விக்கப்படும் எதிர்விளைவுகள் புறச்சிக்கன நலன்கள் முதலியன நாளடைவில் பல துறைகளின் எழுச்சிக்குக் காரணமாக இருக் கின்றன. இந்த ஆரம்ப நிலையைத்தான் 'எழு நிலை' என்று அழைக்கிறோம்.

இன்றைய தினம் தொழில் வளர்ச்சியின் அவசியத்தைக் குறை வளர்ச்சி நாடுகள் அனைத்தும் உணர்ந்துள்ளன. இதற்குப் பல நிகழ்ச்சிகள் ஏதுவாக இருந்த போதிலும், வளர்ந்து செல்லும் மக்கள்தொகைதான் மிகவும் முக்கியமானதென்று குன்னார் மிர்தால் கருதுகிறார்.[5] பொருளாதார வளர்ச்சியின் விளைவாக அல்லாமல், மேலை நாட்டு மருத்துவ, சுகாதார முறையை ஏற்றுக் கொண்டதால் வரலாறு கண்டறியாத அளவுக்கு மக்கட் பெருக்கம் அடைந்துள்ளது.[6] இந்த வேகத்தில் பொருளாதார உற்பத்தி அதிகரிக்காத காரணத்தால் நெடுங்காலமாகப் பழகிய வாழ்க்கைத் தரத்தைக்கூட இவர்களால் நிலைநாட்டிக்கொள்ள முடியவில்லை. வேலை நாடி வருபவர்கள் அதிகமாகவும். வேலை வாய்ப்புகள் குறை

[4]அத்தியாயம்-1 பார்க்க.

[5]Gunnar Myrdal—The Asian Drama—Vol. II Chap. 24 p. 1153 (Penguin).

[6]அத்தியாயம்-4 பார்க்க.

லாகவும் இருக்கின்றன. மரபான துறைகளில் இவர்கள் அனைவருக்கும் வேலை அளிக்க முடியவில்லை. இதனால் புதிய தொழில் துறைகள் வளரவேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றது.

வேளாண்துறையைவிடத் தொழில்துறையில் வேலை வாய்ப்புகள் அதிகம். சாகுபடி நிலப்பரப்பும், பாசன வசதிகளும், சாகுபடி முறைகளும் வேளாண் துறையில் வேலை அளிப்பை நிர்ணயிக்கின்றன. பரந்த சாகுபடி முறையைவிடத் தீவிரச் (செறிந்த) சாகுபடி முறையில் அதிக நபர்களுக்கு வேலை அளிக்கலாம். வேளாண் துறையின் விரிவாக்கம் இயற்கைக் காரணிகளால் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆனால் தொழில் துறையில் இதைப் போன்ற தடையாதும் இல்லை. இவை மனிதனால் படைக்கப்பட்ட மூலதனக் கருவிகளைத்தான் அதிகம் சார்ந்து உள்ளன.

உற்பத்தியை மதிப்பின்ஆக்கம் என்பர். மதிப்பின் ஆக்கம் எந்த அளவிற்கு மனித உழைப்பால் உருவாக்கப்படுகிறது என்பது மிகவும் முக்கியம். இதைக்கொண்டு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளந்து அறியலாம். மதிப்பின் ஆக்கம் மூன்று முக்கிய துறைகளில் ஏற்படுகின்றன. நிலம், நிலம் சார்ந்த தொழில்கள் ஆகியவற்றை முதல் நிலைத் துறை (Primary Sector) என்றும், ஆலைத் தொழில்களை இரண்டாம் நிலைத் துறை (Secondary Sector) என்றும், போக்குவரத்து, வாணிபம், பாங்கு வசதிகள், கல்வி, சுகாதாரம் போன்ற பணிகளை மூன்றும் நிலைத் துறை (Tertiary Sector) என்றும் அழைப்பார்கள். வளரும் நாடுகளில் வேளாண்மை முக்கிய தொழிலாக உள்ளது. இந்நாடுகளில் முதல் நிலைத் துறை மட்டுமே முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் இம்மூன்று துறைகளும் கிட்டத்தட்ட சம அளவுக்கு முக்கியத்துவம் பெற்று இருக்கும். இம்மூன்று துறைகளிலும் மனித உழைப்பால் உருவாக்கப்படும் மதிப்பின் (Value added by labour) விகிதங்கள் (உற்பத்தியில்) வேறுபடுகின்றன. இந்த விகிதம் முதல் நிலைத் துறையில் உள்ளதைவிட இரண்டாம் நிலைத் துறையில் அதிகம்; இரண்டாம் நிலைத் துறையில் உள்ளதைவிட மூன்றும் நிலைத் துறையில் அதிகம். எனவே இ மூன்று துறைகளும் வளர்ந்துள்ள நாடுகளில் மனித உழைப்பை அதிக அளவிற்குப் பயன்படுத்த முடியும். மனித உழைப்பைச் செல்வமாகவும், வருமானமாகவும் மாற்றக்கூடிய வாய்ப்புகள் தொழில் துறையின் வளர்ச்சியால் பெருக்கம் அடைகின்றன.

ஆகையால்தான் தொழில் வளர்ச்சியைக்கொண்டு, பெருகி வரும் மக்கள் தொகைக்கும், அதன் விளைவாகத் தோன்றிய வேலையின்மைப் பிரச்சினைக்கும் தீர்வு காண முற்படுகின்றனர்.

தொழில் வளர்ச்சி ஏன் ஏற்படவில்லை?

பேரளவுத் தொழில்களின் வளர்ச்சியைத்தான் தொழில் வளர்ச்சி என்று கூறுகிறோம். இந்தியாவில் தோன்றிய பேரளவுத் தொழில்களில் நெசவுத் தொழில்கள் முக்கியமானவை. 1850-முதல் 1855-க்குள் பஞ்சாலை, சணல் ஆலை, இருப்புப்பாதை, நிலக்கரிச் சுரங்கம் முதலியன முதன் முதலில் (பேரளவுத் தொழில்களாக) ஆரம்பிக்கப்பட்டன.[7] இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல நவீன ஆலைத்தொழில்கள் இந்தியாவில் வேரூன்றின. 1900-ல் சுமார் 5-லட்சம் தொழிலாளர்கள் ஆலைத்தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் 60% பேர் நெசவு ஆலைகளில் வேலை செய்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவும் ஜப்பானும் ஆசியாவில் தொழிற் புரட்சியை ஏற்படுத்தக்கூடிய இரு முன்னோடி நாடுகளாகக் கருதப்பட்டன. இந்த நம்பிக்கை ஜப்பானைப் பொறுத்த வரை உண்மையாகியது. ஆனால் இந்தியத் துணைக்கண்டம்தொழில் வளர்ச்சியில் பெரிதும் பின் தங்கி விட்டது.

இந்தியத் துணைக் கண்டத்தில் தொழில் வளர்ச்சி ஏதும் ஏற்படவில்லை என்று கூற முடியாது. 1900-லிருந்து 1939-வரைத் தொழில் உற்பத்தி 4-மடங்கு அதிகரித்தது. இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற காலத்தில் (1939-45) இது மேலும் 20% அதிகரித்தது. அதன்பின்னர் 1950 வரை 5% அதிகரித்தது. இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1900–1950) இந்தியத் துணைக்கண்டத்தில் தொழிற்றுறையின் உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்தது.[8] அதாவது தொழில்துறை உற்பத்தி ஆண்டுதோறும் 3·3% அதிகரித்தது. இதைப்போல விவசாய உற்பத்தியும் அதிகரித்திருக்குமேயானால் நாட்டு வருமானமும், தலா வருமானமும் கணிசமாக உயர்ந்திருக்கக்கூடும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நெசவுத்தொழில்கள் மட்டுமே வேரூன்றி இருந்தன. இதர தொழில்கள் இரண்டாவது உலகப் போர் தொடங்கும் வரை ஏற்படவில்லை. தவிரவும் ஆரம்பத்தின் தொழில் அடிப்படை மிகவும் குறுகலாக இருந்தது.

தொழில்துறையின் வளர்ச்சி விகிதாசார அடிப்படையில் திருப்திகரமாக இருந்த போதிலும், 1950-ல் மொத்த தொழிலாளர்களில் 3%மட்டுமே ஆலைத்தொழில்களில் வேலை செய்தனர்.[9]

[7]Wilfred Malenbaum—Prospects for Indian Development. George Allen and Unwin Ltd—London—(1962) P. 152.

[8]M.R. Kulkarni, Industrial Development.—National Book Trust—(1971) P. 264.

[9]Wilfred Malenbaum—*ibid*—P. 158; 154.

இவர்களில் (0·33% (1/3%) மட்டுமே எஃகு ஆலைகளில் வேலை செய்தனர். ஆலைத்தொழில்களில் கனரகத் தொழில்களின் முக்கியத்துவம் குறைந்திருப்பதை இது காட்டுகிறது.

அரசியல் : இந்தியாவின் தொழில்வளர்ச்சி தேக்கமடைந்து இருப்பதற்குப் பல காரணங்கள் கூறலாம். இவற்றுள் முதன்மை யானது அரசியல் காரணமாகும்.[10] தொழில்துறையிலும், வாணி பத்துறையிலும் முன்னோடியான பிரிட்டனின் காலனி நாடாக இந்தியா விளங்கியதால் இந்தியாவின் தொழில் வளர்ச்சி தேக்க மடைந்தது. ஆங்கிலேயர்கள் பின்பற்றிய வாணிபக் கொள்கை யால், பிரிட்டனுக்கும் இந்தியாவிற்கும் இடையே உள்ள வாணிபம் விரிவடைந்ததே தவிர, இந்தியாவின் தொழில்கள் வளரவில்லை. வாணிபம் சமஉரிமை அடிப்படையில் நடை பெறாத காரணத்தால், வாணிபத்தால் இந்தியாவிற்கு எவ்வித நலன்களும் தோன்றவில்லை: வாணிபம் சுரண்டலின் மறுபெயராக விளங்கியது.

போக்குவரத்து. தொழில் வளர்ச்சிக்குப் போக்குவரத்து வசதிகள் இன்றியமையாதவை. இந்தியாவில் இருப்புப்பாதைகள் 1857-க்குப் பின்னர் தொடங்கப்பட்டன. அதாவது மற்ற நாடு களில் - முக்கியமாக அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், சோவியத் நாட்டிலும்-இருப்புப்பாதைகள் எப்போது முதன் முதலில் அமைக்கப்பட்டனவோ, அப்போதே இந்தியாவிலும் போடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நாடுகளின் தொழில் வளர்ச்சிக்கு இருப்புப்பாதைகள் முன்னோடியான துறைகளாக (Leading Sector) விளங்கின: ஆனால் இந்தியாவில் அங்ஙனம் ஏற்படவில்லை. மேலை நாடுகளில் இருப்புப்பாதையின் விளைவாகக் கனரகத்தொழில்கள், முக்கியமாக இரும்பு, எஃகு, பொறியியல் தொழில்கள் வளர்ந்தன. இந்தியாவில் இருப்புப் பாதைக்குத் தேவையான சாதனங்கள் அனைத்தும் இறக்குமதி செய்யப்பட்டன. இதனால் இந்தியாவின் வெளிநாட்டு வாணிபம் வளர்ந்த அளவிற்கு, உள்நாட்டுத் தொழில்கள் வளர்ச்சியுற வில்லை.

சக்தி : (Power) தொழில் வளர்ச்சிக்குச் சக்தி அடிப்படையாக உள்ளது. சென்ற நூற்றாண்டில் நிலக்கரிதான் மிகவும் முக்கிய மான சக்தியாக விளங்கியது. நீர் மின்சார உற்பத்தி அக் காலத்தில் முக்கியத்துவம் பெறவில்லை. நிலக்கரிச் சுரங்கங்கள் வங்காளம், பீகார் மாநிலங்களில் அதிகம் காணப்பட்டன.

10 அத்தியாயம்-1.

மேற்குக்கரை யோரத்திலும், தென் தீபகற்பத்திலும், நிலக்கரி இல்லாமையால் தொழில் வளர்ச்சி பெரிதும் தடைபட்டது. அப் பகுதிக்குத் தேவையான பெருமளவு நிலக்கரி இறக்குமதி செய்யப் பட்டது.

மூலதனம். தற்சமயம் இந்தியா ஓர் ஏழை நாடு என்றாலும், 18-வது, 19-வது நூற்றாண்டுகளில் பிற நாடுகளுடன் ஒப்பிடக் கூடிய அளவிற்கு, வளமான நாடாகவே இருந்தது. அக்காலத்தில் பெரும்பாலான நாடுகளில் தலா வருமானம் கிட்டத்தட்ட குறைந்த மட்டத்தில்தான் இருந்தது. ஆகையால் சேமிப்பு குறைவாக இருந்தது, அல்லது சேமிப்பு வாய்ப்புகள் குறைவாக இருந்தன என்பதைவிடக் கிடைக்கக்கூடிய சேமிப்புகள் யாவும் தொழில்துறையின் வளர்ச்சிக்காகப் பயன் படுத்தப்படவில்லை என்பதே பொருத்தமாக இருக்கும். அப்போது பாங்குகளின் பொதுவான வளர்ச்சி திருப்தி அளிக்கவில்லை என்பதுடன், அவற்றின் நாணயக் கொள்கையும் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவு தரக்கூடியதாக இல்லை. அவை தொழில்துறை உற் பத்திக்கு அதிகம் பண உதவி செய்யாமல், வாணிபம், தோட்டப் பயிர்கள் ஆகியதுறைகளுக்கு நாணயம் நல்கின. உற்பத்தித் துறையைவிட வாணிபத்தில் அதிக விழுக்காடு லாபம் கிடைத்த தாலும், வாணிபம் கிட்டத்தட்ட ஆங்கிலேயர்களின் முழு உரிமையாக இருந்ததாலும், இடர் ஏற்புகள் குறைவாக இருந்த தாலும், மிகப்பெரிய வணிக பாங்குகள்,—முக்கியமாக மூன்று மாநில பாங்குகள்—ஆலைத்தொழில்களுக்குப் பண உதவி செய்ய வில்லை.

இந்தியாவில் மூலதன அங்காடி வளரவில்லை என்பது உண்மை தான். இக்குறையைப் போக்கக்கூடிய அளவில் நிருவாகப் பதிலாளி முறை (முகவர் முறை–Managing Agency System) செயல்பட்டது. தொழில், வாணிபத்துறைகளில் அனுபவம் உடைய செல்வந்தர்கள், தொழில்நிறுவனங்களை நிருவகிக்கும் பொறுப்பு ஏற்றனர். இவர்கள் தங்களுடைய தனிப்பட்ட செல் வாக்கையும், சமூக அந்தஸ்தையும் பயன்படுத்தித் தொழில் நிறுவனத்திற்குத் தேவையான மூலதனத்தைத் திரட்டினார்கள்.

தொழில் முயற்சி: பேரளவுத் தொழில்களை நிறுவவும், நிருவகிக்கவும் ஆங்கிலேயர்கள் முன் மாதிரியாக இருந்தார்கள். இவர்கள் நேரிடையாகத் தொழில் முயற்சியில் ஈடுபடுவதை அரசு

1833 வரைத் தடை செய்தது.[11] அதன்பின்னர் ஆங்கிலேயர்களின் தொழில் முயற்சிக்குப் பல சலுகைகளை வழங்கி ஆதரவு அளிக்க அரசு முன் வந்தது. நாளடைவில் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்தும், அவர்களின் தொழில் முயற்சிகளை முன் மாதிரியாகக் கொண்டும் பல இந்தியர்கள் தொழில் முயற்சியில் ஈடுபட்டனர். இருந்தபோதிலும் 19-வது நூற்றாண்டில் இந்தியர்களின் ஈடுபாடு குறைந்து காணப்பட்டது உண்மைதான். ஆனால் இருபதாவது நூற்றாண்டில் இந்தியர்கள் தொழில் முயற்சியில் ஈடுபடாமல் விலகி இருந்தனர் என்று கூறமுடியாது. டாடா, பிர்லா ஆகிய குடும்பத்தினர் சிறந்த தொழில் முயலுநர்களாக விளங்குகின்றனர். இவர்களின் தொழில் முயற்சி பன்னாட்டு அளவில் போற்றுதற்குரியதொரு செயலாக விளங்குகிறது. இவர்களைத் தவிர, குஜராத்தியர், மார்வாடியர், சமணர் (ஜெயின்) பஞ்சாபிகள், செட்டியார், நாயுடு, முதலிய வகுப்பினர் தொழில் முயற்சியில் புதிய சாதனைகளை ஏற்படுத்தியுள்ளனர்: ஆகையால் இந்தியாவில் தொழில் முயலுநர்கள் காணப்படவில்லை என்பதும், இந்தியர்கள் தொழில் முயற்சியை வெறுத்து ஒதுக்குகின்றனர் என்பதும் பொருந்தாக் கூற்றாகும். ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்தியரிடம் காணப்பட்ட இத்திறன்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை. இவர்களின் தொழில் முயற்சிக்கு ஆதரவு அளிக்கவில்லை, இவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் நடந்து கொள்ளவுமில்லை.[12]

துணைத்தொழில்களும், சிக்கன நலன்களும்

தனி ஒரு தொழிலின் விரிவாக்கம் தொழில்வளர்ச்சி யாகாது. ஆரம்பத்தில் நுகர் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் மட்டுமே தோன்றக்கூடும். ஆனால் நாளடைவில் நுகர் பொருள் தொழில்களுக்குத் தேவையான கருவிகள், சாதனங்கள் முதலியவற்றை உள் நாட்டிலேயே தயாரிக்கவேண்டும். அப்போதுதான் இயந்திர சாதனத்தொழில்கள், இரும்பு எஃகு போன்ற உலோகத் தொழில்கள் தோன்றும். அடிப்படைத் தொழில்கள், நுகர் பொருள் தொழில்கள் ஆகியவற்றைத் தவிர, இவற்றிடையே பல துணைத்தொழில்களும் ஏற்படும். ஒரு தொழிலில் தயாரிக்கப்பட்ட

[11] கிழக்கிந்தியக் கம்பெனியின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, அதில் பணியாற்றும் ஆங்கிலேய ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் அல்லது சொந்தமாகத் தொழில் உற்பத்தி அல்லது வாணிபத்தில் ஈடுபடுவதைத் தடைசெய்யக் கம்பெனி விரும்பியது. ஆகையால் ஆங்லேயர்கள் இந்தியாவில் மனை, வீடு, போன்ற அசைவிலா [தாவர] சொத்துகளை வாங்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. இத்தடை 1833-ல் தான் அகற்றப்பட்டது. அதன்பின்னர் ஆங்கிலேயர்கள் இந்தியாவின் தொழில் முயற்சிகளில் ஈடுபடலாயினர்.

[12] Wilfred Malenbaum—op crt P. 155—159, op. 168.

பொருள் இதர தொழில்களுக்குத் தேவைப்படுகின்றன. எனவே குறிப்பிட்டதொழிலின் விரிவாக்கத்தால்—பேரளவு சிக்கன நலன்கள் ஏற்படுவதால்—மேற்படி தொழிலின் ஆக்கச் செலவு குறைவதுடன், அப்பொருளைப் பயன்படுத்தும் இதர தொழில்களின் ஆக்கச் செலவும் குறையக்கூடும். இதைப் புறச் சிக்கன நலன்கள் என்பர். பல்வகைத் துணைத் தொழில்களின் பெருக்கத்தால் ஏற்படும் சிக்கன நலன்கள் தொழில் கட்டமைப்பின் அடிப்படையை விரிவுபடுத்துகின்றன. ஆனல் இதைப்போன்ற சீரான தொழில் வளர்ச்சி இந்தியாவில் ஏற்படவில்லை. இங்கு நுகர் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் மட்டுமே விரிவடைந்தன. அதிலும் முக்கியமாக நெசவுத் தொழில்கள் மட்டும் குறிப்பிடத்தக்க அளவில் விரிவடைந்தன, இவற்றிற்கு ஆதாரமான அடிப்படைத் தொழில்கள் வேரூன்றவில்லை. அடிப்படைத் தொழில்கள், துணைத்தொழில்கள் முதலியனதோன்றாமையால் ஆக்கச் செலவைக் குறைக்கக் கூடிய சிக்கன நலன்கள் ஏற்படவில்லை.

காப்புக் கொள்கை: இந்தியாவின் தொழில் வளர்ச்சி, பிரிட்டனின் தொழில் வளர்ச்சியுடன் நேரிடையாகப் போட்டியிடும் என்று சென்ற நூற்றாண்டில் கருதி வந்தனர். ஆனல் இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் இக் கொள்கையில் முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியாவின் தொழில் வளர்ச்சியால் இவ்விரு நாடுகளுக்கும் இடையே உள்ள வாணிபம் பன்மடங்கு பெருக்கமடையும் என்று நினைக்கத் தொடங்கினர். இந்த எண்ணம் வேரூன்றுவதற்கு முதல் உலகப் போர் பெரிதும் காரணமாக இருந்தது. தொழில் துறையில் வளர்ச்சி அடைந்த இந்தியாவினல் பிரிட்டிஷ் பேரரசிற்கு அதிக நலன்கள் ஏற்படும் என்றும், தொழில்கள் வளர்ச்சியுறாத இந்தியா பிரிட்டனுக்கு ஒரு சுமையாக இருக்கும் என்றும் உணர்ந்தார்கள். இக்கருத்துகளை 1971-ல் இந்தியத் தொழில் ஆணைக் குழு (Industrial Commission of India) வலியுறுத்தியது. இந்த அடிப்படையில்தான் இந்திய அரசாங்கத்தின் புதிய வாணிபக் கொள்கை உருவாகியது. புதிய வாணிபக் கொள்கை தொழில் வளர்ச்சிக்குச் சாதகமாக இருந்த போதிலும், இது தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கப் போதுமானதாக இல்லை. அதைத் தவிர அப்போது உருவாக்கப்பட்ட தொழில் காப்புக் கொள்கையும், அதைச் செயல்படுத்திய சுங்க வாரியமும் (Tariff Board) நாட்டின் பொதுவான தொழில் வளர்ச்சியை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்படவில்லை. இவ்வாரியங்கள் தனித்தனியாக நியமிக்கப்பட்டன. தனி ஒரு தொழிலின் ஆக்கச் செலவையும், அது விரிவடைதற்கான

வாய்ப்புகளையும் ஆராய்ந்தனர். பல்வகைத் தொழில்கள் தோன்றுவதால் ஏற்படக்கூடிய புறச்சிக்கன நலன்கள், மற்றும் துணைத் தொழில்களின் வளர்ச்சி முதலியன புறக்கணிக்கப் பட்டன.

காப்புக் கொள்கையை அரசாங்கத்தின் மறைமுகமான ஆதரவாகக் கருத வேண்டும். பின்தங்கிய நாடுகளின் தொழில் வளர்ச்சிக்கு மறைமுக ஆதரவுகள், அல்லது சலுகைகள் போதுமானதாக இல்லை. இந்நாடுகளில் அரசாங்கம் நேரிடையான சில நடவடிக்கைகளை எடுத்தாலன்றித் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க முடியாது. புதிய அமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும் நேரிடையாக முதலீடு செய்தும், பல்வகைப் புதிய தொழில்களை நிறுவியும் சிக்கன நலன்கள் தோன்ற வழி வகுக்க வேண்டும்.

இந்தியாவில் தொழில் உற்பத்தி

நிறுவன அமைப்புக் காரணிகள். பன்னெடுங்காலமாகத் தேக்கமுற்றுள்ள ஒரு சமுதாயத்தை ஒரு தலைமுறைக் காலத்தில் தொழில் துறையில் முன்னணிக்குக் கொண்டுவருதல் கிட்டத்தட்ட இயலாத காரியமாகும். பல தலைமுறைகளாக மேலை நாடுகளில் தோன்றி வளர்ந்துள்ள தொழில்கள் சென்ற தலைமுறையில்தான் பாரதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் தொழில் வளர்ச்சிப் பாதையில் பாரதம் காலம் கடந்து, அடி எடுத்து வைத்துள்ளது. இதனால் இருவகை விளைவுகள் ஏற்படக்கூடும். முதலாவதாக, முதிர்ச்சி அடைந்த தொழில் நுட்பங்களையும், உற்பத்தி முறைகளையும் நேரிடையாகத் தெரிந்துகொள்ள முடியும், இதனால் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கவும், திட்டமிட்ட வகையில் இதை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும். இரண்டாவதாக, பின்தங்கிய நாடுகளில் காணப்படும் புராதன நுட்ப முறைகளுக்கும், வளர்ச்சி அடைந்த மேலை நாடுகளில் காணப்படும் நவீன நுட்ப முறைகளுக்கும் அதிக இடைவெளி இருப்பதை உணரலாம். தொழில் நுட்ப இடைவெளி (Technological discontinuity) காரணமாக மேலை நாடுகளில் வளர்ந்துள்ள சில வகைத் தொழில் நுட்பங்கள் நேரிடையாகப் புராதன தொழில் நுட்பங்களுடன் போட்டியிடுவதாகவும் உள்ளன.

தொழில் நுட்ப மாற்றங்கள் தனித்து நிகழக்கூடியவை அல்ல. இவை சமுதாயத்தின் அமைப்புக் காரணிகளுடன் நெருங்கிய வகையில் தொடர்பு கொண்டுள்ளன. இவை வருமான வாய்ப்புகளையும், செல்வ-வருமானப் பகிர்வையும் மாற்றி அமைக்கின்றன. காட்டாக, புதிய நுட்பங்களைப் பயன்படுத்தும் துறை

களின் உற்பத்தித்திறன் உயருவதால் இத்துறைகளின் லாப விழுக்காடும், வருமான வாய்ப்புகளும் பெருகும்; அதே சமயம் இவை புராதன துறைகளுடன் போட்டியிடுவதால் அத்துறைகளின் லாப விழுக்காடும், வருமான வாய்ப்புகளும் தேய்ந்து செல்லும். எந்த அளவிற்கு விரைவாகப் புதிய தொழில் நுட்பங்கள் ஒரு புராதன சமுதாயத்தில்) புகுத்தப்படுகின்றனவோ அந்த அளவிற்கு மரபான துறைகளில் இழப்பும், வேலையின்மையும் பெருகக்கூடும்.

நுட்பரீதியான மாறுதல்களினால் வருமான மறுபகிர்வு ஏற்படுவதைப் போலவே சொத்துடைமையிலும் மறுபகிர்வு ஏற்படுகின்றது. நெடுங்காலமாக நிலவிய உற்பத்தி முறை அகற்றப்படுவதால் பல்வேறு குழுக்களுக்கும் இடையே உள்ள ஒப்புமையான செல்வ, வருமான ஏற்றத்தாழ்வுகள் (அகற்றப்பட்டு) புதியதொரு அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. சமுதாயத்தின் கட்டமைப்பும், பல்வேறு குழுக்களின் செல்வாக்கும், நிறுவன அமைப்புகளும் புதிய நுட்ப முறைக்கு ஏற்ப மாற்றம் அடைகின்றன. புதுமைபுகுத்தலின் அடிப்படையில் தோன்றிய தொழில் முயற்சிகள் சாதக விளைவுகளையும், இதர தொழில் முயற்சிகளால் சமுதாயத்தின் தொகு அளவு வளர்ச்சி பாதிக்கப்படுவதையும் இந்நூலின் முதல் பாகத்தில் (அத்தி. 7–பக். 158–161) கூறியுள்ளோம். புதிய நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் ஆலைத் தொழில்கள் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய நிகர ஆதார சக்திகளைத் (Positive forces) தோற்றுவிக்கின்றன. அதைப் போன்ற புதுமைகள் வேளாண் துறையில் ஏற்படவில்லை. இங்குள்ளவர்கள் தங்கள் வருமான மட்டத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நிலவுரிமை, அல்லது சாகுபடி உரிமையை நம்பியுள்ளார்கள். இதனால் இத்துறையில் சுரண்டல்தன்மை மிகுந்துள்ளது. இது பூஜ்ய ஆதாய ஆட்டத்திற்கு (Zero Sum Game) ஒரு விளக்கமாக உள்ளது.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் தோன்றிய பேரளவு ஆலைத் தொழில்கள் நிகர ஆதாய சக்திகளைத் தோற்றுவித்தன என்றாலும், விவசாயத் துறையில் நிலவுரிமை என்ற நிறுவன அமைப்பு அடிப்படையில் செயல்படும் சுரண்டல்களை—பூஜ்ய ஆதாய சக்திகளை—முறியடிப்பதற்குப் போதுமானதாக இல்லை. வேளாண் துறையில் நிகர ஆதாய சக்திகளைத் தோற்றுவிக்கக்கூடிய புதுமை புகுத்தல்கள், நிறுவனக் கட்டமைப்பு மாற்றங்கள் முதலியன பாரதம் விடுதலை அடையும்வரை ஏற்படவில்லை.

பத்தொன்பதாவது நூற்றாண்டில்: 1875-ல் தான் இந்தியப் பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகள் மிகக் குறைவாக

இருந்தன என்று திரு. ரானடே கணக்கிட்டுள்ளார்.[13] அதன் பின்னர் நிலைமை ஓரளவு சீர்பட்டதற்குப் புதிதாகத் தோன்றிய நவீன ஆலைத் தொழில்கள் காரணமாக இருந்தன. இது இந்தியா வின் புராதன சமுதாய அமைப்பில் முக்கியத்துவம் பெற்றிருந்த நுண் கலைகள், கைவினைத் தொழில்கள் ஆகியவற்றின் நலிவை ஈடுசெய்யக்கூடிய வளர்ச்சியின் ஆரம்பக்கட்டமாக இருந்தது. 1873-க்குப் பின்னர், 1892-வரை ஆலைத் தொழில்களின் வளர்ச்சி திருப்திகரமாக இருந்தது. இந்த ஆண்டுகளில் ஆலைப் பொருள் களின் ஏற்றுமதி மூன்று மடங்கு உயர்ந்தது. இக் காலத்தில் ஆலைப் பொருள்களின் இறக்குமதி சுமார் 39% மட்டுமே அதிகரித்தது. அதைத்தவிர இந்தியாவிற்கு அதிக அளவு கச்சாப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இறக்குமதியான கச்சாப் பொருள்களின் விரிவாக்கத்தில் பாதியைவிடக் குறைவான வேகத்தில் தான் கச்சாப் பொருள்களின் ஏற்றுமதி அதிகரித்தது. இந்தப் புள்ளி விவரங்களைக்கொண்டு இந்தியாவின் தொழில் வளர்ச்சி திருப்திகரமாக இருந்தது என்ற முடிவுக்கு வர இயலாது. ஏனெனில் இவையாவும் ஒப்புமையான விழுக்காடுகள் ஆகும். ஆரம்பத்தில் ஆலைப்பொருள்களின் ஏற்றுமதியும், கச்சாப் பொருள்களின் இறக்குமதியும் மிகக் குறைந்த அளவில் இருந்தன என்பதை மறந்துவிட முடியாது.

1857-க்குப் பின்னர் சுமார் 50-அல்லது 60 ஆண்டுகளில் பல புதிய ஆலைத்தொழில்கள் ஏற்பட்டன. ஆனால் இந்தியாவின் மொத்த உற்பத்தி, முதலீடு செய்துள்ள மூலதனம், வேலை செய்யும் தொழில்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இத் தொழில்கள் இவ்வித முக்கியத்துவமும் பெறவில்லை. இவற்றின் வளர்ச்சியால் பெரும்பாலான மக்களின் வாழ்க்கை முறையிலும், வாழ்க்கைத் தரத்திலும் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. பத் தொன்பதாவது நூற்றாண்டில் ஆலைத்தொழில்கள் இங்கு ஒன்றும், அங்கு ஒன்றுமாக இருந்தன. ஒரு தொழிலின் உற்பத்தி மற்றொரு தொழிலின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய சமநிலை வளர்ச்சி யாக இல்லை. பெரும்பாலும் நுகர் பொருள்களைத் தயாரிக்கும் ஆலைத் தொழில்கள் மட்டுமே தோன்றின. இயந்திரங்கள், கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்கள் தோன்றவில்லை, தொழில் வளர்ச்சிக்குக் கனரகத் தொழில்கள் அடிப்படையானவை. அவை தோன்றாத காரணத் தால் இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு நிலையான அடிப்படை உருவாகவில்லை. இவ்வாறு தொழில் கட்டமைப்பில் உள்ள

[13] M.R. Kulkarni—Industrial Development P. 73.

அடிப்படையான குறைபாடுகளின் காரணமாகத் தொழில் புரட்சி முழுமை பெறவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நெசவு ஆலைத் தொழில்கள் மட்டுமே முக்கிய தொழில்களாக இருந்தன. அதைத்தவிரத் தேயிலை, அவுரி, நிலக்கரி (ச்சுரங்கம்,) மாவு மில்கள், பதனிடும் தொழிற்சாலைகள் முதலியன தோன்றியிருந்தன. பெரும்பாலான தொழில்களுக்குத் தேவையான மூலதனம், இயந்திரம், கருவிகள், தொழில் நுட்பம், இடைநிலைப் பொருள்கள், எரி பொருள்கள் முதலியன இறக்குமதி செய்யப்பட்டன. நுகர் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கு அத்தியாவசியமான **பின் இணைப்பு** (**Backward linkage**) தொழில்கள் தோன்றவில்லை. முக்கியமாக இரும்பு, எஃகு, இரசாயனம் போன்ற கனரகத் தொழில்கள் வளரவில்லை. நிலக்கரியைத் தவிரச் சக்தியை அளிக்கும் தொழில்கள் ஏற்படவில்லை: பொறியியல் தொழில்கள் கிட்டத்தட்ட இல்லை என்றே சொல்லிவிடலாம்.

1911-ல் இந்தியாவில் முதன் முறையாகத் **தொழில் கணிப்பு** (Industrial Census) செய்யப்பட்டது. அந்த ஆண்டில் தொழிற்றுறையில் 21 லட்சம் மக்கள் வேலை செய்தார்கள். ஆனால் இதில் பெரும்பாலானவர்கள் தேயிலைத் தோட்டப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டார்கள். அவர்களை நீக்கிவிடுவோமானால் ஆலைத்தொழில்களில் மட்டும் வேலை செய்த தொழிலாளர்களின் தொகை மிகவும் குறைவாக இருக்கும். 1911-ல் மக்கள் தொகை 31 கோடியாகக் கருதுவோமானால், தொழிற்றுறையில் (தோட்டப் பயிர் உள்பட) சுமார் 0·7% மக்கள் வேலை செய்தனர் என்று தெரியவரும். மொத்தத் தொழிலாளர்களில் 2·0% மட்டுமே தொழில்துறைகளில் இருந்தனர். குறைந்தது 50 தொழிலாளர்களைக் கொண்ட ஒரு நிறுவனத்தை ஆலை என்று அழைப்போமானால், 1912-ல் சுமார் **8·7** லட்சம் ஆலைத் தொழிலாளர்கள் இருந்தனர் என்று கூறலாம். முதல் உலகப் போர் ஏற்படும் முன்னர் இந்தியப் பொருளாதார அமைப்பில் பேரளவுத் தொழில்கள் முக்கியத்துவம் பெறவில்லை. அப்போது கிராமத் தொழில்களிலும், கைவினைத் தொழில்களிலும் அதிக மக்கள் ஈடுபட்டிருந்தனர். மரபான நூற்பு, நெசவுத் தொழில்களில் மட்டும் சுமார் **30** லட்சம் மக்கள் வேலை செய்துவந்தனர்.

இந்தியத் தொழில்களின் வளர்ச்சி வேகம் இரு உலகப் போர்களினால் மேலும் ஊக்குவிக்கப்பட்டது. இக்காலத்தில் பல புதிய தொழில்களை உள்நாட்டிலேயே தயாரிக்கவேண்டிய கட்டாயம்

ஏற்பட்டது. ஏற்கனவே நிறுவப்பட்ட தொழில்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட்டது. இதனால் தொழில்துறையின் வளர்ச்சி வேகம் பன்மடங்கு அதிகரித்தது.

தொழில்துறை தற்காலத்தில் போர் முக்கியத்துவம் பெற்ற ஒரு துறையாக விளங்குகிறது. போரின் வெற்றியும், தோல்வியும் தொழில்துறையின் வளர்ச்சியைச் சார்ந்து உள்ளன. பிரிட்டன் தனது தூரக் கிழக்குக் காலனிகளைப் பாதுகாப்பதற்கு இந்தியத் துணைக்கண்டத்தின் தொழில்துறை வளர்ச்சி ஒரு முன் நிபந்தனையாக இருப்பதை உணர்ந்தது. கிழக்கு ஆசியாவில் போரிடுவதற்குத் தேவையான போர்த் தளவாடங்கள், ஆயுதங்கள், கருவிகள், வெடிமருந்துகள் முதலியவற்றைத் தயாரித்து அளிக்கும் நாடாக இந்தியா விளங்கவேண்டும் என்று விரும்பியது. பிரிட்டன் தனது விரிவான ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இந்தியத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கத் தீர்மானித்தது. இக்காலத்தில் பல புதிய தொழில்கள் ஏற்பட்டன. அவற்றுள் கந்தக அமிலம், செயற்கை (synthetic) அமோனியா. சோடா காரம் (Caustic soda) க்ளோரின் (Chlorine) 'பிளீச்சிங் பவுடர்' (Bleaching powder) முதலிய இரசாயனப் பொருள்கள் முதன் முறையாக (*1941*) இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த ஆண்டில்தான் இந்தியாவில் முதலாவது ஆகாய விமானம் கட்டும் (assembling) தொழிலும் ஆரம்பமாகியது. (தனியார் துறையில்). பொறிக்கருவிகள் (Machine tools), கடைசல் பொறி ('லேத்'-Lathe) போன்ற பலவகை இயந்திர சாதனங்களும் முதன் முதலாக உற்பத்தி செய்யப்பட்டன. பல புதிய தொழில்கள் தோன்றுவதற்கு உலகப்போர்கள் காரணமாக இருந்தன.

அட்டவணை - 14·1

இரண்டாவது உலகப்போரில் தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்†
(1937 = 100)

ஆண்டுகள்	பொதுக் குறியீட்டு எண்	பஞ்சாலை (நெசவுத்) தொழில்	சணல்	எஃகு	இரசாயனம்	சர்க்கரை	சிமெண்ட்	காகிதம்
1939	105·4	104·3	98·3	108·0	84·4	88·7	124·8	121·0
1945	120·0	120·0	84·4	142·9	134·1	85·5	196·6	196·5

ஆதாரம்: Kulkarni—முன் கூறியபடி பக். 129.

இரண்டாவது உலகப்போரினால் பொதுவான தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் உயர்ந்துள்ளது என்றாலும், அனைத்துத் தொழில்களும் சம விகிதத்தில் வளரவில்லை. எஃகு, இரசாயனம், சிமெண்ட், காகிதம் போன்ற தொழில்களின் வளர்ச்சி மிக அதிக அளவுக்கு இருந்தன. சணல், சர்க்கரை ஆகிய இரு தொழில்களும் ஓரளவுக்குத் தேக்கமுற்றுத் தேய்வுற்றன எனலாம்.

போருக்குப் பின்னர் பல பிரச்சினைகள் தலைதூக்கின. கிடைப் பருமை மிகுதியான வீக்கச் சூழ்நிலையில் பல புதிய தொழில்கள் காளான்கள் முளைப்பது போலத் திடீர் என்று தோன்றின. கச்சாப் பொருள்கள், நிதி, உற்பத்தித்திறன், ஆற்றல்கள், (Skills) அங்காடித் தொழிலின் இட அமைப்பு, பேரளவு சிக்கன நலன்கள் ஆகிய வற்றை அதிகம் யோசிக்காமல் பல தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டன. போர் நடைபெற்ற காலத்தில் எல்லாத் தொழில்களும் லாபகரமாகச் செயல்பட்டன ; திறமையான நிர்வாகத்தின் அவசி யத்தை அப்போது உணரவில்லை. மேலும் பல நிருவாக ஒழுங்கீனங்கள், நிதிக் கட்டுப்பாடின்மை முதலியன ஆக்கச் செலவை உயர்த்தின. போர் முடிவுபெற்ற பின்னர் நிலைமை முற்றிலும் மாறியது. அப்போதுதான் இந்தியத் தொழில்களின் ஆக்கச் செலவு உயர்ந்து இருப்பதை உணர்ந்தனர். 1949-ல் மேற்கொள்ளப்பட்ட ரூபாயின் மதிப்பிறக்கம்[14] இந்தியத் தொழில்களுக்கு ஓரளவுக்கு நிவாரணம் அளித்தது.

தொழில் செறிவு : இந்தியாவின் தொழில் வளர்ச்சி 1850-ல் ஆரம்பமான போதிலும், பம்பாய், கல்கத்தா, அகமதாபாத் ஆகிய மூன்று நகரங்கள்[15] அதன் சுற்று வட்டாரங்களில் மட்டுமே தொழில்கள் அதிகம் செறிந்து காணப்பட்டன. நாட்டின் இதர பகுதிகளில் தொழில் வளர்ச்சி கிட்டத்தட்ட ஏற்படவில்லை எனலாம் ; பீகாரில் உள்ள ஜாம்ஷெட்பூர் இதற்கு விதி விலக்காகும். இரண்டாவது உலகப் போரினால் நாட்டின் பல பகுதிகளிலும் புதிய தொழில்கள் தோன்றின. சௌராஷ்டிரத்தில் உள்ள சீகா, பீகாரில் டால்மியா நகர், பூனாவிற்கு அருகில் கோப்போலி, வால்சந்த் நகர் முதலியன 1939-வரைக் கிராமங் களாகவே இருந்தன. உலகப் போருக்குப் பின்னர் இவை மிகப் பெரிய தொழில் நகரங்களாக மாறிவிட்டன. மிகப்பெரிய தொழில்களின் எழுச்சியை இவை பிரதிபலிக்கின்றன. இவை தவிர இந்தியாவின் பல பகுதிகளிலும் தொழில்கள் பரவலாகத்

[14] அத்தியாயம் 24, பிரிவு 12 பார்க்க.

[15] George Rosen – Industrial Caange in India (Asia) 1961, P. 1.

தோன்றின. காட்டாக, பெங்களூர், கோயம்புத்தூர், ஹாதியாஞ முதலிய தொழில் நகரங்கள் இக்காலத்தில்தான் வளர்ச்சி யுற்றன. பின்னர் ஐந்தாண்டுத் திட்டங்களினுல் மேலும் பல நகரங்கள் தோன்றின. அவற்றுள் துர்க்காபூர், பிலாய், ரூர்கேலா முக்கியமானவை.

1947-ல் பாரதத்தின் தொழில் வளர்ச்சி

பாரதம் தன்னுரிமை எய்திய காலத்தில் ஒரு வேளாண்மை நாடாகவே இருந்தது. பாரதத்தின் ஏற்றுமதிப் பொருள்கள் பெரும்பாலும் வேளாண்மைப் பொருள்களாகவும், சுரங்கத் திலிருந்து எடுக்கப்பட்ட தாதுப்பொருள்களாகவும் இருந்தன. ஓரளவு பூர்த்தியான செய்பொருள்களின் ஏற்றுமதி மொத்த ஏற்றுமதியில் சிறு விழுக்காடாகவே இருந்தது. இதைத்தவிர ஏற்றுமதி செய்யப்பட்ட முழுதும்-பூர்த்தியான செய்பொருள்கள் அநேகமாக நுகர் பொருள்களாகவே இருந்தன. ஆனுல் இப் பொருள்களின் முக்கியத்துவம் மொத்த ஏற்றுமதியில் மிகச் சிறு அளவாக இருந்தது.

1947-ல் பாரதத்தின் (இந்தியத்துணைக் கண்டத்தின்) தொழில் அடிப்படை மிகவும் சிறியதாக இருந்தது. அப்போது வளர்ச்சி யுற்ற தொழில்கள் பின்வருமாறு : சணல் ஆலைகள், பஞ்சாலைகள், வனஸ்பதி, சிமெண்ட், சர்க்கரை முதலியன. இவையாவும் நுகர் பொருள் தொழில்கள் ஆகும். இதைத்தவிரக் கான் பொருள்களைப் பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களும் காணப்பட்டன. 'பொறி இயல்' தொழில்கள் (Engineering Industries) பெயரளவிற்கு இருந்தன. அவை எளிய நுண் முறைகளைக் கொண்டு பல பொருள்களைத் தயாரித்தன. காட்டாக, வாளிகள், பாரசீக சக்கரங்கள் (Persian Wheels-நீர் இறைப்பதற்கு) மரபான வேளாண் கருவிகள், மின் விசிறிகள், தையற் பொறிகள், சைக்கிள்கள், 'ரேடியோ' பெட்டிகள், மின்சார 'பம்பு'கள் முதலிய பொருள்கள் சிறு அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. கனரக ஆதாரத் தொழில்களின் மூன்று எஃகு ஆலைகள் இருந்தன. இவற்றுள் ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா எஃகு ஆலை மிகவும் பெரியது. இதன் உற்பத்தி அளவைத்திறன் 10 லட்சம் டன் எஃகுக் கட்டிகள் ஆகும். இரண்டாவதாக பர்ன்பூரில் உள்ள இந்திய இரும்பு எஃகுத் தொழிற்சாலை. இதன் உற்பத்தி அளவைத் திறன் ஐந்து லட்சம் டன் எஃகுக் கட்டிகள் ஆகும். மூன்றுவதாக- பத்திராவதியில் உள்ள ஆலையில் 80,000 டன்கள் எஃகுக் கட்டிகளை உற்பத்தி செய்யலாம். அப்போது அஸ்ஸாமில் டிக்பாயில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை இயங்கிவந்தது. இந்த ஆலை 450,000

டன்கள் கச்சா எண்ணெயைச் (Crude oil) சுத்தம் செய்யக் கூடியது.[16] இரும்பு அல்லாத உலோகங்களில் அலுமினியம் தாமிரம் மட்டுமே முக்கியமாக உற்பத்தி செய்யப்பட்டன. ஆண்டுதோறும் 2500 டன்கள் அலுமினியம் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலை அஸ்ஸாமில் இருந்தது. 8000 டன் திறன் உடைய தாமிர உருக்காலை காட்சிலா (பீகாரில்) வில் இருந்தது. இதைத்தவிரப் பம்பாயிலும், மேற்கு வங்காளத்திலும் மோட்டார்கார் தொழிற்சாலைகள் இருந்தன. ஆனால் இத்தொழிற் சாலைகளுக்குத் தேவையான உறுப்புகள் உள்நாட்டில் அதிக அளவுக்கு உற்பத்தி செய்யப்படவில்லை. எனவே இறக்குமதி செய்த மோட்டார்கார் உறுப்புகளைப் பொருத்தும் ஆலைகளாகவே அப் போது இயங்கின. பெயரளவிற்கு, தெற்கே இரு உரத் தொழிற் சாலைகள் இராணிப்பேட்டையிலும், ஆலப்புழையிலும் இருந்தன. இரயில் 'வாகன்'களைத் தயாரிக்கும் தொழிற்சாலை மேற்கு வங்காளத்தில் இருந்தது. பாரதத்தின் மக்கள் தொகை, நாட்டு வருமானம், தொழிலாளர்களுக்குவேலைஅளிப்பு, ஏற்றுமதி முதலிய அடிப்படையில் தொழில்வளர்ச்சி முக்கியத்துவம் பெறவில்லை. பாரதத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யவோ, நாட்டின் எதிர் கால வளர்ச்சிக்குத் தகுந்த ஆதாரமாகவோ அவை விளங்கவில்லை.

1971-ல் தொழில் வளர்ச்சி

விடுதலைக்குப் பின்னர் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தொழிற் துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. தொழில் வளர்ச்சி வேகத்தை அதிகரிப்பதற்குக் கனரகத் தொழில்களின் விரிவாக்கம் அவசியம். ஆரம்பத்தில் பேரளவு நுகர்வுத் தொழில்களைத் தோற்றுவிக்க முக்கியத்துவம் கொடுக்க வில்லை. மக்களின் நுகர்வுத் தேவையைச் சிறு தொழில்களின் உற்பத்தியால் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையிருந்தது. இக்கருத்து இரண்டாவது திட்டத்திலும் இடம்பெற்றது. துரித மான தொழில் வளர்ச்சிக்கு முதலில் ஆதாரத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும் என்றும், அதன் பின்னர் நுகர் பொருள் களின் ஆலைத்தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம் என்றும் எண்ணினார்கள்.

ஆதாரத் தொழில்கள் : திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி யின் ஒருகூறாகப்பலபுதிய ஆதாரத் தொழில்கள் ஏற்பட்டன. இவை தொழில் அடிப்படையை விரிவுபடுத்தின. இருபது ஆண்டுகாலப்

[16] Eastern Economist-Annual Number, 1972, R. C. Unnal, Gate way to Prosperity, P. 1129-1135.

பொருளாதார வளர்ச்சி ஐந்தாண்டுத் திட்டங்களையும், திட்டமிட்ட வளர்ச்சியையும் விளக்குகின்றது. 1951-ல் இருந்ததைவிட 1971-ல் தொழில்துறை கணிசமான அளவிற்கு வளர்ந்துவிட்டது. தொழில்களுக்குத் தேவையான ஆதாரமான கச்சாப் பொருள்கள் இடைநிலைப் பொருள்கள் முதலியன பாரதத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இறக்குமதித் தேவை பெரிதும் குறைந்து வருகின்றது; தற்சமயம் (1971-ல்) பலவகையான இயந்திர சாதனங்களும் கருவிகளும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. தொழிற்றுறையின் வளர்ச்சியை ஏற்றுமதிப்பொருள்கள் பிரதிபலிக்கின்றன. முதல் நிலைப் (primary products) பொருள்களை மட்டும் ஏற்றுமதி செய்துவந்த நிலை நாளடைவில் மாறியது. தற்சமயம் பாரதத்தின் ஏற்றுமதியில் பூர்த்தியான செய்பொருள்களின் விழுக்காடு கணிசமாக உயர்ந்துள்ளது. பாரதம் (தற்சமயம்) மிக எளிய சாதனங்கள், நுகர் பொருள்கள் ஆகியவற்றை மட்டுமின்றி, முதிர்ந்த நுட்ப முறையில் செய்யப்பட்ட மதிப்புமிக்க உற்பத்திப் பொருள்களையும் ஏற்றுமதி செய்கிறது. ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகளில் பல புதிய தொழில்களை நிறுவுவதற்குப் பாரதம் நுட்ப உதவியும், மூலதனமும் கொடுத்து உதவுகின்றது. பாரதத்தின் உதவியால் தோற்றுவிக்கப்படும் தொழில்கள் அந்நாடுகளின் வளர்ச்சிக்கு மிகவும் ஆதாரமானவையாகும்.

பாரதத்தின் இறக்குமதியில் கச்சாப் பொருள்களும், பகுதி பூர்த்தி செய்த இடைநிலைப் பொருள்களும், முக்கிய இனங்களாக இருக்கின்றன. பூர்த்தியான நுகர் பொருள்களின் இறக்குமதி முற்றிலும் நிறுத்தப்பட்டது எனலாம். முழுவதும் பூர்த்தியான இயந்திர சாதனங்களின் இறக்குமதியும் வரவரக் குறைந்துகொண்டே வருகின்றது. மிக உயர்ந்த தேர்ச்சிவாய்ந்த நுட்பங்களைக் கொண்டுள்ள உற்பத்திச் சாதனங்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்படுகின்றன.

குறியீட்டு எண்கள்: சாதாரணமாகத் தொழில்துறையின் வளர்ச்சியைப்பொதுவாகக் குறிப்பிடுவதற்குத் தொழில்உற்பத்திக் குறியீட்டு எண்ணை உபயோகிப்பார்கள். இந்தக் குறியீட்டு எண்கள் யாவும் எடையிட்ட குறியீட்டு (weighted index numbers) எண்கள் ஆகும். அடிப்படையாக எடுத்துக் கொண்ட ஆண்டில் நிலவும் விலை விகிதங்களையும், ஒவ்வொரு தொழில்களின் உற்பத்தி அளவையும் எடுத்துக் கொண்டு அவை மொத்த தொழில் உற்பத்தியில் எந்த அளவிற்கு முக்கியத்துவம் பெற்று உள்ளன என்று நிர்ணயிப்பார்கள். இவை பெரும்பாலும் சதவீத அடிப்படையில் அமைந்த எண்களாக இருக்கும். இதன் காரண

மாக நடைமுறையில் தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்களை எடுத்து உபயோகிப்பதில் சில வரையறைகள் தோன்றுகின்றன. காட்டாக, பாரதத்தின் தொழில் கட்டமைப்பில் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ள பஞ்சாலைத் தொழிலின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பார்கள். 1951-ல் இத்தொழில்களுக்கு எந்த அளவுக்குத் தராதர முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதோ அதே அளவு முக்கியத்துவம் அதன்பின்னர் ஒவ்வொரு ஆண்டிலும் அவற்றிற்குக் கொடுக்கப்படுகிறது. திட்டமிட்டதுரித் தொழில் வளர்ச்சியின் காரணமாகப் பல புதிய தொழில்கள் ஏற்படுகின்றன. தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்ணிற்கு ஆதாரமான ஆண்டில் இத்தொழில்கள் ஏற்படாமல் இருக்கலாம்: அல்லது ஆதார ஆண்டில் உள்ளதைவிடக் காலப் போக்கில் ஒரு தொழிலின் தராதர முக்கியத்துவம் உயர்ந்திருக்கலாம். காட்டாக, பாரதத்தில் 1951-க்குப் பின்னர் தோன்றிய புதிய தொழில்களின் வளர்ச்சி வேகம் அதற்கு முன்னர் நெடுங்காலமாக நிலவிய தொழில்களின் வளர்ச்சி வேகத்தைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக உள்ளது. புதிய தொழில்களின் வளர்ச்சி வேகத்தினால் தொழில் உற்பத்தியின் கட்டமைப்பு மாறுபடுகிறது. இப்புதியதொழில்களுக்குப்போதிய முக்கியத்துவம் கொடுக்காத காரணத்தால் பொதுவான தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்களைவிடக் கூடுதலான வேகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கும். அடிப்படை ஆண்டு 1950-51ல் தயாரிக்கப்பட்ட உற்பத்திக் குறியீட்டு எண் 1960-61 ஆண்டின் வளர்ச்சியை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை. அதைப் போலவே 1960-61ஐ அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட குறியீட்டு எண்கள் 1970, 1971 ஆகிய ஆண்டுகளின் உற்பத்திப் பெருக்கத்தை முழுமையாக எடுத்துரைக்கவில்லை. ஒவ்வொரு தொழிலின் வளர்ச்சி வேகமும் வெவ்வேறாக இருக்கின்ற காரணத்தால், (கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படுவதால்) அவ்வப்போது குறியீட்டு எண்களையும் அதற்கான அடிப்படை ஆண்டையும், எடைகளையும் மாற்ற வேண்டியதாக இருக்கிறது.[17]

முதல்திட்டக் காலத்தில் தொழில் உற்பத்தி சுமார் 40% உயர்ந்துள்ளது. 1960-61-ல் முடிவுற்ற பத்தாண்டுகளில் தொழில் உற்பத்தி கிட்டத்தட்ட இரட்டித்துள்ளது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி வேகத்தைவிட இரண்டு மடங்கிற்கும் அதிகமாக இப்பத்தாண்டுகளில் வளர்ச்சி உள்ளது. 1900-50 ஆண்டுகளில் தொழில் உற்பத்தி ஆண்டுதோறும் 3·3%

[17]Economic Times 15-12-1972 பார்க்கவும்.

தொடர் வட்டிவிகிதத்திலும், 1951-61 ஆண்டுகளில் 7% தொடர் வட்டி விகிதத்திலும் அதிகரித்துள்ளது. இந்த நூற்றுண்டின் துவக்கத்தில் இருந்ததைவிட 1950 ல் தொழில் துறையின் அடிப்படை விரிவடைந்திருப்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். 1951 ல் எடையிட்ட குறியீட்டு எண்களின் அடிப்படையில் பஞ்சாலைத் தொழிலிற்கு 41·76% முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மேற்படி ஆண்டில் உற்பத்தியான தொழில் துறைப் பொருள்களின் மொத்த மதிப்பில் பஞ்சாலைத் தொழிலின் பங்கு ஐந்தில் இரண்டு பகுதிக்கும் அதிகமாக இருப்பதைக் காணலாம். அதே ஆண்டில் ஆதார உலோகங்களுக்கு (எஃகு முதலியன) 9·25% முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1951-61ல் பஞ்சாலைத் தொழிலின் உற்பத்தி 3.3%ம், இரும்பு, எஃகு உற்பத்தி 200% க்குச் சற்று அதிகமாகவும், இயந்திரங்கள் 500%ம், இரசாயனப் பொருள்கள் 300%ம் அதிகரித்துள்ளன. 1950-51ல் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தைவிடக் கனரக உலோகம், இரசாயனம், இயந்திர சாதனங்கள் ஆகிய தொழில்களுக்குக் கூடுதலான முக்கியத்துவம் (எடை) கொடுக்கப்பட்டிருக்குமானல், 1951-61 ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி வேகம் மேலும் அதிகமாக இருந்திருக்கும் என்பதை உணரலாம்.

1960–70 ஆண்டுகளில் தொழில் உற்பத்தி 80·3% உயர்ந்துள்ளது என்று பொதுவான தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் காட்டுகிறது. ஆனல் இக்காலத்தில் ஆதாரமான தொழில்கள் 120·8%ம், மூலதன உற்பத்தித் தொழில்கள் 124·1%ம் வளர்ந்துள்ளன; நுகர் பொருள் தொழில்களின் வளர்ச்சி 54·4% மட்டுமேயாகும்.[18]

இஞ்சினியரிங் தொழில்களின் வளர்ச்சி வேகமும் பிரமிக்கத் தகுந்த அளவில் இருந்தது. 1951-52ல் இத்தொழில்களின் ஆண்டு உற்பத்தி ரூ 100/- கோடியாக இருந்தது. 1971ல் இத் தொகை ரூ2500/- கோடியாக உயர்ந்துள்ளது.[19] உற்பத்திப் பெருக்கத்தைத் தொடர்ந்து ஏற்றுமதியும் உயர்ந்துள்ளது. 1960–61ல் இவற்றின் ஏற்றுமதி மதிப்பு ரூ12/- கோடியாக மட்டுமே இருந்தது. 1971ல் இத்தொகை ரூ 175/- கோடியாக உயர்ந்துள்ளது.

உரங்கள் : 1950–51ல் நைட்ரஜன் உரங்கள் 9000 டன்களும் (மெட்ரிக்), கிட்டத்தட்ட அதே அளவுக்குப் பாஸ்பர உரங்களும் உற்பத்தி செய்யப்பட்டன. 1971ல் இவற்றின் உற்பத்தி

18 Eastern Economist-Annual Number 1972. *ibid*

19 இப்பகுதியில் கொடுக்கப்பட்ட பெரும்பாலான புள்ளி விவரங்கள் மேற்படி கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டன.

அளவைத்திறன் முறையே 1·53 மில்லியன் டன்களாகவும், 0·52 மில்லியன் டன்களாகவும் உள்ளன. 1970லும், 1971லும் உற்பத்தி அளவைத்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. 1950–51 உர உற்பத்தித் தொழிற்சாலைகள் பாரதத்தில் இரண்டொரு இடங்களில் மட்டுமே இருந்தன. 1971ல் அநேகமாகப் பெரிய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு பேரளவு உர உற்பத்தித் தொழிற்சாலை இருந்தது. சில மாநிலங்களில் இரண்டு முதல் மூன்று உரத்தொழிற்சாலைகள் வரையிலும் இயங்கி வந்தன.

பெட்ரோலியம் ; பெட்ரோலியச் சுத்திகரிப்பு கணிசமான அளவிற்கு வந்துள்ளது. 1951–52ல் சுமார் 4½ லட்சம் டன்கள் கச்சா எண்ணெய் சுத்தம் செய்யும் அளவைத்திறன் இருந்தது. 1971ல் இத்திறன் 20 மில்லியன் டன்களானது. இதைத் தவிர மேலும் இரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. எனவே தற்சமயம் எண்ணெய் சுத்தம் செய்வதில் பாரதம் தன்னிறைவு பெற்றுவிட்டது எனலாம். இருந்தபோதிலும் பல காரணங்களுக்காக மிகக் குறைந்த அளவிற்கு, இறுதிநிலைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குச், சுத்தம் செய்யப்பட்ட எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகின்றது. பெட்ரோலியம் பாதுகாப்பு முக்கியத்துவம் பெற்ற ஒரு பொருள். (நெருக்கடி காலத்தில்கூட) பாரதத்தின் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அளவிற்கு உற்பத்தி பெருகி இருப்பது ஒரு சிறப்பு ஆகும்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளின் கொள்ளளவு உயர்ந்துள்ள வேகத்தில் கச்சா எண்ணெயின் உற்பத்தி பெருகவில்லை. 1970 ல் கச்சா எண்ணெய் 2·0 மில்லியன் டன்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அதே ஆண்டில் உள்நாட்டு உற்பத்தி 7·0 மில்லியன் டன்கள் ஆகும். 1050–51ல் கச்சா எண்ணெய் உற்பத்தி 4 லட்சம் டன்களாக மட்டுமே இருந்தது.

கனரக மின்சாதனங்கள் : கனரக மின்சாதனங்களின் உற்பத்தியும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. சாதாரணமாக அனல் மின் நிலையம், நீர் மின் நிலையம் ஆகியவற்றில் பொருத்தப்படும் 'டர்பைன்கள்' (சுழலும் இயந்திரங்கள்) மின்மாற்றுச் சாதனங்கள் (Transformers) முதலியன பாரதத்திலேயே தயாரிக்கப்படுகின்றன. இதைத் தவிர அணுசக்தியைத் தயாரிப்பதற்குத் தேவையான சாதனங்களும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. கனரக மின்சாதனங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். அனைத்து நாடுகளுடன் பாரதம் இப்பொருள்களின் உற்பத்தியில்—விலையிலும், தரத்திலும்—போட்டியிட முடிகிறது.

போக்குவரத்து : போக்குவரத்து, செய்தித்தொடர்புச் சாதனங்கள் யாவும் பாரதத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. முதலாவதாக ரெயில்வேக்குத் தேவையான சாதனங்கள் அனைத்தையும் உள்நாட்டிலேயே தயாரிக்கின்றோம். பாரதத்தின் உற்பத்தியான வாகனங்களும், ரயில் பெட்டிகளும் அனைத்து நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ரயில்வே சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருள்–எஃகு மட்டும் ஓரளவிற்கு இறக்குமதி செய்கிறோம். பாரதத்தின் எஃகு உற்பத்தி பன்மடங்கு பெருகிய போதிலும், இது தொடர்ந்து–தொழில் வளர்ச்சி காரணமாக–கிடைப்பருமையாகவே இருந்து வருகிறது. இருந்த போதிலும் இறக்குமதி அளவு மிகமிகக் குறைவு. இரண்டாவதாகச் சாலைப் போக்குவரத்துச் சாதனங்கள், பலவகைக் கனரக 'டிரக்கு'கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுன்றன. இவை தொழில், இராணுவம் ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானவையாக இருக்கின்றன. மூன்றாவதாகக் கப்பல் கட்டும் தொழில், இதற்கு அடிப்படையாக உள்ள கனரகத் தகடுகள் தற்சமயம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. எனவே இப்போது உள்ளதைவிடக் கப்பல் தொழில் அதிக வேகமாக வளரும் என்பதுடன் அதிக கொள்ளளவு உடையனவும் கட்ட முடியும். காட்டாக, விசாகப்பட்டினத்தில் கட்டப்பட்ட கப்பல்களின் கொள்ளளவுத்திறன் 22,500 டன்கள். தற்சமயம் (1971) நிறுவப்படும் கொச்சி கப்பல் கட்டும் தொழிற்சாலையில் 66,000 டன்கள் கொள்ளளவு உடைய கப்பல்கள் கட்டப்படும். இறுதியாகச் செய்தித் தொடர்புச் சாதனங்களின் உற்பத்தியில் பாரதம் தன்னிறைவு எய்தி உள்ளது.

உலோகங்கள். இரும்பு அல்லாத உலோகங்களில் அலுமினிய உற்பத்திப் பெருக்கம் குறிப்பிடத்தக்கது. 1950–51ல் 3700 டன்களாக இருந்த அலுமினிய உற்பத்தி 1971ல் 180,000 டன்களாக உயர்ந்துள்ளது. இரும்பு எஃகு ஆகியவற்றின் உற்பத்தி பன்மடங்கு விரிவடைந்துள்ள போதிலும், பெருகிச் செல்லும் தொழில் தேவைகளை நிறைவேற்ற இது போதுமானதாக இல்லை. 1970–லும், 1971–லும் தொழிற் துறை உற்பத்தி ஓரளவிற்குச் சுணக்கம் அடைந்திருப்பதற்கு அத்தியாவசிய கச்சாப் பொருளான எஃகின் கிடைப்பருமை ஒரு முக்கிய காரணம். இரும்பு எஃகின் உற்பத்தியைத் தொடர்ந்து விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை இது எடுத்துக் காட்டுகிறது. கடினத்தன்மை சற்றுக் குறைந்த எஃகின் (mild steel) உற்பத்தியும் கடந்த 20 ஆண்டுகளில் கணிசமாக உயர்ந்துள்ளது. 1·5 மில்லியன் டன்னிலிருந்து 10·0 மில்லியன் டன்னாக உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதர வகை உலோகங்களின் உற்பத்தி நாட்டின் தேவைக்குப் போதுமானதாக இல்லை. எனவே பெருமளவிற்குத் தாமிரம் (செம்பு) துத்தநாகம் (Zinc), ஈயம் முதலியவற்றைஇறக்குமதி செய்கின்றோம்.

இரசாயனப் பொருள்கள்: இரசாயனப் பொருள்கள், மருந்து வகைகள் ஆகியவற்றின் உற்பத்தியும் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு உயர்ந்துள்ளது. 1950—51 லிருந்து 1970—71 வரை உள்ள ஆண்டுகளில் சோடா ஆஷ் (Soda Ash) உற்பத்தி 45,000 டன்களிலிருந்து 446,400 டன்களாக உயர்ந்தது; சோடா காரத்தின் (Caustic Soda) உற்பத்தி 11,000 டன்களிலிருந்து 361,500 டன்களாக உயர்ந்துள்ளது. எனினும் இவை தொடர்ந்து கிடைப்பருமையாகவே இருக்கின்றன. இரசாயனப் பொருள்களில் கந்தக அமிலம் ஓர் அடிப்படையான பொருள். இதன் உற்பத்தி இவ்விருபது ஆண்டுகளில் 11 மடங்கு அதிகரித்து உள்ளது. 1971ல் இதன் உற்பத்தி அளவு 1·21 மில்லியன் டன்கள் ஆகும்.

மருந்து வகைகளின் உற்பத்தியும் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. பெரும்பாலான மருந்துகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. இம்மருந்துகள் தயாரிக்க அவசியமான மூலப் பொருள்களும் தற்சமயம் அதிக அளவில் பாரதத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருளின் அளவும் மதிப்பும் ஒப்புமையாகக் குறைந்துசெல்கின்றன. 1971 ல் நாட்டில் உற்பத்தியாகும் மொத்த மருந்து வகைகளின் மதிப்பில் சுமார் 8% மட்டுமே மூலப்பொருள்களின் இறக்குமதியாக உள்ளன.

நுட்ப ஆலோசனைகள்: மேலேகூறிய பலவகைக் கனரகத் தொழில்கள் வளர்ச்சி அடைந்தமை போலவே நுட்ப ஆலோசனை கூறும் துறையிலும் பாரதம் முன்னேறி உள்ளது. பெரிய ஆலைகளை நிர்மாணிக்கவும், நுட்பரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், ஆலோசனை கூறவும் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் நிறுவனங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. இந்த நிறுவனங்கள் புதிய கனரகத் தொழில்களை நிர்மாணிப்பதற்குத் திட்டவரைபடங்களைத் (Blue – Print) தயாரிக்கின்றன. இத்துடன் ஆராய்ச்சி நிறுவனங்களும் வளர்ந்துள்ளன. இவ்வாறு ஆலோசனை கூறும் நிறுவனங்களில் சிலவற்றை ஐ. நா. வின் தொழில்வளர்ச்சி அமைப்பு அங்கீகரித்துள்ளது: இந்த நிறுவனங்கள் வளரும் நாடுகளில் புதிய ஆலைகள் நிறுவ நுட்ப ஆலோசனை கூறுகின்றது.

[1970-ஆம் ஆண்டில் காணப்பட்ட பேரளவுத் தொழில்களைக் குறிக்கும் படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.]



Based upon Survey of India map with the permission of the Surveyor-General of India. © Government of India.

15. தொழில் கொள்கையும் தொழில் அனுமதிக்கொள்கையும்

அரசின் தொழில் கொள்கை தொழில்களின் வளர்ச்சிக்கு ஆணிவேராக உள்ளது. அரசின் ஆதரவும் பாதுகாப்பும் இல்லாமல் புதிய தொழில்களை நிறுவ முடியாது என்ற கருத்தை ஜெர்மனிய அறிஞர் ஃபெடரிக் லிஸ்ட் வற்புறுத்தினர். தொழில் வளர்ச்சி யைத் தோற்றுவிப்பதில் ஆர்வம் காட்டிய ஜெர்மனியும், அமெரிக்காவும் தொழில் முயலுநருக்குச் சலுகைகளும் ஆதரவும் அளிக்க முன் வந்தன. ஆனால் இந்தியத்துணைக்கண்டத்தை ஆட்சி செய்த ஆங்கிலேயர்கள் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த ஆர்வம் கொள்ளவில்லை. அதற்காகச் சிறப்பு முயற்சிகள் அல்லது உதவி ஏதும் அளிக்கவில்லை. தொழில் வளர்ச்சியை முக்கிய குறிக் கோளாகக் கொள்ளாத அரசாங்கத்திடம் தொழில் கொள்கையை எதிர்பார்ப்பது வீண். இருபதாவது நூற்றுண்டில் ஏற்பட்ட இரு உலகப்போர்கள் ஓரளவு தொழில் வளர்ச்சியின் அவசியத்தை உணரும்படி செய்தன.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய நாடுகள் புதிய தொழிலை ஏற்படுத்துவதில் தோன்றும் பல பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். அவை உற்பத்தி செய்யும் பொருள்கள் விலையிலும், தரத்திலும் வெளிநாட்டுப் பொருள்களுடன் போட்டியிடவேண்டும். இதை ஓரளவுக்குத் தொழிற்காப்பின் மூலம் குறைத்துக்கொள்ளலாம். இதைவிடப் பல முக்கிய பிரச்சினைகள் உடனடியாகத் தோன்று கின்றன. காட்டாக-கச்சாப்பொருள்கள், (விற்பனை) அங்காடி, நுட்பப் பயிற்சிபெற்ற தொழிலாளர்கள், நிதி, நிருவாகப் பிரச்சினைகள், தொழில் சச்சரவுகள் முதலியன ஏககாலத்தில் ஏற் படுகின்றன. இவை அனைத்தையும் திறமையாகச் சமாளிக்கவும் லாபமாகத் தொடர்ந்து தொழிலை நடத்திச் செல்லவும் அரசின் பூரண ஆதரவும், காப்பும் அவசியம், ஆகையால் மரபாகப் பரிந்து உரைக்கப்படும் தொழில்காப்புக் கொள்கைமட்டும் நிலைமையை சமாளிக்கப் போதுமானதாக இல்லை.

பின்தங்கிய நாடுகளில் பல இடையூறுகள் தோன்றுகின்றன. நுட்பரீதியான பிரச்சினைகள், அல்லது தடைகளை நீக்கத்தகுந்த அமைப்புகள் தோன்றாமையாலும், குறையுற்ற அமைப்பு முறையாலும் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவான சூழ்நிலை ஏற்படுவதில்லை. இவற்றைப் போக்குவதற்கு அரசு நேரிடையாகத் தொழில்துறையில் ஈடுபட வேண்டியதும், முக்கியதொழில்துறையின் வளர்ச்சிக்குப் பொறுப்பு ஏற்பதும் அவசியமாக உள்ளன.

கலப்புப் பொருளாதார அமைப்பு ஏன் ?

மக்களின் நல்வாழ்க்கையில் நாட்டமுள்ள அரசு உற்பத்தி, பகிர்வு ஆகிய இரு முக்கிய பொருளாதாரத் துறைகளிலும் பொறுப்பான பணிகளை ஆற்றிவருவது அவசியம். தனியார் தொழில் முயற்சியும், அரசின் தொழில் முயற்சியும் இணைந்து காணப்படும் பொருளாதார அமைப்பைக் கலப்புப் பொருளாதார அமைப்பு (Mixed Economy) என்பர். கலப்புப்பொருளாதார அமைப்பு என்பது பாரதத்தில் மட்டும் காணப்படும் ஒரு புதுமையல்ல; மேலைநாடுகளிலும் இதைக் காணலாம். அரசின் தலையிடாக் கொள்கையை நெடுங்காலமாக வற்புறுத்திய இங்கிலாந்து இன்றையதினம் ஒரு கலப்புப் பொருளாதார அமைப்பாக உள்ளது.

அங்காடிச் சக்திகளின் இயல்பான குறைபாடுகள் காரணமாக மந்தம் போன்ற பொருளாதார நெருக்கடி காலங்களில் தனியார் தொழில் நிறுவனங்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. எனவே முதலாளித்துவ பொருளாதார அமைப்பு முற்றிலும் சிதைந்துவிடாமல் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நேரிடையாகப் பொருளாதாரத் துறையில் ஈடுபட வேண்டியது அவசியம். வளர்ந்துவரும் நாட்டைப்போலவே வளர்ச்சியடைந்த நாடுகளிலும் அரசுத்துறை உற்பத்தி முக்கியத்துவம் பெற்றுள்ளது. காட்டாக அரசுத்துறையின் உற்பத்தி விழுக்காடு பாரதத்தில் உள்ளதைவிட அமெரிக்காவில் அதிகம் என்று பேராசிரியர் கால்பிரைத் கூறியுள்ளார்.[1]

[1] John Kenneth Galbraith-THE NEW INDUSTRIAL STATE, OXFORD&IBH, New Delhi, 1967, P. 2. அமெரிக்க அரசாங்கப் பணிகளின் மதிப்பு நாட்டு வருமானத்தில் 1929 ல் 8%. ஆக இருந்தது. இவ்விழுக்காடு (1966-67-ல்?) 20%. முதல் 25%. வரை இருக்கிறது என்றும், அந்த அளவிற்குப் பாரதத்தில் அரசுப் பணிகளின் முக்கியத்துவம் உயரவில்லை என்றும் கூறியுள்ளார்.

கலப்புப் பொருளாதார அமைப்பு பாரதம் போன்ற வளரும் நாடுகளுக்கு மிகவும் அவசியமாக உள்ளது. பொதுவான வளர்ச்சி வாய்ப்புகள் குறைந்து காணப்படும் நாடுகளில் குறுகிய கால லாபத்தை முக்கிய நோக்கமாகக் கருதித் தனியார் துறையினர் செயல்படுவார்கள். லாபகரமானதுறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் துறைகளாக இருக்கவேண்டிய கட்டாயமில்லை. தவிரவும், செல்வ வருமான ஏற்றத்தாழ்வுகளை அகற்றப் பாரத அரசியல் அமைப்பு உறுதிகொண்டுள்ளது. அனைவருக்கும் சம உரிமைகள், சமவாய்ப்புகள் அளிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். சிறப்பாகச் செல்வக்குவிப்பு ஏற்படுவதைத் தடுக்கவேண்டும். எனவே முதலீடு செறிந்த கனரகத்தொழில்களைத் தனியார் துறையில் ஏற்படுத்தாமல் பொதுத்துறையில் ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகிறது.

சில வகைத் தொழில்களின் இயல்பான பொருளாதார, நுட்ப நலன்கள் நாளடைவில் சர்வாதீனக் கட்டுப்பாட்டையும், ஆதிக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும். மேற்படி தொழில்கள் பொதுத் துறையில் செயல்படவேண்டும். இறுதியாக நாட்டின் பாதுகாப்பு, போர் முக்கியத்துவம் உடைய தொழில்கள் முதலியன பொதுத் துறையில் இருப்பது அவசியம். ஆகையால் பல முக்கிய தொழில்களின் வளர்ச்சியில் அரசாங்கம் நேரிடையாகப் பங்கு கொள்ளவேண்டும்.

நாட்டின் முக்கியமான பிரச்சினை ஏழ்மையை அகற்றுதல், பாமரமக்களின் வாழ்க்கை வசதிகளை உயர்த்துதல், வேலை வாய்ப்பை அதிகரித்தல் முதலியன ஆகும். இவற்றை நல்கக் கூடிய பலவகைத் தொழில்களைத் தோற்றுவிக்க அரசாங்கமும், தனியார் தொழில் முயலுநர்களும் இணைந்து செயல்பட வேண்டும். பொதுத் துறையும், தனியார் துறையும் ஒன்றோடொன்று போட்டியாக அமைந்துள்ளன என்று கூறுவது தவறு. அரசுத் துறை ஏற்படவில்லை என்றால் இந்நாட்டில் தனியார் துறையும் வளர்ச்சிஅடைய முடியாது. அதைப் போலவே அனைத்துத்தனியார் நிறுவனங்களையும் நாட்டுஉடைமையாக்குதல் இயலாத காரியம். நாட்டின் பொதுவான நலன்கள் நீண்டகால வளர்ச்சி, பாதுகாப்பு முதலியவற்றைக் கருத்தில் கொண்டு பொதுத்துறை செயல்படும். அதைப்போலவே நாட்டின் ஐந்தாண்டுத்திட்டங்கள், அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் ஆகியவற்றின் எல்லைக்குள் தனியார் துறைத் தொழில்கள் வளரவேண்டும்.

அரசுத் துறையின் விரிவாக்கத்தால் தனியார் துறை நசுக்கப்படுகிறது, அல்லது நசுக்கப்படும் என்று கூறுபவர்கள் இயங்காத பொருளாதார அமைப்பைக் (Static Economy) கருத்தில் கொண்டுள்ளனர். அதாவது நாட்டின் மொத்த உற்பத்தி ஒரே மட்டத்தில் இருக்கும் என்று எண்ணுகின்றனர். உண்மையில் ஆண்டு தோறும் நாட்டு மொத்த வருமானமும், தலாவருமானமும் தனியாகவும், ஒப்புமையாகவும் உயர்ந்துசெல்கின்றன. இதைப் போன்ற வளர்ச்சிப் போக்கு எதிர்காலத்திலும் தொடர்ந்து நீடிக்கும். எனவே தனியார் துறையும், பொதுத் துறையும் ஒரே சமயத்தில் வளரக்கூடிய வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

விடுதலைக்குப்பின் தொழில் கொள்கை

பாரதம் தன்னுரிமை எய்தியதும் பல சிக்கலான அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றின. உலகப் போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதார அமைப்பைச் சீர்படுத்தும் முன்னர் நாடு பிரிவினை செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து எழுந்த சமூக, அரசியல் பிரச்சினைகள் பல. இதே சமயத்தில் தொழில் முயலுநர்கள் அரசாங்கத்திடம் அதிக உதவியை எதிர்பார்த்தார்கள். தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கை வசதிகளை உயர்த்திக்கொள்ளவும், இரண்டாவது உலகப் போரினால் பாதிக்கப்பட்ட வாழ்க்கைத் தரத்தைச் சீர்செய்து கொள்ளவும் விரும்பினார்கள். நாட்டில் உள்ள அந்நிய முதலீடுகள் அனைத்தும் நாட்டு உரிமையாக்கப்படும் என்று சிலர் கூறினார்கள். இன்னும் சிலர் அனைத்துத்தொழில் நிறுவனங்களும் அரசின் நேரிடையான நிருவாகத்தில் அமையும் என்று கூறினார்கள். தொழில் துறையில் முதலீடு செய்யவேண்டிய அவசியமான நேரத்தில் அரசியல் குழப்பம் காரணமாகப் பொருளாதார முயற்சிகள் தடைபடக்கூடாது என்ற நோக்கத்தில் 1948, ஏப்ரல் 6ஆ யில் அரசு தொழில்கொள்கை அறிக்கையொன்றை வெளியிட்டது.

இந்த அறிக்கையில் அரசாங்கம் தனது துறையில் எந்த எந்தத் தொழில்களின் வளர்ச்சிக்கு உடனடியாகவும், எதிர்காலத்திலும் பொறுப்பு ஏற்கும் என்று கூறியது. கலப்புப் பொருளாதார அமைப்பு சுமுகமாக இயங்குவதற்குப் பொதுத் துறை, தனியார் துறை ஆகியவற்றின் எல்லைகள் ஓரளவு வரையறுக்கப்பட்டன. அதே சமயம் அரசாங்கத்தின் நீண்டகாலக் குறிக்கோள்களும் தெளிவுபடுத்தப்பட்டன.

பேரளவுத் தொழில்கள்யாவும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இதில் முதலாவது துறையில் முற்றிலும் போர் முக்கிய தொழில்கள் மட்டுமே இடம்பெற்றன. போர்க்கருவிகள்,

போர்த்தளவாடங்கள், (வெடி) குண்டுகள், (தோட்டாக்கள்) அணுசக்தி, இருப்புப்பாதை முதலியன முற்றிலும் மத்திய அரசாங்கத்தின் சர்வாதீனமாக இருக்கும். இதைத்தவிர ஏனைய போர் முக்கியத்துவம் உடைய துறைகளையும் ஏற்க அரசிற்கு உரிமை உண்டு.

இரண்டாவது பிரிவில் ஆதாரமான தொழில்கள் அடங்கியுள்ளன. இப்பிரிவில் நிலக்கரி, இரும்பு, எஃகு, ஆகாய விமான உற்பத்தி, கப்பல் கட்டுதல், செய்தித் தொடர்புச் சாதனங்கள் (முக்கியமாகத் தொலைபேசி, தந்தி, வானொலிச் சாதனங்கள், ரேடியோப் பெட்டிகள், பெட்ரோலியம் முதலியன சேர்க்கப்பட்டுள்ளன. இவை யாவும் அரசாங்கத்தின் நேரடியான கட்டுப்பாட்டில் இயங்கும். இவற்றின் வளர்ச்சிக்கு அரசாங்கம் முக்கிய பொறுப்பு ஏற்கும். மத்திய அரசும், மாநில அரசுகளும், ஊராட்சி அமைப்புகளும் அரசாங்கம் என்ற சொல்லின் விளக்கமாக இருக்கும். அரசாங்கம் இத்துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு முக்கிய பொறுப்பு ஏற்ற போதிலும், அவசியம் ஏற்படுமானால் நாட்டின் நலன்களைக் கருதித் தனியார் ஒத்துழைப்பைப் பெறலாம். ஆதாரத் தொழில்களில் தனியார் தொழில் நிறுவனங்களின் எதிர்கால வளர்ச்சி வரையறுக்கப்பட்டுள்ளது என்று கூறியதுடன், தனியார் துறையில் செயல்பட்டு வரும் நிறுவனங்களையும் நாட்டு உடைமை செய்யக்கூடும் என்றும், அதுபற்றிய தீர்மானத்தைப் பத்து ஆண்டுகளில் முடிவு செய்யலாம் என்றும் 1948 ஆம் ஆண்டு தொழில் அறிக்கை கூறியது.

மூன்றாவது பிரிவில் முக்கிய தொழில்கள் உள்ளன. இவற்றின் எதிர்கால வளர்ச்சிக்குத் தனியார் துறையும், கூட்டுறவுத்துறையும் பொறுப்பு ஏற்கக்கூடும். இருந்த போதிலும் அவசியம் ஏற்பட்டால் அரசாங்கம் இத்துறையின் வளர்ச்சியில் பங்கு கொள்ளலாம். தனியார் துறையில் உள்ள நிறுவனங்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்கும். தனியார் நிறுவனங்கள் சரிவரச் செயல்படவில்லை, அல்லது நிருவகிக்கப்படவில்லை என்றால் அவற்றை அரசாங்கம் ஏற்று நடத்தத் தயங்காது. மூன்றாவது பிரிவில் அடங்கிய முக்கிய தொழில்களாவன: (1) உப்பு, (2) மோட்டார் கார், டிராக்டர், (3) இயற்கை சக்தி (Prime movers) (4) மின் பொறிகள், (5) கனரகப் பொறிகள், (6) இயந்திரக் கருவிகள், (7) கனரக இரசாயனம், (8) உரங்கள் (9) மருந்துகள் (10) மின் இரசாயனத் தொழில்கள் (11) இரும்பு அல்லாத உலோகங்கள், (12) இரப்பர், (13) ஆல்கஹால்

(Alcohol) (14) துணி ஆலைகள், (15) கம்பள நெசவு ஆலைகள் (16) சிமெண்ட், (17) சர்க்கரை, (18) காகிதம், (19) ஆகாய விமானப் போக்குவரத்து, (கடல்) கப்பல் போக்குவரத்து, (20) தாதுப்பொருள்கள் முதலியன. இத்தொழில்கள் அமைக்க வேண்டிய இடம் பற்றியும் அரசாங்கம் தீர்மானிக்கலாம்.

மேலே கூறிய மூன்று பிரிவுகளிலும் இடம்பெறாத தொழில்கள் யாவும் நான்காவது பிரிவில் இருக்கும். இத்தொழில்கள் யாவும் தனியார் தொழில் முயற்சியாலும், மூலதனத்தாலும் எதிர் காலத்தில் வளர்ச்சி அடையும். இவை யாவும் அரசாங்கத்தின் பொதுவான கட்டுப்பாட்டிலும் இயங்கிவரும்.

1948ஆம் ஆண்டுத் தொழில் கொள்கை பேரளவுத் தொழில்களை முக்கியமாக வகைப்படுத்திக் கூறியதுடன், சிறு தொழில்களையும் அவற்றின் வளர்ச்சியையும் வற்புறுத்தியுள்ளது. தொழில் உற்பத்தி பற்றிக் கருதுவோமானால் பேரளவுத் தொழில்களைப் போலவே சிறு தொழில்களும் சம அளவு முக்கியத்துவம் உடையன என்று தெரிந்துகொள்ளலாம். சிறு தொழில்கள் உள்ளூரில் கிடைக்கக்கூடிய உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்துவதாலும், அதிக வேலை வாய்ப்பைத் தருவதாலும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. சிறு தொழில்களை இருவகைப் படுத்தலாம். மரபான தொழில்கள் ஒரு வகை. இதில் கச்சாப் பொருளிலிருந்து பூர்த்தியான பொருள்வரை மரபான முறையில் சிறு அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இரண்டாவது சிறு தொழில்கள், நவீன பேரளவுத் தொழில்களுக்குத் துணையாக விளங்குபவை. இவை பேரளவுத் தொழிலுக்குத் தேவையான பல இடைநிலைப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. இதற்குத் தேவையான கச்சாப்பொருள்களும் பெரும்பாலும் பேரளவுத் தொழிலால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்விரு வகையான சிறு தொழில்களில், மரபான தொழில்களைவிடத் துணைத் தொழில்களாக இயங்கும் சிறு தொழில்களுக்கு அதிக வளர்ச்சி வாய்ப்புகள் உள்ளன. சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவி செய்வதற்கு வாரியம் ஒன்று நிறுவ வகை செய்தது.

அந்நிய மூலதனம் : அயல்நாட்டு மூலதனத்தின் அவசியம் வற்புறுத்தப்பட்டது. தொழில் வளர்ச்சிக்குச் சிறந்த தொழில் நுண்ணியலும், நுட்பத் தேர்ச்சியும் அவசியம். இதற்கு அயல் நாட்டுத் தொழில் முயலுநர்களின் ஒத்துழைப்பும், மூலதனமும் தேவைப்படுகின்றன. உள்நாட்டுச் சேமிப்பு அளவும், விகிதமும் குறைவாக இருக்கும் நாடுகளில் அயல்நாட்டினரின் மூலதனம் முதலீட்டு அளவையும், வாய்ப்புகளையும் அதிகரிக்கும்.

தொழில் அமைதியை இக்கொள்கை வற்புறுத்தித், தொழிலாளர்கள் நிருவாகத்தில் பங்குகொள்ள வேண்டும் என்றும் கூறுகிறது.

திறனாய்வு

கலப்புப் பொருளாதார அமைப்பு பாரதத்தில் எவ்வாறு செயல்படும் என்பதை இத்தொழில் கொள்கை (1948) ஓரளவுக்குச் சுட்டிக்காட்டித் தனியார் தொழில் முயற்சிகளையும், அரசாங்கத்தின் தொழில் முயற்சியையும் வரையறுத்துக் கூறியுள்ளது. அதே சமயம் பொதுத்துறையும், தனியார் துறையும் சித்தாந்த அடிப்படையில் நெகிழ்வற்ற முறையில் ஒன்றோடு ஒன்று தொடர்பு (அல்லது ஒத்துழைப்பு) இல்லாமல் செயல்பட முடியாது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன. இவ்விரு துறைகளும் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை என்பதை விளக்கிநின்றன.

பாரதம் விடுதலை அடைந்த பின்னர் நிலவிய தெளிவற்ற சூழ்நிலை காரணமாகப் பொருளாதார நடவடிக்கைகள் தேக்கம் அடையாமல்இருப்பதற்கு1948ன்தொழில் கொள்கை அவசியமாக இருந்தது. அவ்வகையில் இதனை ஒரு சிறந்த கொள்கை அறிக்கையாகக் கருதலாம்: இருந்தபோதிலும் இரண்டாவது பிரிவில் தனியார்துறையில் உள்ள ஆதாரத் தொழில்கள் தொடர்ந்து தனியார் துறையிலேயே நீடிக்குமா என்ற சந்தேகத்தை இது தெளிவுபடுத்தவில்லை. முக்கியத்துவம் வாய்ந்த ஆதாரத் தொழில்களை வலுப்படுத்தவும், விரிவுபடுத்தவும் தனியார் முன்வரமுடியாத ஒரு நிலையை இது உண்டாக்கியது.

பொதுவாக நோக்குவோமானால் இத்தொழில் கொள்கையில் உடனடியாக நாட்டு உடைமை ஆக்க வேண்டிய துறைகள், அல்லது தொழில்கள் எதையும் குறிப்பிடவில்லை. நாளடைவில் பொதுத் துறையின் முக்கியத்துவம் உயர்ந்து செல்லும். தனியார் நிறுவனங்களின் வளர்ச்சியைவிடப் பன்மடங்கு அதிக வேகத்தில், அதிக அளவில் பொதுத்துறையில் முதலீடு செய்யப்படும்.[2] பொதுத்துறையின் வளர்ச்சிவேகத்தை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகள் அனைத்தையும் அரசாங்கம் கட்டுப்படுத்தக்கூடும். நாட்டின் மொத்த உற்பத்தியை அதிகரிப்பது அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. எனவே பழைய நிறுவனங்களை நாட்டு உடைமை ஆக்குவதைவிடப் புதிய நிறுவனங்களைப் பொதுத்துறைகளில் ஏற்படுத்துவதே அரசின்முக்கிய நோக்கமாக இருக்கும்.

[2] அத்தியாயம் 19 ல் உள்ள அடிக்குறிப்பு 8. பார்க்க

1951 தொழில் சட்டம்

1948க்குப் பின்னர் சுமார் மூன்று ஆண்டுகள் வரை மேற்படி தொழில் கொள்கையை எவ்வாறு செயல்படுத்துவது என்று அரசாங்கம் முடிவு செய்யவில்லை. இதைச் செயல்படுத்தும் முதல் முயற்சியாக 1951 அக்டோபரில் தொழில்கள் (வளர்ச்சி, முறைப் படுத்தல்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது 1952 மே 8லி லிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

தொழில்களின் வளர்ச்சியைத் திட்டமிட்ட அடிப்படையில் முறைப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும். சிக்கன நலன் கள் அதிகம் கிடைக்கக்கூடிய அளவில், பொருளாதார அடிப்படை யில் புதிய நிறுவனங்கள் அமைக்கப்படும், புதிய நிறுவனங்களின் இட அமைப்பும் நிர்ணயிக்கப்படும்.

புதிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தவும் பழைய நிறுவனங்களை விரிவாக்கவும் மத்திய அரசாங்கத்தின் அனு மதியைப் பெறவேண்டும். இதனால் பொதுவான அளவில் தொழில் வளர்ச்சியைக் கண்காணிக்கவும், முறைப்படுத்தவும் முடிகிறது.

துவக்கத்தில் இச்சட்டத்தின் கீழ் 37 தொழில்கள் மட்டுமே இருந்தன. 1953 ல் இச்சட்டம் திருத்தப்பட்ட போது இவை 45 ஆகஉயர்ந்தன. 1957ல்இத்துடன்மேலும் 47தொழில்கள் சேர்க்கப் பட்டன.

தொழில் (வளர்ச்சி, முறைப்படுத்தல்) சட்டம் இயற்றப்படும் முன்னர் தனியார் துறையில் உள்ள பட்டியலில் சேர்க்கப்பட்ட தொழில்களைஉடனடியாக அரசாங்கத்திடம் பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு செய்த தொழில் நிறுவனங்களை அரசாங்கம் சோதிக்கவும், பரிசீலனை செய்யவும் உரிமையுண்டு. இத்தொழில் நிறுவனங்களின் உற்பத்தி அளவு அதிகமாகக் குறைந்தாலும், பொருளின் தரம் வீழ்ச்சி அடைந்தாலும், விலை அதிக அளவிற்கு உயர்ந்தாலும் அதற்கான காரணங்களை ஆராய்ந்து அறிய அரசாங்கம் முற்படும். பதிவாகிய நிறுவனங்களின் நிருவாகம் கேடுற்றாலும், பொது நலன் பாதிக்கப்பட்டாலும், பிற காரணங் களுக்காகவும் தொழிற்கூடங்களை அரசு பரிசீலனை செய்யும்.

பதிவாகிய நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு அரசாங்கம் அவ்வப்போது தகுந்த அமைப்பின் மூலம் ஆலோசனை கூறக்கூடும்: அவற்றை முறையாக நிறைவேற்றாமல் தொடர்ந்து குறைபாட்டுடன் செயல்படும் தனியார் தொழில் அமைப்புகளை ஏற்று நடத்தவுங்கூடும்.

1951 தொழில் சட்டத்தால் வளர்ச்சிக் கவுன்சில்களும் தொழில் அனுமதிக் கமிட்டி ஒன்றும் நிறுவப்பட்டன. ஒவ்வொரு முக்கிய தொழிலுக்கும் ஒரு வளர்ச்சிக் கவுன்சில் அமைக்கப் பட்டது. இவற்றைத் தவிர ஒரு மத்திய ஆலோசனைக் கவுன்சில் (Central Advisory Council) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. தொழில்துறையில் உள்ள பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் இதன் முக்கிய நோக்கம் ஆகும். இக் கவுன்கில்களில் தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள், நுகர்வோர் ஆகிய முத்தரப்பினரும் இருப்பார்கள். உற்பத்திக் குறியளவை நிர்ணயித்தல். உற்பத்தியை ஒரு முகப்படுத்துதல், இவற்றை மறு பரிசீலனை செய்தல், சேதாரத்தைக் குறைத்தல் அல்லது முற்றிலும் தவிர்த்தல், உற்பத்தித்திறனை உயர்த்துதல், ஆக்கச் செலவைக் குறைத்தல், பொருளின் தரத்தை மேம்படுத்துதல், தொழில் நிறுவனங்களின் அளவைத் திறனை முழுமையாகப் பயன்படுத்துதல் ஆகியவை குறித்து ஆலோசனைகளை வழங்குதல் மத்திய ஆலோசனைக் கவுன்சிலின் முக்கிய பணிகள் ஆகும்.

தொழில் அனுமதி வழங்கும் கமிட்டியில் தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களின் பிரதிநிதிகள், திட்டக்கமிஷன் உறுப்பினர்கள் முதலியோர் உறுப்பினர்களாகச் செயல் படுவார்கள். அரசாங்கத்தின் தொழில் கொள்கையை நடை முறையில் செயல்படுத்தல் இக்கமிட்டியின் முக்கிய பணியாகும். எனவே தொழில் கொள்கை அறிக்கை எந்த அளவிற்கு நிறை வேற்றப்படுகின்றது என்பதை இக்கமிட்டி கண்காணித்து வரும்.

1951 தொழில் சட்டத்தில் பேரளவுத் தொழில் நிறுவனங்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு நிறுவனத்தில் 100 நபர்களை விடக் குறைவானவர்கள் வேலை செய்தாலும், அதன் மூலதனம் ரூ10/–லட்சத்தைவிடக் குறைவாக இருந்தாலும் மேற்படி சட்டத் தின் கட்டுப்பாட்டிலிருந்து அதற்கு விலக்கு அளிக்கப்படும்.

1956ன் தொழில் கொள்கை

முதலாவது தொழில் கொள்கை அறிவித்த எட்டு ஆண்டு களுக்குப் பின்னர் 1956 ஏப்ரல் 30உ யன்று இரண்டாவது தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டது. இந்த எட்டு ஆண்டுகளில் பல முக்கிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. பாரதத்திற்குப் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் வரையறுக்கப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சோஷலிஸப் பாணியில் சமுதாயத்தை அமைப்பது என்ற குறிக்கோள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இத்தகைய மூவகையான அடிப்படை மாற்றங்களையும் பிரதிபலிக்கும் வகையில் 1956ஆம் ஆண்டின்

தொழில் கொள்கை அமைந்துள்ளது. அதைவிட, கடந்த எட்டு ஆண்டுகளில் தொழில்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியும், தொழில் சட்டத்தை அமுலாக்கியதால் பெற்ற அனுபவமும் மிகவும் முக்கியமானவை.

நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் அனைவருக்கும் சம உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் அனைவருக்கும் நீதி வழங்கவும், ஒவ்வொருவருக்கும் பேச்சு உரிமை, தனி உரிமை, இறை வழிபாட்டு உரிமை முதலியன உறுதி அளிக்கப்பட்டுள்ளன. சமத்துவம், சகோதரத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளன. பொது மக்கள் நல்வாழ்க்கையைப் பாதுகாக்கவும், அதை மேம்படுத்தவும் அரசாங்கம் முக்கியமாகப் பாடுபடும். செல்வ, வருமான ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், (குறிப்பாக உற்பத்தித்துறையில் காணக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்) உற்பத்தி முறையாலும், உற்பத்திச் சாதனங்களின் உடைமையாலும் ஏற்படக்கூடிய செல்வக் குவிப்பைத் தவிர்த்தல் அனைவருக்கும்-ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும்-உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும்படி செய்தல், சமுதாயத்தில் நலிவுற்ற மக்கள் சுரண்டப்படுவதைத் தடுத்தல் முதலியன வலியுறுத்தப் பட்டுள்ளன.

அரசியல் அமைப்பில் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கு நடைமுறையில் சட்டரீதியான உருவகம் 1954 ல் நாடாளுமன்றத்தில் கொடுக்கப்பட்டது. அரசியல் அமைப்பின் நோக்கங்களை நிறைவேற்றும் முதல் நடவடிக்கையாக மேற்படி ஆண்டு டிசம்பரில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சோஷலிஸ பாணியில் சமுதாயத்தை இயக்குவதே முக்கிய குறிக்கோள் என்று அந்தத் தீர்மானம் கூறுகிறது. இவ்வாறு அரசியல் அமைப்பாலும், நாடாளுமன்றத் தீர்மானத்தாலும் உருவாக்கப்பட்ட நெறிகள் மற்றும் கோட்பாடுகள் தொழில்கொள்கையை வரையறுக்கின்றன.

1956ஆம் ஆண்டுத் தொழில் கொள்கையில் பேரளவுத் தொழில்கள் யாவும் மூவகைப்படுத்தப்பட்டன. முதலாவது பிரிவில் 17 தொழில்களும், இரண்டாவது பிரிவில் 12 தொழில்களும், மூன்றாவது பிரிவில் எஞ்சிய தொழில்களும் இடம் பெற்றன.

முதலாவது A பிரிவில் உள்ள 17 தொழில்[3]களுக்கும்—முக்கியமாக அவற்றின் எதிர்கால வளர்ச்சிக்கு அரசாங்கமே முழுமையான பொறுப்பு ஏற்கும்.

இரண்டாவதாக உள்ள B பிரிவில் 12 தொழில்கள்[4] உள்ளன. நாளடைவில் இத்தொழில்களின் வளர்ச்சியில் அரசு முக்கிய பங்குகொள்ளும் என்றாலும், இவற்றின் விரிவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் தனியார் துறையினரின் தொழில் முயற்சிக்கும், மூலதனத்திற்கும் போதிய வாய்ப்புகள் கொடுக்கப்படும்.

மூன்றாவது பிரிவில் எஞ்சிய தொழில்கள் அடங்கி உள்ளன. இத் தொழில்களின் வளர்ச்சிக்குத் தனியார் துறைதான் முழுமையாகப் பொறுப்பு ஏற்கவேண்டும்.

'A' 'B' ஆகிய இரண்டு பட்டியல்களில் உள்ள தொழில்களையும், எஞ்சிய தொழில்களையும் அரசாங்கம் நாட்டு உடைமையாக்கவோ, நிருவாகப் பொறுப்பை ஏற்கவோ உரிமை பெற்றிருக்கும். அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதாகும். ஆகையால் நாட்டு உடைமை ஆக்குதல் அரசாங்கத்தின் கொள்கையில் முதலாவது முக்கியத்தைப் பெறவில்லை. தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மட்டுமே உடைமை செய்யப்படும்.

நீண்டகால ரீதியில் பொதுத்துறையின் முக்கியத்துவம் பொருளாதார அமைப்பில் உயர்ந்துசெல்லும். இதுவே சோஷலிஸக் கொள்கையின் செயல் விளக்கமாகக் கருதப்படுகிறது.[5] பொதுத்துறையின் முக்கியத்துவம் இங்ஙனம் வலியுறுத்தப்பட்டபோதிலும், நாட்டின் நலன் கருதி அவசியமானபோது 'A' பிரிவில்

[3] பதினேழு தொழில்களாவன : 1. போர்த் தளவாடங்கள், பாதுகாப்புச் சாதனங்கள் 2. அணுசக்தி, 3. இரும்பு, எஃகு, 4. கனரக வார்ப்புகள், 5. கனரக இயந்திர சாதனங்கள், 6. கனரக மின் கருவிகள், 7. நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, 8. பெட்ரோலியம், 9. தாதுப் பொருள்கள், 10. செம்பு, ஈயம். துத்தநாகம், வெள்ளீயம் முதலியன. 11. அணுசக்திக்குத் தேவையான தாதுப்பொருள்கள்: 12. ஆகாய விமானம், 13. விமானப் போக்குவரத்து, 14. ரயில்வே, 15. கப்பல் கட்டுதல், 16. செய்தித் தொடர்புச் சாதனங்கள் 17. மின்சக்தி-உற்பத்தியும், பகிர்வும். இவை மேற்படி தொழில் அறிக்கையில் 'A' பட்டியலில் வெளியிடப்பட்டன.

[4] இப்பன்னிரண்டு தொழில்களும் 'B' பட்டியலில் வெளியாகி உள்ளன. அவையாவன: 1. 'A' பட்டியலில் இடம்பெறாத தாதுப்பொருள்கள், 2. அலுமினியம், மற்றும் இரும்பு அல்லாத உலோகங்கள், இயந்திரக் கருவிகள், 4. கலப்பு இரும்பும், சிறப்பு எஃகும், 5. இரசாயன தொழிலிற்கு ஆதாரமானதும் இடைநிலையில் உபயோகிக்கக்கூடியதுமான பொருள்கள், 6. நஞ்சுக்கொல்லிகள், 7. உரம், 8. செயற்கை ரப்பர், 9. கோக், (Corbonization of coal) 10. இரசாயனக்கூழ் (Chemical pulp), 11. சாலைப் போக்குவரத்து, 12. கப்பல் போக்குவரத்து முதலியன.

[5] 15-ஆம் குறிக்கப்பட்ட அடிக்குறிப்பு 2 மற்றும் 19-ஆம் அத்தியாயத்தில் அடிக்குறிப்பு 8 பார்க்க.

உள்ள தொழில்களை ஏற்று நடத்துமாறு தனியார் தொழில் முயலுநர்களைக் கேட்டுக்கொள்ளலாம். 'A' பட்டியலில் உள்ள இருப்புப்பாதை, விமானப்போக்குவரத்து, போர்க் கருவிகள், அணுசக்தி முதலிய துறைகள் நீங்கலாக ஏனைய துறைகளில் தனியார் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்த அரசாங்கம் அனுமதிக்கலாம். அவ்வாறு தனியார் துறையில் நிறுவப்படும் நிறுவனங்களின் பெரும்பாலான பங்கு மூலதனத்தை அரசாங்கம் அளிக்கலாம்.

சோஷலிஸக் கோட்பாடுகளின் அடிப்படையில் தொழில் கொள்கை உருவாக்கப்பட்டது என்றாலும், சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப வேண்டிய மாற்றங்களைச் செய்துகொள்ளலாம். தனியார் துறைக்கு என்று முற்றிலும் ஒதுக்கப்பட்ட துறைகளில் அரசாங்கமும், அரசாங்கத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட துறைகளில் தனியார் தொழில் முயல்வோரும் நிறுவனங்களை அமைக்கலாம். 1956ன் தொழில் கொள்கை நெகிழ்வு உடையது என்பதை இது எடுத்துக்காட்டும்.

பொதுத்துறையின் முக்கியத்துவமும், செல்வாக்கும் நாளடைவில்—அதாவது நீண்டகால அளவில்—உயர்ந்து செல்லும் என்றாலும், நடைமுறையில் தனியார் தொழில் நிறுவனங்கள் வளரவும், புதிய நிறுவனங்களை ஏற்படுத்தவும் அரசாங்கம் இயன்ற வரை உதவி செய்யும். தனியார் துறையில் தொழில்கள் இருக்கின்ற ஒரே காரணத்திற்காக அவை எவ்விதத்திலும் பேதப்படுத்தப் படா. அரசாங்கம் அவ்வப்போது வகுக்கும் நெறி முறைகளுக்கு உட்பட்டுத் தனியார் தொழில் முயலுநர்கள் புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், உற்பத்தி நிறுவனங்களை விரிவுபடுத்தவும் செய்யலாம். தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை—அதாவது போக்குவரத்து வசதிகள், மின்சக்தி, பாங்கு நாணய வசதிகள் முதலியவற்றை அரசாங்கம் அளிக்கக்கூடும். தனியார் தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்வதற்காகத் தொழில் நிதிக்கழகமும், இதர தொழில் நிதி அமைப்புகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

1956ஆம் ஆண்டுத் தொழில் கொள்கையிலும் சிறு தொழில்களின் முக்கியம் வலியுறுத்தப்பட்டது. இவை குறைந்த மூலதனத்தில் அதிக நபர்களுக்கு வேலை அளிக்கும் திறன் உடையவை. நாட்டு வருமானத்தைப் பரவலாக—ஏற்றத்தாழ்வு இல்லாமல்—பகிர்ந்து அளிப்பதற்கு இத்தொழில்கள் துணையாக இருக்கின்றன. கிராமங்களிலும், மற்றும் இதர பகுதிகளிலும் உள்ள உற்பத்திச் சாதனங்களை ஆக்கரீதியாகப் பயன்படுத்த இவை உதவி செய்கின்றன. எனவே சிறு தொழில்களின் வளர்ச்சிக்காக அரசாங்கம்

பல சிறப்பு முறற்சிகளை மேற்கொண்டுள்ளது. சிறு தொழில்களுடன் போட்டியிடும் பேரளவுத் தொழில்களுக்கு உற்பத்தி அளவு வரையறை செய்யப்பட்டுள்ளது. சிறு தொழில்களுக்கு என்று சிறப்பாகச் சில பொருள்களின் உற்பத்தி ஒதுக்கப்பட்டிருக்கும். இவற்றிற்கு விலை (பாது) காப்பு அளிக்கும் நோக்குடன் வரி விகிதங்கள் வேறுபடுத்தப்படும். தேர்ந்து எடுக்கப்பட்ட தொழில்களுக்கு உதவிக் கொடையும் வழங்கப்படும். இதைத் தவிர நாளடைவில் சிறு தொழில்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும். இதற்கு முதற்கண் நாடெங்கிலும் தொழில் பேட்டைகள் (Industrial estates) ஏற்படுத்தப்படும். கிராமங்கள் அனைத்திற்கும் மின் இணைப்பு கொடுக்கப்படும். கூட்டுறவு முறையின் அடிப்படையில் உற்பத்தி நிலையங்கள், விற்பனை நிலையங்கள் ஏற்படுத்த அரசாங்கம் உதவி செய்யும். இவை யாவும் சிறு தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், அவற்றின் நலன்களைப் பாதுகாக்கவும் உதவக்கூடும்.

வட்டார வளர்ச்சி : நாட்டின் சில பகுதிகளில் தொழில்கள் செறிந்து காணப்படுவதைப் போல அனைத்துப் பகுதிகளிலும் காணமுடியவில்லை. முன்னதாகத் தொழில்கள் வளர்ச்சி அடைந்த பகுதிகளில் அவை துரிதமாக வளரும் வாய்ப்புகளைப் பெற்றுள்ளன. பேரளவுத் தொழில்கள் தோன்றாத பகுதிகளில் புதிய தொழில் வளர்ச்சி வாய்ப்புகளும் குறைவாக இருக்கும். கட்டுப்பாடு இல்லாத தொழில்வளர்ச்சியால் வட்டார ஏற்றத் தாழ்வுகள் மேலும் அதிகரிக்கக்கூடும். எனவே திட்டமிட்ட அடிப்படையில் வட்டார நலன்களைப் பாதுகாக்கும் அளவில் சம அளவுத் தொழில் வளர்ச்சி வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம். ஒவ்வொரு மாநிலத்திலும்—ஒவ்வொரு மாவட்டத்திலும்—பரவலாகத் தொழில் வளர்ச்சி ஏற்பட வழிசெய்ய வேண்டும்.

சிறப்புப் பயிற்சி : பேரளவுத் தொழில்களின் வளர்ச்சி செம்மையாக இருக்கவேண்டுமானால் சிறப்பு நிருவாகப் பயிற்சி பெற்ற அலுவலர்களும், மேலாளர்களும் அவசியம். இவர்களை உருவாக்குவதற்கு நுட்பமான சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும். இதற்கு அரசாங்கம் தகுந்த முயற்சிகளை எடுத்துக் கொள்ளும். தொழில் நிருவாகப் பயிற்சி பல்கலைக்கழகங்களில் பாடமாக ஏற்படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டது.

திறனாய்வு : *1948*ன் தொழில்கொள்கையைவிட *1956*ன் தொழில் கொள்கை பல வகையிலும் சிறப்பு வாய்ந்தது. கலப்புப் பொருளாதார அமைப்பு வளர்ந்துவரும் நாடுகளில் தொழில் எங்ஙனம் இருக்க வேண்டும் என்பதை இக்கொள்கை தெளிவு

படுத்துகிறது. சோஷலிஸக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட போதிலும் நடைமுறையில் நெகிழ்வுடைய கொள்கை அறிக்கையாகவே இதைக் கருதவேண்டும். சித்தாந்த அடிப்படையில் தனியார் நிறுவனங்கள் அனைத்தையும் நாட்டு உடைமையாக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை என்று கூறப் பட்டுள்ளது. பொதுத்துறையும், தனியார் துறையும் தோழமை அடிப்படையில் ஒத்துழைக்க வேண்டும். நீண்டகாலத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், பொதுவான பொருளாதாரக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தவும் அரசுத் துறையின் வளர்ச்சி நாளடைவில் தனியாகவும் ஒப்புமையாகவும் அதிகரித்துச் செல் லும். சமுதாயத்தில் பொருளாதாரக் குவிப்பு, சர்வாதீன ஆதிக்கச் சக்திகள் முதலியன ஏற்படாமல் தடுக்க வேண்டும். இதை நிறை வேற்றுவதற்காகவே பொதுத்துறையின் செல்வாக்கும் வளர்ச்சியும் அதிகரித்துச் செல்லும்.

தொழில்கொள்கையும் தொழில்அனுமதிக் கொள்கையும்

1951ல் தொழில் (வளர்ச்சி, முறைப்படுத்தல்) சட்டம் ஏற்படும் முன்னர் உள்ளதும் சட்டத்தின் பட்டியலில் இடம்பெற்ற துமான தொழில்கள் பதிவு செய்யப்படும். இத் தொழில்களை விரிவாக்கவும், புதிய தொழில்களை ஆரம்பிக்கவும் அரசாங் கத்தின் அனுமதியைப் பெறவேண்டும். நாட்டின் பொதுவான தொழில் வளர்ச்சியைத் திட்டமிட்டவாறு முறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கும் முறையை ஒரு சாதனமாகக் கருதினார்கள். அரசாங்கத்தின் தொழில் கொள்கையை நடைமுறையில் செயல் படுத்துவதற்கு இது ஒரு கருவியாக உள்ளது.

தொழில் அனுமதி ஏன் வழங்க வேண்டும்? தனி நபர்கள் நினைத்தபோது நினைத்த தொழில்களை ஏன் ஆரம்பிக்கக் கூடாது? என்று சிலர் வினவுகின்றனர். முதற்கண் தொழில் அனுமதி பொருளாதாரத் திட்டத்தின் ஒரு கூறாக உள்ளது. எனவே ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் ஏற்றுக்கொண்டுள்ளவரைத் தொழில் வளர்ச்சியை முறைப்படுத்துவதற்குத் தொழில் அனுமதியைப் பயன்படுத்தவேண்டியிருக்கும்.

இரண்டாவதாக நாட்டில் கிடைக்கக்கூடிய உற்பத்திச் சாத னங்கள், மூலதனம், தொழில் நுட்பப்பயிற்சி, நிறுவன வசதிகள் முதலியன கிடைப்பருமையாக உள்ளன. ஒரு குறிப்பிட்ட உபயோகத்திற்காகக் கிடைப்பருமையான சாதனங்களைப் பயன் படுத்தும்போது இதர உபயோகங்களுக்கு அவை கிடைப்பதில்லை. எனவே உற்பத்திச் சாதனங்களை எந்தத்துறைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதை அரசாங்கமே நிர்ணயிக்க வேண்டும்.

மூன்ருவதாக, குறுகிய காலத்தில் லாபத்தைத் தரக்கூடிய தொழில்கள் யாவும் நீண்டகாலத் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தும் என்ருே, அல்லது பொதுவான வளர்ச்சியைத் துரிதப் படுத்தும் என்ருே கூறுவதற்கில்லே. எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், நீண்ட கால நலன்களேயும் கருத்தில் கொண்டு தொழில் வளர்ச்சித் திட்டத்தை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. அதில் சில தொழில்களுக்கு முன்னுரிமை (priority] அல்லது முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தொழில் அடிப்படையை விரிவுபடுத்துவதும், வலுப்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கம் ஆகும். அங்காடிச் சக்தியாலும், லாப நோக்கத் தாலும் தூண்டப்படும் தொழில் வளர்ச்சி தாறுமாருக இருக்கும் என்பதால் அவற்றை முறைப்படுத்துவதற்காக அனுமதி முறை அவசியமாக உள்ளது. வாகனங்களும், பாதசாரிகளும் நடமாடும் சாலேயில் போக்குவரத்தை முறைப்படுத்தும் காவலர், சாலேயைக் கடந்து செல்லும் வாகன ஓட்டிகள் அல்லது தனி நபர்களின் தனி உரிமையைப் பறிப்பதாகவோ, குறைப்பதாகவோ கூறமுடியாது. அதைப்போலவே அரசாங்கம் தொழில் வளர்ச்சியை முறைப் படுத்துவதால் தொழில் வளர்ச்சி தடைபடுகிறது என்ருே, தனி உரிமை பறிக்கப்படுகிறது என்ருே கூறமுடியாது.

நாட்டின் கிடைப்பருமையான இயற்கை வளங்கள், அந்நியச் செலாவணி ஆகியவற்றை முன்னுரிமை பெற்ற தொழில்களின் வளர்ச்சிக்குக் கிடைக்குமாறு செய்ய வேண்டும். தொழில் அனுமதிக் கொள்கை எந்த அளவிற்கு அரசாங்கத்தின் தொழில் கொள்கையை நிறைவேற்றியுள்ளது? தொழில் கொள்கை அறிவிக்கப்பட்ட நாள் முதல் நாடாளுமன்றத்திலும் பத்திரிகை களிலும் இதைப்போன்ற கேள்விகள் அடிக்கடி எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளன. விடுதலேக்குப் பின்னர் மிகவும் காரசார மாக விவாதிக்கப்பட்ட அரசுக் கொள்கைகளில் தொழில் கொள்கையும், தொழில் அனுமதிக் கொள்கையும் முதன்மை யானவை.

தொழில் கொள்கையை நிறைவேற்றுவதற்கு எந்த அளவிற்குத் தொழில் அனுமதிக் கொள்கை துணையாக நிற்கிறது என்பதைத் திறனய்வு செய்த பலரும் பின்வரும் கருத்துகளேத் தெரிவித் துள்ளனர்.

முதலில் தொழில் அனுமதிக் கொள்கையை ஒரு சாதனமாகக் கருதினர்கள். இதைக் கொண்டு சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளே அகற்றவும், வேலே வாய்ப்புகளே அதிகரிக்கவும் முற் பட்டனர். நாடெங்கிலும் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்கவும், உழைப்பு செறிந்த நுட்ப முறைகளே அதிக அளவில் பயன்படுத்த

வும் விரும்பினர்கள். இதனுல் ஒரு குழப்பமான நிலைமை உருவாகியது. தொழில்களின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான சிக்கன நலன்கள், நுட்ப வளர்ச்சிகள், நுட்பச் சிறப்புகள் ஆகியவற்றைப் புறக்கணிக்க வேண்டியதாயிற்று.

தொழில் வளர்ச்சியை நாடெங்கிலும் பரவலாக்குவதற்குத் தொழில் அனுமதி மட்டும் போதுமான சக்தி வாய்ந்த சாதனமாக இல்லை. தொழில் வளர்ச்சி பின்தங்கிய பகுதிகளில் பல புதிய உற்பத்தி வசதிகளை ஏற்படுத்த வேண்டும். உற்பத்தியாளருக்குப் பல சலுகைகள், முன்னுரிமைகள் வழங்க வேண்டும். தொழில் அனுமதிக் கொள்கை அதிகபட்சம் ஒரு கட்டுப்படுத்தும் சாதனமாகச் செயல்பட முடியுமே தவிர, வளர்ச்சியை ஊக்குவிக்கும் சாதனமாக விளங்க முடியாது. தொழில் அனுமதியை மறுப்பதன் மூலம் ஓரிடத்தில் ஆரம்பிக்கப்படும் தொழில் முயற்சியைத் தடை செய்வது எளிதாக இருக்கும். தொழில் அனுமதி வழங்க முன் வருவதால்மட்டும் ஓரிடத்தில்—முக்கியமாகப் பின்தங்கிய பகுதிகளில்—தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது.

புதிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தற்கும், உற்பத்தி செய்துவரும் நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கும் அனுமதி அவசியம் என்று 1951ன் தொழில் சட்டம் கூறுகிறது. அரசாங்கம் அனுமதி வழங்கியதுடன் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தியதாக நினைத்தது. தொழில் அனுமதியைப் பெற்றுக்கொண்டவர்கள் எந்த அளவிற்கு அதைப் பயன்படுத்தி உள்ளார்கள் என்று அறிய முடியவில்லை. இவர்கள் எந்த அளவிற்கு மூலதனம் திரட்டியுள்ளார்கள்? இயந்திர சாதனங்களை வாங்கியுள்ளார்கள்? தொழிற்சாலையை எப்போது நிறுவினர்கள்? ஆகியவற்றைச் சரிவர அறிய முடியவில்லை.

தொழில் அனுமதியில் குறிப்பிட்டதைவிட அதிக அளவிற்கு முதலீடு செய்துள்ளார்களா அல்லது குறைந்த அளவிற்கு முதலீடு செய்திருக்கிறர்களா என்பதை அறியவும்; முதலீட்டினுல் உருவாக்கப்பட்ட உற்பத்தி அளவைத்திறன் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியவும் வாய்ப்பில்லை. தொழில் அனுமதியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அந்நியச் செலாவணி கிடைப்பதில்லை; அல்லது அவர்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் கிடைப்பதில்லை. இதனுல் உற்பத்தி திட்டக் குறியளவை அடைவது கடினமாக இருந்தது.

தொழில் அனுமதிக் கொள்கையைத் தீவிரமாகத் திறனய்வு செய்வதற்குரிய பல காரணங்களில் சிறப்பாக ஒன்றை இங்குக் குறிப்பிடவேண்டும். தொழில் வளர்ச்சியின் ஒரு கூருக நாட்டின்

செல்வ வருமான ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்துள்ளன என்றும், சிறப்பாக சர்வாதீன ஆதிக்கமும், தொழில் கட்டுப்பாட்டுக் குவிப்பும் மிகுந்துள்ளன என்றும், இதற்குத் தொழில் அனுமதி வழங்கப்பட்ட முறையே முக்கிய காரணமாக உள்ளது என்றும் குறை கூறியுள்ளார்கள்.

ஏற்றத்தாழ்வுகள் : செல்வ, வருமான ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல் ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கமாக இருந்தபோதிலும் முதல் இரண்டு திட்டக்காலத்திலும் ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்துள்ளன. இக்கருத்தை ஏற்கும் வகையில் 1960 ஆகஸ்ட் 22ஆ யன்று நாடாளுமன்றத்தில் பிரதம மந்திரி நேரு பேசியுள்ளார். கடந்த பத்தாண்டுகளில் நாட்டு வருமானம் 42%உம், தலா வருமானம்20%உம் உயர்ந்துள்ளன. ஆனால் பாமர மக்கள் அதிக அளவுக்குப் பலன் அடையவில்லை. எனவே வருமானப் பகிர்வையும், மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் ஆராய்ந்து கூறு வதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இதற்குப் பேராசிரியர் பி. சி. மகல நோபிஸ் தலைவராக நியமிக்கப்பட்டார். 1950-51 முதல் 1960-61வரை உள்ள ஆண்டுகளில் நகர மக்களின் வருமானப் பகிர்வில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துள்ளன என்று மகல நோபிஸ் கமிட்டி கூறியது.[6] முக்கியமாகத் தொழில் நிறு வனங்களின் ஆதிக்கம் சிலரிடம் குவிந்து சென்றது. காட்டாக, 1960-61 ல் ரூ 50/- லட்சத்திற்கும் அதிகமாகச் செலுத்திய மூலதனம் உடைய கம்பெனிகள் மொத்தத்தில் 1·6% ஆகும். இவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் மொத்தத்தில் 53% ஆக இருந்தது.[7] மிகப்பெரிய கம்பெனிகள் மிக அதிக மூலதனத்துடன் வசதி உடையனவாக இருந்தன.

தனியார் துறையில் மிகப் பெரிய இருபது தொழில் குழுக் களின்[8] பங்கு மூலதனம் 1950-51ல் 27·9% இருந்து, 1958ல் 33·28% ஆக உயர்ந்து விட்டது. இங்ஙனம் தொழில் மூலதனம் சிலரிடம் குவிந்து சென்றதற்குத் தொழில் நிதி நிறுவனங்களின் நாணயக் கொள்கையும் காரணமாக இருந்தது. அடுத்து, தொழில் அனுமதிக் கொள்கையும் முக்கியமானது. சிறு தொழில் நிறுவனங் களின் பங்கு மூலதனத்தை—அதில் பெரும்பகுதியை—பேரளவுத்

6 Committee on Distribution of Income and Levels of living.

7 V.B. Singh-Indian Economy Yesterday&Today-Peoples Publishing house, Delhi, Second Editon, P. 112.

8 1. டாடா, 2. பிர்லா, 3. மார்டின் பெர்ன், 4. டால்மியா-சாகு-ஜெயின், 5. பெர்ட் ஹியில்கர், 6. ஆண்ட்ரூயூல், 7. பென்ஜியர், 8. தாபர் 9. ஜே. கே, 10, ஸ்ரீராம், 11. ஷாப்பூர்ஜி, 12. கட்டாவ், 13, வால்சந்த் 14. ம. பட்லால், 15. கஸ்தூரிபாய், 16. சேஷாசாயி, 17. இராமகிருஷ்ணா 18. இந்தர்சிங், 19. மகேந்திரா, 20. கிரிலோஸ்கர்.

தொழில் நிறுவனங்கள் செலுத்தியதால் உரிமைக் கட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. வலிமை பொருந்திய தொழிற்குழுக்களின் கட்டுப்பாட்டில் பெரிய வணிக பாங்குகளும் செய்ல்பட்டன. இதனால் ஆதிக்கக் கட்டுப்பாட்டின் செல்வாக்கு மூலதன உடைமையைவிடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது.

சர்வாதீன ஆய்வு ஆணைக்குழு: Monopolies Enquiry Commission.

வருமானப் பகிர்வைப் பரவலாக்கவேண்டும் என்பது முக்கிய குறிக்கோளாக இருந்தபோதிலும் ஐந்தாண்டுத் திட்டங்களின் காரணமாகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்படுவதற்குப் பதிலாக அதிகரித்துள்ளன. பொருளாதார வளர்ச்சியின் பலனைச் செல்வாக்கான நிலைமையில் உள்ள சிலர்மட்டும் அனுபவித்துள்ளனர். பெரியதொழில் குழுக்களின் ஆதிக்கம் அதிகரித்தது. இதை ஆராய்வதற்காக 1964 ஏப்ரலில் சர்வாதீன ஆய்வு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

சர்வாதீன ஆணைக்குழு பின்வரும் விவரங்களை ஆராய்ந்து கூறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. தனியார் துறையில் ஆதிக்கக் குவிப்பு எந்த அளவிற்கு ஏற்பட்டுள்ளது? உற்பத்தித்துறைகளில் போட்டி குறைந்து சர்வாதீன ஆதிக்கம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? இதனால் பொது மக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள்? சர்வாதீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு—சட்ட ரீதியாகவும், இதரவழிகளிலும்—எந்த எந்த நடவடிக்கைகளை எடுக்கலாம்? தொழில் வளர்ச்சியில் மேற்படி நான்கு முக்கிய கூறுகளையும் ஆராய்ந்து கூறிய இவ்வாணைக்குழுவின் அறிக்கை 1965 அக்டோபரில் சமர்ப்பிக்கப்பட்டது.

முதலில் தொழில்துறையில் ஆதிக்கக் குவிப்பு ஏற்படுவதற்கான காரணங்களை இவ்வாணைக்குழு ஆராய்ந்தது. பேரளவு உற்பத்தியால் ஏற்படும் பொருளாதார நலன்கள், நுட்ப ரீதியான முன்னேற்றம், பேரளவு மூலதன ஆக்கம் ஆகியவற்றால் பேரளவு தொழில் நிறுவனங்களில் ஆதிக்கக் குவிப்பு ஏற்பட்டுள்ளது. இவைதவிரப் பாரதத்தில் நிலவிய நிருவாகப் பதிலாளி முறையும் பொருளாதார ஏற்றத்தாழ்வு தொழில்துறை ஆதிக்கக் குவிப்பு முதலியன ஏற்பட முக்கிய காரணங்களாக இருந்தன. தொழில் துறையில் அனுபவம் உடையவர்கள் பல கூட்டுப்பங்குக் கம்பெனிகளில் இயக்குநர்களாகச் செயல்படுகின்றனர். தொழில் முயற்சியில் ஓரளவு வெற்றி அடைந்தவர்கள் பெரும்பாலான தொழில் நிறுவனங்களின் நிருவாகத்தைக் கட்டுப்படுத்தும் உரிமைகளைப் பெற்றுள்ளார்கள். பெரிய தொழில் நிலையங்கள் தனி ஒரு

பொருளை மட்டும் உற்பத்தி செய்வதில்லை. இவை மேலும் பல வகைப்பொருள்களை விற்பனை செய்யும் உரிமைகளையும் பெற்று உள்ளன. இவையாவும் சர்வாதீன கட்டுப்பாட்டுச் சக்திகளை வலுப்படுத்துகின்றன.

பொருளாதார ஆதிக்கக் குவிப்பு ஏற்படுவதற்குத் தொழில் அனுமதி வழங்கும் முறையும் ஒரு முக்கிய காரணமாக உள்ளது: அனுபவம்மிக்க தொழில் முயலுநருக்கு மட்டுமே புதிய நிறுவனங்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே நீண்ட காலமாகத் தொழில் நிறுவனங்களின் இயக்குநர்களாக இருப்பவர்கள் மேலும் பல புதிய நிறுவனங்களை ஏற்படுத்தும் வாய்ப்புகளைப் பெற்றுர்கள். இதனுல் திறமை மிக்கவ ராயினும் தொழில் அனுபவம் ஏற்படாத காரணத்தால் புதிய நிறுவனங்களை ஏற்படுத்துவது கடினமாகிறது. இதன் விளைவைச் சுலபமாக ஊகித்துக் கொள்ளலாம்; தொழில் துறையைக் கட்டுப்படுத்தும் சர்வாதீன ஆதிக்கம், அல்லது இதற்கு ஒப்பான நிலை சில நபர்களிடம் அல்லது சில குடும்பங்களிடம் குவிந்து காணப்படுகிறது.

அந்நியச் செலவாணியின் கிடைப்பருமையும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். அந்நியச் செலாவணி கிடைப்பருமையாக உள்ளது என்ற காரணத்திற்காக எந்த எந்தத் தொழில்களுக்கு எல்லாம் அந்நியச் செலாவணி/மூலதனம் மற்றும் ஒத்துழைப்பு கிடைக்கின்றதோ அவற்றிற்கெல்லாம் தயக்கம் ஏதும் இல்லாமல் தொழில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அந்நிய ஒத்துழைப்பு பெரிய நிறுவனங்களுக்கு எளிதாகக் கிடைக்கின்றது. இந்த நிறுவனங்கள் போதிய மூலதனத்தைப் பெற்றிருப்பதும், நீண்டகாலமாகத் தொழில் நிருவாகத்தில் அனுபவம் பெற்றிருப்பதும் முக்கியமானவை. புது அல்லது சிறு தொழில் முயலுநருக்கு இவ்வாய்ப்புகள் ஏற்படவில்லை.

இறக்குமதிக் கட்டுப்பாடும் இதற்கு ஒரு வகையில் காரணமாக உள்ளது. இறக்குமதி அனுமதி வைத்திருப்பவர்கள் ஆண்டு தோறும் ரூ. 450/– கோடி வருமானத்தை, மேற்படி அனுமதி காரணமாக, ஈட்டுகின்றனர் என்று டாக்டர் பி. ஆர். ஷெனுய் (B.R. Shenoy) கூறியுள்ளார்.[9]

பாரதத்தில் மிகப்பெரிய தொழில் நிலையங்கள் ஒவ்வொன்றும் வாணிகபாங்கின் நிருவாகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. மிகப்பெரிய தொழில் நிலையங்களின் ஆதிக்கத்தில் உள்ள கூட்டுப்பங்கு நிறுவனங்களின் இயக்குநர்கள்

[9]Quoted from Monopolies Inquiry Commission Report, 1965. P.9.

வணிகபாங்கின் இயக்குநர்களாகவும் உள்ளனர்: எனவே (நாட்டு உடைமையாக்கும் முன்னர்) தனியார் தொழில் முயலுநருக்குப் பாங்குக் கடன் உதவி பெருமளவுக்குக் கிடைத்துள்ளது. இதைப் போன்ற பாங்குக்கடனுதவி இல்லாத காரணத்தால் சிறு தொழில் நிலையங்களும், புதிய தொழில் முயல்வோர்களும் குறிப்பிடத்தக்க அளவிற்கு வெற்றி அடையவில்லை.

சர்வாதீன ஆணைக்குழுவின் அறிக்கை ஒருமனதாக இல்லை. ஆணைக்குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் சர்வாதீனக் கட்டுப்பாட்டாலும், ஆதிக்கக் குவிப்பாலும் பொதுவாகச் சாதக விளைவுகள் ஏற்பட்டு உள்ளன என்றும், இதனால் பொருளாதார வளர்ச்சி வேகம் (முக்கியமாகத் தொழில்வளர்ச்சிவேகம்) அதிகரித்துள்ளது என்றும் கூறியுள்ளனர். இவ்வாணைக்குழுவின் உறுப்பினரான திரு ஆர்.சி. டட் (R.C. Dutt)[10] தனிப்பட்ட முறையில் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்துள்ளார். பாரதத்தில் தொழில் வளர்ச்சியைத் தூண்டுவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் செல்வ-வருமான ஏற்றத்தாழ்வுகளையும், ஆதிக்கக் குவிப்பையும் ஏற்படுத்தியுள்ளன என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் உண்மை என்றும், ஆனால் ஆதிக்கக்குவிப்பினால் துரிதத்தொழில் வளர்ச்சி ஏற்பட்டது என்று கூறுவதற்கு இடம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

சர்வாதீன வளர்ச்சியைக்கட்டுப்படுத்த வேண்டிப் பல துறைகளை இவ்வாணைக்குழு வழங்கியது. இதில் முக்கியமாக, சட்டரீதியாக ஓர் ஆணைக்குழுவை[11] நிரந்தரமாக ஏற்படுத்தவேண்டும் என்றும், அதன் பொறுப்பில் சர்வாதீன ஆதிக்கத்தைக் கட்டுப் படுத்தும் பணியை ஒப்புவிக்கலாம் என்றும் பரிந்துரைக்கப் பட்டது. இவ்வாணைக்குழு பிறப்பிக்கும் உத்தரவுகளைச் செயல் படுத்தாத கூட்டுப்பங்குக் கம்பெனிகளின் இயக்குநர்களுக்கு அபராதம் விதிக்கலாம்; இவ்வுத்தரவுகளை நிறைவேற்றாத இயக்கு நர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கலாம். இது ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக இருக்கும்.

ஹஸாரி கமிட்டி : (Hazari Committee)

ஐந்தாண்டுத் திட்டங்களுடன் பொருளாதார ஏற்றத்தாழ்வும், தொழில்துறையில் சர்வாதீன ஆதிக்கக் கட்டுப்பாடும் அதிகரித்துள்ளன என்பதை 'மகலநோபிஸ் கமிட்டி'யும், சர்வாதீன

[10]இவர் பொருளாதார வரலாறு (இரு பகுதிகள்) எழுதிய 'ரமேஷ்டட்'டின் பேரன். இவர் நிருவாகத்துறை அதிகாரியாக இருக்கிறார்.

[11]Monopolies and Restrictive Trade Practices Commission.

[12]R. K. Hazari.

ஆய்வு ஆணைக்குழுவும் ஆமோதித்துள்ளன. இங்ஙனம் தொழில் துறையில் ஆதிக்கக் குவிப்பு ஏற்பட்டதற்குத் தொழில் அனுமதி வழங்கும் முறை ஒரு முக்கிய காரணமாகக் கூறப் பட்டது. இதை ஆராய்ந்து கூறுமாறு திட்டக் கமிஷனின் கௌரவ உறுப்பினரான திரு. ஆர். கே. ஹஸாரி கேட்டுக் கொள்ளப்பட்டார். 1966 ஜுலையில் ஹஸாரி கமிட்டியிடம் மூன்று முக்கிய பணிகள் ஒப்படைக்கப்பட்டன. (அ) 1951-தொழில் சட்டத்தின் ஒரு கூறுன தொழில் அனுமதி முறையைப் பரிசீலனை செய்தல். (ஆ) இத்தொழில் அனுமதி முறையைச் சீர்படுத்துவதற்கான திருத்தங்களைப் பரிந்துரைத்தல்; (இ) முக்கிய மாகப் பிர்லா தொழில் நிலையத்திற்கு அளிக்கப்பட்ட தொழில் அனுமதிகளை ஆராய்ந்து கூறுதல் ஆகியவை. ஹஸாரி தமது அறிக்கையை ஒருமாதத்தில் (ஆகஸ்ட் 1966) சமர்ப்பித்தார்.

ஹஸாரி கமிட்டியின் அறிக்கை தொழில் அனுமதி வழங்கும் முறையில் உள்ள குறைபாடுகளைத் தெளிவுபடுத்தியது. புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கான அனுமதிகளைப் பெறுவதில் மற்ற நிறுவனங்களைக் காட்டிலும் மிகப்பெரிய தொழில் நிலையங்கள் அதிக அளவுக்குப் பலன் அடைந்துள்ளன. ஒவ்வொரு பெரிய தொழில் நிலையமும் ஒரே பொருளை உற்பத்தி செய்வதற்குப் பல (தொழில்) அனுமதிகளைப் பெற்றுள்ளன. அதைத் தவிர ஒவ்வொரு பெரிய தொழில் நிலையமும் பல பொருள்களை உற்பத்தி செய்ய அனுமதிகளைப் பெற்றுள்ளன.

இதற்கு அனுமதி வழங்கும் முறை ஒரு முக்கிய காரணமாக இருந்தது. முதலில் மனுக்களைச் சமர்பித்த நிறுவனங்களுக்கு முதலில் அனுமதி வழங்கப்பட்டது. ஆகையால் ஒவ்வொரு நிறுவனமும் முன்னதாக மனுக்களைத் தாக்கல் செய்யப்போட்டியிட்டன. இப் போட்டியில் சாதாரணத் தொழில் நிறுவனங்களைவிடப் பெரிய தொழில் நிறுவனங்கள் வெற்றிபெற்றன. பெரிய தொழில் நிலை யங்கள் ஒவ்வொன்றும் புதுடில்லியில் அரசாங்கத்துடன் உயர் மட்டத்தில் தொடர்புகொள்ள ஓர் அலுவலகத்தை ஏற்படுத்தி யுள்ளன. சம்பந்தப்பட்ட அமைச்சகத்துடன் தொடர்பு கொள்ளுவதற்காகச் செல்வாக்கான நிலைமையில் உள்ளவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இவர்களில் பலர் ஓய்வுபெற்ற முன்னாள் அரசாங்கக் காரியதரிசிகள். இவர்கள் தங்களது செல்வாக்கையும் முன்னாள் தொடர்புகளையும் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கத்தின் தீர்மானங்களை முதற்கண் தெரிந்து கொள்கின்றனர். மற்றவர்களுக்குத் தெரியும் முன்னர் தொழில் அனுமதி அளிக்கப்படும் விவரத்தை முன்கூட்டியே தெரிந்து கொள்வதாலும், அனுமதி வழங்குவதற்கு அடிப்படையான

நிபந்தனைகளை அறிந்திருப்பதாலும், அனுமதி-மனுக்களை விரைவாகத் தாக்கல் செய்வதற்குப் போதிய விவரங்கள், அலுவலக முறைகள் முதலியவற்றை அனுபவத்தால் அறிந்திருப்பதாலும் முன்கூட்டியே மனுக்களைச் சமர்ப்பிக்க முடிகிறது. மனுக்களை முன் கூட்டியே தாக்கல் செய்வதாலும், பல மனுக்களை அனுப்புவதாலும், மிகப்பெரிய தொழில் நிலையங்கள் ஒவ்வொன்றும் ஒரே பொருளை உற்பத்தி செய்ய ஒன்றுக்கும் அதிகமான அனுமதிகளைப் பெறுகின்றன. இத்தொழில் நிலையங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கும் அதிகமான பொருள்களையும் உற்பத்திசெய்கின்றன.

இங்ஙனம் பெரிய தொழில் நிலையங்கள் ஒவ்வொன்றும் பல அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுவதால், ஒவ்வொரு பொருளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட அனுமதி அளவு விரைவில் தீர்ந்து விடுகின்றது. இதனால் இருவேறு பாதக விளைவுகள் தோன்றுகின்றன. பெரிய தொழில் நிலையங்களுக்கு மேலும் சலுகைகள், வாய்ப்புகள் கிடைப்பதால் ஆதிக்கக் கட்டுப்பாடும், சர்வாதீனமும் ஏற்படுகின்றன. இரண்டாவதாக, தொழில்துறையில் அனுபவம் இல்லாதவர்களுக்கும், சிறுதொழில் முயலுநர்களுக்கும் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. இவர்களுக்குத் தொழில் அனுமதிபற்றிய செய்திகள் கால தாமதத்துடன் கிடைக்கின்றன. அனுமதியைப் பெறுவதில் முன் அனுபவம் இல்லாமையால் அதைப் பூர்த்தி செய்யவும், அலுவலகச் சடங்குகளைச் சரிவரச்செய்து முடிக்கவும் காலதாமதம் ஏற்படுகின்றன. இவ்வாறு காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் முன்னர் அனுமதிக் குறியளவு பூர்த்தியாகிவிடுகிறது. இதனால் சிறுதொழில் முயல்வோர்களுக்கு வாய்ப்புகள் கிடைப்பதில்லை.

பெரிய தொழில் நிலையங்கள் மிகவும் அவசியமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர், இவற்றைப் பயன்படுத்தாமல் ஒரு சர்வாதீன நிலையை ஏற்படுத்திக் கொள்கின்றன. பயன் படுத்தாத அனுமதியை அரசாங்கம் ரத்துச் செய்யாத காரணத்தால் மற்றத் (தொழில் நிறுவனங்கள்) தொழில் முயலுநர்களின் வளர்ச்சிக்குப் பெரிய தொழில் நிலையங்கள் தடையாக இருக்கின்றன.

மிகவும் முக்கியமான ஒரு பொருளின் உற்பத்தி அதன் திட்டக் குறியளவைவிடக் குறைவாக இருப்பதால், அதைச் சார்ந்து உள்ள இதர தொழில்களின் வளர்ச்சியும் தடைப்படுகின்றன. உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல், ஐந்தாண்டுத் திட்டங்கள் தோல்வி அடைந்ததாக விளம்பரப்படுத்த நேர்கிறது. இவ்வாறு தொழில் அனுமதிகள் தொழில்வளர்ச்சிக்கு உதவும் சாதனமாக இல்லாமல் அதற்குத்தடையாகச் செயல்படுகின்றன.

தொழில் அனுமதியை ஒரு வகையில் கடவுச்சீட்டாகக் (Passport) கருதலாம். குறிப்பிட்ட பொருளின் உற்பத்திக்கான சமுதாயத்தின் அங்கீகாரத்தையும், முன்னுரிமையையும் இது பிரதிபலிக்கின்றது. சமுதாயத்தின் கிடைப்பருமையான உற்பத்திச் சாதனங்கள், அந்நியச் செலாவணி, பாங்கு நாணயம், தொழில் மூலதனம் முதலியவற்றைப் பொருளாதார முன்னுரிமை பெற்ற ஒரு பொருளின் உற்பத்திக்காகப் பயன்படுத்த அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது. தொழில் அனுமதிகள் எந்த அளவிற்கு நிறைவேற்றப்படுகின்றனவோ அந்த அளவிற்கு இந்த நோக்கங்களும் ஈடேறுகின்றன. ஆனல் வழங்கிய அனுமதிகள் பயன்படுத்தப்படாமல் இருக்குமானுல் இந்த நோக்கங்களும் நிறைவேற்றப் படுவதில்லே.

அனுமதி அளவுகள் உண்மையில் நிறுவப்பட்ட உற்பத்தி அளவை எடுத்துரைக்கவில்லே. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டு, அதில் மிகச் சிறு விழுக்காட்டிற்கே பொருள்களே உற்பத்தி செய்கின்றனர்.[13] திட்ட முக்கியத்துவம் உடைய பொருள்களே உற்பத்தி செய்யாமல் இருப்பதைப்போலவே, திட்ட முக்கியத்துவம் இல்லாத, ஆனல் லாபம் நல்கும் துறைகளில் அனுமதி அளவைவிட அதிக உற்பத்தி அளவை ஏற்படுத்தி உள்ளனர். நாட்டின் நலன்களேக் காப்பதற்காக உருவாக்கப்பட்ட தொழில் அனுமதிக்கொள்கை தனியார்துறையில் பெரிய தொழில் நிலேயங்களின் சர்வாதீனக் கட்டுப்பாட்டையும், ஆதிக்கமான செல்வாக்கையும் உயர்த்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

தொழில் அனுமதிக் கொள்கை ஆய்வுக்கமிட்டி : (Industrial Licensing Policy Inquiry Committee)

தொழில் அனுமதிக் கொள்கைபற்றிய ஹஸாரி கமிட்டியின் அறிக்கை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அதன் விளேவாக 1967 ஜுலே 22உ தொழில் அனுமதிக் கொள்கை ஆய்வுக் கமிட்டி நியமிக்கப்பட்டது. இக்கமிட்டியின் தலேவராகப் பேராசிரியர் M.S. தாக்கர் நியமிக்கப்பட்டார். இவர் இப்பதவியை ராஜினமா செய்ததால் திரு. சுபிமால் டட் தலேவராக நியமிக்கப் பட்டார். இதை டட் கமிட்டி என்று சுருக்கமாக அழைப் பார்கள்.

டட் கமிட்டியிடம் பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டன :
(அ) கடந்த பத்து ஆண்டுகளில் பெரிய தொழில் நிலேயங்கள் மற்ற-

[13] அட்டவணே 15·1 பார்க்கவும்.

அட்டவணை - 15·1

மூன்ருவது திட்ட இறுதியில் தேர்ந்து எடுக்கப்பட்ட தொழில்களின் உற்பத்தி அளவைத்திறனும், உற்பத்தியும்.+

வரிசை எண்	பொருள்	அலகுகள்	நிறுவிய உற்பத்தி அளவு-திறன்	உற்பத்தி	1—4—66ல் அனுமதிக்கப் பட்ட உற்பத்தி அளவு-திறன்	உற்பத்தியைப் போல நிறுவிய உற்பத்தி அளவு-திறன் (4)/(5) %	உற்பத்தியைப் போல அனுமதிக் கப்பட்ட உற்பத்தி அளவு-திறன் (6)/(5) %
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	சிமெண்ட் (தயாரிக்க) இயந்திரங்கள்	ரூ. கோடி	20·0	4·9	23·6	408·1%	481·6%
2.	டிராக்டர்கள்	'000'	15·0	5·6	33·0	267·8%	589·2%
3.	சர்க்கரை இயந்திரங்கள்	ரூ. கோடி	16·0	7·7	17·7	207·7%	230·0%
4.	சாயப்பொருள்கள்	மில்லியன் ராத்தல்	22·0	15·9	30·2	138·3%	189·9%
5.	காகித இயந்திரங்கள்	ரூ. கோடி	7·0	1·7	9·1	411·7	535·8
6.	காகிதமும், காகித அட்டையும்	'000' டன்கள்	669·3	551·0	1258·5	121·4	228·4
7.	கந்தக அமிலம்	'000' டன்கள்	1322·0	654·0	2120·2	202·1	324·1

8.	எஃகு வார்ப்புகள் (Steel Castings)	'000' டன்கள்	146·0	59·0	421·4	247·4	714·2
9.	'பாட்டரி'கள் (Dry Batteries)	மில்லியன்	290·0	283·0	586·5	102·4	207·2
10.	மின்சக்தி மாற்றிகள் (Electric Transformers)	மில்லியன் K.V.A.	2·8	3·1	7·4	90·3	238·7
11.	ஈயம்	'000' டன்கள்	5·9	4·9	11·0	120·4	224·4
12.	சோடாகாரம்	'000' டன்கள்	264·0	214·0	695·3	123·3	324·9
13.	'ட்யூப்' விளக்குகள் (Flo rescent Tubes)	மில்லியன்	4·5	4·3	18·0	104·6	418·6
14.	எஃகு 'போர்ஜிங்' (Steel Forging)	'000' டன்கள்	109·5	68·0	300·8	161·0	441·6
15.	நைட்ரஜன் உரங்கள்	'000' டன்கள் (N)	497·0	228·4	2059·9	217·6	901·8
16.	பாஸ்பேட் உரங்கள்	'000' டன்கள் (P)	229·7	121·0	335·4	189·8	277·1
17.	செம்பு (தாமிரம்)	'000' டன்கள்	9·8	9·6	70·4	102·0	718·3
18.	சைக்கிள் டயர்	மில்லியன்	16·5	18·1	39·5	91·1	218·2
19.	செய்தித்தாள் காகிதம்	'000' டன்கள்	30·0	30·0	261·8	100	872·6

ஆதாரம்: Report of the Industrial Licensing Policy Inquiry Committee, July, 1969.

Quoted by RUDDARDATT & K.P.M. SUNDHARAM—Indian Econamy Sixth Edition, P. 198.

நிறுவனங்களைவிடக் கூடுதலான தொழில் அனுமதிகளைப் பெற்றுள்ளதாகக்கூறும் புகாரை விசாரித்துக்கூறுதல். (ஆ) மிகப்பெரிய தொழில் நிலையங்கள் எந்த அளவிற்குத் தொழில் அனுமதிகளைப் பயன்படுத்தவில்லை? இதனுல் மற்றவர்களின் தொழில் வாய்ப்புகள் எந்த அளவிற்குத் தடைசெய்யப்பட்டுள்ளன? (இ) 1956ன் தொழில் கொள்கை அறிக்கையின் நோக்கங்கள் எந்த அளவிற்குத் தொழில் அனுமதிகளால் நிறைவேற்றப்பட்டுள்ளன? முக்கியமாகச் சீரான வட்டாரத் தொழில் வளர்ச்சி, சிறுதொழில்களின் வளர்ச்சி, இறக்குமதியைப் பதிலீடு செய்தல் முதலிய நோக்கங்கள் எந்த அளவிற்கு ஈடேறியுள்ளன? (ஈ) நான்காவதாக மிகப்பெரிய தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்குப் பொதுத்துறையில் உள்ள தொழில் நிதி அமைப்புகள் எந்த அளவிற்குத் துணையாக இருந்தன என்பதை ஆராய்ந்து கூறுதல்.

டட் கமிட்டி தனது அறிக்கையை 1969 ஜுலை 19உ அன்று சமர்ப்பித்தது.

மூலதன உடைமை, பங்கு உடைமை முதலியவற்ருல் ஏற்படுகின்ற ஆதிக்கக் குவிப்பைவிடக் கூட்டுப்பங்கு நிறுவனத்தின் பங்குகளின் கணிசமான விழுக்காட்டை வாங்கிக் கொள்ளுவதால் அதைக்கட்டுப்படுத்தும் உரிமைகள் ஏற்படுகின்றன. அதாவது சட்டரீதியாகப் பார்ப்போமானுல் வெளிப்படையாகப் பல நிறுவனங்கள் தனித்தனியாகச்செயல்படுவதாகத் தோன்றும். அன்ருட நிருவாகமும், சட்டரீதியான உடைமையும் உண்மை நிலைமையைப் பிரதிபலிப்பதில்லை. சட்டரீதியான உடைமைக்கு அப்பால் உறுதியான கட்டுப்பாட்டு உரிமைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. மிகப் பெரிய தொழில் நிலையங்கள் சட்டத்தின் புறத்தோற்றத்திற்குப் புலனுகாத ஆதிக்கக் குழுவாகும். இதன் கட்டுப்பாட்டில் அமைந்த சட்ட ரீதியான நிறுவனங்கள் அனைத்துக்கும் பொதுவான நீண்டகாலக் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. இந்த நிறுவனங்களின் வளர்ச்சி ஒரே இடத்தில் நிர்ணயிக்கப்படுகின்றன. வளர்ச்சிப் போக்குகள் அதே இடத்தில் கண்காணிக்கப்படுகின்றன. சட்டரீதியாக இந்த நிறுவனங்கள் இணைந்து செயல்படுவதாகக் கூற முடியாது. இருந்தபோதிலும் உள்ளூர முக்கிய திர்மானங்கள், வளர்ச்சித்திட்டங்கள், கொள்கைகள் முதலியவற்றைத் தீர்மானிக்கும் குழு ஒருவாருக உள்ளது. இவ்வாறு சட்டத்தின் கண்களுக்கும், புறத்தோற்றத்திற்கும் புலப்படாதவாறு ஆதிக்கக் கட்டுப்பாடு செயல்படுகிறது.

இதைப்போன்று ஆதிக்கக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் பாரதத்தில் 73 தொழில் நிலையங்கள் செயல்பட்டன. இவற்றுள்

20 மிகப்பெரிய தொழில் நிலையங்கள் ஆகும். இவை ஒவ்வொன் றிற்கும் குறைந்தது ரூ. 35/– கோடி பெறுமானம் உள்ள சொத்து கள் உள்ளது.

பேரளவு உற்பத்தியின் ஒரு கூருகப் பொருளாதார சிக்கன நலன்கள் தோன்றுகின்றன. சிக்கன நலன்கள் அடிப்படையில் இரசாயனத் தொழில்களுக்கான அனுமதிகள் பேரளவுத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பது உண்மைதான். தவிரவும் மேற்படி தொழிலில் உற்பத்திசெய்ய இதர தொழில் முயலுநர்கள் முன்வரவில்லை. எனவே வேறுவழியின்றிப் பெரிய தொழில் நிலையங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டிருப்பதை நியாயம் என்றோ, அவசியமான தென்றோ கூற இயலவில்லை. தவிர வும் தொழில்நுட்ப, பொருளாதார சிக்கன நலன்களுக்கு அவசிய மானதைவிடக் கூடுதலான அளவிற்கு உற்பத்தி அனுமதியை ஏன் வழங்கினர்கள் என்றும் தெரியவில்லை. சில மிகப்பெரிய தொழில் நிலையங்களுக்குக் குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்யும் வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று அரசாங்கம் முன்கூட்டியே முடிவுசெய்து இருப்பதாகவும், சட்டபூர்வமான அனுமதி ஒரு சம்பிரதாயமாக அல்லது சடங்காக மட்டுமே இருந்துள்ளது என்றும் கூறப்படுகிறது. பொதுவாக அனுமதிகள் வழங்கும் போது, தொழில் துறையில் சர்வாதீனக் கட்டுப்பாடு ஏற்படும் என்ற சந்தேகம்கூட ஏற்படவில்லை: அல்லது அப்படி ஏற்பட்ட போதிலும் அதைத்தடுக்க முயலவில்லை. ஒரு தொழில் நிலையத் திற்குப் பலவகைப் பொருள்களை உற்பத்தி செய்ய அனுமதி வழங்க வேண்டியது அவசியம்தானு என்று யோசிக்கவில்லை. அவற்றைத் திறமையாகச் செய்து முடிப்பதற்கு வேண்டிய நுட்பத்தகுதியும், ஆற்றலும் இருக்கின்றனவா என்றும் கருதவில்லை. இந்தத் தொழில் நிலையங்கள் பிரபலமான வெளிநாட்டுக் கம்பெனிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுள்ள ஒரே காரணத்திற்காக அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி வெளிநாட்டு ஒத்துழைப்புகள் எந்தஅளவுக்குஇன்றியமையாத தொழில் நுட்பத்தைப் பிரதிபலிக் கின்றன; அல்லது எந்த அளவுக்கு வளர்ச்சி முக்கியத்துவம் உள்ள பொருள்களை உற்பத்தி செய்வதற்கு இவை உதவி செய்கின்றன என்பதைப் பரிசீலனை செய்யப்படாதது மிக வியப்பூட்டுகின்றது.

பெரிய தொழில் நிலையங்களின் பொதுத்தொடர்பு அலுவல கங்கள் புதுடில்லியில் உள்ளன. பணியாற்றும் செல்வாக்கான அலுவலர்கள் அரசாங்கத்தின் மேல்மட்ட அலுவலர்களுடன் நெருங்கிய சமூகத் தொடர்பு கொண்டுள்ளனர். அரசாங்க அதிகாரிகள் சமயோசிதமாக (Discretion) தீர்மானிக்க வேண்டிய முடிவுகளின் பயனுகப் பெரியதொழில் நிலையங்கள் ஆதாயம் அடைகின்றன.

கிடைப்பருமையான தொழில் அனுமதிகளைப் பெரிய தொழில் நிலையங்கள் முன்னதாகப்பெற்றுக் கொள்வதால் மற்ற நிறுவனங்களுக்கு அனுமதி கிடைப்பதில்லை; இதனுல் தொழில் முயற்சிக்கான வாய்ப்புகள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன என்று 'ஹஸாரி கமிட்டி' கண்டறிந்து கூறிய உண்மையை 'டட் கமிட்டி'யும் ஏற்றுக்கொண்டுள்ளது. முன்னதாக அனுமதியைப் பெறுவதாலும், அதைப் பயன்படுத்தாத காரணத்தாலும் சர்வாதீன கட்டுப்பாடு உருவாகிறது. பெரியதொழில் நிலையங்களைத் தவிர மற்றத் தொழில் அமைப்புகள் பேரளவு உற்பத்தியில் ஈடுபட முடிவதில்லை. (அட்டவணை—15·1 பார்க்கவும்)

புதிய தொழில் கொள்கை (1970)

டட் கமிட்டியின் பரிந்துரைகள் யாவும் ஏற்றுக்கொள்ளப் பட்டன. சீரான வட்டார வளர்ச்சியை ஏற்படுத்தத் தொழில் அனுமதி மட்டும் போதுமானதாக இல்லை. முக்கியமாகப் பின் தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்கு அரசாங்கம் மேலும் பல நேர்முகச் சலுகைகளை வழங்கவேண்டியது அவசியம்.

நீண்டகாலத் தொழில் வளர்ச்சியை முதன்மையாகக் கருத வேண்டும். இதற்கு உதவக்கூடிய மிகவும் அடிப்படையான தொழில்கள் மூலத் தொழில்கள் (Core Industries.) என்று சொல்லப்பட்டன. இப்பிரிவி ல்பின்வரும் தொழில்கள் அடங்கி யுள்ளன.

1. வேளாண்மைக்கு உள்ளிடு பொருள்களாக உள்ளவை. (Agricultural Inputs)—காட்டாக, உரம், பூச்சிமருந்துகள், டிராக்டர், நவீன உழவுக்கருவிகள், முதலியன.

2. இரும்பு, எஃகு :—இரும்புத்தாதுகள், தேன் இரும்பு, எஃகு, சிறப்பு எஃகு, கலப்பு எஃகு முதலியன.

3. இரும்பு அல்லாத உலோகங்கள்.

5. பெட்ரோலியம்—எண்ணெய்க் கிணறுகளைக் கண்டு பிடித்தல்,—எண்ணெய் சுத்தம் செய்தல், பெட்ரோலிய இரசாயனத் தொழில்கள், செயற்கை ரப்பர் முதலியன.

5. கோக் நிலக்கரி.

6. கனரக (தொழில் துறை) இயந்திர சாதனங்கள்

7. தப்பல் கட்டுதல்.

8. செய்தித்தாள் காகிதம்.

9. மின் அணுவியல். (Electronics)

மேலே கூறிய ஒன்பது வகைத்தொழில்களில் 1956ஆம் ஆண்டு தொழில் கொள்கை அறிக்கையில் அரசுத்துறைக்காக ஒதுக்கப் பட்ட தொழில்கள் தொடர்ந்து அதே துறையில் நீடிக்கும்: இதில் எவ்வித மாற்றமும் இல்லை.

அரசுத்துறையின் பொறுப்பில் அல்லாத மூலத் தொழில்கள் மற்றும் ரூ. 5/- கோடிக்கும் அதிகமான முதலீட்டை உடைய நிறுவனங்களைக்கொண்ட கனரக முதலீட்டுத்துறை ஆகியவற்றின் வளர்ச்சியில் மிகப்பெரிய தொழில் நிலையங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், அவற்றின் துணைக்கம்பெனிகள், கிளைகள் முதலியன பங்குகொள்ளலாம். போதிய தொழில் அனுபவமும், வசதியும் உடைய தொழில் நிலையங்கள் ஆதாரத் தொழில்களின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கவேண்டும். அதைத்தவிர நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியதுறைகளில் இந்தப்பேரளவுத் தொழில் நிறுவனங்களும், மிகப்பெரிய தொழில் நிலையங்களும் மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் ஒதுங்கியிருக்க வேண்டும்.

மேலேகூறிய மூலத்தொழில்கள், கனரக முதலீட்டுத் தொழில் கள் (1956–தொழில் அறிக்கையில் ‘A’ பட்டியலில் சேர்க்கப் படாதவை) யாவும் முற்றிலும் தனியார் துறையினருக்கு ஒதுக்கப் படும் என்று நினைப்பது தவறு. மிகவும் அதிக அளவுக்கு மூல தனத்தை முதலீடு செய்யும் இவ்விரு துறைகளும். இணைப்புத்துறை களாகச் செயல்படும் (Joint–Sector). அரசாங்கம் பெரும்பாலான பங்கு மூலதனத்தையும், தனியார்துறையின் அனுபவத்தையும் நிருவாகத்திறமையையும் இணைப்பதே இணைப்புத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

நடுத்துறை (Middle Sector): முதலீட்டுத்தொகை ஐந்து கோடி ரூபாயைவிடக் குறைவாகவும், ஒரு கோடி ரூபாயைவிட அதிகமாகவும் உள்ள தொழில் அமைப்புகள் நடுத்துறை என்று சொல்லப்படும். இத்துறையில் புதிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு மிகப் பெரிய தொழில் நிலையங்களுக்குக் கட்டாயமாக, வாய்ப்பு அளிக்கப்படமாட்டாது. இருந்தபோதி லும் பேரளவுச் சிக்கன நலன்கள் அடிப்படையில் தற்போதுள்ள தொழில் நிறுவனங்கள் உற்பத்தி அளவை அதிகரித்துக் கொள்வ தற்காக அனுமதி வழங்கப்படும். பெரிய தொழில் நிலையத்துடன் தொடர்பு கொள்ளாத தொழில் முயலுநர்களுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கப்படும். சர்வாதீனம், மற்றும் தொழில்-போட்டித்தவிர்ப்புச் சட்டத்தின் (Monopolies and Restrictive Trade Practiccs Act) நியதிகளுக்கு உட்பட்டுப் புதிய தொழில் அனுமதிகள் வழங்கப்படும்.

சிறுதொழில்கள்: நிலையான மூலதனம் ரூ. 7·5 லட்சத்தை விடக் குறைவாக இருக்குமானால் அத்தொழில் நிறுவனங்கள் சிறு தொழில்கள் என்று சொல்லப்படும். இத்தொழில்களின் வளர்ச்சிக்காக, 1970ன் தொழில் கொள்கை அறிக்கையின்படி மேலும் எட்டுத்தொழில்கள் ஒதுக்கப்பட்டன.

1. எஃகு மேஜை, நாற்காலிகள், பீரோக்கள் முதலியன.
2. சைக்கிள் 'டயர்' 'ட்யூப்.'
3. சாவி கொடுத்து இயக்கக்கூடிய பொம்மைகள்.
4. அலுமினிய பாத்திரங்கள்.
5. பேனாக்கள் (மை ஊற்றும் பேனா, பந்து முனைப்பேனா).
6. மின்சார ஒலி எழுப்பி (Horn).
7. 30 டன்னிற்கும் குறைந்த நீர் அமுக்க 'ஜாக்கி'கள். (Hydraulic Jacks)
8. பற்பசை.

வேளாண் உற்பத்திப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்கள் பெரும்பாலும் கூட்டுறவுத் துறையில் செயல்படும். காட்டாக, கரும்பு ஆலைகள், சணல் பதப்படுத்தும் ஆலைகள் முதலியன.

மேலே கூறிய தொழில் அனுமதிகளுக்குச் சில விதிவிலக்குகளும் அறிவிக்கப்பட்டன. பொதுவாகத் தொழில் அனுமதிகள் பேரளவுத் தொழில்களுக்கு மட்டுமே பொருந்தும்: எனவே நிலையான மூலதனச் சொத்துகளின் மதிப்பு ரூ 25/–லட்சத்திற்கும் அதிகமான நிறுவனங்கள் யாவும் பேரளவுத் தொழில் நிறுவனங்களாகக் கருதப்பட்டன. 1970 பிப்ரவரி அறிக்கையில் இந்த வரம்பு ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. (நிலம், கட்டடங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றின் தொகுமதிப்பு நிலையான மூலதனமாகக் கருதப்படும்) இதற்குக் குறைந்த மூலலனத்தை உடைய நிறுவனங்களுக்கு அனுமதி தேவையில்லை.

நடுத்துறையில் உள்ள தொழில் நிறுவனங்களின் விரிவாக்க முதலீட்டிற்கும் இந்த விதிவிலக்கு பொருந்தும். ஐந்து கோடி ரூபாய்க்கும் குறைந்த மூலதனம் உடைய நிறுவனங்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு விரிவாக்கம் செய்துகொள்ளலாம். முதலில் விரிவாக்கத்தைக் கோரும் நிறுவனங்கள் மிகப்பெரிய தொழில் நிலையத்தின் செல்வாக்கிற்கு உட்படாதவையாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, விரிவாக்க முதலீட்டுத் தொகையில் அந்நியச் செலாவணித் தேவை பத்து லட்ச ரூபாய்க்கு மிகாமல்,

அல்லது 10%ஐ விடக் குறைவாக இருக்கவேண்டும். மூன்றாவதாக, சர்வாதீனக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் கூறப்பட்ட ஆதிக்க நிறுவனங்களுக்கு இந்த விதிவிலக்கு பொருந்தாது.

அனுமதி வழங்கும் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட நிறுவனங்களின் அந்நியச் செலாவணித் தேவைகளை அரசாங்கம் கட்டாயமாகப் பூர்த்தி செய்ய உறுதி அளிக்கவில்லை

அரசுத் துறையில் செயல்படும் தொழில்நிதி நிறுவனங்கள் அதிக அளவு கடனுகத் தனியார் துறைக்கு மூலதனம் கொடுத்து உதவியுள்ளன. தனியார் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்கவே ‘டிபெஞ்சர்’ மூலதனம் கொடுக்கப்படுகிறது. கடனுகக் கொடுத்த மூலதனம் பெரிய அளவாக இருந்த போதிலும், பொதுத்துறை தொழில்நிதி அமைப்புகளுக்கு இயக்குநர் வாரியத்தில் பிரதிநிதிகளை நியமிக்கும் உரிமை வழங்கப்படவில்லை: அல்லது மேற்படி தொழில் நிறுவனங்கள் பூரிப்பான காலங்களில் ஈட்டும் உயர் லாப விகிதங்களில் அரசு நிதி நிறுவனங்களுக்குப் பங்கு கிடையாது. எனவே கடனுகக் கொடுக்கப்பட்ட மூலதனத்தை மேற்படி தொழில் நிதி அமைப்புகள் விரும்பினுல், பங்கு மூலதனமாக மாற்றிக் கொள்ளும் உரிமை 1960 தொழில் கொள்கையால் ஏற்பட்டுள்ளது.

1970 தொழில் கொள்கையில் பொருள் உற்பத்தி அடிப்படையில் தொழில்களை வகைப்படுத்துவதற்குப் பதிலாக, முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் அடிப்படையில் பிரித்துக் கூறப்படுகின்றன. குறிப்பிட்ட தொழில் துறையின் வளர்ச்சி வாய்ப்புகள் சலுகைகள் அல்லது கட்டுப்பாடுகள் முதலியன இதே அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். சர்வாதீனக் கட்டுப்பாட்டுச் சட்டம் இதற்கு உதவியாக இருக்கின்றது. மிகப்பெரிய தொழில் நிலையங்களின் சர்வாதீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதுடன், புதிய தொழில் முயற்சிக்கான வாய்ப்புகள் (நடுத்தர முதலீட்டுத் தொழில்கள் உள்பட) அனைவருக்கும் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

16. வாணிபக் கொள்கை

இறக்குமதி, ஏற்றுமதி முதலியவற்றை முறைப்படுத்துகின்ற கொள்கையே வாணிபக் கொள்கையாகும். பத்தொன்பதாம் நூற்றுண்டில் பிரிட்டன் தடையிலா வாணிபக் கொள்கையை ஆதரித்து வந்தது. எனவே இந்திய அரசாங்கமும் இக் கொள்கையைப் பின்பற்றியது. இதனுல் இந்தியப் பொருளாதார நலன்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகின்றன என்று ஆராய்ந்து பார்க்கவில்லே.

தொழில் காப்பு ஏன் ?

தடையிலா வாணிபம் ஒரு சிறந்த பொருளாதார தத்துவம் என்பதை அனேவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதைப் பின் பற்றும் நாடுகள் அனேத்திற்கும் நிகர அளவில் நன்மை ஏற்படுமே தவிர, ஒவ்வொருநாட்டின் பொருளாதார நலன்களேயும் சிறப்புறச் செய்யும் என்று உறுதியாகக் கூறமுடியாது' தடையிலா வாணிபத் தால் ஒரு நாட்டிற்கு ஏற்படும் இழப்பைவிட அதிக அளவிற்கு மற்ரெரு நாடு ஆதாயமடைவதால் நிகர அளவில் அனேத்து நாடு களும் பயன்படுகின்றன. எனவே தனி ஒரு நாட்டின் தேசியப் பொருளாதார நலன்களேப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தொழில்காப்பு அவசியமாக உள்ளது. அதைத்தவிர, தொழில் துறையில் முன்னணியில் இருக்கும் நாடுகளுக்குச் சில நன்மைகள் ஏற்படுகின்றன. ஆனுல் காலம் தாழ்த்தித் தொழில் வளர்ச்சியைத் தொடங்கிய நாடுகளுக்கு இந்த நன்மைகள் கிடைப்பதில்லே. எனவே புதிதாகத் தொழில்களே ஆரம்பிக்கும் நாடுகளுக்குத் தொழிற்காப்பு அவசியம்.

தொழிற்காப்பால் வெளிநாட்டுப் போட்டியிலிருந்து உள் நாட்டுத் தொழில்களேப் பாதுகாக்கலாம். உள் நாட்டு அங்காடியை ப்பேரளவில் உள்நாட்டுத் தொழில்களுக்கு ஒதுக்கு

வதற்காக அரசாங்கம் இறக்குமதித் தீர்வைகளை விதிக்கின்றது. சில சமயங்களில் வருவாய் நோக்கத்திற்காக விதிக்கும் தீர்வைகளும் தொழில்களைக் காக்கும் தன்மை உடையனவாக இருக்கக்கூடும்.

தொழிற்காப்பு என்பது தனிப்பட்ட முறையில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தப் போதுமானதாக இல்லை. வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதால், அல்லது தடைசெய்வதால் உள்நாட்டுத் தொழில்கள் வளரவேண்டும் என்பதில்லை. தொழிற்காப்பு ஒரு எதிர்மறையான செயல். தொழில்கள் புதிதாக வளரவும், விரிவாகவும் நேர்முகமான ஆதரவும், சலுகைகளும், தூண்டுதல்களும் அவசியமாக உள்ளன. தொழிற்காப்பு அளிப்பதால்மட்டும் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது என்பது உண்மையாக இருந்த போதிலும், தொழிற்காப்பை மறுப்பதன் மூலம் தொழில் வளர்ச்சியை நிச்சயமாகக் கட்டுப்படுத்தவோ, தடைசெய்யவோ முடியும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் இந்திய அரசு தடையிலா வாணிபத்தைப் பின்பற்றி வந்தது. இவ்வாறு தொழிற் காப்பு அளிக்க மறுத்ததன் மூலம், வளரக்கூடிய தொழில்களின் வாய்ப்புகளை அடைத்துவிட்டது. அதைத்தவிரத் தொழில் வளர்ச்சிக்கு வேறு எவ்விதத்திலும் ஆதரவோ, சலுகையோ அரசு காட்டவில்லை. இதைப்பற்றித் திருமதி வீரா அன்ஸ்டே[1] கூறிய கருத்தை இங்கே குறிப்பிடுவோம். "*1858*-ல் (எலிஸபெத் அரசியார் இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபின்) இந்திய அரசாங்கம் தலையிடாக்கொள்கையைப் பின்பற்றியது. பஞ்சநிவாரணம், பொதுப்பணிகள் போன்ற இன்றியமையாத பொறுப்புகளைத் தவிர அதிகப்படியாக எதையும் மேற்கொள்ள விரும்பவில்லை. இந்தியா தொடர்ந்து ஒரு விவசாய நாடாக இருக்கவேண்டும். இந்தியத் தொழில்துறை வளருவதற்கு அரசாங்கம் எவ்வித ஆதரவையும் அளிக்க விரும்பவில்லை, முக்கியமாக மேற்படி தொழில்கள் இங்கிலாந்தின் தொழில்களுடன் போட்டியிடக்கூடும் என்று சந்தேகப்படும்போது, அதற்கு உதவிசெய்ய விரும்பவில்லை. இருந்தபோதிலும் சில தொழில்நுட்ப விவரங்களையும், வர்த்தக, தொழில் சம்பந்தமான செய்திகளையும் சேகரித்து அளித்துள்ளது."

இந்தத் தடையிலா வாணிபக்கோட்பாடும், தலையிடாக்கொள்கையும் 19-வது நூற்றாண்டு முடியும்வரை நீடித்தன. அரசாங்கம் நிதி திரட்டுவதற்காக அவ்வப்போது இறக்குமதித் தீர்வைகளை விதித்தது. வருவாய் நோக்கத் தீர்வைகளினால் தொழிற்காப்பு

[1]Vera Anstey-*ibid*-p.210. (1957)

ஏற்படக்கூடாது என்ற தீர்மானத்தில், உள்நாட்டுத் தொழில்களுக்குஆயத்தீர்வை விதிக்கப்பட்டது. நிதிதிரட்டும் முயற்சியினால் எதேச்சையாகக்கூட இந்தியத் தொழில்கள் நன்மை அடையக்கூடாது என்பதே அவர்களது கொள்கையாக இருந்தது. 1894ல் நிதி திரட்டுவதற்காகத் துணி இறக்குமதியின் பேரில் 5% தீர்வை விதிக்கப்பட்டதை லங்காஷயர் தொழில் அதிபர்கள் கடுமையாக ஆட்சேபித்ததை யடுத்து இந்திய ஆலைத்துணி உற்பத்திக்கு ஈடு செய்யும் ஆயத்தீர்வை (5% ஆக) விதிக்கப்பட்டது. இது இருசாரினருக்கும் திருப்தி அளிக்கவில்லை. இறக்குமதித் தீர்வையால் துணிவிலை இந்திய அங்காடியில் உயர்ந்துவிட்டது என்று லங்காஷயர் அதிபர்கள் குறைபட்டுக்கொண்டார்கள். இந்தியத்தொழில் வளர்ச்சியைத் தடைசெய்வதாகவும், லாப ஈவைக் குறைப்பதாகவும் இந்தியத்தொழில்முயல்வோர்கள் எண்ணினர்கள்.

நிதி திரட்டும் நோக்கத்தோடு விதிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வைகள் நிலையற்றதாக இருந்தன. இந்திய அரசாங்கத்தின் நிதி நிலைமை சீர்படுமானல், (ஓரளவு) மேற்படி இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்படலாம் அல்லது ரத்துச் செய்யப்படலாம். இந்த நிலைமை முதல் உலகப்போர் வரை நீடித்தது. அவ்வப்போதுள்ள நிலைமைக்கு ஏற்ப இறக்குமதித் தீர்வைகள் ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்பட்டன. இவை நிரந்தரமாக இல்லை. தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும் இல்லை.

தெரிவுக் காப்புக்கொள்கை

இந்திய அரசாங்கம் தன்னுரிமை அடிப்படையில் நிதிக்கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்து முதல் உலகப்போரின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிதித்துறைத் தன்னுரிமை அதிகாரபூர்வமாக 1921 ஜூன்மீ அறிவிக்கப்பட்டது.[2] இதைத் தொடர்ந்து இந்திய அரசாங்கம் இந்திய நிதி ஆணைக்குழுவை (Indian Fiscal Commission) நியமித்தது. இந்திய அரசாங்கம் பின்பற்றுவதற்கான சுங்கக்கொள்கையை உருவாக்கவும், ஏகாதிபத்திய சலுகைகளை வழங்கவும் தகுந்தபரிந்துரைகளை வழங்குமாறு மேற்படி ஆணைக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. குழு இந்தியாவின் நிலப்பகுதி, இயற்கை வளங்கள், மக்கள்தொகை ஆகியவற்றிற்கு ஏற்பத் தொழில் வளர்ச்சியடையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியது. ஆனல் எந்தெந்தத் தொழில்களுக்குக் காப்பு அளிக்கவேண்டும் என்றோ, எந்த விகிதத்தில் இறக்குமதித் தீர்வைகள் இருக்கவேண்டும் என்றோ, அல்லது இவை எந்த அடிப்

[2]Vera Anstey, *ibid*-p. 349.

படையில் நிர்ணயிக்கவேண்டும் என்ருே கூறவில்லை. தொழிற் காப்பு அளிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய்ந்து கூற வில்லை: மேலெழுந்த வாரியாகப் பிரச்சினையை ஆராய்ந்து கூறியது.

தொழிற்காப்பு எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அளிக்கப்படவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தவில்லை. அனைத் துத் தொழில்களுக்கும் தொழிற்காப்பு அளிக்கக்கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொழில்களுக்குக் காப்பு அளிக்கவேண்டும் என்று இந்த ஆணைக்குழு கூறியது. இதைத்தான் தெரிவுக்காப்பு (Discriminating Protection) என்று கூறுவார்கள். எந்தத் தொழில்களுக்குக் காப்பு அளிக்கலாம் என்பதை நிர்ணயிப்பதற்கு மூன்று நியதிகளை வகுத்தார்கள். முதலில் அத்தொழிலின் வளர்ச்சிககுப் போதுமான இயற்கை வளங்கள், கச்சாப் பொருள்கள், சக்தி முதலியன இந்தியாவிலே கிடைக்கவேண்டும். இரண்டாவதாக – ஆரம்பத்தில் இத்தொழி லின் வளர்ச்சிக்குக் காப்பு இன்றியமையாததாகஇருக்கவேண்டும். மூன்ருவதாக–காப்பு அளித்த தொழில் நாளடைவில் அரசாங்கத் தின் உதவியில்லாமல் லாபகரமாகச் செயல்படவும் பன்னுட்டு அளவில் போட்டியிடக் கூடியதாகவும் இருக்கவேண்டும். இதைத் தவிரப் புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்குக் காப்பு அளித்தலாகாது என்றும், தேசிய முக்கியத்துவம் உள்ள தொழில் களுக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்கவேண்டும் என்றும் இவ் வாணைக்குழு கருத்து தெரிவித்தது.

திறனய்வு : நீண்டகால ரீதியில் நோக்குவோமானல் தடை யிலா வாணிபம் என்ற கோட்பாட்டிற்குப் பதிலாகத் தொழிற் காப்புத் தத்துவம் ஏற்கப்பட்டிருப்பதைத்தான் இது காட்டுகிறது.

முதல் நிதி ஆணைக்குழு பரிந்துரைத்த தெரிவுக்காப்பு தவருன கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதை நெகிழ்வற்ற முறையில் செயல்படுத்தினர்கள். இதனல் எதிர் பார்த்தபடி விளைவுகள் தோன்றவில்லை. ஓரளவிற்கு உலக நிகழ்ச்சிகள் இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்; இருந்த போதிலும் இத்தெரிவுக் காப்பிற்கான அடிப்படை மிகவும் குறுகலான நெறியில் நிர்ணயிக்கப்பட்டது.

இந்தியாவில் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், பாதுகாக்கவும் காப்பு அவசியம் என்று நிதி ஆணைக்குழு எண்ணிய போதிலும், உண்மையில் வெளிநாடுகளில் தோன்றிய பாதகச்

சூழல்களிலிருந்து இத்தொழில்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும்தொழில்காப்பு பயன்பட்டதே தவிர, வளர்ச்சியைத்தூண்டப் பயன்படவில்லை.[3]

இக் காப்புக்கொள்கையை அரசாங்கம் அரை மனத்துடன் செயல்படுத்தியது. சுங்க வாரியம் பரிந்துரைத்தபோதிலும் கண்ணாடித் (glass) தொழிலுக்குக் காப்பு அளிக்க மறுத்து விட்டது. காப்புக்கோரிச் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து மனுக்களையும் இந்திய அரசாங்கம் சுங்க வாரியத்தின் பரிசீலனைக்குக் கொண்டுவரவில்லை.

ஒரு தொழிலின் வளர்ச்சிக்கு இயற்கை வளம், கச்சாப் பொருள் முதலியன வற்புறுத்தப்பட்டன. இது அனுவசியமான நிபந்தனையாகும். இதை நாம் ஏற்றுக்கொள்வோமானால், கச்சாப் பொருள் இல்லாதபோது மேற்படி தொழிலை அந்த நாட்டில் ஆரம்பிக்கவோ, நடத்தவோகூடாதுஎன்று முடிவுசெய்யவேண்டும். காட்டாக, இங்கிலாந்தின் தொழில் புரட்சிக்குக் காரணமாக இருந்த பஞ்சாலைத் தொழிலை எடுத்துக்கொள்வோம். இதற்குத் தேவையான கச்சாப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டதுடன், உற்பத்தியான துணிமுழுவதும் அல்லது பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்பட்டது. கச்சாப் பொருளை இறக்குமதி செய்யும் ஒரு தொழில் இங்கிலாந்தில் வளர்ந்திருக்கையில், அதைப் போன்ற தொழில்கள் இந்தியாவில் வளருவதை ஏன் தடை செய்ய வேண்டும் ?

தொழில்காப்பு வேண்டும் என்று விண்ணப்பித்துக்கொண்ட ஒரு தொழிலுக்கு மட்டுமே காப்பு அளிக்கப்படும். தொழில்காப்பு அளிப்பதற்காகத் தனித்தனியாக, ஒவ்வொரு தொழிலும் ஆராய்ந்து பார்க்கப்பட்டது. இது உண்மை நிலைக்குப் புறம்பானதாகும். தொழில் வளர்ச்சியில் புறச் சிக்கன நலன்கள் மிகவும் முக்கியமானவை. இதைத்தவிரத் தொழில்கள் ஒன்றோடொன்று சேர்ந்து வளரமுடியுமே தவிரத், தனியாக ஒரு தொழில் மட்டும் வளர முடியாது. ஒன்றையொன்று சார்ந்துள்ள பல தொழில்களின் வளர்ச்சிக்கு இது வழி வகுக்கவில்லை: தெரிவுக்காப்பிற்கான மூன்று நியதிகள் தவறான அடிப்படையில் உருவாக்கப்பட்டவை என்பதில் ஐயமில்லை.

தெரிவுக்காப்பைச் செயல்படுத்திய முறை வருந்தத்தக்கதாக இருந்தது. நிதி ஆணைக்குழு நிரந்தர சுங்கவாரியத்தை நியமிக்க வேண்டும்[4] என்று கூறியபோதிலும் அரசாங்கம் தற்காலிக அடிப்

[3] R. Balakrishna-Studies in Indian Economic Problems-p.122-187-(1954)

[4] R. Balakrihna *ibid*-p. 124.

படையில்தான் சுங்கவாரியத்தை நியமித்தது. ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனியான சுங்கவாரியங்கள் நியமிக்கப் பட்டன. சுங்கவாரியம் தற்காலிகமான ஓர் அமைப்பாக இருந்த தால், தொடர்புடைய கொள்கையைக் காண முடியவில்லை. சுங்க வாரியம் தன் விருப்ப அடிப்படையில் ஒரு தொழிலுக்குக் காப்பு அளிக்கவும், விசாரிக்கவும் முடியவில்லை. தொழில்துறையில் ஆக்கச் செலவைக் கணக்கிடுவதற்குச் சாட்சியங்களை வரவழைக்க வும் சுங்கவாரியத்திற்கு அதிகாரம் யாதுமில்லை. சுங்கவாரியம் தனது பரிந்துரைகளை வழங்கியபோதிலும் அதைச் சட்டமாக்கு வதில் அதிக கால தாமதம் ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் பெருமளவாக ஒவ்வொரு கட்டத்திலும் தாமதம் ஏற்பட்டதால், உரிய காலத்தில் காப்பின் பயன் தொழில்களுக்குக் கிட்டவில்லை.

சுங்கவாரியங்கள் மிகவும் குறுகலான கருத்து விளக்கத்தை ஏற்றுக்கொண்டு செயல்பட்டன. இவை வளராத, தேக்கமுற்ற சமநிலையேஎப்பொழுதும் நிலவும் என்று நம்பின. தவிரவும் தொழில் வளர்ச்சிக்கு ஒரு சாதனமாகத் தொழில்காப்பு அமைய வேண்டும் என்று எண்ணுமல், உலக நாடுகளிடையே ஏற்பட்ட கொந்தளிப் பான நிலைமையிலிருந்து இந்தியத் தொழில்களைத் தப்புவிப்பதே முக்கிய நோக்கமாகக் கருதிச் செயல்பட்டன.

பல குறைபாடுகள் காணப்பட்டபோதிலும் தெரிவுக்காப்பின் மூலம் இந்தியத் தொழில்களுக்கு நன்மை ஏற்பட்டதை மறுக்க முடியாது. தொழில்காப்பு அளிக்கப்பட்ட தொழில்கள் சிறந்த முறையில் வளர்ச்சி அடைந்தன. வளரும் தொழில்களுக்கு எண்ணிறந்த பிரச்சினைகள் தோன்றினுலும், சுங்கத் தீர்வைகளை விதிப்பதன் மூலம் அளிக்கப்பட்ட தொழில்காப்பு அவற்றைப் பாதக நிலைமைக்கு உட்படாமல் தடுத்தது. முக்கியமாக இந்த ஆண்டுகளில் உலக நாடுகளில் மந்தம் ஏற்பட்டது. வளர்ச்சியுற்ற நாடுகளின் தொழில்பெருக்கம் தடைபெற்ற இக்காலத்தில் இந்தியத் தொழில்கள் நிலைபெற்றிருந்ததுடன், குறிப்பிடத் தகுந்த அளவிற்கு வளர்ந்து நிலைத்தது பாராட்டுதற் குரியது.

தொழில்காப்பின் விளைவாக வேலைவாய்ப்பும் அதிகரித் துள்ளது. காப்பு அளிக்கப்பட்ட தொழில்களில் 1923ல் மொத்தம் 5·8 லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். 1937ல் இத்தொழிலில் வேலை செய்தவர்கள் தொகை 8·81 லட்ச மாக உயர்ந்தது. அதாவது இத்தொழில்களினுல் 46·8% வேலை அளிப்பு அதிகரித்துள்ளது. காப்பு அளிக்கப்படாத தொழில் களில் இக்காலத்தில் வேலை அளிப்பு 23·6% மட்டுமே அதிகரித் துள்ளது. அதாவது காக்கப்பட்ட தொழில்களின் வளர்ச்சி

காக்கப்படாத தொழில்களின் வளர்ச்சியைப் போல இரண்டு மடங்காக இருக்கின்றது. இதனால் தொழில்காப்பு எந்த அளவிற்குப் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது என்பதை ஓரளவு ஊகித்து அறியலாம்.

தொழில்வாரியாகவும் காப்பினால் ஏற்பட்ட சாதக விளைவு களை அறியலாம்.[5] மொத்தத் தொழிலாளர்களில் 1923ல் 24·2% பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். இந்த விழுக்காடு 1937ல் 29·2%ஆக உயர்ந்தது. சர்க்கரை ஆலைகளில் 1923ல் மொத்தத்தில் 0·9% தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். 1937ல் இந்த விழுக்காடு 4·1%ஆக உயர்ந்தது, காகிதத் தொழிலில் மேற்படி விழுக்காடு 6·2%லிருந்து 0·4 ஆகவும், திப்பெட்டித் தொழிலில் 0·03%லிருந்து 0·8%ஆகவும் 1923–37 ஆண்டுகளில் உயர்ந்துள்ளது. இவ்வாறு காக்கப்பட்ட ஒவ்வொரு தொழிலும் கணிசமாக வளர்ச்சியடைந்துள்ளது.

இந்தியாவில் பின்வரும் தொழில்கள் தெரிவுக்காப்புக் கொள்கையால் பாதுகாக்கப்பட்டன. அவற்றில் முதலாவது இரும்பு எஃகுத் தொழில்: இத்தொழிலின் உற்பத்தி 1923–24ல் 163000 டன் எஃகு ஆக இருந்தது. 1937, 38ல் இது 660,000 டன்களாக உயர்ந்தது. 1927–28ல் நாட்டின் மொத்தத் தேவையில் இந்திய எஃகுத் தொழில் 30% மட்டுமே உற்பத்தி செய்தது. 1932-33ல் இந்த விழுக்காடு 72% ஆக உயர்ந்தது. இதைத்தவிர உற்பத்தித்திறன் உயர்ந்தது: ஆக்கச் செலவு குறைந்தது. இவை யாவும் எஃகுத் தொழிலின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன.

பஞ்சாலைத் தொழிலுக்கு 1926 லிருந்து காப்பு அளிக்கப் பட்டது. தொழில்காப்பின் காரணமாக ஜப்பானியப் போட்டியைச் சமாளிக்கவும், இந்தியாவில் இத்தொழில் வேரூன்ற வும் முடிந்தது. காட்டாக, 1919ல் இந்தியாவில் 258 பஞ்சாலை கள் இருந்தன. 1939ல் இவை 389ஆகப் பெருகியுள்ளன. உள் நாட்டு உற்பத்தி பெருக்கம் அடைந்ததுடன், இறக்குமதியான துணி அளவும் இக்காலத்தில் கணிசமாகக் குறைந்து சென்றது. 1926–27ல் 1767 மில்லியன் கஜம் துணி இறக்குமதி செய்யப் பட்டது. 1938-39ல் இது 647 மில்லியன் கஜமாகக் குறைந் தது.

மூன்றாவதாக, சர்க்கரைத் தொழிலுக்கு 1932-ல் காப்பு அளிக்கப்பட்டது. தொழில்காப்பின் காரணமாகச் சர்க்கரை ஆலைத் தொழில் இந்தியாவில் நிலைபெற்றது. 1931–32ல் 32 ஆக இருந்த

[5] R. Balakrishna-*ibid*-p. 177.

சர்க்கரை ஆலைகள் 1939–40ல் 145ஆக அதிகமாயின. சர்க்கரை (ஆலைத்தொழில்) உற்பத்தி இவ்வாண்டுகளில் 4·7 லட்சம் டன்களிலிருந்து 13·98 லட்சம் டன்களாக அதிகரித்தது. சர்க்கரை இறக்குமதி 1931–32ல் 5·31 லட்சம் டன்களாக இருந்தது. 1938–39ல் இதன் அளவு 0·32 லட்சம் டன்களாகக் குறைந்தது. இக்காலத்தில் ஆலைச் சர்க்கரை நுகர்வு பன்மடங்கு உயர்ந்திருந்தபோதிலும் இறக்குமதி அளவு குறைந்திருப்பது திருப்தி யளிப்பதாக உள்ளது. ஆலைச்சர்க்கரை உற்பத்தியைப் போலவே வெல்லம், நாட்டுச்சர்க்கரை உற்பத்தியும் இக்காலத்தில் அதிகரித்துள்ளன. இவற்றின் உற்பத்தி 2 மில்லியன் டன்களி லிருந்து 4 மில்லியன் டன்களாக 1930–36 ஆண்டுகளில் உயர்ந் துள்ளது.

காகிதம், தீப்பெட்டி ஆகிய இரு தொழில்களுக்கும், தொழில் காப்பு முறையே 1935, 1928ஆம் ஆண்டுகளிலிருந்து அளிக்கப் பட்டது. 1935–36ல் 9·61 லட்சம் அந்தராக (1 அந்தர் = 112 ராத்தல்) இருந்த காகித உற்பத்தி 1939–40ல் 13·97 லட்சம் அந்தராக உயர்ந்தது. தீப்பெட்டி இறக்குமதியின் பேரில் வருவாய் நோக்கத்திற்காக விதிக்கப்பட தீர்வை 1928ல் தக்க வைத்துக்கொண்டார்க்ள். அது பாதுகாப்புத் தீர்வையாகச் செயல் பட்டது. காப்பு அளித்ததன் விளைவாகத் தீப்பெட்டிகளின் இறக்கு மதி முன்பு இருந்த அளவிற் 10%விடக் குறைவாக வீழ்ச்சி அடைந்தது.

பல முக்கிய இரசாயனத் தொழில்களுக்குக் காப்பு மறுக்கப் பட்டது. கந்தக அமிலத்திற்கு 18 மாதங்களுக்குமேல் காப்பு அளிக்க அரசு மறுத்துவிட்டது. கண்ணாடித் தொழிலுக்கும் சிமெண்ட் தொழிலுக்கும் அரசு காப்பு அளிக்கவில்லை.

தெரிவுக்காப்புக் கொள்கையை மேலும் ஒரு கோணத் திலிருந்து திறனாய்வுசெய்துள்ளார்கள். தொழில்களுக்குக் காப்பு அளிப்பதால் நுகர்வோரின் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. சில தொழில்முயலுநரின் ஆதாயத்திற்காக நுகர்வோர் கூடுதலான விலையைக் கொடுத்துப் பொருள்களை வாங்குகிறார்கள். காப்பின் காரணமாகப் பொருளின் தரம் உயர்வது இல்லை. உற்பத்தித்திறனை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படாமை யால் நாளடைவில் சமுதாயத்திற்கு ஒரு சுமையாக மேற்படி தொழில்கள் மாறிவிடுகின்றன. ஆனால் இவையாவும் மேலெழுந்த வாரியான குற்றச்சாட்டுகள்.

தொழில்காப்பின் விளைவாக நுகர்வோர் கூடுதலான விலையை உடனடியாகச் செலுத்துகிறார்கள் என்பது உண்மை. அதே சமயம் உள்நாட்டுத் தொழில்கள் வளருவதால் மக்களுக்கு அதிக வருமானமும், வேலைவாய்ப்பும் ஏற்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட தொழிலைத்தவிர அவற்றைச் சார்ந்துள்ள துணைத் தொழில்களும் வளருகின்றன: போக்குவரத்து அதிகரிக்கிறது. இதனால் அரசின் வருவாய், வருமானவரி, போக்குவரத்து, ஆயத்தீர்வை, சுங்கத் தீர்வை ஆகிய இனங்கள் அதிகரிக்கின்றன.

உயர்ந்த ஆக்கச்செலவுடைய தொழில்கள் காப்பினால் நிலை பெற வகை ஆகின்றது, அதாவது காப்பின் காரணமாகத் தொழில்துறை ஆக்கச்செலவு உயருகிறது என்று கூறுகிறார்கள். ஆக்கச்செலவு என்ற சொல்லில் பண ஆக்கச் செலவை மட்டும் கருதக் கூடாது. பொருளாதார ஆக்கச்செலவையும், கணக்கிட வேண்டும். உற்பத்திச் சாதனங்களின் மாற்று உபயோக (Transfer cost) அடிப்படையில் நிர்ணயிக்கப்படவேண்டும். பொருளாதார ஆக்கச் செலவைக்கொண்டுதான் நீண்டகால ரீதியில் தொழில் காப்பின் விளைவைக் கண்டறிய முடியும்.

இரண்டாவது உலகப்போர்

உலக மந்தம் முடிந்த பின்னர் தொழில்கள் உலகெங்கிலும் வளர்ச்சியடைய ஆரம்பித்தன. இதை மேலும் ஊக்குவிக்கும் சக்தியாக உலகப்போர் 1939ல் ஆரம்பமாகியது. அச்சமயம் வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்ய இயலாமையால் கிடைப்பருமை ஏற்பட்டது. கப்பல் வசதிக் குறைவாக இருந்ததே இதற்கு முக்கிய காரணம். அதைத்தவிர ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் போர் தீவிரமாக நடைபெற்றது. கீழ்த்திசைப்போர்க் களத்திற்குத் தேவையான போர்க்கருவிகளையும், அத்தியாவசியப் பொருள்களையும் அளிக்கும் நாடாக இந்தியா விளங்கியது. இங்ஙனம் வெளிநாட்டு இறக்குமதி முற்றிலும் நிறுத்தப்பட்டதுடன், வெளிநாட்டுக்கு அதிக அளவுக்கு இந்தியத் தொழில்கள் ஏற்றுமதி செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தனியார் துறையில் இதனால் இருவகையான தொழில்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. தொழில் முயலுநர்கள் லாப நோக்கத்திற்காகத் தம் விருப்ப அடிப்படையில் முதலீடு செய்து ஆரம்பித்த தொழில்கள் ஒரு வகை. இரண்டவதாக, அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் மற்றொரு வகை. இவ்வாறு ஆரம்பித்த தொழில்கள் அனைத்திற்கும் காப்பு அளிக்க அரசாங்கம் உறுதியளித்தது.

இடைக்காலச் சுங்கவாரியம் : உலகப்போர் முடிவுற்றதும், 1945 நவம்பர் 3ஆம் அன்று, அரசு இடைக்காலச் சுங்கவாரியம் அமைப்பது என்ற தனது முடிவை அறிவித்தது. இதன் முக்கிய பணிகள் மூவகைப்படும். முதலாவதாக, அரசாங்கத்தின் நேரடியான ஆதரவால் ஆரம்பிக்கப்பட்ட தொழில்களை நேர்மையற்ற பன்னாட்டுப் போட்டியிலிருந்து காப்பதாக அரசாங்கம் உறுதியளித்தது. இரண்டாவதாக, நாட்டின் பொதுவானபொருளாதார வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு சுங்கக் கொள்கையை உருவாக்குவதற்கு (தொழிற்காப்பிற்கு) விரிவான அடிப்படையில் தொழில்கள் தேர்ந்தெடுக்கப்படும். (அதாவது தெரிவு-தொழில் காப்பு முறை மூன்று நியதிகளால் கட்டுப்படுத்தப்படவில்லை என்று அரசாங்கம் கூறியது). மூன்றாவதாக, அரசாங்கம் தனது நீண்டகாலத் தொழில் வளர்ச்சிக் கொள்கையைத் தயாரித்து வருவதாகவும் அதற்குஇடையில்உடனடியாகத்தொழில்காப்புத்தேவையைப் பரிசீலனை செய்வதே இந்தச் சுங்கவாரியத்தின் முக்கிய பணியாக இருக்கும் என்றும் அரசாங்கம் அறிவித்தது. இவ்விடைக்காலச் சுங்கவாரியத்தின் பரிந்துரைகளால் பல இரசாயனத் தொழில்களுக்குக் காப்பு அளிக்கப்பட்டது. தொழில்காப்புக்கு 'மூன்று நியதி' என்ற நிபந்தனை முற்றிலும் அகற்றப்பட்டது. பொதுவாக நாட்டின் நலன்களைக் கருதித் தொழில்காப்பு அளிக்கப்பட்டது.

இடைக்காலச் சுங்கவாரியம், நியமிக்கப்பட்ட 5 ஆண்டுகளில் 90 தொழில்களுக்கான காப்புக் கோரிக்கைகளை விசாரணை செய்துள்ளது. 1923 முதல் 1939வரை 51 கோரிக்கைகள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளன. இடைக்காலச் சுங்கவாரியம் சுமார் 35 பொருள்களுக்குக் காப்பு அளிக்க வேண்டுமென்று பரிந்துரைத்தது. அதைத்தவிர இதற்கு முன்பு காப்பு அளிக்கப்பட்ட தொழில்களின் முன்னேற்றத்தையும், அவற்றிற்குக் காப்பு தொடர்ந்து நீடிக்கப்படவேண்டிய அவசியத்தையும் ஆராய்ந்துள்ளது. எஃகுத் தொழில், காகிதம், துணி ஆலைகள் முதலியவற்றிற்கான காப்பு விலக்கப்பட்டன. சர்க்கரைத் தொழிலின் உற்பத்தித்திறன் அதிகரிக்கவில்லை. ஏனைய தொழில்கள் காப்பினால் நல்ல முறையில் பலன் அடைந்துள்ளன.

இரண்டாவது நிதி ஆணைக்குழு

1949 ஏப்ரல் 20ஆம் அன்று V. T. கிருஷ்ணமாச்சாரி தலைமையில் இரண்டாவது நிதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் அறிக்கை 1950 ஜூலை மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு பின்வரும் விவரங்களை ஆராய்ந்து கூறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

எதிர்காலத் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில் காப்புக் கொள்கையை உருவாக்குதல், மேற்படி காப்பு அளிக்கப்பட்ட தொழில்களின் பொறுப்புகளை வரையறுத்தல்; காப்புக் கொள்கையைச் செயல்படுத்தும் அமைப்புமுறையைப் பரிந்துரைதல்; இதைத்தவிர இத்துடன் தொடர்புடைய ஏனைய விவரங்களையும் ஆராய்ந்து கூறுதல்.

இரண்டாவது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காலப் போக்கில்தோன்றிய சமூக-அரசியல்-பொருளாதாரமாற்றங்களைப் பிரதிபலித்தன. தொழில்காப்பு ஒரு தனிப்பட்ட பொருளாதாரக் குறிக்கோளாக இல்லை. நாட்டின் பொதுவான தொழில் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சிகளை ஏற்படுத்தக்கூடிய சாதனமாகவே சுங்கக்கொள்கையைக் கருதவேண்டும். முக்கியமாகத் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்குத் துணையாக இருக்க வேண்டும். தனி ஒரு தொழிலின் வளர்ச்சிக்கு உதவி செய்வதுடன், தொழிற் கட்டமைப்பில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்துவதே இதன் குறிக்கோளாகும். தொழில்கள் யாவும் சீரான வளர்ச்சி அடைய வேண்டும்.

தொழில்காப்பு என்ற கருத்துக்குப் புதிய விளக்கம் தரப் பட்டது. அது நாட்டின் நல்வாழ்க்கைக்கு வழி வகுக்கும் ஒரு சாதனம்; எனவே அதைப் பொதுவான பொருளாதார வளர்ச்சியுடன் சேர்த்து எண்ண வேண்டும். பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்பு இல்லாமல் தொழில்களுக்குக் காப்பு அளிக்கப்படுமானால் அதனால் சமுதாயத்திற்குச் சுமை அதிகரிப்பதுடன், தொழில் வளர்ச்சியும் தாறுமாறாக (lopsided) இருக்கக் கூடும். தொழில்காப்பினால் ஏற்படும் கூடுதலான செலவுகளைச் சமுதாயத்தின் உச்ச அளவு நலன்களைப் பராமரிப்பதற்கான சமூக ஆக்கச் செலவாகக் கருதவேண்டும். தொழில் வளர்ச்சியால் சமுதாயம் நன்மை எய்துவதால், மேற்படி வளர்ச்சியை ஏற்படுத்தும் செலவிலும் சமுதாயம் பங்குகொள்ளவேண்டும். தொழில் வளர்ச்சியின் பயனாக வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது: மக்களின் வாழ்க்கைத்தரம் உயருகிறது: எனவே குறுகிய காலத்தில் காப்பினால் ஏற்படும் அதிகப்படியான பணச் செலவுகளைச் சமுதாயம் ஏற்கவேண்டும். தொழில்களுக்குக் காப்பு அளிப்பதுடன் அரசாங்கத்தின் பணிகள் முற்றுப்பெறவில்லை. மேற்படி தொழில்கள் வளரத் தகுந்த பின்நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்: பொருளாதார வளர்ச்சி திட்டமிட்டபடி ஏற்பட வழிவகுக்க வேண்டும்.

நிதி ஆணைக்குழு காப்பு அளிப்பதற்கான கொள்கையை உருவாக்கியது. முதற்கண் பாரதத் தொழில்கள் யாவும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. முதலாவது பிரிவில் நாட்டின் பாதுகாப்பு, மற்றும் போர் முக்கியத்துவம் பெற்ற தொழில்கள் இடம் பெற்றன; இரண்டாவது பிரிவில் ஆதாரத் தொழில்கள் இடம் பெற்றன; மூன்றாவது பிரிவில் ஏனைய தொழில்கள் சேர்க்கப் பட்டன. முதலாவது பிரிவில் உள்ள நாட்டின் பாதுகாப்பு, போர் முக்கியத்துவம் உள்ள தொழில்களை நாட்டில் எவ்வாறேனும் நிறுவியே ஆகவேண்டும். இதற்காக எந்த அளவிற்குச் செலவு ஏற்பட்டாலும், தேசிய முக்கியத்துவம் கருதி அவற்றைத் தோற்று விக்கவேண்டும். எனவே இத்தொழில்களுக்குக் காப்பு அளிப்பதுடன், இன்னும் இதர வழிகளில் எந்த உதவிகளை அளித்தால் இத் தொழில்கள் வளரும் என்பதையும் அரசாங்கம் ஆராயவேண்டும்.

இரண்டாவது பிரிவில் உள்ளவை ஆதாரமான முக்கிய தொழில்கள் ஆகும். இத்தொழில்கள் பொருளாதார முக்கியத் துவம் உடையனவாக இருப்பதாலும், திட்டங்களில் இவை சேர்க்கப்பட்டிருப்பதாலும் காப்பு அளிக்கவேண்டியது அவசிய மாக உள்ளது. எனவே இத்தொழில்களுக்கு எந்த அளவிற்கு எவ்விதமாகக் காப்பு அளிக்கலாம் என்பதையும் தீர்மானிக்கும். அவ்வப்போது தொழிலின் வளர்ச்சிக்கு ஏற்பக் காப்புத் தேவையும் பரிசீலனை செய்யப்படும்.

மூன்றாவது பிரிவில் உள்ள தொழில்களுக்குப் பின்வரும் அடிப்படைப் பரிந்துரைக்கப்பட்டது. திட்டங்களில் சேர்க்கப் பட்ட தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆதாரமான முக்கிய தொழில்களின் துணைத்தொழில்களின் காப்புக் கோரிக் கைக்கு ஆதரவு காட்டப்படும். இறுதியாக, இதர தொழில் களின் முக்கியத்துவ அடிப்படையிலும், தனிப்பட்ட வளர்ச்சி வாய்ப்புகள், காப்பினால் ஏற்படும் பாதக, சாதக விளைவுகள் முதலியவற்றைக் கருத்தில் கொண்டும் முடிவு செய்யப்படும்.

தொழிலுக்குக் காப்பு அளிக்க முன் நிபந்தனையாகக் கச்சாப் பொருள்கள் உள் நாட்டிலேயே கிடைக்க வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. தொழிலுக்கான நிகழ்கால உள்நாட்டுத் தேவையுடன், எதிர்கால உலக அங்காடித் தேவையையும் கருத்தில் கொள்ளப்படும். காப்பு அளிக்கப்பட்ட தொழில் உள் நாட்டுத் தேவை முழுவதையும் பூர்த்திசெய்யவேண்டிய கட்டாயம் யாதுமில்லை. தொழில்காப்பு அளிக்கப்பட்ட தொழில் களின் பூர்த்தியான பொருளைக் கச்சாப்பொருளாகவோ, இடை நிலைப் பொருளாகவோ பயன்படுத்தும் தொழில்களுக்கும் காப்பு

அளிக்கப்படும். புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழில்களுக்கு மிக அதிக மூலதனம் முதலீடு செய்யவேண்டியிருக்குமாஞல் அவற்றிற்கும் காப்பு அளிக்கலாம். மிக உயர்ந்த மட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி தேவைப்படும் தொழில்களுக்கும், வெளி நாட்டுப் போட்டி மிகவும் கடுமையாக இருக்கும் தொழில்களுக்கும் காப்பு அளிக்கப்படும். சில விவசாயப் பொருள்களுக்குக் காப்பு அளிக்கலாம் என்றும் அதற்கு உச்சகால வரையறை 5 ஆண்டுகளாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. தொழில்காப்புத் திட்டக்காலப் பலன் அடைந்த (தொழில்) பொருள்களின் மீது கூடுமானவரை ஆயத்தீர்வை விதிக்காமல் இருக்க வேண்டும். அவசியமாஞல் ஆராய்ச்சிக்காகச் சிறு அளவிற்கு வரி விதிக்கலாம். இத்தொழில்கள் உபயோகிக்கும் கச்சாப்பொருள்களின் விலையை அவசியம் ஏற்பட்டால் அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும்.

தொழில்காப்பு சாதாரண இறக்குமதித் தீர்வைகளுடன் நின்றுவிடவில்லை, இறக்குமதி அளவுக் கட்டுப்பாடும், உதவிக் கொடையும் இதன் இதர கூறுகள் ஆகும். இறக்குமதித் தீர்வைகள் ஆக்கச் செலவில் உள்ள வேறுபாட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. அதாவது பாரதத்திற்கு இறக்குமதியாகும் விலை, பாரதத்திலே அதைத் தயாரிப்பதற்கான ஆக்கச் செலவு; இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாடு காப்பு விகிதங்களை நிர்ணயிக்கும். காப்பு அளிக்கப்படும் காலம் தொழிலுக்குத் தொழில் வேறுபடும். உலக நாடுகளின் நுண்ணியல் வளர்ச்சி, அவற்ருல் ஏற்படும் போட்டி ஆகியவையும், உள்நாட்டுத் தொழிலின் வளர்ச்சியும் கருத்தில் கொள்ளப்படும்.

சுங்கக் கொள்கையை நிருவகிக்கும் பொறுப்பைத் தனித்துவம் உடைய நிரந்தரமான சுங்க ஆணைக்குழுவிடம் (Tariff Commission) ஒப்புவிக்க வேண்டுமென்று நிதி ஆணைக்குழு கூறியது. சுங்க ஆணைக்குழுவிற்குச் சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன; சாட்சியங்களை அழைக்கவும், தம் விருப்ப அடிப்படையில் விசாரணை நடத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சுங்க ஆணைக்குழு தனது அறிக்கையையும், பரிந்துரைகளையும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்த 2 மாதங்களில் அதுபற்றிய தீர்மானங்களை அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். சுங்க ஆணைக்குழு தனது அறிக்கையில் தொழில் காப்பின் அவசியம், அதஞல் ஏற்படும் பாதக விளைவுகள் முதலியவற்றைத் தெளிவுபடுத்த வேண்டும்.

சுங்க ஆணைக்குழு

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளனைத்தையும் பாரத அரசு ஏற்றுக்கொண்டது. அதற்கிணங்க 1952 ஜனவரி 21ல் அன்று சுங்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. (சுங்க ஆணைக்குழுச் சட்டம், 1951ல் நிறைவேற்றப்பட்டது). இந்த ஆணைக்குழுவுக்கு மூன்று உறுப்பினர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் தலைவராகச் செயல்படுவார். இதன் பணிகள் பின் வருமாறு : தொழில் வளர்ச்சிக்கு ஆதரவாகக் காப்பு அளித்தல் ; இதற்காகச் சுங்கத் தீர்வை விகிதங்களை மாற்றி அமைத்தல் ; வெளி நாட்டுப் பொருள்கள் அடக்க விலைக்குக் குறைவாக இந்தியாவில் முடக்கப்படுவதைத் (Dumping) தடை செய்தல் ; பாதுகாக்கப்பட்ட தொழில்களைக் கண்காணித்தல் ; ஆக்கச் செலவு, விலைமட்டங்கள் ஆகியவற்றைக் காப்புத் தீர்மானங்கள் எவ்வாறு பாதிக்கின்றன என்று ஆராய்தல் ; பன்னாட்டு வாணிபம், வாணிப ஒப்பந்தம் ஆகியவற்றால் தொழில்காப்பு பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுதல் முதலியன.

நிதி ஆணைக்குழுவுக்குப் போதிய அளவு உசித அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்குத் தீர்ப்பு மன்றங்களுக்குக் கொடுக்கப்படும் மதிப்பும், அந்தஸ்தும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்கவோ, மறுக்கவோ செய்யலாம். அரசாங்கத்தின் முடிவுகளை 3 மாத காலத்திற்குள் தெரிவிக்க வேண்டும்.

முதல் திட்டத்துடன் சுங்க ஆணைக்குழுவும் பணிபுரிய ஆரம்பித்தது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் சென்ற பின்னர் சுங்க ஆணைக்குழுவையும், அதன் பணிகளையும் பரிசீலனை செய்வதற்கு 1967–68ல் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்களின் தலைமையில் சுங்க ஆணைக்குழு பரிசீலனைக் கமிட்டி (Tariff Commission Review Committee) நியமிக்கப்பட்டது. பரிசீலனைக் கமிட்டியின் பரிந்துரைகள் யாவும் அரசாங்கத்தால் 1968ல் (செப்டம்பரில்) ஏற்றுக்கொள்ளப்பட்டன.[6] அவற்றுள் முக்கியமானவை பின் வருமாறு :

ரூபாயை 1966ல் மதிப்பு இறக்கம் செய்துள்ளதால் எந்த அளவிற்குத் தொழில்கள் நன்மை அடைந்துள்ளன என்றும், எந்தஅளவிற்குத்தொழில்காப்பு தொடர்ந்து தேவைப்படுகின்றது என்றும் உடனடியாக ஆராயவேண்டும் என்று பரிசீலனைக் கமிட்டி கூறியதை மைய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. தொழில்களின்

6S.C. Kuchhal-THE INDUSTRIAL ECONOMY OF INDIA. (1969). Chaitanya Publishing house-p. 118-120.

ஆக்கச் செலவைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியது அவசியம். ஆக்கச் செலவைக் குறைப்பதற்கான வழி முறைகளைச் சுங்க ஆணைக்குழு எடுத்துரைக்க வேண்டும். அரசாங்கம் சட்ட ரீதியாகப் பூர்த்தியான பொருள்களின் விலையை நிர்ணயித்தாலும், கச்சாப் பொருள்களின் விலையை நிர்ணயித்தாலும் சுங்க ஆணைக்குழுவைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். இதற்காகத் தற்காலிகமான கமிட்டிகளை அரசாங்கம் நியமிக்கும்போது சுங்க ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரையும் (அக்கமிட்டியிற்) சேர்த்துக்கொள்ளவேண்டும். ஏற்றுமதியில் ஈடுபட்ட தொழில்கள் சம்பந்தமான பிரச்சினைகளைப் பொறுத்தவரை, நிபுணத்துவம் உடைய சுங்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் பற்றிநிற்கும். இந்த ஆணைக்குழுவிடம் ஒப்புவிக்கப்பட்ட விலை விசாரணைகள் அதிகபட்சம் 6 மாதங்களுக்குள் முடிக்கப்படும். கம்பெனிச் சட்ட வாரியத்தின் (Company Law Board) ஆலோசனையுடன் ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட தொழிலின் ஆக்கச் செலவுகள் விவரக் கணக்கு முறைப்படுத்தப்படும். பெரும்பாலான சுங்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்கத் தயாராக இருக்கும். பாதுகாப்பு நீக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்து 2 அல்லது 3 ஆண்டுகள்வரை மேற்படி தொழில்களை ஆணைக்குழு பரிசீலனை செய்து வரும். ஆக்கச் செலவு கணக்குப் பதிவு முறையில் தேர்ச்சி பெற்றவரைச் சுங்க ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்க அரசாங்கம் உடம்பட்டது.

சுங்க ஆணைக்குழு செயல்பட்ட விதம் பொதுவாகப் பரிசீலனைக் கமிட்டியின் அங்கீகாரத்தையும் பாராட்டுதலையும் பெற்றுள்ளது. இந்த ஆணைக்குழு தொடர்ந்து மதிப்பு மிக்க, செல்வாக்கான ஓர் அமைப்பாகச் செயல்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

17. தொழில் நிதியும், நிருவாகப்பதிலாளி முறையும்

தொழில் நிதி

பேரளவுத் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தவும், அவை லாபகரமாகச் செயல்படவும் வளர்ச்சி அடைந்த மூலதன அங்காடி ஒரு முன்நிபந்தனையாக உள்ளது. மூலதன அங்காடியில் மக்களின் சேமிப்பு-அளிப்பும், தொழில்துறையின் முதலீட்டுத் தேவையும் சமன்செய்யப்படுகின்றன. தனிநபர்கள், நிறுவனங்களிடம் உள்ள சேமிப்பை ஒருங்கே திரட்டித் தொழில் முயல்வோர்களுக்குக் கிடைக்கும்படி செய்தல்வேண்டும். தொழில் முயலுநர்கள் இந்தப் பண மூலதனத்தை (Financial Capital) உண்மையான மூலதனமாக (Real Capital) மாற்றுவார்கள். இவ்வாறு மக்களிடையே பரவலாகச் சிதறிக் கிடக்கின்ற சேமிப்பை ஒன்று திரட்டி உற்பத்திச் சாதனங்கள் படைப்பதற்குப் பயன்படுத்துவதை மூலதன ஆக்கம் அல்லது மூலதனத் திரட்சி (Capital Formation) என்பர்.

வளர்ச்சி குன்றிய நாடுகளில், பண அங்காடியும் மூலதன அங்காடியும் வளர்ச்சி குறைந்து காணப்படுகின்றன. மக்களின் தலா வருமானம் குறைவாக இருப்பதால் சேமிக்கும் திறனும் குறைவு; கிடைக்கக்கூடிய சேமிப்பை ஒன்றுதிரட்டவும், அதைத் தொழில் துறையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தவும் தகுந்த நிறுவன அமைப்புகள் தோன்றாமையால் மூலதன ஆக்கமும் குறைந்து காணப்படுகின்றது. நீண்டகாலச் சேமிப்புத் தொகையை ஏற்றுக் கொள்ளவும், அதைத் தொழில் துறையின் நீண்டகால முதலீட்டுக்குக் கொடுத்து உதவவும் தொழில் பாங்குகள் அல்லது முதலீட்டுப் பாங்குகள் கிட்டத்தட்ட வளரவில்லை என்றே சொல்லலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் தனியார் முயற்சி

னால் தோன்றிய முதலீட்டுப் பாங்குகள் நீடித்திருக்கவில்லை. பாரதம் விடுதலை அடையும்வரை இந்த நிலைமை தொடர்ந்து காணப்பட்டது.

விடுதலைக்குப்பின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடன் கொடுக்கும் தொழில் நிதிகள் பல தோற்றுவிக்கப்பட்டன. இந்தத் தொழில் நிதி நிறுவனங்களை ஏற்படுத்துவதில் அரசு நேரிடையாகவும், (ரிசர்வ் பாங்கின் மூலம்) மறைமுகமாகவும் ஈடுபட்டது.

இரண்டாவது உலகப்போரினால் அதிக அளவுக்குத் தேய்ந்து போன இயந்திர சாதனங்களைப் புதுப்பிக்கவும், தொழில் உற்பத்தியை விரிவுபடுத்தவும், புதிய நிறுவனங்களைத் தோற்றுவிக்கவும் மூலதன உதவி செய்யக்கூடிய தொழில் நிதி அமைப்புகள் மிகவும் அவசியமாக இருந்தன. இந்தத் தொழில் நிதி அமைப்புகள் பல வகையான பணிகளைச் செய்தன. தொழில் நிறுவனங்களின் நீண்டகாலக் கடன் பத்திரங்களை-டிபெஞ்சர்களை—வாங்கிக் கொண்டு மூலதன உதவியை அளித்தன. இவை புதிதாக ஆரம்பிக்கப்படும் நிறுவனங்களின் பங்கு மூலதன வெளியீட்டிற்கும், டிபெஞ்சர் வெளியீட்டிற்கும் (உத்தரவாதம்) உறுதி அளித்தன: இடைக்காலக் கடன் உதவி அளிக்கும் வணிகபாங்கு போன்ற நிறுவனங்களுக்கு மறுநிதி அளித்தல்; தொழில் நிறுவனங்களுக்கு நுட்ப ஆலோசனை வழங்குதல்; 'சர்வே' அல்லது கணிப்புகளை மேற்கொள்ளுதல்; பன்னாட்டு அமைப்புகள் கடன் உதவி செய்வதற்கு உறுதி அளித்தல்; தவணை முறையில் இயந்திர சாதனங்களை வாங்கவும் விற்கவும் உதவிசெய்தல்; அந்நிய செலாவணிக் கடன் கொடுத்தல்; மூலதன அங்காடியில் உள்ள பல்வேறு நிறுவனங்களின் முதலீட்டு நடவடிக்கைகளையும் ஒருமுகப்படுத்துதல் முதலியன.

தொழில் நிதி அமைப்புகளைப் பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்திக்கூறலாம். காட்டாகத் தனியார் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் கடன் உதவி செய்யக்கூடிய பாரதத்தொழில் நாணய முதலீட்டுக்கழகம் (Industrial Credit and Investment Corporation of India) ஒருவகை; பொதுத் துறையில் உள்ள அரசு நிறுவனங்களுக்கும், முக்கியத்துவம் பெற்ற இதர நிறுவனங்களுக்கும் உதவிசெய்யும் தேசிய தொழில் வளர்ச்சிக்கழகம் (National Industrial Development Corporation) மற்றொருவகை. சிறு தொழில்களுக்கு மட்டும் உதவிசெய்யும் தேசீயச் சிறுதொழில்கள் கழகம் (National Small Industries Corporation) இன்னொருவகை. நீண்டகால அளவில்வரையிட்ட பொதுக்கம்பெனிகளுக்குப் பெரும்

பாலும்–பேரளவுத் தொழில் நிறுவனங்களுக்கு–நிதி உதவிசெய்வது பாரதத்தொழில் நிதிக்கழகத்தின் (Industrial Finance Corporation of India) முக்கிய பணியாகும். நீண்டகால அளவிலும், இடைக்கால அளவிலும் வரையிட்ட தனிக் கம்பெனிகளுக்கு நிதி உதவி செய்வது மாநில நிதிக்கழகங்களின் (State Finance Corporations) முக்கிய பணியாகும். இவ்வாறு நேரிடையாகவும், மறைமுகமாகவும் தொழில் நிறுவனங்களுக்கு மூலதன உதவி செய்யும் நிறுவனங்களுக்கெல்லாம் தலைமையான நிறுவன அமைப்பாகப் பாரதத்தொழில் வளர்ச்சிப் பாங்கு (Industrial Development Bank of India) செயல்படுகிறது, இந்தப் பாங்கு நேரிடையாக உதவிசெய்வதுடன், மற்ற நிறுவனங்களுக்கு மறுநிதி உதவியும் அளிக்கின்றது.

மேலேகூறிய தொழில் நிதி அமைப்புகளைத் தவிரப் பங்கு அங்காடியில் பங்கு கொள்ளுகின்ற ஆயுள் ஈட்டுறுதிக்கழகம், (Life Insurance Corporation) 'யூனிட் டிரஸ்ட்' (Unit Trust of India) முதலிய பொதுத்துறை அமைப்புகள் மூலதன அங்காடியில் முக்கியமானவை.

பாரதத்தொழில் நிதிக்கழகம்

1948, ஜூலை மாதம் 12லிருந்து நாடாளுமன்றச் சட்ட அடிப்படையில் பாரதத் தொழில்நிதிக்கழகம் தோற்றுவிக்கப் பட்டது. முக்கியமாகப் பேளவுத்தொழில் நிறுவனங்களுக்குப் பயன் படவும் இடைக்கால நீண்டகாலக் கடன் தொகையைக் கொடுத்து உதவவும் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இதன் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10/– கோடியாகவும், செலுத்தப் பட்ட மூலதனம் ரூ. 7·5 கோடியாகவும் இருந்தது. *1969*ல் இதன் செலுத்தப்பட்ட மூலதனமும், காப்புநிதியும் முறையே ரூ. 8·35 கோடியாகவும், ரூ. 10·94[1] கோடியாகவும் உயர்ந்துள்ளன. இதைத்தவிரக் கடன்பத்திரங்களை வெளியிடுவதன் மூலமாகவும், அரசாங்கத்திடம் கடன் வாங்குவதன் மூலமாகவும் தொழில் நிதிக்கழகம் நிதி திரட்டலாம். ஆரம்பத்தில் அரசாங்கம், ரிசர்வ் பாங்கு, பட்டியல் (ஷெட்யூல்) பாங்குகள் மட்டுமே இதன் பங்குதாரர்களாக இருந்தன. பின்னர் ஆயுள் ஈட்டுறுதிக்கழகமும், பாரதத்தொழில் வளர்ச்சிக் கழகமும் இதன் பங்குதாரர்களாகி அரசாங்கம், ரிசர்வ் பாங்கு ஆகியவற்றிடம் உள்ள பங்குப் பத்திரங்கள் தொழில்வளர்ச்சிப் பாங்கிற்கு மாற்றப்பட்டதால் தொழில்நிதிக்கழகத்தின் மொத்தப் பங்குகளில் 50% பங்குகள் தற்சமயம் தொழில்வளர்ச்சிப் பாங்கிடம் உள்ளன.

[1]Reserve Bank of India. Functions & working-1970.p. 145.

தொழில் நிதிக்கழகம் பேரளவுத் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே உதவிசெய்ய முடியும்: பொறுப்புகள் வரையறுக்கப் பட்ட பொதுக் கம்பெனிகளுக்கு மட்டுமே உதவி அளிக்கும்: அதாவது தனியார் நிறுவனங்களில் ஏக உரிமையாளர், கூட்டாளி கள் மற்றும் பொறுப்புகள் வரையிட்ட தனிக் கம்பெனிகள்[2] ஆகிய வற்றுக்கும், அரசாங்கத்தின் நிறுவனங்களுக்கும் இது உதவிசெய்ய முடியாது.

தொழில்நிதிக்கழகம் தொழில் நிறுவனங்கள் அங்காடியில் எழுப்புகின்ற கடன்களுக்கு (உத்தரவாதம்) உறுதி அளிக்கும் மேற்படி கடனை 25 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கவேண்டும். இரண்டாவது, பங்குப்பத்திரங்கள், டிபெஞ்சர்கள், கடன்பத்திரங் கள் முதலியவற்றை வெளியிடும் தொழில் நிறுவனங்களுக்கு உறுதி அளிக்கும். இங்ஙனம் உறுதி அளித்துள்ளதால் தொழில் நிதிக் கழகம் வாங்கியுள்ள பங்குப்பத்திரங்கள், கடன் பத்திரங்கள் முதலியவற்றை ஏழு ஆண்டுகளில் அங்காடியில் பொது மக்களுக்கு விற்பனை செய்துவிடவேண்டும். (குறிப்பு: உறுதி அளித்தல்— Underwriting—என்பது பின்குறிப்பிட்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடு கிறது. ஒரு கம்பெனி ரூ. 10/- லட்சம் மூலதனத்தைத் திரட்டு வதற்குப் பங்குப்பத்திரம் அல்லது டிபெஞ்சர்களை வெளியிடுகிறது. மேற்படி தொகையை முழுமையாக அங்காடியில் திரட்ட முடிய வில்லை என்றால், அதில் துண்டுவிழும் தொகையைக் கொடுத்து உதவு வதாக உறுதி அளிக்கும். அதாவது பொதுமக்கள் ரூ. 7/- லட்சம் பங்குப்பத்திரங்களை மட்டும் வாங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்றால், உறுதி அளிக்கும் இக்கழகம் மீதம் உள்ள ரூ. 3/- லட்சம் மதிப்புள்ள பங்குப்பத்திரங்களைத் தானே வாங்கிக் கொள்ளும். இங்ஙனம் உறுதி அளிப்பதால் கம்பெனிக்குத் தேவையான மூல தனம் கிடைப்பது நிச்சயம்.)

மூன்றாவதாக, தொழில்நிதிக்கழகம் நேரிடையாகக் கடன் வழங்கலாம், டிபெஞ்சர் பத்திரங்களை வாங்கிக் கொண்டு கடன் மூலதனத்தைக் கொடுத்து உதவலாம். மேற்படி கடன்தொகை 25 ஆண்டுகளில் திரும்பிக்கொடுக்கப்படவேண்டும்.

[2]கூட்டுப்பங்குக்கம்பெனிகளை இருவகையாகப் பிரிக்கலாம். மொத்தப் பங்கு தாரர்களின் எண்ணிக்கை '50' விடக் குறைவாக இருக்குமானால் அவற்றை வரையிட்ட 'தனிக்கம்பெனிகள்' (Private Limited Companies) என்றும், அதைவிட அதிக நபர்கள் பங்குதாரர்களாக இருந்தால் அதை 'வரையிட்ட பொதுக் கம்பெனிகள்' (Public Limited Companies) என்றும் அழைப்பார்கள். அரசாங்கத்தால் நிறுவப்படும் கம்பெனிகளின் பங்குதாரர்கள் 50ஐ விடக் குறைவாக இருப்பதாலும் இக்கம்பெனி நிருவாகம் தொடர்ந்து அரசுத் துறையில் எதிர்காலத்தில் நீடிப்பதற்காகவும் இவை வரையிட்ட தனிக்கம்பெனி களாக இருக்கின்றன.

நான்காவதாக, தொழில் நிறுவனங்களுக்கு மத்திய அரசாங்கம் அல்லது உலகபாங்கு கடன் கொடுக்குமானால் அவற்றின் பதிலாளியாகச் செயல்படக்கூடும். உலக பாங்கின் பதிலாளியாகச் செயல்படுவதற்கு அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஐந்தாவதாக, (கொடுக்க வேண்டிய) தொகையைக் காலம் தாழ்த்திச் செலுத்துவதாகக்கூறும்இறக்குமதியாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட இது உதவும்.

பாரதத்தொழில் நிதிக்கழகச் சட்டம் 1960ல் திருத்தப்பட்டது. அதன்காரணமாக இக்கழகத்தின் பணிகள் மேலும் விரிவடைந்துள்ளன. பட்டியல் (ஷெட்யூல்) பாங்குகள் மாநில கூட்டுறவுப் பாங்கு ஆகியவற்றிடமிருந்து தொழில் நிறுவனங்கள் கடன் வாங்க இக்கழகம் உறுதி அளிக்கும்.

பாரதத்திலேயே தயாரிக்கப்பட்ட மூலதனப் பொருள்களைத் தவணை முறையில் வாங்குவதற்கு இது உதவிசெய்யும். தொழில் நிறுவனங்கள் தங்கள் வெளிநாட்டுச் செலாவணிப் பொறுப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கத்தின் முன் அனுமதியுடன் உதவலாம். இறுதியாக, புதிய திருத்தத்தின் விளைவாக டிபெஞ்சர் மூலதனமாகக் கொடுத்ததைப் பங்கு மூலதனமாக மாற்றிக் கொள்ள உரிமை வழங்கப்பட்டது. தொழில் நிறுவனங்கள் நெருக்கடியான நிலைமையில் மட்டுமே கடன்வாங்குகின்றன. அதுவும் அங்காடியில் மூலதனத்தைத் திரட்ட முடியாதபோது தொடர்ந்து உற்பத்தி செய்ய இக்கடன் மூலதனம் அவசியமாக உள்ளது. கடன் மூலதனத்தைப் பங்கு மூலதனமாக மாற்றிக் கொள்வதன் மூலம் தொழில் நிறுவனத்தின் பூரிப்பான வளர்ச்சியிலும், கஷ்டத்திலும் தொழில் நிதிக்கழகம் பங்குகொள்ள முடியும்.

1971 நவம்பரில் பாரதத்தொழில் நிதிக்கழகத்தின் பொறுப்புகள்[3] பின்வருமாறு. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 8·35 கோடியாகும். இதன் காப்புநிதி ரூ. 12·71 கோடியாகும். டிபெஞ்சர் பத்திரங்கள் மூலமாகத் திரட்டியதொகை ரூ. 63·13 கோடியாகும். அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கிய தொகை ரூ. 76.60 கோடியாகும். வெளிநாட்டுச் செலாவணியாகக் கடன் வாங்கிய தொகை ரூ. 21·55 கோடியாகும்.

[3] RBI-Bulletin-Decemmber, 1971, p. 2020. Table No 14.

மாநில நிதிக்கழகங்கள்

நடுத்தரத் தொழில்கள், சிறுதொழில்கள் முதலியன பெரும்பா்லும் வரையிட்ட தனிக் கம்பெனிகளாக உள்ளன; அல்லது இவற்றின் அமைப்பு கூட்டாளிகளைக் கொண்டதாக இருக்கலாம். இங்ஙனம் சிறு அல்லது நடுத்தர அமைப்புகளுக்கு நிதி உதவி செய்யும் நோக்கத்தோடு கிட்டத்தட்ட ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநில நிதிக்கழகம் ஏற்படுத்தப்பட்டது. மாநிலங்களில் தமிழ் நாட்டிலும், நாகாலாந்திலும் மாநில நிதிக்கழகங்கள் இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் அதற்குப் பதிலாக (தமிழ்நாடு) தொழில் முதலீட்டுக் கழகம் 1949ல் நிறுவப்பட்டது. 1952 ஆகஸ்ட் 12 அன்று மாநில நிதிக்கழகங்கள் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் மாநிலங்களில் நிதிக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. தற்சமயம் மொத்தம் 18 மாநில நிதிக்கழகங்கள் உள்ளன. இவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் (1971 அக்டோபரில்) ரூ. 21·96 கோடியாகும்.[4] இவற்றின் காப்புநிதி ரூ. 71 லட்சம் ஆகும். இக் கழகங்களின் மொத்தச் சொத்துகளும், பொறுப்புகளும் ரூ. 179·35 கோடியாகும்.

மாநில நிதிக்கழகங்கள் பெரும்பாலும் பாரதத்தொழில் நிதிக் கழகத்தைப் போலவே பணியாற்றுகின்றன. இவைபெரும்பாலும் சிறு தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் உதவியாகச் செயல்படுகின்றன. பாரதத்தொழில் நிதிக்கழகம் பெரும்பாலும் ரூ. 20/– லட்சத்திற்கும் அதிகமான கடன்தொகை மனுக்களைப் பரிசீலனை செய்து கடன்வழங்க ஏற்பாடு செய்கிறது. மாநில (தொழில்) நிதிக்கழகங்கள் இதற்கும் (ரூ. 20/– லட்சத்திற்கும்) குறைவான கடன் மனுக்களைக் கவனிக்கின்றன. வரையிட்ட பொதுக் கம்பெனிகளும் இக்கழகத்தின் உதவியைப் பெறலாம்.

மாநில நிதிக்கழகங்கள் கொடுக்கும் கடன் தொகையும், அதற்கான உறுதியும் அதிக அளவாக 20ஆண்டுகளுக்குமிகாமல் இருக்கும். மாநிலக் கழகங்கள் நேரிடையாகப் பங்குப்பத்திரங்களை வாங்கிக்கொண்டு பங்கு மூலதனத்தைச் செலுத்த அனுமதிக்கப் படுவதில்லை. ஆனால் பங்கு வெளியீட்டிற்கு உறுதி அளிப்பதால் ஏற்படும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகப் பங்குப் பத்திரங்களை வாங்கிக்கொள்ளலாம். மேற்படி பங்குகளை 7 ஆண்டுகளில் உடைமை மாற்றம் செய்யவேண்டும்.

[4] ஆதாரம் முன்கூறியபடி பக். 2021. அட்டவணை 15.

மாநில நிதிக்கழகங்களும், பாரதத்தொழில் நிதிக்கழகமும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான பணிகளைச் செய்து வருகின்றன என்றாலும், அவற்றிடையே பின்வரும்முக்கிய வேறுபாடுகள்காணப் படுகின்றன. முதலாவதாக, மாநில நிதிக்கழகங்களின் செலுத்திய மூலதனம் குறைவாக இருப்பதுடன் இதில் 25% தொகையைத் தனிநபர்கள் செலுத்த அனுமதிக்கப் படுகின்றார்கள். ஆனால் பாரதத் தொழில் நிதிக்கழகத்தின் பங்கு உடைமையாளர்கள் அரசாங்கம், அல்லது அரசாங்கத்தின் சார்பில் உள்ள நிறுவனங் களாக இருக்கின்றன. இதில் தனிநபர்களுக்கு இடம் கிடையாது. இரண்டாவதாக, மாநில நிதிக்கழகங்கள் அதிகபட்சம் 20 ஆண்டு களுக்கு மட்டுமே கடன் கொடுக்கவும் உறுதி அளிக்கவும் முடியும். பாரதத்தொழில் நிதிக்கழகம் 25 ஆண்டுகளுக்குக் கடன்கொடுக் கலாம் அல்லது உறுதி அளிக்கலாம். தனி ஒரு நிறுவனத்திற்கு உதவிசெய்யக்கூடிய உச்சவரம்பு இவ்விரு கழகங்களுக்கும் வேறு படுகின்றன. மாநிலக்கழகங்கள் ஒவ்வொன்றும் அதிக அளவு ரூ. 10/-லட்சம்வரைக் கடன்கொடுக்கலாம். பாரதத்தொழில் நிதிக்கழகத்தின் உச்சவரம்பு ரூ. 1/- கோடியாக உள்ளது. இதை விட அதிகமான கடன்தொகை வழங்குவதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டும்.

மாநில நிதிக்கழகங்களின் நிருவாகத்தைச் சீர்படுத்தும் நோக் கத்தோடு இவற்றின் நடவடிக்கைகளை ரிசர்வ் பாங்கு பரிசீலனை செய்து வருகிறது. இவை மாநில அரசாங்கத்தின் பதிலாளிகளா கவும் செயல்படுகின்றன. சிறு தொழில்களுக்கு உதவி செய்வதில் 'ஸ்டேட் பாங்கு' தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மாநில நிதிக்கழகங் கள் கொடுக்கும் கடன்கள் நாணய உறுதித்திட்டத் (Credit Guarantee Scheme) தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இக் கழகங்கள் தற்சமயம் பாரதத் தொழில் வளர்ச்சிப் பாங்கிடமிருந்து மறுநிதி வசதிகளைப் பெற்றுவருகின்றன. மாநில நிதிக் கழகங் களுக்கு உதவி செய்வதற்காக 1954 ஜூலை 1-ல் அன்று தேசிய தொழில் நாணய (நீண்டகால) நிதி (National Industrial Credit (Long-term Operations) Fund) ஏற்பட்டது. தொழில் வளர்ச்சிப் பாங்கின் மூலம் மாநில நிதிக்கழகங்களுக்கு இந்நிதியிலிருந்து உதவி செய்யலாம்.

அரசுத் தொழில்வளர்ச்சிக்கழகம் (State Industries Development Corporation)

ஒவ்வொரு மாநில அரசும் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வும், அதைத் துரிதப் படுத்தவும் அரசுத் தொழில் வளர்ச்சிக் கழகம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இவற்றின் மூலதனம்

முழுவதும் பெரும்பாலும் அந்தந்த மாநில அரசால் செலுத்தப்பட்டது. மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களில் உள்ள கழகங்கள் இதற்கு விதி விலக்காக உள்ளன. இந்த மாநிலங்களில் உள்ள அரசுதொழில் வளர்ச்சிக் கழகங்கள் தங்களுக்கு வேண்டிய மூலதனத்தை டிபெஞ்சர், கடன்பத்திரம் முதலியவற்றை வெளியிடுவதன் மூலமாகவும் திரட்டிக்கொள்கின்றன. அரசுத் தொழில் வளர்ச்சிக் கழகங்கள் மாநில நிதிக் கழகங்களுக்குத் துணையாக உள்ளன. மாநிலக்கழகங்களால் உதவி அளிக்க முடியாத தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதே அரசுத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய நோக்கம். பெரும்பாலும் மாநில அரசுகள் அதிக நாட்டம் கொண்டுள்ள துறைகளுக்கு உதவி செய்வதும், பொதுவான தொழில்ளளர்ச்சி வேகத்தை ஊக்குவிப்பதும் இவற்றின் முக்கிய நோக்கமாகும். இங்ஙனம் ஒன்றுக்கும் அதிகமான நிதிக்கழகங்கள் இருப்பது மிகவும் அவசியம் என்றாலும், அவற்றை அவ்வப்போது ஒருமுகப்படுத்தவேண்டிய அவசியத்தை அனுபவம் உணர்த்தாமல் இல்லை.

தேசியதொழில் வளர்ச்சிக்கழகம் (National Industrial Development Corporation)

தேசியத் தொழில் வளர்க்சிக் கழகம் 1954 அக்டோபர் 24ஆ யன்று நிறுவப்பட்டது; ஒரு கோடி ரூபாய் அனுமதித்த மூலதனத்துடன் வரையிட்ட தனிக்கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டது. இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ10/– லட்சத்தையும் மத்திய அரசாங்கமே கொடுத்துள்ளது. தனியார் துறையினர் தொடங்கத் தயங்கும் இடர் மிகுந்த துறைகளில் புதிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தல்; அதிக மூலதனச் செறிவு மிக்க துறைகளில் புதிய நிறுவனங்களை ஆரம்பித்தல் முதலியன இதன் முக்கிய குறிக்கோள்கள் ஆகும். நோக்கத்திற்காக அல்லாமல் புதிய இடர் மிகுந்த தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் பொதுவான தொழில் வளர்ச்சி வேகத்தைத் தூண்ட முடியும். ஆரம்பத்தில் மூலதனக் கருவிகளையும், இயந்திரங்களையும் உற்பத்தி செய்ய முக்கியத்துவம் கொடுக்கப்படும். புதிய தொழில் ஆரம்பிக்கத் தேவையான தொழில் நுட்ப சர்வேக்களை நடத்துதல், நுட்ப ரீதியான ஆலோசனை வழங்குதல் முதலியன வலியுறுத்தப்படும்.

தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகம் தனியார் துறையில் உள்ள நிறுவனங்களுக்கும், அரசுத் துறையில் உள்ள நிறுவனங்களுக்கும் உதவி செய்யும். மூலதனம் அளித்தல், இயந்திர

சாதனங்களைப் பெறுதல், நாணயம் வழங்குதல் முதலிய பணிகளுடன், பலவகை உறுதிகள் அளிக்கவும் செய்யலாம். தொழில் நிறுவனங்களின் மூலதனக் கருவிகளைப் புதுப்பிக்கவும் இக்கழகம் உதவி செய்யும். இவ்வகையில் துணி ஆலைகள், சணல் ஆலைகள் முதலியவற்றிற்குக் கடன்உதவி செய்துள்ளது.

பாரதத் தொழில், நாணய முதலீட்டுக்கழகம் (The Industrial Credit and Investment Corporation of India)

தனியார் தொழில் முயற்சிகளுக்குத் துணையாக 1955 ஜனவரி 5உயன்று பாரதத் தொழில் நாணய முதலீட்டுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்க உதவியால் பாரதத்தில் உள்ள ரூபாய் சமன் நிதியைத் தொழில் வளர்ச்சிக்கு (முக்கியமாகத் தனியார் தொழில் முயற்சிக்கு ஆதரவு அளிக்கும்) பயன்படுத்தும் நோக்கத்தோடு இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இதை ஏற்படுத்துவதில் அமெரிக்க அரசாங்கமும், உலக பாங்கும் பாரத அரசாங்கமும் முக்கிய பங்குகொண்டன.

இதன் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ 25/- கோடியாக இருக்கும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ 17·5/- கோடியாக இருக்கும். இதில் ரூ 7.5 கோடியை அமெரிக்கத் தொழில் நுட்பக் கூட்டுறவு நிருவாகமும் TCM, உலகபாங்கு ரூ 5/- கோடியும், பாரத அரசாங்கம் ரூ 5/- கோடியும் செலுத்தி உள்ளன.

இக்கழகம் தனியார் துறையில் உள்ள நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கும், சாதனங்களைப் புதுப்பிக்கவும், பொதுவாகத் தனியார் தொழில் முயற்சியை ஊக்குவிக்கவும் உதவி செய்யும். புதிய தனியார் நிறுவனங்களை ஏற்படுத்துவதற்காகத் தேவைப்படும் உள்நாட்டு ரூபாய் மூலதனம், வெளிச்செலாவணி முதலியவற்றை அளித்து உதவும். முதலீட்டு முக்கியத்துவம் உள்ள தொழில் நிறுவனங்களைத் தனியார் துறையில் ஏற்படுத்துவதும், முதலீட்டு அங்காடியை விரிவுபடுத்துவதும் முக்கியமானவையாகும். இதற்காக நீண்டகாலப் பங்கு மூலதனத்தை அளிக்கலாம்; அல்லது கடனுக மூலதனத்தைக் கொடுக்கலாம்; பங்குகளை வெளியிடலாம்; தனியார் நிறுவனங்கள் வெளியிடும் பங்கு மூலதனத்திற்கு உறுதி அளிக்கலாம்; முதலீட்டிற்குத் தேவையான மூலதனத்தைத் தனியார் நிறுவனங்கள் பெறுவதற்கு உறுதி அளிக்கலாம். உதவிசெய்த நிறுவனங்கள் வெற்றிகரமாக நடக்குமானுல் அதில் முதலீடு செய்த தொகையைக் கொஞ்சம் கொஞ்சமாக மூலதன அங்காடியில் உடைமை மாற்றம் செய்து விட்டுப் புதிய நிறுவனங்களுக்கு உதவி செய்ய முன் வரலாம். நிதி,

நிருவாகம், தொழில் நுட்பம் ஆகிய மூன்று துறைகளிலும் தொழில் முயலுநர்களுக்கு ஆலோசனை வழங்குதல், உதவி செய்தல் முதலியன இதன் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

தொழில் நாணய முதலீட்டுக் கழகம் கூட்டுப்பங்குக் கம்பெனி களுக்கு மட்டுமே—முக்கியமாகப் பொறுப்புகள் வரையறுக்கப் பட்ட நிறுவனங்களுக்கு மட்டுமே—உதவி செய்கின்றன. தனியார் நிறுவனங்களின் வெளியீட்டுக்கு உறுதி அளிக்கும் பணியை ஆரம் பத்தில் சிறப்பாகச் செய்து தனியார் தொழில் வளர்ச்சியை ஊக்கு வித்தும் உள்ளது. உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் உள்ள தொழில் நிதி அமைப்புகள், பாங்குகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் அவற்றின் உதவிகளை ஒருமுகப் படுத்தும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன. இந்த முதலீட்டுக்கழகம் உலக பாங்கு, அமெரிக்க அரசாங்கம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டிருப்பதால் அந்நியச் செலவாணியை அளிக்கும் முக்கியத் தொழில் நிதி அமைப்பாக உள்ளது. தனியார் அந்நிய மூல தனத்தைப் பெறுவதற்கும், முதலீடு செய்வதற்கும் ஒரு சிறந்த வாய்ப்பினை இது ஏற்படுத்யுள்ளது.

மறுநிதிக்கழகம் (Re – Finance Corporation) அமெரிக்கப் பொதுச்சட்டம் 480ன் கீழ் அனுப்பப்படும் தா்னியங்களை விற்ற தால் கிடைக்கும் ரூபாய்த் தொகையைச் சமன்நிதி என்பர். இதில் ஒரு பகுதியைத் தனியார் தொழில் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று ஒப்பந்தம் கூறுகிறது. தனியார் நிறுவனங்க ளுக்கு நிதி உதவிய நிதிக்கழகங்கள், பாங்குகள் முதலியவற்றிற்கு மறுநிதி வழங்குதல் இதன் முக்கிய பணியாகும். 1958 ஜூனில் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் 1964 செப்டம்பர்வரை-சுமார் ஆறேகால் ஆண்டுகள் வரை—ஒரு தனி நிறுவனமாகச் செயல் பட்டது. அதன்பின்னர் 1964ல் ஆரம்பிக்கப்பட்ட தொழில் வளர்ச்சிப் பாங்குடன் இக்கழகம் சேர்க்கப்பட்டது.

பாரத தொழில் வளர்ச்சிப் பாங்கு (Industrial Development Bank of India)

தொழில் நிதி வழங்குவதற்காகப் பல கழகங்கள் ஏற்படுத்தப் பட்ட போதிலும் நாட்டின் தொழில் வளர்ச்சித் தேவையை நிறைவேற்றுவதற்கு இவை போதுமானதாக இல்லை. பாரதத்தில் போதுமான அளவிற்கு மூலதன அங்காடி வளராமல் இருப்ப தாலும், பெரும்பாலான தொழில் நிதி அமைப்புகளின் மூலதன அடிப்படை மிகக் குறுகியதாக இருப்பதாலும் மேலும் புதிய அமைப்புகளை ஏற்படுத்த வேண்டியது அவசியமாக இருந்தது :

எனவே நாட்டின் நீண்டகாலத் தொழில் வளர்ச்சித் தேவையை நிறைவேற்றுவதற்கு மிகப் பெரிய அளவில் மூலதனத்தைக் கொண்டு பல்வேறு வகைகளில் தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கும் அமைப்பு தேவைப்பட்டது. வணிக பாங்குகளின் நடவடிக்கைகளை ஒரு முகப்படுத்துவது எந்த அளவிற்கு அவசியமாக இருக்கிறதோ அந்த அளவுக்குப் பல்வேறு தொழில் நிதி அமைப்புகளின் செயல்களையும் ஒருமுகப்படுத்த வேண்டியது அவசியம். தொழில் வளர்ச்சிக்கு மிகப் பெரிய தொழில் வளர்ச்சிப் பாங்கு ஒன்று மிகவும் இன்றியமையாதது என்று உணர்ந்தார்கள். இதை நிறைவேற்றும் அளவில் 1964 ஜுலை மாதத்தில் பாரத தொழில் வளர்ச்சிப் பாங்கு ஏற்படுத்தப்பட்டது.

நீண்டகாலக் கடன் உதவி அளிக்கும் தொழில் நிதி அமைப்புகளுக்கெல்லாம் உச்ச அமைப்பாக இது விளங்குகிறது. இதன் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ 50/—கோடியாகயுள்ளது. அவசியமானால் இதை ரூ 100/—கோடி வரை உயர்த்திக் கொள்ளலாம். 1971ல் இதன் செலுத்திய மூலதனம் ரூ 30=00 கோடியாக உள்ளது. 1971 அக்டோபரில் இதன் காப்பு நிதி ரூ 18=23 கோடியாக உள்ளது. தொழில் வளர்ச்சிப் பாங்கு அரசாங்கத்திடம் ரூ 173=09 கோடியும், ரிசர்வ் பாங்கிடம் ரூ 65=95 கோடியும் கடன் வாங்கியுள்ளது. இப்பாங்கின் மொத்த மூலதனப் பொறுப்புகள் ரூ 318=42 கோடியாகும். இத்தொகையில் அரசாங்கப் பத்திரங்களில் ரூ 5=18 கோடியும், பங்குப்பத்திரங்களில் ரூ 22=84 கோடியும், டிபெஞ்சர்களிலும் பத்திரங்களிலும் ரூ 21=56 கோடியும் முதலீடு செய்துள்ளது. (மாநில நிதிக்கழகங்களுக்கு மறுநிதி வழங்கியது உள்பட) மறுநிதி அளித்தல், கடன் கொடுத்தல், முன்பணம் கொடுத்தல் முதலிய இனங்களில் ரூ 174=77 கோடி கொடுக்கப்பட்டுள்ளது. உண்டியல்களைக் கழிவு செய்த வகையில் ரூ 69=44 கோடியும், உறுதி அளித்த வகையில் ரூ 21=97 கோடியும் உதவியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.[5]

தொழில் வளர்ச்சிப் பாங்கு பலவகையான பணிகளை ஆற்றி வரும். தொழில் துறையில் உற்பத்தி செய்தல், பதப்படுத்துதல், சுரங்கம், போக்குவரத்து, சக்தியை உற்பத்தி செய்தல், பகிர்ந்து அளித்தல் முதலிய நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்ட நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கலாம். ஆரம்பத்தில் இந்தப் பாங்கு

[5] RBI-Bulletin, December 1971. Table No 16. p. 2022. பாரதத் தொழில்வளர்ச்சிப் பாங்கு முற்றிலும் ரிசர்வ் பாங்கிற்குச் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக விளங்குகிறது.

பேரளவு தனியார் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே உதவி செய்ய விரும்புகிறது. சிறு தொழில்களுக்கு நேரிடையாக நிதி உதவி செய்வதைவிட மறுநிதி வசதிகளின் மூலம் உதவி செய்வதை விரும்புகிறது. இதைத்தவிர எந்த அளவுக்குக் கடன் உதவிசெய்யலாம் என்ற உச்சவரை யாதும் நிர்ணயிக்கப்படவில்லை. ஏனைய தொழில் நிதி அமைப்புகளைப் போல் இதற்கு எவ்விதக் கட்டுப்பாடும், தடையும் கிடையாது.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு ஆய்வுகளையும் 'சர்வே'க்களையும் மேற்கொள்ளலாம். அங்காடிகள், முதலீடுகள் பற்றிய பொருளாதார, நுட்ப ஆய்வுகளை நடத்த உதவி செய்யலாம்.

புதிதாகத் தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிக்கவும், நிருவகிக்கவும், அவற்றை விரிவுபடுத்தவும் பல்வகை நுட்ப, நிருவாக உதவிகளை அளிக்கலாம்.

பாரதத்தின் தொழில் கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகளை அகற்றக்கூடிய புதிய தொழில்களைத் திட்டமிட்ட வகையில் தோற்றுவிக்கவும், வளரச் செய்யவும் உதவலாம்.

தற்சமயம் கடனுகைக் கொடுத்த மூலதனத்தைப் பங்குப் பத்திரங்களாக மாற்றிக் கொள்ளும் உரிமை ஒருதரப்பாக நிதி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மிகப்பெரிய அளவில் மூலதனத்தைக் கடனுகை வாங்கிய நிறுவனங்களின் நிருவாகத்தில் நேரிடையாகப் பங்குகொள்ளும் உரிமை ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் தனியார் நிறுவனங்களுக்கு மட்டும் உதவி செய்தல் இந்தப் பாங்கின் முக்கிய நோக்கமாக இருந்த போதிலும், நாளடைவில் இதன் பணிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. 1966 நவம்பரிலிருந்து பொதுத்துறை நிறுவனங்களுக்கும் இதன் உதவி கிடைக்கத் தொடங்கியது. 1967 அக்டோபரில் இடைக்கால ஏற்றுமதி நாணயம் (export credit) பொதுத்துறை நிறுவனங்களுக்கு நீடிக்கப்பட்டன. 1968 டிசம்பரில் ஏற்றுமதியாளர்களுக்கு நேரிடையாக நிதி உதவி செய்யும் திட்டத்தில் தனியார் நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் என்ற பாகுபாடு அகற்றப்பட்டது. 1969 மே மாதத்திற்குப் பின்னர் பொதுத்துறை நிறுவனங்களுக்கு நேரிடையாக நிதி உதவி செய்வதற்குச் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. பொதுத்துறை நிறுவனங்கள் அரசாங்கத்தின் நிதி உதவியை எதிர்பார்க்காமல் இருக்க வேண்டும்; ஒரு முறையாவது லாப ஈவு பங்கிட்டு அளித்திருக்க வேண்டும்.

உற்பத்தி அளவைத்திறனை விரிவு படுத்தவும், ஒன்றுக்கும் அதிக மான பூர்த்தியான பொருள்களை உற்பத்தி செய்யவும் வசதி உடையதாக இருக்க வேண்டும். இறுதியாக, கடன் உதவியைக் கோரும் பொதுத்துறை நிறுவனங்கள் பாரதத் தொழில் வளர்ச்சிப் பாங்கின் முழுமையான பரிசீலனைக்கும், கண்காணிப்பிற்கும் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

தொழில் வளர்ச்சிப் பாங்குச் சட்டப்படி வளர்ச்சி உதவி நிதி (Development Assistance Fund) ஒன்று 1965 மார்ச் மீ-தில் நிறுவப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் அனுமதியுடன் சிறப்பாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதி உதவி அளித்தல் இதன் முக்கிய நோக்கம். பெரும்பாலும் இதரநிதி நிறுவனங்களால் ஏற்கப்படாத, ஏற்க முடியாததொழில்முயற்சிக்குஆதரவு அளிப்பதும் இதன் நோக்கம்: தவிர, சாதாரணமாக இத்தொழில் முயற்சிக்கு நிதி கிடைக்கும் வாய்ப்புகள் குறைவாக இருந்தாலும் வளர்ச்சி உதவி நிதி யிலிருந்து மூலதனம் கொடுக்கப்படலாம். சுமார் 4 ஆண்டுகளில், 1969 ஜுன் மாதம் முடிய, வளர்ச்சி உதவி நிதி சிறப்புத் திட்டங் களுக்காக ஒதுக்கிய தொகை ரூ 33·2 கோடியாகும். இது மூன்று முக்கிய திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டது.

நிருவாகப் பதிலாளி முறை (Managing Agency System)

இந்தியத் தொழில் வளர்ச்சியின் முக்கிய கூறாக நிருவாகப் பதிலாளி முறையைக் கூறலாம். இது 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியல் ஏற்பட்டது. பெரிய தொழில் நிறுவனங்களின் நிருவாகப் பொறுப்பைத் தொழில் முயற்சியில் முன் அனுபவம் உடைய சிலரிடம் ஒப்படைத்தார்கள். நிருவாகப் பதிலாளிகள் பெரும்பாலும் ஒரு ஏக குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களாக வும் கூட்டாளிகளாகவும், வரையிட்ட பொதுக் கம்பெனி களாகவும் இருக்கலாம். பெரிய தொழில் நிறுவனத்தை நிருவகிக்கும் பொறுப்புடன் மூலதனம் அளித்தல், புதிய நிறுவ னங்களை ஏற்படுத்துதல், தொழில் முயற்சியில் ஏற்படும் இடர்களை ஏற்றல் ஆகியவற்றைச் செய்து வந்தார்கள்.

சென்ற நூற்றாண்டில் 1833க்குப் பின் நிருவாகப் பதிலாளி முறை ஏற்பட்டது எனலாம். கிழக்கு இந்தியக் கம்பெனி ஊழியர் கள் இந்தியாவில் தனிப்பட்ட முறையல் சொத்துகளை வாங்கவும், விற்கவும், தொழில் அல்லது வாணிபத்தில் ஈடுபடவும் அனுமதிக் கப்பட்டார்கள், கூட்டுப்பங்குக் கம்பெனி நிருவாகம், வணிக பாங்குகள், பேரளவு உற்பத்தி முதலிய துறைகளில் ஓரளவு

அனுபவம் உடைய ஆங்கிலேயர்கள் கிழக்கு இந்திய கம்பெனியில் ஊழியர்களாகப் பணியாற்றும் போதே இந்தியத் துணை கண்டத்தில் மூலதனத்தைத் திரட்டிப் புதிய உற்பத்தி, வாணிப முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அதன் பின்னர் இந்த உதாரணத்தை இந்தியத் தொழில் முயலுநர்களும் பின்பற்றினார்கள். சென்ற நூற்றாண்டில் நிருவாகப் பதிலாளிகளாகச் செயல்பட்டவர்கள் அனைவரும் செல்வாக்கான நிலையில் உள்ளவர்கள். சொந்தமாகவும் தங்கள் செல்வாக்கான நிலைமையைப் பயன்படுத்தியும் பெருமளவு மூலதனத்தைத் திரட்டக்கூடியவர்கள்: முக்கியமாக மூலதன அங்காடி வளர்ச்சியுறாத காலத்தில், பொதுமக்கள் பங்கு அங்காடி, டிபெஞ்சர் அங்காடி முதலியவற்றை முழுமையாக அறியும் முன்னர் தொழில் முயற்சிக்கு வேண்டிய மூலதனத்தைத் தங்கள் சொந்தச்செல்வாக்கினால்திரட்டினார்கள். எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொழில் வளர்ச்சிக்கு நிருவாகப் பதிலாளிகள் ஆணிவேராக இருந்தார்கள் என்றால் மிகையாது. இவர்கள் மூலதனத்தைத் திரட்டித் தந்ததுடன் நிற்காமல் புதிய தொழில் முயற்சிகளிலும் துணிந்து ஈடுபட்டார்கள். சாதாரணமாக லாப நோக்கம் மட்டும் இவர்களது செயல்களுக்குக் காரணமாக இல்லை. மேலை நாடுகளில் உள்ளதைப் போன்ற பெரிய தொழில் நிறுவனங்களை இந்தியாவிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் இவர்களது செயல்களுக்கு அடிப்படையாக இருந்தது.

பாங்குகளும், வெளியீட்டகங்களும் வளர்ச்சி அடையாத ஒரு காலத்தில் புதிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு நிருவாகப் பதிலாளிகளின் உதவி மிகவும் அவசியமாக இருந்தது. புதிதாகத் தொழில் நிறுவனங்களைத் துவக்குவதுடன். அவ்வப் போது மேற்படி நிறுவனங்களுக்குத் தேவையான மூலதனத்தைத் தாங்களே கொடுத்து உதவினார்கள். பாங்குகள் கடன் கொடுப்பதற்கு மேற்படி நிருவாகப் பதிலாளிகளின் கையொப்பம் இல்லாத கடன் விண்ணப்பங்களுக்கு வணிகப்பாங்குகளும் கடன் கொடுக்க மறுத்தன. நிருவாகப் பதிலாளிகள் உற்பத்தி, நிருவாகம் ஆகியவற்றைக் கண்காணித்ததுடன், உற்பத்தியான பொருள்களை விற்கவும், கச்சாப் பொருள்களை வாங்கவும் செய்தார்கள்.

சணல், துணி ஆலைகள், சிமெண்ட், மின்சக்தி உற்பத்தியும், பகிர்வும், இரும்பு-எஃகு, நிலக்கரி, காகிதம், தீப்பெட்டி முதலிய தொழில்களில் நிருவாகப் பதிலாளி முறை அதிகம் காணப்பட்டது. இவர்களின் நடவடிக்கைகள் மேற்குவங்காளம், பம்பாய் தமிழ் நாடு முதலிய முன்னோடியான மூன்று தொழிற்பகுதிகளில் செறிந்து காணப்பட்டன:

நிருவாகப் பதிலாளி முறையை மூன்று முக்கியப் பிரிவுகளில் ஆராயவேண்டும். அவை, நிறுவனங்களைத் தோற்றுவித்தல், நிதி உதவி அளித்தல், நிருவாகம் முதலியன.

நிறுவனங்களைத் தோற்றுவித்தல்

புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் முன்னர் அதைப் பற்றி முழுமையான விவரங்களை அறிய வேண்டும். புதிய பொருள்களை உற்பத்தி செய்யவும், புதிய முறையில் உற்பத்தி செய்யவும் முன்கூட்டியே பரிசீலனை செய்யவேண்டியது அவசியம். தொழிலை எந்த இடத்தில் ஆரம்பிக்கலாம், எந்தக் கச்சாப் பொருள்களை உபயோகிக்கலாம், எந்த நுண்முறையை உபயோகிக்கலாம், எங்கே அதை விற்கமுடியும் என்பன போன்ற பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வுகாணவேண்டும். நுட்பரீதியானதும், பொருளாதார முக்கியத்துவம் உடையதுமான முடிவுகளை எடுப்பதற்கு அதிக அளவிற்கு முன்கூட்டியே செலவிடுதல் அவசியம். இங்ஙனம் புதிய தொழிலை ஆரம்பிக்கும் முன்னர்ப் பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் தொழில் வாய்ப்புகளையும், உற்பத்திப் பிரச்சினைகளையும் ஆராய்ந்த பின்னர்த்தான் தொழிலை ஆரம்பிக்கத் தீர்மானிக்கின்றனர்.

புதிய நிறுவனங்களுக்கு ஆரம்பத்தில் தேவைப்படும் இடர் ஏற்பு மூலதனத்தைத் தாங்களே பெருமளவுக்கு அளிக்கின்றனர். தங்களது சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தியும் மூலதனம் திரட்டுகின்றனர்.

நிருவாகப் பதிலாளிகள் தொழில் நிறுவனங்களை ஆரம்பிப்பதில் அக்கறை காட்டுகிறார்கள் என்றாலும் அதற்கான சன்மானத்தைப் பெறாமல் போவதில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவர்கள் ஈட்டிய சன்மானம்—சட்ட ரீதியாகவும், இதர வழிகளிலும்—முன்னோடியான தொழில் முயற்சிக்கான ஊதியத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக உள்ளது.

புதிய தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்கு நிருவாகப் பதிலாளிகள் முறையால் அதிகச் செலவு ஆகிறது. நியாயமாகச் தொழில்நிறுவனங்கள் ஈட்டவேண்டிய இலாபவிழுக்காடு இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில் தொழில்கள் யாவும் சீரான முறையில் வளரவில்லை. முக்கிய மூலதனக் கருவிகள், உற்பத்திச் சாதனங்கள் முதலியவற்றை உற்பத்திசெய்யும் தொழில்கள் ஏற்படவில்லை. பெரும்பாலும் ஏற்றுமதிப் பொருள்கள், நுகர்வுப்

பொருள்கள் ஆகியவற்றை உற்பத்திசெய்யும் தொழில்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளன. இதற்குப் பல காரணங்கள் கூறப்பட்ட போதிலும் நிருவாகப் பதிலாளி முறை மிகவும் முக்கியக் காரண மாகக் கூறப்படுகிறது. நிருவாகப் பதிலாளிகள் அனைவரும் மரபான தொழில்களில் மட்டும் ஈடுபட்டார்கள் என்று சொல்ல முடியாது. முக்கியமாக இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் மோட்டார்க் கார்த் தொழில்கள், நீராவி ரயில் இன்ஜின்கள், தொழில் இயந்திர சாதனங்கள்—முக்கியமாகத் துணி ஆலைக் கான இயந்திரங்கள், சணல் ஆலைக்கான இயந்திரங்கள் சிமென்ட் இயந்திரங்கள் முதலியன—மருந்து வகைகள் இரசாயனப் பொருள்கள் முதலியன நிருவாகப் பதிலாளிகளின் முயற்சியால் ஏற்பட்ட புதிய தொழில்கள் என்று தேசிய செய்முறைப் பொருளாதார ஆய்வுக் கவுன்சில் தனது (1959) அறிக்கையில் கூறியுள்ளது.

சுருக்கமாகத் தொழில் துறையின் வளர்ச்சிக்கு இவர்களும் ஓரளவு உழைத்திருக்கிறார்கள். தொழில் துறையில் காணப்படும் குறைகள் அனைத்திற்கும் இவர்கள் முற்றிலும் பொறுப்பு ஏற்க முடியாது.

நிதி

ஆரம்பத்தில் கூட்டுப்பங்கு நிறுவன அமைப்பைப் பெரும் பாலான மக்கள் புரிந்துகொள்ளவில்லை. இத்தகைய நிறுவனங் களைத் தோற்றுவிக்கவும், நடைமுறையில் இவற்றிற்குத் தேவை யான மூலதனத்தைக் கொடுத்து உதவிசெய்யவும் தகுந்த நிறுவனவசதிகள் ஏற்படவில்லை. பேரளவுத் தொழிலமைப்பிற்கு அவசியமான இதர நிறுவன அமைப்புகள் ஏற்படாத காரணத் தால் நிதிவசதி உடையவர்கள், ஓரளவு துணிவுடன் தொழில் முயற்சியில் ஈடுபடக்கூடியவர்களின் உதவி தேவைப்பட்டது. இந்தியாவில் பெரும்பாலான செல்வந்தர்களிடம் மூலதனம் இருந்தபோதிலும் அதைத் தொழில் முயற்சிக்கு உபயோகிக்க அவர்கள் முன்வருவதில்லை. எனவே, அவர்களுக்கு நம்பிக்கையுள்ள நிருவாகப் பதிலாளிகள் கேட்டாலன்றித் தங்களிடம் உள்ள மூலதனத்தைக் கொடுக்கமாட்டார்கள். தனி நபர்கள் ஒருபுறம் இருக்க, வணிகபாங்குகளும் நாணய உதவி செய்வதற்கு நிருவாகப் பதிலாளிகள் தனிப்பட்ட முறையில் (ஜாமீன் அல்லது) உறுதி அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தின.

பொதுமக்களிடமிருந்து பங்கு மூலதனத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு கம்பெனியும் ஒரு சிறந்த நிருவாகப் பதிலாளியின் பெயரைச் சேர்த்துக்கொண்டது. அதைத் தவிரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நடப்பு மூலதனத்தையும் நிருவாகப் பதிலாளிகளே அளித்துள்ளனர்.

நிருவாகப் பதிலாளிகள் தங்களிடம் உள்ள சொந்த மூலதனத்தைக் கொடுத்துஉதவினர்கள். பொதுமக்களால் வைப்பாக ஒப்புவிக்கப்பட்ட தொகையை ஏற்றுக்கொண்டார்கள். இதர நிறுவனங்கள், பாங்குகள் ஆகியவை கடன் கொடுக்கும்போது இந்த நிறுவனத்தின் சார்பில் உறுதி அளித்தார்கள். இவர்கள் பெரும்பாலும் ஒரு தொழிலில் உள்ள பல நிறுவனங்களின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். இதனுல் நிருவாகக் கட்டுப்பாடு தொழில்துறையில் பெருகிச் சென்றது. இதைத்தவிர ஒரு நிருவாகப் பதிலாளியின்கீழ்ப் பல கம்பெனிகள் செயல்படுமானுல், அவற்றில் ஒரு கம்பெனியின் மூலதனத்தை அதே நிருவாகப் பதிலாளியின்கீழ்ச் செயல்படும் வேருெரு கம்பெனிக்குக் கடனுகக் கொடுப்பார்கள். கம்பெனிகளுக்கு இடையே உள்ள மூலதனக் கொடுக்கல்–வாங்கல் எப்போதும் நன்மை அளிக்கும் என்று உறுதியாகக் கூறமுடியாது.

மூலதனம் கிடைப்பருமையாகவும், சேமிப்பை ஒன்றுதிரட்டும் நிறுவன அமைப்புகள் வளராமலும் உள்ள பின்தங்கிய நாடுகளில் ஒரு நிறுவனத்தின் சேமிப்பை மற்ருெரு நிறுவனத்தின் விரிவாக்கத்திற்குப் பயன்படுத்துவதால் கிடைப்பருமையான சாதனங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன என்பது உண்மைதான். ஆனுல் வணிகப் பாங்குகள், ஆயுள் ஈட்டுறுதிக் கழகங்கள், பொதுவான ஈட்டுறுதிக் கழகங்கள் முதலிய நிறுவனங்களும் நிருவாகப் பதிலாளியின் நேரிடையான அல்லது மறைமுகமான கட்டுப்பாட்டில் செயல்பட்டன. இதனுல் நன்மைகளைவிட அதிகத் தீமைகள் ஏற்பட்டன எனலாம்.

நிதிஉதவியை அடிப்படையாகக் கொண்டு நிருவாகப்பதிலாளிகள் பல வழிகளில் தங்கள் கட்டுப்பாட்டையும் செல்வாக்கையும் விரிவுபடுத்திக்கொண்டார்கள். இவர்கள் தங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் குறைந்த வட்டியில் பணம் கொடுத்து உதவினர்கள். இவர்கள் நிருவகித்த கம்பெனிகளுக்கு உதவி செய்ததைவிடக் கம்பெனியின் மூலதனத்தைத் தங்கள் நோக்கத்திற்காக அதிகம் பயன்படுத்தினர்கள். மற்ருெரு நிறுவனத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டை அடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காகக் கம்பெனியின் மூலதனத்தை உபயோகித்தார்கள். இதனுல் உரிய காலத்தில் உற்பத்திச் சாதனங்களைப் புதுப்பிக்கவோ உற்பத்திப் பொருள்களைப் பரவலாக்கவோ, உற்பத்தி அளவை விரிவுபடுத்தவோ முடியவில்லை. இவர்களது நிருவாகத்தில் உள்ள ஒரு கம்பெனிக்கு மற்ருெரு கம்பெனி கடன் கொடுத்திருக்குமானுல், அது பெரும்பாலும் திருப்பிக் கொடுக்கப்

படுவதில்லை: இவை நிரந்தரக் கடன்களாக இருந்தன. கம்பெனி யிடமிருந்து இவர்கள் பெறுகின்ற மூலதனத்திற்குக் குறைந்த வட்டியும், இவர்கள் கம்பெனிக்குக் கொடுக்கும் தொகைக்கு அதிக வட்டியும் வசூலிக்கப்பட்டன. பதிலாளிகளின் நிருவாகத்தில் உள்ள கம்பெனிகள் யாவும் அதிக அளவிற்கு இவர்களின் நிதிக் கட்டுப் பாட்டிற்கும், நிதி ஆதிக்கத்திற்கும் உட்பட்டிருந்தன். இதனால் நியாயமான பொருளாதாரத் தீர்மானங்கள் தொழில் நிறுவனத் தின் நலன்களுக்காகச் செய்யமுடியவில்லை.

நிருவாகம்

நிருவாகத்திறன் உடைய முன்னோடியான தொழில் முயலுநர் களாக நிருவாகப் பதிலாளிகள் செயல்பட்டார்கள். இவர்களது நிருவாகத்தில் பல நிறுவனங்கள் இருந்தன. இதனால் கிடையாக வும், குத்தாகவும் பல உற்பத்தி நிறுவனங்கள் இணைந்து செயல் பட்டன. தொழில் நிறுவனங்கள் ஒரே நிருவாகத்தில் இருப்பதால் தொழில் இணைப்பிற்கு ஒப்பான நலன்களை எய்தின; புறச்சிக்கன நலன்களையும், அகச்சிக்கன நலன்களையும் எய்த முடிந்தது. தொழில்வளர்ச்சிக்கு மேற்படி சிக்கன நலன்கள் ஊக்கச் சக்தியாகச் செயல்பட்டன. ஆனால், நிருவாகப்பதிலாளிகள் அனைவரும் தொழில் துறையின் துரித வளர்ச்சியைவிடத் தங்களுடைய தனிப்பட்ட இலாபத்தைப் பெருக்கிக்கொள்ளவே முற்பட்டனர். தொழில் நிறுவனங்களின் நிருவாகத்தைச் (தங்களுடைய சுயநலத்தை மேம் படுத்தும்) சாதனமாகப் பயன்படுத்தினார்கள்.

நாளடைவில் நிருவாகப் பதிலாளி உரிமைகளைப் பரம்பரையான சொத்துரிமையாகக் கருதினார்கள். தலைமுறை தலைமுறையாக ஒரு குடும்பத்தினர் நிருவாகப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதுடன் அதை அங்காடியில் விற்கக்கூடிய சொத்து உரிமையாகவும் கருதினார்கள். ஒரு கம்பெனியின் பங்குப் பத்திரங்களை வாங்கு வதைப் போலவே நிருவாகப் பதிலாளி உரிமையையும் பேரம் பேசி வாங்கினார்கள். இத்தகைய நிருவாகப் பதிலாளி உரிமை மாற்றங்கள் மேற்படி தொழில் நிறுவனத்திற்கும், அதன் பங்கு தாரர்களுக்கும் உகந்ததாக இல்லை. எனவே, 1951-ல் நிருவாக உரிமை மாற்றங்கள் செய்யப்படும் முன்னர்ப் பங்குதாரர்கள் பொதுச்சபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்றும், அதன்பின்னர் மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலையும் பெற வேண்டும் என்றும் அவசரச் சட்டத்தின்மூலம் அறிவிக்கப்பட்டது.

கம்பெனிச் சட்டத் திருத்தங்கள்

நிருவாகப் பதிலாளி முறையில் பல காலமாக நிலவிய குறை பாடுகளை அரசாங்கம் உணராமல் இல்லை. இவற்றை நீக்குவதற்கு அவ்வப்போது பல சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனால், நடை முறையில் மேற்படி சட்டங்களைச் சரிவர அமலாக்காத காரணத்

தாலும், இயற்றப்பட்ட சட்டங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாகவும் நிருவாகப் பதிலாளி முறையில் காணப்பட்ட ஊழல்களை முற்றிலும் அகற்ற முடியவில்லை.

1913 ஆம் ஆண்டின் இந்தியக் கம்பெனிச் சட்டம் 1936-ல் திருத்தப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் நிருவாகப் பதிலாளி களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதாகும். ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் இதைச் செயல்படுத்த அக்கறை எடுத்துக்கொள்ள வில்லை. அப்போது பல ஆங்கிலேயர்கள் நிருவாகப் பதிலாளிகளாக இருந்தனர். பாரதம் விடுதலை அடைந்த பின்னர் 1950-ல் கம்பெனிச் சட்டத்தைப் பரிசீலனை செய்ய ஒரு குழு நியமிக்கப் பட்டது. அந்த அறிக்கை வெளிவரும் முன்னர் 1951-ல் கம்பெனிச் சட்டம் திருத்தப்பட்டது. 1952-ல் பாபா கம்பெனிச் சட்டக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதன் அடிப்படையில் 1956-ல் கம்பெனிச் சட்டம் திருத்தப்பட்டு, ஏப்ரல் 1வ அமலுக்கு வந்தது.

நிருவாகப் பதிலாளி முறையை முற்றிலும் அகற்ற வேண்டும் என்ற எண்ணம் அப்போது மிகவும் தீவிரமாக இருந்தது. 1960-க்குப் பின்னர் இதைப்பற்றிய திட்டவட்டமான முடிவை அரசாங்கம் எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

ஒரு நிருவாகப் பதிலாளி ஒரு சமயத்தில் 10 கம்பெனிகளுக்கு மேலாக நிருவகிக்கக்கூடாது. சட்ட ரீதியாகக் கடனைக் கொடுக்க முடியவில்லை என்று அறிக்கை வெளியிட்டவர்களும், நம்பிக்கைத் துரோகம் செய்தவர்களும், தவறுகள் அல்லது, தவறான முறையில் நிருவாகம் செய்தவர்களும், சிறைத் தண்டனை எய்தியவர்களும் தொடர்ந்து நிருவாகப் பதிலாளியாக நீடிக்க முடியாது. இவர்களை நிருவாகப் பொறுப்பிலிருந்து அகற்றுவதற்கு மேற்படி கம்பெனி யின் பங்குதாரர்கள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும்.

நிருவாகப் பதிலாளி என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாகச் செயலர் மற்றும் பொருளாளர் என்ற பதவியை ஏற்படுத்தி அப் பதவியை இவர்கள் ஏற்கலாம் என்று கம்பெனி (1956) திருத்தச் சட்டம் கூறியது. இவர்கள் சன்மான விகிதங்கள் பின்வருமாறு: நிருவாகப் பதிலாளிகள் நிகர இலாபத்தில் 10%-ம், செயலர், பொருளாளர்கள் 7%-ம், மேலாளர்கள் 5%-ம் பெறலாம்.

நிருவாகப் பதிலாளிகள் கடைப்பிடித்த பல முறைகேடான பழக்கங்கள் தடைசெய்யப்பட்டன. 1956 சட்டத்தில் கூறிய பல தடைகளும், கட்டுப்பாடுகளும் 1936-லும் கூறப்பட்டன. ஆனால், 1956 சட்டம் தீவிரமாக அமலாக்கப்பட்டது. தவறு இழைத்த நிருவாகப் பதிலாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

1960-ல் கம்பெனிச் சட்டம் மீண்டும் திருத்தப்பட்டது. ஒரு கம்பெனியின் நிருவாகப் பதிலாளியாக இருந்தவர்கள் அந்தப் பதவியைத் துறந்து, அதே கம்பெனியின் நிருவாக இயக்குநர்களாக மாறினார்கள். அவர்கள் கம்பெனியின் சார்பில் பொருள்களை வாங்கவும், விற்கவும் 'ஏஜென்டு'களை (பதிலாளிகளை)—தங்களுக்கு வேண்டியவர்களை—நியமித்துக்கொண்டார்கள். இதை 1960 சட்டம் தடைசெய்கிறது. அவ்வாறு நியமிக்கும் முன்னர் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

ஒரே நிருவாகப் பதிலாளியின்கீழுள்ள கம்பெனிகள் தங்களுக்குள் மூலதனத்தை இடம்பெயர்த்துதல், கடன் கொடுத்தல், பெறுதல் முதலியன தடை செய்யப்பட்டன. முக்கியமாக ஒரு கம்பெனியின் பங்குகளை மற்றக் கம்பெனி வாங்குதல், ஓரிடத்தில் பங்குகளை முடக்குதல் முதலியன தவிர்க்கப் பட்டன.

ஒரு கம்பெனியின் நிருவாகப் பதிலாளி தான் நிருவகிக்கும் கம்பெனியுடன் தனிப்பட்ட முறையில் எவ்வித ஒப்பந்தமும் செய்துகொள்ளக்கூடாது. அங்ஙனம் செய்து கொண்டால் அதை அக் கம்பெனியின் பங்குதாரர் சபையில் வெளியிட்டு அங்கீகாரத்தைப் பெறவேண்டும். மத்திய அரசாங்கமும் இதற்கு ஒப்புதல் அளிக்கவேண்டும். அதன்பின்னரே அது சட்ட ரீதியாகச் செல்லுபடியாகும். நிருவாகப் பதிலாளிகளின் வருமானம், சன்மானம் இவை திட்டவட்டமாகக் கூறப்பட்டன.

நிருவாகப்பதிலாளிமுறை காரணமாகப் பாரதத்தில் செல்வ வருமானக்குவிப்பும், தொழில் துறையில் சர்வாதீனக் கட்டுப்பாடும், ஆதிக்கமும் ஏற்பட்டுள்ளன என்று மகல நோபிஸ் கமிட்டியும், ஹஸாரி கமிட்டியும் அறிவித்துள்ளன. எனவே, ஏற்றத்தாழ்வு இல்லாத சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்தவும், தொழில் துறையில் ஆதிக்கக் குவிப்பைத் தடுக்கவும் வேண்டுமானால் நிருவாகப் பதிலாளி முறையை அகற்ற வேண்டியது அவசியம்.

நிருவாகப் பதிலாளி முறை வரலாற்று முக்கியத்துவம் உடைய ஓர் அமைப்பு முறையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் இம் முறை ஏற்பட்டது. போக்குவரத்துச் சாதனங்கள், செய்தித் தொடர்புகள் ஏற்படாத ஒருகாலத்தில் பண அங்காடி அல்லது மூலதன அங்காடி உருவாகாத ஒரு நேரத்தில் பேரளவுத் தொழில்களை நிறுவ நிருவாகப் பதிலாளி முறை கட்டாயமாகத் தேவைப்பட்டது. இந்தியத் துணைக்கண்டத்தின் ஆரம்ப கால வளர்ச்சிக்கு இந்த

முறை பெரிதும் உதவியாக இருந்தது என்பதை யாரும் மறுக்க வில்லை. ஆனால், சென்ற நூற்றாண்டில் காணப்பட்ட சூழ்நிலை இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து காணப்படவில்லை. இற்றை நாள் மேலை நாடுகளில் உள்ளதைப் போன்ற மூலதன அங்காடி பாரதத்தில் வளரவில்லை என்றாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்ததைவிடப் பன்மடங்கு வளர்ந்து இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

அதைத் தவிர ஒரு காலத்தில் தொழில் வளர்ச்சிக்கு அவசிய மாக இருந்த அமைப்பு இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தவில்லை என்று நினைக்கும்போது அதை அகற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. இன்றையதினம் நிருவாகப் பதிலாளிகள் இல்லாமல் ஒரு கம்பெனியை ஆரம்பிக்க முடியும்; தேவையான மூலதனத்தைத் திரட்டுவதற்கு நிருவாகப் பதிலாளிகள் அல்லது அவர்களின் கையொப்பம் தேவையில்லை.

நிருவாகப் பதிலாளி அமைப்புத் தொடர்ந்து நீடிக்க வேண்டுமா என்றும், எந்தெந்தத் துறைகளில் அதை நீடிக்கச் செய்யலாம் என்றும் தீர்மானிக்க வேண்டியிருந்தது. 1965-ல் டாக்டர் ஐ.ஜி.பட்டேல் அவர்கள் தலைமையில் நிருவாகப் பதிலாளி ஆய்வுக் கமிட்டி ஒன்று நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்டது. இக் கமிட்டியின் அறிக்கை 1966-ல் சமர்ப்பிக்கப்பட்டது. நிருவாகப் பதிலாளி முறையைச் சர்க்கரை, துணி ஆலைகள், சிமெண்ட் முதலிய தொழில்களிலிருந்து உடனடியாக அகற்ற வேண்டும் என்று இக் கமிட்டி பரிந்துரைத்தது. நீண்டகால அளவில் நிருவாகப்பதிலாளி முறையை நீக்கலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளது. இருந்த போதிலும் உடனடியாக அனைத்துத் துறைகளிலிருந்தும் அகற்றப் படுவதால் சில பாதக விளைவுகள் ஏற்படும் என்றும் இக் கமிட்டி கூறியது.

1966 செப்டம்பரில் அரசாங்கம் தனது தீர்மானத்தை வெளி யிட்டது. துணி ஆலைகள், சணல் ஆலைகள், சிமெண்ட், சர்க்கரை, காகிதம் முதலிய தொழில்களில் புதிதாக நிருவாகப் பதிலாளிகளை நியமிக்கவோ, நிருவாகப் பதிலாளிகளாக உள்ளவர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்கவோ (1967 ஏப்ரல் மீ 2உ-க்குப் பின்னர்) மறுத்துவிட்டது. எக் காரணத்தைக் கொண்டும் மேலே கூறிய தொழில்களில் 1970 ஏப்ரல் 12-க்குப் பின்னர் நிருவாகப் பதிலாளி முறை நீடிக்க அரசாங்கம் அனுமதிக்காது என்று திட்ட வட்டமாகக் கூறியது.

1968-ல் பாரதக் கம்பெனிச் சட்டம் மீண்டும் திருத்தப்பட்டது. நிருவாகப் பதிலாளி முறை 1970 ஏப்ரலுக்குப் பின் முழுமையாக அகற்றப்படும் என்றும், அதேசமயம் செயலர்-பொருளாளர் பதவியும் அகற்றப்படும் என்றும் மேற்படி சட்டம் அறிவித்தது. இவ்வாறு சென்ற நூற்றுண்டின் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத் தூண்டுகோலாக இருந்த ஓர் அமைப்பு இந்த நூற்றுண்டின் விரைவான தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த காரணத்தால் அதை அகற்றியுள்ளோம். அவ்வப்போது வளர்ச்சி நிலைமைக்கு ஏற்ப, நாட்டிற்கு உதவக்கூடிய புதிய அமைப்புகளையும், நிறுவனங்களையும் ஒருபுறம் தோற்றுவிக்கவும், மற்றொருபுறம் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் சுரண்டல் தன்மை உள்ள அமைப்புகளை அகற்றவும் வேண்டியது அவசியம். இங்ஙனம் நிறுவன அமைப்பு மாற்றங்கள் வளர்ச்சிக்கு வழிகோலுவதுடன், வளர்ச்சியின் பிரதிபலிப்பாகவும் உள்ளன.

18. பஞ்சாலைத் தொழில்

இந்த நாட்டில் பஞ்சாலைகள் ஆரம்பித்து 120 ஆண்டுகள் (1971-ல்) ஆகின்றன. இது மிகப்பெரிய தொழில்களில் ஒன்ருகவும், மிகப் பழைமையான தொழிலாகவும் இருக்கின்றது. இதன் மொத்தச் சொத்துகள் சுமார் ரூ. 900/- கோடிக்கும் அதிகமானவை; செலுத்திய மூலதனம் ரூ. 165/- கோடியாகும்; நமது நாட்டில் மொத்தம் 647 பஞ்சாலைகள் உள்ளன. இவற்றின் மொத்தக் கதிர்கள் 17 மில்லியன் ஆகவும், தறிகள் 2 இலட்சம் ஆகவும் உள்ளன. இந்த ஆலைகளில் நெய்யப்பட்ட துணியின் மதிப்பு (ஆண்டு ஒன்றுக்கு) ரூ. 520/- கோடியாகவும், நூற்கப்படும் நூல்களின் மதிப்பு ரூ. 260/- கோடியாகவும் உள்ளன. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 418/- கோடி மதிப்புள்ள பஞ்சு தேவைப்படுகிறது; ரூ. 200/- கோடி கூலியாகப் பட்டுவாடா செய்யப்படுகிறது. இத் தொழிலில் 9·7 இலட்சம் தொழிலாளர்கள் வேலைசெய்கிருர்கள்[1]; பாரதம் முழுவதிலும் உள்ள ஆலைத் தொழில்களில் மொத்தம் 4·6 மில்லியன் தொழிலாளர்கள் வேலை செய்கிருர்கள். எனவே, மொத்த ஆலைத் தொழிலாளர்களில் சுமார் 20% தொழிலாளர்கள் பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள். இது பாரதத்தில் உள்ள மிகப்பெரிய தொழில்களில் ஒன்ருக இருப்பதுடன், உலக அங்காடிக்குத் துணி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஜப்பானுக்கு அடுத்தாற்போல இரண்டாவது முக்கிய நாடாகவும் பாரதம் விளங்குகிறது.[2]

முதலாவது பஞ்சாலை பம்பாயில் 1851-ல் ஆரம்பிக்கப் பட்டது. முழுக்க முழுக்க இந்தியர்களின் தொழில் முயற்சியாலும், மூலதனத்தாலும் வளர்ந்துள்ளது. அரசாங்கம் 1927

[1]Ruddar Dutt and K. P. M. Sundharam—'INDIAN ECONOMY' 6th Edition, p. 512-Pubilshed by Niraj Prakashan, New Delhi. பஞ்சாலைத் தொழிலில் சுமார் '10' இலட்சம் பேர் வேலை செய்கின்றனர். சராசரியாக ஐந்து ஆலைத் தொழிலாளர்களில் ஒருவர் பஞ்சாலைகளில் வேலை செய்கிருர். பார்க்க. Economic Times, 15-9-'71.

[2]Ruddar Dutt and K. P. M. Sundharam, *ibid*, p. 512.

வரை எவ்விதத்திலும் உதவிசெய்யவில்லை. ஆரம்பம் முதல் இத் தொழில் இந்தியர்களால் நிருவகிக்கப்பட்டு வந்துள்ளது. 19 ஆவது நூற்றுண்டின் பிற்பகுதியில் இத் தொழில் பம்பாய் அகமதாபாத் பகுதிகளில் அதிகம் செறிந்து காணப்பட்டது. அதைத் தவிரக் கான்பூர், தமிழ்நாடு, வங்காளம் முதலிய இடங்களிலும் வளர்ச்சியுற்று இருந்தது. பின்னர் நாளடைவில் மத்திய இந்தியாவிலும் வளர்ச்சியுற்றது. இருபதாவது நூற்றுண்டில் இத் தொழில் வளர்ந்துள்ள இடங்களைப் பின்வரும் அட்டவணை விளக்கிக் கூறும் (அட்டவணை–18–1)

இடச்செறிவு

இத் தொழில் நாளடைவில் பெருகியிருப்பதை மேலே கூறிய அட்டவணை விளக்குகிறது. முதல் உலகப் போருக்கு முன்பு பஞ்சாலைகள் பம்பாயிலும், அகமதாபாத்திலும் செறிந்து காணப்பட்டன. 1911-ல் மொத்தப் பஞ்சாலைகளில் 33%-மும், மொத்தக் கதிர்களில் 45%-மும், தறிகளில் 42%-மும், தொழிலாளர்களில் 45%–மும் பம்பாய் மாநகரில் மட்டும் செறிந்து காணப்பட்டன. அகமதாபாத்தில் 19% பஞ்சாலைகளும், 14·5% கதிர்களும், 16% தறிகளும், 13·6% தொழிலாளர்களும் இருந்தனர்.[3]

பம்பாய், அகமதாபாத் ஆகிய நகரங்கள் தவிரப் பம்பாய் மாநிலத்தில் ஷோலாப்பூரிலும், பரோடாவிலும், உத்தரப் பிரதேசத்தில் கான்பூரிலும், தமிழ்நாட்டில் கோயம்புத்தூரிலும் மதுரையிலும், வங்காளத்தில் ஹௌரா இருபத்துநான்கு பர்கானு மாவட்டங்களிலும் பஞ்சாலைத் தொழில் வளர்ச்சியுற்றிருந்தது.

பஞ்சாலைகள் பம்பாயிலும், அகமதாபாத்திலும் செறிந்து காணப்படுவதற்கான காரணங்களை இங்கே காண்போம். பஞ்சாலைத் தொழிலை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக இருந்த போதிலும்—அதாவது இந்தியாவிலே கச்சாப் பொருள்களும், தேவையான அளவிற்குத் தொழிலாளர்களும், உற்பத்தி செய்த பொருளை உளநாட்டிலேயே விற்பதற்குப் பரந்த அங்காடியும் இருந்தும் சென்ற நூற்றுண்டில் ஆங்கிலேய வியாபாரிகளும், தொழில் முயலுநர்களும் பஞ்சாலைத் தொழிலை இந்தியாவில் ஆரம்பிக்கத் தயங்கினர். இந்தியப் பஞ்சாலைகள் லங்காஷயரில் உள்ள ஆலைகளுடன்

[3]Fukazawa-Cotton Mill Industry-Printed in the Economic History of India-1857-1956. chap. 10. Ed. by V.B. Singth-Allied Pub lishers-1965.

போட்டியிடக்கூடும் என்று அஞ்சியதால் இந்தியாவில் பஞ்சாலைகளை ஏற்படுத்த முன்வரவில்லை. ஆகையால்தான் பிரிட்டிஷார் உதவியில்லாமல் இந்தியர்களே இதை ஆரம்பிக்க வேண்டியிருந்தது. அடுத்து, பஞ்சாலைத் தொழிலை ஆரம்பிப்பதற்கு அதிக மூலதனமும், தொழில் துணிவும் வேண்டும். இந்தியாவில் அதிக அளவு தொழில் துணிவுள்ள குடும்பங்கள்—சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில்—பம்பாய் மாநகரில் இருந்தன. இவர்கள் நெடுங் காலமாக வெளிநாட்டு வாணிகத்தில் ஈடுபட்டு அதிக அளவு இலாபம் திரட்டியுள்ளார்கள். எனவே, இவர்களிடம் தொழில் துணிவுடன் போதிய அளவு மூலதனமும் காணப்பட்டன.

தொழிலின் எழுச்சி

பம்பாய் நகரின் முக்கியத்துவம் 17 ஆவது நூற்றாண்டின் இறுதியிலிருந்தே வாணிகம் காரணமாக அதிகரித்துச் சென்றது. வாணிகத்தில் ஈடுபட்ட பலமுக்கியக் குடும்பத்தினர், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து பம்பாயில் குடியேறினர். பொதுவாக இடம் பெயர்ந்துள்ளதாலும், வாணிபத்தில் ஈடுபட்டிருந்ததாலும் இவர்கள் தொழில்துணிவு மிக்கவர்களாக இருந்தார்கள். இவர்களில் பார்ஸிகள், பாத்தியாக்கள், கோஜாக்கள், குஜராத்தியர்கள், யூதர்கள் முதலியோர் முக்கியமானவர்கள். 1820—1880 ஆண்டுகளில் பம்பாயிலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் அபினும், பஞ்சும் முக்கியமானவை. (இவை ஏற்றுமதியாகும் பொருள்களில் 70% முதல் 90% வரை இருந்தன.) ஏற்றுமதி வாணிகம் பெரும்பாலும் சீனாவுடன் நடைபெற்றது. இங்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களில் துணியும் நூலும் முக்கியமானவை. (இவை இறக்குமதியில் 40% முதல் 60% வரை இருந்தன.) இறக்குமதி வாணிகம் பெரும்பாலும் பிரிட்டனுடன் நடைபெற்றது. இக் காலத்தில் இறக்குமதி 10 மடங்கும், ஏற்றுமதி 14 மடங்கும் உயர்ந்துள்ளன. நிகர ஏற்றுமதி உபரி காரணமாகப் பம்பாயில் வர்த்தக மூலதனம் குவிந்துகிடந்தது. இதைத் தவிர 1861–65 ஆண்டுகளில் அமெரிக்க உள்நாட்டுப் போரினால் பிரிட்டனில் பஞ்சு கிடைப்பருமையாகி விட்டது. பஞ்சு ஏற்றுமதி செய்யும் பம்பாய் வணிகர்கள் இக் காலத்தில் ரூ. 70 முதல் ரூ. 75 கோடி வரை கூடுதலாக ஆதாயம் அடைந்தார்கள்.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் பம்பாயின் பூரிப்பான வளர்ச்சிக்குப் பார்ஸிகள் (பிரிட்டிஷாரைத் தவிர) முக்கியமானவர்கள். 1851-ல் முதன்முதலில் பம்பாயில் ஆரம்பிக்கப்பட்ட 'பம்பாய் நூற்பு, நெசவுக் கம்பெனி'யை ஆரம்பித்தவர் பார்ஸி வகுப்பைச் சேர்ந்த கோவாஸ்ஜி நானாபாய் தாவர் ஆவார்.

அட்டவணை—18·1

பஞ்சாலைகளின் வளர்ச்சியும், இட அமைப்பும்

இடங்கள்	ஆலைகள் எண்ணிக்கை			கதிர்கள் '000'			தறிகள் '000'			தொழிலாளர்கள் ஒரு 'ஷிப்டு'கள் '000'		
	1911	1941	1954	1911	1941	1954	1911	1941	1954	1911	1941	1954
பம்பாய் நகரம்	87	65	65	2890·6	2789·1	2975·1	42·5	65·5	65·7	104·5	115·0	112·9
அகமதாபாத்	50	75	74	934·2	1783·0	2067·2	15·9	43·5	42·6	31·3	75·5	73·1
பம்பாய் மாநிலத்தின் பிற பகுதிகள்	45	62	72	696·2	1248·9	1451·8	25·0	26·1	27·7	24·1	62·3	55·8
மொத்தம்	182	202	211	4521·0	5821·0	6494·1	83·4	135·1	136·0	159·9	252·8	241·8
ராஜஸ்தான்	3	7	12	34·2	98·4	166·7	1·1	2·3	3·9	2·2	5·7	17·9
பேரார்	3	4	11	38·5	69·0	372·1	0·8	1·5	7·3	1·6	4·1	17·7
மத்திய மாநிலம்	7	7	—	189·3	302·8	—	3·3	5·3	—	11·0	18·6	—
பீகார்+ஒரிஸ்ஸா	9	2	3	—	25·0	75·5	—	0·7	1·6	—	1·2	2·7

ஹைதராபாத்	3	6	7	59·5	120·5	158·1	0·8	2·4	3·2	2·6	7·9	8·2
மத்திய பாரதம்	4	16	18	64·0	348·6	449·9	1·3	10·9	11·3	3·2	27·0	22·1
வங்காளம்	13	33	40	433·7	458·8	494·1	2·0	10·6	10·6	10·2	25·9	22·5
பஞ்சாப்	12	7	11	133·9	105·2	214·3	0·7	2·6	5·5	2·7	5·3	6·7
டில்லி	—	6	—	113·0	—	—	—	3·1	—	—	6·4	—
உத்தரப்பிரதேசம்	14	26	29	396·3	749·6	670·7	3·8	12·3	13·3	12·2	29·9	26·9
சென்னை மாநிலம்	12	63	94	362·6	1451·7	2109·7	2·2	6·9	9·3	18·3	55·7	59·2
திருவாங்கூர்	1	1	10	25·6	11·7	134·8	—	0·3	0·7	0·7	1·0	3·6
மைசூர்	2	8	11	28·4	162·1	231·4	0·2	2·8	3·5	1·2	9·2	12·4
பாண்டிச்சேரி	5	3	3	70·7	87·7	86·1	1·6	2·1	2·0	4·8	4·9	4·1
கான்பூர்	5	11	12	350·0	—	534·8	3·5	—	10·9	11·0	—	20·4
மொத்தம்	261	390	460	6,407·7	10,025·1	11,691.5	101·2	198·9	208·0	230·3	454·8	435·8

ஆதாரம் : H. Fukazawa Cotton Mill Industry-ibid p. 224, 225, 226 :

இந்த ஆலை 1854-ல் உற்பத்திசெய்யத் தொடங்கியது. உற்பத்தி ஆரம்பித்தமுதலாவது ஆண்டில் 20% இலாப ஈவு வழங்கப்பட்டது. இந்தத் தொழில் வெற்றியைத் தொடர்ந்து 1857-ல் பம்பாயில் இரண்டாவது பஞ்சாலை ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு ஆலை ஆரம்ப வெற்றி மேலும் பல தொழில் முயற்சியை ஊக்குவித்தது. பம்பாயில் வர்த்தக மூலதனம் குவிந்து உள்ள காரணத்தாலும், தொடக்கத்திலேயே பஞ்சாலைகள் வெற்றிகரமாகச் செயல்பட்டதாலும் மேலும் பல வகுப்பினர்களும், வர்த்தகக் கம்பெனிகளும், பஞ்சாலைகளை ஆரம்பிக்க முன்வந்தன. 1851–லிருந்து 1915 வரை 73 வர்த்தக நிறுவனங்கள் பம்பாயில் மட்டும் 96 பஞ்சாலைகளை ஆரம்பித்துள்ளன. இந்த ஆலைகளின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 7·66 கோடியாகும். இவற்றில் 30 இலட்சம் கதிர்களும், 51,900 தறிகளும், 1·12 இலட்சம் தொழிலாளர்களும் ஈடுபட்டிருந்தார்கள்.

1880-க்குப் பின்னர் பம்பாய் நூலுக்குச் சீன அங்காடியில் தேவை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து பல நூற்பு ஆலைகள் தோன்றின.

பம்பாயை அடுத்து அகமதாபாத்தில் பஞ்சாலைத் தொழில் முக்கியமாகச் செறிந்து காணப்பட்டது. இந்த நகரம் 15ஆவது நூற்றாண்டிலிருந்து அரசியல் பொருளாதார முக்கியத்துவம் பெற்று விளங்கியது. இங்குள்ள குஜராத்திய பனியாக்கள், சமணர்கள் (ஜெயின்–Jain) முதலியோர் வாணிகத்திலும் லேவாதேவித் தொழிலிலும் பிரசித்திபெற்று விளங்கினர்கள் இவர்கள் பரம்பரையான தொழில்களில் ஈடுபட்டு வந்தார்கள் ஆயினும், பம்பாய் வணிகர்களைப் போன்ற தொழில் துணிவு இல்லாதவர்கள். மரபு அடிப்படையில் ஊறிப்போன காரணத்தால், செல்வம் இருந்தும் புதிய ஆலைத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்யவில்லை. அகமதாபாத்தில் (1859) திரு. ரான்சோத்லால் சோட்டாலால் என்ற பிராமணரால் முதல் பஞ்சாலை ஏற்படுத்தப்பட்டது. இவர் 1877-ல் மேலும் ஒரு பஞ்சாலையை நிறுவினர். இவர் ஆரம்பத்தில் ஓரிலட்சம் ரூபாய் மூலதனத்தைத் திரட்டுவதற்கு அதிகம் சிரமப்பட்டார். 1865-ல் 'கான்பி' நிலக்கிழாரான சேத் பேச்சார்தாஸ் அம்பாவிதாஸ் என்பவரால் இந் நகரில் இரண்டாவது பஞ்சாலை தோற்றுவிக்கப்பட்டது. இந்த மூன்று ஆலைகளும் இலாபகரமாகச் செயல்பட்டன. மிகவும் பிற்போக்கான குஜராத்திய பனியாக்களும் கண்கூடாகப் புதிய தொழில் முயற்சிகள் வெற்றி அடைவதையும், அவை இலாபகரமாகச் செயல்படுவதையும் கண்டு, தங்களுடைய

மூலதனத்தை இத் தொழிலின் வளர்ச்சிக்கு ஈடுபடுத்த முன் வந்தனர். 1880-லிருந்து 1914வரை மொத்தம் 50 ஆலைகள் நிறுவப்பட்டன. இவற்றில் 9·86இலட்சம் கதிர்களும், 20,000 தறிகளும் இயங்கிவந்தன, இந்த 50 ஆலைகளையும் ஆரம்பிப்பதற்கு 38 குடும்பத்தினர் காரணமாக இருந்தார்கள். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் லேவாதேவித் தொழிலில் ஈடுபட்டவர்கள். அகமதாபாத் நெசவுத்தொழில் வளர்ச்சிக்கு 'ஷெராப்பு'கள்(Shroff) முக்கியக் காரணமாக இருந்தார்கள். இவர்கள் ஆலையைத் தோற்றுவிக்கவும், அதை நிருவகிக்கவும், அவற்றின் வளர்ச்சிக்குப் பொறுப்பு ஏற்றுள்ளார்கள். இவர்கள் பங்குதாரர்களாகவும், முதலீடு செய்பவர்களாகவும், கடன் கொடுப்பவர்களாகவும் பெரும் அளவு மூலதனம் கொடுத்து உதவி இருக்கிறார்கள். இவ்வாறு அகமதாபாத் பஞ்சாலைகள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் ஷெராப்புகளின் உதவியால் வேரூன்றிநின்றன.

இந்தியத் தொழில் முயல்வோர்களால் பம்பாயிலும், அகமதாபாத்திலும் பஞ்சாலைகள் நிறுவப்பட்டுவரும் இக் காலத்தில் பிரிட்டிஷ் வணிகர்களும் கான்பூர் சென்னை ஆகிய இடங்களில் பஞ்சாலைகளை ஆரம்பித்தார்கள். பிரிட்டிஷாரால் ஆரம்பிக்கப்பட்ட ஆலைகள் மிகச் சிலவாக இருந்தபோதிலும், அப் பகுதிகளில் தொழில் முயற்சி ஏற்படக் காரணமாக இருந்தன.

பஞ்சாலைத் தொழிலும் நிருவாகப் பதிலாளி அமைப்பும்

இந்தியத் தொழில் முயற்சியின் சிறப்புக் கூறாக நிருவாகப் பதிலாளி அமைப்பு முறை உள்ளது.[4] ஒரு நிருவாகப் பதிலாளி அமைப்பு இதைப்போன்று பல ஆலைகள் அல்லது கம்பெனிகளை நிருவகித்துவந்தது. ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத பல வகைத் தொழில்களும், நிறுவனங்களும் நிருவாகப் பதிலாளி அமைப்பால் நிருவகிக்கப்பட்டன. இவர்கள் நீண்ட கால நிருவாக உரிமையை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொண்டார்கள். கான்பூரில் உள்ள நிருவாகப் பதிலாளிக்குக் குறைந்தது 20 முதல் 40 ஆண்டுகள் வரை நிருவாக உரிமை கொடுக்கப்பட்டது ; அகமதாபாத்தில் இது 99 ஆண்டுகளாக இருந்தது. நிரந்தர நிருவாக உரிமை கொடுப்பதால் ஒரு கம்பெனியை முன்னுக்குக் கொண்டுவர முடியும். ஒப்பந்த காலம் முடியும் முன்னர் நிருவாகப் பதிலாளியைக் கட்டாயமாக அகற்ற வேண்டுமானால், அல்லது மேற்படி கம்பெனியை மூடவேண்டுமானால் இவர்களுக்குத் தகுந்த ஈட்டுத் தொகை கொடுக்கவேண்டியது அவசியம்.

[4] 17·8 முதல் 17·12 வரை உள்ள பகுதிகள் பார்க்க.

நிருவாகப் பதிலாளி முறை வர்த்தகப் பிணைப்பின்மூலம் தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது. மூலதன அங்காடி, பங்கு அங்காடி முதலியன வளராத ஒரு நாட்டில் இந்த முறை மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இவ்வாறு புதிய பேரளவுத் தொழில்கள் ஏற்படவும், தொழில் முயற்சிகளை வெற்றிகரமாகச் செயல்படுத்தவும் இது உதவியுள்ளது. அதேசமயம் தொழில் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணர்களை உருவாக்கும் வாய்ப்புகளை இந்த முறை தடை செய்துள்ளது.

நிருவாகப் பதிலாளி அமைப்பில் இரட்டை நலன்கள் உள்ளன. ஒன்று நிருவகிக்கப்படும் கம்பெனி, மற்றொன்று நிருவாகப் பதிலாளி நிறுவனம். நிருவாகப் பதிலாளி தம்முடைய நிறுவனம், தாம் நிருவகிக்கும் கம்பெனி ஆகிய இரு அமைப்புகளின் நலன்களையும் கருத்தில் கொள்ளவேண்டும். பெரும்பாலும் இவை ஒன்றோடு ஒன்று போட்டியிடுவதாக இருக்கின்றன. நிர்வாகப் பதிலாளி தாம் நிருவகிக்கும் கம்பெனியின் நலன்களைவிடத் தம்முடயை நிருவாகப்பதிலாளி நிறுவனத்தின் நலன்களை மேம் படுத்துவதற்காக அதிகம் பாடுபடுகிறார்.

பெரும்பாலான நிருவாகப் பதிலாளிகள் லேவாதேவிக்காரர் கள், அல்லது பணமூட்டைகள். இவர்களுக்குத் தொழில் முயற்சி, தொழில் நிருவாகம், அல்லது நிருவாகத் திறன் போன்ற அரிய ஆற்றல்கள் ஏதுமில்லை. நிருவாகப் பதிலாளி உரிமை பாரம்பரிய மாக வருகின்ற காரணத்தால் இவர்கள் ஒரு கம்பெனியின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுள்ளார்கள். இவர்களுக்குத் தொழில் முயற்சியை விட வியாபாரம், லேவாதேவி முதலியன முக்கியமாக இருக்கின்றன. எனவே, நிருவகிக்கப்படும் கம்பெனியின் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

ஒரு பஞ்சாலையின் வெற்றியோ, தோல்வியோ, தொழில்நுட்பப் பொருளாதாரக் காரணங்களைச் சார்ந்திராமல், அதை நிருவகிக்கும் பொறுப்பை ஏற்ற நிருவாகப் பதிலாளிகளின் தனிப் பட்ட ஆற்றல்களையும், குணநலன்களையும் சார்ந்து இருந்தன. இதனால் இருவகையான விளைவுகள் தோன்றின. ஒன்று, நிருவாகப் பதிலாளிகள் அடிக்கடி மாற்றப்பட்டனர். இதனால் பஞ்சாலையின் வளர்ச்சியில் நிலையற்ற தன்மை தோன்றியது. இரண்டாவது, மிகவும் திறமைஉடைய நிருவாகப் பதிலாளிகள் பல கம்பெனிகள், பல பஞ்சாலைகளை நிருவகித்தார்கள். இதன் விளைவாகப் பெரும்பாலான பம்பாய், அகமதாபாத், பஞ்சாலைகளை ஒருசில குடும்பங்கள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் கட்டுப் படுத்தின. தொழில் துறையில் சிறு குழு ஆதிக்கம் (Oligarchy) ஏற்பட்டது.

பஞ்சாலைத் தொழிலாளர்கள்

பஞ்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்கள் பெரும்பாலும் கிராமத்தில் விவசாயிகளாகவும், சாகுபடியாளர்களாகவும் இருந்தவர்கள். ஆரம்பத்தில் பஞ்சாலைகளில் பல்வேறு இனத்தை நச் சேர்ந்த தொழிலாளர்களும் வேலை செய்தார்கள். அப்போது பஞ்சாலைகளின் மேலாளர்களாகவும், பொறியியல் வல்லுநர்களாகவும் பெரும்பாலும் ஐரோப்பியர்கள் வேலை செய்தார்கள். இவ்வாறு நிருவாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே பெருமளவு மொழி, கலாசார வேறுபாடு இருந்ததால் இடைநிலை மட்டத்தில் 'ஜாபர்', அல்லது 'முக்காடம்' என்பவர்கள் தேவைப் பட்டார்கள். இவர்கள் தொழிலாளர்களுக்கும் நிருவாகிகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்தார்கள்.

கிராமத்திலிருந்து வந்த தொழிலாளர்கள் பஞ்சாலைகளில் நிலைத்து வேலை செய்வதில்லை. இவர்கள் தாற்காலிகமாக வேலை செய்ய விரும்பினார்கள். அடிக்கடி தொழிலாளர்கள் மாறிக் கொண்டே இருந்தமையால், ஒரு பஞ்சாலைக்குத் தேவையான தொழிலாளர்களைத் தேடிக்கொண்டு வரவும், அவர்களுக்கு வேலை கற்பிக்கவும், அவர்களிடம் வேலை வாங்கவும் 'முக்காடம்' தேவைப் பட்டார்கள்.

ஆலைத் தொழிலாளர்களின் கிராமியத் தொடர்பு காரணமாக இவர்கள் சாந்தமாக நடந்து கொண்டார்கள். தொழிலாளர்கள் இயககத்தில் ஈடுபடவில்லை; குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்யத் தயாராக இருந்தார்கள். தொழிலாளர்கள் எப்போதும் கிடைத்துக் கொண்டேயிருந்தார்கள்; இதனுல் தொழில் வளர்சசி தடையின்றி ஏற்பட முடிந்தது.

தொழிலாளர்கள் தங்கள் சொந்தக் கிராமத்திற்குத் திரும்பிச் செல்ல விரும்பிய காரணத்தால் தமக்கு ஒரு தொழிற்சங்கம் அமைக்கவும, தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் நாட்டம் கொள்ளவில்லை. இவர்கள் தொழிற்சங்க அமைப்பின் நன்மைகளை உணரவில்லை; தங்கள் செல்வாக்குத் திறனை அதிகரிக்கவும் முயலவில்லை.

இந்தியத் தொழிலாளர்கள் பிழைப்பு மட்ட ஊதியத்தைப் பெற்று வந்தார்கள். இதனுல் பஞ்சாலைத் தொழிலில் ஆக்கச் செலவு மிகவும் குறைவாக இருந்தது. 1906–ல் பம்பாயில் உள்ளதைவிட லங்காஷயர் நூற்பு ஆலைகளில் மூன்று மடங்கு

ஆக்கச் செலவு ஏற்பட்டது; நெசவு ஆலைகளில் 2·3 மடங்கு ஆகியது. இதற்குக் குறைந்த ஊதியமட்டம்தான் முக்கியக் காரணமாக உள்ளது.

முதல் உலகப்போருக்குப் பின்னர்த்தான் பஞ்சாலைத் தொழிலில் தொழிற்சங்கம் தோன்ற ஆரம்பித்தது. தொழிற் சங்கங்கள் தோன்றுவதற்கான காரணங்களைப் பின்வருமாறு கூறலாம். முதல் உலகப்போருக்குப் பின்னர் இந்தியாவில் அரசியல் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதுவரை கண்டிராத அளவுக்கு விலை உயர்ந்து வாழ்க்கைச் செலவு அதிகரித்தது. முதல் உலகப்போர் இறுதியில் மாபெரும் கொள்ளைநோய் ஏற்பட்டு எண்ணிறந்த மக்கள் மடிந்தார்கள். இதனால் ஆலைத்தொழில் களில் தொழிலாளர் கிடைப்பருமை ஏற்பட்டது. முதல் உலகப் போரின் போதும், அதன் பின்னரும் இந்தியத் தொழில்கள் யாவும் பூரிப்பாக வளர்ச்சி அடைந்தன. மேலே கூறிய காரணங்களினால் தொழிற் சங்கங்கள் வளரத் தலைப்பட்டன. *1921—1925* ஆண்டு களில் ஊதிய உயர்வு கோரியும், வேலைச் சூழலில் அபிவிருத்தி கோரியும் 500-க்கும் அதிகமான வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டன.

உலகப்போருக்குப் பின்னர்ப் பல புதிய தொழிற்சங்கங்கள் தோன்றின; சில கலைக்கப்பட்டன. *1924*-ல் *20* பஞ்சாலைத் தொழிலாளர் சங்கங்கள் இருந்தன. அவற்றின் மொத்த உறுப்பினர்கள் 32,000 ஆவர்.

இதற்கிடையில் லங்காஷயர் தொழில் அதிபர்கள் இந்தியப் பஞ்சாலைகளின் போட்டியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு தொழிலாளர் நலச் சட்டங்களை ஏற்படுத்துமாறு இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த காரணத்தால் அவர்களது கோரிக்கை கள் (*1881*-ல்) நிறைவேற்றப்பட்டன. அதிகப்பட்சம் ஒரு தொழி லாளர் செய்யவேண்டிய வேலைநேரம், ஆலைத் தொழிலுக்கு வருபவர்களின் குறைந்தபட்ச வயது, பெண்களின் வேலைநேரம், இடைவேளை நேரம், இழப்பீடு முதலியன நிர்ணயிக்கப்பட்டன, *1881*ஆம் ஆண்டுச் சட்டம், *1891*-லும், *1911*-லும், *1922*-லும் திருத்தப்பட்டன.

கச்சாப் பொருள்கள்

இந்தியாவில் பருத்தி ஒரு சிறந்த வர்த்தகப் பயிராகச் சாகுபடி செய்யப்பட்டது. பம்பாய், தக்காணம், மத்திய மாநிலம், பேரார், குஜராத், கத்தியவார், மத்திய இந்தியப் பகுதிகள், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, பஞ்சாப் ஆகிய இடங்

களில் பருத்தி பயிரிடப்பட்டது. 1913-18-ல் பயிரிட்ட பருத்தியில் 85% குட்டை இழைப் பருத்தியாக இருந்தது. எஞ்சியுள்ள 15% மட்டுமே நீண்ட இழைப் பருத்தியாக இருந்தது. இந்த வகைப் பஞ்சின் உற்பத்தி 7,26.000 பேல்களாக இருந்தன. பஞ்சு உற்பத்தியில் 50—60% வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியப் பஞ்சை ஜப்பான், சீனா, இங்கிலாந்து முதலிய நாடுகள் சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்தே வாங்கியுள்ளன.

உற்பத்தி

இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1900—15 ஆண்டுகளில் பஞ்சாலைகளின் வளர்ச்சி கணிசமான அளவிலிருந்தது. இந்த ஆண்டுகளில் நூல் உற்பத்தி 85%-ம், துணி உற்பத்தி 169%-ம் உயர்ந்துள்ளன. இறக்குமதியான துணிகளில் பெரும்பாலானவை இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும். இக்காலத்தில் இறக்குமதி அளவு ஒப்புமையாகக் குறைந்துள்ளது. 1900-01-ல் மொத்தத் துணி நுகர்வில் இறக்குமதியின் விழுக்காடு 65ஆக இருந்தது. 1914-15-ல் இது 52-ஆக வீழ்ச்சி அடைந்தது. துணி ஆலைகளின் உற்பத்தியும், கைத்தறித் துணியும் இக்காலத்தில் ஒப்புமையாக அதிகரித்துள்ளன. ஆலைத்துணி உற்பத்தி இவ் வாண்டுகளில் 11%-லிருந்து 23%-ஆகவும், கைத்தறித் துணி உற்பத்தி 24%-லிருந்து 25%ஆகவும் அதிகரித்துள்ளன.

முதல் உலகப்போர் நடந்த ஆண்டுகளில் துணி ஆலைகளுக்குத் தேவையான சாதனங்களை இறக்குமதி செய்ய முடியாத காரணத்தால், ஆலைத் துணி உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்பட்டது (அட்டவணை 18·2 பார்க்கவும்). இக்காலத்தில் நூல், துணி ஆகியவற்றின் இறக்குமதியும் குறைந்தது.

1919–55 ஆகிய ஆண்டுகளில் நூல் உற்பத்தி 13%-ம், துணி உற்பத்தி 20%-ம் அதிகரித்துள்ளன. இதனால் இந்தியாவில் மொத்தத் துணி உற்பத்தியில ஆலைத் தொழில்களின் பங்கு கணிசமாக உயர்ந்து நின்றது. ஆலைத் துணி உற்பத்தியின் விரிவாக்கத்திற்கு வெளிநாட்டுத் துணி இறக்குமதிக் குறைப்பும், கைத்தறித் துணிகளின் உற்பத்தியில் ஏற்பட்ட ஒருவிதத் தேக்க நிலைமையும் காரணமாக இருந்தன. [5]

இந்திய ஆலைகளில் காடா மற்றும் நடுத்தர ரகத் துணிகள், நூல் முதலியன மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. இங்குக் கூலி விகிதங்கள், கச்சாப் பொருள்களின் விலை முதலியன மலிவாக

5 ஆலைத்தொழில்களுடன் போட்டியிட முடியாமையால் கைத்தறித்தொழில் நசுக்கப்பட்டது என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

அட்டவணை - 18-2†

நூல், துணி ஆகியவற்றின் இறக்குமதி ஏற்றுமதி

ஆண்டுகள்	நூல் (மில்லியன் ராத்தல்)			துணி (மில்லியன் கஜம்)				தலா நுகர்வு
	நிகர இறக்குமதி	உள்நாட்டு உற்பத்தி	நூல் ஏற்றுமதி	நிகர இறக்குமதி	உள்நாட்டு உற்பத்தி: ஆலைகள்	உள்நாட்டு உற்பத்தி: மொத்தம்	துணி ஏற்றுமதி	(கஜம்)
1900-01	30·1	353	122	1875	422	111[illegible]	111	9·80
1914-15	34·0	652	43	2327	1136	232[illegible]	110	14·35
1919-20	7·9	636	161	836	1640	220[illegible]	239	8·80
1924-25	50·5	719	46	1710	197[illegible]	322[illegible]	230	15·01

† H. Fukazawa ibid-p. 128.

இருந்தன. ஆகையால், இத் தொழில் வேகமாக வளர்ந்தது. இந்தியப் பஞ்சாலைகளில் உற்பத்தியான நூல் இந்தியாவிலும் சீனாவிலும் உள்ள கைத்தறி நெசவாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்தது; இந்தியப் பஞ்சாலைகளில் உற்பத்தியான துணி குறைந்த வருமானம் உடைய மக்களின் நுகர்வுத் தேவையை மலிவான விலையில் பூர்த்தி செய்ய உதவியது. ஆனால், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகள் சன்னமானவை; மிகவும் மெல்லிய ரகங்கள். இவற்றை உயர்ந்த வருமானம் உடையவர்களும், அரசாங்க மேலதிகாரிகளும், செல்வந்தர்களும் உபயோகித்தார்கள்.

முதல் உலகப்போருக்குப் பின்னர்ப் பஞ்சாலைத் தொழிலில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. நாட்டில் பணப் புழக்கம் அதிகரித்து, வீக்க நிலைமை தோன்றியது.[6] போருக்குப் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சி தொடர்ந்து நீடிக்கவில்லை. இந்தியப்

[6] இந்தியாவில் 1914-ல் ரு.66·12 கோடியாக இருந்த பணப்புழக்கம் 1918-ல் ரு. 99·79 கோடியாகவும், 1920-ல் ரு. 174·52 கோடியாகவும் உயர்ந்து சென்றது. இதனால் விலை உயர்ந்து வீக்க நிலைமை ஏற்பட்டது. ஆதாரம்: H. Fukazawa *ibid* p. 241.

பஞ்சாலைகளை இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல்வகைபம்பாயில் உள்ள பஞ்சாலைகள்; இவை பெரும்பாலும் வெளிநாட்டு அங்காடிகளுக்காக உற்பத்தி செய்துவந்தன. மேற்படி பஞ்சாலைகள் ஆரம்பத்தில் குறைந்த வீதத்தில் இலாபம் ஈட்டின. பின்னர் அதிக அளவிற்கு இழப்பை அடைந்தன.[7] ஆனால், அகமதாபாத் கான்பூர் ஆகிய இடங்களில் உள்ள ஆலைகள் இரண்டாவது வகை. இவை அதிக அளவுக்குப் பாதிக்கப்படாமல் இயங்கிவந்தன. இந்தியாவின் இதரப்பகுதிகளில் உள்ள பஞ்சாலைகள்பெரும்பாலும் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்து வந்தன. வீக்கத்தின் காரணமாக ஓரளவு ஆக்கச்செலவு உயர்ந்தாலும், துணியின் தேவையும், நூலின் தேவையும் இறுதிநிலையில் அதிகரித்தன. இதனால் மேற்படி பஞ்சாலைகள் ஓரளவிற்கு உற்பத்தியை விரிவு படுத்தின. இவ்வாறு பம்பாயில் உள்ள ஆலைகள் இழப்பு அடைந்த அதே ஆண்டுகளில் இந்தியாவின் இதரப் பகுதிகளில் உள்ள பஞ்சாலைகள் வளர்ச்சி அடைந்தன; தங்கள் உற்பத்தியை நிலைபெறச் செய்தன.

பம்பாய் ஆலைகளின் தோல்விக்கு ஜப்பானியப் போட்டியே ஒரு முக்கியக் காரணமாக இருந்தது என்று திருமதி வீரா அன்ஸ்டே கூறியுள்ளார். ஜப்பானியர்கள் இந்தியாவிலிருந்து பஞ்சை வாங்கி அதைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்று, துணியாக்கி அதைச் சீன அங்காடியில் விற்பதுடன், ஒரு பகுதியை இந்தியாவிலேயே மலிவான விலையில் விற்கவும் செய்தார்கள். ஜப்பானியத் துணியை இந்தியாவில் இறக்குமதி செய்யும் முன்னர் 11% இறக்குமதித் தீர்வை செலுத்த வேண்டும். இத்தனைக்குப் பிறகும் ஜப்பானியத் துணியால் இந்தியப் பஞ்சாலைத் துணியுடன் போட்டியிட முடிந்தது.

ஜப்பானியத் துணி மலிவாக இருப்பதற்கு உற்பத்தித் திறனே முக்கியக் காரணம் என்றும், ஜப்பானியச் செலாவணி மதிப்பிறக்கம் செய்யப்படவில்லை என்றும், ஜப்பானிய அரசாங்கம் உதவிக்கொடை ஏதும் கொடுக்கவில்லை என்றும் இந்தியச் சுங்க வாரியம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இந்தியப் பஞ்சை ஜப்பானுக்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவைவிட உள்நாட்டிலே தரைவழியாகப் பஞ்சை எடுத்துச் செல்வதற்கான செலவு அதிகம். பம்பாயில்

[7] பம்பாய் ஆலைகள் 1922-ல் ரூ. 388 இலட்சம் இலாபம் அடைந்தன; 1923-ல் இது ரூ. 33 இலட்சமாகக் குறைந்தது; 1924-ல் ரூ. 92 இலட்சம் 'இழப்பு' அடைந்தன; 1925-ல் இழப்புத்தொகை ரூ. 134 இலட்சமாக உயர்ந்தது. Vera Anstey-p. 267.

கூலி விகிதங்கள் உயர்வாக உள்ளன. ஜப்பானிய ஆலைகள் இரண்டு 'ஷிப்டு'கள் ஓடின. இந்தியாவில் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் காரணமாகவும், சமூகப் பழக்கவழக்கம் காரணமாகவும் ஆலைகளில் பெண் தொழிலாளர்கள் குறைவாக உள்ளனர். ஜப்பானில் பெண் தொழிலாளர்களின் சதவீதம் அதிகமாகவும், அவர்களின் கூலி விகிதம் ஆண் தொழிலாளர்களை விடக் குறைவாக இருப்பதும் ஒரு முக்கியக் காரணமாகும். ஜப்பானியத் தட்பவெப்ப நிலை பஞ்சாலைத் தொழிலுக்கு மிகவும் சாதகமாக உள்ளது. ஜப்பானிய வர்த்தக அமைப்புகள் சிறப்பாக இருந்தன. ஜப்பான் அமெரிக்காவிலிருந்தும் பஞ்சு இறக்குமதி செய்தது.

இக்காலத்தில் உலக நாடுகளில் வேளாண் பொருள்களின் விலை 1920–21-லிருந்தே படிப்படியாக வீழ்ச்சி அடைந்தது. இதைத் தொடர்ந்து விவசாயிகளின் வருமானமும் வாங்கும் சக்தியும் வீழ்ச்சி அடைந்தன. பஞ்சாலைப் பொருள்களுக்கான உள்நாட்டுத் தேவையும் வீழ்ச்சி அடைந்தது: எனவே 1923-ல் செய்பொருள் தொழில்கள் பூரிப்பான விலை உயர்வை அனுபவிக்கும் அதே சமயத்தில் தேக்கமுற்ற தேவையை எதிர்நோக்கவும் வேண்டியிருந்தது.

இக்காலத்தில் இந்திய ரூபாயின் ஸ்டர்லிங் மதிப்பு 1 ஷி. 4 பெ.-லிருந்து 1 ஷி. 6 பெ. ஆக உயர்த்தப்பட்டது. இதனால் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் மலிவாக்கப்பட்டன. இந்திய ஏற்றுமதி விலை மேலும் அதிகரித்தது. பஞ்சாலைத் தொழிலின் ஆக்கச் செலவுக்கட்டமைப்பு வெளி நாட்டுத் தொழில்களுடன் போட்டியிட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் செலாவணி விகித மாற்றத்தால் தோன்றிய ரூபாயின் மதிப்பு உயர்வு நிலைமையை மேலும் பாதகமடையச் செய்தது.

தொழில் காப்பு

1921–லிருந்து ஜப்பானிய நூல் இறக்குமதியின் பேரில் 5% தீர்வையும், 1922–லிருந்து இறக்குமதியான ஜப்பானியத் துணிகளுக்கு 11% தீர்வையும் விதிக்கப்பட்டன. இந்தத் தீர்வைகள் போதுமானதாக இல்லை என்றும், ஜப்பானியத் துணியின் இறக்குமதிமீது சிறப்பாக 13% தீர்வை கூடுதலாக விதிக்க வேண்டும் என்றும் பம்பாய், அகமதாபாத், பரோடா ஆகிய ஊர்களில் உள்ள பஞ்சாலை உடைமையாளர் சங்கங்கள் கேட்டுக் கொண்டன.

மில் உடைமையாளர்கள் சங்கத்தின் கோரிக்கையை முதலில் அரசாங்கம் ஏற்க மறுத்தது. பஞ்சாலைத் தொழில்களுக்குக் காப்பு அளிப்பதற்குப் பதிலாகப் பஞ்சாலைகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்களின் இறக்குமதித் தீர்வைகளை ரத்துச் செய்தது. ஆனால், இந்திய தேசியக் காங்கிரஸ் இக்கோரிக்கைக்கான தனது ஆதரவைத் தெரிவித்த பின்னர் அரசாங்கம் வேறுவழியில்லாமல் 1927-ல்காப்பு நோக்கத் தீர்வைகளை விதிக்க உடன்பட்டது. உலக மந்தம் ஆரம்பமானதால் மேற்படி தீர்வைகள் போதுமானதாக, அதாவது இந்தியப் பஞ்சாலைகளுக்குக் காப்பு அளிக்க வல்லதாக இல்லை. 1930-ல் அரசாங்கம் மீண்டும் தீர்வை விகிதங்களை உயர்த்தியது. அப்போது பிரிட்டிஷ் பொருள்களை இந்தியாவில் இறக்குமதி செய்வதற்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டன. பிரிட்டிஷ் அல்லாத துணியின் இறக்குமதிக்குக் (முக்கியமாக ஜப்பானியத் துணியின் இறக்குமதிக்கு) கூடுதல் விகிதத்தில் தனித் தீர்வைகள் விதிக்கப்பட்டன.

1931-ல் பொன் திட்டம் உலகெங்கிலும் ஆட்டம் கண்டது. அப்போது ஜப்பான் பொன் ஏற்றுமதியைத் தடை செய்தது. இதைத் தொடர்ந்து பொன் மதிப்பு உயரவும், ஜப்பானிய 'என்' மதிப்பு வீழவும் தொடங்கியது. நிலையற்ற செலாவணி விகிதத்தால் தங்கள் வாணிகம் குறைந்துவிடக் கூடாது என்று கருதிய நாடுகள் செலாவணியின் மதிப்பைப் படிப்படியாகப், போட்டியிட்டுக்கொண்டு குறைத்தன. இவ்வாறு ஜப்பானிய 'என்' மதிப்புத் தேய்ந்து சென்றதால் இந்தியப் பஞ்சாலைகளைக் காப்பதற்கு இறக்குமதித் தீர்வைகளை மேலும்மேலும் உயர்த்த வேண்டியது அவசியமாயிற்று. 1933-ல் இவ் விகிதம் 75% ஆக உயர்த்தப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் நிதித் தட்டுப்பாடும் இறக்குமதித் தீர்வைகளை உயர்த்தக் காரணமாக இருந்தது.

ஜப்பானியப் போட்டியைக் கட்டுப்படுத்த இறக்குமதித் தீர்வைகள் போதுமானதாக இல்லை. எனவே, இவ் விரு நாடுகளும் 1934-ல் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன. அதன்படி இந்தியா ஒரு மில்லியன் 'பேல்' பஞ்சு ஏற்றுமதி செய்யவும், ஜப்பான் 325 மில்லியன் கஜம் துணியை இந்திய அங்காடியில் விற்கவும் வழி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜப்பானியத் துணி மீதான இறக்குமதித் தீர்வையும் 50% ஆகக் குறைக்கப்பட்டது.

இக்காலத்தில் அரசாங்கம் அவ்வப்போது அரைமனத்துடன் விதித்த இறக்குமதித் தீர்வைகளைவிடச் 'சுதேசி' இயக்கம் பரவியதால் உள்நாட்டுத் தொழிலிற்கு ஆதரவு அளிப்பது நாட்டுப் பற்றின் ஒரு வெளிப்பாடாகக் கருதப்பட்டது. எனவே,சி சுதே

இயக்கத்தின் வளர்ச்சியால் இந்தியப் பஞ்சாலைகள் அதிக அளவுக்கு ஆதாயம் அடைந்தன. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட இரண்டாவது உலகப்போர் காரணமாக இந்திய அங்காடியின் வெளிநாட்டுத் துணி உற்பத்தியாளர்களின் போட்டி முற்றிலும் தடுக்கப்பட்டது.

வெளிநாட்டு இறக்குமதி திடீர் என்று நிறுத்தப்பட்டதுடன் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இராணுவத் தேவை அதிகரிக்கலாயிற்று. எனவே, துணித் தட்டுப்பாடு ஏற்பட்டது. பஞ்சாலைகள் அதிக இலாபம் அடைந்தன. இதைத் தொடர்ந்து துணிக் கட்டுப்பாடு ஏற்பட்டது. பின்னர் மிகை இலாபவரி விதிக்கப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான நூலும், துணியும் (குறைந்து சென்றதையும்) உலகப்போரினால் முற்றிலும் நிறுத்தப் பட்டதை அட்டவணை-18.3 சுட்டிக் காட்டுகிறது. போர் நடைபெற்ற காலத்தில் ஆலைத் துணி உற்பத்தி அதிகரித்துச் சென்றதை இது விளக்குகிறது. அதன் பின்னர்ப் பிரிவினை காரண மாகப் பஞ்சு கிடைப்பருமையாகியது; தொழிலாளர் கிளர்ச்சிகள் ஏற்பட்டன.

பஞ்சாலைத் துணி உற்பத்தியில் ஒரு குறிப்பிடத்தக்க போக்குக் காணப்பட்டது. ஆரம்பத்தில் கனரக நூல், காடாத் துணி ஆகியவற்றின் உற்பத்தி விகிதம் உயர்வாக இருந்தது. பின்னர்க் கொஞ்சம் கொஞ்சமாகச் சன்னரக நூல், துல்லிப ரகத் துணி வகைகள் ஆகியவற்றின் விகிதம் ஒப்புமையாக அதிகரிக்கலாயிற்று. இந்தப் போக்குத் தொடர்ந்து முதல் திட்டகாலத்தில் நீடிக்கவில்லை. உயர்ந்த ரகத் துணி உற்பத்தியின் விழுக்காடு வீழ்ச்சியுற்றது.

சீரமைப்பு

முதல் திட்டத்தின் ஆரம்பத்தில் சுமார் 150 பஞ்சாலைகள் சிக்கனமற்ற முறையில் இயங்கி வந்தன. இந்த ஆலைகளை மிகவும் விரைவாகப் புதுப்பிப்பதும், சாதனங்களை விரிவுபடுத்துவதும் அவசியமாக இருந்தன. இவற்றுள் 25 பஞ்சாலைகள் மூடப் பட்டன; 35 ஆலைகள் அதிக இழப்புடன் இயங்கின; எஞ்சியுள்ள 90 ஆலைகள் ஒரு மாதிரியாக வரவுக்கும் செலவிற்கும் கட்டுபடி யாகுமபடி இயங்கிவந்தன. பம்பாயில் உள்ள பஞ்சாலைகளின் சுமார் 90% ஆலைகளில் உள்ள இயந்திர சாதனங்கள் 25 ஆண்டு களுக்கும் மேலானவை என்று தெரியவந்தது. எனவே, இந்த ஆலைகளின் சாதனங்களை இயன்றவரை புதுப்பித்தல், அவற்றை முழுமையாகப் பயன்படுத்துதல்; கைத்தறி நெசவாளர்களுக்கு

அட்டவணை - 18-3

நூல், துணி இறக்குமதி ஏற்றுமதி, 1939—51

விவரம்	இந்தியா			பாரதம்	
	1939–40	1942–43	1944–45	1947–48	1950–51
நூல் இறக்குமதி	41	0·9	0·2	8·8	0·5
ஆலை நூல் உற்பத்தி (மில். ராத்தல்)	1235	1534	1652	1330	1162
நூல் ஏற்றுமதி (மில். ராத்தல்)	37	34	17	6·04	74·5
நிகரத் துணி இறக்குமதி (மில். கஜம்)	560	10	50	26	5
ஆலைத்துணி உற்பத்தி (மில். கஜம்)	4012	4109	4726	3770	3675
ஆலைத்துணி ஏற்றுமதி (மில். கஜம்)	321	818	423	192	1210
கைத்தறி உற்பத்தி (மில். கஜம்)	1820	1500	1600	1230	750
தலா துணி நுகர்வு கஜம் (மில். கஜம்)	16·67	12·40†	15·10†	14·1	9·7

ஆதாரம் : முன் கூறியபடி பக். 247.

†இராணுவ வீரர்களின் நுகர்வும் சேர்க்கப்பட்டுள்ளது.

உதவும் நோக்கத்துடன் புதிதாக நூற்பு ஆலைகளைத் தோற்று வித்தல், சிக்கனமற்ற பஞ்சாலைகளை விரிவுபடுத்தி அவற்றை இலாபகரமாக இயங்க வழிசெய்தல், இறுதியாக நெசவுப் பிரிவு களுக்கு ஓர் உச்சவரம்பு ஏற்படுத்திக் கைத்தறி நெசவாளர்களுக்கு வாய்ப்பு அளித்தல் இவை யாவும் அரசாங்கத்தின் கொள்கையை விளக்கிக் கூறுகின்றன.

பஞ்சாலைகளைச் சீரமைக்க வேண்டியது மிகவும் அவசியம். இயந்திர சாதனங்களைப் புதுப்பிப்பதாலும், அமைப்பு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதாலும் தொழி லாளரின் சராசரி உற்பத்தித் திறனை உயர்த்த முடியும். பஞ்சாலை களிடம் புதிய இயந்திரங்களை வாங்குவதற்குப் போதுமான காப்பு நிதி இல்லாமையாலும், தொழிற்சங்கங்களின் எதிர்ப்பாலும் சீரமைப்பு வேலைகள் தடைப்பட்டன. புதிய இயந்திரங்கள் மூலதனச் செறிவு உடையவை. இதனால் ஆலைகளில் தொழி லாளர்களின் வேலைவாய்ப்புக் குறைந்துவிடும். குறுகிய கால அளவில் சிலருக்கு வேலை இழப்பு ஏற்படும் என்று எண்ணிச் சீரமைப்பு வேலைகளை நிறுத்திவைப்பதால் நீண்டகாலப் பஞ்சாலை தொழிலின் வளர்ச்சியும், வேலைவாய்ப்பும் குறைந்துவிடும் என்பதைத் தொழிலாளர்களோ, ஆலை உடைமையாளர்களோ உணரவில்லை.

பஞ்சாலைத் தொழிலில் நெருக்கடி

1963-1968 ஆண்டுகளில் பஞ்சின் விலை 40% உயர்ந்தது. கூலி விகிதங்களும் நாடெங்கிலும் அதிகரித்தன. காட்டாக, பம்பாயில் 61%-ம், அகமதாபாத்தில் 67%-ம், டில்லியில் 64%-ம், கான்பூரில் 50%-ம், சென்னையில் 41%-ம் அதிகரித்துள்ளன. தொழிலின் ஆக்கச் செலவில் கூலி விகிதமும், பஞ்சும் சுமார் 75% ஆக உள்ளன. ஆகையால் இவ் வாண்டுகளில் பொதுவான ஆக்கச்செலவு 40% உயர்ந்தது; அதே சமயம் துணி விலை 18% மட்டுமே உயர்ந்தது. எனவே, பெரும்பாலான பஞ்சாலை களின் இலாப விகிதங்கள் எதிர்பாராத அளவிற்குக் குறைக்கப் பட்டன. ரிசர்வ் பாங்கின் கணக்குப்படி ஆய்விற்கு எடுத்துக் கொண்ட 236 பஞ்சாலைகளில் 123 ஆலைகள் இழப்பை அடைந் துள்ளன. இதனால் 80 ஆலைகள் மூடப்பட்டன. அதைத் தவிர 1967-68-ல் உற்பத்தி அளவைத் திறனில் 10% உபயோகப்படுத்த வில்லை. இதனால் 83,000 தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள். இவ்வாறு ஏற்கெனவே நெடுநாள்களாக உற்பத்திச் சாதனங்களைப் புதுப்பிக்க முடியாமல் ஆக்கச் செலவு உயர்ந்து செல்லும் ஒரு தொழிலில் கச்சாப் பொருள்களின் கிடைப்பருமையாலும், கூலி

விலை உயர்வாலும் ஆக்கச் செலவு மேலும் உயர்ந்தது. ஆக்கச் செலவால் உந்தப்பட்ட வீக்கத்திற்குப் பஞ்சாலைத் தொழில் உள்ளாக்கப்பட்டது.

உடனடியாகப் பஞ்சு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை இந்த நெருக்கடி உணர்த்தியது. கோதுமையில் தோன்றிய பசுமைப் புரட்சி விரைவில் பருத்திச் சாகுபடிக்கும் பரவுமானல் பஞ்சாலைத் தொழிலின் அடிப்படையான கச்சாப் பொருள் பிரச்சினை தீர்க்கப்படும்.

பஞ்சாலைகள் அனைத்திலும் நெசவு ஆலைகள் இணைக்கப்படவில்லை. இவை உயர்ந்த ரக நூல்களை உற்பத்தி செய்வதில்லை. உயர்ந்தரகப் பஞ்சின் கிடைப்பருமை இதற்கு ஒரு முக்கியக் காரணம்; இருந்தபோதிலும் சன்னரக நூல்களை உற்பத்தி செய்யவும், பலவிதத் துணி ரகங்களை உற்பத்தி செய்யவும் வேண்டும். அப்போதுதான் செலவிற்குக் கட்டுப்படியாகும் அளவில் உற்பத்தி இருக்கும். பூர்த்தியான பொருள்களின் உற்பத்தி பரவலாக்கப்பட வேண்டும்.

நுகர்வோரின் விருப்பம் காலத்தோடு மாறிக்கொண்டே வருகின்றது. மக்களின் வருமான மட்டமும், நாகரிகச் சிந்தனையும் வளருவதால் பருத்தி ஆடைகளைவிடச் செயற்கை நூல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆடைகளுக்கு அதிகத் தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, செயற்கை நூலையும், பஞ்சு நூலையும் சேர்த்து இணைக்கும் வகையில் பஞ்சாலைகளின் (துணி) உற்பத்தி இருக்க வேண்டும்.

நீண்டகால ரீதியில் தொழிலாளர்களின் ஊதிய உயர்வுத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமானல், சராசரியாக ஒவ்வொரு தொழிலாளரின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வேண்டியது அவசியம். இதற்கு உழைப்பைச் சிக்கனப்படுத்தும் புதிய கதிர்கள், தானே இயங்கக் கூடிய கதிர்கள், தறிகள் முதலியன அவசியமாக இருக்கின்றன. பாரதத்தின் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், வெளிநாட்டுப் பஞ்சாலைகளின் போட்டியைத் தன்னம்பிக்கையுடன் எதிர்நோக்கவும், உலக அங்காடியில் பாரதப் பஞ்சாலைத் தொழில் தனக்குரிய இடத்தை நிலைநாட்டவும் இயந்திரங்களைப் புதுப்பிக்க வேண்டியுள்ளன. பன்னாட்டு அளவில் பாரதத் தொழிலாளியின் உற்பத்தித் திறனை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். உற்பத்தித்திறனை உயர்த்தாத வரையில் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்குப்பதிலாக, அவை காலம் தள்ளிப் போடப்படுகின்றன.

அட்டவணை - 18–4 †

பஞ்சாலைத் தொழில் உற்பத்தி (1951–67)

ஆண்டுகள்	துணி உற்பத்தி (மில்லியன் மீட்டர்)			சதவீதத்தில் %	
	ஆலை உற்பத்தி	அமைப்பு இல்லாத துறை	மொத்தம்	ஆலை உற்பத்தி	அமைப்பு இல்லாத துறை
1951	3727	1013	4740	78•6	21•4
1956	4852	1663	6515	74•5	25•5
1961	4701	2372	7073	66•5	33•5
1966	4239	3097	7336	57•8	42•2
1967	4097	3179	7276	56•3	43•7

† From Commerce Annual Number, 1968

அட்டவணை - 18_5*

தலா துணி நுகர்வு
(மீட்டர்களில்)

ஆண்டுகள்	பஞ்சாடை	செயற்கை நூலால் ஆகிய ஆடைகள்	மொத்தம்
1951	10•99	—	10•99
1956	14•71	—	14•71
1961	14•74	1•15	15•89
1966	13•78	1•63	15•41
1967†	13•37	1•72	15•09

* தாற்காலிகமானவை.

ஆதாரம் முன் கூறியபடி,

19. இரும்பு, எஃகு தொழில்

முக்கியத்துவம்

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டும் குறியீட்டு எண்ணாகத் தலா வருமானத்தைக் கருதுகிறார்கள். பொருளாதார வளர்ச்சியை அளந்து காட்டும் குறியீடுகளில் எஃகு உற்பத்தியும், நுகர்வும் முக்கியமானவையாகும். நுகர் பொருள்கள், முதலீட்டுப் பொருள்கள் முதலியவற்றை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்கள் வளர்ந்துள்ள நாட்டைத்தான் வளர்ச்சியடைந்த நாடுகளாகக் கருதுகிறார்கள். தொழில்களின் வளர்ச்சியால் எஃகு உற்பத்தியும், எஃகு தேவையும் அதிகரிக்கின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எஃகு உற்பத்தியில் புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலைநாடுகள் பேரளவு உற்பத்தி முறையில் தோன்றிய நுட்பரீதியான முன்னேற்றத்தால் அதிக அளவு ஆதாயம் அடைந்தன. இந்தியத் துணைக்கண்டத்தில் இதைப் போன்ற நுட்பரீதியான வளர்ச்சி ஏற்படாமையால் இங்குப் பேரளவில் எஃகை உற்பத்தி செய்ய முடியவில்லை. எனவே, பெருமளவுக்கு எஃகு (சென்ற நூற்றாண்டில்) இறக்குமதி செய்யப்பட்டது. இதனால் இந்தியர்கள் எஃகை உற்பத்தி செய்யவில்லை என்றோ, எஃகு உற்பத்தி நுண்முறையை அறியவில்லை என்றோ கூறமுடியாது. இந்தியர்களுக்கு எஃகைப் பேரளவில் உற்பத்தி செய்யத் தெரியவில்லை என்பது உண்மைதான்; ஆனால் எஃகைச் சிறு அளவில் உற்பத்தி செய்யும் நுண்முறையில் தேர்ச்சி அடைந்திருந்தார்கள்.

பத்தொன்பதாவது நூற்றாண்டுவரை

இந்தியாவில் எஃகு உற்பத்தி ஒரு குடிசைத் தொழிலாக இருந்தது. இங்குத் தயாரிக்கப்பட்ட எஃகு மிகவும் தரமானதாகும். ஆகையால், இந்திய எஃகு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்

பட்டது. இந்தியாவில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே எஃகு உத்பத்தி செய்யப்பட்டது என்றும், அந்த எஃகு ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் தெரிகிறது. இந்திய எஃகில் தோய்த்த அம்புகளைப் போரில் பயன்படுத்தியதாகவும் தெரிகிறது.[1] அடுத்து, குப்த வம்சத்தில் தோன்றிய விக்கிரமாதித்தன் கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் டில்லியில் ஓர் இரும்புத் தூணைக் கட்டியுள்ளார். இது குதுமினாருக்கு அண்மையில் இன்றையதினமும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது. கால வெள்ளத்தால் பாதிக்காத அளவிற்கு நேர்த்தியான எஃகை உற்பத்தி செய்வதில் இந்தியர்கள் தேர்ச்சிபெற்று விளங்கினார்கள் என்பதை இத் தூண் நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

இந்தியர்கள் போர் வாள்கள் தயாரிப்பதில் ஆயிரம் ஆண்டுகளாகச் சிறப்புப்பெயர் பெற்று விளங்கினார்கள். சிறந்த எஃகினால் தயாரிக்கப்பட்ட டமாஸ்கஸ் வாள்கள், உட்ஸ் (Woodze) வாள்கள் முதலியன வலிமை, நேர்த்தி, நெகிழ்ச்சிக் குழைவு ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றவை. இவை பாரதத்தின் மத்தியப் பகுதிகளிலும், ஐதராபாத்திலும் தயாரிக்கப்பட்டன. இவ்வாறாக, இந்தியர்கள் பல நூற்றாண்டுகளாகச் சிறந்த எஃகு பொருள்களை உற்பத்தி செய்வதில் தலைசிறந்து விளங்கினார்கள். இந்தச் சீரும், சிறப்பும் கிட்டத்தட்ட 18 ஆவது நூற்றாண்டின் இறுதிவரை நீடித்தது.[2] ஆங்கிலேயர்களுடன் போரிட்ட பாளைய மன்னர்கள் ‘சுருள் கத்தி’யை (‘சுருள் பட்டா’ என்று கொச்சையாகக் கூறுவார்கள்) உபயோகித்தார்கள். இந்தியாவின் பல பகுதிகளில், மிகவும் உயர்ந்தரக எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.[3] ஆனால், இவை யாவும் மிகவும் சிறு அளவில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. எஃகு உற்பத்தி ஒரு குடிசைத் தொழிலாக இருந்ததேயல்லாமல் பேரளவுத் தொழிலாக விளங்கவில்லை. எனவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் எஃகைப் பேரளவில் உற்பத்தி செய்யும் நுண்முறைகள் கண்டுபிடிக்கப்பட்டபோது அவற்றுடன் இந்திய எஃகு தொழிலால் போட்டியிட முடியவில்லை. பேரளவுத் தொழிலால் ஏற்பட்ட போட்டியாலும் ஆங்கில

[1] M.R. Kulkarni, Industrial Developmetnt, 1971, p. 2-3, p. 44-45

[2] முன்கூறியபடி p. 44.

[3] நேர்த்தியான எஃகைத் தயாரிப்பதில் சில குடும்பங்கள் சிறப்புத் தேர்ச்சி பெற்று விளங்கின. காட்டாக, சேலம் அருணாசல ஆசாரியும் அவரது குடும்பத்தாரும் சிறந்த எஃகைத் தயாரிப்பதில் பெயர்பெற்று விளங்கினார்கள். இது போன்ற விவரங்களை அறிவதற்கு மாவட்ட விவரச்சுவடிகளையும், இதர ஆவணங்களையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

ஆட்சியாளர்கள் இத் தொழில் நிபுணர்களுக்குத் தருந்த ஆதரவு அளிக்காமையாலும் எஃகு தொழில் சென்ற நூற்றாண்டில் (கிட்டத்தட்ட) அழிந்துபோயிற்று.

பேரளவு உற்பத்தி முயற்சிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நவீன நுட்பமுறையில் இரும்பையும் எஃகையும் பேரளவில் உற்பத்தி செய்வதற்குப் பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.[4] 1815-ல் கிழக்கு இந்தியக் கம்பெனியில் பணியாற்றிய ஹீத் (Heath) நவீன முறையில் இரும்பு, எஃகை உற்பத்தி செய்ய முன்வந்தார். அதற்காக இங்கிலாந்து சென்று ஷெஃபீல்ட் நகரில் எஃகு தயாரிக்கும் முறையை நேரில் கண்டறிந்தார். மாங்கனீஸை உபயோகித்து, எஃகு உற்பத்தி செய்யும் புதிய முறையை இவரே கண்டுபிடித்தார் என்றும் கூறப்படுகிறது. இவர் தமது சொந்த முயற்சியாலும் கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆதரவாலும் வெற்றி அடைந்தார். இவர் சென்னை மாநிலத்தில் ஐந்து இடங்களில் எஃகு ஆலைகளை ஏற்படுத்தினர். அவற்றுள் 1830-ல், பரங்கிப்பேட்டை (Porto Novo) (தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு வடக்கே உள்ள கடற்கரைப் பட்டினம்) எஃகு ஆலையும்,[5] மலபார் கடற்கரையில் பேப்பூரில்[6] உள்ள ஆலையும் வெற்றியுடன் இலாபகரமாகச் செயல்பட்டன. இங்குத் தயாரிக்கப்பட்ட எஃகை எவ்விதச் சிரமமும் இல்லாமல் இங்கிலாந்தில் விற்க முடிந்தது. இருந்தபோதிலும் நிதி நெருக்கடி காரணமாக இந்த ஆலைகளின் நிருவாகம் மாற்றம் அடைந்தது. ஹீத் அரசாங்கத்திடமிருந்து பெருமளவிற்குக் கடன் வாங்கியிருந்தார். கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாமையால், எஃகு ஆலையின் நிருவாகம் 1854-ல் கிழக்கு இந்திய இரும்புக் கம்பெனிக்கு மாற்றப்பட்டது. இதனால் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியவில்லை. 1874-ல் அரசாங்கமே கிழக்கு இந்திய இரும்புக் கம்பெனியை எடுத்துக்கொண்டது. அதனுடன் இந்த ஆலையின் எஃகு உற்பத்தியும் கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டது என்று கூறலாம்.

4 முதலில் 1777-ல் ஜாரியா நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அண்மையில் இரும்பை உருக்கும் முயற்சிகள் Farquhar and Motte ஆகியோரால் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால், இவை வெற்றி பெறவில்லை, M. R. Kulkarni-Industsrial Development-1971, p. 44.

5 D R. Gadg'l-*ibid* p. 270.

6 M R. Kulkarni, *ibid*, p. 45.

1874-ல் பராக்கர் இரும்பு ஆலே (வங்காளத்தில்) ஆரம்பிக்கப்பட்டது. இதில் தினசரி அதிக அளவு 40 டன்கள் தேனிரும்பு உற்பத்தி செய்ய முடியும். பராக்கர் இரும்பு ஆலேயின் நிருவாகம் 1889-ல் வங்காள இரும்பு எஃகு கம்பெனிக்கு மாறியது. இந்த ஆலே ஜெரியா நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அருகில் இருந்த போதிலும் 1899வரை இலாபகரமாகச் செயல்படவில்லே. இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் இதன் ஆண்டு உற்பத்தி 35,000 டன்களாக இருந்தது. இந்த ஆலே இரும்பை மட்டுமே உற்பத்தி செய்தது; எஃகு உற்பத்தி செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டமுயற்சி வெற்றி அளிக்கவில்லே. இந்தக் கம்பெனி 1919-ல் மறுபடியும் சீரமைக்கப்பட்டு வங்காள இரும்புக் கம்பெனி என்று பெயர்பெற்றது. இந்தியாவில் முதன்முதலில் பேரளவில் இரும்பை உற்பத்தி செய்த பெருமை வங்காள இரும்புக் கம்பெனியைச் சாரும்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் எஃகைப் பேரளவில் உற்பத்தி செய்வதற்காக முயற்சி செய்தவர்கள் அனேவரும் (இறுதியில்) தோல்வி அடைந்தார்கள். எஃகு உற்பத்தித் தொழில் முயற்சியின் தோல்விக்குப் பல காரணங்கள் உள்ளன. இவர்கள் நவீன தொழில் நுட்ப முறைகளேக் கையாளவில்லே. எஃகு தொழிலுக்கு மிகவும் அதிக அளவில் மூலதனம் தேவைப்பட்டது. மூலதனத் தட்டுப்பாடு காரணமாகவும் இத் தொழில் முயற்சிகள் தோல்வி அடைந்தன. நிலக்கரிச் சுரங்கத்திற்கு அருகில் எஃகு ஆலேகளே நிறுவாத காரணத்தாலும், பேரளவு நிலக்கரியை எடுத்துச் செல்ல அக் காலத்தில் போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லாமையாலும் பல பிரச்சினேகள் தோன்றின. நிலக்கரிக்குப் பதிலாகச் சாதாரண மரங்களேச் சுட்டுத் தயாரித்த கரியைப் பயன்படுத்தினுர்கள். இதனுல் ஆக்கச் செலவு அதிகரித்தது.

டாடாவின் சாதனே

பத்தொன்பதாம் நூற்றுண்டில் நவீன முறையில் பேரளவில் எஃகை உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஜாம்ஷெட்ஜி டாடா விரும்பினுர். இவர் தொழில்முயலுநர் என்ற சொல்லிற்கு இலக்கணமாக விளங்கினுர். புதுமைபுகுத்தலின் அடிப்படையில் இவரது தொழில்முயற்சிகள் அமைந்துள்ளன. இவரை எஃகுத் தொழிலின் தந்தை என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். இவரது தொழில் முயற்சிக்கு நாட்டுப்பற்றும் ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. எனவே, டாடாவின் சாதனேகள் தனி ஒரு மனிதனின் தொழில்துறை வெற்றியாக மட்டும் விளங்கவில்லே; 'சுதேசி' இயக்கத்தின் ஒரு கூறுகவும் (இது) விளங்கியது.

புதிய தொழில்முயற்சியை ஏற்கும் திறமையும் தகுதியும் இந்தியர்களுக்கு இல்லை என்று குறைகூறிய ஆங்கிலேயர்களுக்கு இது ஒரு சிறந்த படிப்பினையாக இருந்தது. அதைப்போலவே இந்தியர்கள் தங்களிடமுள்ள சேமிப்பைப் பொன் நகைகளுக்காகச் செலவிடுவார்களே யல்லாமல் புதிய தொழில்முயற்சிக்கு ஆதரவாகச் செலவிட மாட்டார்கள் என்று பரிகாசம் செய்தார்கள். ஒரு தொழில்முயற்சி சுதேசித் தொழில்முயற்சியாக இருக்குமானால் இந்தியர்கள் கட்டாயமாக ஆதரவு அளிப்பார்கள் என்றும் நிரூபிக்கப்பட்டது. ரூ. 25 கோடி, பங்கு மூலதனம் திரட்டுவதற்காக 1907–ல் அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிட்ட மூன்றுவார காலம் முடியும் முன்னதாகவே முழுத் தொகையான இரண்டரைக் கோடி ரூபாயும் சுமார் எட்டாயிரம் பங்குதாரர்களால் செலுத்தப்பட்டது. இவ்வாறு டாடா எஃகு ஆலையின் தோற்றம் 'சுதேசி'ப்பற்றின் செல்வாக்கைப் பிரதிபலிக்கிறது.

ஜாம்ஷெட்ஜி டாடா விஞ்ஞானத் தொழில்நுட்ப உண்மைகளை முழுமையாகப் பயன்படுத்திப் பேரளவில் இரும்பு, எஃகை உற்பத்தி செய்வதில் தீவிரமாக நாட்டம் கொண்டவர். முதற்கண் இரும்புத் தாதுப் பொருள்களையும், நிலக்கரிச் சுரங்கங்களையும் கண்டுபிடிப்பதற்காக மேலைநாடுகளிலிருந்து சொந்தச் செலவில் நிபுணர்களை வரவழைத்தார். பேரளவு இரும்பு, எஃகு உற்பத்திக்கு நிலக்கரியும், இரும்புத் தாதுக்களும் அருகில் இருக்க வேண்டும் என்று தேடி அலைந்தார். இறுதியில் சாக்சி என்னும் இடத்தில் ஆலையை நிறுவத் தீர்மானித்தார். எஃகு ஆலையை ஆரம்பிக்கும் முன்னதாகவே நிபுணர்களின் ஆலோசனைகளுக்காகவும், தாதுப் பொருள்களின் பரிசோதனைக்காகவும் சுமார் ரூ. 5·5 இலட்சம் செலவிட்டுள்ளார்.[7]

எஃகு ஆலையை உருவாக்குவதே தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்ட ஜாம்ஷெட்ஜி டாடா தமது கனவுகள் நினைவாகும் முன்னர் 1904-ல் காலமானார். டாடா இரும்பு, எஃகு கம்பெனியின் நிர்மாண வேலைகள் 1908–ல் ஆரம்பிக்கப்பட்டன. இவ் வாலையில் 1911 முதல் இரும்பும், 1913 முதல் எஃகும் உற்பத்திசெய்யப்படுகின்றன. எஃகு தொழிலின் வளர்ச்சிக்காக ஜாம்ஷெட்ஜி டாடா எடுத்துக்கொண்ட முன்னோடியான முயற்சிகளை எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக டாடா எஃகு ஆலை அமைந்துள்ள

7 Vera Anstey, முன்கூறியபடி பக். 242.

இடத்தை ஜாம்ஷெட்பூர் என்று வழங்குகிறார்கள். *1970–71–ல்* தனியார் துறையில் உள்ள மிகப்பெரிய (தொழில்) நிறுவனங்களின் பட்டியலில் டாடா இரும்பு, எஃகு கம்பெனி முதலிடம் பெற்றுள்ளது.[8]

இந்திய இரும்பு எஃகு கம்பெனி

1918–ல் பாரக்கருக்கு அருகே இந்திய இரும்பு எஃகு கம்பெனி ஆரம்பிக்கப்பட்டது. *1937–ல்* ஆரம்பிக்கப்பட்ட வங்காள எஃகு கழகத்துடன் (The Steel Corporation of Bengal Ltd.) சேர்ந்து இந்திய இரும்பு எஃகு கம்பெனி எஃகு உற்பத்தி செய்யத் தொடங்கியது. இவ்விரு நிறுவனங்களும் தனித்தனியாகச் செயல்படுவதால் ஆக்கச் செலவு அதிகமாக இருப்பதாகவும், இவை ஒன்றாக இணைக்கப்பட வேண்டும் என்றும் சுங்க ஆணைக்குழு (Tariff Commission) *1953–ல்* பரிந்துரைத்தது.

1918–ல் இந்திய இரும்பு எஃகு கம்பெனியின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 3 கோடியாக இருந்தது. *1937–ல்* தோன்றிய வங்காள எஃகு கழகத்தின் அனுமதித்த மூலதனம் ரூ. 10 கோடியாகும். 1952–ல் இரும்பு எஃகு கம்பெனிகள் ஐக்கிய அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன் விளைவாக இந்திய இரும்பு எஃகு கம்பெனியும், வங்காள எஃகு கழகமும் 1953 ஜனவரியில் ஐக்கியமடைந்தன. ஐக்கியமடைந்த புதிய எஃகு கம்பெனியின் (இந்திய இரும்பு எஃகு கம்பெனி) அனுமதித்த மூலதனம் இதற்கு முன்பு உள்ள இரு கம்பெனிகளின் தனித்தனியாக அனுமதித்த மூலதனத்தைவிடக் குறைவாக இருந்தது. புதிய எஃகு கம்பெனியின் அனுமதித்த மூலதனம் ரூ. 8·80 கோடியாக இருந்தது. இக் கம்பெனியின் வெளியிட்ட ஒப்பிய மூலதனம் ரூ. 7·88 கோடியாகும். கம்பெனிகளின் ஐக்கியத்திற்கு முன்பு தனித்தனியாக உள்ள மேற்படி மூலதனத்தின் கூடுதல் தொகையைவிடப் புதிய எஃகு கம்பெனியின் வெளியிட்ட ஒப்பிய மூலதனம் அதிகமாக இருந்தது.

[8] தனியார் துறையில் டாடா இரும்பு, எஃகு கம்பெனி ரூ. 186·1 கோடி மூலதனத்துடன் மிகப்பெரிய நிறுவனமாக [மூலதன அடிப்படையில்] விளங்கிய போதிலும், பாரதத்தில் உள்ள மிகப்பெரிய நிறுவனங்களின் வரிசைப் பட்டியலில் இது 10 ஆவது இடத்தைத்தான் பெற்றுள்ளது. முதல் ஒன்பது நிறுவனங்களும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகும். இவை தனியாகவும், ஒப்புமையாகவும் ஆண்டுதோறும் வளர்ந்து வருகின்றன. காட்டாக, பாரதத்தில் மிகப்பெரிய நிறுவனங்களின் வரிசையில், 1956–57–ல், 4 ஆவது இடத்தைப் பெற்று இருந்த டாடா இரும்பு எஃகு கம்பெனி 1970–71–ல், பொதுத்துறை நிறுவனங்களின் ஒப்புமையான வளர்ச்சியின் விளைவாக 10 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஆதாரம்: Economic Times, Feb 1, 1972.

நாட்டின் எஃகு தேவை மேலும் மேலும் உயர்ந்து சென்ற தாலும், எஃகு உற்பத்தியில் இயல்பாக ஏற்படும் பேரளவுச் சிக்கன நலன்களை எய்துவதற்காகவும், புதிய எஃகு கம்பெனி உற்பத்தி அளவைத்திறனை அதிகரிக்கத் திட்டமிட்டது. இதை நிறைவேற்றுவதற்காகப் பங்கு மூலதனத்தைத் திரட்டப் பங்குப் பத்திரங்களை வெளியிட்டது. 1957 மார்ச் 31உ அன்று இக் கம்பெனியின் அனுமதித்த மூலதனம் ரூ. 14 கோடியாக இருந்தது. ஒப்பிய மூலதனம் ரூ. 8·5 கோடியாகும். இக் கம்பெனியின் காப்புநிதி விரிவாக்கத் திட்டத்தை நிறைவேற்றப் போதுமானதாக இல்லை, எனவே, புதிய பங்கு மூலதனத்தைப் பெறவேண்டியது அவசியமாக இருந்தது.

மைசூர் இரும்பு, எஃகு ஆலை

1921-ல் மைசூர் அரசு பத்திராவதி என்னும் இடத்தில் இரும்பு, எஃகு ஆலை ஒன்றை நிறுவியது. இதன் ஆண்டு உற்பத்தி அளவைத்திறன் 25,000 டன்கள் (பூர்த்தியான) எஃகு ஆகும். அதைத் தவிரத் தரமான எஃகு உற்பத்திக்கு மிகவும் அவசியமான அயம் கலந்த சிலிக்கான் (ferro silican) ஆண்டு ஒன்றுக்கு 16000 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

இவ்வாறு விடுதலைக்கு முன்பு நாட்டில் நான்கு முக்கிய இரும்பு-எஃகு ஆலைகள் இருந்தன. டாடா இரும்பு எஃகு கம்பெனிதான் முதன்முதலில் இந்தியாவில் பேரளவு எஃகு உற்பத்தி செய்தது. இந்த எஃகு ஆலை உற்பத்தி செய்யத் தொடங்கியது முதல் இரண்டாவது உலகப்போர் ஆரம்பம் வரை இந்தியாவில் உற்பத்தியான எஃகு அளவு பின்வரும் அட்டவணை யில் கொடுக்கப்பட்டுள்ளது.

1939-ல் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாகியது. போரினால் பல தொழில்களுக்கு மேலும் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது. புதிதாகப் போர்க்கருவிகள், வெடிகுண்டுகள்போன்ற வற்றை உற்பத்திசெய்ய வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் எஃகு தேவை பன்மடங்கு உயர்ந்தது. இதுவரை இந்தியா வுக்குத் தேவையான எஃகில் பெரும்பகுதியை வெளிநாட்டிலிருந்து முக்கியமாக, இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்தார்கள். பிரிட்டிஷ் தொழிலின் உற்பத்தி அந்த நாட்டின் தேவைக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. எனவே, உள்நாட்டுத் தேவை முழுவதையும், அரசாங்கத்தின் கூடுதலான போர்த் தேவையையும் இந்திய எஃகு தொழில் நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1939-ல் 8·43 இலட்சம் டன்களாக

அட்டவணை — 19·1

ஆண்டுகள்	எஃகு உற்பத்தி† டன்களில்
1916	99,000
1921	1,26,000
1929	4,00,000
1933	4,83,000
1936	6,04,000
1938	7,02,000
1939	8,42,905

† United Nations Statistical Year Book, 1958.

இருந்த எஃகு உற்பத்தி 1943-ல் 11·5 இலட்சம் டன்களாக உயர்ந்தது.[9]

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலகத்திற்கு அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சிகளாக இரு உலகப்போர்கள் நடந்தன. அச் சமயத்தில், இரும்பு எஃகு தொழிலின் விரைவான வளர்ச்சிக்கு இவை காரணமாயின. போர்க் கருவிகள், போர் முக்கியத்துவம் உள்ள பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய எஃகு தேவைப்பட்டது. இதனால் புதிய நுண்முறைகளை மையமாகக் கொண்ட புதிய ஆலைகள் தோற்றுவிக்கப்பட்டன. இக் காலத்தில் மிகப்பெரிய ஆலைகளின் உற்பத்தி அளவுத்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. இதைப்போன்ற சூழ்நிலை உலகெங்கிலும் காணப்பட்டது எனலாம். இந்தியாவிலும் எஃகாலைகள் முழுநேரமும்—இரவும் பகலும்—இயங்கிவந்தன. இதனால் சாதாரணப் பணிகளைக்கூட—இயந்திரங்களைச் சுத்தம் செய்தல், சிறு அளவில் செப்பனிடுதல், பதிலமர்த்தல் முதலியவற்றை—செய்ய முடியவில்லை. இந்திய எஃகாலைகளின் உற்பத்தி அளவுத்திறன் மிகையாகப் பயன்படுக்கப்பட்டது. உற்பத்தி உயர்வைப் பின்வரும் எஃகு உற்பத்திக் குறியீட்டு எண்கள் எடுத்துக்காட்டும். 1937ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்ட

9 R.S. Bisht and M.P.N. Namboodripad-Iron Steel Industry, printed in Economic History of India, 1857-1957, Allied-1965

இக்குறியீட்டுஎண் 1939–ல் 108·0 ஆகவும், 1945–ல் 142·9 ஆகவும் உயர்ந்துசென்றது. இங்ஙனம் போர்க் காலத்தில் தள்ளிப் போடப்பட்ட பதிலமர்த்துதல், புதுப்பித்தல் போன்ற பணிகளை ஈடுசெய்வதற்காகப் போர் முடிந்த பின்னர் மிகப் பெரிய அளவில் அவற்றை மேற்கொள்ள வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது.

தொழில் காப்பு

டாடா எஃகு ஆலை உற்பத்திசெய்யத் தொடங்கியதும் முதல் உலகப்போர் ஆரம்பமாகியது. டாடா எஃகு ஆலை மட்டுமே அப்போது இருந்த காரணத்தால் அங்காடியில் அது சர்வாதீன நிலைமையைப் பெற்று விளங்கியது. அரசாங்கத்தின் போர்த் தேவையையும், உள்நாட்டின் முழுமையான எஃகு தேவையை யும் பூர்த்திசெய்ய வேண்டியிருந்தது. ஆனால், முதல் உலகப் போரினால் ஏற்பட்ட சர்வாதீன நிலைமையால், பிரிட்டிஷ் எஃகு கம்பெனிகளைப் போல இந்தியாவில் டாடா கம்பெனி அதிக ஆதாயம் அடையவில்லை.[10] போர் தொடங்கும் முன்னதாக அரசாங்கத்திடம் இக் கம்பெனி செய்துகொண்ட ஒப்பந்தமே இதற்கு முக்கியக் காரணம் ஆகும். ஒரு டன் ரூ. 150/–என்ற விகிதத்தில் எஃகு அளிப்பதாக இக் கம்பெனி உறுதி அளித் திருந்தது.

போர்க் காலத்தில் நிலவிய சாதகமான சூழல் தொடர்ந்து எதிர்காலத்திலும் நீடிக்கும் என்று நம்பினார்கள். எனவே, புதிதாக 4 எஃகு ஆலைகளைத் தோற்றுவிக்கவும், டாடா எஃகு ஆலையை விரிவுபடுத்தவும் திட்டமிட்டார்கள். இந்தச் சாதகச் சூழ்நிலை 1922வரை நீடித்தது. எஃகு தொழில் இந்தியர்களின் தொழில்முயற்சியை உலகிற்குப் பறைசாற்றும் சாதனமாக இருந்தது. ஏனைய தொழில்களுக்கு இது ஒரு வழிகாட்டியாகவும் இருந்தது.

காலம் என்னும் இராசிச் சக்கரத்தின் சுழற்சியில் இலாபமும் இழப்பும், வளர்ச்சியும் தேக்கமும் மாறி மாறி ஏற்படுகின்றன. 1921–22–ல் இத்தகைய திருப்பம் ஏற்பட்டது. இறக்குமதி செய்யப் பட்ட எஃகின் விலை திடீரென்று வீழ்ச்சி அடைந்தது. உள்நாட்டு ஆக்கச் செலவைவிடக் குறைந்த மட்டத்திற்கு இறக்குமதியான எஃகின் விலை வீழ்ச்சி அடைந்தது. 1914–க்கும், 1923–க்கும் இடையே உள்ள ஆண்டுகளில் பொதுவான விலைமட்டம் 60% உயர்ந்துள்ள போதிலும், இறக்குமதியான எஃகின் விலை 20 முதல் 25% வரை மட்டுமே உயர்ந்துசென்றது. அக் காலத்தில் இந்திய

10 Vera Anstey-of cit., p. 244.

அரசாங்கம் தெரிவுக் காப்பு முறையைப்[11] பின்பற்றி வந்தது. இதை அமலாக்கும் சுங்க வாரியத்திடம் இறக்குமதியாகும் அனைத்து எஃகு பொருள்களின் மீதும் 33·3% தீர்வை விதிக்க வேண்டும் என்று டாடா இரும்பு எஃகு கம்பெனி கேட்டுக் கொண்டது. சுங்க வாரியம் தனது பரிந்துரையில் அப்போதுள்ள இறக்குமதித் தீர்வுகளைக் குறைந்தது இருமடங்குகளாக உயர்த்த வேண்டும் என்றும், குறிப்பிட்ட பொருள்களின் மீதான இறக்குமதித் தீர்வையை மேலும் அதிகமாக உயர்த்தலாம் என்றும் கூறியது.

சுங்க வாரியத்தின் பரிந்துரைக்கு ஆதாரமான கருத்தை இங்கே கூறுவோம். இறக்குமதியாகும் ஒரு டன் எஃகின் சராசரி விலை, தீர்வைகள் நீங்கலாகச் சுமார் ரூ. 140·00 ஆகும். இந்தியாவில் ஆக்கச் செலவு, உற்பத்தியாளரின் நியாயமான இலாபம் ஆகியவற்றைக் கொண்டு கணககிடுவோமானால் சராசரியாக ஒரு டன் எஃகின் விலை ரூ. 180·00 ஆக இருக்கும். இந்த விலை இத்தொழிலின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது என்று சுங்க வாரியம் கருதியது. மேற்படி வாரியத்தின் பரிந்துரைக்கு இணங்க 1924–ல் எஃகு தொழில் காப்புச் சட்டம் இயற்றப் பட்டது. பொருள்வாரியாக இறக்குமதித் தீர்வை விகிதங்கள் அறிவிக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை பெறுமான விகிதத் தீர்வைகளாகவும், சில பொருள்களுக்குக் குறித்த தீர்வையும் விதிக்கப்பட்டன. அதைத் தவிர இரயில்வேக்குத் தேவையான தண்டவாளங்கள், அவற்றை இணைக்கும் கட்டைகள் (fish-plates), இரயில் பெட்டிகள் முதலியவற்றின் உற்பத்திக்கு அரசாங்கம் உதவிக் கொடை (subsidy) வழங்கியது.

இக் காலத்தில் உள்நாட்டு உற்பத்தியாளர்களால் வெளிநாட்டு எஃகு உற்பத்தியாளர்களுடன் போட்டியிட முடியவில்லை. இதற்கு மூன்று முக்கியக் காரணங்களைக் கூறவேண்டும்: (1) உள்நாட்டில் ஆககச்செலவு உயர்ந்துசென்றது, (2) உலக மந்தம் காரணமாக வெளிநாடுகளில் எஃகு உற்பததிச் செலவு பெரிதும் குறைந்து விலையும் வீழ்ச்சி அடைந்திருந்தது. அசாதாரண விலை வீழ்ச்சியால் இறக்குமதிப் பொருளகளுடன் போடடியிட முடியவில்லை, (3) உலக மந்தத்தினால் ஏற்படட பாதக விளைவுகளுடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட செலாவணி விகிதமாற்றங் களும்[12] இந்திய உற்பத்தியாளர்களின் இலாபத்தைப் பெரிதும் பாதித்தன. ஒரு ரூபாயின் மதிப்பு 1924–ல் 1 ஷில்லிங் 4 பென்ஸ்

[11] பார்க்க அத்தியாயம் 16.

[12] பார்க்க அத்தியாயம் 24-8; 24-9; 18.

ஆக இருந்தது. அதே ஆண்டில் இவ் விகிதம் 1 ஷில்லிங் 6 பென்ஸ் ஆக உயர்ந்தது. ரூபாய் ஸ்டர்லிங் செலாவணி விகிதமாற்றங்களால் வெளிநாட்டுப் பொருள்கள்—முக்கியமாகப் பிரிட்டனில் உற்பத்தியான பொருள்கள்—மலிவாகிவிட்டன என்றும், அதனால் இறக்குமதித் தீர்வைகளை மேலும் உயர்த்தி இந்திய எஃகு தொழிலிற்குக் கூடுதலான பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுகொள்ளப்பட்டது. ஆனால், அப்போதைய (பிரிட்டிஷ்) இந்திய அரசாங்கம் இறக்குமதித் தீர்வைகளை உயர்த்திப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக உதவிக்கொடை வழங்குவதன்மூலம் எஃகு உற்பத்தியாளர்களின் நலன்களைக் காக்க முடியும் என்று கருதியது. ஒரு டன்னுக்கு ரூ. 20/ வீதம் மொத்த எஃகு உற்பத்தியில் அதிக அளவு 70%-க்கு உதவிக்கொடை வழங்குவது என்றும், இந்த உதவிக்கொடை 1925 செப்டம்பர்வரை கொடுக்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்தது.

1925-ல் உதவிக்கொடையை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்று சுங்கவாரியம் பரிந்துரைத்தது. ஆனால், அரசாங்கம் சுங்கவாரியம் கூறியபடி செயல்படாமல்—அதாவது டன் ஒன்றுக்கு ரூ. 18·00 வீதம் உதவிக்கொடை அளிக்காமல், டன் ஒன்று ரூ. 12·00 வீதம் உதவிக்கொடை அளித்தது. இதனால் அரசாங்கத்திற்கு ரூ. 60 இலட்சம் செலவு ஏற்பட்டது. 1927-ல் மீண்டும் இரும்பு எஃகு தொழிலுக்குக் காப்பு அளிக்கும் பிரச்சினை சுங்கவாரியத்தின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்பட்டது. முற்றிலும் புதிய முறையில் காப்பு அளிக்க வேண்டும் என்று சுங்கவாரியம் கூறிய சிபாரிசுகளைச் சிறு மாற்றங்களுடன் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அவ்வப்போது (ஓராண்டுக்கு ஒரு முறை) காப்புக் கொள்கையையும் காப்பு விகிதத்தையும் தீர்மானிப்பதற்குப் பதிலாகக் குறைந்தது ஏழு ஆண்டுகளுக்கு இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சுங்கவாரியம் கேட்டுக்கொண்டது. இதன் அடிப்படையில் 1927-ல் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. புதிய இறக்குமதித் தீர்வைகள் அடிப்படையான தீர்வைகள், கூடுதலான தீர்வைகள் என இருவகைப்பட்டன. இதில் அடிப்படையான தீர்வைகள் 1923–27 ஆண்டுகளில் நிலவிய விகிதத்தைவிடக் குறைவாக இருந்தன. இந்த அடிப்படையான தீர்வைகள் இறக்குமதியாகும் அனைத்து எஃகு பொருள்களுக்கும் விதிக்கப்படும். இரண்டாவதாக உள்ள கூடுதல் தீர்வைகள் பிரிட்டன் நீங்கலாக அனைத்து நாடுகளிலிருந்து இறகுமதியாகும் எஃகு பொருள்களின்பேரில் விதிக்கப்படும். இதனால் ஐரோப்பிய நாடுகளில் உற்பத்தியான எஃகு-

இந்தியாவில் முன்பு இருந்ததைவிடக் கூடுதலான விலையில் விற்கப் பட்டது; அதே சமயம் பிரிட்டிஷ் எஃகு உற்பத்தியாளர் முன்பு உள்ளதைவிடச் சாதகமான சூழ்நிலையில் இந்திய அங்காடியில் விற்க முடிந்தது. இவ்வாறு இந்திய இரும்பு, எஃகு தொழிலுக்குக் குறிப்பிட்ட காலம்வரை, குறிப்பிட்ட அளவிற்கு அரசாங்கம் காப்பு அளிக்க முன்வந்தது. அதனுடன் பிரிட்டனில் உற்பத்தி யான பொருள்களுக்குச் சில சலுகைகளும், முன்னுரிமையும் கொடுக்கப்பட்டன. உலக மந்தம் மிகவும் தீவிரமடைந்த இக் காலத்தில் ஓரளவிற்கு இந்தியத் தொழிலையும், ஓரளவிற்கு பிரிட்டிஷ் தொழில்களையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை பிரிட்டிஷ்-இந்தியாவின் அரசாங்கம் உணர்ந்திருந்தது. எஃகு தொழிலுக்குக் கொடுக்கப்பட்ட காப்பு 1934-க்குப் பின்னர் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. மேற்படி ஆண்டில் விசாரித்துச் சுங்கவாரியம் பரிந்துரைத்த தீர்வை விகிதங்கள் 1941வரை செல்லுபடியாகும். அதற்கு முன்னதாக இரண்டாவது உலகப் போர் ஆரம்பமாகிவிட்டது. போர் நடந்த ஆண்டுகளில் எஃகிற் கான காப்புத் தீர்வைகள் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டன. இங்ஙனம் 1947 மார்ச்வரை காப்புத் தீர்வைகள் நீடித்தன.

1923-ல் இரும்பு-எஃகு தொழிலிற்கான தெரிவுப் பாது காப்புக் கொள்கை உருவாக்கப்பட்டது. அக் காலத்தில் ஒரு தேசிய அரசாங்கம் இருந்திருக்குமானால் இரும்பு-எஃகு தொழில் நிலையான அடிப்படையில் வளரவும், பல்வகைப் பொருள்களை உற்பத்தி செய்யவும் வழிவகுத்திருக்கும். இருந்தபோதிலும் உலக நாடுகள் ஒவ்வொன்றும் உலக மந்தத்தின் பிடியில் சிக்கி அவதிப்பட்ட இக் காலத்தில் இந்தியத் தொழில்கள் ஓரளவுக்கு முன்னேற்றம் அடையவும், தம்மைப் பராமரித்துக் கொள்ளவும் தெரிவுக் காப்புக் கொள்கை முக்கியக் காரணமாக இருந்தது. இந்தியாவின் தொழில்வளர்ச்சிக்கு அரசாங்கக் கொள்கைகளைவிட, உலகப்போர்கள் முக்கியத தூண்டுகோல்களாக விளங்கின. தெரிவுக் காப்புக் கொள்கையில் உள்ள குறைபாடுகளை ஈடுசெய்யக் கூடியதாக இவை இருந்தன.

இரண்டாவது உலகப்போர் தொடங்கியதும், அரசாங்கம் எஃகு விலையை 1939 மட்டத்தில் நிலைபெறச் செய்தது. ஆக்கச் செலவுகள் எந்த அளவிற்கு உயர்ந்துள்ளனவோ அந்த அளவுக்கு விலை உயர்வும் அனுமதிக்கப்பட்டது.[13] போர் முடிந்த பின்னரும்

13 எஃகு விலையை நிர்ணயிப்பதற்குச் சுங்கவாரியம் பின்பற்றிய அடிப் படையை இங்கே கூறுவோம். உற்பத்திக்கான ஆக்கச் செலவு, மூலதனத் தேய்வு, தொழிலாளர்களுக்கான சலுகைகள், இதர அவசியமான செலவுகள் மொத்த மூலதனத்தில் 8 % இலாபம் முதலியன அனுமதிக்கப்பட்டன.

எஃகு விலைக்கட்டுப்பாடு அகற்றப்படவில்லை. போருக்குப் பின்னர் உலக நாடுகளில் எஃகு விலை இந்தியாவைவிடப் பன்மடங்கு அதிகரித்துச் சென்றதால் இந்திய எஃகு தொழிலிற்குக் காப்புத் தேவைப்படவில்லை. ஆயினும் முன்பு விதிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வைகள் தொடர்ந்து வருவாய்த் தீர்வைகளாக நீடித்தன.

இந்திய அரசாங்கம் பின்பற்றிய சுங்கக் கொள்கையும், அதைச் செயல்படுத்திய முறையும் பொருளாதார அறிஞர்களாலும், மற்றவர்களாலும் திறனாய்வு செய்யப்பட்டன. நீண்டகாலத் தொழில் வளர்ச்சிக்கும், போர்ச் சாதனங்களின் உற்பத்திக்கும் எஃகு அடிப்படையாக இருக்கின்ற காரணத்தால், எஃகு தொழிலிற்குக் காப்பு அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதனால் குறுகிய கால அளவில் நுகர்வோரின் நலன்கள் புறக்கணிக்கப்படுவதை யாரும் மறுக்க முடியாது. இந்தியாவின் எஃகு தொழில் காப்பு அளிக்கப்பட்ட இருபது ஆண்டுகளுக்குள் சிறந்த முறையில் வளர்ந்து இருப்பது பாராட்டுதற்குரியது.

இரண்டாவது உலகப்போரும் எஃகு உற்பத்தியும்

1939-ல் **842,905** டன்களாக இருந்த எஃகு உற்பத்தி இரண்டாவது உலகப்போர் காரணமாக *1943*-ல் **1,149,308** டன் களாக உயர்ந்துசென்றது. உற்பத்தி அளவைத்திறனை அதி கரிக்காத போதிலும், சாதனங்களை மிகவும் அதிக அளவிற்குப் பயன்படுத்தி வந்தார்கள். இதன் விளைவாக உற்பத்தி அளவு உயர்ந்துசென்றது. அசாதாரணமாகத் தோன்றக் கூடிய போர்ச் சூழலில் எஃகு பொருள்களின் தேவை பன்மடங்கு உயர்ந்து சென்றது. அதே சமயம் போர் முடிந்ததும் ஒரு தாற்காலிகமான தேக்கம ஏற்பட்டது. உற்பத்தி அளவைத்திறனை மிகவும் கடின மாகப் பயன்படுத்தியதால் தோன்றிய தேய்மானம் ஒரு முக்கியக் காரணமாக உள்ளது.

1945 முதல் *1947* வரை எஃகு உற்பத்தியில் குறிப்பிடத் தக்க மாறுதல் யாதும் ஏற்படவில்லை. உள்நாட்டு எஃகு விலை மிகவும் மலிவாக இருந்தபோதிலும் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இல்லை. எனவே, கூடுதல் விலையில் எஃகை இறக்குமதி செய்தார்கள். அப்போது எஃகு தொழிலை ஆராய்ந்து அதன் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பரிந்துரை களை வழங்குமாறு அரசாங்கம் சுங்கவாரியத்தைக் கேட்டுக் கொண்டது. இந்தியாவில் உற்பத்தியான எஃகு மலிவாகவும், இறக்குமதியாகும் எஃகு அதிக விலை உள்ளதாகவும் இருந்தது.

எனவே, அங்காடி விலை, உற்பத்தி விலை ஆகியவற்றைப் பேதப் படுத்தும் இருப்பு-விலைத் திட்டத்தை (Retention price scheme) எஃகு தொழிலுக்குச் சுங்கவாரியம் பரிந்துரைத்தது. அதாவது உற்பத்திவிலை என்பது முன்பு கூறியபடி ஆக்கச்செலவின் அடிப் படையில் நிர்ணயிக்கப்படும்; அங்காடி விலை என்பது இறக்குமதி விலையாக இருக்கும்.

விடுதலைக்குப் பின்னர்

விடுதலைக்குப் பின்னர் பாரத அரசாங்கத்தின் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. தன் ஆற்றலில் இயங்கும் பொருளாதார (Self-generating economy) அமைப்பைத் தோற்றுவிப்பது அரசாங்கத்தின் குறிக்கோளாக இருந்தது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இரும்பு-எஃகு தொழில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது.

தொழில்வளர்ச்சிக்கான எதிர்கால வாய்ப்புகள் அந்தந்த நாட்டின் அடிப்படையான துறைகளின் உற்பத்தி அளவால் நிர்ணயிக்கப்படுகின்றன. உள்ளூரான வளர்ச்சிக் கட்டமைப்பைக் காட்டும் வெளிப்படையான குறியீடாக எஃகு உற்பத்தி உள்ளது. எனவே, ஒரு நாட்டின் தலா எஃகு உற்பத்தியும், நுகர்வும் வளர்ச் சியைப் பிரதிபலிக்கின்றன. பாரதம் எந்த அளவிற்குத் தொழில் துறையில் வளர்ச்சி அடைந்துள்ளது அல்லது பின்தங்கி உள்ளது என்பதை அதன் தலா எஃகு உற்பத்தியை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுவதன்மூலம் அறியலாம். 1958–59-ல் பாரதத்தில் நுகரப் பட்ட தலா எஃகு 22 (பவுண்டு) ராத்தலாக இருந்தது. இங்கிலாந்தில் (UK) இது 317 ராத்தலாகவும், அமெரிக்காவில் (USA) 842 ராத்தலாகவும், சோவியத் யூனியனில் 468 ராத்தலாகவும் உள்ளது. நம் நாட்டின் மொத்த எஃகு உற்பத்தி மற்ற நாடுகளைவிடக் குறைவாக உள்ளது. வளர்ச்சி அடைந்த அமெரிக்கா, சோவியத் யூனியன், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் உற்பத்தியைவிடப் பாரதத்தின் உற்பத்தி அளவு மிகவும் குறைந்து காணப்படுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால், சீனாவில் மேற்படி ஆண்டில் பாரதத்தில் உற்பத்தியானதை விட 4 மடங்கு எஃகு அதிக உற்பத்தி ஆகியுள்ளது. (அட்டவணை 19-2 பார்க்கவும்)

பாரதம் விடுதலை அடைந்தவுடன் அறிவித்த 1948, 1956 ஆகிய இரு தொழில்கொள்கை அறிக்கைகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை (15 அத்தியாயம் பார்க்க.) இரும்பு-எஃகு தொழில் போர் முக்கியத்துவம் வாய்ந்த ஆதாரத்

அட்டவணை—19-2
1958—59-ல் எஃகு உற்பத்தி

நாடுகள்	ஆண்டு உற்பத்தி (மில்லியன் டன்களில்)
அமெரிக்கா	102·2
சோவியத் யூனியன்	51·0
மேற்கு ஜெர்மனி	24·5
ஜப்பான்	12·5
இங்கிலாந்து	22·0
சீனா	8·0
பாரதம்	2·0

† R. S. Bisht, and M.P.N. Namboodripad, op-cit., p. 208.

தொழிலாக இருந்தது. தனியார் துறையில் உள்ள தொழில்களை நாட்டுடைமை ஆக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. எதிர்காலததில் இந்தத் தொழில் நிறுவனங்கள் எவ்வாறு செயல் படும் என்ற அடிப்படையில், நாட்டுடைமைபற்றி அரசாங்கம் முடிவு செய்வதாக அறிவித்தது. முதலாவது தொழிற்கொள்கை வெளியிட்ட சில ஆண்டுகளல் அரசாங்கம் தனது கொள்கையை மேலும் தெளிவுபடுத்தியது. அப்போதுள்ள தனியார் நிறுவனங் கள் தொடர்ந்து உற்பத்திசெய்ய அனுமதிக்கப்படும் என்றும், நாளடைவில் பொதுத்துறையில் நிறுவப்படும் புதிய எஃகு ஆலைகளைக்கொண்டு தனியார் துறையின் சர்வாதிக்கக் கட்டுப்பாடு தகர்த்து எறியப்படும் என்றும் கூறப்பட்டது. இதை 1956 தொழிற்கொள்கை மேலும் தெளிவுபடுத்தியது.

1947-ல் பாரதத்தில் நான்கு எஃகு ஆலைகள் இருந்தன. இவற்றுள் பத்திராவதியில் உள்ள எஃகு ஆலை மட்டுமே அரசு துறையில் இயங்கிவந்தது. ஏனைய மூன்று ஆலைகளும் மிகவும் பெரியனவாக இருந்து தனியார் துறையல் இயங்கிவந்தன. இந்த நான்கு ஆலைகளின் உற்பத்தி அளவைத்திறன் 1·2 மில்லியன் டன்கள் ஆகும்.

இரண்டாவது போர்க் காலத்தில் இந்த எஃகு ஆலைகள் மிகவும் சிரமப்பட்டு இயங்கிவந்தன. இதனால் உரிய காலத்தில் ஆலைகள் பழுது பார்க்கப்படவில்லை. பதிலமர்த்தல், நவீனப்படுத்தல் வேலைகள் தடைபட்டன. இதனால் போர் முடிவுற்ற பின்னர் இந்த ஆலைகளின் உற்பத்தி அளவைத்திறன் வெகுவாக வீழ்ச்சி அடைந்தது. 1949-ல் எஃகு உற்பத்தி மிகவும் குறைந்த மட்டத்தில் 9·76 இலட்சம் டன்களாக இருந்தது. இருந்தபோதிலும் 1950-விருந்து எஃகு உற்பத்தி படிப்படியாக உயர்ந்தது. அவ்வப்போது சிறிது சிறிதாக எஃகு ஆலைகள் புதுப்பிக்கப்பட்ட காரணத்தால் உற்பத்தியை அதிகரிப்பது எளிதாக இருந்தது.

1945-விருந்து 1955 வரை எஃகு ஆலைகளைப் புதிதாக அமைக்கத் திட்டமிட்டார்கள். எஃகு தொழிலின் வளர்ச்சித் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு ஒரு நிபுணர் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டது. இக் குழுவின் பரிந்துரைக்கு இணங்க 5 இலட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யக்கூடிய இரு ஆலைகளை நிறுவ முடிவு செய்தார்கள். எஃகு தொழிலின் விரிவாக்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காக இரண்டு அயல்நாட்டு எஃகு நிறுவனங்கள் நியமிக்கப்பட்டன. இவற்றின் ஆலோசனை அறிக்கை 1949-ல் வெளியிடப்பட்டது. 10 இலட்சம் டன்கள் எஃகுஉற்பத்திசெய்யக் கூடிய ஆலையை நிர்மாணிப்பதற்கு ரூ. 90/- கோடி ஆகும் என்று மதிப்பிட்டனர். அந்தச் சமயம் அரசாங்கத்திடம் போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் எஃகு ஆலையை நிர்மாணிக்கும் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால், பல ஆண்டுகளுக்குப் பின்னர்ப் பின்னோக்கிப் பார்ப்போமானால் அரசாங்கம் மேற்கொண்ட முடிவை நாட்டிற்கு ஏற்பட்ட ஓர் இழப்பு எனக் கருத வேண்டியிருக்கிறது. ஆண்டுதோறும் எஃகு தேவை உயர்ந்து செல்வதாலும், பெரும்பாலான எஃகு பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதாலும் ஒவ்வோர் ஆண்டிலும் கணிசமான அளவிற்கு அந்நியச் செலாவணியிற் செலவிட வேண்டியிருந்தது.

எஃகு தொழிலின் வளர்ச்சியைப்பற்றி அடுத்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்குச் சிந்திக்கவில்லை. 1950-க்கு முன்னர் புதிதாக எஃகு ஆலைகளை நிர்மாணிக்க முடிவு செய்திருந்தோமானால், இரண்டாவது திட்டகாலம் முடியுமுன்னர் பாரதம் எஃகு உற்பத்தியில் கிட்டத்தட்ட தன்னிறைவு அடைந்து இருக்க முடியும். புதிய எஃகு ஆலைகளை உருவாக்கும் பணிகள் தடைபட்டன. இதனால் இரண்டாவது திட்டத்தில் நான்கு ஆண்டுகள் வரை (1956-60) பெருவாரியான அளவிற்கு எஃகு இறக்குமதி

செய்யப்பட்டது. இரண்டாவது திட்டகாலத்தில் இறக்குமதி யான எஃகு அளவு கீழே உள்ள அட்டவணை (19–3) கொடுக்கப் பட்டுள்ளது.

அட்டவணை—19–3†

ஆண்டுகள்	இறக்குமதியான எஃகின் மதிப்பு (கோடி ரூபாய்களில்)
1955	59·39
1956	131·00
1957	167·15
1958	97·10
1959 (ஜனவரி முதல் அக்டோபர் வரை)	70·33
மொத்தம்	525·67

† ஆதாரம் : R. S. Bisht and M.P.N. Namboodripad., op-cit p.210.

1950–க்கு முன்னர்ப் பத்து இலட்சம் டன் உற்பத்தி அளவைத் திறன் உடைய எஃகு ஆலையை நிறுவுவதற்கான செலவுத் தொகை ரூ. 90/– கோடி என்று கருதப்பட்டது. ஆனால், 1950–க்குப் பின்னர், புதிய எஃகு ஆலையைக் (அதே அளவைத் திறன் உடைய ஆலையை)கட்டிமுடிக்கச் சுமார் ரூ.150 கோடி முதல் ரூ 180 கோடி வரை செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. காலம்தாழ்த்திச் செய்துள்ள முடிவு காரணமாகப் பலவகையிலும் இழப்பு ஏற்பட் டுள்ளது. முதலில் புதிய எஃகு ஆலைகளை உருவாக்க அதிக அள விற்கு அந்நியச் செலாவணி தேவைப்பட்டது. இரண்டாவதாக, 1956–க்குப் பின்னர் அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு அதிகரித் துள்ளது. இதனால் எஃகு இறக்குமதிக்காகக் குறைந்த அளவிற்கு அந்நியச் செலாவணி ஒதுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து எஃகை உள்ளீடுபொருளாகப்பயன்படுத்தும் தொழில்களின் உற்பத்தியும் குறைந்தது. மேற்படி தொழில்களில் மிகை உற்பத்தி அளவுத்திறன் நிலவியது. மூன்றாவதாக, எஃகின் கிடைப்பருமையால் இரயில்வேயின் முதலீடும்,இயந்திரத் தொழில் உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

உலக பாங்கின் விருப்பத்தின்படி பாரதத்தின் எதிர்கால எஃகு தேவையைப் பரிசீலனை செய்வதற்கு நுட்ப ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதுவரை எதிர்பார்த்ததைவிட அதிக வேகமாக எஃகின் தேவை உயர்ந்துசெல்லும் என்று இக் குழு கூறியது. முதல் திட்டகாலத்தில் எஃகைப் பயன்படுத்தும் தொழில்கள் மிக அதிக வேகமாக (எதிர்பார்த்ததைவிட) வளர்ந்திருப்பதால் 1958-ல் கணிசமான அளவிற்குப் பூர்த்தியான எஃகு கிடைப்பருமையாக இருக்கும். கிட்டத்தட்ட 4 இலட்சம் டன்களிலிருந்து 5 இலட்சம் டன்கள்வரை துண்டுவிழக்கூடும் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால், இந்த மதிப்பீடும் ஒரு குறைந்த அளவு மதிப்பீடாகவே இருந்தது.

1953-ல் பொதுத்துறையில் ஓர் எஃகு ஆலையை நிர்மாணிப்பதற்காகக் குருப்-டிமாக் (Krupp and Demag) என்ற ஜெர்மானிய நிறுவனத்துடன் பாரத அரசாங்கம் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி 5 இலட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யக்கூடிய ஆலையை ரூ. 80/- கோடிச் செலவில் இந்த ஜெர்மானியக் கம்பெனி கட்டித்தர முன்வந்தது. இந்த உடன்படிக்கையைச் செயல்படுத்தும் முன்னதாக அரசாங்கம் மறுபடியும் நாட்டின் எதிர்காலத் தேவையை ஆராய்ந்தது. தனிபார் துறை நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கு இசைவு தந்தாலும், தொடர்ந்து எஃகு உற்பத்தியில் சுமார் 30 இலட்சம் டன்கள்வரை துண்டுவிழும் என்று தெரியவந்தது. அதிவேகமாக உயர்ந்துசெல்லும் எஃகு தேவையைப் பூர்த்திசெய்வதற்குப் புதியதாக ஒவ்வொன்றும் 10இலட்சம் டன் உற்பத்தி அளவைத்திறன் உடைய மூன்று எஃகு ஆலைகளைப் பொதுத்துறையில் ஏற்படுத்த அரசாங்கம் முடிவு செய்தது. அதற்கு இணங்க ஜெர்மானியக் கூட்டுமுயற்சியில் 10இலட்சம் டன்கள் எஃகு கட்டிகள் தயாரிக்கும் ஆலை ரூர்க்கேலா (Rourkela) என்னும் இடத்தில் நிறுவப்பட்டது.

1955-ல் இரண்டாவது ஆலைக்கான ஒப்பந்தம் சோவியத் நாட்டுடன் செய்துகொள்ளப்பட்டது. இந்த ஆலை ஆண்டுதோறும் 10 இலட்சம் டன்கள் எஃகுகட்டிகளை உற்பத்தி செய்யும். இது பிலாய் (Bhilai) என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது. மூன்றாவது ஆலைக்கான ஒப்பந்தம் 1956-ல் பிரிட்டிஷ் நிறுவனங்களின் கூட்டு அமைப்புடன் (Consortium of British Steel Producers) செய்துகொள்ளப்பட்டது. இந்த ஆலை துர்க்காப்பூரில் நிறுவப்பட்டது.

1950-51-ல் தனிபார் எஃகு ஆலைகளின் உற்பத்தியை விரிவுபடுத்த எண்ணினர். முதல் திட்டத்திலேயே இந்திய இரும்பு-

எஃகு கம்பெனியை விரிவுபடுத்துதல், நவீனப்படுத்துதல்போன்ற திட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. 1953-ல் சுமார் 6·4 இலட்சம் டன்களாக இருந்த உற்பத்தி அளவைத்திறனை 1957-ல் 1·4 மில்லியன் டன் இரும்பாக அதிகரிக்கவும், பூர்த்தியான எஃகு உற்பத்தி அளவை 7 இலட்சம் டன்களிலிருந்து 8 இலட்சம் டன்களாக அதிகரிக்கவும் திட்டமிட்டனர். இந்திய இரும்பு,எஃகு கம்பெனியின் மேற்படி திட்டங்கள் யாவும் நிறைவேற்றப் பட்டன.

1951-ல் டாடா இரும்பு எஃகு கம்பெனி உற்பத்தியை விரிவாக்கவும், ஆலையைப் புதுப்பிக்கவும் திட்டமிட்டது. விற்பனை செய்யக்கூடிய பூர்த்தியான எஃகு பொருள்களின் உற்பத்தியை 9·3 இலட்சம் டன்களாக உயர்த்த வேண்டும்; எஃகு கட்டிகளின் உற்பத்தியை 2 மில்லியன் டன்களாக உயர்த்த வேண்டும். அடுத்து முழுமையாகப் பூர்த்தியானதும், ஒருபகுதி பூர்த்திசெய்யப் பட்டதுமான எஃகு பொருள்களின் உற்பத்தியை 1·5 மில்லியன் டன்களாக அதிகரிக்கவும் திட்டமிட்டனர். மேற்படி டாடா கம்பெனியின் திட்டங்கள் யாவும் 1958-ல் பூர்த்தியடைந்தன.

மைசூர் அரசாங்கத்தின் உடைமையாகச் செயல்பட்ட பத்திராவதி இரும்பு எஃகு ஆலை முதல் திட்டகாலத்தில் உற்பத்தி அளவைத்திறனை ஓர் இலட்சம் டன்களாக உயர்த்தியது. இந்த ஆலையில் கடினமற்ற எஃகு பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக விலை உயர்ந்த எஃகு பொருள்களைத் தயாரிக்க முற்பட்டனர். முதல் திட்டத்தில் இதற்காக ரூ. 3·7 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 5·95 கோடியும் செலவிட்டுள்ளார்கள்.

புதிய பொதுத்துறை எஃகு ஆலைகள் மூன்றும் உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளன. 1959 பிப்ரவரி மாதத்திலேயே பிலாய், ரூர்க்கேலா ஆகிய இரு எஃகு ஆலைகளின் முதல் ஊதுலைகள் இயங்க ஆரம்பித்துள்ளன. அதே ஆண்டில் பிலாய் ஆலையின் மேலும் இரு ஊதுலைகள் செயல்படத் தொடங்கின. 1959 டிசம்பரில் துர்க்காப்பூர் ஆலையின் முதல் ஊதுலை ஆரம்பம் ஆகியது. 1960 ஜனவரியில் ரூர்க்கேலாவின் இறுதிக்கட்டம் பூர்த்தி அடைந்தது.

முதலீடு : இரண்டாவது திட்டத்தில் எஃகு உற்பத்திக்காக ரூ. 353 கோடி முதலீடுசெய்வது என்று ஆரம்பத்தில் கருதினார்கள்; ஆனால், மேற்படி முதலீட்டுத்தொகை முழுவதையும் இரண்டாவது திட்டத்திலேயே செலவு செய்ய முடியவில்லை; ஆகையால் இதில் ஒரு பகுதி மூன்றாவது திட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அட்டவணை—19·4

இரும்பு, எஃகு உற்பத்தி, 1950-51—1969-70

பொருள்	அலகு	1950—51	1960—61	1965—66	1966—67	1967—68	1968—69	1969—70	உற்பத்திப் பெருக்கம் 1969—70 / 1950—51 %
இரும்புத் தாதுக்கள்	மில்லியன் டன்கள்	3·0	11·0	18·1	19·3	19·1	21·2	21·7	700 %
தேனிரும்பு	,,	1·69	4·31	7·09	7·00	6·89	7·29	7·39	437·2 ,,
எஃகு கட்டிகள்	,,	1·47	3·42	6·53	6·60	6·33	6·51	6·43	437·4 ,,
பூர்த்தியான எஃகு	,,	1·04	2·39	4·51	4·49	4·05	4·70	4·94	475·0 ,,
எஃகு வார்ப்புகள்	'000' டன்கள்	—	34	57	53	51	49	46	—

ஆதாரம் : Eastern Economist—Annual Number, 1972, p. 1246,

திட்டத்தின் விளைவாகத் தோன்றிய பொதுவான விலை உயர்வின் காரணமாகக் கட்டுமானச் செலவுகள் அதிகரித்தன. அதைத் தவிர ஆரம்பத்தில் மதிப்பீடு செய்ததில் உள்ள சில பிழைகள் காரணமாகவும் முதலீட்டுச் செலவு உயர்ந்துசென்றது. இதனால் மூன்று எஃகு ஆலைகளுக்கான முதலீட்டுச் செலவு ரூ. 353 கோடியிலிருந்து ரூ. 477 கோடியாக உயர்ந்துசென்றது. ரூபாய் முதலீட்டுச் செலவு உயர்ந்ததைத் தவிர ஆலைகளை நிறுவுவதற்கான வெளி நாட்டுச் செலாவணித் தேவையும் உயர்ந்துசென்றது. ஆரம்பத்தில் ரூ. 228 கோடியாக் இருந்த அந்நியச் செலாவணி மதிப்பீடு நடை முறையில் ரூ. 292 கோடியாக உயர்ந்துசென்றது.

இரண்டாவது திட்டகாலத்தில் 1959வரை தனியார் துறையில் எஃகு ஆலைகளில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ. 100·70 கோடியாகும். முதல் திட்டத்தில் இத் தொகை ரூ. 49·4 கோடியாக இருந்தது.

இரும்பு-எஃகு உற்பத்திப் போக்கை முன்பக்க அட்டவணை (19·4) விவரித்துக் கூறுகிறது. தேனிரும்பு, எஃகு கட்டிகள், பூர்த்தியான எஃகு முதலியன 1950-51-ல் இருந்ததைப் போல நான்கு மடங்கிற்கும் அதிகமாக அதிகரித்துள்ளன. அதே சமயம் இரும்புத் தாதுப் பொருள்களின் உற்பத்தி சுமார் 700%-க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இதில் கணிசமான விழுக்காடு வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

எஃகு பொருள்களின் விலைப் பிரச்சினை

பல ஆண்டுகளாகப் பாரதத்தில் உற்பத்தியாகும் எஃகு மலிவாகவும், இறக்குமதியான எஃகின் விலை கூடுதலாகவும் இருந்தது. 1939-ல் எஃகு தொழிலுக்குக் காப்பு நீடிப்பதுபற்றிச் சுங்க வாரியம் ஆராய்ந்தது. இறக்குமதியான எஃகின் விலையைவிடக் குறைந்த விலையில் இந்திய உற்பத்தியாளர் எஃகை உற்பத்தி செய்ய முடியும் என்று தெரியவந்தது. உள்நாட்டு எஃகின் ஆக்கச் செலவிற்கும், இறக்குமதியான எஃகின் விலைக்கும் அதிக வேறுபாடு இருந்தது. இந்த விலை வேறுபாட்டால் நாட்டில் யார் பலன் அடையவேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியிருந்தது. இதனால் சமுதாயம், உற்பத்தியாளர், எஃகை உபயோகிப்பவர் ஆகிய முத்தரத்தார்களில் யாருக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்று ஆராய்ந்தார்கள். இறுதியில் உற்பத்தியாளர்கள் ஆக்கச் செலவால் நிர்ணயிக்கப்படும் விலையைப் பெறுவது என்றும், நுகர்வோர் (எஃகை உபயோகிப்பவர்) இறக்குமதியாகும் எஃகின் விலையைச் செலுத்துவது என்றும் சுங்கவாரியம்

தீர்மானித்தது. இதனால் உற்பத்தியாளர்கள் இருப்பு விலையைப் (Retention price) பெறுவார்கள். அங்காடியில் இறக்குமதியான எஃகும், உள்நாட்டில் உற்பத்தியான எஃகும் ஒரே விலைக்கு விற்கப்படும். இவ் விலைவேறுபாட்டைக் கொண்டு விலைச் சமன்பாட்டு நிதி ஒன்று உருவாக்கவும் தீர்மானிக்கப்பட்டது (Price Equalization Fund).

உற்பத்தியாளர்க்குக் கிடைக்கக் கூடிய இருப்பு விலையை அவ்வப்போது சுங்க ஆணைக் குழு தீர்மானிக்கும். இவ்வாறு இருப்புவிலையைத் தீர்மானிக்கும்போது சரக்கு எடுத்துச் செல்லும் செலவு, கச்சாப் பொருள் விலை, ஊதிய (கூலி) விகிதம், சக்தி மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் விலைமாற்றங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

எஃகின் விலைக்கட்டமைப்பைப் பலரும் குறைகூறியுள்ளார்கள். முக்கியமாக, இருப்புவிலை நிர்ணயிக்கப்படும் முறை பலராலும் திறனாய்வு செய்யப்பட்டுள்ளது. சுங்கவாரியமும், சுங்க ஆணைக் குழுவும் இவ்வாறு இருப்புவிலையை நிர்ணயிக்கும்போது உற்பத்தியாளர்களின் நீண்ட கால நலன்களைக் கருத்தில் கொள்ளவில்லை. விலைத்திட்டத்தை முடிவு செய்யும்போது எதிர்காலத்தில் எஃகு ஆலைகளை விரிவுபடுத்தவும், புதுப்பிக்கவும், பதிலமர்த்தவும் பெருமளவு மூலதனம் தேவைப்படும் என்பதை மறந்துவிட்டார்கள். இத் தொழிலில் தோன்றக் கூடிய பிரச்சினைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டிருப்பார்களேயானால், இதைப் போன்ற முடிவுக்கு வந்திருக்கமாட்டார்கள். காட்டாக, உலகப்போர்ச் சமயத்திலும் அதற்குப் பின்னரும் அங்காடி விலைக்கு உற்பத்தியாளர்கள் எஃகை விற்க முடியுமானால் இத் தொழிலின் எதிர்கால விரிவாக்கத்திற்குத் தேவையான மூலதனத்தை 1950–51 ஆம் ஆண்டிலேயே திரட்டியிருக்க முடியும்.

சுங்கவாரியம் முதலீடு செய்த மொத்த மூலதனத்தில் 8% இலாபத்திற்கு வழிவகுத்ததாகக் கூறப்பட்டது. ஆனால், பங்குதாரர்களுக்கு 8% இலாப ஈவு கொடுக்க முடியவில்லை. இதை எஃகு உற்பத்தியாளர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள். அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரி, நிருவாகப் பதிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் கமிஷன், தொழிலாளர்களுக்கு இலாபத்தில் கொடுக்கப்படும் போனஸ் முதலியன இதில் சேர்க்கப்படவில்லை. எனவே, மேற்படி செலவுகளைக் கழிப்போமானால் பங்குதாரர்களுக்கு 3·5% இலாப ஈவு மட்டுமே கொடுக்க முடிந்தது. இது நாட்டின் பாங்கு விகிதத்தைவிடக் குறைவாக இருந்தது என்பதுடன் இலாபத்தின் ஒரு பகுதியைக் காப்பு நிதிக்காக ஒதுக்குதல்

அல்லது எதிர்காலத்திற்கு எடுத்துச் செல்லுதல் இயலவில்லை. பேரளவு எஃகு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தங்களுடைய வருமானத்திலிருந்து எதிர்கால வளர்ச்சிக்குச் சேமிக்கவும், விரிவாக்கத் திட்டங்களை நிறைவேற்றவும் இயலவில்லை.

மூலதனத் தேய்மானத் தள்ளுபடி 6·25% அனுமதிக்கப்பட்டது. உண்மையில் பதிலமர்த்தும் செலவுகள் இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் (1951–ல்) 150% உயர்ந்துவிட்டன. எனவே, தேய்மான நிதி போதுமானதாக இல்லை. இவ்வாறு எஃகு தொழிலின் வளர்ச்சி அரசாங்கம் பின்பற்றிய விலைக் கொள்கை காரணமாகப் பெரிதும் தடைபட்டது என்று கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இரண்டாவதாக, விலைச் சமன்பாட்டு நிதி திறனாய்வு செய்யப்பட்டது. உற்பத்தியாளருக்குக் கிடைக்க வேண்டிய—கிடைப்பருமையான அங்காடிச் சூழலின் காரணமாக—மிகையான இலாபத்தை அரசாங்கம் பெற்றுக்கொண்டு விலைச் சமன்பாட்டு நிதியை ஏற்படுத்தியும் நிருவகித்தும் வந்துள்ளது. இதனால் இந்த நாட்டுமக்கள் சுமார் ரூ. 27 கோடி அளவிற்கு ஆதாயம் அடைந்துள்ளார்கள். எஃகு தொழிலின் நீண்ட காலப் புனரமைப்புப் பிரச்சினைகளையும், அதற்கான செலவுகளையும் கருதும்போது சமுதாயத்திற்குக் கூடுதலான அளவுக்கு மறைமுகமான (தோன்றா) இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்பதை உணரலாம்.

டாடா இரும்பு எஃகு கம்பெனியும், இந்திய இரும்பு எஃகு கம்பெனியும் மிகவும் சிறந்த முறையில் நிருவகிக்கப்பட்டு வந்த போதிலும், எஃகு விலை உயர்ந்தமட்டத்தில் இருந்தபோதிலும் இருப்புவிலைக் கொள்கை காரணமாக இலாபஅளவு மிகவும் குறைந்த விழுக்காடாக இருந்ததால், பங்கு அங்காடியில் வேண்டிய மூலதனத்தைத் திரட்ட முடியவில்லை. எனவே, இந்த நிறுவனங்கள் விலைச் சமன்பாட்டு நிதியிலிருந்து சலுகையான வட்டி விகிதத்தில் கடன் வாங்கியுள்ளன.

எஃகின் இருப்புவிலைத் தீர்வை, ஆயத் தீர்வை முதலியவை காரணமாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட எஃகின் விலை இறக்குமதியாகும் எஃகைவிட அதிகமாக இருந்தது. சிலவகைப் பொருள்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட இருப்பு விலை வெளிநாடுகளில் நிலவக்கூடிய அங்காடி விலையைவிட அதிகமாக இருந்தது.

எஃகின் விலை உயர்ந்திருந்ததால், இதைக் கச்சாப் பொருளாகப் பயன்படுத்தும் தொழில்களின் ஆக்கச் செலவும் அதிகமாகிவிட்டது. எஃகை அதிகம் பயன்படுத்தும் பொறியியல் தொழில்

கள், இயந்திரசாதனத் தொழில்கள் முதலியன பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன. மேற்படி பொருள்களுக்கு மலிவான விலையில்—காட்டாக இரும்புவிலையில்—எஃகு கிடைக்கக் கூடுமானால், இவற்றின் ஆக்கச் செலவு குறைவாக இருக்கும்; இப்பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் அதிகமாக இருந்திருக்கும்.

1940-லிருந்து 1964 வரை எஃகு ஒரு கட்டுப்பாடு செய்யப்பட்ட பொருளாக இருந்தது. எஃகு ஓர் ஆதாரமான கச்சாப் பொருளாக இருந்த காரணத்தால் அதன் விலை எப்போதும் மலிவாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அதன் விலையை அரசாங்கம் கட்டுப்படுத்தியது. ஆக்கச் செலவின் அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. ஆக்கச் செலவு உயரும்போது, அரசாங்கம் எஃகின் விலையையும் உயர்த்தும். முன் தேர்ந்திட்ட விலை உயர்வினால், எஃகு ஆலைகளுக்குக் கிடைக்க வேண்டிய கூடுதலான தொகையை எஃகு சமன்பாட்டு நிதியிலிருந்து அரசாங்கம் கொடுத்து உதவும். 1964-ல் மேற்படி எஃகு கட்டுப்பாடும், எஃகு சமன்பாட்டு நிதியும் முற்றிலும் நீக்கப்பட்டன.

1955-ல் அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் எஃகு கொண்டுவரப்பட்டது. எஃகின் விற்பனையும், பகிர்வும் இரும்பு எஃகு கட்டுப்பாட்டு அதிகாரியால் நிர்ணயிக்கப்பட்டன. முக்கிய எஃகு உபயோகிப்பாளர்களுக்கு அரசாங்கம் பங்கு அளவு (கோட்டா–Quota) நிர்ணயிக்கும். இவ்வாறு எஃகின் விலை கட்டுப்படுத்தப்பட்டதுடன் இதன் பகிர்வும் (விற்பனையும்) 1955–லிருந்து கட்டுப்படுத்தப்பட்டது. 1965-ல் மேற்படி விற்பனைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. அதாவது எஃகை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அங்காடியில் யாருக்கு வேண்டுமானாலும் (பொருள்களை) விற்கலாம் என்று அனுமதிக்கப்பட்டது.

எஃகு தொழிலுக்குக் கிடைக்க வேண்டிய இலாபம் இரு முக்கியக் காரணங்களினால் கிடைக்கவில்லை என்று திரு. J. R. D. டாடா கூறியுள்ளார். ஒரு புறம் அரசாங்கம் உச்ச விலையை நிர்ணயிக்கிறது. மற்றொரு புறம் ஆக்கச் செலவுகள் உயர்கின்றன. இதனால் எஃகு தொழிற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய இலாபம் கிடைக்கவில்லை. இவர் கூறியது தனியார் எஃகு தொழிலுக்கு மட்டும் அல்லாமல் பொதுத்துறையில் இயங்கிவரும் இந்துஸ்தான் எஃகு கம்பெனிக்கும் பொருந்தும். கட்டுப்படியாகக் கூடிய அளவில் விலையை நிர்ணயிக்காத காரணத்தாலும், பதிலமர்த்தும் விலையில் தேய்மானத் தள்ளுபடி வழங்காத காரணத்தாலும் பொதுத்துறை எஃகு ஆலைகள் இலாபகரமாகச் செயல்படவில்லை.

பொதுத்துறை எஃகாலைகளின் இழப்புகள்-ஏன் ?

பாரதத்தில் உள்ள எஃகு ஆலைகளின் உற்பத்தி அளவுத்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. 1971-ல் பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் உள்ள எஃகு ஆலைகளின் மொத்த உற்பத்தி அளவுத்திறன் 9 மில்லியன் டன்களாக இருந்த போதிலும், மொத்த உற்பத்தி (1971-ல்) 6·11 மில்லியன் டன் களாக இருந்தது. பொதுத் துறையில் உள்ள இந்துஸ்தான் எஃகு கம்பெனியின்[14] உற்பத்தி அளவுத்திறன் 5·9 மில்லியன் டன்கள் எஃகு கட்டியாகும்; டாடா இரும்பு, எஃகு கம்பெனியின் உற்பத்தி அளவுத்திறன் 2·0 மில்லியன் டன்கள் ஆகவும், இந்திய இரும்பு எஃகு கம்பெனியின் அளவுத்திறன் ஒரு மில்லியன் டன் களாகவும் உள்ளன. 1970-ல் எஃகு கட்டிகளின் உற்பத்தி 6·43 மில்லியன் டன்களாக இருந்தது. பூர்த்தியான எஃகின் உற்பத்தி 1970-ல் 5·05 மில்லியன் டன்களாகவும், 1971-ல் 4·72 மில்லியன் டன்களாகவும் இருந்தன. எஃகு கட்டிகளின் உற்பத்தி 1966-67-ல் தான் உச்ச அளவில், 6·59 டன்களாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் 1971 வரை எஃகு உற்பத்தி இந்த அளவைக் கடக்கவில்லை.

பொதுத்துறையில் உள்ள எஃகு ஆலைகளில் எந்த அளவிற்கு மிகையான (பயன்படுத்தாத) உற்பத்தி அளவுத்திறன் உள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டும்.

மிகப் பெரிய ஐந்து ஆலைகளில் டாடா ஆலையின் உற்பத்தி அளவைத்திறன் தான் மிக அதிக அளவிற்குப் (85%) பயன்படுத்தப் பட்டது. இதற்கு அடுத்தாற்போலப் பொதுத்துறையில் உள்ள பிலாய் எஃகு ஆலையின் உற்பத்தித் திறன் அளவு திருப்திகரமாகப் பயன்படுத்தப்பட்டது (77%). ரூர்கேலா ஆலையில் (1971) ஏற்பட்ட விபத்தின் காரணமாக உற்பத்தி தடைப்பட்டது. தொழில் நுட்ப ரீதியான காரணிகளும், தொழிலாளர் சச்சரவுகளும் மிகப் பெரிய அளவிற்கு உற்பத்தியைப் பாதித்துள்ளன. பொதுத்துறை ஆலை களில் மிகவும் முக்கியமான உள்ளிடு பொருள்கள், சாதனங்கள், இடைநிலைப் பொருள்கள் ஆகியவற்றின் இருப்பு (inventory)

[14] இந்துஸ்தான் எஃகு கம்பெனி 1953-ல் நிறுவப்பட்டது. 1958-ல் ரூர்க்கேலா எஃகு ஆலையின் நிருவாகப் பொறுப்பையும், 1957-ல் பிலாய், துர்க்காப்பூர் ஆலைகளின் நிருவாகப் பொறுப்பையும் இது ஏற்றுள்ளது. பாரதத்தில் உள்ள மிகப்பெரிய நிறுவனங்களின் வரிசைப் பட்டியலில் ரூ. 1026·6 கோடி மூலதனத்துடன், 1970-71-ல், இந்துஸ்தான் எஃகு கம்பெனி முதலிடம் பெற்றுள்ளது. உலகில் அமெரிக்கா நீங்கலாக உள்ள அனைத்து நாடுகளிலும் உள்ள மிகப்பெரிய 200 நிறுவனங்களின் வரிசையில் இந்துஸ்தான் எஃகு கம்பெனி 175 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

ஆதாரம் : Economic Times

போதுமான அளவிற்கு இல்லை. இவ்வாறு பல காரணிகளால் உற்பத்தி அளவைத்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்பட வில்லை. பொதுத்துறை நிறுவனங்களை நிருவகிப்பவர்களுக்குப் போதுமான உரிமைகளும், சலுகைகளும் வழங்கவேண்டும் என் பதைத் தற்சமயம் அரசாங்கமும் உணர்ந்துள்ளது.

அட்டவணை—19·5

எஃகு கட்டிகள்
(உற்பத்தி–அளவைத்திறன் விகிதம்)

ஃகு ஆலைகள்	1969—70	(சதவீதம்) 1970—71
1. இந்துஸ்தான் எஃகு நிறுவனம்		
(அ) பிலாய்	75	77
(ஆ) ரூர்க்கேலா	61	56
(இ) துர்க்காப்பூர்	51	43
2. டாடா இரும்பு எஃகு கம்பெனி	85	85
3. இந்திய இரும்பு எஃகு கம்பெனி	70	62

ஆதாரம்: Eastern Economist, Annual Number, 1972, p. 1185.

மூன்று பொதுத்துறை ஆலைகளின் உற்பத்தி அளவைத்திறன் 5·9 மில்லியன் டனகளாக உள்ளது. இதில் குறைந்தது முக்கால் பகுதி, அதாவது 4·42 மில்லியன் டன்கள்கூட உற்பத்தி செய்ய முடியவில்லையாதலால் அவை இலாபகரமாகச் செயல்பட முடியாதும் ஆகையால், பொதுத்துறை எஃகுஆலைகள் இழப்பை அடைவதற்குப் பயன்படுத்தாத உற்பத்தி அளவுத்திறன் மிகவும் முக்கியக் காரண மாகும். அதைத்தவிர, நிருவாக, தொழில்நுட்பச் சீர்திருத்தங்களை அமலாக்கக் கூடுமானால் இவை இலாபகரமாகச் செயல்படக்கூடிய வாய்ப்புகளும் அதிகரிக்கும். இறுதியாக அரசாங்கம் (சுங்க ஆணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில்) நிர்ணயிக்கும் எஃகு விலை கட்டுபடியாகக் கூடியதாக இல்லை. எஃகு ஆலைகளின் அடிப்படையான பிரச்சினைகளைத் தற்சார்பு அற்ற நிலைமையில் அணுகக்கூடியுமேயானால் அவற்றிற்குச் சிறந்த முறையில் தீர்வு காணலாம்.

20. சிறுதொழில்கள்

முக்கியத்துவம்

பொருளாதார வளர்ச்சிக்கு மரபாகக் கொடுக்கப்படும் விளக்கம்—அதாவது தலா உற்பத்தியின் பெருக்கம்—வளர்ந்து வரும் நாடுகளுக்குப் போதுமானதாகவோ, திருப்தி அளிக்கக்கூடியதாகவோ இல்லே. ஒரு நாட்டில் கிடைக்கக்கூடிய சாதனங்கள், உற்பத்திக் காரணிகள் ஆகியவற்றைச் செம்மையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்துவதைப் பொருளாதார வளர்ச்சியின் ஒரு கூருகக் கருதவேண்டும். மக்கட்செல்வம் (Man power) மிகுந்துள்ள பாரதம் போன்ற நாடுகளில் அவை முழுமையாகவும் ஆக்கரீதியாகவும் பயன்படுத்தப்படவேண்டும்; வயதுவந்த அனைவருக்கும் வேலே அளித்தல் முக்கியமாக வலியுறுத்தப்படவேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு மக்கட்செல்வம் ஒரு சாதனமாக உள்ளது என்றும், இதை ஓர் இடையூருகக் கருத முடியாது என்றும் சில அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.[1] மக்களின் உழைப்புச் சக்தியைத் தகுந்த முறையில் பயன்படுத்தி மூலதன ஆக்கத்தைத் தோற்றுவிக்கலாம் என்றும், இதனுல் பொருளாதார வளர்ச்சி வேகம் உந்தப்படும் என்றும் கருதுகிருர்கள்.

பாரதத்தின் நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் அனைவருக்கும் வேலேஅளித்தல் பெயரளவிற்கு ஏற்கப்பட்டதே தவிர இது ஒரு முக்கியக் குறிக்கோளாகச் செயல்படவில்லே. உற்பத்திப் பெருக்கத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டதே அல்லாமல் உற்பத்திக் காரணிகளின் முழுவேலேயாக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லே. பேரளவுத் தொழில்களின்

[1] W.A. Lewis-Economic Development with Unlimited Supplies of Labour reprinted in Agarwala and Singh (Ed) Economics of Under-Development (O.U.P.) also Ragnar Nurkse Problems of Capital Formation in Underdeveloped Countries, (Oxford); Vakil C. N., and Bahmanand P.R., - Planning for An Expanding Economy Vora & Co., Bombay, 1956.

காரணமாக, உற்பத்தி உயர்ந்த அளவிற்கு வேலையளிப்பு ஓங்கவில்லை. வேலையளிப்பின் விரிவாக்கம் உற்பத்தி அளவைவிடத் தேர்ந்தெடுத்துள்ள தொழில்நுட்பத்தை[2] அதிகம் சார்ந்துள்ளது எனலாம். பேரளவுத் தொழில்களில் தனி ஒருவரின் உற்பத்தித் திறன் உயர்வாக இருக்கும். இதற்கு மூலதனச் செறிவுடைய நுட்பமுறை காரணமாக உள்ளது. இத் தொழில்கள் உடனடியாக வேலையளிப்பை அதிகரிக்கவில்லையென்றாலும், உற்பத்தித்திறனை உயர்த்துவதன் வாயிலாக நீண்டகால அளவில் சேமிப்பு-முதலீட்டை ஊக்குவித்துப் பொருளாதார வளர்ச்சியைத் தோற்றுவிக்கும்.

பாரதம் போன்ற நாடுகளில் வேலையளிப்பு மிகவும் முக்கியமான பிரச்சினையாக உள்ளது. இதை அரசியல், சமூக, பொருளாதாரக் காரணங்களுக்காக உடனடியாகத் தீர்க்கவேண்டிய கட்டாயம் இந் நாடுகளில் நிலவுகின்றது. மக்கள்தொகையில் கணிசமான பகுதியினர் இளம் வயதினராக இருப்பதால்[3], பிரச்சினையின் தீவிரத் தன்மை மேலும் அதிகரித்துள்ளது. இது கிட்டத்தட்ட நெருக்கடியைத் தோற்றுவிக்கும்அளவிற்குத் தீவிரம் அடைந்துள்ளது எனலாம்.

வேலையளிப்பை அதிகரிப்பதற்குச் சிறுதொழில்கள் அவசியமாக உள்ளன என்பதை ஆரம்பம் முதல் அரசாங்கமும், திட்டஆணைக்குழுவும் அறிந்துள்ளன. ஆகையால்தான் சிறுதொழில்களின் முக்கியத்துவம் தொழிற்கொள்கை அறிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளன. சிறுதொழில்கள் யாவும் நீண்டகால உற்பத்திப்பெருக்கத்திற்கு உறுதி அளிக்கவில்லை என்றாலும், அவை உடனடியாகக் குறுகிய கால அளவில் வேலை அளிப்பைப் பெருமளவுக்கு உயர்த்துகின்றன.

சிறுதொழில்கள் அனைத்தும் தனித்துவம் பெற்று இயங்கக் கூடியன அல்ல. இவை பெரும்பாலும் சார்ந்துள்ள தொழில்களாகவே இருக்கின்றன. தனி ஒரு சிறுதொழில் நிறுவனம் இலாபகரமாகச் செயல்பட்டபோதிலும், சிறுதொழில்கள் அனைத்தும் நேரிடையாகவும் மறைமுகமாகவும், ஒருபுறம் வேளாண்மை அல்லது கிராமியப் பொருளாதார அமைப்பையும் மற்றொருபுறம் பேரளவு நவீனத் தொழில்களையும் சார்ந்திருக்கின்றன. முதலாவது வகையில் உள்ள சிறுதொழில்களில் நெசவுத் தொழில் முக்கியமானது. இத் தொழிலின் நுட்பமுறை இன்றைய தினமும்

[2] Choice of Technique.
[3] பார்க்க 4ஆவது அத்தியாயம், வயது அமைப்பு, பக். 100-105

மரபான ஒன்ருகவே உள்ளது. இவை பேரளவுத் துணி ஆலைத் தொழிலுடன் போட்டியிடுகின்றன. ஆலைத்தொழில்களின் உற்பத்தித்திறன் சிறுதொழில்களின் உற்பத்தித் திறனைவிட அதிகமாக இருந்தபோதிலும் இவ் விருவகைத் தொழில்களும் தொடர்ந்து நீடிக்கின்றன. குறைவளர்ச்சியுடைய நாடுகளில் தொழில்களுக்கிடையே உற்பத்தித்திறன் அடிப்படையில் போட்டி நிலவுவில்லை என்பதாலும், இந் நாடுகளில் பொருளாதார இரட்டைத்தன்மை (Dualism) நிலவுவதாலும், அரசாங்கத்தின் சலுகைகள்[4] காரணமாகவும் சிறுதொழில்கள் முற்றிலும் நசுக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. இத் தொழில்கள் பல முக்கியப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. அவற்றுள் குறைந்த உற்பத்தித்திறன் முதன்மைபெற்றதாகும். இத் தொழிலில் வேலை செய்பவர்கள் தங்கள் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறமுடியவில்லை. இவர்கள் ஈட்டுகின்ற கூலி (வருமானம்) வாழ்க்கைச் செலவுக்குக் கட்டுபடியாகக் கூடியதாக இல்லை. குறைந்த உற்பத்தித்திறன் குறைந்த வருமானத்திற்குக் காரணமாக உள்ளது. ஆகையால், சிறுதொழில்களில் (மரபான) வேலை செய்கிறவர்கள் வறுமை என்னும் நச்சுச் சுழலில் தள்ளப்படுகின்றனர்.

மரபான சிறுதொழில்களின் பிரச்சினைகள் அடிப்படையானவை. இவை உற்பத்தி செய்யும் பொருள்களின் தேவை வருமான–நெகிழ்ச்சி அற்றவையாக உள்ளன. அதாவது மக்களின் வருமானம் உயர்ந்துசெல்லும் வேகத்தில் இப் பொருள்களுக்கான தேவை விரிவடைவதில்லை. இதனால் இத் தொழில்களின் நீண்டகால வளர்ச்சி வாய்ப்புகள் தடைப்படுகின்றன.

நவீன சிறுதொழில்கள் மரபான தொழில்களிலிருந்து முற்றிலும் மாறுபடுகின்றன. இவை விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தை முழுமையாகப் பயன்படுத்துகின்றன. இவை விசைச் சக்தி, நவீன நுண்முறை ஆகியவற்றைப் பயன்படுத்துவதால், உயர்ந்த உற்பத்தித்திறனுடன் செயல்படுகின்றன. இவை பெரும்பாலும் பேரளவு ஆலைத்தொழில்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளன. பேரளவு ஆலைத்தொழில்கள் இயந்திரத்தொழில்கள் ஆகியவை உற்பத்தி செய்யும் முக்கியப் பொருள்களுக்கு உபகாரணமாகவும், துணையாகவும் உள்ள சிறு உறுப்புகள், பகுதிகள் முதலியன நவீன சிறுதொழில்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றைச் சிறுதொழில்கள் என்று கூறுவதைவிடத் துணைத்தொழில்கள் (Ancillary Industries)

4 காட்டாக, கார்வே கமிட்டியின் பரிந்துரைகளின் அடிப்படையில் பாரத அரசாங்கம் எடுத்துள்ள சில நடவடிக்கைகளைக் கூறலாம்.

என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். பேரளவுத் தொழில்களும், அவற்றின் துணைத் தொழில்களும் நவீன நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன. இவற்றை நிலையான மூலதனத்தின் அடிப்படையில்தான் வேறுபடுத்துகிறோம். காட்டாக, ரூ. 7·5 இலட்சத்திற்கும் குறைவான நிலையான மூலதனம் உடைய நிறுவனங்களைச் சிறுதொழில்கள் என்று வழங்குகிறோம். இவை குறைந்த மூலதனத்தில் அதிக வேலையளிப்பை ஏற்படுத்துகின்றன. பேரளவுத் தொழில்களினால் தோன்றும் நேரிடையான வேலையளிப்புக் குறைவாக இருந்தபோதிலும், அதைவிடப் பன்மடங்கு கூடுதலான வேலை வாய்ப்புகளைத் துணைத்தொழில்களின் வாயிலாக ஏற்படுத்தமுடியும்.

புராதனச் சிறுதொழில்கள் (வரலாறு)

புராதனத் தொழில்களைக் கிராமியத் தொழில்கள் என்றும், கைவினைத் தொழில்கள் என்றும் இருவகைப்படுத்தவேண்டும் என்று பேராசிரியர் காட்கில்[5] கூறியுள்ளார். கிராமியத் தொழில்கள் கிராம சமுதாயத்தின் ஒரு கூறாக இருந்தன. கிராம மக்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள், தாங்கள் ஈடுபட்ட தொழில்களுக்குத் தேவையான கருவிகள், சாதனங்கள் முதலியவற்றைத் தாங்களே உற்பத்தி செய்துகொண்டார்கள். இங்ஙனம் கிராம மக்களின் பெரும்பான்மையான தேவைகள் கிராமியத் தொழில்களால் நிறைவேற்றப்பட்டன. பொதுவாக இத் தொழில்கள் கிராமியப் பொருளாதாரக் கட்டுக்கோப்பின் ஒரு கூறாக விளங்கின. இந் நிலை 19ஆவது நூற்றாண்டு வரை நீடித்தது.

கைவினைத் தொழில்கள் பெரும்பாலும் நகரங்களில்மட்டுமே இருந்தன. கைவினைஞர்கள் அனைவரும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணர்களாக விளங்கினார்கள். இவர்களின் தொழில்பயிற்சி, உற்பத்தியான பொருளின் தரம், இவர்களின் கூலிவிகிதங்கள் முதலியவற்றை முறைப்படுத்துவதற்கு வலிமையுடைய கைவினைச் சங்கங்கள் பொறுப்பு ஏற்றன. இவர்கள் உற்பத்தி செய்த பொருள்கள் மதிப்பு மிக்கவையாக இருந்தன. ஆகையால், அரசர்களும், பெருந்தனக்காரர்களும் கைவினைப் பொருள்களை வாங்கி ஆதரவு அளித்தனர். இந்தியாவில் உற்பத்தியான கைவினைப் பொருள்களின் பெரும்பகுதி உள்நாட்டிலேயே நுகரப்பட்டது; சிறு பகுதி மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டது.

[5] D. R. Gadgil - The Industrial Evolution of India, ch. 8.

கைவினைத்தொழில்களில் நெசவுத்தொழில் மிகவும் முக்கிய மானதாகும். உலகெங்கிலும் மிக மெல்லிய இந்தியத் துணிகளுக்கு அதிகத் தேவை இருந்தது. இது ஓர் ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்டது. வரலாற்றுப்புகழ் டாக்கா மஸ்லின் இந்தியாவில் 1880வரை உற்பத்தி செய்யப்பட்டது. இது நிழலைப்போன்றது என மான்செஸ்டர் உற்பத்தியாளர் ஒருவர் கூறியுள்ளார். 20 கஜ நீளமும், ஒரு கஜ அகலமும் உள்ள டாக்கா மஸ்லின் ஒரு கைவிரல் மோதிரத்தின் வழியாகச் செல்லக்கூடும் (திரு. T. N. முகர்ஜி). இதை உற்பத்திசெய்ய ஆறு மாதங்கள் ஆகும். இவ்வளவு நேர்த்தி யான பொருள்களை உற்பத்திசெய்யும் கைவினைஞர்கள் அனை வரும் சுதேச சமஸ்தானங்கள், அரசர்கள், அரசவை உறுப்பினர்கள் ("கச்சேரி"கள்) ஆகியோரின் ஆதரவை முற்றிலும் நம்பி இருந்தார் கள். இவர்களது செல்வாக்கின் வீழ்ச்சியுடன் கைவினைத் தொழில் களுக்கான ஆதரவும் குறைந்து சென்றது.

இந்தியாவில் லக்னௌ, அகமதாபாத், நாக்பூர் உம்ரர், பயோனி, மதுரை போன்ற நகரங்களில் நெசவுத்தொழில்கள் சிறப்பாக விளங்கின. நாடெங்கிலும் பஞ்சாடைகள் நெய்யப் பட்டன என்றாலும் மெல்லியரகத் துணிகள் மேற்கூறிய இடங் களில் சிறப்பாக இருந்தன. மூர்ஷிதாபாத்தில் பட்டுத்துணி நெய்யப்பட்டது. இங்கே சோப்பா, பந்தனம், கோரா ஆகிய மூவகைப் பட்டுத்துணிகள் நெய்யப்பட்டன. காசியிலும், அகமதாபாத்திலும் ஜரிகை வேலைப்பாடுகளுடைய பட்டாடை கள் உற்பத்திசெய்யப்பட்டன. கம்பள ஆடைகளில் காஷ்மீர்ச் சால்வை முக்கியமானதாகும். இவை காஷ்மீரைத் தவிரப் பஞ்சாபிலும், லூதியானாவிலும் நெய்யப்பட்டன.[6] இந்தியா முழுவதும் உள்ள கச்சேரிகளிலும், சமஸ்தானங்களிலும் உள்ள செல்வந்தர்கள் காஷ்மீரச் சால்வையை வாங்கி ஆதரவு தந்தார்கள். 1880-க்குப் பின்னர் இத் தொழில் படிப்படியாகத் தேய்ந்துசென்றது. 1895-ல் இத் தொழில் முற்றிலும் நலிவுற்றது.

சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் இத் தொழிலில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஒன்று ஏற்பட்டது. காஷ்மீர்ச் சால்வைகளுக்கு ஃபிரான்ஸ் நாட்டில் தேவை உயர்ந்துசென்றது. ஓரளவிற்குக் குறைந்துவந்த உள்நாட்டுத் தேவையை இது

6 1880-ல் காஷ்மீரத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. இதையடுத்து இங்குள்ள தேர்ச்சி பெற்ற நெசவாளர்கள் காஷ்மீரத்திலிருந்து இடம்பெயர்ந்து பஞ்சாபிற்குக் குடியேறினார்கள். எனவே, பஞ்சாபிலும், அதை அடுத்துள்ள பகுதிகளிலும் காஷ்மீரச் சால்வைகள் நெய்யப்பட்டன. பார்க்கவும் D. R. Gadgil முன் கூறியபடி.

ஈடுசெய்தது என்றாலும், நாளடைவில் இதுவே இத்தொழிலின் நலிவிற்குக் காரணமாக இருந்தது. காஷ்மீரச் சால்வைகளுக்கான ஃபிரான்ஸ் நாட்டுத் தேவை 1870-ல் நடைபெற்ற ஜெர்மானிய-ஃபிரெஞ்சுப் போரினால் பெரிதும் தடைப்பட்டது. இப்போருக்குப் பின்னர்க் காஷ்மீரச் சால்வைக்கான தேவை மீண்டும் ஏற்படவில்லை.

நெசவுத்தொழிலை அடுத்து உலோகத் தொழில்கள் முக்கியமானவை. காசியில் உற்பத்தியான செம்பு, பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் இந்தியா முழுவதிலும் பிரபலமாக இருந்தன. உலோகத் தொழில்கள் நாஸிக், பூனா, விஜயநகரம், ஹைதராபாத், தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் சிறப்பாக விளங்கின. பம்பாய் சிந்துப் பகுதிகளில் நகாசு வேலைப்பாடுடைய பொருள்கள், கலை அழகுடன் கூடிய கத்திகள், வாள்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டன.

இராஜபுதனத்தில் கண்கவர் ஆபரணங்கள் செய்யப்பட்டன. இங்கே தயாரிக்கப்பட்ட கற்கள் பதிக்கப்பட்ட நகைகளும், ஆபரணங்களும் மிகவும் பெயர்பெற்றவை. இவ்வாறாக நாடெங்கிலும் பலவகையான சிறப்புத் தேர்ச்சிபெற்ற கைவினைஞர்கள் இருந்தனர். பெரும்பாலான நகரங்களில் கைவினைத் தொழில்கள் நிலையாக வளர்ந்துள்ளன.

இவ்வாறு 19ஆவது நூற்றாண்டு வரை சிறப்பாக விளங்கிய கைவினைத் தொழில்கள் பல காரணங்களினால் அழிந்தன. அதற்கான விளக்கத்தை இங்கே காண்போம். கைவினைத் தொழில்கள் ஒவ்வொன்றும் செல்வந்தர்களின் ஆதரவை எதிர்நோக்கியிருந்தன. கலைபழகோடு கூடிய இப் பொருள்களைத் தயாரிக்க அதிக காலம் இவர்கள் முனைந்து பாடுபடவேண்டும். எனவே, இப் பொருள்களை உற்பத்திசெய்யும் கைவினைஞர்களுக்குச் செல்வந்தர்களின் தொடர்ந்த ஆதரவு அவசியமாக இருந்தது. அக்காலத்தில் போக்குவரத்து வசதிகள் மிகக்குறைவு; ஆகையால், இவர்கள் பெரும்பாலும் உள்ளூர் ஆதரவைமட்டும் நம்பியிருந்தார்கள். பேரளவுக்குப் பொருள்களை உற்பத்திசெய்வதோ, புதிய நுண்முறைகளைப் புகுத்துவதோ இயலாத காரியமாயிற்று.

கைவினைத் தொழில்கள் நலிவுற்றதற்கான காரணங்களை ஆராய்ந்த பேராசிரியர் காட்கில் அவற்றை மூவகைப்படுத்திக் கூறியுள்ளார். முதலாவதாக, பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கத்துடன் சுதேச சமஸ்தானங்கள், 'கச்சேரி'கள் முதலியன பொலிவிழந்தன.

பாரம்பரியமாக ஆதரவு நல்கிய செல்வந்தர்களின் அதிகாரமும், செல்வாக்கும் குறைந்து போயின. நகரங்களில் வளர்ந்துள்ள கைவினைத் தொழில்கள் ஆடம்பரப் பொருள்களை மட்டுமே உற்பத்திசெய்தன. இந்தியர்களின் வாழ்க்கை வளம் குன்றியதை எடுத்துக்காட்டும் வகையில் கைவினைத் தொழில்களுக்கான தேவையும் தேய்ந்துசென்றது.

இரண்டாவதாக, ஆங்கிலேய ஆட்சியால் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் இருந்தவர்களின் மனமாற்றத்தைக் குறிப்பிட வேண்டும். அந்நிய ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் தங்கள் பழக்க வழக்கத்தையும் கலாசாரத்தையும் மறந்து, வெளிநாட்டவர்களைப் போலப் போலியாக நடந்துகொண்டார்கள். கச்சேரிகள், சமஸ்தானங்கள் ஆகியவற்றின் அழிவைவிட மேல்மட்டத்தில் உள்ள மக்களின் மனமாற்றம் மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது. ஆங்கிலேயர்களுக்கு அடுத்தாற்போல ஆங்கிலம் பேசக்கூடிய இளைஞர்கள் செல்வாக்கான நிலைமையில் இருந்தார்கள். இவர்கள் கலை அழகுடன் கூடிய நேர்த்தியான பொருள்களை வாங்குவதற்குப் பதிலாக அயல்நாட்டுப் பொருள்களை வாங்க விரும்பினார்கள். சுதேசிப் பொருள்களின்மீது செல்வந்தர்களுக்கு ஏற்பட்ட வெறுப்பையும், உதாசீனத்தையும் ஆங்கிலேய ஆட்சியின் ஒரு பெரும் தீங்காகக் கருதவேண்டும்.

மூன்றாவதாக, கைவினைத் தொழில்களின் தரமும், கைவினைச் சங்கங்களின் கட்டுப்பாடும் குறைந்துபோயின. கைவினைஞர்கள் வெளிநாட்டுத் தேவைக்காக உற்பத்திசெய்தார்கள். ஐரோப்பியர்களின் விருப்பங்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் தகுந்தாற்போல் உற்பத்திசெய்ய முயன்றதால் ஆக்கச்செலவு உயர்ந்தது. மிக அதிகமாக உயர்ந்துசென்ற விலையைக் குறைப்பதற்காகப் போலியான, மலிவான மூலப் பொருள்களைப் பயன்படுத்தினார்கள். இதனால் தரக்கேடு ஏற்பட்டது. ஐரோப்பிய அங்காடியில் ஏற்பட்ட தேவையும் இதன் காரணமாகக் குறைந்தது. இந்தியக் கைவினைப் பொருள்களைப்போன்ற போலியான பொருள்கள் ஐரோப்பிய நாடுகளில் குறைந்த செலவில் பெருமளவுக்கு உற்பத்திசெய்யப்பட்டன. இப் போட்டியினைச் சமாளிக்க முடியாமல் இந்தியக் கைவினைத் தொழில்கள் சிதைவுற்றன.

இவ்வாறு ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கநிலையில் கைவினைத் தொழில்களுக்கான அழிவும் ஆரம்பமாகியது. ஆங்கிலமோகம் இந்த அழிவை மேலும் தீவிரப்படுத்தியது. இறுதியாக வெளிநாட்டுப் பொருள்களின் போட்டியால் இத் தொழிலின் சிதைவு முழுமை பெற்றது.

நவீன சிறுதொழில்களின் எழுச்சி

அடுத்து, நவீன சிறுதொழில்கள் எப்படித் தோன்றின என்பதைக் காண்போம். பெரும்பாலான நவீன சிறுதொழில்கள் இரண்டாவது உலகப்போர்க் காலத்தில் தோன்றின என்றாலும், ஒருசில தொழில்கள் முதலாவது உலகப்போர் நடைபெற்ற சமயத்திலேயே தோன்றியுள்ளன என்று ஜார்ஜ் ரோஸன் [7] கூறுகிறார். பெரும்பாலான சிறுதொழில்கள் தனிநபர்களின் தொழில் முயற்சியால் தோன்றியவையாகும். சிறுதொழில் முயலுநர் பெரும்பாலும் அனுபவம் மிக்க ஒரு தொழிலாளியாக இருக்கலாம், அல்லது ஒரு தொழிற்பிரிவின் மேற்பார்வையாளராக (Foreman) இருக்கலாம். இவர்கள் முறையாகப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளில் கல்வி பயின்றவர்கள் என்று கூறமுடியாது. இவர்கள் அனுபவத்தின் வாயிலாகச் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார்களே தவிர, கல்வி அல்லது பயிற்சியால் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கவில்லை. இருந்தபோதிலும் மேலைநாடுகளில் உருவாக்கப் பட்ட இயந்திரங்களை முழுமையாக அறிந்திருந்தார்கள். இவர்கள் பேரளவு (ஆலை) தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் போதே தங்கள் ஓய்வுநேரத்தை ஆக்கரீதியாகச் செலவிடவும், கூடுதலாக வருமானம் ஈட்டவும் விரும்பினார்கள். இதற்காகக் கடைசல் பொறியுடன் (lathe) கூடிய ஒரு சிறு பட்டறையை ஆரம்பித்தார்கள். தொழிற்சாலையில் வேலைசெய்த நேரம்போக எஞ்சிய நேரத்தைத் தங்கள் சொந்தப் பட்டறையிலே செலவிட்டார்கள்.

சிறுதொழில் முயலுநர்கள் தாங்கள் வேலை செய்த தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொறி சம்பந்தமான பணிகளை ஒப்பந்த அடிப்படையில் ஏற்றுச் செய்து முடித்தார்கள். சிறு அளவில் இயந்திரப் பணிகள், இயந்திரப் பகுதிகள், துணைச் சாதனங்கள் ஆகியவற்றைச் செய்துதர ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இத்தகைய தனி வேலை-ஒப்பந்தம் இவர்களுக்கு ஆதாயமாக இருந்தது. வேலை-ஒப்பந்த அடிப்படையில் திறன் மிகுந்த, உழைப்புச் செறிந்த பணிகளைச் செய்து முடிப்பது பேரளவு நிறுவனங்களுக்கும் ஆதாயமுள்ளவையாக இருக்கின்றன. இவ்வாறாக, பட்டறையில் வேலை அதிகரித்துச் செல்லுகின்றன. இந்த வேலைகளைக் கவனிப்பதற்காக, ஆரம்பத்தில் இவர்கள் விடுப்பு எடுத்துக்கொண்டு வேலை செய்வார்கள். நாளடைவில் சொந்தப் பட்டறையில் தமக்கு உதவியாக ஒருவரை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். அப்போது கூடுதலான மூலதனத்தை முதலீடு செய்து தமதுபட்டறையை மேலும் விரிவுபடுத்துகிறார்கள். ஆனால்,

[7] George Rosen, Industrial Change in India, ch. 9, (1961).

இவை யாவும் நிலைமையைச் சமாளிக்கப் போதுமானவையாக இல்லை. தமது சொந்தப் பட்டறையில் தாமே முனைந்து நின்று முழுநேரமும் வேலை செய்தாலன்றிப் பெருகிச் செல்லும் தேவைக் கட்டளைகளை நிறைவேற்ற இயலாது என்பதை உணர்கிறார்கள். அந்நிலையில்தான் தொடர்ந்து பேரளவு நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பேரளவுத் தொழிற்சாலையில் வேலை செய்வதைவிட, தமது சொந்தப் பட்டறையில் முழுநேரம் வேலை செய்வதால் கூடுதலான வருமானத்தை ஈட்ட முடியும் என்றும், இந்த வருமான வாய்ப்புகள் நிலையானவை என்றும் கருதுகின்றார்கள். இங்ஙனம் சிறுகச்சிறுகத் தமது கடின உழைப்பாலும், முன் யோசனையாலும் தமது பட்டறையை ஒரு சிறுதொழில் நிறுவனமாக உருவாக்குகின்றார்கள்.

சிறுதொழில் முயலுநர் முதன்முதலில் பட்டறையை அமைப்பதற்கான மூலதனத்தைத் தங்கள் சொந்தச் சேமிப்பிலிருந்தும், உறவினர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்கின்றனர். நாளடைவில் இவர் மேற்கொண்ட வேலை ஒப்பந்தங்கள் கூடுதலான இலாப வருமானத்தை நல்குகின்றன. இந்த இலாபத்தொகை மீண்டும் முதலீடு செய்யப்படுகிறது. இவர்கள் சிக்கனமாக வாழ்ந்து தங்கள் தொழிற்பட்டறைகளைச் சிறுதொழில் நிறுவனங்களாக வளர்த்துக்கொள்கின்றனர். இங்ஙனம் சமுதாயத்தின் அடித்தளத்தில் சாதாரண தொழிலாளர்களாக இருந்தவர்கள் தங்களது விடாமுயற்சியாலும், சிக்கனத்தாலும் நடுத்தர நிலைமைக்கும், மேல்நிலைமைக்கும் உயர்ந்துள்ளனர் என்பதை நவீன சிறுதொழில்களின் வளர்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

விடுதலைக்குப் பின்னர்ச் சிறுதொழில் வசதிகள்

1948 தொழிற் கொள்கையிலும், 1956 தொழிற் கொள்கையிலும் சிறுதொழில்களின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நுகர்பொருள்களின் உற்பத்திக்குச் சிறுதொழில்கள் முக்கியப் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று கூறப்பட்டது. பேரளவுத் தொழில்களில் (அரசுதுறை) முதலீடு அதிகமாக இருப்பதால் இரண்டாவது திட்டத்தில் இயல்பான வீக்கக் கூறுகள் இருந்தன. எனவே, இதை ஈடுசெய்யும் அளவிற்கு நுகர்பொருள்களின் உற்பத்தியை விரிவுபடுத்தவும் பெரும்பாலான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் சிறுதொழில்கள் முக்கியமாக உதவக்கூடும் என்று கருதப்பட்டது.

நாடெங்கிலும் பரவலாகக் கிடைக்கும் உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்துவதால் செல்வக் குவிப்பு இல்லாது வருமானப் பெருக்கத்திற்கு இது வழிவகுக்கும். ஒருபுறம் மூலதனமும், மற்றொரு புறம் அந்நியச் செலாவணியும் கிடைப்பருமையாக உள்ள நாட்டில் இத் தொழில்களின் வளர்ச்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது.

சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு உறுதி அளிக்கும் நோக்கத்தோடு பல அமைப்புகள் நிறுவப்பட்டன. பாரதிய கைத்தறி வாரியம், கதர்-கிராமியத்தொழில் ஆணைக் குழு, பாரதிய கைத்தொழில் வாரியம், கயிற்று வாரியம் முதலியன பல்வேறு தொழில்களின் வளர்ச்சிக்கும், அவற்றின் விற்பனைக்கும் வழிசெய்யக் கூடியவை. இவற்றின் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு வார்தாவில் உள்ள மையத் தொழில்நுட்ப நிறுவனம் ஆராய்ச்சி செய்துவருகிறது. இதைத் தவிரச் சிறுதொழில்கள் வாரியம்,[8] தேசியச் சிறுதொழிற் கழகம்,[9] சிறுதொழில்கள் பணி நிறுவனம் (Small Industries Service Institute)—இவை மாநிலங்களில் உள்ளவை—மற்றும் மாநிலங்களில் உள்ள தொழில் இலாக்கா முதலியன சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு உதவிசெய்கின்றன. மாநிலங்கள் ஒவ்வொன்றும் சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு அடிகோலும்வகையில் தொழிற்பேட்டைகளை (Industrial Estates) நிறுவியுள்ளன. சிறுதொழில்களில் உற்பத்தியான பொருள்களை வாங்குவதென்று மைய, மாநில அரசுகள் தீர்மானித்துள்ளன. நாடெங்கிலும் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறுதொழில் நிறுவனங்கள் வலுப்பெற வேண்டும் என்பதற்காகக் கூட்டுறவு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிறுதொழில்கள் என்ற தலைப்பில் கிராமியத் தொழில்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன: கைத்தறித் தொழில், கதர், கைவினைத் தொழில், பட்டு நூல், கயிறு மற்றும் நார்ப் பொருள்கள் தொழில், தோல் பதனிடுதல், செருப்புகள், சர்க்கரை, வெல்லம், தீப்பெட்டி தயாரித்தல், பனைவெல்லம், 'சோப்', பானை வகைகள், தேனீ வளர்த்தல், காகிதம், தச்சுத் தொழில், கொல்லுப்பட்டறை முதலிய கிராமத் தொழில்கள்.

இரண்டாவது திட்டத்தில் கதர்—கிராமியத் தொழில்கள் ஆணைக்குழு அதிக அதிகாரங்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு முன்னதாக இருந்து வந்த கதர்-கிராமியத் தொழில்கள் வாரியம் தொடர்ந்து ஓர் ஆலோசனை கூறும் அமைப்பாகச் செயல்படும். கதர்—கிராமியத் தொழில்கள் ஆணைக்குழு சட்டரீதியாக நிரந்தர

[8] Small scale Industries Board
[9] National Small Industries Corporation

மாக அமைக்கப்பட்டு இருப்பதால் அதிகச் செல்வாக்குடன் விளங்குகிறது. இதைப்போல ஒவ்வொரு மாநிலத்திலும் கிராமியத்தொழில் வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

சிறுதொழில்களுக்கு ஆதரவு அளிக்கவும், அவற்றின் உற்பத்திப் பொருளை எளிதாக விற்பனை செய்யவும் குறிப்பிட்ட பொருள்களின் உற்பத்தி, சிறுதொழில்களுக்கு என்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 1950-ல் வேட்டி, புடைவை, லுங்கி முதலியன (குறிப்பிட்ட விவரங்களுடன்) சிறுதொழில்களுக்கென்று ஒதுக்கப்பட்டன. 1951-52-ல் மேற்படி ரகங்களின் ஆலைத்தொழில் உற்பத்தியில் 60%-க்கு மிகாமல் உற்பத்தி செய்யவேண்டும் என்று (1952 இறுதியில்) அரசாங்கம் உச்சவரம்பு விதித்தது. 1953-ல் குறிப்பிட்ட (சில ரக வேட்டிகள்) உச்சவரம்புக்கு (60%-க்கு) மேலாக உற்பத்தி செய்யப்படுமானால் அதற்குக் கூடுதலான ஆயத்தீர்வை விதிக்கப்பட்டது. இந்தக் காலத்தில் பஞ்சாலைகளில் தறிகளுக்கும் உச்சவரம்பு விதிக்கப்பட்டது. கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்புகளை—உற்பத்திக்கும் விற்பனைக்கும்—ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக அரசாங்கமும், ரிசர்வ் பாங்கும் பல சலுகைகளை வழங்கின. பாங்கு விகிதத்தைவிட 1½% குறைவான வட்டியில் கைத்தறி விற்பனைக்காக ரிசர்வ் பாங்கு நாணய வசதி அளித்தது.

கதர்-கிராமியத் தொழில்கள் வாரியம் தற்சமயம் (1971-ல்) 21 தொழில்களின் வளர்ச்சிக்குப் பொறுப்பு ஏற்றுள்ளது.[10] இவ்வாரியத்தின் முக்கியப் பணிகள் பின்வருமாறு: (1) கூட்டுறவு அமைப்புகளை நிறுவுதல்; (2) தொழிலுக்குத் தேவையான சாதனங்களைச் செய்தல், அவற்றைப் பகிர்ந்தளித்தல்; (3) கிடங்குவசதி கிடைக்க வழிசெய்தல்; (4) சாயமிடவும் பக்குவப்படுத்தவும் தனி அமைப்புகளை நிறுவுதல்; (5) கதர் விற்பனைக்கு உதவிக்கொடை வழங்குதல்; (6) விற்பனை நிலையங்

10 அவையாவன: தானியங்களைப் பக்குவப்படுத்துதல்; பதப்படுத்துதல்; செக்கு எண்ணெய்; வெல்லம், சர்க்கரை; பனைவெல்லம்; தேனீ வளர்த்தல்; தோல் பதனிடுதல், தோலைப் பயன்படுத்தும் தொழில்கள்; உட்கொள்ள முடியாத எண்ணெய்கள், 'சோப்' செய்தல்; தச்சுத்தொழில், கருமான் தொழில்; உரம் தயாரித்தல், மாட்டுச் சாணம் போன்ற பொருள்களிலிருந்து இயற்கை வாயுவை உற்பத்தி செய்தல்; தீப்பெட்டித் தொழில்; காகிதம் (குடிசைத்தொழில்); நார்வகைத் தொழில்கள் (தேங்காய் நார் நீங்கலாக); சுண்ணாம்பு தயாரித்தல்; பானை செய்தல்; பழங்களைப் பாதுகாத்தல்; பக்குவப்படுத்துதல்; அரக்கு செய்தல்; காட்டு மரங்களையும் பழங்களையும் சேகரித்தல்; பிரம்புக் கூடைகள்; 'ரெசின்' பசைகள்; கதா (Katha) செய்தல்; அலுமினியப் பாத்திரங்கள். ஆதாரம்: RBI-Bulletin, January 1971, p. 17-18.

களை ஆரம்பித்தல்; (7) உற்பத்திக்குத் தேவையான பொருள் களை இருப்பாக வைத்துக்கொள்ளவும், உற்பத்தி மற்றும் விற்பனைக்காகவும் நடப்பு மூலதனம் வழங்குதல்; (8) உற்பத்தி விற்பனை நிலையங்களை மேற்பார்வையிடுதல்; (9) உற்பத்தி நுட்பங்களை மேம்படுத்தும் ஆராய்ச்சிக்கு உதவுதல்; (10) தொழி லாளர்களுக்குப் பயிற்சிஅளித்தல்; (11) நெசவுத் தொழிலைக் கற்றுக்கொள்வதற்கு உதவிக்கொடை அளித்தல் முதலியன.

மையப் பட்டு வாரியம் (Central Silk Board): பட்டு உற்பத் திக்கு உதவி செய்யும். பட்டுநூல் உற்பத்தித்திறனை அதிகரிக்க வும், ஆக்கச் செலவைக் குறைக்கவும் இந்த அமைப்பு முயலும். அடுத்துக் **கயிற்று வாரியம்.** தேங்காய்நாரிலிருந்து உற்பத்தி ஆகும் பொருள்களில் தற்சமயம் (1970–71–ல்) சுமார் 55% பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றுள் தரை விரிப்புகள் முக்கியமானவை. தரை விரிப்புகள் வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் செயற்கை யான விரிப்புகளுடன் தரத்திலும், விலையிலும் போட்டி யிடுகின்றன. ஆகையால் கயிற்றுப் பொருள்களின் தரத்தை மேம்படுத்தவும், ஆக்கச் செலவைக் குறைக்கவும் ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறுதல் அவசியமாக உள்ளது. தொழில் நுட்பத்தைச் சீர்திருத்தக் கயிற்று வாரியம் பாடுபட்டு வருகிறது. அடுத்து, **பாரதியக் கைவினைப் பொருள்கள் வாரியம்.** இவ் வாரியம் 40 கைவினைப் பொருள்களின் வளர்ச்சிக்குப் பொறுப்பு ஏற்றுள்ளது. கைவினைஞர்களின் திறன்களைப் பாதுகாக்கவும், தகுந்த அமைப்பு முறைகளை ஏற்படுத்தவும், பொருள்களின் தரத்தைக் கட்டுப் படுத்தவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் பல்வேறு வருமான மட்டங்களில் உள்நாட்டு நுகர்வோர்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும் கைவினைப்பொருள்கள் வாரியம் பொறுப்பு ஏற்கும்.

சிறுதொழில்களும், வேலை அளிப்பும்

பேரளவுத் தொழில்களைவிடச் சிறு தொழில்களில் அதிக வேலை வாய்ப்புகள் ஏற்படுகின்றன. பாரதத்தின் மரபான சிறுதொழில் களில் (கிராமியத் தொழில்கள் உட்பட) இலட்சக்கணக்கான மக்கள் வேலைசெய்து வருகின்றனர். இத் தொழில்களில் உற்பத்தி யாகும் பொருள்களின் மதிப்பும் பேரளவுத் தொழில்களுடன் ஒப்பிடும் அளவிற்கு உயர்ந்து காணப்படுகின்றது (அட்டவணை கள் 20–1, 20–2, 20–3 பார்க்கவும்).

1948–49–ல் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகிய வற்றின் நிகர உற்பத்தி ரூ. 870/– கோடியாகவும், பேரளவு ஆலைத் தொழில்களின் நிகர உற்பத்தி ரூ. 550/– கோடியாகவும் இருந்தன.

இவை 1955–56-ல் முறையே ரூ. 960/- கோடியாகவும், ரூ. 810/- கோடியாகவும் உயர்ந்துள்ளன (அட்டவணை 20–1). இந்த ஆண்டில் தொழிற்றுறையின்மொத்தஉற்பத்தியில்பேரளவு ஆலைத் தொழில்களின் விழுக்காட்டைவிடச் சிறுதொழில்களின் உற்பத்தி விழுக்காடு கூடுதலாக இருப்பதைச் சுட்டிக்காட்டவேண்டும். இத் தொழில்களில் சுமார் 12 மில்லியன் தொழிலாளர்கள் வேலை செய் தனர். நாட்டிலுள்ள மொத்தத் தொழிலாளர்களில் இவர்கள் சுமார் 8%ஆக இருந்தனர் (அட்டவணை 20–2). பேரளவு ஆலைத் தொழில்களில் மொத்தம் 3 மில்லியன் தொழிலாளர்கள் மட்டுமே வேலை செய்தனர் (அட்டவணை 20–3). இவ்வாறு 1950-57 ஆண்டுகளில் ஆலைத்தொழில்களில் வேலை செய்தவர்களைப்போல நான்கு மடங்குத் தொழிலாளர்கள் சிறுதொழில்களில் வேலை செய்து வந்தனர்.

கிராமியத் தொழில்களில் நடைமுறையில் (அப்போது) உள்ளதைவிட மேலும் கூடுதலான அளவிற்கு வேலை அளிப்பை அதிகரிக்க முடியும் என்று கதர் – கிராமியத் தொழில்கள் ஆணைக்

அட்டவணை—20-1

ஆலைத்தொழில், சிறுதொழில் உற்பத்தி விகிதம்

ஆண்டுகள்	நிகர உள்நாட்டு உற்பத்தி ஆலைத் தொழில்கள் (கோடி ரூபாய்களில்)	சிறு தொழில்கள்	ஒப்புமையான விகிதம்
1948-49	550	870	39:61
1949-50	540	900	38.62
1950-51	550	910	38:62
1951-52	640	950	40:60
1952-53	640	970	40:60
1953-54	690	980	41:59
1954-55	750	960	44:56
1955-56	810	960	46:54

Source : Statistical Abstract of India, 1955-56, p. 915, Quoted by Balakrishna - ibid p. 147.

குழு 1957-ல் கூறியது. இத் தொழில்களில் மொத்தம் 21.5 மில்லியன் மக்களுக்கு வேலை அளிக்கச் செய்யமுடியும் என்று கருத்துத் தெரிவித்தது.

பெரும்பாலும், கைத்தறித் தொழிலில் முழுநேர வேலையும் இதரத் தொழில்களில் பகுதி நேர வேலையும் அளிக்கப்படுகின்றன. கைத்தறித்தொழிலில் 1960-61-ல் 21இலட்சம் நெசவாளர்களுக்கு முழுநேர வேலை கிடைத்தது. 1970-ல் கைத்தறித் தொழிலில் 30 இலட்சம் நெசவாளர்கள் முழுநேரம் வேலைசெய்தனர். நெசவுத் தொழிலில் பகுதிநேர வேலை அளிப்பு இதைவிடப் பன் மடங்காக இருக்கும். தறிகளில் துணியை நெய்யும் முன்னதாக, நூலைச் சுற்றவும் பாவில் இடவும் பலர் உழைக்க வேண்டியுள்ளது. இதனால் நெசவாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இவ் வேலைகளில் ஈடுபடுகின்றனர். துணியை நெய்த பின்னர் அதற்குச் சாயமிடுதல், வெளுத்தல் (bleaching), பக்குவப் படுத்தல், விற்பனை செய்தல் முதலிய பணிகளைப் பலர் செய்து வருகின்றனர். இவ்வாறாக, கைத்தறி நெசவுத் தொழிலில் நேரிடையாக முழுநேரம் வேலை செய்பவர்களைத்தவிர, பகுதி நேரம் வேலை செய்பவர்களும், மறைமுகமாக இத் தொழிலினால் வேலை அளிப்பைப் பெற்றவர்களும் பலர் ஆவர்.

அட்டவணை—20-2

சிறுதொழில்களில் வேலை செய்தோர்

ஆண்டுகள் †	சிறுதொழிலிலும் கட்டடப்வேலையிலும்	மொத்தத் தொழிலாளர்கள்	சதவீதம்
	(மில்லியன் தொழிலாளர்கள்)		
1950-51	11·521	143·221	8·04
1951-52	11·582	145·395	7·97
1952-53	11·755	147·687	7·96
1953-54	11·825	149·945	7·89
1954-55	11·773	152·366	7·73
1955-56	11·857	154·814	7·66
1956-57*	11·887	157·291	7·56

† நிதி ஆண்டின் மையமதிப்பீடுகள் தாற்காலிகமானவை.

*Source : Central Statistical Organization – quoted from R. Bala Krishna - p. 148 (ibid)

அட்டவணை—20-3

சிறுதொழிலிலும், ஆலைத்தொழிலிலும் வேலை செய்தோர்

ஆண்டுகள்	ஆலைகளில் வேலை செய்தோர்	சிறு தொழில்களில்	விகிதம்
	(ஆயிரம் தொழிலாளர்கள்)		
1950-51	2969	11521	20:80
1951-52	3036	11582	21:79
1952-53	2997	11755	20:80
1953-54	2969	11825	20:80
1954-55	3120	11773	21:79
1955-56	3163	11857	21:79
1956-57*	3239	11887	21:79

* தாற்காலிகமானது. Quoted from R. Balakrishna – ibid – p. 149.

1970 இறுதியில் கதர்த்தொழிலில் 13 இலட்சம் மக்கள் வேலை செய்தனர்; இவர்களில் 12 இலட்சம் மக்கள் நூற்புத்தொழிலில் மட்டும் ஈடுபட்டிருந்தனர்.[11] பட்டுத்தொழிலில் வேலை செய்தவர்களின் தொகை 1960-61-ல் 27 இலட்சத்திலிருந்து 1970-ல் 30 இலட்சமாக உயர்ந்துள்ளது. கயிற்றுத்தொழிலில், 1970–ல் 8 இலட்சம் மக்கள் வேலை செய்தனர். கதர்-கிராமியத் தொழில்கள் ஆணைக் குழுவின் உதவியைப் பெற்றுள்ள நிறுவனங்களில், 1967-68-ல் 7·68 இலட்சம் மக்கள் வேலை செய்தனர். இத்தொகை 1968-69-ல் 8·17 இலட்சமாக உயர்ந்துள்ளது. நாட்டில் உள்ள கிராமியத் தொழில்களில் ஒரு சிறுபகுதிககே மேற்படி ஆணைக்குழு உதவி செய்வதால், நாடெங்கிலும் உள்ள கிராமியத் தொழில்களின் இதைவிடப் பன்மடங்குத் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர் என்பதை அறியலாம்.[12]

11 RBI-Bulletin, January, 1971, p. 15.

12 ibid-Appendix-II. p. 16-18. இங்கே குறிப்பிட்ட விவரங்கள் துல்லியமான கணிப்பிற்குப் போதுமானவையாக இல்லை என்றாலும் தோராயமாகச் சுமார் ஒரு கோடி மக்கள் இத் தொழில்களில் வேலைசெய்து வருவதாகக் கூறலாம்.

1951-ல் அமைப்பில்லாத நெசவுத் தொழில்களின் (கைத்தறி-விசைத்தறி முதலியன) மொத்த உற்பத்தி 917 மில்லியன் மீட்டராகவும், அமைப்புடைய ஆலை நெசவுத் தொழிலின் உற்பத்தி 3401 மில்லியன் மீட்டர்த் துணியாகவும் இருந்தன. மொத்தத் துணி உற்பத்தியில் சிறுதொழில் உற்பத்தியின் விழுக்காடு 1951-ல் 21·2-ஆக இருந்தது. இந்த விழுக்காடு 1969-70-ல் 46·9% ஆக உயர்ந்துள்ளது. மேற்படி ஆண்டில் ஆலைத்துணி 4250 மில்லியன் மீட்டராகவும், சிறுதொழில்களில் நெய்யப்பட்ட துணி 3750 மில்லியன் மீட்டராகவும் இருந்தன [அட்டவணை 20-4 பார்க்கவும்]. இவ்வாறு மொத்த நுகர்வுத் தேவையில் கைத்தறி, விசைத்தறி முதலியன கணிசமான விழுக்காட்டைப் பூர்த்திசெய்கின்றன என்பதையும், அரசின் ஆதரவால் இந்த விழுக்காடு உயர்ந்து செல்வதையும் காணலாம்.

அடிப்படை விகிதங்கள்

சிறுதொழில்கள் அனைத்தும் வேலை அளிப்பை உயர்த்தும் சாதனங்களாக விளங்குகின்றன. ஆனால், இவை மூலதனத்தைச் சிக்கனமாகவும், செம்மையாகவும் பயன்படுத்துகின்றன என்று உறுதியாகக் கூற முடியவில்லை.[13] குறிப்பிட்ட மூலதனத்தைச் சிறுதொழிலில் முதலீடு செய்வதன்மூலம், பேரளவுத் தொழிலில் உள்ளதைவிடக் கூடுதலான தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க முடியும். ஆகையால்தான், சிறுதொழில்களில் மூலதன-தொழிலாளர் விகிதம் (Capital Coefficient of labour) குறைவாக இருக்கிறது என்று கூறுகிறோம். மூலதன-தொழிலாளர் விகிதம் என்பது சராசரியாக ஒருவருக்கு வேலை அளிப்பதற்காகக் குறிப்பிட்ட தொழிலில் முதலீடு செய்யவேண்டிய மூலதனத்தைக் குறிப்பிடுகிறது. இவ் விகிதம் உற்பத்திக்காரணிகள் இணைக்கப்படும் விகிதத்தைச் சுட்டிக் காட்டுகிறது; அதாவது தொழில் நுட்பத்தைப் பிரதிபலிக்கிறது. எனவே, தொழிலுக்குத் தொழில், உற்பத்தி அளவு தொழில் நுட்பம் ஆகிய அடிப்படையில் இது வேறுபடும். பாரதத்தில் அமைப்புடைய பல்வேறு தொழில்களுக்கான மூலதன-தொழிலாளர் விகிதம் பின்வரும் அட்டவணையில் (20-5) கொடுக்கப்பட்டுள்ளது.

நுகர்பொருள்களை உற்பத்தி செய்யும் பேரளவு ஆலைத் தொழில்களில் மூலதன-தொழிலாளர் விகிதம் சுமார் ரூ. 25,000 ஆக இருக்கும் என ஜார்ஜ் ரோஸன் கணித்துள்ளார்.[14] ஒருவருக்கு

[13] Baljit Singh - The Economics of Small scale Industries. p. 1, (Asia), 1961.

[14] George Rosen - op. cit. சிமென்டு, சர்க்கரை, காகிதம், துணிஆலை முதலிய தொழில்கள்

அட்டவணை—20-4

அமைப்பு உடைய, அமைப்பு இல்லாத துறைகளில் துணி உற்பத்தி

ஆண்டுகள்	அமைப்பில்லாத துறை		ஆலைத்துணி	மொத்தத் துணி உற்பத்தி (3+4)	சதவீதம் (3/5)
	திட்ட இலக்கு	உண்மையான உற்பத்தி			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		(மில்லியன் மீட்டர்களில்)			
1950–51	—	917	3401	4318	21·2
1955–56	1586	1643	4665	6308	26·0
1960–61	N.A.	2067	4649	6716	30·8
1965–66	3200	3141	4401	7542	41·6
1968–69	3300	3400	4314	7714	44·1
1969–70	3500	3750	4250	8000	46·9
1973–74 (இலக்கு)	4250	—	5100	9350	45·5

Source : Govt. of India, Planning Commission. Quoted from RBI-Bulletin - January 1971 p. 18

வேலை அளிப்பதற்காகச் சிறுதொழில்களில் சராசரியாக ரூ. 5000/- மூலதனமும், கைத்தொழில்களில் ரூ. 1500/ – மூலதனமும், குடிசைத் தொழில்களில்—கயிறு, பட்டுநூல்—ரூ. 1000/-மூலதனமும் தேவைப்படுகின்றன.

கனரகத் தொழில்களிலும், ஆலைத் தொழில்களிலும் மூலதனத் தொழிலாளர் விகிதம் அதிகமாக இருந்தபோதிலும் இத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதால் நிரந்தரமான வேலை அளிப்பை ஏற்படுத்துவதுடன், பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகவும் இவை விளங்குகின்றன. ஆனல், சிறுதொழில்களிலும் குடிசைத் தொழில்களிலும் உடனடியாக அதிக நபர்களுக்கு வேலை அளிக்க முடியும் என்ருலும், இவற்றின் உற்பத்தித் திறன் குறைவாக இருப்பதால் வளர்ச்சிக்குத் தேவையான சேமிப்புகளைத் தோற்றுவிப்பதில்லை; இதனல் வளர்ச்சி வேகம் தடைப்படக்கூடும்.

அட்டவணை—20.5

மூலதன – தொழிலாளர் விகிதங்கள்*

வரிசை எண்	தொழில்கள்	ஒருவருக்கு வேலை அளிப்பதற்குச் சராசரியாகத் தேவைப்படும் மூலதனம்
		ரூ.
1.	எஃகு தொழில்	1,60,000
2.	உரத்தொழில்	40,000
3.	பொறி-கருவிகள் (Machine-Tools)	25,000
4.	கனரகப் பொறி அமைப்புத் தொழில் (Heavy Machine - Building)	1,00,000
5.	வார்ப்பட-உருக்குத் தொழில் (Foundry-Forge Plant)	1,00,000
6.	நிலக்கரிச் சுரங்கக் கருவிகள்	60,000
7.	கனரக மின் பொறிகள்	50,000

*ஆதாரம் : Third Five year plan, p. 757.

மூலதன - தொழிலாளர் விகிதத்தை மூலதன - உற்பத்தி விகிதத்திலிருந்து (Capital-output ratio) வேறுபடுத்த வேண்டும். ஒரு நிறுவனத்தின் நிலையான மூலதனத்தையும், அதன் (ஆண்டு) மொத்த உற்பத்தியையும் விகிதப்படுத்திக் கூறுவதை மூலதன–உற்பத்தி விகிதம் எனலாம். மூலதன-உற்பத்தி விகிதம் குறைவாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தில் நிலையான மூலதனம் மிகவும் சிறந்த முறையில் பயன்பட்டிருப்பதாகக் கருதலாம். மேற்படி விகிதம் உயர்ந்திருக்குமானால் நிலையான மூலதனம் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்று அறியலாம். ஆனால், இவ் விளக்கம் முழுமையாக இல்லை. ஏனெனில், குறிப்பிட்ட நுட்பமுறையில் மூலதன–உற்பத்தி விகிதம் கூடுதலாகவும், வேறொரு நுட்ப முறையில் இவ் விகிதம் குறைவாகவும் இருக்கும். ஆகையால், ஒவ்வொரு தொழிலிற்கான இவ் விகிதத்தை முன் கூட்டியே அறிவதும் கடினமாகவுள்ளது.

மூலதன – தொழிலாளர் விகிதம் உயர்ந்துள்ள ஒரு தொழிலில் தொழிலாளரின் சராசரியான உற்பத்தித் திறனும் உயர்வாக இருக்குமானால், அதன் காரணமாக மூலதன-உற்பத்தி விகிதம் குறைந்து செல்லக்கூடும். காட்டாக, இரும்பு, எஃகு தொழிலில் உள்ளதைவிடக் காகிதத் தொழிலில் ஒரு தொழிலாளருக்கான சராசரி மூலதனம் அதிகமாக இருந்தபோதிலும் மூலதன–உற்பத்தி விகிதம் காகிதத் தொழிலில் அதிகமாகவும், இரும்பு, எஃகு தொழிலில் குறைவாகவும் இருக்கின்றன.[15] இதிலிருந்து மூலதன - தொழிலாளர் விகிதம் குறைந்துள்ள தொழில்களில் எல்லாம் மூலதன - உற்பத்தி விகிதம் குறைந்து செல்ல வேண்டிய அவசியமில்லை என்று அறியலாம்.

பொதுவாக, பேரளவு ஆலைத்தொழில்களில் மூலதனத் தொழிலாளர் விகிதம் சராசரியாக அதிகமாக இருந்தபோதிலும், இவற்றின் மூலதன-உற்பத்தி விகிதம் சிறுதொழில்களுக்கான மேற்படி விகிதத்தைவிடக் குறைவாக இருக்கிறது என்று பேராசிரியர் பாலகிருஷ்ண கூறியுள்ளார்.[16] இவர் இறுதிநிலை மூலதன-உற்பத்தி விகிதத்தை (Marginal capital output ratio) 1954–59 ஆண்டுகளுக்குக் கணித்துள்ளார். காகித-குடிசைத்

15 1937-54 ஆண்டுகளில் காகித ஆலைத்தொழிலின் மூலதன-உற்பத்தி விகிதங்கள் (குறைந்தது) 5·29-லிருந்து (அதிக அளவு) 7·23 வரை வேறுபட்டுள்ளன. அதே ஆண்டுகளில் இரும்பு எஃகு தொழிலிற்கான மேற்படி விகிதங்கள் (குறைந்தது) 3.1-லிருந்து (அதிக அளவு) 4·76 வரை வேறுபட்டுள்ளன. ஆதாரம்: George Rosen, Op. cit. p. 75.

16 R. Balakrishna-Review of Economic Growth in India, p. 168-59.

தொழிலின் விகிதம் 2·85 ஆகவும், காகித-ஆலைத் தொழிலின் விகிதம் 1·04 ஆகவும் உள்ளன என்று கணித்துள்ளார். அமைப்புடைய ஆலைத்தொழிலில் ஓர் அலகு காகிதத்தைக் கூடுதலாக உற்பத்தி செய்வதற்கான மூலதனத்தைப்போல அமைப்பில்லாத குடிசைத்தொழிலில் இரண்டு மடங்கிற்கும் அதிகமான மூலதனம் பயன்படுத்தப்படுகின்றது.

சிறுதொழில்களின் வளர்ச்சி

சிறுதொழில்களின் முக்கியத்தை ஆரம்பமுதல் பாரத அரசு நன்கு உணர்ந்துள்ளது. நாட்டில் பரவலாக உள்ள வேலையின்மைக்குச் சிறுதொழில்களின் உதவியால் மட்டுமே தீர்வு காண முடியும். செல்வ, வருமானக் குவிப்பு இல்லாத சமுதாயக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு இவை சிறந்த சாதனங்களாக உள்ளன. நாடெங்கிலும் பரந்துள்ள இயற்கைவளம், கச்சாப் பொருள்கள், உழைப்புச் சக்தி முதலியவற்றை அதிக அளவிற்குச் சிறுதொழில்களின் உதவியால் ஆக்கரீதியாகப் பயன்படுத்தலாம். உடனடியாகப் பேரளவுத் தொழில்களை நாடெங்கிலும் நிறுவுவதற்கான மூலதனம் நம்மிடையே இல்லாமையாலும், அங்ஙனம் மூலதன ஆக்கம் முழுமை பெறும்வரை வேலை அளிப்புத் திட்டத்தைக் காலம் தாழ்த்த இயலாமையாலும் சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பது அவசியமாகிறது.

பேரளவுத் தொழில்களின் வளர்ச்சியால் நகரங்களில் நெரிசல், போக்குவரத்து முட்டுக்கட்டைகள் அதிகரிப்பதுடன் சுற்றுச் சூழலின் தூய்மையும் அழிக்கப்படுகின்றது. கிராமியத் தொழில்களின் வளர்ச்சியால் இம் மாதிரியான பிரச்சினைகள் உடனடியாக ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடிகிறது,

முதல் திட்டகாலத்தில் சிறுதொழில்களின் நிலையை அறிந்து கூறுவதற்காகவும், இரண்டாவது திட்டத்திற்கான செயல்திட்ட அடிப்படையை உருவாக்கவும் கிராமியத்தொழில், சிறுதொழில்கள் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. இக் கமிட்டியை கார்வேக் கமிட்டி என்று வழங்குவார்கள். இதன் அறிக்கை 1955-ல் சமர்ப்பிக்கப்பட்டது.

பாரதத்தில் எண்ணிறந்த மக்கள் வேலையற்றவர்களாக இருக்கும் சமயத்தில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துவதால் வேலையின்மைப் பிரச்சினை அதிகரிக்குமே தவிரக் குறையப் போவதில்லை என்று இக் கமிட்டி கருத்துத்தெரிவித்தது. இக்கமிட்டி நுட்பரீதியான முன்னேற்றத்தை எதிர்க்கவில்லை என்று கூறிய போதிலும், உடனடியாகப் புதிய தொழில்களைத் தோற்றுவிக்கத்

தேவையான மூலதனத்தைத்திரட்டுவது கடினமாகஇருப்பதாலும் மரபான குடிசைத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்குப் புதிய தொழில் களில் பயிற்சி அளிப்பது கடினமாக இருப்பதாலும், தொடர்ந்து மரபான கிராமிய, குடிசைத் தொழில்கள் வளர்ச்சியுறவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. நுட்பரீதியான மாற்றங்களினால் உடன டியாக வேலையின்மை பெருகாமல் இருந்தாலன்றி, அவற்றை ஏற் படுத்துவது தவறு என்று கூறியது. இப்படிக் கூறியபோதிலும் மரபான தொழில்களை மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சி அவசியம் என்றும், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் கிராமத் தொழில் களுக்கும் எடுத்துச்செல்லப்படவேண்டும் என்றும், தனித்தனியாக கிராமியத்தொழில் நிறுவனங்கள் செயல்படுவதற்குப் பதிலாக இவை சம்மேளன (Federation) அடிப்படையில் தொகுத்து அமைக்கப்படவேண்டும் என்றும், கச்சாப்பொருள்கள், மூலதனம், விற்பனை நிலையங்கள் முதலியற்றை ஏற்படுத்துவதற்குப் புதிய அமைப்புமுறைகளைத் தோற்றுவிக்கவும் கார்வேக் கமிட்டி பரிந் துரைத்தது. சிறு தொழில்களுக்கு பாங்கு நாணயம் பெருமளவிற்கு அளிக்கப்படவேண்டும் என்று கூறியதுடன், புதிதாக நாட் டுடைமை ஆக்கப்பட்ட (1955–ல்) ஸ்டேட் பாங்கு இத் துறைக் காக அதிக அளவு நாணயத்தை அளித்துச் சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

கிராமங்களில் உள்ள பல இலட்சக்கணக்கான மக்கள் வேலை யற்றவர்களாக இருக்கிறார்கள் என்றும், கிராமியத் தொழில் களால் அதிகப்படியான நுகர்வுப்பொருள்களைப் பெருமளவிற்கு உற்பத்தி செய்யமுடியும் என்றும் இக் கமிட்டி கருதியது. திட்ட காலத்தில் வருமானம் உயர்வதால் கூடுதலடையும் நுகர்வுத் தேவையை நிறைவு செய்வதற்கான தனி உரிமை கிராமியத் தொழில்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியது. இக் கொள்கையைப் பாரத அரசாங்கம் செயல்படுத்துவதற்கு முன்னர் நாட்டில் நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்யும் பேரளவு ஆலைத்தொழில்களின் உற்பத்தி அளவிற்கு ஓர் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் கூறியது. சிலவகை நுகர்பொருள்களின் உற்பத்தியில் ஆலைத்தொழில்களும், குடிசைத் தொழில்களும் போட்டியிடுகின்றன. இப் போட்டியின் விளைவாகச் சிறுதொழில்கள் அழிக்கப்படாமல் இருப்பதற்காகக் குறிப்பிட்ட பொருள்களின் உற்பத்தி சிறுதொழில்களுக்காகப் பிரத்தியேகமாக ஒதுக்கப்படவேண்டும். இங்ஙனம் நுகர்வுத் தேவையில் ஒரு பகுதியைச்சிறுதொழில்களுக்காக ஒதுக்குவதுடன், பேரளவு ஆலைத் தொழில்களின்மீது பேதப்படுத்தும் ஆயத்தீர்வைகள் விதிக்க வேண்டும் என்றும், குடிசைத் தொழில்களின் உற்பத்திக்கு உற்பத்திக்கொடை அளிக்கவேண்டும் என்றும் கூறியது.

அட்டவணை—20-6

கதர், கிராமத் தொழில்களில் * (1965-66) மூலதன-உற்பத்தி விகிதங்கள்

தொழில்கள்	ஒரு தொழிலாளிக்கான சராசரி முதலீடு	ஒரு தொழிலாளியின் சராசரி உற்பத்தி	†மூலதன உற்பத்தி வீதம்
கதர்	440·00	204·00	2·16
தோல்	1783·00	556·00	3·21
கைக்குத்தல் அரிசி	346·00	241·00	1·44
உட்கொள்ள முடியாத எண்ணெய், (சோப்)	1003·00	513·00	1·96
வெல்லம், நாட்டுச் சர்க்கரை	1,111·00	1,008·00	1·10
பனை வெல்லம்	298·00	265·00	1·12
பானை செய்தல்	336·00	399·00	0·84
தேனீ வளர்த்தல்	67·00	71·00	0·90
நார்ப்பொருள்கள்	681·00	239·00	2·85
செக்கு எண்ணெய்	967·09	1787·00	0·54
காகிதம்	9441·00	1424·00	6·63
தீப்பெட்டி	4051·00	1322·00	3·06
சுண்ணாம்பு	3895·00	605·00	6·44
தச்சு, கொல்லுப் பட்டறை,	546·00	259·00	2·11

*ஆதாரம் : RBI - Bulletin, January, 1971, p. 14; Table V
† கணிக்கப்பட்டது.

கிராமியப் பொருளாதார அமைப்பை உறுதிப்படுத்தவும் வேலையின்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் வேண்டும் என்ற ஆர்வத்தால் உந்தப்பட்ட கார்வேக் கமிட்டி நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்தை உணராமல், அதை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, அதற்கு ஊறு விளைவிக்கும் சில பரிந்துரைகள் வழங்கியதைப் பொருளாதார நிபுணர்கள் திறனாய்வு செய்துள்ளனர். ஏழ்மையை அகற்றுவதற்கு உற்பத்தியும், உற்பத்தித் திறனும் அடிப்படையானவை என்ற முதல்நிலை உண்மையை இக் கமிட்டி கருத்தில் கொள்ளவில்லை. பேரளவு ஆலைத்தொழில்களின் வளர்ச்சியைத் தடைசெய்ததும், உற்பத்தி அளவுத் திறனுக்கு உச்சவரம்பை நிர்ணயித்ததும் எதிர்மறையான செயல்கள். தொழில்நுட்ப மாற்றத்தைத் தவிர்த்து, பொருளாதார முன்னேற்றத்தைத் தோற்றுவிக்கக் கருதியது பிற்போக்கான நடவடிக்கையாகவே கருதவேண்டும்.

கார்வேக் கமிட்டியின் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுச் செயல்படுத்தியபோதிலும் எதிர்பார்த்த அளவிற்குச் சிறுதொழில்கள் வளர்ச்சியுறவில்லை; வேலையின்மை தொடர்ந்து ஒரு பிரச்சினையாக விளங்கியது; இரண்டாவது திட்டத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட விக்கச் சக்திகளை ஈடுசெய்யும் அளவிற்குச் சிறுதொழில்களின் உற்பத்தி—அதாவது நுகர்பொருள்களின் உற்பத்தி—பெருக்கம் அடையவில்லை.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிற்பகுதியில், (1959-ல்) மூன்றாவது திட்டத்திற்கான செயல்திட்டத்தை உருவாக்குவதற்காக ஒரு செயற்குழு நியமிக்கப்பட்டது. சிறுதொழில்களின் உற்பத்திக்காக மேலும் சில பொருள்கள் ஒதுக்கப்படவேண்டும் என்று, சிறப்பாகக் கூடுதலான பொருள்களை உற்பத்தி செய்யும் வாய்ப்புகள் மிகுந்துள்ள துறைகளில் சிறுதொழில்களுக்கு மேலும் ஆதரவு அளிக்கவேண்டும் என்றும் இக் குழு கூறியது. 1963—ல் சிறுதொழில் வளர்ச்சியை மதிப்பீடு செய்யவும், எதிர்கால வளர்ச்சிக்கு வழி வகுக்கவும் ஒரு செயற்குழு நியமிக்கப்பட்டது. சிறு தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட துறையை மேலும் விரிவுபடுத்த இக் குழு ஆலோசனை கூறியது. ஆனால், இதன் பரிந்துரைகள் 1966 வரை செயல்படுத்தப்படவில்லை. 1966 இறுதியில் ஓர் ஆய்வுக்குழு நியமிக்கப்பட்டது. தொழில்வளர்ச்சி அமைச்சகத்தில் பணியாற்றிவந்த திரு. A. K. ராய் இதன் தலைவராக நியமிக்கப்பட்டார். சிறுதொழில்கள் சம்மேளனம் சமர்ப்பித்த கோரிக்கைகளை ராய் குழு பரிசீலனை செய்தது. இதன் பரிந்துரைகளுக்கு இணங்க, 1967-ல் 47 பொருள்களின் உற்பத்தி சிறுதொழில்களுக்காக ஒதுக்கப்பட்டது.

1970 ஜனவரியில் புதிய தொழில் அனுமதிக் கொள்கையுடன் சிறுதொழில்களுக்கான துறையும் மேலும் விரிவாக்கப்பட்டது. சிறுதொழில்களுக்காகக் கூடுதலாக 8 பொருள்கள் (மொத்தம் 55 பொருள்கள்) ஒதுக்கப்பட்டன. பின்னர், 1971 பிப்ரவரி மாதத்தில் மேலும் 73 பொருள்கள் இப் பட்டியலில் சேர்க்கப்பட்டன. இதன் விளைவாக 1971 இறுதியில் மொத்தம் 128 பொருள்கள் சிறுதொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இவை அரசாங்கத்தின் சலுகைகளையும், ஆதரவையும் எடுத்துக்காட்டுகின்றன. இத் தொழிலில் சேர்க்கப்பட்டுள்ள பல பொருள்கள் நவீன சிறுதொழில்களாக உள்ளன. புதிய நுட்பமுறையையும் முதிர்ச்சி அடைந்த தொழில் நுட்பத்தையும் இவை பிரதிபலிக்கின்றன. இப் பொருள்களுக்கான தேவை வருமான நெகிழ்ச்சி மிக்கவையாக உள்ளன.

இங்ஙனம் சேர்க்கப்பட்ட புதிய தொழில்களில் மிகவும் வெற்றிகரமாகச் செயல்படும் நிறுவனங்கள், தொழில்கள் முதலியன குறிப்பிடத்தக்கவை. காட்டாக, நாட்டில் உற்பத்தியாகும் மொத்த ரப்பரில் சுமார் 45% ரப்பர் ஆயிரத்திற்கும் அதிகமான சிறுதொழில் நிறுவனங்களால் வாங்கப்படுகின்றன; சைக்கிள் 'ட்யூப்', கார் டயர்களைப் புதுப்பித்தல் (retreading), பாத அணிகள் செய்தல் முதலிய தொழில்களுக்காக வாங்கப்படுகின்றன. இத் தொழில்களின் இலாப விழுக்காடு மிகவும் திருப்தி அளிக்கின்றது; இவற்றின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளும் அவ்வாறே உள்ளன. அடுத்து, நாடெங்கிலும் உள்ள பிளாஸ்டிக் சாமான்களைத் தயாரிக்கும் சிறுதொழில் நிறுவனங்கள் சுமார் 1800. பொதுமக்களின் நுகர்விற்காகவும், தொழில் துறையின் தேவைக்காகவும் பலவகைப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. மூன்றாவதாக, மோட்டார்க்கார், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், சைக்கிள் முதலிய முக்கியத் தொழில்களுக்குத் தேவையான துணைச்சாதனங்கள், சிறு உறுப்புகள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள். இப் பொருள்களின் தரம், திறன் முதலியன நிர்ணயிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் மேற்படி துணைத்தொழில்களுக்காகத் தொழிற் பேட்டைகள் தனியார் துறையிலும், பொதுத்துறையிலும் நிறுவப்பட்டுள்ளன. நுகர்பொருள்களில் தைக்கப்பட்ட ஆடைகள் முக்கியமானவை. சுமார் 200 நிறுவனங்கள் இத் துறையில் ஈடுபட்டுள்ளன. இவற்றுள் ஓரளவு வசதியுடைய நிறுவனங்கள் தயாரிக்கும் உடைகள் மிடுக்காகவும், கவர்ச்சிகரமாகவும் இருக்கின்றன. இதனால் இந் நிறுவனங்களின் உற்பத்தியில் 90%-க்கும் அதிகமான ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படு

கின்றன. அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற புதியதொரு துறையாக இவை செயல்படுகின்றன.

மிகவும் வெற்றிகரமாகச் செயல்படும் தொழில்களில் மின் அணுவியல் சாதனங்கள் முக்கியமானவை. ரேடியோப் பெட்டிகளை உற்பத்தி செய்வதற்குக் குறைந்த மூலதனமும், ஓரளவு தொழில் நுட்ப அறிவும் போதுமானதாக உள்ளன. நாட்டில் உற்பத்தியாகும் மொத்த ரேடியோக்களில் சுமார் 50% சிறுதொழில்களால் மட்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன (1971 இறுதியில்). அடுத்தாற்போல ஒலிப்பதிவுப் பெட்டிகள் (Tape recorders). இதற்குத் தேவையான சாதனங்கள், உறுப்புகள் ஆகியவற்றுள் பெரும்பகுதி உள்நாட்டிலேயே உற்பத்திசெய்யப்படுகின்றன. 1959–க்குப் பின்னர் டெலிவிஷன் சாதனங்களும் உள்நாட்டிலேயே உற்பத்திசெய்யப்படுகின்றன. மொத்தம் உள்ள நான்கு நிறுவனங்களில் இரண்டு சிறுதொழில் நிறுவனங்கள் ஆகும். இவை இரண்டும் ஆண்டுதோறும் 10,000 டெலிவிஷன்களை உற்பத்தி செய்கின்றன. இது மொத்தத்தில் 33% உற்பத்தியாகும். இங்ஙனம் பலவகையான நவீன சிறுதொழில் நிறுவனங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன.

21. தொழிலாளர் இயக்கம்

முன்னுரை

பொதுவான தொழில்துறையின் முன்னேற்றத்திற்கும், பேரளவு நிறுவனங்களின் சிறப்பான வளர்ச்சிக்கும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் அடிப்படையாக உள்ளது. தொழிலாளரின் உற்பத்தித்திறனை அதிகரித்தாலன்றி மக்களின் வாழ்க்கை வசதிகளை உயர்த்த முடியாது. நுட்பவியல், நிறுவன அமைப்பு முதலியவற்றைப் போலவே தொழிலாளர்களின் மனநிலையும், அவர்களை ஊக்குவிக்கும் சக்திகளும் முக்கியமானவை. ஏனைய காரணிகள் சாதகமாக இருந்தபோதிலும், தொழிலாளர்களின் மனநிலை பாதகமாக இருக்குமேயானால், உற்பத்தித்திறனை உயர்த்துவது அரிதாக இருக்கும்.

தொழில்துறையின் வளர்ச்சிக்குத் தொழிலாளர்களும் பொறுப்பு ஏற்கவேண்டும். அவர்களுக்குச் சம அளவு முக்கியத்துவமும், வாய்ப்புகளும், உரிமையும் கொடுக்கவேண்டிய அவசியத்தைப் பலரும் கோட்பாட்டு அளவில் ஏற்றுக்கொண்டபோதிலும், நடைமுறையில் பொருளாதார உயர்வுதாழ்வுகள் காரணமாகத் தொழிலாளர்களின் உரிமைகள் ஏட்டளவில் நின்றுவிடுகின்றன. அதைத்தவிர, குறுகியகால நலன்களை மட்டும் கருத்தில்கொண்டு செயல்படும் மேலாளர்களும், தொழில் முயலுநர்களும் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி இலாபமடைய நினைக்கின்றனர். தொழிலாளர்களின் நலன்களும், முதலாளிகளின் நலன்களும் முரண்படுகின்றன; அல்லது போட்டியாக இருக்கின்றன என்ற கருத்துத் தவறாக இருந்தபோதிலும், நெடுங்காலமாக வேரூன்றி இருப்பதால் இதை மாற்றிக்கொள்வது கடினமாக இருக்கிறது. சுரண்டல் தன்மை உடைய சக்திகள் சமுதாயத்தின் பொதுவான முன்னேற்றத்தைத் தடைசெய்கின்றன. ஆகையால், அவற்றைக் களைந்து நிகர ஆதாய சக்திகளைத் தோற்றுவிப்பது வளர்ச்சிக்கான முன்நிபந்தனையாக உள்ளது.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் தொழிலாளர்கள் வலியற்றவர்களாகச் சமுதாயத்தின் அடித்தளத்தில் உழலு கின்றனர். தொழிலாளர்களின் நலன்களைக் காக்கவும், பூர்ஷ்ய ஆதாய சக்திகளை முறியடிக்கவும் தொழிலாளர் சங்கம் ஓர் இன்றியமையாத அமைப்பாகும். தொழிலாளர்களின் வருமான வாய்ப்புகளைப் பாதுகாக்கவும், அவர்களின் உரிமைகளை நிலை நாட்டவும், பணிபுரியும் சூழ்நிலையைச் சீர்படுத்தவும் தொழி லாளர்கள் அனைவரும் ஒன்றுகூடி இடைவிடாது செயல்படுவதற் காக அமைத்துக்கொண்ட சங்கங்களைத் தொழிலாளர் சங்கங்கள் என்று வழங்குகிறோம்.

ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வரலாற்றிலும், தொழி லாளர் இயக்கத்தின் தொடக்கக் கட்டங்களில் பல தடைகள், இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. தொழிலாளர் அமைப்புமுறை சீர்படாமையாலும், சட்டங்களும் நீதிமன்றத் தீர்ப்புகளும் சாதகமாக இல்லாமையாலும் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இவற்றால் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சி ஆரம்பநிலைகளில் சீராகவோ, முறையாகவோ இல்லை. 19ஆவது நூற்றாண்டில் தொழிலாளர் இயக்கம் இந்தியாவில் முறையாக வளரவில்லை என்றாலும், அதன் ஆரம்பத்தைக் குறிக்கும் வகையில் பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இது கிட்டத்தட்ட முதல் உலகப் போர் வரை நீடித்தது. தொழிலாளர் சங்கத்தின் வளர்ச்சியில் இரண்டாவது கட்டம் முதல் உலகப்போருடன் தொடங்கியது எனலாம். இது முறையான, தொடர்ச்சியான வளர்ச்சியாக உள்ளது. தொழில்துறையில் சங்கம் அமைத்துக்கொள்ளும் உரிமைகள் தொழிலாளர்களுக்கு இக் காலத்தில்தான் வழங்கப் பட்டன. விடுதலை இயக்கத்தின் ஒரு கூறாக விளங்கிய தொழி லாளர் சங்கங்கள் நாளடைவில் அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தில் வந்ததுடன், அக் கட்சிகளின் சித்தாந்த வேறுபாட்டை வெளிப் படையாக எடுத்துக்காட்டும் சின்னங்களாகவும் மாறின. மூன்றாவது கட்டம் 1929-ல் ஆரம்பித்து 1939-ல் முடிவுற்றது. பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் கொள்கைகளையும் உள் நோக்கத்தையும், அறிந்த தொழிலாளர் இயக்கத் தலைவர்கள் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்தார்கள். ஆனால், ஒன்று பட்ட தொழிலாளர் தலைவர்கள் இவ் வியக்கத்தின் வளர்ச்சிக்குப் பாடுபடும் முன்னர் இரண்டாவது உலகப்போர் ஏற்பட்டதால், அரசியல் கட்சிகளிடையே கருத்துவேறுபாடுகள் மிகுந்தன. உலகப்போரைத் தொடர்ந்து ஏற்பட்ட பன்னாட்டு நிகழ்ச்சிகள் இந்திய அரசியல் கட்சிகளின் போக்கை நிர்ணயித்தன. எனவே, தொழிலாளர் இயக்கத்தின் நான்காவது கட்டம் 1946 வரை

நீடித்தது எனலாம். இறுதியாக ஐந்தாவது கட்டம் இந்திய தேசியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸின் தோற்றத்துடன் 1947-ல் ஆரம்பமாகியது.

தொழிலாளர்களின் நலன்களையும், உரிமைகளையும் பாது காக்கும் அமைப்புமுறையாகத் தொழிலாளர் சங்கங்கள் செயல் படுகின்றன. இவை தொழில்துறையில் மக்களாட்சியின் சின்ன மாக விளங்குகின்றன. அரசியல் துறையில் இந்தியா தன்னுரிமை எய்துவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாகவே தொழில் துறையில் ஜனநாயக அமைப்புகளை ஏற்படுத்துவதில் பிரிட்டிஷ் நாடாளுமன்றமும், இந்திய அரசாங்கமும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாராட்டுதற்குரியவை!

தொழில்துறையில் இந்தியருக்கு மக்களாட்சி முறையை அறிமுகப்படுத்தக் காரணம் என்ன என்று ஆராயவேண்டும். இந்திய ஆலைத்தொழிலாளர்கள் மிகக் குறைந்த அளவு கூலி விகிதத்தைப் பெற்றனர். அதைத்தவிர, இவர்கள் வரையறை யின்றி நெடுநேரம் உழைத்தனர். இவற்றின் காரணமாக இந்திய ஆலைகளில் நெய்யப்பட்ட துணிகள் மிகவும் மலிவாக இருந்தன. உலக அங்காடியில் இந்தியத் துணியின் போட்டியை பிரிட்டிஷ் துணியாலை அதிபர்கள் உணரத் தலைப்பட்டனர். இதைக் கட்டுப்படுத்த ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள். இந்தியத் துணியாலைத் தொழிலாளர்களுக்கு இங்கிலாந்தில் உள்ளதைப்போன்று தங்கள் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாத்துக் கொள்ளும் அமைப்புமுறையைத் தோற்றுவிப்பதன் மூலம் இந்திய ஆலைகளின் ஆக்கச் செலவை உயர்த்த முடியும் என்று திட்டமிட்டனர். செல்வாக்குடைய மேற்படி ஆலை அதிபர்கள் தங்கள் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளும் சாதன மாக பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தையும், இந்திய அரசாங் கத்தையும் பயன்படுத்திக்கொண்டார்கள். இவ்வாறு தங்கள் விரிவான சுயநலத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக ஆலைத் தொழிலாளர்களுக்கு உரிமை வழங்கப் பரிந்துரைத்தார்கள்.

இந்தியாவில் தொழிலாளர் இயக்கம் – முதல் கட்டம்

1851-ல் பம்பாயிலும், 1855-ல் வங்காளத்திலும் பேரளவுத் தொழிற்சாலைகள் (நெசவு ஆலைகள்) நிறுவப்பட்டன.[1] இதைத் தொடர்ந்து இந்தியாவில் தொழிலாளர் இயக்கமும் ஆரம்ப

[1] V. B. Singh, Trade Union Movement, chap. 22. in the book Economic History of India, 1857-1956, p. 563

மாயிற்று[2]. பம்பாயில் ஆலைகள் நிறுவப்பட்ட தொடக்கநிலையில் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாக இருந்தது. ஆலைகளில் பெண்களும், சிறுவர்களும் வேலை பார்த்தனர். பொதுவாக, எல்லாத் தொழிலாளர்களும் நீண்ட நேரம் கடினமாக உழைத்தார்கள்.[3] அவர்களுக்குப் போதிய அளவு ஓய்வோ, ஊட்ட உணவோ இல்லாமையால் நலிவுற்றவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் வேலை செய்த இடத்திலும், வாழ்ந்த இடத்திலும் பொதுச் சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை முதலியன பெயரளவுக்குக்கூட இல்லை. இங்ஙனம் உடல் நலிவுற்ற தொழிலாளர்கள் சேரிகளில் வாழ்ந்தமையால் அங்கே இறப்பு விகிதமும் உயர்வாகக் காணப்பட்டது.

பம்பாய் ஆலைத் தொழிலாளர்களின் வறுமை, இயலாமை காரணமாக அவர்களின் உழைப்புச் சுரண்டப்படுவதாக லங்காஷயர் மில் அதிபர்கள் எண்ணினர். ஆலைத் தொழிலாளர்கள் போதிய அளவிற்கு ஊதியம் ஈட்டவில்லை என்பதைவிட, இதன் விளைவாக பம்பாய் ஆலை அதிபர்கள் கூடுதலான அளவு இலாபம் அடைகின்றனர் என்ற காரணத்தால் லங்காஷயர் அதிபர்கள் ஆத்திரமடைந்தார்கள். தங்களுடன் எதிர்காலத்தில் போட்டியிடக்கூடிய பம்பாய்அதிபர்களின் இலாப வருமானத்தைக் கட்டுப்படுத்தும் முதல் நடவடிக்கையாக, பம்பாய்த் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமையை ஆராய்ந்து கூறுவதற்கு முதலாவது ஆணைக் குழுவை நியமிக்கும்படி பிரிட்டிஷ் அரசைத் தூண்டினார்கள். ஆனால், மேற்படி ஆணைக் குழுவின் (1875–ல்) பெரும்பாலான உறுப்பினர்கள், தொழிலாளர்கள் வேலை செய்யும் சூழ்நிலையை முறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று கருத்துத் தெரிவித்தார்கள். ஆகையால், பம்பாய் அரசும் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

1875–ல் சோராப்ஜி ஷாப்பூர்ஜி பெங்காலி (Sorabjee Shapoorjee Bengalee) அவர்கள் தலைமையில் ஆலைகளில் வேலை

[2] V. V. Giri—Labour Problems in Indian Industry– 1958, pp. 1-2

[3] தொழிலாளர்கள் தங்கள் வேலை நிலைமையில் காணப்பட்ட இன்னல்களை எதிர்த்துப் போராட்டம்செய்தார்கள். 1877-ல் நாக்பூரில் உள்ள 'எம்பரஸ் மில்'லில் வேலைநிறுத்தம் செய்தார்கள். அப்போது நடந்த வேலைநிறுத்தம் முற்றிலும் வேறுபட்டு இருந்தது. தொழிலாளர்களிடையே முறையான அமைப்பு இல்லாமையால் கோரிக்கைகளின் அடிப்படையில், தங்கள் இன்னல்களை அகற்றுவதற்காக வேலைநிறுத்தம் செய்யவில்லை. அதற்குப்பதிலாகத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும்வகையில் தனியாகவும், சிறு சிறு குழுக்களாகவும் மேற்படி ஆலையில் வேலை செய்ய மறுத்து, அதிலிருந்து விலகிச்சென்றார்கள். 1882-லிருந்து 1890 வரை, பம்பாய், சென்னை, ஆகிய இரு மாநிலங்களிலும் மொத்தம் 25-வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டுள்ளன. முன் கூறியபடி பக். 2 பார்க்கவும்.

நேரத்தை முறைப்படுத்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவர் பம்பாய் அரசாங்கத்திடம் இதுபற்றி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். குறிப்பாக, ஆலைகளில் சிறுவர்கள் வேலை செய்யும் நேரத்தைக் கட்டுப்படுத்த விரும்பினார். இதற்காக இவர் தயாரித்த மசோதாவை பம்பாய்ச் சட்டக் கவுன்சில் ஏற்க மறுத்தது. இதை இலண்டன் பத்திரிகைக்கு (Times) அனுப்பி வெளியிடும்படி செய்தார். இதைத் தொடர்ந்து பம்பாய் ஆலைத் தொழிலாளர்களின் நலனில் பிரிட்டிஷ் மக்கள் மீண்டும் அக்கறை காட்டத் தொடங்கினர்கள். 1879–ல் இதை வெளிப்படுத்தும் வகையில், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் இயற்றப்பட்டது. இதன் விளைவாக 1881-ல் இந்தியாவில் ஆலைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் சிறுவர்களின் வேலை நேரத்தைக் கட்டுப்படுத்தியது. 7 வயதுக்குமேல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் நாள் ஒன்றுக்கு அதிக அளவு 9 மணி நேரம் வேலை செய்யலாம் என்று இச் சட்டம் கூறியது. ஆனல், இச் சட்டம் சரிவர அமலாக்கப்படவில்லை. சிறுவர்களின் வயதை நிர்ணயிக்கவும், வேலை நேரத்தைக் கண்காணிக்கவும் தகுந்த ஆய்வகங்கள் தோற்றுவிக்கப்படவில்லை. இக் குறைகளை நீக்குவதற்காக 1883-ல் பம்பாய் அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்தது.

இந்தியத் தொழிலாளர் இயக்கத்தின் நிறுவனராகத் திரு. நாராயண் மேக்ஜி லோகாண்டேயைக் கருதவேண்டும். இவர் சாதாரண ஆலைத்தொழிலாளராகவும், இவ் வியக்கத்தின் தலைவராகவும் விளங்கினர். இவ் வியக்கத்தின் வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடவேண்டிய நிகழ்ச்சியாக இதைக் கருதவேண்டும். இவர் சிறந்த முற்போக்கான கருத்துகளை உடையவர். பம்பாய் ஆலைத்தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைக் காக்கப் போராட வேண்டும் என்று எண்ணிய திரு. லோகாண்டே 1884–ல் ஒரு பெரிய தொழிலாளர் மாநாட்டைக் கூட்டினர். இதில் 5500 தொழிலாளர்கள் கையொப்பமிட்ட ஒரு மகஜர் தயாரிக்கப்பட்டது. இதில் பல முக்கியக்கோரிக்கைகள்[4] இடம்பெற்றிருந்தன. இதை 1885–ல் ஓர் ஆணைக்குழுவின் முன்னர்ச் சமர்ப்பித்தார். ஆனல், இக் கோரிக்கைகளை ஏற்கவோ, அதைச் செயல்படுத்தவோ

4 அவையாவன: (1) ஞாயிற்றுக்கிழமையை வார விடுமுறை நாளாக அறிவித்தல்; (2) மதிய உணவிற்கு அரைமணி இடைவேளை அளித்தல்; (3) ஆலையில் வேலைநேரம் காலை 6-30 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணிக்கு முடிதல். (4) தொழிலாளர்களின் ஊதியத்தை மாதம் முடிந்த 15 நாள்களுக்குள் பட்டுவாடாச் செய்தல்; (5) தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்துகளினல் பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் முற்றிலும் குணம் அடையும் வரை முழு ஊதியம் அளித்தல்; (6) விபத்துகளினல் நிரந்தரமாக முடமாக்கப்பட்டவர்களின் வாழ்க்கைச் செலவிற்குத் தகுந்த ஏற்பாடு செய்தல். பார்க்க: V. B. Singh முன் கூறியபடி பக். 564.

இந்திய அரசாங்கம் மறுத்துவிட்டது. அதன் பின்னர் 1890-ல் மீண்டும் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி ஒரு மாபெரும் கூட்டத்தை பம்பாயில் கூட்டினர். இதில் பத்தாயிரம் தொழி லாளர்கள் பங்கு கொண்டனர். இக் கூட்டத்தில் இரு பெண் தொழிலாளர்கள் பேசினர். இம் மாநாட்டில் ஒரு மகஜர் தயாரிக்கப்பட்டது. 1884-ல் இடம்பெற்ற அதே கோரிக்கைகள் இதில் மீண்டும் இடம் பெற்றன. பம்பாய் ஆலை அதிபர்கள் ஞாயிற்றுக் கிழமையை வார விடுமுறையாக அறிவிக்க இசைந் தனர். தொழிலாளர் இயக்கத்திற்குக் கிடைத்த முதல் வெற்றி யாக இதைக் கருதவேண்டும். இவ் வெற்றியால் ஊக்குவிக்கப் பட்ட திரு. லோகாண்டே பம்பாய் ஆலைத்தொழிலாளர்கள் சங் கத்தை (Bombay Mill-hands Association) நிறுவினர். இச் சங்கத் தின் தலைவராகத் திரு. லோகாண்டே தேர்ந்தெடுக்கப்பட்டார்.[5] இவ்வாறு இந்தியாவில் முதலாவது தொழிலாளர் சங்கத்தை நிறுவியதுடன் தொழிலாளர்களின் கோரிக்கைகளை அரசாங்கமும், நிருவாகத்தினரும் அறியும்படி செய்யவும், தொழிலாளர்களின் இன்னல்களை மற்றவர்கள் அறிவதற்காகவும் தொழிலாளர் இயக்கப் பத்திரிகை ஒன்றை முதன்முதலில் திரு. லோகாண்டே ஆரம்பித்தார். தீனபந்து (பாட்டாளிகளின் நண்பன்) என்ற பெயரில் அப் பத்திரிகை வெளியிடப்பட்டது.

1887-ல் லங்காஷயர் ஆலை அதிபர்கள் ஆய்வாளர் ஒருவரை இந்தியாவிற்குத் தனிப்பட்ட முறையில் அனுப்பி, இங்குள்ள குறை களைக் கண்டறியுமாறு ஏற்பாடு செய்தார்கள். இவற்றை இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு, 1888-ல், இந்தியாவிற்கான மந்திரி கொண்டுவந்தார்.[6] இவ் வாண்டில் இந்தியப் பஞ்சாலைகளின் பூரிப் பான வளர்ச்சியைக் கண்டு மனம் நொந்த மான்செஸ்டர் வணிகர் சபையினர், தூதுக்குழு ஒன்றை இந்தியாவிற்கான மந்திரியிடம் அனுப்பி, பிரிட்டனில் உள்ளதைப் போன்ற தொழிலாளர் நலச் சட்டங்களை இந்தியாவிலும் இயற்றவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

5 1892-ல் வெளியிடப்பட்ட பம்பாய் அரசாங்க அறிக்கை இக் கூற்றை மறுத்துள்ளது. தொழிலாளர் சங்கம் என்று சொல்லும் அளவிற்கு முறையான அமைப்பு உடையதாக மேற்படி பம்பாய் ஆலைத் தொழிலாளர்கள் சங்கம் இல்லை என்று இவ் வறிக்கை கூறுகிறது. தொழிலாளர் சங்கத்திற்கான அமைப்புச்சட்டம், நியதிகள், உறுப்பினர் பட்டியல், நிதி முதலியன ஏதும் இல்லாமையால் இச் சங்கம் முறையாக அமைக்கப்படவில்லை என்று கூறுகிறது. Quoted from The Report on the working of the Factory Act in Bombay for 1892, by V. B. Singh, op. cit., p. 566.

6 இக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என இந்திய அரசாங்கம் மறுத்துவிட்டது.

1890-ல் பெர்லினில் நடைபெற்ற பன்னாட்டுத் தொழிலாளர்கள் மாநாடு இந்தியத் தொழிலாளர் இயக்கத்திற்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது. இம் மாநாட்டுத் தீர்மானங்கள், பிரிட்டிஷ் துணி ஆலை அதிபர்களின் தூண்டுதல் காரணமாக இந்திய அரசாங்கத்திற்கு, இந்தியாவிற்கான மந்திரியால் அனுப்பி வைக்கப்பட்டன. இதன் விளைவாக அதே ஆண்டில் திரு. சோராப்ஜியை உறுப்பினராகக்கொண்ட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதன் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு மசோதா தயாரிக்கப்பட்டது. மான்செஸ்டர் அதிபர்களின் விருப்பப்படி இம் மசோதாவில் மேலும் பல திருத்தங்கள் செய்யப்பட்டு, 1891-ல் சட்டமாக்கப்பட்டது. பெண் தொழிலாளர்களின் அதிகப்பட்ச வேலைநேரம் 11 மணியாகக் குறைக்கப்பட்டதுடன் இடைவேளை $1\frac{1}{2}$ மணி நேரம் அளிக்கவும் இது வழிசெய்தது. சிறுவர்களின் வயது வரம்புகள் குறைந்த அளவு (7-லிருந்து) 9 ஆகவும், அதிக அளவு (12-லிருந்து) 14 ஆகவும் உயர்த்தப்பட்டன. இவ்வாறு பெண்களின் வேலைநேரம் கட்டுப்படுத்தப்பட்டதால் அவர்கள் பெருமளவிற்கு வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள்; அவர்களின் கூலி விகிதங்கள் குறைக்கப்பட்டன. தொழிலாளர்களுக்குக் கூடுதலான நன்மைகள் கிடைப்பதற்காக இயற்றப்பட்ட சட்டம், உண்மையில் அவர்களின் இன்னல்களை மேலும் அதிகரித்தது.

இந்தியாவில் தோன்றிய பஞ்சாலைகள் லங்காஷயர், மான்செஸ்டர் ஆலை அதிபர்களின் கவனத்தை அதிகம் கவர்ந்துள்ளதைப்போல, இங்குத் தோன்றிய சணல் ஆலைகள் டண்டியில் உள்ள சணல் ஆலை அதிபர்களின் கவனத்தைக் கவர்ந்தது. இந்தியச் சணல் ஆலைகளின் போட்டியை உணர்ந்த இவ் வாலை அதிபர்கள் இதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். 1894-ல், டண்டி வணிக சபையினர் இந்தியாவில் ஆலைச் சட்டத்தை ஏற்படுத்துமாறு பிரிட்டிஷ் அரசை வற்புறுத்தினார்கள். இங்ஙனம் பல முனைகளிலிருந்து பிரிட்டிஷ் ஆலை அதிபர்கள் கொண்டுவந்த செல்வாக்கான வற்புறுத்தல்களின் விளைவாக, 1911-ல், இந்தியாவில் ஆலைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. வயதுவந்த ஆலைத்தொழிலாளரின் வேலைநேரத்தை நாள் ஒன்றுக்கு 12 மணியாகவும், சிறுவர்களின் வேலைநேரத்தை 6 மணியாகவும் மேற்படி சட்டம் குறைத்தது.

முதல்கட்டத்தின் திறனாய்வு

பத்தொன்பதாவது நூற்றாண்டில் பேரளவு ஆலைத்தொழில்கள் தொடங்கியது முதல் இருபதாவது நூற்றாண்டில் முதல் உல

கப்போர் ஏற்படும் வரை உள்ள ஆண்டுகளில் தோன்றிய மாற்றங்களைத்தான் தொழிலாளர் இயக்கத்தின் முதலாவது கட்டமாகக் கருதுகிறோம். இக் காலத்தில் தொழிலாளர் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்ட போதிலும், அவை முறையாகவோ சட்டரீதியாகவோ செயல்படவில்லை. இந்தியத் தொழிலாளர்கள் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை உணரவில்லை என்றோ, அதற்காக அவர்கள் போராட்டம் நடத்தவேண்டும் என்று முழுமையாக உணரவில்லை என்றோ, அங்ஙனம் உணர்ந்த போதிலும் நடைமுறையில் அதைச் செயல்படுத்த முடியாதவர்களாகக் காணப்பட்டனர் என்றோ கூறவேண்டும்.

தொழிலாளர்களிடையே முறையான அமைப்புகள் ஏன் தோன்றவில்லை என்பதை ஆராயவேண்டும். தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் கிராமங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். இவர்கள் நகரங்களுக்குத் தாற்காலிகமாக வேலை தேடி வந்தவர்கள். கிராமங்களில் விவசாய வேலைகள் இல்லாத பருவங்களில் நகரங்களுக்குக் குடிபெயர்ந்து சென்று, லாபகரமான வேலைகளில் ஈடுபட்டுப் பணக் கூலியை வருமானமாகப் பெறலாம் என்ற ஆர்வத்தால் உந்தப்பட்டவர்கள்.

தொழிலாளர்கள் நகரங்களில் உள்ள வேலைவாய்ப்புகளால் ஈர்க்கப்பட்டவர்கள் என்று கூறுவதைவிடக் கிராமங்களில் நிலவிய சொல்லொணாத இன்னல்களினாலும், ஏழ்மையாலும் வெளியே தள்ளப்பட்டவர்கள் என்று அரசு ஆணைக்குழு ஒன்று கூறியுள்ளது. கிராமங்களில் உள்ள தங்கள் குடும்பத்தின் பொருளாதார நிலைமை ஓரளவு சீர்பட்டவுடன் திரும்பிச் செல்லவேண்டும் என்ற முடிவுடன் நகரங்களில் வேலைபார்த்து வந்தனர். இங்ஙனம் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு இடம்பெயர்ந்தவர்கள் ஆலைத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினராக இருந்தார்கள். இவர்கள் நிரந்தரமாக நகரங்களில் வசிக்கப் போவதாக நினைக்கவில்லை; ஆலைகளில் பணியாற்றுவதைத் தங்களின் நிலையான வாழ்க்கைத் தொழிலாகவும் ஏற்கவில்லை. இங்ஙனம் நிலையற்ற தொழிலாளர்களாக இருந்த காரணத்தால், வேலைச் சூழ்நிலையை மேம்படுத்தவும், அதற்காகப் போராடவும் வேண்டிய அவசியத்தை உணர்ந்தபோதிலும் அதை நிறைவேற்றுவதற்கான முறையான அமைப்புகளைத் தோற்றுவிக்க முடியாதவர்களாக இருந்தனர். வேலைச் சூழலில் மனநிறைவு ஏற்படாத தொழிலாளர்கள் தங்கள் வெறுப்புணர்ச்சியை வெளிப்படுத்துவதற்காக வேலைநிறுத்தம் என்ற பெயரில் வேலையிலிருந்து விலகிச் சென்றார்கள். இவற்றை வேலைநிறுத்தம் என்று கூறுவதைவிட **வேலை விலக்கம்** என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

ஆலைத் தொழிலாளர்கள் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வேலை தேடி நகரங்களுக்கு வந்துள்ளனர். இவர்களின் மொழி, சாதி, மதம், பழக்கவழக்கங்கள் முதலியன வேறுபட்டன. மொழி வேறுபாட்டால் தங்கள் கருத்துகளைப் பரிமாற்றம் செய்துகொள்ள முடியவில்லை. இதே காரணத்தால் இவர்கள் ஒற்றுமையாகச் செயல்பட முடியவில்லை. தொழிலாளர்களின் நகர வாழ்க்கை தாமரை இலையின்மேல் உள்ள தண்ணீரைப் போன்று இருந்த காரணத்தால் முறையான அமைப்புகளை ஏற்படுத்த இயலவில்லை.

இந்தியாவில் கைவினைத் தொழில்களின் நீக்கத்தைத் தொடர்ந்து ஆலைத்தொழில்கள் ஏற்பட்டிருக்குமானால், கைவினைத் தொழிலாளர் சங்கங்கள் இன்றைய ஆலைத் தொழிலாளர்களின் சங்கத்திற்கு முன்னோடிகளாகத் திகழ்ந்திருக்கக்கூடும்.[1] ஆனால், கைவினைத் தொழில்கள் நசுக்கப்பட்டபின்னர், சுமார் இரண்டு அல்லது மூன்று தலைமுறைக்கால இடைவெளிக்குப் பின்னர்த்தான் பேரளவு ஆலைத் தொழில்கள் நிறுவப்பட்டன. அவை ஓரிரு நகரங்களில் மட்டுமே செறிந்து காணப்பட்டன. (புராதனக் கைவினைத் தொழில்கள் சிறப்புற்று விளங்கிய நகரங்கள் அனைத்திலும் பேரளவுத் தொழில்கள் தோன்றவில்லை.) கைவினைத் தொழிலின் மறைவால் வருமான வாய்ப்புகளை இழந்தவர்களுக்கு நிலத்தைச் சார்ந்து வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே, நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு இடம்பெயர்ந்தவர்கள் பெரும்பாலும் கிராமிய விவசாயத் தொழிலாளர்களாகவும், சாகுபடியாளர்களாகவும் இருந்தனர். சங்கம் அமைத்துச் சிறப்பாகச் செயல்பட்ட கைவினைஞர்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட நெசவாலைகளில் நேரிடையாகத் தொழிலாளர்களாகச் சேரவில்லை என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். இதனால் பஞ்சாலைத் தொழிலாளர்கள் திறன் குன்றியவர்களாகக் காணப்பட்டனர்.

அமைப்புடைய வளர்ச்சி இரண்டாவது கட்டம்

முதலாவது உலகப்போருடன் இந்தியத் தொழிலாளர் இயக்கத்தின் இரண்டாவது கட்டமும் தொடங்கியது. இதற்கு முன்பு இருந்ததைப் போலல்லாமல் இக் கட்டத்தில் தொழிலாளர் இயக்கம் முறையான அமைப்புடன் தொடர்ச்சியாக வளர்ந்தது. முதன்முதலாகச் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தொழி

[1] M. N. Roy அவர்கள் எழுதிய India in Transition என்ற நூலிலிருந்து எடுத்தாளப்பட்டது; பார்க்கவும் V.B. Karnik – Indian Trade Unions—1966, Second Edition, p. 21 (Manaktalas, Bombay)

லாளர் அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன. இவ் வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருந்த நிகழ்ச்சிகளை இங்கே குறிப்பிடுவோம்.

இவற்றுள் பொருளாதாரக் காரணத்தை முக்கியமாகக் கூறவேண்டும். உலகப்போர் நடைபெற்ற காலத்தில் விலைவாசி உயர்ந்துசென்ற அளவிற்குத் தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் உயரவில்லை. தொழில்துறையில் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட இருவகைப் போக்குகள் காணப்பட்டன; ஒருபுறம் தொழிலதிபர்களின் இலாப விழுக்காடு உயர்ந்து சென்றது, மற்றொருபுறம் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் தேய்ந்து சென்றது. உலகப்போர் காரணமாகப் பல புதிய தொழில் நிறுவனங்கள் தோன்றின. இதற்கு முன்னர் நிறுவப்பட்டவை மேலும் விரிவாக்கப்பட்டன. இதனால் தொழிலாளர்களுக்கான தேவை உயர்ந்து சென்றது. இச் சமயத்தில் இரு முக்கிய நிகழ்ச்சிகள் தோன்றின. 1918-1919-ல் பஞ்சம் ஏற்பட்டது; இதைத் தொடர்ந்து 'இன்புளுயன்ஸா' காய்ச்சல் கொள்ளை நோயாகத் தோன்றியது.[8] இதனால் இலட்சக்கணக்கான மக்கள் மடிந்தனர். தொழிலாளர்களின் கிடைப்பருமை அதிகரித்தது. இதை உணர்ந்த தொழிலதிபர்கள் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். தொழிலாளர்களின் ஒத்துழைப்பை விரும்பிய அரசாங்கம் அவர்களுக்குச் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க ஆயத்தமாக இருந்தது.

அடுத்தாற்போல அரசியல் நிகழ்ச்சிகள் முக்கியமானவை. மக்களிடையே தோன்றிய அரசியல் விழிப்புணர்ச்சியின் காரணமாக நாடெங்கிலும் விடுதலைவேட்கை பெருகியது. அரசியல் தன்னுரிமை தங்களின் பிறப்புரிமை என எண்ணினர். நேர்மைக்காகவும், உரிமைக்காகவும் போராடும் மனப்பாங்கின் மற்றொரு கூறுகச் சுரண்டல் தன்மையுடைய செயல்கள் அனைத்தையும் கண்டனம் செய்யும் மனப்போக்கு மிகுந்தது. இவற்றின் விளைவாகக் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்தன. முதலாவது உலகப்போருக்கு முன்னதாகவே இத்தகைய கிளர்ச்சிகள், வேலைநிறுத்தங்கள் முதலியன நடைபெற்றன என்றாலும், போர் முடிவுற்றபின் இவை தவிர்க்க முடியாத தொடர்நிகழ்ச்சிகளாகிவிட்டன.

பொருளாதார, அரசியல் சூழல் எந்த அளவிற்குச் சாதகமாக இருந்தாலும், தொழிலாளர்கள் மனப்பக்குவம் அடையவில்லை என்றால், இவ் வியக்கத்தின் வளர்ச்சியும் வெற்றியும் பெரு

8. பார்க்கவும். இந் நூலின் முதல் பாகம், பக். 88. (அத்தி. 4).

மனவுக்குத் தடைப்பட்டிருக்கும். இந்தியத் தொழிலாளர்களுக்குத் தன்னம்பிக்கையும், மன உறுதியும் ஏற்படுவதற்கு முதலாவது உலகப்போரே காரணமாக இருந்தது. இந்திய இராணுவ வீரர்கள் பல நாடுகளுக்குப் போர்நிமித்தமாகச் சென்றனர். இவர்கள் பெரும்பாலும் தொழிலாளர்களின் குடும்பத்தை அல்லது வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவ்வாறு சென்றவர்களில் முக்கியமாக ஐரோப்பிய நாடுகளையும் அங்குள்ள முன்னேற்றத்தையும் அறிந்துகொண்டதுடன் உலகெங்கிலும், மக்களின் ஆற்றல் ஒரு சீராக இருக்கின்றது என்பதையும் உணர்ந்தார்கள். ஐரோப்பியர்களின் முன்னேற்றத்திற்கு அங்குள்ள சாதகமான சூழ்நிலைதான் காரணம் என்று அறிந்தனர். பன்னாட்டு அளவில் ஒப்பிடக்கூடிய ஆற்றல்கள் இந்தியத் தொழிலாளர்களுக்கு இருப்பதை உணர்ந்த பின்னர், தாங்கள் கட்டுண்டு கிடப்பதையும், அடிமைத் தளைகளை அகற்றவேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்தனர். இவ் வுணர்வு பாட்டாளி வர்க்கத்தினரிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்தியதுடன், அமைப்பு முறைகளின் இன்றியமையாத தன்மையையும் வலியுறுத்தியது.

முதலாவது உலகப்போருக்குப் பின்னர், தொழிலாளர் இயக்கத்தின் ஒரு புரட்சிகரமான திருப்பு மையமாக காந்தியடிகளின் ஈடுபாட்டைக் கூறலாம். விடுதலை இயக்கம் என்பது அரசியல் உரிமைகளை வற்புறுத்துவதுடன் நிற்கக்கூடாது என்றும், அதற்குப் பொருளாதாரக் கொள்கைகள் பின்னணியாக இருக்கவேண்டும் என்றும் வற்புறுத்தினர். காந்தியடிகள் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை[9] (Indentured System) எதிர்த்துப் போராடினர் ;

9 பிரிட்டிஷ் 'காலனி' நாடுகளில் முன்னர் அடிமையாக இருந்த நீக்ரோக்கள் விடுவிக்கப்பட்டதும், அந் நாடுகளில் ஒப்பந்த அடிப்படையில், குறிப்பிட்ட காலத்திற்கு, மலைத்தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் திரட்டப்பட்டனர். இவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள காரணத்தால் எழுத்தறிவும், உலக அனுபவமும இல்லாதவர்கள், இவர்களுக்குத் தோட்டப்பயிர்ச் சாகுபடி அனுபவம ஏதுமில்லை என்பதுடன், மலைத்தோட்டங்களில் நிலவும் வேலைநிலைபற்றிய விவரங்களையும் அறியாதவர்கள். இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் சென்றவர்கள் கிட்டத்தட்ட நிரந்தரமாகத் தோட்டவேலைகளில ஈடுபட்டு அங்கேயே தங்கிவிடுவதும் உண்டு. ஒப்பந்தக் காலம் முடிந்ததும், இவர்களின் சந்ததியினர் ஒப்பந்தக் கூலிகளாக வேலைபார்த்ததால் அங்கேயே தங்கியவர்கள் பலர். இவர்களின் வாழ்க்கை நிலையை நாகரிகமான வார்த்தைகளினால் விவரிக்க முடியாது. இவர்களின் வேலைநேரம் மிகவும் நீண்டு இருந்தது; இவர்கள் வாழ்ந்த இடம் மிகவும் குறுகியதாகவும், அருவருக்கத்தக்கதாகவம் இருந்தது. ஒப்பந்தக் கூலிகளை விட அடிமைகள் சிறந்த முறையில் நடத்தப்பட்டனர் என்று கூறுவார்கள். கால்நடைகளைப் போன்ற சொத்துகளாக அடிமைகள் கருதப்பட்டதால் ஓரளவிற்காவது எஜமானர்கள் பரிவிரக்க உணர்ச்சியுடன் நடத்துகொண்டனர். ஆனால், ஒப்பந்தக் கூலி முறையில் தொழிலாளர்களின் நலனில் அந்த அளவிற்குக்கூட அக்கறை காட்டவேண்டிய அவசியமில்லை. இவர்கள் இறப்பதால் முதலாளிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படுவதில்லை.

அகமதாபாத்தில் நெசவாலைத் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டித் தொழிலாளர் சங்கம் ஒன்றை நிறுவினார். மேற்படி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தபோது காந்தியடிகளே அதற்குத் தலைமை ஏற்றார். இவையாவும் தேசியத் தலைவர்கள், பொது மக்கள், அரசாங்கம் ஆகியோரின் கவனத்தைத் தொழிலாளர் இயக்கத்தின்கண் ஈர்த்தன. காந்தியடிகள் ஓர் அரசியல் தலைவராக மட்டுமன்றி இந்தியாவின் தார்மீகக் குரலாகவும் விளங்கினார். ஆகையால், தொழிலாளர்கள் பக்கத்தில் நியாயம் இருப்பதை இவரது ஈடுபாடு உலகிற்குப் பறைசாற்றியது. இது தொழிலாளர் இயக்கத்திற்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

பன்னாட்டு அளவில் நிகழ்ந்துள்ள இரு முக்கிய நிகழ்ச்சிகள் இந்தியத் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன. தொழிலாளர் இயக்கத்தின் வெற்றிச் சின்னமாக சோவியத் சோஷலிஸ்ட் நாட்டின் தோற்றம் அமைந்தது. அதை யடுத்து, உலகநாடுகள் சங்கத்தின் (League of Nations) தோற்றமும் அதன் ஓர் உட்பிரிவாக அமைக்கப்பட்ட பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பும் (International Labour Organization) குறிப்பிடத் தக்கவை. உலகெங்கிலும் தொழிலாளர் இயக்கம் தோன்றுவதற்கு இவை காரணமாக இருந்தன.

உரிமைப் பிரச்சினை

இதுவரை தொழிலாளர் இயக்கம் தோன்றுவதற்குக் காரணமான நிகழ்ச்சிகளை மட்டுமே கூறியுள்ளோம். உண்மையில் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிக்கு எதிரான சக்திகளும் வேரூன்றி இருந்தன. இவை மரபு, சட்ட அமைதி, பொருளாதாரத் தன்னுரிமை, தலையிடாக் கொள்கை என்னும் முழக்கங்களின் பின்னணியாக ஒலித்தன; செயல்பட்டன. ஆரம்பகாலம் முதல் தொழிலாளர் இயக்கத்திடம் தங்களுக்கு ஏற்பட்ட மனவெறுப்பையும், பகைமையையும் முதலாளிகள் பல வழிகளில் வெளிப்

இவர்களின் சமூக வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கையைவிட மிகவும் கேவலமாக இருந்தது. 'திருமணம் என்பது ஒரு கேலிக்கூத்தாக இருந்தது. சாதாரணமாக 100 ஆண்களுக்கு 40 பெண்கள்தாம் இருந்தனர். இவர்களின் நெறியற்ற வாழ்க்கை சாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. இங்ஙனம் புரையோடிய குடும்ப வாழ்க்கை வயது வந்தவர்களுக்குள்ள ஒரே பொழுது போக்காக இருந்தது; இளைஞர்களுக்குக் கல்வி கற்பிக்கவோ, அவர்களைச் சீர்திருத்தவோ வாய்ப்பில்லை.' Quoted by V. B. Singh, op. cit., p. 571. Fn.18, from R. K. Das-Labour Movement in India, Berlin, 1923, pp. 21-32.

தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கையைக் கண்டு மனம் புழுங்கிய மகாகவி பாரதியார் 'கரும்புத் தோட்டத்திலே' என்ற தலைப்பில் உள்ள பாடல்களின்மூலம் தமது வேதனையை வெளிப்படுத்திக் கொண்டார்.

படுத்தத் தயங்கவில்லை. தொழில் அதிபர்கள் தங்களுடைய மூலதனத்தைக்கொண்டு நடத்தப்படும் தொழிலைத் தாங்கள் விரும்பிய வண்ணம் செயல்படுத்துவதற்கு உரிமை உண்டு என்று கூறிக்கொண்டார்கள்; தங்களைத் தட்டிக்கேட்க யாருக்கும் உரிமை இல்லையென்று முழக்கம் செய்தனர். இம் மாதிரியான சூழலில் அரசாங்கம் வெளிப்படையாகத் தனது ஆதரவைத் தெரிவித்தலான்றித் தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியடைய முடியாது. ஆனால், எக்காரணத்தினாலோ அரசாங்கம் தொழிலாளர்களுக்குச் சாதமான கொள்கைகளை உருவாக்கவோ, அவர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளவோ இல்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காக மேற்கொண்ட போராட்டங்களினால் உற்பத்தி தடைப்பட்டதுடன், பொதுவான சட்ட அமைதியும் பாதிக்கப்பட்டது. இதனால் தொழிலாளர்களுக்கு ஆதரவுதர அரசு தயங்கியது. இதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளத் தொழில் முயலுநர்கள் முற்பட்டனர். தொழிலாளர்களுக்குச் சங்கம் அமைத்துக் கொள்ளும் உரிமை கிடையாது என்றும், தொழிலாளர் சங்க நடவடிக்கைகள் தங்களுடைய தொழில்முயற்சிகளுக்கு இடையூறாக உள்ளன என்றும் நிரூபிப்பதற்காகச் சென்னை உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு ஒரு வழக்குக் கொண்டுவரப்பட்டது (1921-ல்). நீதிமன்றத்தின் தீர்ப்பு, தொழிலாளர்களுக்குப் பாதகமாகவும், பக்கிம்ஹாம்-கர்னாடிக் மில் அதிபர்களுக்குச் சாதகமாகவும் இருந்தது. இதன் விளைவாகத் தொழிலாளர் சங்கத்தின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, தொழிலாளர் இயக்க வளர்ச்சியின் ஒரு திருப்புமையமாக இருந்தது. இதுவரை தொழிலாளர்களுக்குச் சங்கம் அமைத்துக்கொள்ளும் உரிமை உண்டு என்று எண்ணிச் செயல்பட்டவர்கள் ஏமாற்றத்திற்குட்பட்டார்கள். தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராட்டம் நடத்தவேண்டியது அவசியமாயிற்று.

முதலாவது தொழிலாளர் சங்கம்

1918-ல் சென்னையில் நிறுவப்பட்ட தொழிலாளர் சங்கம் முதன்மையானது என்று திரு. வி. பி. கர்னிக் (V. B. Karnik) கூறுகிறார்.[10] தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றில் தமிழ் மூதறிஞர் திரு. வி. கலியாணசுந்தரனார் முக்கியப் பங்கு கொண்டார். அவர்

10. V.B. Karnik - Indian Trade Union, p. 23,—Manaktalas; Bombay, 1966 (Second Edition).

ஒருமுறை தொழிலாளர்கள் குழுமியுள்ள ஒரு கூட்டத்தில் கூட்டுறவின் பயன்பற்றிப் பேசுவதற்காக அழைக்கப்பட்டார். அச் சமயம் மேலைநாடுகளில் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றை மிகவும் விளக்கமாகக் கூறினார். இதனால் தொழிலாளர்களின் ஆர்வமும், புத்துணர்ச்சியும் கட்டவிழ்த்துவிடப் பட்டன. இங்குள்ள தொழிலாளர்கள் தாங்களும் ஒன்றுசேர்ந்து முறையான சங்கத்தை அமைத்துக்கொள்ளத் துடித்தனர். இவர்களின் ஆர்வத்தைக் கண்ட திரு. வி. க. தமது நண்பர்களான ராவ்பகதூர் கேசவப் பிள்ளை, B.P. வாடியா, செல்வபதி, இராமஞ்சலு நாயுடு ஆகியோரைக் கலந்து ஆலோசித்தார்.[11] சிறந்த பேச்சாளரான திரு. வி. க. தொழிலாளர் இயக்கத்தின் அமைப்பாளராக இருக்கத் தயங்கினார். இதனால் அவ் வமயம் அன்னிபெஸன்ட் அம்மையார் நடத்திய 'நியூ இந்தியா' என்ற ஆங்கிலத் தினசரியில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய திரு. B. P. வாடியாவைத் தலைவராகப் பணியாற்றும்படி கேட்டுக் கொண்டார்கள். பெரும்பாலும், திரு. வாடியாவின் ஆங்கில உரையைத் திரு. வி. க. தாம் மொழிபெயர்த்தார். இங்ஙனம் இவ் விருவரும் பல இடங்களில் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டிச் சங்கம் அமைத்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார்கள். பொதுமக்களின் அரசியல் விழிப்புணர்ச்சியும் இதற்கு உறுதுணையாக இருந்தது.[12]

அகமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்

இந்தியத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றில் அகமதாபாத் தொழிலாளர் சங்கம் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது என டாக்டர் வி. பி. சிங் கூறுகிறார்.[13] இச் சங்கத்திற்கு உண்மையில் முறையான அமைப்பு 1920-ல்தான் தோற்றுவிக்கப் பட்டது. அகமதாபாத் தொழிலாளர்கள் தொழில் பிரிவு வாரியாக

11 ஆதாரம் திரு. வி. க.'வின் வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து தொகுக்கப் பட்டது; பார்க்க : கலைக்கதிர் 1972, மே மாத இதழ்.

12 அக் காலத்தில் பக்கிங்ஹாம் மில்லில் மேலாளராகப் பணியாற்றிய ஆங்கிலேயர்கள் நடந்துகொண்ட விதம் தொழிலாளர்களிடையே மனக்கசப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்தின. இனவேற்றுமையால் ஆண்டான். அடிமை உணர்ச்சிகள் தலைதூக்கின. தொழிலாளர்கள் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மட்டுமன்றி, தங்கள் இனத்தின் தன்மானத்தைக் காப்பதற்காகவும் தொழிலாளர் சங்கம் அமைத்துக்கொள்ளத் துடித்தனர். தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிக்கு நாட்டுப்பற்றும், தன்மான உணர்ச்சியும் அடிப்படையாக இருந்தன.

13. V. B. Singh-முன் கூறியபடி பக். 572.

அமைப்புகளை ஏற்படுத்திக்கொண்டார்கள்; இத்தகைய அமைப்பு 1917-ல் நிறுவப்பட்டது என்றாலும், முறையான அமைப்பாக அவை விளங்கவில்லை என்ற காரணத்தால் இச் சங்கம் முதன்மையான இடத்தைப் பெறவில்லை எனக் கூறுகிறோம்.

அகமதாபாத் தொழிலாளர் சங்கத்தின் சாதனைகள் பெருமைக்குரியவையாக இருக்கின்றன. ஆகையால், தொழிலாளர் சங்கங்களிடையே இது முன்னோடியாக விளங்குகிறது. இச் சங்கத்திற்குக் காந்தியடிகளின் தலைமையும் ஆலோசனையும் ஆரம்பம் முதல் கிடைத்துள்ளது பாராட்டுதற்குரியது.

அகமதாபாத் தொழிலாளர் சங்கம் தொடக்கத்திலிருந்து தொழிலதிபர்களால் அங்கீகரிக்கப்பட்டு, மதிக்கப்பட்ட ஓரமைப்பாக விளங்கியது. இதற்குத் தொழிலாளர் இயக்கத்தின் ஆரம்ப காலத் தலைவர்களாகச் செயல்பட்ட சங்கர்லால் பாங்கர், அனுசூய பென் சாராபாய் ஆகிய இருவரும் பொறுப்பாளர்கள். இவர்களில் அனுசூயபென் என்பவர் அகமதாபாத்தில் பிரபலமான அம்பாலால் சாராபாய் என்ற ஆலை அதிபரின் சகோதரியாவார். தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்கள் சமுதாயத்தின் மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தது இதன் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த அடிக்கல்லாக விளங்கியது. இதன் காரணமாகத் தொழிலதிபர்களும், பொதுமக்களும் ஆரம்பம் முதல் தொழிலாளர் இயக்கத் தலைவர்களை மதிக்கவும், கௌரவமாக நடத்தவும் செய்தார்கள். சட்டபூர்வமாகத் தொழிலாளர்களின் உரிமைகளை அறிவிப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாகவே, தம் விருப்ப அடிப்படையில், தொழிலாளர் நலன்களை மேம்படுத்தும் தொழிலாளர் சங்கத் தலைவர்களை ஆலை அதிபர்கள் ஏற்பதற்கு அவர்களின் சமுகத் தொடர்புகள் ஒரு கருவியாகச் செயல்பட்டது என்பதை வலியுறுத்தவேண்டும்.

முறையான அமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு முன்னதாக அகமதாபாத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டமும், அதன் வெற்றியும் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தன. இவ் வெற்றியின் முக்கியத்துவம் கருதி இதைச் சற்று விளக்கமாகக் கூறுகிறோம். 1917-ல் அகமதாபாத் பகுதிகளில் 'பிளேக்' என்ற கொள்ளைநோய் பரவியது. இதனால் இறந்த தொழிலாளர்களைவிட இடம் பெயர்ந்தவர்கள் பலர். இதைத் தொடர்ந்து தொழிலாளர் கிடைப்பருமை தோன்றியது. எஞ்சியுள்ள தொழிலாளர்கள் இடம்பெயர்ந்து செல்லாமல், அகமதாபாத்திலேயே தங்கியிருப்

பதற்காகக் கூடுதலான 'பிளேக் படி' (Plague allowance) கொடுக்கப்பட்டது. 1918-ல் மேற்படி கொள்ளைநோய் ஒழிக்கப்பட்டது. முன்பு கூடுதலாகக் கொடுக்கப்பட்ட 'பிளேக் படி'யை அகற்றி, அதற்குப்பதிலாகக் கூலி விகிதத்தை 20% உயர்த்துவதாக ஆலை அதிபர்கள் கூறினார்கள். உலகப்போரினால் விலைவாசி வெகுவாக உயர்ந்திருப்பதால் அதை ஈடுசெய்யும் அளவிற்குக் கூலி விகிதத்தை 50% உயர்த்தவேண்டுமென்று தொழிலாளர்கள் கோரினர். இந் நிலையில் காந்தியடிகளின் ஆலோசனையை இரு தரப்பினரும் நாடினார்கள். இதன் விளைவாக நடுவர் தீர்ப்பு வாரியம் ஒன்றை நிறுவ முடிவு செய்யப்பட்டது. ஆனால், இதற்குள் ஏற்பட்ட சிறு தகராறின் காரணமாக ஆலை அதிபர்கள் தங்கள் முடிவை மாற்றிக்கொண்டார்கள். நடுவர் தீர்ப்பிற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டதால், தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதைக் காந்தியடிகள் உணர்ந்தார். இவ் வேலைநிறுத்தத்திற்கு அவரே தலைமை தாங்க முன்வந்தார். தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமாக இருக்கவேண்டும் என்று எண்ணிய காந்தியடிகள், 50% கூலி விகித உயர்வுக் கோரிக்கையை 35% ஆகக் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். தங்கள் கோரிக்கையை ஆலை அதிபர்கள் ஏற்கும் வரை தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யவேண்டும் என்றும், அதுவரை வன்முறைச் செயல்களில் ஈடுபடக்கூடாது என்றும், மாற்றுவழிகளில் வருமானம் ஈட்டுவதற்குத் தொழிலாளர்கள் பாடுபடவேண்டும் என்றும், இறுதிவரை ஒற்றுமையாகச் செயல்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இவ்வாறு கட்டுப்பாட்டுடன் மூன்றுவார காலம் வேலைநிறுத்தம் செய்த பின்னர், தொழிலாளர்களிடையே சிறிது ஒற்றுமை குறையத் தொடங்கியது. இதனால் வேதனை அடைந்த காந்தியடிகள் போராட்டம் வெற்றி அடையும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தார். அவரது உண்ணாவிரதத்தால் தொழிலாளர்களிடையே மீண்டும் ஒற்றுமை ஓங்கியது; ஆலை அதிபர்களும் இக் கோரிக்கைகளை ஏற்க முன்வந்தனர். இறுதியாக நடுவர் தீர்ப்பின் அடிப்படையில் கூலி விகித உயர்வு நிர்ணயிக்கப்பட்டது. இவர்கள் 35% கூலி விகித உயர்வு கொடுக்கவேண்டும் என்று தீர்ப்புக் கூறினார்கள்.

காந்தியடிகள் தலைமை தாங்கியதால் மட்டும் இப் போராட்டம் சிறப்புற்றதாக எண்ணுவது தவறு; தொழிற் பூசல்களை நடுவர் தீர்ப்பு முறையின் அடிப்படையில் தீர்த்துக் கொள்ளும் வழக்கம் முதலாவதாகத் தோன்றியது பாராட்டுதற்

குரியது. அகமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர்கள் இப் போராட்டத்தில் வெற்றி அடைந்ததற்காகவும், அவர்களது கோரிக்கைகள் நியாயமானதாக இருந்ததற்காகவும், நேர்மையான முறையில் அறப்போராட்டமாக நடைபெற்றமைக்காகவும் தொழிலாளர் இயக்கத்தில் சிறப்பான ஒரு நிகழ்ச்சியாக இதைக் கருதவேண்டும். இம் மகத்தான வெற்றிக்குப் பின்னர், இரண்டு ஆண்டுகள் கழித்து முறையான தொழிலாளர் சங்கமாக இதை நிறுவினார்கள்.

அகமதாபாத் தொழிலாளர் சங்கம் ஒரு முன்னோடியான சங்கம் என்றால் மிகையாகாது. மற்றப் பகுதிகளில் சாதாரணமாகக் காணப்பட்ட சங்கத்தைவிட இது பன்மடங்கு மேலானதாக விளங்கியது. தொழிலாளர்களின் நலன்களைப் பல வழிகளில் பாதுகாக்கவும், உயர்த்தவும் ஒரு சிறந்த அமைப்பாக இது செயல்பட்டது.

பல இடங்களில் தொழிலாளர்கள் செலுத்தவேண்டிய சந்தாத் தொகை ஆலை நிருவாகத்தினரால் கழிவு செய்யப்பட்டது; தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் இடையே நிலவிய ஒற்றுமையை இது விளக்கிக் காட்டுகிறது. இச் சங்கத்தின் உறுப்பினர்கள் தாக்கல் செய்யும் சிறு புகார்கள் உள்பட அனைத்தும் முறையாகப் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்படும். உடனடியாக விசாரணை செய்வதற்காகத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் எப்போது வேண்டுமானாலும் எந்தத் தொழிலாளரை வேண்டுமானாலும் அழைத்து, விசாரிக்கும் உரிமையைப் பெற்று இருந்தார்.

இச் சங்கத்தின் ஆக்கப்பணிகள் மிகவும் சிறப்பானவை. தொழிலாளர்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.[14] இச் சங்கம் கூட்டுறவு பாங்கு ஒன்றைச் சிறந்த முறையில் நடத்தி வந்தது. இதில் 40,000 உறுப்பினர்கள் இருந்தனர். அதன் நடப்பு மூலதனம் ரூ. 5 இலட்சமாக இருந்தது. 30 படுக்கை வசதிகளை உடைய மகப்பேற்றில்லம் இதன் பொறுப்பில் சிறப்பாக நடைபெற்றது. ஆயுர்வேத முறையில் வியாதிகளைக் குணப்படுத்தவும் வசதிகள் செய்யப்பட்டன. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வசதிக்காக மாணவ இல்லங்கள்

[14] V. B. Karnik-முன் கூறியபடி, பக். 94-96.

(hostels) நடத்தப்பட்டன. இதைத்தவிர நூலகங்கள், உடற்பயிற்சி நிலையங்கள், தொண்டர்படை, சேவா மண்டலம், அச்சகம், கூட்டுறவுக் கதர்க் கடை, தையல் வகுப்புகள் முதலியன நடத்தப்பட்டன. குடியிருப்பு வசதிகளை அதிகரிப்பதற்காக 125 கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இத்தகைய ஆக்கப் பணிகள் யாவும் சீரோடும் சிறப்போடும் நடைபெற்ற காரணத்தால்தான் அகமதாபாத் தொழிலாளர் சங்கத்தை முன்னோடியான சங்கம் என்று வழங்குகிறோம். நாடெங்கிலும் உள்ள தொழிலாளர் சங்கங்கள் இதைப்போன்ற ஆக்கப்பணிகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டு, தொழிலாளர்களின் வாழ்க்கையைச் சிறப்புறச் செய்யவேண்டும்.

தொழிலாளர் தலைவர்கள்: இந்தியத் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இவ் வியக்கத்தின் தலைவர்கள் செயல்பட்டனர். இவர்கள் பல்வேறு நோக்கங்கள், கருத்துகளை உடையவர்கள். இவர்கள் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபடுவதற்கான காரணங்களும் வேறுபட்டவை. தொழிலாளர் இயக்கத்தில் பின்னர்த் தோன்றிய பல முக்கிய நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்வதற்கு இவை உதவியாக இருக்கும்.

தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்ட தலைவர்கள் அனைவரும் அரசியல் சார்பு அல்லது அரசியல் தொடர்பு உடையவர்கள் என்று கூற முடியாது. இவர்களில் சிலர் அரசியல் உள்நோக்கம் ஏதுமில்லாமல் மனிதாபிமான உணர்ச்சியால் உந்தப்பட்டவர்கள். காட்டாக, ஜோஸப் பாப்டிஸ்டா, S. H. ஜாப்வர்லா, F. J. ஜின்வாலா, C. F. ஆன்ட்ரூஸ், B. P. வாடியா ஆகியோரைக் கூறலாம். ஆனால், தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பான்மையோர் அரசியல் தொடர்பு உடையவர்கள். இவர்களில் முக்கியமாக இந்திய தேசியக் காங்கிரஸைச் சேர்ந்த தலைவர்களைக் கூறலாம். அரசியல் விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிக்கவும், தங்கள் கட்சிக்கு விரிவான அடிப்படையை உருவாக்கவும் இவர்கள் தொழிலாளர் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டார்கள். இவர்களில் முக்கியமாக, லாலா லஜபதிராய், சரோஜினி நாயுடு, R. S. ரூயிகார், ஜவஹர்லால் நேரு ஆகியோரைக் கூறலாம். மூன்றாவதாக உள்ளவர்கள் மிதவாத அரசியல் கொள்கைகளை வற்புறுத்தும் தலைவர்கள். பிரிட்டனில் உள்ளதைப்போன்ற தொழிலாளர் சங்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று இவர்கள் விரும்பினார்கள். தொழிலாளர்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவும், மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் அமைப்பாகவும் தொழிலாளர் சங்கம் செயல்படவேண்டும் என்றும் விரும்

பினர்கள். இவர்களில் முக்கியமாகத் திரு. N. M. ஜோஷியைக் கூறலாம். நான்காவதாக, காந்தி அடிகளையும், அவரைப் பின் பற்றுவர்களையும் கூறலாம். இவர்கள் அரசியல் சார்புடையவர் கள் என்றாலும், அரசியலைவிடச் சமூகப்பணிக்கும், பொதுத் தொண்டிற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். தொழி லாளர் இயக்க வளர்ச்சியின் ஆரம்பகாலத்தில் இவர்களின் செல்வாக்கு அதிக அளவுக்கு இல்லை. இவர்களின் நடவடிக்கைகள் குஜராத்தில், சிறப்பாக அகமதாபாத்தில் செறிந்து காணப் பட்டதே இதற்கு முக்கியக் காரணமாகும். ஆனால், விடுதலைக்குப் பின்னர்த் தொழிலாளர் இயக்கத்தில் இவர்கள் செல்வாக்குப் பன்மடங்கு பெருகியது. பாரதத்தின் தொழிலாளர் இயக்க வளர்ச்சியில் இவர்கள் தவிர்க்க முடியாத ஒரு பெரும் சக்தியாகச் செயல்பட்டனர். இறுதியாக, 'கம்யூனிஸ்டு' தலைவர்கள். இவர்கள் இந்தியாவில் 'கம்யூனிஸக் கொள்கைகளைப் பரப்புவதற் கான ஒரு தொடக்கப்பள்ளியாகத் தொழிலாளர் சங்கங்களைக் கருதினார்கள். இவர்கள் முற்போக்கான, இடசாரிக் கொள்கை களைப் பின்பற்றினார்கள். இவர்கள் வற்புறுத்திய தீவிரவாதங் களின் விளைவாக, சில சமயங்களில், தொழிலாளர்களின் நலன் களும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தியத் தொழிலாளர்களுக்குக் 'கம்யூனிஸ'த் தத்துவங்களை எடுத்துரைப்பதுடன் இவர்கள் நிற்காமல், அனைத்து உலக அடிப்படையில் 'கம்யூனிஸத் தத்துவ மும், 'கம்யூனிஸ்டு'க் கட்சியும் வெற்றி அடையவேண்டும் என்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டவர்கள். இவர்கள் தங்களுடைய குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக் கத்தோடு தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டனர் என்றால் மிகை யாகாது. இங்ஙனம் பல்வேறு தத்துவங்களை ஏற்றுக்கொண்ட வர்கள் தொழிலாளர் இயக்கத்தில் தலைவர்களாகப் பணி யாற்றினார்கள். ஒருவகையில் தொழிலாளர் இயக்கம் ஒரு தேசிய இயக்கமாக வளர்ந்து வருவதற்கு இது காரணமாக இருந்த போதிலும், நாளடைவில் தொழிலாளர் சங்கத்தில் தோன்றிய பிளவுகளுக்கும் இதுவே முக்கியக் காரணமாக இருந்தது. பல்வேறு கருத்தினங்களைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர் இயக்கத்தில் பங்கு கொண்டனர் என்று கூறுவதால், இவர்கள் தங்களுக்குள் தொடர்பு இல்லாமல் தனித்தனியாக இயங்கி வந்தனர் என்று கருதுவது தவறு.

அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் [All India Trade Union Congress]

தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியில் 1920ஆம் ஆண்டு ஒரு முக்கியத்துவம் உடைய ஆண்டாகும். நாடெங்கிலும் உள்ள

பல்வேறு தொழிலாளர் சங்கங்களுடன் இணைப்புத் தொடர்புடைய மையத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் ஒன்று இவ்வாண்டில் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் மாநாட்டுக்கு அதிகாரபூர்வமான தொழிலாளர் பிரதிநிதியை இந்தியாவிலிருந்து அனுப்பவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்தியாவில் உள்ள தொழிலாளர் சங்கங்கள் அனைத்தையும் (அல்லது பெரும்பான்மையானவற்றை) இணைத்துள்ள மையத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் ஒன்றைத் தோற்றுவித்தாலன்றி மேற்படி மாநாட்டிற்கு இந்தியாவின் சார்பில் யாரையும் அனுப்ப முடியாது. இத் தருணத்தில்தான் அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது காங்கிரஸ் மாநாடு 1920 அக்டோபரில், பம்பாயில் கூட்டப்பட்டது. இதற்குத் திரு. லாலா லஜபதிராய் தலைமை தாங்கினார். இந்தியாவின் பெருந்தலைவர்கள் அனைவரும் இதில் பங்குகொண்டார்கள். இக் காங்கிரஸில் ஜெனிவா மாநாட்டிற்குச் செல்லும் பிரதிநிதியாகத் திரு. N. M. ஜோஷி தேர்ந்து எடுக்கப்பட்டார்.

இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் ஆரம்பம் முதல் தலைசிறந்த அறிஞர்களும், தேசியவாதிகளும் தலைவர்களாகப் பணியாற்றியுள்ளனர். இதில் குறிப்பாக நடுத்தர வகுப்பினர்களும், அரசியல் தலைவர்களும், அறிஞர்களும் பங்கு கொண்டனர். இதனால் தொடக்கத்தில் மிதவாதக் கொள்கையின் உறைவிடமாக இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் விளங்கியது. தொழிலாளர் இயக்கத்தை அரசாங்கமும் பொதுமக்களும் அங்கீகரிப்பதற்கு நடுத்தர வகுப்பினரின் தலைமை] இன்றியமையாதது. ஆனால், நாளடைவில் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் தீவிரவாதிகளின் செல்வாக்கு ஓங்கியவுடன் இதில் பிளவு ஏற்படுவதற்கும் நடுத்தர வகுப்பினரின் தலைமையே காரணமாக இருந்தது என்று கூறவேண்டும்.

இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸின் தலைவர்கள் வலசாரிக் கொள்கைகளை ஆதரித்தார்கள் என்ற காரணத்தால், இடசாரிக் கருத்துகள் இடம்பெறவில்லை என்று எண்ணக்கூடாது. தொழிலாளர் இயக்கத்தில் வலசாரிக் கருத்துகளும், இடசாரிக் கருத்துகளும் இரு முக்கியக் கூறுகளாக இருந்தன.

தொழிலாளர்கள் சங்கம் அமைத்துக்கொள்ளச் சட்டம் இயற்றப்பட்டதால் இந்திய அரசாங்கம் தொழிலாளர்களின் பக்கம் முழுமையாகச் செயல்பட்டது என்றோ, முற்போக்கான இட

சாதிக் கொள்கைகளை ஆதரித்தது என்றே கூறமுடியாது. தீவிரமான இடசாரிக் கொள்கைகளை ஆதரித்தவர்களைக் 'கம்யூனிஸ்டுகள்' என்றே, 'கம்யூனிஸ ஆதரவாளர்கள்' என்றே கூறினர்கள். முற்போக்கான இடசாரிக் கருத்துகள் பரவுவதை ஆரம்பம்முதல் இந்திய அரசாங்கம் கட்டுப்படுத்த விரும்பியது. ஆகையால், கம்யூனிஸ்டுகளால் இந்தியாவிற்கு அபாயம் ஏற்படும் என்ற கூக்குரல் எழுப்பப்பட்டது. முற்போக்கு வாதிகளின் செல்வாக்கை நேரிடையாகவும், மறைமுகமாகவும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டது. இங்ஙனம் கம்யூனிஸக் கோட்பாடுகளுக்கு எதிரான வாதங்கள் எழுப்பப்பட்டதுடன், என்றென்றும் கம்யூனிஸத் தலைவர்கள் தலைதூக்காமல் செய்வதற்காக அவர்கள்பேரில் சதிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இக் குற்றச்சாட்டுகளைக் கவனிக்கும் முன்னர்த் தொழிலாளர் இயக்கத்தில் உள்ளூறாக நிலவிய கருத்துவேறுபாடுகள், உட்கட்சிகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்வது அவசியம்.

உட்கட்சிகள் : இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் வலசாரிகள், இடசாரிகள் என்று இரு பிரிவினர் செயல்பட்டு வந்தனர். இவ் விரு உட்கட்சியினரும் தங்கள் செல்வாக்கையும், தங்களுக்குள்ள ஆதரவையும் வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக ஆண்டுதோறும் நடைபெறும் பொழுதுக்குழுக் கூட்டத்தைக் (காங்கிரஸை) கருதினர்கள். இதனால் பொதுக்குழுக் கூட்டங்களில் காரசாரமான வாக்குவாதங்கள் ஏற்பட்டன. இவ் விரு உட்கட்சியினரையும் 'ஜெனிவாஆம்ஸ்டர்டாம் குழு' என்றும், 'மாஸ்கோவாதிகளின் குழு' என்றும் அழைத்தார்கள். இவை முறையே ஜெனிவா, மற்றும் மாஸ்கோ ஆகிய நகரங்களில் மையம்கொண்டிருந்த இரு வேறு பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்புகளைக் குறிப்பிட்டன. இவ் விரு பன்னாட்டு அமைப்புகளும் இருவேறுபட்ட அரசியல் சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் உள்ள வலசாரிகள் ஜெனிவா அமைப்பையும், இடசாரிகள் மாஸ்கோவில் உள்ள அமைப்பையும் ஆதரித்தார்கள்.

இரு உலகத்தொழிலாளர் அமைப்புகள் இருந்தமையால் இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் இரு உட்கட்சிகள் நிலவின என்று நினைப்பது தவறு. இரு உட்கட்சிகளும் வெவ்வேறு கோட்பாடுகளை ஏற்றுச் செயல்பட்டன. தொழிலாளர் சங்கங்கள் தொழில்துறை நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றும், அரசியல் நடவடிக்கைகளில் அதிகம்

ஈடுபடக்கூடாது என்றும் வலசாரிக் கட்சித் தலைவர் திரு. N. M. ஜோஷி கருதினார். ஆனால், இடசாரிக் கட்சித் தலைவர்கள் தொழிலாளர் சங்கத்தில் அரசியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். இச் சங்கங்கள் புரட்சிகரமான செயல்களில் ஈடுபடவேண்டும் என்று விரும்பினார்கள். இவ் விரு உட்கட்சியின ருக்கும் இடையே ஏற்பட்ட போட்டாபோட்டியின் வெளிப் பாடாக 1929-ல் இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸின் பிளவைக் குறிப்பிட வேண்டும். அவ் வாண்டு நடைபெற்ற தலைவர் தேர்தலில் வலசாரிகளின் வேட்பாளராக நின்ற திரு. ஜவஹர்லால் நேரு வெற்றிபெற்றார். இது இடசாரித் தலைவர்களின் மனக்கசப்பை மேலும் உயர்த்தியது.

இடசாரித் தலைவர்களின் செல்வாக்கில் இருந்த தொழி லாளர் சங்கங்கள், அவற்றின் உறுப்பினர்கள் ஆகிய விவரங்கள் மிகைப்படுத்திக் கூறப்படுவதாக வலசாரித் தலைவர்கள் எண்ணினர். அதேசமயம் இடசாரித் தலைவர்களும் அதிருப்தி அடைந்திருந்தனர். தங்களுக்குத் தொழிலாளர்களிடையே அதிகச் செல்வாக்கும், ஆதரவும் இருக்கின்றன என்றும், அந்த அளவுக்குத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் செல்வாக்கு அல்லது பிரதிநிதித்துவம் இல்லை என்றும் குறைப் பட்டுக்கொண்டனர். இவ் விரு உட்கட்சிகளின் மோதல்களைத் தவிர்க்க முடியவில்லை. இதனால் பொதுவான மனக்கசப்பும், கருத்து வேறுபாடும் தோன்றின.

தொழிலாளர் தலைவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி உட்பூசலை வளர்த்துக்கொண்டு இருந்த காரணத்தால், இவ் வியக்கத்தின் வளர்ச்சிக்கு முழுமையாகப் பொறுப்பு ஏற்கவோ, வழிகாட்டவோ இயலாதவர்களாக இருந்தனர். தொழிலாளர் களின் இயலாமையைத் தங்களுக்குச் சாதகமாக ஆலை அதிபர் களும், அரசாங்கமும் பயன்படுத்திக்கொண்டன. ஆலைத்தொழிலா ளர்களின் பொருளாதாரச் சீர்கேடு விவரித் துரைக்க முடியாத அளவிற்கு வருந்தத்தக்கதாக இருந்தது: முதல் உலகப்போரை ஒட்டித் தோன்றிய பூரிப்பான தொழில்வளர்ச்சியால் ஒருபுறம் ஆலை அதிபர்கள் இலாபமடைந்தார்கள் என்றால், மற்றொருபுறம் அதையொட்டி ஏற்பட்ட விலைவாசி உயர்வால் தொழிலாளர்கள் அவதிப்பட்டனர். தொழிலாளர்கள், தங்களின் பொருளாதார நலன்களைக் காத்துக்கொள்ள இயலாதவர்களாக இருந்தனர். இவர்களைச் சரியான பாதையில் அழைத்துச்செல்லும் வலியற்றவர் களாக உட்கட்சியாலும் உட்பூசலாலும் பிளவுபட்ட—இவ் வியக்கத்தவர்கள் விளங்கினார்கள்.

இத் தருணத்தைப் பயன்படுத்தித் தொழிலாளர் இயக்கத்தை ஒடுக்க இந்திய அரசாங்கம் திட்டமிட்டது. 1929ஆம் ஆண்டுத் தொழிற்பூசல் சட்டத்தின் வாயிலாக அரசாங்கத்தின் உட்கிடக்கையை ஒருவாறு ஊகித்தறிய முடிகிறது. முக்கியமானவை என்று அறிவிக்கப்பட்ட பொதுப்பணிகளில்[15] தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது; அங்ஙனம் வேலைநிறுத்தம் செய்ய விரும்புகிறவர்கள் தனித்தனியாக ஒருமாத முன் அறிவிப்புச் செய்யவேண்டும். அடுத்து, பரிவிரக்க வேலைநிறுத்தம் (Sympathetic strike) செய்தல் கூடாது. சமுதாயத்திற்கு ஊறு விளைவிக்கும் எந்த வேலைநிறுத்தமும் சட்டரீதியாகச் செல்லுபடியாகாது என்று அரசாங்கம் அறிவித்தது.

1929ஆம்ஆண்டுத் தொழிற்பூசல் சட்டத்தைத் தொழிலாளர் இயக்கத் தலைவர்கள் அனைவரும் ஏகமனதாகக் கண்டனம் செய்தார்கள். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் அரசாங்கம் என்றைக்கும் தொழில்முயலுநர் பக்கமாகவே இருக்கும். ஆகையால், வேலைசெய்வோருக்கும் வேலை அளிப்போருக்கும் சமத்துவம் நிலவவில்லை. இவ் விரு சாரார்களுக்கும் குறிப்பிட்ட குற்றத்திற்காக ஒரேமாதிரியான தண்டனை விதிக்கலாம் என்று சட்டம் கூறியபோதிலும், நடைமுறையில் பெரும்பாலும் தொழிலாளர்கள்மட்டுமே தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

மூன்றாவது கட்டம்

மீரத் சதி வழக்கு : பிரிட்டிஷ் ஆட்சியாளரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு ஒரு விளக்கமாக மீரத் சதி வழக்கு[16] இருந்தது. தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிக்கு இடையூறு விளைவிப்பதுடன், இடசாரித் தலைவர்களை ஏனையோரிடமிருந்து பிரித்து அவர்கள் என்றென்றும் தொழிலாளர் இயக்கத்தில் பங்குகொள்ள முடியாமல் செய்வதே இச் சதிவழக்கின் முக்கிய நோக்கம் ஆகும். முற்போக்கான இடசாரிக் கருத்துகளை உடைய 31 கம்யூனிஸ்டுத் தலைவர்கள்மீது சதிக்குற்றம் சாட்டப்பட்டது. மேற்படி வழக்கு மீரத்தில் விசாரிக்கப்பட்டதால், இது மீரத் சதிவழக்கு என்று வழங்கப்படுகிறது.

15 அவையாவன : இரயில்வே, தபால், பாசனவசதி, மின்சாரவசதி முதலியன.

16 மீரத் என்னும் ஊர் டில்லியிலிருந்து சுமார் 40 மைல் தூரத்தில் உள்ளது. இது வரலாற்று முக்கியத்துவம் உடையது; முதல் தன்னுரிமைப் போர் 1857-ல் இங்குத்தான் ஆரம்பம் ஆகியது. இவ் வழக்கில் சதிக்குற்றம் சாட்டப்பட்ட தலைவர்களில் சிலர் ஒரு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கு வந்த சமயம் கைது செய்யப்பட்டார்கள். இதைத்தவிர மீரத்திற்கும் சதிக்குற்றச் சாட்டுகளுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் பிரித்தாளும் சூழ்ச்சி வெற்றிபெறவில்லை. அதற்குப் பதிலாகக் கம்யூனிஸக் கருத்துக்கு ஆதரவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அடக்குமுறைக்கு எதிர்ப்பும் பன்மடங்கு பெருகலாயின. இவ் வழக்கின் முக்கியக் குற்றச் சாட்டுகள், தொழிலாளர் இயக்கத்தின் சாதாரண நடவடிக்கை களைக் குறைகூறுவதாக இருந்தன; முற்போக்கான சோஷலிஸக் கொள்கைகளை இதன்மூலம் நேரடியாக எதிர்த்தனர். சோஷலிஸக் கருத்துகளை எதிர்த்தமையாலும், அரசாங்கத்தின் சார்பில் வழக்குத் தொடரப்பட்டதாலும் பன்னாட்டு அளவில் அனைவரின் கவனத்தையும் வெகுவாக இது கவர்ந்தது. உலகின் தலைசிறந்த அறிஞர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் இவ் வழக்கில் மிகவும் அக்கறை காட்டினர்[17].

மீரத் சதிவழக்கு உண்மையில் இடசாரிக் கம்யூனிஸ்டுகள் மீது அரசாங்கத்தால் தொடரப்பட்ட வழக்காக இருந்த போதிலும் தேசியத் தலைவர்கள் அனைவரும் இதில் அதிகம் ஈடுபட்டனர்; விடுதலைப் போராட்டத்தின் ஒரு கூறாக இது மாறியது என்றால் மிகையாகாது. தொழிலாளர் சங்கத் தலைவர் களைப் பாதுகாக்கவும், அவர்கள் சார்பாக அரசாங்கத்திற்கு எதிர்த்தரப்பில் வழக்காடவும் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இதன் தலைவராகப் பண்டித மோதிலால் நேரு பொறுப்பு ஏற்றார். இக் கமிட்டியில் இடம்பெற்ற இதரத் தேசியத் தலைவர்கள் பின் வருமாறு: பண்டித ஜவஹர்லால் நேரு, டாக்டர் M. A அன்சாரி, ஸர் தேஜ் பகதூர் சாப்ரு, டாக்டர் K. N. கட்ஜு முதலியோர். தொழிலாளர் தலைவர்களை விடுவிக்கத் தம்மால் இயன்றதைச் செய்வதாகக் காந்தியடிகள் (மேற்படி தலைவர்களைச் சிறைச்சாலையில் சந்தித்தபோது) உறுதி கூறினார்.

மீரத் சதிவழக்கில் தொழிலாளர் தலைவர்கள்மீது சாட்டப் பட்ட குற்றச்சாட்டுகள் விநோதமானவை. பிரிட்டிஷ் மன்னரிடமிருந்து இந்தியாவின் இறைமை உரிமையைப் பறிப் பதற்காகத் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் வன்முறையிலும், சதியாலோசனைகளிலும் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது. பிரிட்டிஷ் மன்னரின் இறைமையைப் பறிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டதால், தொழிலாளர் சங்கத் தலைவர்கள்மீதுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை என்றும், அவர்கள் எந்தச் சதியாலோசனையில் ஈடுபட்டு இருந்தாலும், எந்த

17. இவர்களில் முக்கியமானவர்கள் H. G. வெல்ஸ், A. ஐன்ஸ்டீன், பேராசிரியர் லாஸ்கி, பேராசிரியர் டானி, அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் முதலியோர்.

வன்முறையில் ஈடுபட்டு இருந்தாலும் அது பிரிட்டிஷ் மன்னரின் இறைமையைப் பறிப்பதற்கான முயற்சியாகக் கருதப்படவேண்டும் என்று கூறப்பட்டது. இவ் வழக்கு 1929-லிருந்து 1932வரை விசாரணை செய்யப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டுகளை நிரூபிக்க இயலாத காரணத்தால் தொழிலாளர் சங்கத் தலைவர்களை விடுவித்தனர்.

அரசுதொழிலாளர் ஆணைக்குழு : இந்தியாவில் தொழில் நிறுவனங்களிலும், மலைத்தோட்டங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்களின் உடல்நலம், ஆரோக்கியம், ஆற்றல், வாழ்க்கைத்தரம் முதலியவற்றை ஆராயவும், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே நிலவிய தொழில் தொடர்புகளை ஆராய்ந்து பரிந்துரைகள் வழங்கவும் 1929-ல் J. H. விட்லே (Whitley) தலைமையில் அரசுதொழிலாளர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தியாவில் தொழிற்சாலைகள் தோன்றியது முதல் 1930வரையிலான ஆண்டுகளில் இந்தியத் தொழிலாளர்களின் நிலைமையைச் சிறந்த முறையில் விளக்கிக்கூறும் ஓர் அறிக்கையாக இதைக் கருதவேண்டும். இவ்வாணைக் குழுவில் தொழிலாளர் சங்கத் தலைவர்களான N. M. ஜோஷியும், திவான் சாமன்லால் அவர்களும் உறுப்பினர்களாகப் பணியாற்றினர் என்பது பாராட்டுதற்குரியது. ஆனல், கம்யூனிஸ்டுத் தலைவர்கள் இதனுடன் ஒத்துழைக்கத் தயாராக இல்லை. இவர்களுக்கு அரசு ஆணைக்குழுவிடம் நம்பிக்கை ஏற்படவில்லை என்பதுடன், பிரிட்டிஷ் இந்திய அரசின் கொள்கைகள் முற்போக்கான தொழிலாளர் சங்கத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டு இருந்தமையால் தங்கள் ஒத்துழைப்பை நல்கவில்லை. அவ் வாண்டில் அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸும் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கத்தில் இருந்தமையால் மேற்படி அரசு ஆணைக்குழுவுடன் எவ்விதத்திலும் ஒத்துழைக்க மறுத்துவிட்டது.

கம்யூனிஸ்டுத் தலைவர்களின் ஆதிக்கம் ஓங்கியதை ஆட்சேபிக்கும் வகையில் 1929-ல் மிதவாதக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட தலைவர்கள் அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸிலிருந்து விலகிச்சென்றனர். பல்லாண்டுகளாக உள்ளூறாக நிலவிய புகைச்சலும், மனக்கசப்பும் 1929-ல் வெளிப்படையான பிளவாகப் பரிணமித்தது.

இச் சமயம் உலகமந்தம் தீவிரமடைந்தது. ஆலை அதிபர்கள் தொழிற் சீரமைப்புத் திட்டங்களைச் (Rationalization) செயல்படுத்தத் தொடங்கினர்கள். தொழிலாளர்களின் வேலைப்பளு

உயர்ந்துசென்றது; வேலைவாய்ப்புத் தேய்ந்துசென்றது; வேலை யின்மையைத் தொடர்ந்து வேலைநிறுத்தங்கள் அதிகரித்தன. 1933-ல் 146 வேலைநிறுத்தங்களும், 1934-ல் 159 வேலை நிறுத்தங்களும் நடைபெற்றன; இவற்றில் முறையே 1,64,938. 2,20,808 தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். இவ் விரு ஆண்டு களிலும் முறையே 2·17 மில்லியன் 4·78 மில்லியன் உழைப்பு நாள்கள் இழப்பு ஏற்பட்டன.[18]

உலகமந்தம் தீவிரமடைந்த காலத்தில் தொழிலாளர் இயக் கத்தை ஒடுக்க அரசாங்கம் திட்டமிட்டது. அவசரச் சட்டங் களைப் பிறப்பித்துத் தொழிலாளர் தலைவர்களைக் கைதுசெய்தது. அரசாங்கம் இடசாரிக் கொள்கைகளை உடைய கம்யூனிஸ்டுத் தலைவர்களைமட்டுமே கைது செய்யக்கூடும் என்று எதிர்பார்த்த வர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். அரசாங்கத்தின் அந்தரங்க மான திட்டத்தைத் தெரிந்துகொண்டதும் அதை முறியடிக்கத் திட்ட மிட்டனர்; முக்கியமாக அனைத்துத் தொழிலாளர் இயக்கத் தலைவர்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர்.

தொழிலாளர் இயக்கத் தலைவர்கள் ஒற்றுமையை விரும்பி ஏற்பதற்கு முன்னர் அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில், 1931-ல் இரண்டாவது முறையாகப் பிளவு ஏற் பட்டதைக் கூறவேண்டும். மீரத் சதிவழக்கில் அனுபவம் மிக்க பல கம்யூனிஸ்டுத் தலைவர்கள் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட சமயத்தில், இரண்டாம்நிலைக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தொழிலாளர் இயக்கத்தின் பொறுப்பை ஏற்றனர். இவர்கள் சிறந்த கம்யூனிஸச் சித்தாந்தவாதிகளாக இருந்த அளவிற்கு நடைமுறையை அனுசரித்துச் செயல்படவில்லை. முன்யோசனை இல்லாமல் பல வேலைநிறுத்தங்கள், நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் பல தொழிலாளர் சங்கங்கள் கலைக்கப்பட்டன; அல்லது செயலற்றுப்போயின. இதனால் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குத் தொழிலாளர்களிடத்திலும், அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸிலும் குறைந்து சென்றது. 1931-ல் சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் கம்யூனிஸ்டுகள் வெளிநடப்புச் செய் தார்கள். இங்ஙனம் வெளியேறியவர்கள் செந்தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் (Red Trade Union Congress) என்ற மையத் தொழி லாளர் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார்கள்.

18 V. B. Singh, op cit, p. 584

இங்ஙனம் தொழிலாளர் சங்கத் தலைவர்களிடையே ஒற்றுமையில்லாமல் பிளவுபட்டு இருந்த சமயத்தில், உலகப் பெருமந்தம் காரணமாகவும், அரசாங்கத்தின் அடக்குமுறை காரணமாகவும், தொழிலதிபர்களின் அச்சுறுத்தல்களாலும் தொழிலாளர்களும், தொழிலாளர் சங்கங்களும் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டன. நிலைமையின் தீவிரத்தன்மையை உணர்ந்த தொழிலாளர் தலைவர்கள் மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்தப் பாடுபட்டார்கள். ஆனால், இம் முயற்சிகள் அதிகக் காலதாமதத்துடன் வெற்றி அடைந்தது. 1931-ல் பிரிந்து சென்ற தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் 1932-ல் மீண்டும் அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸுடன் சேர்ந்தது[19]. ஒன்றுபட்ட தொழிலாளர் சங்கத் தலைவர்கள் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தினார்கள். 1929-ல் பிரிந்துசென்ற வலசாரிகள் 1938-ல் நாக்பூர் மாநாட்டில் மீண்டும்ஒன்றுகூடினர். இங்ஙனம் அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் ஒன்றுசேர்ந்து பழைய வலிமையுடன் தொழிலாளர் இயக்கத்திற்கு வழிகாட்டும் பொறுப்பை ஏற்ற ஓராண்டுக்குள் இரண்டாவது உலகப்போர் ஆரம்பமாகிவிட்டது.

இக் கட்டத்தில் தொழிலாளர் இயக்கத்திற்கு நம்பிக்கையூட்டும் மற்றொரு வளர்ச்சியைக் குறிப்பிடவேண்டும். 1937-ல் மாநிலங்கள் அனைத்திலும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் மந்திரிசபைகள் ஆளும்பொறுப்பை ஏற்றன. காங்கிரஸ் தலைவர்கள் தொழிலாளர் இயக்கத்திற்கு முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் அளிக்க முன்வந்தனர்; தொழிலாளர்களின் குறைகளை இயன்றவரை போக்குவதற்கு உறுதி அளித்தனர்; தொழிலாளர் இயக்கம் சட்டரீதியானது என்றும், தொழிலாளர் சங்கத் தலைவர்களுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். இவை யாவும் இதற்கு முன்பு நிலவிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவை.

பொதுவாகத்தொழிலாளர்களின் வாழ்க்கைநிலை, உலகமந்தம் ஏற்பட்டதிலிருந்து வருந்தத்தக்கதாகவே இருந்தது. அரசாங்கத்தின் ஆதரவு இல்லாமையாலும், தொழிலாளர் சங்கத் தலைவர்களிடையே ஒற்றுமை இல்லாததாலும் அவர்களது குறைகள், கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் இருந்தன. இவ்வாறு குவிந்துள்ள குறைகளை எல்லாம், அரசாங்கத்தின் ஆதரவு தங்கள் பக்கம் இருப்பதை உணர்ந்தவுடன், 1937-க்குப் பின்னர் நிறை

19 V. V. Giri-op. cit., p. 17.

வெற்றிகொள்ள முற்பட்டனர். தொழிலாளர்களின் கோரிக்கைகள் வேலைநிறுத்தங்களாகவும், தொழிற்பூசலாகவும் உருவெடுத்தன. 1937–39ஆண்டுகளில் இவை மிகுதியாகக் காணப்பட்டன. 1937–ல் 379 வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. அவற்றில் 6,76,000 தொழிலாளர்கள் கலந்துகொண்டார்கள். இவற்றின் விளைவாக 8·98 மில்லியன் உழைப்புநாள்கள்[20] இழப்பு ஏற்பட்டன. தொழிலாளர்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட மாநில அரசுகள் விசாரணைக் கமிட்டிகளை நியமித்தன. இவற்றின் பரிந்துரைகள் அனைத்தையும் நிறைவேற்றும் முன்னர் இரண்டாவது உலகப்போர் ஆரம்பமாகியது.

தொழிலாளர் இயக்க வளர்ச்சியில் 1929–39 வரை உள்ள ஆண்டுகளை மூன்றாவது கட்டம் எனலாம். இவ் வாண்டுகளில் தொழிலாளர் இயக்கத்திற்குப் பல சோதனைகள் ஏற்பட்டன. உலகமந்தம், அரசின் அடக்குமுறை, சதிக் குற்றச்சாட்டுகள் முதலிய புறச்சக்திகளாலும், உட்கட்சிகள், அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையிலும் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் பிரிந்துசென்றனர். இதனால் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன; பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இவற்றின் இறுதியில் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் மீண்டும் ஒற்றுமை ஏற்பட்டு ஐக்கிய உணர்ச்சி மேலோங்கியது. தொழிலாளர் இயக்கத்தை ஆதரிக்கும் காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி ஏற்றன. இவ் விரு நிகழ்ச்சிகளின் பயனைத் தொழிலாளர்களும், தொழிலாளர் இயக்கமும் ஆதாயம் அடையும் முன்னர் இரண்டாவது உலகப்போர் ஆரம்பமாகியது. இரண்டாவது உலகப்போருடன் தொழிலாளர் இயக்கத்தின் நான்காவது கட்டம் ஆரம்பமாகியது.

நான்காவது கட்டம்

உலகப்போரினால் பூரிப்பான தொழில்வளர்ச்சி ஏற்பட்டது; பல புதிய தொழில்கள் நிறுவப்பட்டன; தொழில் நிறுவனங்களின் உற்பத்தி அளவைத்திறன் விரிவாக்கப்பட்டது. இதனால் நாடெங்கிலும் வேலைவாய்ப்புகள் உயர்ந்துசென்றன. உலகப் போரினால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட ஒரே ஆதாயமாக உயர்ந்துசெல்லும் வேலைவாய்ப்பைக் கூறவேண்டும். போரினால் பொதுவான விலைவாசி உயர்ந்தது. அத்தியாவசிய நுகர்பொருள்களின் கிடைப்பருமை அதிகரித்தது. விலைவாசி உயர்ந்துசெல்லும்

20 Ibid-p. 586.

அளவிற்குத் தொழிலாளர்களின் பணவருமானம் உயரவில்லை. இதனால் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்தது எனலாம் (பார்க்கவும் அட்டவணை 21-1).

அட்டவணை—21-1

1939 -- 45 ஆண்டுகளில் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம்×

ஆண்டுகள்	பணவருமானக் குறியீட்டு எண்	அனைத்து இந்திய நுகர்வு விலைக்குறியீட்டு எண்	மெய்வருமானக் குறியீட்டு எண்
1939	100	100	100
1940	105·3	97	108·6
1941	111·0	107	103·7
1942	129·1	145	89·0
1943	179·6	268	67·0
1944	202·1	269	75·1
1945	210·5	269	74·9

× ஆதாரம்: V.B. Karnik - Indian Trade Unions 1966, p. 124. Quoted from A. S. Mathur and J. S. Mathur Trade Union Movement in India, p. 38

தொழில்முயல்வோர்களின் இலாப விழுக்காடு வெகு விரைவாக உயர்ந்துசென்றதைச் சுட்டிக்காட்டித் தொழிலாளர்கள் தங்களுக்கு போனஸ் வழங்கக் கோரினர். பெரும்பாலும், இக்கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவை யாவும் தொழிலாளர்களுக்கு ஓரளவு நிவாரணம் அளித்தன என்றாலும், விலை உயர்வால் வீழ்ச்சியடைந்த வாழ்க்கைத்தரத்தை மீண்டும் நிலைநாட்டப் போதுமானதாக இல்லை.[21]

உலகப்போரினால் தோன்றிய பொருளாதாரப் பிரச்சினைகளை விட, அரசியல் அடிப்படையில் தோன்றிய பல நிகழ்ச்சிகள் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியையும், வளர்ச்சிப்பாதையையும் நிர்ணயிக்கக் கூடியவையாக இருந்தன. இந்தியத் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்ட தலைவர்கள் பல்வேறு அரசியல் கொள்கைகளைக் கடைப்பிடித்தமையால் இக் காலத்தில் முரண்பட்ட விளைவுகள் தோன்றின. இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் தேசியவாதிகளும், கம்யூனிஸ்டுகளும் செல்

[21] பார்க்கவும் V. B. Karnik-op. cit., p. 123

வாக்கு உடையவர்களாக இருந்தார்கள். தேசியத் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியதால் ஆட்சியாளர்கள்மீது கோபம் கொண்டவர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் போரில் தங்கள் ஒத்துழைப்பை நல்க மறுத்துவிட்டனர். கம்யூனிஸ்டுத் தலைவர்களும் வேறொரு காரணத்திற்காக பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்க விரும்பவில்லை. பிரிட்டன் ஜெர்மனிக்கு எதிராகப் போராடியது; ஜெர்மனியின் தலைவரான ஹிட்லருடன் சோவியத் தலைவர்கள், போர் தொடங்கிய ஆரம்பகாலத்தில் நெருங்கிய தொடர்புகொண்டு இருந்தமையால், உலகெங்கிலும் உள்ள கம்யூனிஸ்டுகள் ஜெர் மனிக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபட முன்வர வில்லை. ஆனல், கம்யூனிஸ்டுகளின் இப் போக்கு விரைவில் திசை மாறியது. ஹிட்லரால் சோவியத் யூனியன் தாக்கப்பட்டவுடன், கம்யூனிஸ்டுகள் பிரிட்டிஷ் அரசுடன் ஒத்துழைக்கத் தயாராக இருந்தனர்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி முக்கியத் தொழில் களில் வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும் சட்ட விரோத மானவை என்று அறிவித்தபோதிலும், தொழிலாளர்கள் அனை வரும் போர்க்காலத்தில் உள்ள நெருக்கடி நிலைமையை உணரும் படி செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கூடுமானவரை வேலைநிறுத்தங்களில் ஈடுபடாமல் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை களை இருதரப்பினரும் தீர்த்துக்கொள்ள வேண்டும். இங்ஙனம் தொழிலாளர் பிரச்சினைகளை ஆக்கரீதியாக அணுகுவதற்குத் தொழிலாளர் சங்கத் தலைவர்களின் ஒத்துழைப்பு அரசாங்கத் திற்குத் தேவைப்பட்டது. அரசியல்கட்சி சார்பு இல்லாமல் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அணுக விரும்பிய திரு. M. N. ராய் அவர்களின் ஒத்துழைப்பு அரசாங்கத்திற்குக் கிட்டியது.

அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் அச் சமயம் தேசியவாதிகள், கம்யூனிஸ்டுகள் ஆகியோர் ஆதிக்கத்தில் இருந்தமையால் திரு. M. N. ராய் தலைமையில் செயல்பட்ட தொழிலாளர் சங்கங்கள், தலைவர்கள் தனியாகப் பிரிந்துசென்று இந்தியத் தொழிலாளர் சம்மேளனத்தைத் (Indian Federation of Labour) தோற்றுவித்தார்கள். தொழிலாளர்களின் ஒத்துழைப் பைத் திரட்டுவதும், அவர்களிடம் பிரிட்டிஷ் அரசுக்கு ஆதரவான மனப்பான்மையை ஏற்படுத்துவதும் அதற்காகப் பிரசாரம் செய் வதும் இவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. இங்ஙனம் அரசிற்கு ஆதரவாகப் பிரசாரம் செய்த தொழிலாளர் சம்மேள

னத்தின் செலவிற்காக மாதம்தோறும் ரூ. 13,000/-தொகை அரசால் கொடுக்கப்பட்டது.

தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் கருத்துவேறுபாடுகள் மிகுந்து இருப்பதற்கு அரசியல் தீர்மானங்கள் அடிப்படையாக இருந்தன என்பதால், பிரிந்துசென்ற தொழிலாளர் சங்கத் தலைவர்கள் மீண்டும் 1938-ல் ஒன்றுசேர்ந்தபோது ஒரு நிபந்தனையை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். அரசியல் தீர்மானங்கள் கூடுமானவரை ஏகமனதாக இருக்கவேண்டும் என்றும், குறைந்தது ஐந்தில் நான்கு பங்குப் பெரும்பான்மை பெற்று இருக்கவேண்டும் என்றும் ஒப்புக்கொண்டார்கள். உலகப்போர் நடைபெற்ற சமயத்தில் மேற்படி 80% பெரும்பான்மை எத் தரப்பினருக்கும் கிடைக்காத காரணத்தால் 1945வரை எவ்வித அரசியல் தீர்மானத்தையும் அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸில் நிறைவேற்ற முடியவில்லை.

பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நெருக்கடி நிலைமை அறிவிக்கப்பட்டதால் சில இன்றியமையாத தொழில்துறைகளில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் சட்டவிரோதமாக்கப்பட்டன. இருந்தபோதிலும் இத் துறைகளில் தோன்றும் தொழிற் பூசல்களுக்குத் தீர்வுகாண மாற்று அமைப்புகள் ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர்ந்தது. தொழிலாளர்களை அச்சுறுத்தி, அடக்குமுறையின் வாயிலாக அவர்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியாது என்பதை உணர்ந்த அரசாங்கம் அவர்கள் ஆதரவைப் பெறுவதற்குச் சில முக்கியத் தொழிலாளர் நலத்திட்டங்களுக்கு வழிவகுத்தது. தொழிற் பூசல்களைத் தவிர்ப்பதற்கு முத்தரப்பு மாநாடுகள்—அரசு, தொழில் அதிபர்கள், தொழிலாளர் தலைவர் ஆகியோரைக்கொண்டு—நடைபெற்றன. தொழிலாளர் பிரச்சினைகளை முதன்முதலாக இந்திய அரசாங்கம் ஆக்கரீதியாக அணுகியது. அதன் விளைவாக 1942-ல் தொழிலாளர் நல அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்; தீர்ப்புமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன; தொழிற்சாலைகளில் சிற்றுண்டிச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன; நிர்ணயிக்கப்பட்ட விலையில் அத்தியாவசியமான நுகர்பொருள்கள் கிடைக்க வழிசெய்யப்பட்டது; சில முக்கியப் பொருள்கள் பங்கீடு செய்யப்பட்டன. இம் முயற்சிகளின் விளைவாக வீக்கத்தின் பிடிப்பிலிருந்து ஓரளவு தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட்டனர்.

போர் முடிந்த பின்னரும் விலைமட்டம் தொடர்ந்து உயர்ந்து சென்றது. இதனால் தொழிலாளர்களின் மெய்வருமானம் தேய்ந்துசென்றது. ஆனால், தொழிலதிபர்களின் இலாப விழுக்காடு

உயர்ந்துசென்றது. தொழிலாளர்களின் நலன்களைப் பாது காத்துக்கொள்வதற்கு மேலும் பல புதிய சங்கங்கள் நிறுவப் பட்டன. சாதாரண ஆலைத் தொழிலாளர்களைப் போலவே, மத்தியதர வகுப்பைச் சேர்ந்த, கல்வி அறிவு சார்ந்த உழைப்பை நல்கும் மேல்மட்ட ஊழியர்களும் தொழிலாளர் சங்கங்களை நிறு வினார்கள் (காட்டாக, பத்திரிகை ஊழியர்கள்). 1945-ல் 865 தொழிலாளர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றின் உறுப்பினர் தொகை 9 இலட்சமாக இருந்தது. 1947–48–ல் தொழிலாளர் சங்கங்கள் 3000 ஆகவும், இவற்றின் உறுப்பினர் தொகை 16·6 இலட்சமாகவும் உயர்ந்து சென்றன,

ஐந்தாவது கட்டம்

இந்திய தேசியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் : விடுதலைக்கு முன்னர் இந்திய தேசியக் காங்கிரஸ் ஒரு தேசிய இயக்கமாக இருந்தது. விடுதலைக்குப் பின்னர் இது ஓர் அரசியல் கட்சியாக மாறியது. இதன் காரணமாக இந்தியத் தேசியக் காங்கிரஸி லிருந்து பலர் பிரிந்துசென்றனர்; பல புதிய கட்சிகள் தோன்றின. இவற்றின் விளைவுகள் தொழிலாளர் சங்கங்களின் வளர்ச்சியையும் பாதித்தன; அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிர ஸிலும் பிளவுகள் தோன்றின.

இரண்டாவது உலகப்போருக்கு முன்னதாகவே அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸின் தலைமை கம்யூனிஸ்டு களின் கைவசம் வந்துவிட்டது. எனவே, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியினர் 1947-ல் தங்களுக்கு என்று ஒரு புதிய தொழிலாளர் சங்கத்தை அமைத்துக்கொண்டார்கள். சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் தலைமையில் இந்திய தேசியத் தொழி லாளர் சங்கக் காங்கிரஸ் (Indian National Trade Union Congress) ஆரம்பிக்கப்பட்டது. இதில் அகமதாபாத் தொழிலாளர் சங்கம் இணைக்கப்பட்டது. (இதுவரை அகமதாபாத் சங்கம் எந்த மையத் தொழிலாளர் சங்கத்துடனும் இணைப்பு ஏற்படுத்திக் கொள்ள வில்லை.) இதன் காரணமாகத் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் தலை வர்களும், தொண்டர்களும் தேசியத் தொழிலாளர் சங்கக் காங் கிரஸிற்குக் கிடைத்தனர். இதன் உறுப்பினர் தொகையும் மிக அதிகமாக இருந்தது. இவ்வாறு தோன்றிய இந்திய தேசியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் இரு உண்மைகளைப் புலப்படுத்து கின்றது.

அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் முற்றிலும் கம்யூனிஸ்ட்களின் செல்வாக்கில் வந்துவிட்டது. அரசியல் ஆதிக் கத்தைத் தொடர்ந்து தொழிலாளர் சங்கங்களும் வேறுபட்டன.

விடுதலைக்குப் பின்னர் சோஷலிஸ்டுகள் காங்கிரஸ் கட்சியி லிருந்து பிரிந்துசென்றனர். ஆகையால், காங்கிரஸ் ஆதிக் கத்தில் உள்ள இந்திய தேசியத் தொழிலாளர் சங்கத்தினின்றும் பிரிந்துசெல்ல முடிவுசெய்தனர். சோஷலிஸக் கருத்துகளை ஏற்றுக்கொண்ட அனைத்து இந்தியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸின் ஒரு பகுதியினர், இந்தியத் தொழிலாளர் சம்மேள னம், மற்றும் சில தொழிலாளர் சங்கங்கள் முதலியன 1948-ல் ஒன்றுசேர்ந்து இந்தியத் தொழிலாளர் சபையை (Hind Mazdoor Sabha) ஆரம்பித்தார்கள். இச் சபை பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தது.

அரசியல் கட்சிகளின் செல்வாக்கிற்கு உட்படாதவாறு தொழிலாளர் சங்கம் செயல்பட வேண்டும் என்று விரும்பிய தொழிலாளர் இயக்கத் தலைவர்கள், 1949-ல் ஐக்கியத் தொழிலா ளர் சங்கக் காங்கிரஸ் (United Trade Union Congress) என்ற பெயரில் ஒரு தொழிலாளர் அமைப்பை ஏற்படுத்தினார்கள். இங்ஙனம் பாரதம் முழுவதிலும் பரவியுள்ள தொழிலாளர் சங் கங்கள் நான்காகும். இவற்றில் மூன்று தொழிலாளர் சங்கங்கள் மூன்று முக்கிய அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தில் உள்ளன.

தொழிலாளர் சங்கங்கள் பல அனைத்து இந்திய ரீதியில் அமைக்கப்பட்டு இருந்தாலும், அவை அரசியல் கட்சிகளின் சார் பாக உள்ள தொழிலாளர் சங்கக் காங்கிரஸுடன் சேர விரும் பாமல் தனித்துச் செயல்பட்டன. ஆலைத் தொழிலாளர்களைத் தவிர மத்தியதர வகுப்பினரைச் சேர்ந்த ஊழியர்களும் தொழி லாளர் சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். இவற்றில் உழைக்கும் பத்திரிகையாளர் சம்மேளனம், அனைத்து இந்திய ரிசர்வ் பாங்கு ஊழியர்கள் சங்கம், அனைத்து இந்திய பாங்கு ஊழியர்கள் சங்கம், அனைத்து இந்திய இரயில்வே ஊழியர்கள் சம்மேளனம் முதலியன முக்கியமானவை.

சில முக்கியக் கூறுகள்

தொழிலாளர் சங்கங்கள் யாவும் அரசியல் கட்சிகளின் அடிப்படையில் பிளவுபட்டுள்ளன. இவை ஒன்றோடு ஒன்று போட்டியிடுகின்றன. இதனால் உறுப்பினர்களின் தொகை ஆண்டுதோறும் நிலையற்றதாக மாறிக்கொண்டேயிருக்கின்றது. தொழிலாளர் சங்கங்கள் ஒற்றுமையாகச் செயல்படவில்லை. இன்று வரை தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்களாகத் தொழிலாளர் கள் பொறுப்பு ஏற்கவில்லை. சமூக அரசியல் காரணங்களுக்காக, மத்தியதர வகுப்பினரின் தலைமை தொழிலாளர் சங்கத்திற்கு அவசியமாக உள்ளது.

ஒரு தொழில் அல்லது நிறுவனத்தில் பன்மைத் தொழிலாளர் சங்கங்கள் இருக்கக்கூடும். ஆனால், இவற்றுள் ஏதாவது ஒரு முக்கியச் சங்கத்துடன் மட்டுமே ஒப்பந்தம் செய்துகொள்ள முடியும்; அல்லது தொழில் சச்சரவுகளில் தொழிலாளர்களின் பிரதிநிதியாக ஒரு சங்கத்தை மட்டுமே ஏற்றுக்கொள்ளலாம். இங்ஙனம் ஆலை அதிபர்கள் அல்லது அரசாங்கம் ஒரு நிறுவனத்தின் தொழிலாளர்கள் சார்பில் அவர்களின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளுவதற்கு எந்தத் தகுதிகள் இருக்க வேண்டும்; அல்லது எந்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்க முடியவில்லை. இதை முத்தரப்பு மாநாடுகளில் மட்டுமே முடிவுசெய்ய வேண்டும். ஆளும் அரசியல் கட்சிகள் தங்களின் ஆதிக்கத்தில் உள்ள தொழிலாளர் சங்கத்திற்கு ஆதரவு அளிக்க விரும்பக் கூடும். இதனால் ஏனைய தொழிலாளர் சங்கங்களின் நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம். பெரும்பான்மை உறுப்பினர்கள் இல்லாது போனாலும், ஆளும் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர் சங்கம் கூடுதலான சலுகைகளைப் பெறவும், தொழிலாளர்களின் பிரதிநிதியாகச் செயல்படவும் வாய்ப்புகள் ஏற்படலாம். இதனால் தொழிலாளர்களிடையே பூசல்கள் ஏற்பட்டுத் தொழில்துறை அமைதி பாதிக்கப்படலாம். ஒரே ஒரு சங்கத்தைப் பிரதிநிதி சங்கமாக ஏற்பதற்குப் பதிலாக இரண்டு பெரும்பான்மைச் சங்கங்களையும் அங்கீகரிக்கலாம். ஆனால், இது பற்றி 1969ஆம் ஆண்டுத் தேசியத் தொழிலாளர் ஆணைக்குழு கூடத் திட்டவட்டமான கருத்து எதையும் தெரிவிக்கவில்லை.

1966-ல் திரு கஜேந்திர கட்கர் தலைமையில் தேசியத் தொழிலாளர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதன் அறிக்கை 1969 ஆகஸ்ட் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த 20–25 ஆண்டுகளில் ஆலைத்தொழிலாளர்களின் நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இக்காலத்தில் தொழிலாளர் சங்கங்களின் நிலைபேறு அதிகரித்துள்ளது. 25 ஆண்டுகளுக்கு முன்புவரை ஆலைத் தொழிலாளர் அனைவரும் நகரங்களில் நிரந்தரமாக வசிக்கவில்லை. இவர்களில் பலர் தங்கள் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச்செல்ல விழைந்தனர். ஆலைகளில் வேலை செய்வதைத் தாற்காலிகமான ஏற்பாடாகக் கருதினர். இவர்கள் முதன்முதலில் ஆலைத்தொழிலாளர்களாக வந்ததால் பல சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கினர். இவற்றை 'முதல் தலைமுறைப் பிரச்சினைகள்' (First Generation Problems) என்று கூறுவார்கள். ஆனால், இன்றைய தினம் நிலைமை முற்றிலும் மாறியுள்ளது. ஆலைத்

தொழிலாளிகள் பலர் இரண்டாவது, மூன்றுவது தலைமுறை யினராக உள்ளனர்.

நகர வாழ்க்கை, ஆலைகளில் வேலை செய்வதால் தோன்றிய புதிய பழக்கங்கள் முதலியன குறிப்பிடத்தக்கவை. இவர்கள் கல்வி யின் முக்கியத்தை உணர்ந்துள்ளனர். வருமானத்தை உயர்த்திக் கொள்ளுவதற்குக் கல்வி ஒரு முக்கியச் சாதனமாக உள்ளது. எனவே, தொழிலாளர்—கல்வி, முதியோர்—கல்வி முதலியவற்றின் மூலம் தங்கள் திறனை உயர்த்திக்கொள்ளப் பாடுபடுகின்றனர். அதைப்போலவே, தங்கள் குழந்தைகளின் கல்வியை மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதுகின்றனர். நாளடைவில் உற்பத் தித்திறனை உயர்த்திக்கொள்ளுவதற்கு இந்த மனப்பான்மை மிகவும் அவசியமானது.

இன்றைய தினம் பெரும்பாலான தொழிற்பூசல்கள் சிறப்புத் தேர்ச்சி உடைய நிபுணர்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன. தொழிற்பூசல்கள் யாவும் தீர்ப்புமன்றங்களுக்கு எடுத்துச் செல்லப் படுகின்றன.

1952—64 ஆண்டுகளில் உற்பத்தித்திறன் 63% உயர்ந்து உள்ளது. ஆனால், உண்மைக் கூலி இக் காலத்தில் உயரவில்லை. இதைத் தவிர மொத்த ஆக்கச் செலவில் கூலியின் விழுக்காடு இக் காலத்தில் குறைந்துள்ளது. 1960-ல் மொத்த ஆக்கச் செலவில் கூலியின் விழுக்காடு 40% ஆக இருந்தது; 1964-ல் இவ் விகிதம் 36.5% ஆகக் குறைந்துவிட்டது. எனவே, உண்மைக் கூலி விகிதத்தை உயர்த்துவதற்குத் தகுந்த முகாந்தரங்கள் இருப்பதை ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.

கூலிவிகிதங்களை எந்த அடிப்படையில் நிர்ணயிக்க வேண் டும் என்று கஜேந்திர கட்கர் ஆணைக்குழு திட்டவட்டமாகக் கூறவில்லை. குறிப்பிட்ட மட்டத்திற்குமேல் கூலிவிகிதங்கள் உற்பத்தித்திறன் உயர்வைச் சார்ந்து இருக்கவேண்டும் என்று கூறியது. உற்பத்தித்திறனும், கூலிவிகிதங்களும் தொகு அள வில் தொடர்புகொண்டிருக்கின்றன என்றாலும், அதை ஒவ் வொரு துறையிலும் திட்டவட்டமாக வரையறுக்க முடிவதில்லை என்றும் கூறியது. ஒவ்வொரு துறையிலும் உள்ள கூலிவிகிதங் கள் அந்தந்தத் துறைகளின் உற்பத்தித்திறனைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் கூறியது.

கூலிவிகிதங்கள் நடைமுறையில் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, பொருளாதார அமைப்பின் கட்டமைப்பு, வரு மானப் பகிர்வு, வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றைச் சார்ந்து

உள்ளன. அதாவது கூலிவிகிதங்களை வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் கருதவேண்டும். கூலிவிகிதங்கள் பெரும்பாலும் நுகர்வுமட்டத்தை நிர்ணயிக்கின்றன. கூலிவிகிதம் உயர்த்தப்படுமானல், (தொகு அளவில்) நுகர்வுமட்டம் உயர்ந்து சேமிப்பும், முதலீட்டிற்கான உபரியும் குறைந்துவிடும். ஆகையால், வளர்ச்சித் தேவைகளைக் கருத்தில் கொண்டு கூலிவிகிதங்களை நிர்ணயிக்க வேண்டும். நீண்டகால ரீதியில் உண்மையான கூலி விகிதங்களை உயர்த்த வேண்டியது அவசியம். ஆனல், அதை உடனடியாக நிறைவேற்றுவதில் பல தடைகள் உள்ளன.

பாரதப் பொருளாதார அமைப்பில் இரட்டைத் தன்மை (dual economy) காணப்படுகின்றது; அமைப்புடைய பேரளவுத் தொழில்நிறுவனங்களும், அமைப்பில்லாத சிறு அளவுத் தொழில்நிறுவனங்களும் ஒரே தொழிலில் தொடர்ந்து செயல்படுகின்றன. எனவே, மூலதனச் செறிவுடைய நுட்பமும் உழைப்புச் செறிவுடைய நுட்பமும் ஒரே சமயத்தில் காணப்படுகின்றன. கூலிவிகிதங்கள் உற்பத்தித்திறனுடன் உயர்ந்துசெல்லவேண்டும். அதே சமயம் வேலை அளிப்பை மேலும் உயர்த்த வேண்டும். கூலி விகிதத்தை நிர்ணயிக்கும்போது இவ்விரண்டையும் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும்.

நாடு முழுவதும் ஒரே அடிப்படையில் குறைந்தபட்சக் கூலி விகிதத்தை நிர்ணயிப்பது இயலாது என்று ஆணைக்குழு கூறியது. துறை ஒவ்வொரு தொழிலிலும் முத்தரப்பு அடிப்படையில் கூலிவிகிதங்கள் நிர்ணயிக்கவேண்டும்.

தேசியத் தொழிலாளர் ஆணைக்குழு தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டபோதிலும், உடனடியாகச் சிலவற்றை மட்டுமே செயல்படுத்த முடியும் என்று கருத்துத் தெரிவித்தது. இவை முன்னெச்சரிக்கையான நிதானத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

22. இருப்புப்பாதை

போக்குவரத்தும், பொருளாதார வளர்ச்சியும்

இந்தியத் துணைக்கண்டத்தின் பரந்த நிலப்பரப்பிற்கு ஏற்ற அளவில் கால்வாய்ப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து முதலியன சென்ற நூற்றாண்டுவரை வளர்ச்சியுறவில்லை. ஆகையால், முதன்முதலில் இருப்புப்பாதை போடப்பட்டதும் பல புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. பல நூற்றாண்டுகளாக ஏகாந்தமாகவும், தன்னிறைவுடனும் வாழ்ந்த இந்தியர்கள் மேலை நாட்டுப் பொருளாதார வளர்ச்சி, நுட்ப வளர்ச்சி, நாகரிகம் ஆகியவற்றுடன் நேரிடையான தொடர்புகொண்டனர். தன்னிறைவு அடிப்படையில் இயங்கிய கிராமியப் பொருளாதார அடிப்படை சீர்குலைந்தது. மக்களின் சமூக வாழ்க்கையிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. இம் மாற்றங்கள் அனைத்தும் முற்றிலும் வரவேற்கக் கூடியவை என்றோ, கண்டனம் செய்யக் கூடியவை என்றோ கூற முடியாது. போக்குவரத்துத் துறையில் தோற்றுவிக்கப்பட்ட புதுமை புகுத்தலின் விளைவாக, நீண்டகால அடிப்படையில் சமூக, பொருளாதாரத் துறைகளில் வரவேற்கக்கூடிய மாற்றங்கள் தோன்றின என்றாலும், உடனடியான குறுகிய கால அளவில் தோன்றிய எதிர்விளைவுகள் கசப்பான அனுபவங்களாக இருந்தன.

பொருளாதார வளர்ச்சிக்கு அடிக்கல்லாக நான்கு முக்கியத் துறைகள் விளங்குகின்றன. அவையாவன: போக்குவரத்து, (விசை) சக்தி, நீர்ப்பாசனம், கல்வி ஆகியவை. இவற்றை உள்ளமைப்புத் துறைகள் அல்லது உள்ளமைப்பு வசதிகள் (infra structure) என்று கூறலாம். உள்ளமைப்பு வசதிகள் வளர்ந்து இருந்தாலன்றித் தொழில்கள் வளருவது கடினம். பொருள்கள், உற்பத்திக் காரணிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் இடப் பெயர்ச்சி வளர்ச்சிக்கு முன் நிபந்தனையாக உள்ளது. இருப்புப் பாதைகள் போடப்பட்டதன் காரணமாகச் சிக்கனமாகவும்,

விரைவாகவும் பண்டங்களையும் மனிதர்களையும் இடம்பெயர்த்த முடிந்தது. எனவே, இது தொழில்வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் செயல்பட்டது எனலாம்.

போக்குவரத்து வசதிகள் தொழில்வளர்ச்சியின் ஒரு கூருக உள்ளன. உற்பத்திக்குத் தேவையான உள்ளிடு பொருள்களை நாட்டின் பல பகுதிகளிலிருந்து கொண்டுவரவும், பூர்த்தி செய்யப்பட்ட பொருள்களை அங்காடிக்கு எடுத்துச் செல்லவும் இவ் வசதிகள் தேவைப்படுகின்றன. தாதுப்பொருள்கள், கச்சாப் பொருள்கள், எரிபொருள்கள், இயந்திர சாதனங்கள், கருவிகள், ஓரளவு பூர்த்தியான பொருள்கள், முழுவதும் பூர்த்தியான பொருள்கள் முதலியவற்றை நெடுந்தூரம் இடம்பெயர்த்துவதற்குத் திறமையான போக்குவரத்து இன்றியமையாத ஒன்ருகும். ஓரிடத்தில் உற்பத்தியான பொருள்களை நெடுந்தூரம் எடுத்துச்சென்று விற்பனை செய்வதால் அங்காடி விரிவடைகிறது; பேரளவு உற்பத்தி இலாபகரமாக இருக்கிறது. இதைத் தொடர்ந்து உற்பத்திச் சிக்கனங்கள் தோன்றுகின்றன. எனவே வேலைவாய்ப்பும், சிறப்புத் தேர்ச்சியும் அதிகரிக்கின்றன. போக்குவரத்தைப்போலவே செய்தித்தொடர்பும் முக்கியமாக உள்ளது. அங்காடியின் ஒரு பகுதியில் ஏற்பட்ட மாற்றங்களை—அளிப்பு அல்லது தேவையில்—ஏனைய பகுதிகளில் இருக்கக்கூடிய உற்பத்தியாளர்களும், நுகர்வோர்களும் அறிந்துகொள்ள முடிகிறது. போக்குவரத்து வளர்ச்சியால் இயற்கைவளங்கள் செம்மையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மரபான சமுதாயச் சூழலில் பல நூற்றுண்டுகளாக இந்தியர்கள் தனிமையில், தன்னிறைவு அடிப்படையில் வாழ்ந்து வந்தார்கள். 19ஆவது நூற்றுண்டிற்கு முன்னரும் வெளிநாட்டு மக்களுடன் இந்தியர்கள் தொடர்புகொண்டு இருந்தார்கள் என்ருலும் இத் தொடர்பு சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ள சிலருடன் நின்றுவிட்டது. ஆனுல், இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டதன் காரணமாக இந்தியச் சமுதாய அமைப்பில் பல நிலைகளில் உள்ளவர்கள் வெளிநாட்டு நாகரிகத்துடன் நேரிடையாகவும், மறைமுகமாகவும் தொடர்புகொண்டனர். மரபான பழக்கவழக்கங்களும், புனிதமான நம்பிக்கைகளும், மேலைநாட்டு நாகரிகத்தின் ஊடுருவலால் பெரிதும் பாதிக்கப்பட்டன. வெளியுலக வளர்ச்சியும், அங்குள்ள பொருளாதார நாகரிகமும் பாமர இந்தியர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. மேலை நாட்டு நாகரிகத்தின் சின்னமாகவும், வசதிப் பொருள்களாகவும்

சாதனங்களாகவும் விளங்கிய பொருள்கள் இந்திய அங்காடியில் பெருமளவுக்கு விற்கப்பட்டன. இவ்வாறு திணிக்கப்பட்ட பொருளாதார நாகரிகம் இந்தியர்களின் சமூக வாழ்க்கைக்கும், மரபுகளுக்கும் முற்றிலும் வேறுபட்டிருந்தது. இதனால் இருவகை விளைவுகள் ஏற்பட்டன.

முதலாவதாக, மரபு, பழைமை, மாறுத்தன்மை ஆகிய வற்றின் அடிப்படையில் தேக்கநிலைக் கொள்கையுடன் இயங்கி வந்த மக்கள் உலகின் இயக்கநிலையைக் கண்கூடாக அறிந்த காரணத்தால் மனப்பக்குவம் அடைந்தார்கள்; புதிய பழக்க வழக்கங்களையும் புதிய கருத்துகளையும் அறிந்துகொண்டனர். இங்ஙனம் பலவகையிலும் மக்களிடையே மனமாற்றத்தை ஏற் படுத்தும் முன்முயற்சியாகப் போக்குவரத்து வளர்ச்சி இருந்தது என்றால் மிகையாகாது. சாதி, மதம், இனம், மொழி என்ற கட்டுப்பாட்டில் நெடுங்காலமாக உழன்ற மக்கள் இவற்றிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளும் ஒரு வாய்ப்பாக இடப்பெயர்ச்சி யைக் கருதினார்கள். இதனால் சாதி அமைப்பு வலிவிழந்துவிட் டது என்றோ, அதன் அழிவு நாளடைவில் ஏற்படக்கூடும் என்றோ கருதமுடியாது. மரபான அடிப்படையில் இயங்கிய சாதிக்கட்டுப் பாடுகள் போக்குவரத்தால், முக்கியமாக இருப்புப்பாதையின் விரிவாக்கத்தால் தகர்த்து எறியப்பட்டன. இரண்டாவதாக, கிராமியத் தன்னிறைவுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கிராமத்தில் உற்பத்தியான பொருள்கள் அதே கிராமத்தில் நுகரப் பட்ட நிலைமை மாறி, நாட்டின் பல பகுதிகளுக்கு அவை எடுத்துச் செல்லப்பட்டன. நாடு முழுவதிலும் உள்ள உற்பத்தியாளர்கள் வலிமை மிக்க அங்காடிச் சக்திகளின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட் டனர். அங்காடிச் சக்திகளின் சமனற்ற நிலைமையால் விவசாயி களின் வருமானத்தில் ஏற்ற இறக்கங்கள் தோன்றின. இதனின்று தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் அமைப்புகளை விவசாயிகளும், கைவினைஞர்களும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

நெடுங்காலமாகப் போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் அரசியல், பொருளாதாரத் துறைகள் முழுமையாக ஒருங்கிணைக்கப் படவில்லை. மக்களின் இடப்பெயர்ச்சிக்கும், பொருளாதார ஒருங்கிணைப்பிற்கும் இருப்புப்பாதைகள் அடிக்கல்லாக விளங்கின.

இருப்புப்பாதையின் காரணமாக உள்நாட்டுக் கைவினைத் தொழில்கள் நசுக்கப்பட்டன என்று கூறப்படுகிறது. நிகழ்ச்சி களின் கோவையை அடிப்படையாக எடுத்துக்கொண்டால், இது ஓர் உண்மையாகத் தோன்றியபோதிலும் பொருளாதாரக்

கருத்துக்களுக்கு இக் கூற்று முரணுகை உள்ளதைச் சுட்டிக்காட்ட வேண்டும். கைவினைத் தொழில்களின் உற்பத்தித்திறன் மிகக் குறைவாக இருந்தது. செய்பொருள் ஆலைத்துறையில் உற்பத்தித் திறன் அதிகமாக இருந்ததால், அவற்றுடன் போட்டியிட முடியாமல் கைவினைத் தொழில்கள் தாமே அழிந்துபோயின. இயல்பாகவே ஏற்பட்டிருக்க வேண்டிய கைவினைத் தொழில்களின் அழிவைப் போக்குவரத்து வசதிகள் துரிதப்படுத்தின.[1] புராதனக் கைவினைத் தொழில்களும், தன்னிறைவு பெற்ற கிராமங்களும் அழிந்துவிட்டன என்பதற்காக வருத்தம் தெரிவிக்கவில்லை என்றாலும், கோடிக்கணக்கான மக்களுக்கு வாழ்வளித்த துறைகள் அழிக்கப்பட்டதாலும், அதற்குப் பதிலாக, அதை ஈடு செய்யும் வகையில் புதிய வேலைவாய்ப்புகள் தோன்றாமையாலும் மக்களின் அவதி பன்மடங்கு அதிகரித்ததை யாரும் மறுக்கமுடியாது. பேரளவுத் தொழில்களின் முன்னோடியாக உள்ள இருப்புப்பாதைகள் நாடெங்கிலும் அமைக்கப்பட்ட போதிலும் அதைத் தொடர்ந்து கனரகத் தொழில்கள், முக்கியத் தொழில்கள் முதலியன நிறுவப்படவில்லை.

இருப்புப்பாதை–ஒரு திறனாய்வு

அமெரிக்கா, சோவியத் யூனியன், ஜெர்மனி போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இருப்புப்பாதைகள் ஒரு தூண்டுகோலாகச் செயல்பட்டுள்ளன. இருப்புப்பாதைகள் தொழில்வளர்ச்சிக்கு முன்னோடியான துறையாக (leading sector) இருந்தன. நீராவி இஞ்சின்கள், எஃகு தண்டவாளங்கள், இரயில் பெட்டிகள், மற்றும் உருளும் சாதனங்கள் முதலியவற்றைத் தயாரிக்கும் தொழில்கள் இருப்புப்பாதையால் தோன்ற வேண்டும். இரும்பு எஃகு தொழிலும், கனரகத் தொழில்களும், பொறியியல் (இஞ்சினியரிங்) தொழில்களும் ஊக்குவிக்கப்படும். இருப்புப்பாதையின் காரணமாகத் தொழில்வளர்ச்சிக்கான அடிப்படை சீரமைக்கப்பட்டுத் தொழில்வளர்ச்சி வேகம் உந்தப்படுகிறது. கிட்டத்தட்ட அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளில் இருப்புப்பாதைகள் நிறுவப்பட்ட அதே ஆண்டுகளில் தான் இந்தியாவிலும் இருப்புப்பாதைகள் போடப்பட்டன. இருந்தபோதிலும் அந்த நாடுகளில் இருப்புப்பாதையின் காரணமாகத் தொழில்வளர்ச்சி வேகம் உந்தப்பட்டது. இருப்புப்பாதைகள் அந் நாடுகளில் முன்னோடியான துறையாகச் செயல்பட்டு 'எழுநிலை'யைத் (Take off stage) தோற்றுவித்துள்ளன. ஆனால்,

[1] Vera Anstey, ibid, pp. 145–146.

இந்தியாவில் அதைப்போன்ற வளர்ச்சி ஏற்படவில்லை. இருப்புப் பாதையின் காரணமாக, இந்தியாவின் தொழில் ஊக்குவிக்கப் படவில்லை என்பதைத்தான் தேசியப் பொருளாதாரக் கருத்தினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இருப்புப்பாதைகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குப் பல புதிய தொழில்களை ஆரம்பிக்கவில்லை. இதற்கு அரசு ஆதரவு அளிக்கவில்லை. மாறாக, அனைத்துப் பொருள்களையும் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்தார்கள். ஆண்டுதோறும் தேவைப்படும் பதிலமர்த்தும் பொருள்கள்கூட இறக்குமதி செய்யப்பட்டன. இதனால் இருப்புப்பாதைகள் இந்தியாவின் வெளிநாட்டு வாணிகத்தை உயர்த்திய அளவிற்கு உள்நாட்டு உற்பத்திக்கு வழிவகுக்க வில்லை.

இருப்புப்பாதையின் காரணமாகப் பஞ்சங்களைக் (இந்தியாவில்) கட்டுப்படுத்தவும் அகற்றவும் முடிந்தது. இருப்புப்பாதை அமைக்கும் முன்னர் மக்கள் உணவுப்பொருள்கள் இருக்கும் இடம் நாடிச் சென்றார்கள். அதன் பின்னர் மக்களின் உறைவிடத்தை நோக்கி உணவுப்பொருள்களை இடம்பெயர்த்த முடிந்தது. அதைத் தவிர இந்தியாவின் பஞ்சங்களுக்கு அடிப்படையான காரணங்களைக் கண்டறிந்த 1880ஆம் ஆண்டுப் பஞ்ச ஆணைக்குழு, உணவுப் பொருள்களின் கிடைப்பருமையைவிட வாங்கும் சக்தி இன்மையே முக்கியக் காரணம் என்று கூறியது. இருப்புப்பாதைகளை அமைத்ததால் நாடெங்கிலும் புதிய வேலைவாய்ப்புகள் ஏற்பட்டன. வர்த்தகப் பயிர்களைச் சாகுபடி செய்த விவசாயிகள் ஆதாயம் அடைந்தார்கள். இருந்தபோதிலும் இருப்புப்பாதையால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கவேண்டிய நலன்கள் இரயில்வே நிருவாகம், அரசு கொள்கை முதலியவற்றின் காரணமாக முழுமையாக ஏற்படவில்லை. இரயில் கட்டணவிகிதங்கள் அதிகமாக இருந்தன. குறுகிய காலத்தில் உயர்ந்தவிகிதத்தில் இலாபம் ஈட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு கட்டணவிகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. இது ஆக்கச்செலவைவிடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது.[2] போக்குவரத்துச் செலவு உயர்மட்டத்தில் இருந்ததால் நாட்டின் தொழில்வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. இரயில்வேயின் காரணமாகத் தொழில்வளர்ச்சி ஊக்குவிக்கப் படவில்லை என்பதுடன், தொழில்வளர்ச்சித் திட்டங்கள் ஏதும் அரசு கொள்கையின் ஒரு கூறாக இல்லாமையால், தொழில் வளர்ச்சியுடன் இரயில்வேயின் வளர்ச்சியையும் ஒருமுகப்படுத்த

2 பார்க்கவும் இரயில் கட்டணவிகிதக் கொள்கை : 22.5.

முடியவில்லை; இதனால் ஆரம்பகாலத்தில் பெருமளவுக்கு இழப்பு ஏற்பட்டதைத் தவிர்க்க முடியவில்லை.

தேசியப் பொருளாதாரக் கருத்தினர் இரயில்வேயின் வளர்ச்சியைத் திறனாய்வு செய்துள்ளார்கள். இவர்கள் இருப்புப்பாதை அமைப்பதைத் முற்றிலும் எதிர்க்கவில்லை. இதற்கு அதிக அளவு முன்னுரிமை (முக்கியத்துவம்) கொடுத்ததைத்தான் எதிர்த்து உள்ளார்கள். வடஇந்தியாவைப் பொறுத்தவரை இருப்புப் பாதையினால் தோற்றுவிக்கப்படும் போக்குவரத்து வசதிகளைக் கால்வாய்ப் போக்குவரத்தின் மூலமாக மிகவும் குறைந்த செலவில் சிக்கனமாக ஏற்படுத்த முடியும் என்று கருதினார்கள். இந்தியா ஒரு விவசாய நாடாக இருப்பதால் இருப்புப் பாதையைவிடப் பாசனத்திட்டங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும், இதன் அடிப்படையில் போக்குவரத்து (படகுகள்) வசதிகளையும் விரிவுபடுத்த முடியும் என்றும், அதிக மூலதன முதலீடு இல்லாமல் சிக்கனமாகப் போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்தியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்றும் கூறினார்கள். தவிரவும், பாசனத் திட்டங்கள் இந்தியாவில் பஞ்சங்கள் தோன்றாமல் தடுக்க உதவுகின்றன. ஆனால், இருப்புப் பாதைகள் பஞ்ச நிவாரண வேலைகளைமட்டுமே துரிதப்படுத்துகின்றன. மக்களின் வருமானம் குறைந்து காணப்படும் நாடுகளில் அரசு (ஆதரவில்) செயல்படுத்தும் திட்டங்கள் குறைந்த செலவில் உடனடியான பலன்களை நல்கக் கூடுமானால், மக்களும், அரசாங்கமும் அதனால் ஆதாயம் அடைவார்கள். இவ் வடிப்படையில் நீர்ப்பாசனத் திட்டங்கள் இலாபகரமானவை, உடனடியாகப் பயனளிக்கக் கூடியவை என்பதைத் திரு ரமேஷ்டட் சுட்டிக்காட்டியுள்ளார்.[3]

3 பார்க்கவும் Romesh Dutt : The Economic History of India in the Victorian Age, London, 1956, pp. 166—178, 353—370, 545—554.

வடஇந்தியாவில் பாரிதோ-ஆப் கால்வாய்த்திட்டம் 1859-ல் முடிவுற்றது. இதற்காக அரசாங்கம் சுமார் ஒரு மில்லியன் பவுன் ஸ்டர்லிங் செலவிட்டது. இதன் விளைவாக அரசிற்கு ஆண்டு ஒன்றுக்கு £ 120,000, அதாவது 12% வருவாய் கிடைக்கும் என்று கூறியுள்ளார் (பக். 170). 1836-ல் கொள்ளிடத்தில் கல்லணையைச் செப்பனிடுவதற்காக £80,000-மும், இதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் பாசனவசதிகளை மேம்படுத்துவதற்காக £ 100,000-மும் செலவிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக அரசின் வருவாய் 24% அதிகரித்துள்ளது (பக். 172). கோதாவரி அணைக்கட்டுத் திட்டத்தின் காரணமாக அரசு வசூலிக்கும் நிலவரி வசூல் (அப்பகுதியில்) 100%-க்கும் அதிகமாக உயர்ந்து சென்றது (பக். 173). 1853-ல் கிருஷ்ணா நதியில் அணைகட்டியதால் அப்பகுதியின் நிலவரி வசூல் 89% உயர்ந்திருக்கும் என்று (பக். 173) ரமேஷ் டட் கூறியுள்ளார்.

1988—89 வரை நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ரூ. 152·8 கோடி முதலீடு செய்யப்பட்டது என்றும், மேற்படி ஆண்டில் இதனின்று அரசாங்கத்

அதேசமயம் இருப்புப்பாதைகளை அமைப்பதற்காகப் பெருமளவுத் தொகை செலவிடப்பட்டுள்ளது. இத் தொகை சிக்கனமாகச் செலவிடப்படவில்லை. இதனால், ஒரு மைல் இருப்புப் பாதை அமைப்பதற்கான செலவுத்தொகை எதிர்பார்த்ததை விடப் பன்மடங்கு அதிகமாகிவிட்டது. காட்டாக, கிழக்கு இந்திய இரயில்வேக் கம்பெனியின் £ 20 மில்லியன் செலவுத் தொகையில் சுமார் £ 4 மில்லியன் ஏற்கக் கூடியதாக இல்லை என்றும், அதை மூலதனச் செலவாக ஏற்க முடியாது என்றும் கருதியபோதிலும் வேறு வழியில்லாமல் அதை அனுமதித்துள்ளதாக ஓர் இரயில்வேத் தணிக்கையாளரின் வாக்குமூலத்தைக் கொண்டு[4] அறிந்துகொள்ளலாம். பத்தொன்பதாவது நூற்றாண்டின் அனுபவ அடிப்படையில் தேசியப் பொருளாதாரக் கருத்தினரும் ரமேஷ் டட்டும் கூறிய குற்றச்சாட்டுகள் ஏற்கக் கூடியன என்றாலும், இருபதாவது நூற்றாண்டில் தொழில் வளர்ச்சி வேகம் உயர்ந்ததன் காரணமாக இவை ஆதாரமற்றவையாக மாறிவிட்டன.

இந்தியாவில் இருப்புப்பாதைகளின் தோற்றம்

முதன்முதலில் பிரிட்டனில் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டவுடன் இந்தியாவிலும் அவற்றை நிறுவவேண்டும் என்ற கருத்து 1831–32 ஆண்டிலேயே நிலவியது. அப்போது கிழக்கு இந்தியக் கம்பெனியின் தலைநகரமாக விளங்கிய கல்கத்தாவிலிருந்து வடமேற்கு எல்லை மாகாணம் வரை இருப்புப்பாதை அமைக்கும் திட்டம் ஒன்று 1844-ல் சமர்ப்பிக்கப்பட்டது. கம்பெனியின் இயக்குநர்கள் இதை ஆதரித்த போதிலும், இரயில்வேக் கம்பெனிகளுக்கு அளிக்கவேண்டிய சலுகைகளையும், உரிமைகளையும் வரையறுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. அதன் பின்னர்க் கிழக்குஇந்தியக் கம்பெனிக்கும், இருஇரயில்வேக் கம்பெனிகளுக்கும் (கிழக்கு இந்திய இரயில்வேக் கம்பெனி, இந்தியத் தீபகற்ப இரயில்வேக் கம்பெனி) இடையே 1849–ல் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இருப்புப்பாதைகளை அமைக்கும் வேலைகள் 1850–ல் ஆரம்பமாயின. 1853–ல் பம்பாய்-தாணா இரயில்பாதை பூர்த்தியாகி, போக்குவரத்தும் ஆரம்பமாகியது.

திற்கு 5.8% வருவாய் கிடைத்தது என்றும், ஆதாயமுள்ள சில பாசனத்திட்டங்களில் 7.61% லாபம் கிடைத்தது என்றும், இவ் விழுக்காடு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டது என்றும் திருமதி வீரா அன்ஸ்டே கூறியுள்ளார். பார்க்கவும் Vera Anstey, op. cit., p. 163 and p. 618–Table X

[4] Quoted by Romesh Dutt. op. cit., p. 355. பார்க்கவும் கீழே அத்தியாயத்தில் உள்ள அடிக்குறிப்பு 8.

நோக்கங்கள்

இந்தியாவில் தொழில்வளர்ச்சியைத் தோற்றுவிக்கவேண்டும் என்ற நோக்கத்தைவிடத் தங்களுடைய அரசியல், வாணிக நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் சிறந்த சாதனமாக இருப்புப்பாதை விளங்கியதால், ஆட்சியாளர்கள் இதற்கு முதன்மையான முக்கியத்துவம் கொடுத்தார்கள். இந்தியாவில் இருப்புப்பாதை அமைப்பதற்கான அடிப்படையான காரணங்களை 1846-ல் கவர்னர் ஜெனரலாக இருந்த ஹார்டிஞ்ச் பிரபுவின் கூற்றிலிருந்து அறியலாம்: 'போர் அல்லது கலவரங்கள் நடைபெறும் இடங்களுக்கு விரைவாகவும், சிக்கனமாகவும் தரைப் படை, பீரங்கிப்படை, இராணுவ சாதனங்கள் முதலியவற்றை எடுத்துச்சென்று அவற்றை ஒடுக்குவதற்கும், உள்நாட்டில் கலவரங்கள், கிளர்ச்சிகள் ஏற்படாமல் தடுப்பதற்கும், பொதுவான ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்பிற்கும் இருப்புப்பாதைகள் உதவியாக இருக்கும்.'[5] பிரிட்டிஷாரைப் பொறுத்தவரை ஏகாதிபத்திய நலன்களை அடுத்து வாணிக நலன்கள் முக்கியமானவை. பிரிட்டிஷ் ஆலைகளில் உற்பத்தியாகும் பொருள்களை இந்தியா முழுவதிலும் விற்பனை செய்யவும், மேற்படி தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களையும்—காட்டாக, பஞ்சு, அவுரி, சணல், உரிவை, தோல் முதலிய கச்சாப் பொருள்கள் ரப்பர், தேயிலை, போன்ற தோட்டப்பயிர்களையும்—எடுத்துச் செல்வதற்கு இருப்புப்பாதைகள் தேவைப்பட்டன. எனவே, இருப்புப்பாதை நிறுவியதால் இந்தியாவின் வாணிகம் பெருக்கம் அடைந்த அளவிற்கு இந்தியாவின் தொழில்கள் வளரவில்லை; இந்தியர்கள் ஆதாயம் அடையவில்லை.

19ஆவது நூற்றாண்டில் இருப்புப்பாதைகளின் வளர்ச்சி

இந்தியாவில் இருப்புப்பாதைகளின் வளர்ச்சி, அவற்றின் நிருவாகம் ஆகியவற்றை ஆராய்வோம். பத்தொன்பதாவது நூற்றாண்டின் வளர்ச்சியை இப் பிரிவிலும், இருபதாவது நூற்றாண்டின் வளர்ச்சியை அடுத்துள்ள பிரிவிலும் காண்போம். சென்ற நூற்றாண்டில் இருப்புப்பாதைகளின் வளர்ச்சியிலும், நிருவாக அமைப்பிலும் மூன்று முக்கிய நிலைகள் அல்லது கட்டங்கள் இருந்தன. அவையாவன, 1850 முதல் 1869 வரையில் தனியார் கம்பெனிகளுக்கு அரசு கொடுத்த உறுதிமுறையை—பழைய

5 Vinod Dubey—Railways—ch. 15. Economic History of India, 1857—1956. p. 328.

உறுதி முறையை—அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி. இது முதல் கட்டம் ஆகும். இரண்டாவதாக, 1869—முதல் 1879 வரையில் உள்ள ஆண்டுகளில் அரசு இருப்புப்பாதை அமைப்பதற்காக நேரடி முதலீட்டை மேற்கொண்டது. மூன்றாவதாக, மீண்டும் தனியார் கம்பெனிகளுக்கு இருப்புப்பாதைகள் நிறுவப் புதிய அடிப்படையில் உறுதி கொடுக்கப்பட்டது. இக் காலம் 1879—லிருந்து 1900 வரை நீடித்தது.

இருப்புப்பாதைகள் அமைப்பதில் பிரிட்டிஷ் தொழில் அதிபர்களும், ஆட்சியாளர்களும் அக்கறை காட்டினார்கள். வாணிக நலன்களுக்கும், ஏகாதிபத்திய நலன்களுக்கும் இவை அவசியமாக இருந்தன. ஆனால், இவர்கள் விரும்பிய அளவிற்கு வேகமாகத் தனியார் கம்பெனிகள் இருப்புப்பாதைகளை அமைக்கவில்லை. இங்ஙனம் இருப்புப்பாதை நிறுவப்படும் வேகத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு டல்ஹௌஸி பிரபு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். இவர் தயாரித்துள்ள இரயில்வேக் குறிப்புகள் (1853) வரலாற்று முக்கியத்துவம் உள்ள ஆவணம் என்று கருதப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ்ச் சோதனைக்காக இருப்புப்பாதைகள் அமைக்கும் திட்டத்திற்கு முடிவு கட்டப்பட்டது. இந்தியாவில் உள்ள முக்கியத் தலைநகரங்கள், துறைமுகப்பட்டினங்கள் ஆகியவற்றை நேரடியாக இணைக்கும் முக்கிய இருப்புப்பாதைகளுக்கு டல்ஹௌஸி தமது திட்டத்தில் முன்னுரிமை கொடுத்துள்ளார். அடுத்து, இருப்புப்பாதைகளை அமைக்கும் பணி தனியார்கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இதை அரசாங்கம் மேற்பார்வையிடும். மேற்படி தனியார் கம்பெனிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவை முதலீடு செய்துள்ள தொகைக்குக் குறைந்த அளவு 4½% முதல் 5% வரை வட்டி விகிதத்திற்கு அரசு உறுதி கொடுத்துள்ளது. இதைவிடக் கூடுதலாகக் கிடைக்கும் இலாபத்தில் அரசாங்கத்திற்கு 50% பங்குண்டு[6]. இருப்புப்பாதை அமைப்பதற்கு நிலத்தை இனமாக அரசு வழங்க வேண்டும். தபால்களை இரயில்வேக் கம்பெனிகள் இனமாக எடுத்துச் செல்ல வேண்டும்; இராணுவ வீரர்களைச் சலுகை விகிதக் கட்டணத்தில் ஏற்றிச்செல்ல வேண்டும். ஒப்பந்த காலம் முடிவுற்றாலும் அல்லது இருபத்தைந்து ஆண்டுகள் சென்றாலும் இருப்புப்

6 காட்டாக, 5% உறுதி அடிப்படையில் இந்தியாவில் இருப்புப்பாதைகள் அமைப்பதற்காக £ 100 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது என்போம். குறிப்பிட்ட ஆண்டில் இரயில்வேக் கம்பெனிக்குக் கிடைத்துள்ள நிகர இலாபம் £ 4 மில்லியன் ஆக இருந்தால் துண்டுவிழும். £ 1 மில்லியன் தொகையை அரசாங்கம் மேற்படி கம்பெனிக்குக் கொடுக்கும். மாறாக ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நிகர இலாபம் £ 7 மில்லியன் ஆக இருந்தால், அக் கம்பெனி £ 1 மில்லியன்தொகையை அரசிற்குச் செலுத்தும்.

பங்குகளை வாங்கிக்கொள்ளும் உரிமை அரசாங்கத்திற்கு உண்டு.[1] இருப்புப்பாதைகளை அமைப்பதற்குத் தேவையான மூலதனத்திற்கும், தொழில்முயற்சிக்கும் இவ் வுறுதித்திட்டம் வழிவகுக்கும் என்று நம்பப்பட்டது. அரசு உறுதியின் காரணமாக இலண்டன் மூலதன அங்காடியில் பெருந்தொகை கடனுகத் திரட்டப்பட்டது. அவ்வாறு திரட்டிய ஸ்டர்லிங் தொகையை ரூபாயாக மாற்றவும், (அதைப்போல) ரூபாய்த் தொகையை அக் கம்பெனிகள் ஸ்டர்லிங் ஆக மாற்றவும் உறுதி அளிக்கப்பட்டது. ஒரு ரூபாயின் செலாவணி மதிப்பு 1 ஷி. 10 பென்ஸ் என்ற மட்டத்தில் நிலையாக இருக்கும் என்றும் நம்பப்பட்டது.

இங்ஙனம் இருப்புப்பாதைகள் அமைத்துள்ள கம்பெனிகள் எக் காரணத்தினுலாவது விற்க விரும்பினுல் அவற்றை அரசாங்கம் ஆறுமாத வாய்தாவுடன் வாங்கிக்கொள்ள உறுதியளித்தது. அப்போது கம்பெனி செலவு செய்த மூலதனம் திருப்பித்தரப்படும்.

அரசு அறிவித்த சலுகைகளும், உறுதிகளும் இரயில்வேக் கம்பெனிகளுக்கு மிகவும் சாதகமாக இருந்தன. இதனுல் 1869 வரை 4255 மைல்கள் இருப்புப்பாதை சுமார் ரூ. 89 கோடி செலவில் அமைக்கப்பட்டது.

தனியார் கம்பெனிகளுக்கு அளவுக்கும் அதிகமான சலுகைகள் வழங்கப்பட்டதால், இந்தியாவின் நீண்டகாலப் பொருளாதார நலன்கள் பாதிக்கப்பட்டன. இந்திய தேசியப் பொருளாதாரக் கருத்தினர் இதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். இரயில்வேக் கம்பெனிகளுக்குத் தேவையான மூலதனம் முழுவதையும் இலண்டனில் திரட்டவேண்டிய அவசியமில்லை என்றும், இதில் பெரும் பகுதி இந்தியாவிலேயே திரட்டியிருக்கலாம் என்றும், அரசு உறுதி கொடுக்காமல் இருந்தால்கூடப் போதிய மூலதனத்தைத் திரட்டுவது சாத்தியமாக இருந்திருக்கும் என்றும் கூறினுர்கள். இரயில்வேக் கம்பெனிகள் பங்கு மூலதனமாகத் திரட்டுவதற்குப் பதிலாகக் கடன் மூலதனமாகப் பெருந்தொகையைத் திரட்டியது சரியில்லை என்று கூறுகிருர்கள். காட்டாக, பங்கு மூலதனமாகத் திரட்டியிருந்தால், இரயில்வேக் கம்பெனி செயல்படத் தொடங்கிய பின்னர் இலாப விழுக்காட்டைக் கணக்கிட்டு இருக்கலாம். ஆனுல், கடன் மூலதனமாகத் திரட்டியதால் அதைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து வட்டி செலுத்தவேண்டியது அவசியமாயிற்று. இருப்புப்பாதைகள் அமைப்பதில் சிக்கனம்

1 Vera Anstey. முன்கூறியபடி பக். 181.

முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது. கவனக்குறைவும், அசட்டையான போக்கும் ஆக்கச்செலவை அதிகரித்தன.[8] இதனுல் நாட்டின் சொத்துகளைவிட நாட்டின் பொறுப்புகள் கூடுதலாக அதிகரித்துள்ளன என்று திரு. என். சன்யால் திறனாய்வு செய்துள்ளார்.[9]

அரசு முதலீடு

இரயில்வேக் கம்பெனிகளுக்கு உறுதி கொடுப்பதால் ஏற்பட்ட இழப்பையும், இதரக் குறைபாடுகளையும் எல்லோரும் உணர்ந்தார்கள். எனவே, உறுதிகொடுப்பதை அரசு நிறுத்தியது. இதனுல் இருப்புப்பாதை அமைக்கும் முயற்சி தடைப்பட்டு விடக்கூடாது என்று கருதியதால், அரசு நேரடியாக இருப்புப் பாதை அமைப்பதில் முதலீடு செய்யத் தொடங்கியது. ஆண்டு ஒன்றுக்கு 300 மைல்கள் வீதம் சுமார் 10,000 மைல்கள் இருப்புப்பாதை அமைக்க அரசு திட்டமிட்டது. ஒரு மைல் இருப்புப் பாதை நிறுவுவதற்காகச் சராசரியாக £ 12,000 வீதம் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. செலவைச் சிக்கனப்படுத்துவதற்காக அகலப்பாதைக்குப் (5' 6") பதிலாக மீட்டர் பாதை (3' 3") அமைத்தார்கள். இதன் காரணமாக, அரசு அமைத்த இருப்புப்பாதைகளுக்கான ஆக்கச்செலவு குறைவாக இருந்தது. அதனுடன் இருப்புப்பாதையின் விரிவாக்கமும் திருப்தி அளிப்பதாக இருந்தது. 1870-ல் 4770 மைல் ஆக இருந்த இருப்புப்பாதையின் நீளம் 1880-ல் 8996 மைல் ஆக

8. சராசரி ஒரு மைல் இருப்புப்பாதை அமைப்பதற்கு £ 8,000 செலவாகும் என்று டல்ஹௌஸி திட்டமிட்டு இருந்தார். ஆனுல், 1868-ல் ஒரு மைல் இருப்புப்பாதை அமைப்பதற்கான செலவுகள் சராசரியாக £ 18,000 ஆக இருந்தன. பார்க்கவும். Vera Anstey, op. cit., p. 131 fn. 8.

9. Vinod Dubey—Railways—ch. 15.—Economic History of India 1857—1956 (Ed.) V. B. Singh pp. 330—331.

இரயில்வேயினுல் ஏற்பட்ட இழப்பை ரமேஷ் டட்டும், வீரா அன்ஸ்டேயும் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: 1849-முதல் 1858 முடிய உள்ள பத்தாண்டுகளில் அரசு உறுதி கொடுத்ததன் காரணமாக கிழக்கு இந்திய இரயில்வே (£ 1,528,046), பெரிய இந்தியத் தீபகற்ப இரயில்வே (£ 456,049), மதராஸ் இரயில்வே (£ 260,734) ஆகிய மூன்று கம்பெனிகளுக்கும் மொத்தம் £ 2.244.829 தொகையைச் செலுத்தியுள்ளது. பார்க்கவும். Romesh Dutt., op. cit., p. 176.

1858-லிருந்து 1918—19 வரை உள்ள ஆண்டுகளில் இரயில்வே காரணமாக, ஆக்வொர்த் கமிட்டியின் கணக்குப்படி, ஏற்பட்ட இழப்பும், ஆதாயமும் பின்வருமாறு: மொத்த இழப்பு £ 51.527 மில்லியன், (அதாவது ரூ. 77.29 கோடி), மொத்த ஆதாயம் £ 44.742 மில்லியன், (அதாவது ரூ. 67.11 கோடி). எனவே நிகரஇழப்பு £ 6.785 மில்லியன் அல்லது ரூ. 10.10 கோடி என்று வீரா அன்ஸ்டே கூறியுள்ளார். முன் கூறியபடி பக் 147. (இதில் ரூபாய்த் தொகைக்கான புள்ளிவிவரத்தில் சுமார் 8 இலட்சம் ரூபாய் துண்டு விழுகிறது.)

உயர்ந்தது; சுமார் 88% விரிவாக்கம் ஏற்பட்டது. ஆனால், மூலதனச் செலவு சுமார் 44% மட்டுமே அதிகரித்தது; அதாவது 1870-ல் £ 88 மில்லியன் ஆக இருந்த மூலதனச் செலவு 1880-ல் £ 129 மில்லியன் ஆக உயர்ந்துசென்றது. தனியார் கம்பெனிகள் இருப்புப்பாதை அமைத்தபோது ஏற்பட்ட விரயமும், கூடுதலான செலவும் அரசு முதலீட்டில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், இந் நிலைமை தொடர்ந்து நீடிக்கவில்லை.

1869-ல் அரசு இருப்புப்பாதை அமைப்பதற்குக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டதையும், அதைச் செயல்படுத்தியதையும் இந்திய அரசின் கொள்கையில் ஏற்பட்ட ஒரு திருப்பு மையமாகக் கருத வேண்டும். அதுவரை தலையிடாக் கொள்கை, தடையிலா வாணிகம் என்ற பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றிய அரசாங்கம் முதன்முறையாக முதலீட்டு நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்திய அரசாங்கம் இருப்புப்பாதை அமைப்பதில் காட்டிய தீவிரத்தைத் தொழில்துறையை உருவாக்குவதில் காட்டவில்லை. இருப்புப்பாதையை முன்னின்று அமைத்ததைப்போலவே இந்திய அரசாங்கம் 19 ஆவது நூற்றாண்டிலேயே இரும்பு எஃகு தொழிலையும் நேரடியாகத் தொடங்கியிருக்குமானால், அல்லது தனியார் துறையில் நிறுவப்படுவதற்கு உறுதியளித்து இருக்குமானால், இந்தியாவின் தொழில்வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டிருக்கும் என்பதுடன், ஆரம்ப காலத்தில் இரயில்வேயில் ஏற்பட்ட இழப்புகளையும் ஓரளவிற்குக் குறைத்தும் இருக்கலாம். இருந்தபோதிலும் பிரிட்டிஷ் ஆட்சியாளரின் அந்தரங்க நோக்கங்களை இந் நிகழ்ச்சி புலப்படுத்துகிறது. தனியார் முயற்சியின் சார்பாகத் தொழில்வளர்ச்சி அமைந்து இருக்கவேண்டும் என்ற சித்தாந்த வாதங்களினால் அரசாங்கம் கட்டுண்டு இருக்கவில்லை என்பதையும், இந்தியாவின் தொழில் வளர்ச்சியைவிட வாணிக வளர்ச்சிக்கு அன்றைய அரசாங்கம் அதிக முக்கியத்துவம் கொடுத்தது என்பதையும் அறியலாம்.

புதிய உறுதிமுறை

1879-80-ல் இந்திய அரசாங்கத்தின் இருப்புப்பாதை நிர்மாணிக்கும் கொள்கையிலும், நிருவாகத்திலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. இதற்கு இரு காரணங்களைச் சுட்டிக் காட்டலாம். இக் காலத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதிப் பற்றாக்குறை உயர்ந்துசென்றது. இதற்குப் பன்னாட்டு அளவில் பொன்-வெள்ளி விலைவிகித மாறுதல்கள் காரணமாக இருந்தன

(பார்க்கவும் 24-4). இதைத்தவிர மூலதனச் செலவுகளுக்காக அரசு ஆண்டுதோறும் பெருந்தொகையைக் கடனாக வாங்க வேண்டியது அவசியமாக இருந்தது. அக் காலத்தில் அரசின் பொதுக்கடன் ஒரு பெருஞ்சுமையான பளுவாகக் கருதப்பட்டது. முக்கியமாக இந்தியாவிற்கான மந்திரி இக் கோட்பாட்டைப் பெரிதும் நம்பினார். அதனால் முற்போக்கான அரசின் முதலீட்டுக் கொள்கைக்கு ஆதரவு கிடைக்கவில்லை. இரண்டாவது காரணம் இதைவிட முக்கியமானதாகும். 1875–79 ஆண்டுகளில் நாடெங்கிலும் பஞ்சம் தலைவிரித்தாடியது. இதை ஆராய்ந்த 1880 ஆம் ஆண்டுப் பஞ்ச ஆணைக்குழு உடனடியாக 5000 மைல் இருப்புப் பாதை அமைக்கவேண்டும் என்று பரிந்துரைத்தது; கூடிய விரைவில் மொத்தம் 20,000 மைல்களுக்கு இருப்புப்பாதை அமைக்க வேண்டும் என்றும் கூறியது. இவ்வாறாக ஒருபுறம் அரசின் நிதி நெருக்கடி, நிலையற்ற செலாவணி விகித மாற்றங்கள் ஆகியவையும், மற்றொரு புறம் மிகவும் விரைவில் இருப்புப்பாதை அமைக்க வேண்டியதன் அவசியமும் புதிய இருப்புப்பாதைகளை அமைக்கும் பணியைத் தனியார் கம்பெனிகளிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தின.

புதிய உறுதித்திட்டத்தில் முன்பு கூறப்பட்ட குறைகள் அகற்றப்பட்டுள்ளன. நாட்டின் நலன்களைப் பாதுகாக்கக் கூடியவையாக இது இருந்தது. புதிய இருப்பாதைகள் ஆரம்பம் முதல் அரசின் உடைமையாகக் கருதப்படும். இருந்தபோதும் இவை முதல் 25 ஆண்டுகளுக்குக் கம்பெனியின் நிருவாகத்தில் இருக்கும். இருபத்தைந்து ஆண்டுக்கால இறுதியில் அரசு இருப்புப்பாதையின் நிருவாகத்தை ஏற்காலம். அப்போது கம்பெனி செலவிட்ட மூலதனச் செலவுகளை அரசு கொடுத்து விட வேண்டும். இவ்வாறு 25 ஆண்டுகாலம் முடிந்த தறுவாயில் அரசு உடைமையாக்கப் படவில்லையானால், அதன் பின்னர் ஒவ்வொரு பத்தாண்டு காலம் முடியும் போதும் இவ் வுரிமையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அரசு இக் கம்பெனிகளுக்கு 3.5% வட்டி விகிதத்திற்கு மட்டுமே உறுதியளித்தது. (இதற்கு முன்னர் அதிகப்பட்சம் 5% வட்டி விகிதம் உறுதி அளிக்கப்பட்டது) அடுத்து, நிகர இலாபத்தில் 60% அரசின் பங்காக இருக்கும். இது அதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிகம். இங்ஙனம் புதிய உறுதித் திட்டத்தில் நாட்டின் பொதுவான நலன்கள் பாதுகாக்கப்பட்டன.

புதிய உறுதித்திட்டத்தால் இருப்புப்பாதையின் வளர்ச்சி வேகம் கணிசமாக உயர்ந்துசென்றது. 1882 முதல் 1900 வரை உள்ள ஆண்டுகளில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 744

மைல்கள் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. மொத்த இருப்புப் பாதையின் நீளம் 10,069 மைல்களிலிருந்து 24,752 மைல்கள் ஆக உயர்ந்தது; இதில் அகல இரயில்பாதை 14,000 மைல்கள் ஆகவும், மீட்டர் இரயில்பாதை 10,000 மைல்கள் ஆகவும் இருந்தன. அகல இரயில்பாதை முக்கிய நேரடியான இருப்புப் பாதையாகக் கருதப்பட்டது; மீட்டர் இருப்புப்பாதை பெரும் பாலும் துணைப்பாதையாகக் கருதப்பட்டது.

பழைய உறுதித்திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரயில்வேக் கம்பெனிகளின் தவணைக்காலம் ஒன்றன்பின் ஒன்ருக இக் காலத் தில் முடிவுபெற்றது.[10] அவற்றுள் சிலவற்றைக் கம்பெனி நிரு வாகப் பொறுப்பில் மீண்டும் ஒப்படைத்தது. இரயில்வேக் கம் பெனிகள் அரசின் உடைமையாக்கப்பட்ட போதிலும் அவை அனைத்தையும் அரசாங்கம் நேரடியாக நிருவகிக்கவில்லை. இதனுல் இரயில்வே நிருவாக அமைப்பில் தெளிவற்ற நிலைமை காணப் பட்டது. பத்தொன்பதாவது நூற்ருண்டின் இறுதியில் 96 முக் கியப் பாதைகள் 33 இரயில்வே நிருவாக அமைப்பின்கீழ்ச் செயல் பட்டன. இவை நிருவாகத் திறன் அல்லது சிக்கன நலன்கள் அடிப்படையில் செயல்படவில்லை. அப்போது காணப்பட்ட இரயில்வே நிருவாகத்தைப் பத்துப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன :

(1) கம்பெனி நிருவாகத்தில் இருந்த அரசுக்குச் சொந்த மான இருப்புப்பாதைகள்.

(2) அரசு நிருவாகத்தில் இருந்த அரசுக்குச் சொந்தமான இருப்புப்பாதைகள்.

(3) பழைய ஒப்பந்தத்தின்கீழ்க் கம்பெனிகளுக்குச் சொந்த மான இருப்புப்பாதைகள்.

(4) புதிய ஒப்பந்தத்தின்கீழ்க் கம்பெனிகளுக்குச் சொந்த மான இருப்புப்பாதைகள்.

(5) மாவட்ட வாரியங்களுக்குச் (Distrtct Boards) சொந்த மான இருப்புப்பாதைகள்.

(6) உதவிபெற்ற கம்பெனிகளின் இருப்புப்பாதைகள்.

10 அரசு உடைமையாகிய கம்பெனிகளாவன : கிழக்கு இந்திய இரயில்வே (1880), கிழக்கு வங்காள இரயில்வே (1884), சிந்து, பஞ்சாப், டில்லிக் கம் பெனிகள் (1885—86), அயோத்தி, ரோகில்கண்ட் இரயில்வேக் கம்பெனி (1886), தென்இந்திய இரயில்வே (1890), பெரியஇந்தியத்தீபகற்ப இரயில்வே (1900). பார்க்கவும் வீராஅன்ஸ்டே முன்கூறியபடி பக். 188.

(7) கம்பெனி நிருவாகத்தில் இருந்த சுதேச அரசுகளுக்குச் சொந்தமான இருப்புப்பாதைகள்.

(8) இந்திய அரசாங்கத்தின் நிருவாகத்தின்கீழ் உள்ள சுதேச அரசுகளுக்குச் சொந்தமான இருப்புப் பாதைகள்.

(9) சுதேச அரசின் நிருவாகத்தின்கீழ் உள்ள சுதேச அரசுகளுக்குச் சொந்தமான இருப்புப்பாதைகள்.

(10) வெளிநாட்டுப் பகுதிகளில் உள்ள இருப்புப்பாதைகள்[11] முதலியன.

இருபதாவது நூற்ருண்டில்

இருபதாவது நூற்ருண்டில் இரயில்வே அமைப்பிலும், நிருவாகத்திலும் ஏற்பட்ட மாற்றங்களை மூன்று கட்டங்களாகப் பிரித்துக் கூறலாம். முதலாவது கட்டத்தில் 1900 முதல் 1924 வரை உள்ள ஆண்டுகளின் நிகழ்ச்சிகளையும், இரண்டாவது கட்டத்தில் 1925 முதல் 1949 வரை உள்ள காலத்து நிகழ்ச்சிகளையும், மூன்ருவது கட்டத்தில் அதற்குப் பின்னர் நிகழ்ந்தவற்றையும் ஆராய்வோம். (இப் பகுதி இதே அத்தியாயத்தில் பின்னர் ஆராயப்பட்டுள்ளது.)

இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்து இருப்புப் பாதைகள் இலாபகரமாகச் செயல்பட ஆரம்பித்தன. ஓரளவு பொருளாதார வளர்ச்சியும் அதைத் தொடர்ந்து அதிகரித்துள்ள போக்குவரத்தும் இரயில்வேக் கம்பெனிகளின் இலாபத்திற்குக் காரணமாக இருந்தன. இதனல் இரயில்வேக் கம்பெனிகள் உபரியான வருவாய் ஈட்டலாயின. 19 ஆவது நூற்ருண்டு வரை அரசாங்கத்திற்கு ஒரு முக்கியச் செலவினமாக இருந்த இரயில்வே 20 ஆவது நூற்ருண்டிலிருந்து அரசாங்கத்திற்கு வருவாய் நல்கும் துறையாக மாறியது. இருந்தபோதிலும் இரயில்வே நிருவாகத்திலும், அமைப்பிலும் பல குறைகள் காணப்பட்டன. காட்டாகச் சரக்குகள், பயணிகள் ஆகியோரை எடுத்துச் செல்லும் வேகம் குறைவாகவே இருந்தது; விபத்து விகிதங்கள் அதிகமாக இருந்தன; இரயில்வேக் கம்பெனிகளிடம் போதுமான உருளும் சாதனங்கள் இல்லை. எனவே, 1902–ல் இரயில்வே நிருவாகத்தை ஆராய்ந்து பரிந்துரைகள் வழங்குமாறு திரு. தாமஸ் இராபர்ட்ஸன் என்பவரை அரசு கேட்டுக்கொண்டது. இவர் தமது

[11] Vinod Dubey—முன்கூறியபடி பக். 384.

அறிக்கையில் இருப்புப்பாதைகளை மேலும் விரிவுபடுத்தவேண்டும் என்றும், கம்பெனி நிருவாகம் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்றும் கூறினர். இது பெரும்பாலான இந்தியர்களின் கருத்துகளுக்கு மாறுபட்டதாக இருந்தது. இலண்டனிலிருந்து கொண்டு இரயில்வேக் கம்பெனிகள் இந்தியாவில் உள்ள இருப்புப் பாதைகளை நிருவாகம் செய்வதை மக்கள் விரும்பவில்லை.

இராபர்ட்ஸன் தமது பரிந்துரையில் மூவரைக்கொண்ட ஆணையாளர்கள் வாரியம் (Board of Commissioners) ஒன்றை நிறுவவேண்டும் என்று கூறினர். இவ் வாரியம் இந்தியா முழுவதும் உள்ள இரயில்வேக்களைக் கட்டுப்படுத்தும் உரிமை உடையதாக இருக்கும். இதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு 1905-ல் இரயில்வே வாரியத்தை (Railway Board) ஏற்படுத்தியது. இந்திய அரசாங்கத்திற்கு இந்திய இரயில்வேச் சட்டப்படி (1890) அளிக்கப்பட்ட உரிமைகள், அதிகாரங்கள் அனைத்தும் மேற்படி வாரியத்திற்கு மாற்றப்பட்டன. 1908-ல் இரயில்வே வாரியத்தின் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டதுடன், வணிக, தொழில் இலாக்காவிலிருந்து (அமைச்சகம்) பிரிக்கப்பட்டுத் தனி உரிமை உடைய ஓர் இலாக்காவாகச் செயல்பட ஆரம்பித்தது.

இந்தியாவில் இரயில் வசதிகள் போதுமானதாக இல்லை என்று பிரிட்டிஷ் வியாபாரிகள் இந்தியாவிற்கான மந்திரியிடம் முறையிட்டுக் கொண்டார்கள். இதற்கிணங்க 1907-ல் மாக்கே (Mackay) கமிட்டி நியமிக்கப்பட்டது. இருப்புப்பாதைகளைச் செப்பனிடவும், உருளும் சாதனங்களைப் புதுப்பிக்கவும் வேண்டும் என இக் கமிட்டி கூறியது. இந்தியாவிற்கு மொத்தம் ஓர் இலட்சம் மைல் நீளமுள்ள இருப்புப்பாதை வேண்டியிருக்கும் என்றும், இதற்காக ஆண்டுதோறும் புதிய பாதைகளை நிறுவுவதற்கும் அவற்றின் பராமரிப்பிற்கும் £ 12.5 மில்லியன் தொகை செலவிட வேண்டும் என்றும் கூறியது. இதன் காரணமாக இரயில்வேக்கான மூலதனச் செலவுகள் உயர்ந்துசென்றன. 1908-14 ஆண்டுகளில் சுமார் ரூ. 110/- கோடி செலவிடப்பட்டது; இருப்புப்பாதைகளின் நீளம் 1919-ல் 34,656 மைல்களாக உயர்ந்தது.

இரயில்வேக் கம்பெனிகளுக்கு அளிக்கப்பட்ட தவணைக் காலம் முடிந்ததும், அரசு அவற்றைத் தனது உடைமையாக்கிய போதிலும் அவை தொடர்ந்து கம்பெனிகளின் நிருவாகத்தில் இருந்து வந்தன.

முதல் உலகப்போர் ஆரம்பித்தவுடன் இந்தியாவில் இருப்புப் பாதை வசதிகள் போதுமானதாக இல்லை என்பதை அனைவரும் உணர்ந்தார்கள். பெருமளவுக்கு இராணுவத்தையும், படைச் சாதனங்களையும் எடுத்துச் செல்வதற்கு இரயில்வே தேவைப் பட்டது. இங்ஙனம் இரயில்வேயின் பணிகளுக்கான தேவைகள் உயர்ந்துசென்ற சமயத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதிநிலைமை யில் நெருக்கடி ஏற்பட்டதால் பதிலமர்த்தும் வேலைகளும், செப்பனிடும் பணிகளும் தாமதம் அடைந்தன. போர்க்காலத் தில் உற்பத்தியும், வாணிகமும் பெருகின. உயர்ந்துசென்ற வாணிகத் தேவைகளை இரயில்வேயினால் நிறைவேற்ற முடிய வில்லை. இதனால் அனைவரும் இரயில்வேயைக் குறைகூறினார்கள். இரயில்வே நிருவாகத்திலும், அமைப்பிலும் உள்ள குறைபாடு களைக் களைவதற்காக 1920-ல் சர் வில்லியம் ஆக்வொர்த் (Sir William Acworth) தலைமையில் இந்திய இரயில்வேக் கமிட்டி நியமிக்கப்பட்டது. இக் கமிட்டியின் பரிந்துரைகள் அடிப்படை யான மாற்றங்களை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்தன.

ஆக்வொர்த் கமிட்டி

ஆக்வொர்த் கமிட்டியின் பரிசீலனைக்குப் பல முக்கியப் பிரச் சினைகள் கொண்டுவரப்பட்டன; அதில் முக்கியமானது இரயில்வே நிருவாகத்தை யாரிடம் (அரசாங்கம் அல்லது கம்பெனிகள்) ஒப் படைக்க வேண்டும் என்பதாகும். இந்திய இரயில்வேக்களை இலண்டனிலிருந்து நிருவகிக்கக் கூடாது என்றும், அவற்றை இந்தி யாவிலிருந்துதான் நிருவகிக்கவேண்டும் என்றும் இக் கமிட்டி கூறியது. இரயில்வே நிருவாக அமைப்பு எப்படி இருக்கவேண் டும் என்பதில் கமிட்டி உறுப்பினர்களிடையே உடன்பாடு ஏற் படவில்லை. உறுப்பினர்களுள் பெரும்பான்மையினர் இரயில்வே நிருவாகத்தை அரசு ஏற்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பொதுவாக, தனியார் கம்பெனிகள் நிருவாகத் திறமையுடன் செயல்படும் என்ற கருத்து இந்திய இரயில்வே நிருவாகத்திற்குப் பொருந்தவில்லை என்றும் இக் கமிட்டியில் பெரும்பான்மையினர் எண்ணினர். கம்பெனிகளின் சொந்தச் சொத்துகளைப்போலப் பன்மடங்கு மதிப்பு மிக்க சொத்துகளை அவை நிருவகித்து வந்தன. அதாவது பெரும்பான்மையான இருப்புப்பாதைகள் அரசுக்குச் சொந்தமாக இருந்தன. இதன் காரணமாகத் தனியார் கம்பெனிகளுக்கு ஊக்கம் ஏற்படவில்லை என்று கூறப்பட்டது. வேலைக்கு நியமனம் செய்வது முதல் சீரமைப்புவரை ஒவ்வொன் றுக்கும் தனித்தனியாக அரசாங்கத்தின் அனுமதியைக் கம்பெனி கள் பெறவேண்டியிருக்கிறது. இதனால் இரயில்வேக் கம்பெனிகள்

எந்த முடிவையும் செய்ய இயலவில்லை. எந்த நோக்கத்திற்காகத் தனியார் நிருவாகம் பொதுவாக வலியுறுத்தப்படுகிறதோ அந்த நோக்கம் இங்கே நிறைவேற்றப்படவில்லை. அதைத் தவிர இந்தியர்களின் தொழில், வாணிக நலன்களைப் பேதப்படுத்தும் வகையில் கம்பெனி நிருவாகம் நடந்துகொண்டமையால், மக்களின் ஆதரவை அவை பெற முடியவில்லை. எனவே, மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக இரயில்வே நிருவாகப் பொறுப்பை அரசு ஏற்கவேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால், ஆக்வொர்த் கமிட்டியின் சிறுபான்மையினர் தங்களது மாறுபட்ட கருத்தைப் பின்வருமாறு தெரிவித்துக்கொண்டார்கள். இவர்கள், இரயில்வே நிருவாகம் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப் படவேண்டும் என்று கூறினார்கள். நிதி திரட்டுவதற்கும், அன்றாட நிருவாகத்தில் மக்கள் பிரதிநிதிகள் தலையிடாமல் இருப்பதற்கும் கம்பெனி நிருவாகமே சிறப்பாக இருக்கும் என்றும் கூறினார்கள்.

ஆக்வொர்த் கமிட்டியின் முக்கியப் பரிந்துரைகள் இரயில்வே நிதிச் சீரமைப்பைப்பற்றியதாகும். அப்போது இந்திய அரசாங்கத்தின் பொதுவான வரவுசெலவுத் திட்டத்தின் ஒரு கூறாக இரயில்வே நிதிநிருவாகம் அமைந்து இருந்தது. இரயில்வேயின் விரிவாக்கத்தையும் சீரமைப்பையும் அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்ட போதிலும், அரசாங்கத்தின் நிதிநிலைமையில் ஏற்படக் கூடிய நிலையற்ற தன்மை காரணமாக அவற்றை நடைமுறையில் செயல்படுத்த முடியவில்லை. எதிர்பாராத விதமாக அரசின் வருவாய் உயர்ந்துசெல்லுமானால், அவ்வாண்டில் உபரியான தொகை இரயில்வேக்கு ஒதுக்கப்படும். அந் நிதிஆண்டு முடியும் முன்னர் அத் தொகையைச் செலவுசெய்ய வேண்டும். இதனால் இரயில்வேயின் நீண்டகால வளர்ச்சிக்கும், சீரமைப்பிற்கும் திட்டமிட்டுச் செயல்பட முடியவில்லை. ஆகையால், இரயில்வே நிதியைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்று இக் கமிட்டி பரிந்துரைத்தது. இரயில்வே இலாக்காவை நிதி அமைச்சகத்தின் கட்டுபாட்டிலிருந்து விடுவித்தாலன்றி அதை ஒரு தொழில் அமைப்பைப் போல நிருவகிக்க முடியாது என்றும் கூறியது.

இதைத்தவிர இரயில்வேக் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு ஒரு தீர்ப்புமன்றத்தை அமைக்கவும், தொழில்நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோரது கருத்துகளை அறிவதற்காக ஆலோசனைக் கமிட்டிகளை ஏற்படுத்தவும், தேய்மான நிதி ஒன்றை உருவாக்கவும் இக் கமிட்டி பரிந்துரைத்தது.

ஆக்வொர்த் கமிட்டியின் பெரும்பாலான பரிந்துரைகள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தனியார் இரயில்வேக் கம்பெனிகளின் ஒப்பந்தகாலம் முடிந்ததும் அவை அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இரயில்வே வாரியம்—புதிய அடிப்படையில், சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் நிபுணர்களை உள்ளடக்கிய அமைப்பாக—திருத்தி அமைக்கப்பட்டது. கட்டண விகிதங்களை நிர்ணயிக்க ஒரு தீர்ப்புமன்றத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக ஓர் ஆலோசனைக்கமிட்டி நியமிக்கப்பட்டது (ஆலோசனைக் கமிட்டியின் அதிகாரங்கள் குறைவாக இருக்கும்). ஆக்வொர்த் கமிட்டியின் நிதிச் சீரமைப்பைச் செயல்படுத்துவதற்காகச் சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட இரயில்வே நிதிக்கமிட்டி ஒன்று 1921–ல் நிறுவப்பட்டது. இரயில்வே நிதியைப் பிரிக்க வேண்டிய அவசியத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் அதை உடனடியாகச் செயல்படுத்துவது இயலாது என்றும் இக் கமிட்டி கூறியது. நிதிப்பிரிவினையைவிட இரயில்வேயைச் செப்பனிடுதல், புதுப்பித்தல் முதலிய பணிகள் முக்கியமானவை என்றும், முதல் உலகப்போர் காரணமாக இவை தாமதிக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றை 5 ஆண்டுகளில் உடனடியாக நிறைவேற்றுவதற்குச் சுமார் ரூ. 150/–கோடி மூலதனச் செலவுக்காக ஒதுக்கவேண்டும் என்றும் கூறியது.

1942 செப்டம்பரில் இரயில்வே நிதி, பொதுநிதியிலிருந்து பிரிக்கப்பட்டது; அப்போது இரயில்வே இலாக்கா ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டது. இது அரசாங்கத்தின் வரவு இனமாக இருக்கும். இதைத்தவிர கூடுதலாக உள்ள இரயில்வேயின் உபரியான நிதியிலிருந்து முதல் மூன்று கோடி ரூபாய் இரயில்வேக் காப்பு நிதிக்காகவும், அதன் பின்னர் உள்ள தொகையில் மூன்றில் ஒரு பங்கு அரசாங்கத்திற்கும் செலுத்தப்படும்.

1929–ல் ஆரம்பித்த உலகமந்தத்தின் விளைவாக இந்திய இரயில்வேயின் நிதிநிலைமையும் மோசமடைந்தது. நாட்டின் ஏற்றுமதியும் இறக்குமதியும் குறைந்தன. இதனால் போக்குவரத்துத் தேவையும் குறைந்து இரயில்வேயின் வருமானம் குறைந்துசென்றது. பயணிகளின் எண்ணிக்கை 634 மில்லியன் (1929–30–ல்) மட்டத்திலிருந்து 480 மில்லியன் (1932–33–ல்) ஆகக் குறைந்தது. இதைப்போலவே சரக்குப் போக்குவரத்தும் வீழ்ச்சி அடைந்தது. 1928–29–ல் 91 மில்லியன் டன்களாக இருந்த சரக்குப் போக்குவரத்து 1932–33–ல் 71 மில்லியன் டன்களாகக் குறைந்தது. இரயில்வே இலாக்காவின் நிதிவசூல்

அதன் செலவுகளுக்குப் போதுமானதாக இல்லை. இரயில்வேயின் நிதிநிருவாகம் தனியாகப் பிரிக்கப்பட்டதால், நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. இதனால் இரயில்வேயின் பராமரிப்புச் செலவுகளும், புதுப்பிக்கும் செலவுகளும் மந்தம் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டன. *1936–37*–ல்தான் மந்தத்தின் பிடிப்பி லிருந்து இரயில்வே இலாக்கா விடுபட்டது.

அதன் பின்னர் இரண்டாவது உலகப்போர் ஏற்பட்டதால், போக்குவரத்துத் தேவைகள் மீண்டும் உயர்ந்துசென்றன, இதனால் இரயில்வேயின் நிதிநிலைமை மீண்டும் சீர்பட்டது. போர் காரணமாக உருளும் சாதனங்கள் மிகவும் அதிக அளவுக்குப் (அதிக தீவிரமாக) பயன்படுத்தப்பட்டன. அவற்றை உரிய காலத்தில் பதிலமர்த்தவோ, செப்பனிடவோ முடியவில்லை. போர்க் காலத்தில் சாலைப் போக்குவரத்துச் சாதனங்கள் முக்கியமாகப் பெட்ரோல், லாரிகள் முதலியன கிடைப்பருமையாக இருந்தன. இதனால் இரயில்வேப் போக்குவரத்தை நாடு முழுவதும் நம்பி இருந்தது. உலகப்போர் நடைபெற்ற ஆண்டுகளில் இரயில்வே நிதிநிலைமை கணிசமான அளவுக்கு உயர்ந்து காணப்பட்டது. *1938–39*–ல் ரூ. *94* கோடியாக இருந்த நிதிவசூல் போருக்குப் பின் *1945–46*–ல் ரூ. *226* கோடியாக உயர்ந்தது; இக் காலத்தில் அரசாங்கத்தின் பொதுநிதிக்காக ரூ. *158*/– கோடியும் இரயில்வேக் காப்பு நிதிக்காக ரூ. *76*/– கோடியும் இரயில்வே இலாக்கா செலுத்தியுள்ளது.

1947–ல் நாடு பிரிவினை செய்யப்பட்டபோது பாகிஸ்தானிடம் **6950** மைல் நீளம் உள்ள (மொத்தத்தில் இது 19% ஆகும்) இருப்புப்பாதைகளும், பாரதத்திடம் **34,083** மைல் நீளம் உள்ள இருப்புப்பாதைகளும் இருந்தன. அதைத்தவிர தேர்ச்சிபெற்ற இரயில் ஓட்டிகள், செப்பனிடும் நிபுணர்கள் ஆகியோரின் கிடைப்பருமை மேலும் அதிகரித்துச் சென்றது. பிரிவினையால் தோன்றிய பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சில ஆண்டுகள் சென்றன.

இரயில் கட்டண விகிதக் கொள்கை

பொதுவாக, வளரும் நாடுகளில் புதிய தொழில்களை ஊக்குவிக்கவும், பின்தங்கிய வட்டாரங்களின் தொழில்வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கவும் சலுகை விகிதத்தில் போக்குவரத்துக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவது வழக்கம். ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் நிறுவப்பட்ட இருப்புப்பாதைகள் இந்தியாவின் தொழில்வளர்ச்சியைவிட வாணிக வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டன என்பதை

இரயில்வேக்களின் கட்டணவிகிதக் கொள்கையை ஆராய்வதன் மூலம் அறிய முடியும்.

இருப்புப்பாதைகளின் காரணமாகப் போக்குவரத்துச் செலவுகள், மரபான அடிப்படையில் வெகுவாகக் குறைந்துள்ளன என்றால் மிகையாகாது. மாடுகளின் உதவியால் சரக்குகளை இடம் பெயர்த்துவதற்கு ஆகும் செலவில் இருபதில் ஒரு பங்காக இரயில்வேக் கட்டணவிகிதங்கள் இருந்தன என்றாலும் இதனால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஊக்குவிக்கப்படவில்லை என்பதுடன், இந்தியர்களும் இதனால் பலன் அடையவில்லை என்றும் கூற வேண்டும்.

தொழில்வளர்ச்சியின் ஒரு கூறாக இருப்புப்பாதை அமைக்கும் திட்டம் இடம்பெற்றதால் மேலைநாடுகளில் இது ஒரு முன்னோடியான துறையாகத் திகழ்ந்தது; இரயில் போக்குவரத்தின் வளர்ச்சியால் தொழில்களின் ஆக்கச்செலவுகள் குறைக்கப்பட்டு, இலாப விழுக்காடு உயர்த்தப்பட்டது; இரயில்வேக்களுக்குத் தேவையான சாதனங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதால், தொழில் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்க முடிந்தது. ஆனால், இந்தியாவில் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்ட ஆண்டுகளில் இந் நாடு முழுக்கமுழுக்க ஒரு விவசாய நாடாக இருந்தது; இந்தியாவில் புதிய பேரளவுத் தொழில்களை நிறுவவேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலான மக்களிடமோ, ஆட்சியாளரிடமோ இடம் பெறவில்லை. விவசாய நாடாக இருந்தமையால் போக்குவரத்தின் அவசியத்தை மக்கள் உணரவில்லை; இதனால் போக்குவரத்துத்தேவையும் குறைவாக இருந்தது; இதுவே ஆரம்பத்தில் இரயில்வே இழப்பிற்கு ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. போக்குவரத்துச் செலவு பெரிதும் குறைக்கப்பட்டதால் இந்தியர்களுக்கும் இந்தியாவின் பொருளாதார அமைப்பிற்கும் ஏற்பட்டு இருக்க வேண்டிய நன்மைகள் வாணிகக் கொள்கை காரணமாக வெளிநாட்டு உற்பத்தியாளர்களுக்கும், வணிகர்களுக்கும் கிடைத்தன.

சென்ற நூற்றாண்டில் இரயில்வேக் கம்பெனிகள் இலாபநோக்கத்தை மையமாகக் கொண்டு இயங்கின. குறுகிய காலத்தில் உயர்ந்த அளவு இலாபத்தைத் திரட்டுவது இவற்றின் முக்கிய நோக்கமாகும். தொழில்கள் வளர்ச்சியுறாத நாட்டில் சரக்குப் போக்குவரத்தை அதிகரிப்பதற்குச் சலுகைவிகித இரயில் கட்டணங்கள் அவசியம் என்பதை உணரவில்லை. சென்ற நூற்றாண்டில் இரயில்வேக் கம்பெனிகள் தங்கள் கட்டணவிகிதங்களைக் குறைத்த

போதெல்லாம் சரக்குப் போக்குவரத்து உயர்ந்துள்ளது.[12] இவ்வுண்மையைத் திரு. இராபர்ட்ஸன் தமது அறிக்கையில் (1902–ல்) வலியுறுத்தியுள்ளார். இங்கிலாந்தில் உள்ளதைவிடப் பண அடிப்படையில் இந்தியாவில் இரயில் கட்டணங்கள் குறைவாக உள்ளன என்றாலும், இந்தியாவில் உள்ள சூழ்நிலைமைக்கு இவ் விகிதங்கள் உயர்ந்துகாணப்படுகின்றன என்றும், எனவே இவற்றை 30%-லிருந்து 60% வரை குறைக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளார்.

இந்தியாவில் உற்பத்தியாகும் கச்சாப் பொருள்களைத் துறைமுகத்திற்கு எடுத்துச்செல்லும் விகிதமும், அதைப்போலத் துறைமுகங்களில் இறக்குமதியான பொருள்களை உள்நாட்டுக்கு எடுத்துச் செல்லும் கட்டணவிகிதங்களும் மிகவும் குறைவாக இருந்தன. ஆனால், உள்நாட்டில் உற்பத்தியான பொருள்களை நாட்டின் பிற பகுதிகளுக்கு எடுத்துச்செல்லும் கட்டணவிகிகதங்கள் உயர்வாகக் காணப்பட்டன. சரக்குகளை நெடுந்தூரம் எடுத்துச் செல்லும்போது ஆக்கச்செலவு குறைவாகவும், குறுகிய தூரம் எடுத்துச் செல்லுகையில் ஆக்கச்செலவு அதிகமாகவும் உள்ளது என்று கூறுகிறார்கள். அதைத் தவிர இரயில்வேக் (தனியார்) கம்பெனிகளுக்கு இடையே போட்டி ஏற்பட்டது. ஒரு கம்பெனி தனக்குச் சொந்தமான இருப்புப்பாதைகளுக்குள் சரக்குகளை எடுத்துச்செல்லும்போது குறைந்த கட்டணவிகிதத்தையும், அப்படியில்லாமல் தன் பாதையில் ஆரம்பித்து அதில் சிறுஅளவு தூரமும், பிற கம்பெனிகளுக்குச் சொந்தமான இருப்புப்பாதைகளில் நெடுந்தூரம் எடுத்துச்செல்ல வேண்டிய பொருள்களுக்கு இக் கம்பெனி கூடுதலான விகிதத்திலும் இரயில் கட்டணங்களை வசூலித்தன.[13] இங்ஙனம் பேதப்படுத்தும் கட்டணவிகிதங்கள் தொழில்வளர்ச்சிக்கும், வட்டார அடிப்படையில் சிறப்புத்தேர்ச்சி ஓங்கவும் பெரும் இடையூறாக இருந்தன. காட்டாக, பம்பாய்த் துறைமுகத்தில் இறக்குமதியான தீப்பெட்டிகளை டெல்லிக்கு எடுத்துச் செல்வதற்கான இரயில் கட்டணம் குறைவாகவும், அகமதாபாத்தில் உற்பத்தியான தீப்பெட்டிகளை டெல்லிக்கு எடுத்துச் செல்வதற்கான இரயில் கட்டணம் அதிகமாகவும் இருந்தது.[14] [அகமதாபாத்திற்கும் டெல்லிக்கும்

12 Vinod Dubey—முன்கூறியபடி பக். 336, Quoted from Antia, F. P. Inland Transportation Costs. Bombay, 1932, pp. 133-137.

13 இதை 'Block rate Policy' என்பர். பார்க்கவும் G. B. Jathar and S. G. Beri—முன்கூறியபடி, பக். 188, அடிக்குறிப்பு 4, (1952).

14 Vinod Dubey-முன்கூறியபடி பக். 335—336.

இடையே உள்ள தூரம், பம்பாய்–டெல்லி இரண்டிற்கும் உள்ள தூரத்தைவிட 300 மைல் குறைவு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.] அதைப்போலவே பம்பாயில் இறக்குமதியான சர்க்கரையை 840 மைல் தூரத்தில் உள்ள கான்பூருக்கு எடுத்துச் செல்வதற்கு மணங்கு ஒன்றிற்கு $13\frac{1}{2}$ அணு (அதாவது ரூ. 0.84) கட்டணமும், கான்பூரில் உற்பத்தியான சர்க்கரையை 640 மைல் தூரத்தில் உள்ள அகோலாவிற்கு எடுத்துச்செல்ல மணங்கு ஒன்றிற்கு $18\frac{1}{4}$ அணு (அதாவது ரூ. 1.14) கட்டணமும் வசூலிக்கப்பட்டது. இக் கட்டணவிகிதங்கள் தேசியத் தொழில்வளர்ச்சியைப் பேதப்படுத்தின. இந்தியாவில் உற்பத்தியான பொருள்களை இந்திய அங்காடிக்கு எடுத்துச் செல்லும் செலவு அதிகமாக இருந்தமையால், அவை கூடுதலான விலைக்கு விற்கப்பட்டன. ஆனால், இந்தியக் கச்சாப் பொருள்களைக்கொண்டு வெளிநாடுகளில் உற்பத்தியாகும் பொருள்களை (இந்திய அங்காடிகளில்) மலிவாக வாங்க முடிந்தது. இவற்றை எல்லாம் இந்திய நிதி ஆணைக்குழு, இந்தியத் தொழில் ஆணைக்குழு மற்றும் ஆக்வொர்த் கமிட்டி முதலியவற்றிடம் பலர் கூறியுள்ளனர்.[15]

இந்தியத் துறைமுகங்களிலிருந்து நாட்டின் பல பகுதிகளுக்குச் சரக்குகளை அனுப்புவதற்கும், அதைப்போலவே உள்நாட்டின் பல பகுதிகளிலிருந்து சரக்குகளைத் தருவிப்பதற்கும் இரயில் கட்டணவிகிதங்கள் குறைவாக இருந்தமையால், இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட சில தொழில்களும் கடற்கரையோரங்களிலும், துறைமுகப் பட்டினங்களிலும் செறிந்து காணப்பட்டன.

விடுதலைக்குப் பின்னர்

விடுதலைக்குப் பின்னர் இரயில்வே நிருவாகத்திலும், கொள்கையிலும் குறிப்பிடத்தக்க பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1949–ல் திரு H. N. குன்ஸ்ரூ தலைமையில் இரயில்வே விசாரணைக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. இரயில்வே ஊழியர்களைத் தாற்காலிகமாக வைத்துக்கொள்வதற்குப் பதிலாக நிரந்தரமாக்கவேண்டும் என்றும், அப்போதுதான் அவர்களுடைய உற்பத்தித் திறனை உயர்த்த முடியும் என்றும் இக் கமிட்டி கூறியது. இதைத் தவிர, நுட்பரீதியான பரிந்துரைகள் அனைத்தையும் அரசு முழுமையாக ஏற்றுக்கொண்டது.

1949–ல் நிதி ஒப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இதற்கு முன்னர் 1924–ல் செய்யப்பட்ட மேற்படி ஒப்பந்தத்தில்

15 G. B. Jathar and S. G. Beri, Indian Economics, 1952, p. 133.

பல திருத்தங்கள் செய்யப்பட்டன. பழைய ஒப்பந்தத்தின் படி இரயில்வேயின் வருவாய் உயர்ந்துசென்ற ஆண்டுகளில் கூட இரயில்வேயின் காப்பு நிதிக்குக் கூடுதலான தொகையை ஒதுக்க முடியவில்லை. புதிய ஒப்பந்தத்தில் இரயில்வே வளர்ச்சிக்கும், சீரமைப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இரயில்வே நிதி தொடர்ந்து தனியாகவே இருக்கும்; வரி செலுத்துபவர்கள் அனைவரும் இரயில்வேயின் பங்குதாரர்களாகக் (உடைமையாளர்களாக) கருதப்படுவார்கள். ஆண்டுதோறும் இரயில்வேயின் மூலதனத்தில் 4% தொகையை அரசின் பொது நிதிக்காகச் செலுத்த வேண்டும். தேய்மான நிதிக்காக ரூ. 15 கோடி ஆண்டுதோறும் ஒதுக்கப்படும். இதைத் தவிர இரயில்வேப் பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்காக வளர்ச்சி நிதி ஒன்றும் நிறுவப்படும். இவ்வொப்பந்தம் 5 ஆண்டுக் காலத்திற்குச் செல்லுபடியாகும் என்று கூறப்பட்டது. 1954–ல் மீண்டும் சில திருத்தங்களுடன் இது புதுப்பிக்கப்பட்டது.

விடுதலைக்குப் பின்னர் இரயில்வே நிருவாகத்தில் குறிப்பிடத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. சுதேச அரசுகள் யாவும் பாரதத்துடன் இணைக்கப்பட்டன. ஆகையால், சுதேச அரசுகளுக்குச் சொந்தமான இருப்புப்பாதைகளையும் சேர்த்து நாடெங்கிலும் உள்ள இரயில்வேக்களைச் சீரமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1950–51–ல் நாடெங்கிலும் மொத்தம் 35 இரயில்வே அமைப்புகள் இருந்தன. அவற்றை ஆறு மண்டலங்களாகப் பிரித்தார்கள். இவற்றில் தெற்கு, மத்திய, மற்றும் மேற்கு மண்டலங்கள் 1951–லும் வடக்கு, வடகிழக்கு, கிழக்கு மண்டலங்கள் 1952–லும் நிறுவப்பட்டன. 1955–க்குப் பின்னர் மேலும் இரு இரயில்வே மண்டலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அப்போது தென்கிழக்கு இரயில்வே மண்டலம் (இது கிழக்கு மண்டலத்திலிருந்து பிரிக்கப்பட்டது) ஆரம்பிக்கப்பட்டது. வடகிழக்கு மண்டலம் மேலும் இரு பிரிவுகளாக்கப்பட்டது. 1964 இறுதியில் மொத்தம் 9 மண்டலங்கள் இருந்தன. அவையாவன: தென்மண்டலம் (சென்னை),[16] மேற்கு மண்டலம் (பம்பாய்), மத்திய மண்டலம் (பம்பாய்), வட மண்டலம் (டெல்லி), கிழக்கு மண்டலம் (கல்கத்தா), வடகிழக்கு மண்டலம் (கோரக்பூர்), வடகிழக்கு எல்லை மண்டலம் (பாண்டு–அஸ்ஸாம்), தென்கிழக்கு மண்டலம் (கல்கத்தா), தென் மத்திய மண்டலம் (செகந்தராபாத்) ஆகியவை.

ஆரம்பத்தில் புதிய மண்டலங்களை ஏற்படுத்தியதால் பல புதிய பிரச்சினைகள் தோன்றின என்றாலும் நாளடைவில் நவீன

16 அடைப்புக் குறிகளுள் குறிக்கப்பட்ட ஊர்களில் அவற்றின் தலைமையகங்கள் உள்ளன.

செய்தித்தொடர்பு வசதிகள் காரணமாக நிருவாகக் கட்டுப் பாட்டைச் செம்மைப்படுத்த முடிந்தது. பேரளவு சிக்கன நலன் களை எய்துவதற்கு மண்டலப் பிரிவுகள் உதவியாக இருக்கின்றன என்று கூறலாம்.

1950–51 இல் 53,600 கிலோ மீட்டர் ஆக இருந்த இருப்புப் பாதையின் நீளம் 1968–69-ல் 59,600 கிலோ மீட்டர் ஆக உயர்ந்தது. இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இரயில்வே இலாக்காவிற்காகக் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டது. இரயில்வேக்காக முதலீடு செய்த தொகையில் 40% இருப்புப்பாதைகளைப் பலப்படுத்தவும், செப்பனிடவும் செல விடப்பட்டது; இதில் 50% தொகை கூடுதலான உருளும் சாதனங் களுக்காகவும், 10% தொகை புதிய பாதைகளுக்காகவும் செல விடப்பட்டுள்ளன. இக்காலத்தில் இரட்டைப்பாதைகளின் நீளம் 4300 கிலோமீட்டரிலிருந்து 10,400 கிலோ மீட்டராக உயர்ந்தது. மின்சார இரயில் பாதைகளின் நீளம் 400 கிலோ மீட்டரிலிருந்து 3200 கிலோ மீட்டராக உயர்ந்தது.

புதிய நுட்ப மாறுதல்களையும், நீண்டகால வளர்ச்சித் தேவை களையும் நிறைவேற்றும்வகையில் 'டீசல் இன்சின்'கள் அதிகமாக்கப் படுகின்றன. டீசல் இன்சின்களின் எண்ணிக்கை 1950-51–ல் 89 ஆக இருந்தது, 1968-69-ல் இது 1509 ஆக உயர்ந்துசென்றது. 1973-74–ல் இது 2600 ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீராவி இன்சின்களின் உற்பத்தி விரைவில் நிறுத்தப்படும். இவை இருபதாவது நூற்றாண்டின் இறுதிவரை தொடர்ந்து ஓடிக்கொண் டிருக்கும். அதன் பின்னர் முற்றிலும் டீசல் இன்சின்கள், மின்சார இன்சின்கள் ஆகியவைமட்டுமே புழக்கத்தில் இருக்கும்.

இரயில்வேச் சாதனங்கள் யாவும் தற்சமயம் பாரதத்திலேயே உற்பத்திசெய்யப்படுகின்றன. இன்சின்கள், இரயில்பெட்டிகள், வாகன்கள் முதலியவற்றின் உற்பத்தியில் பாரதம் தன்னிறைவு அடைந்துள்ளது. இதைப்போலவே இரயில்வேக்குத் தேவை யான நுட்பசாதனங்கள் உற்பத்தியிலும் தன்னிறைவு ஏற்பட் டுள்ளது. 1968—69-ல் 16,500 இரயில் வாகன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவ் வுற்பத்தி 1973—74-ல் 21,500 ஆக உயரக்கூடும். இவை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

விடுதலைக்குப் பின்னர்க் கட்டண விகிதங்கள்

விடுதலைக்குப் பின்னர்ச் சரக்குக் கட்டண விகிதத்தைச் சீர மைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1948, 1952 ஆகிய

ஆண்டுகளில் கட்டண விகிதங்களைச் சீரமைத்ததுடன், ஓரளவுக்கு உயர்த்தவும் செய்தார்கள். 1957-ல் சர் ஏ. இராமசாமி முதலியார் தலைமையில் கட்டண விகிதங்களின் கட்டமைப்பை நிர்ணயிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. கட்டண விகிதங்களை நிர்ணயிப்பதில் புதியதோர் அடிப்படையை இக் கமிட்டி பின்பற்றியது. இதனால் கட்டண விகிதங்கள் எட்டு அடுக்குகளாக்கப்பட்டன. ஆதாரமான கட்டண விகிதம் ஒன்றின் அடிப்படையில் இதன் சதவீதமாக இதரக் கட்டண விகிதங்கள் நிர்ணயிக்கப்படும். இவை வளர்வீத அடிப்படையில் இருக்கும்.

உணவு, பழம், காய்கறி, மண்ணெண்ணெய், புத்தகம் முதலிய பொருள்களுக்குச் சலுகை விகிதத்தில் குறைந்த கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

திறனாய்வு

இரயில்வே வளர்ச்சியின் ஆரம்பம் முதல் அரசு முக்கியப் பங்கு பெற்றுள்ளது என்றாலும் 1925-க்குப் பின்னரே இரயில்வேக் கம்பெனிகளை நாட்டுஉடைமையாக்குதல் ஆரம்பமாகியது. 1920-ல் மொத்தம் 175 இரயில்வே நிருவாக அலகுகள் இருந்தன. 1947-ல் இவ் வலகுகள் 42 ஆகக் குறைந்தன. தற்சமயம் அவை 9 மண்டலங்களாகச் சீரமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் இரயில்வே மண்டலமும் ஒரு நிருவாக அலகாக இருக்கும்.[17]

பாரத இரயில்வே நாட்டின் மிகப் பெரிய பொதுத்துறை நிறுவனமாக உள்ளது. இதன் சொத்துகளின் மொத்த மதிப்பு ரூ. 3,600 கோடியாகும். நாள் ஒன்றுக்கு இரயில்வேயின் சராசரி வசூல் தொகை ரூ. 2.6 கோடியாகும். இதில் 13.6 இலட்சம் மக்கள் வேலைசெய்துவருகின்றனர். போக்குவரத்துத் தூரம் 59,000 கி.மீ. ஆகவும், இருப்புப்பாதை நீளம் 96,269 கி.மீ. ஆகவும் உள்ளன. மொத்தம் 11,600 இரயில் இன்சின்கள், 33,800 இரயில்பெட்டிகள், 3,78,000 வாகன்கள் உள்ளன. தினசரி 10,000 இரயில்கள் 60 இலட்சம் பயணிகளையும், 5 இலட்சம் டன் சரக்குகளையும் ஏற்றிக்கொண்டு செல்லுகின்றன.

பாரத இரயில்வேயில் மூன்று பாதைகள் உள்ளன. அகலப் பாதை, மீட்டர்ப் பாதை, குறுகிய பாதை முதலியன. இவற்றுள் அகலப்பாதை மிகவும் முக்கியமானதாகும். இதன் போக்குவரத்துத் தூரம் (Route length) 28,700 கி.மீ. ஆகும். இது

[17] B. C. Ganguli, The Hindu Survey of Indian Industry, 1969.

மொத்தப் போக்குவரத்துத் தூரத்தில் 49% ஆக இருந்தபோதிலும், மொத்தப் பயணிகளில் 71%-ம், மொத்தச் சரக்குப் போக்குவரத்தில் 84%-ம் அகலப்பாதைகளின் பங்காக உள்ளன.

இரயில்வே வாரியத்தின் நிருவாகத்தின்கீழ் மூன்று பெரிய உற்பத்தி ஆலைகள் இயங்கிவருகின்றன. சித்தரஞ்சன் இரயில் இன்சின் தொழிற்சாலையில் நீராவி இன்சின்களும், மின்சார இன்சின்களும் தயாரிக்கப்படுகின்றன. பெரம்பூரில் உள்ள ஆலையில் இரயில் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. மூன்றாவதாக, காசியில் (வாரணாசி) டீசல் இரயில் இன்சின்கள் தயாரிக்கப்படுகின்றன.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இரயில்வே வளர்ச்சிக்காக முதலீடு செய்யப்பட்ட மூலதனம் ரூ. 3,150 கோடி ஆகும். நான்காவது திட்டத்தில் இரயில்வே முதலீட்டிற்காக ரூ. 1,525 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சரக்குகளை இடம்பெயர்த்துவதற்குச் சரக்குப்பெட்டிகள் (container) 1966 முதல் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சரக்குப்பெட்டியின் கொள்ளளவும் 4.5 முதல் 5 டன்கள் வரை இருக்கும். 1966-ல் 130 ஆக இருந்த சரக்குப்பெட்டிகள் 1969-ல் 1780 ஆக—சுமார் 13 மடங்கு—உயர்ந்துள்ளன. சரக்குகளை விரைவாகவும், பாதுகாப்பாகவும் அனுப்புவதற்கு இவை பெரிதும் பயன்படும்.

பெரும்பாலான உருளும் சாதனங்களையும், பொறியியல், மின் அணுவியல் செய்தித் தொடர்பு சாதனங்களையும் பாரதத்திலேயே உற்பத்திசெய்கிறோம். கிட்டத்தட்ட இவற்றின் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து இருப்பதுடன் குறிப்பிட்ட சில சாதனங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் முடிகிறது. விடுதலைக்கு முன் உள்ள நூறு ஆண்டுக்கால இரயில்வே வளர்ச்சியால் ஏற்பட்ட பொருளாதார—தொழில்துறை—முன்னேற்றத்தைக் காட்டிலும் அதன் பின்னர்ச் சுமார் 23 ஆண்டுகளில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இரயில்வேயின் விரிவாக்கத்தால் கனரகத் தொழில்களும் வளர்ச்சியுற்று இருக்கின்றன. அதைப்போல இரும்பு எஃகு தொழிலுக்கும், ஏனைய கனரகத் தொழில்களுக்கும் துரிதமான, சிக்கனமான போக்குவரத்து இன்றியமையாதவை.

23. வெளிநாட்டு வாணிகம்

முன்னுரை

உற்பத்தியின் ஒரு நிலையாக வாணிகத்தைக் கருதலாம். பன்னாட்டு வாணிகம் நாட்டு வருமானத்துடன் நெருங்கிய தொடர்பு உடையது! வாணிக அளவு நாட்டு வருமானத்துடன் கட்டாயமாக உயர்ந்துசெல்லும் என்று கூற இயலவில்லை என்றாலும், தொழில் வளர்ச்சியின் காரணமாக ஏற்றுமதி, இறக்குமதி அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். சில நாடுகளில் வாணிக விரிவாக்கம் தொழில்வளர்ச்சியை ஊக்குவிக்கும் முன்னோடியான துறையாக உள்ளது; காட்டாக, பிரிட்டனின் வாணிகப் பெருக்கம் தொழிற் புரட்சிக்கு முன்னோடியாக இருந்தது. இன்றைய தினமும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் சக்தியாக வாணிக விரிவாக்கம் செயல்படுகிறது. ஆனால், இக் கூற்று வளரும் நாடுகளுக்குப் பொருந்துவது இல்லை. இந்நாடுகளில் நுட்பமுறையும், அமைப்புக்காரணிகளும் உற்பத்திப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற காரணத்தால், புதிதாகத் தோன்றும் வெளிநாட்டு அங்காடியாலும், இதர மூலப்பொருள்களினாலும் பொருளாதார வளர்ச்சியைத் தோற்றுவிக்கவோ, துரிதப்படுத்தவோ முடியவில்லை.

வெளிநாட்டு வாணிகம், பொருளாதார வளர்ச்சி முதலியன அங்காடிச் சக்திகளின் இயக்கத்தால் மட்டும் இயல்பாகத் தோன்றக்கூடும் என்று கூறுவதற்கில்லை. தனியார் தொழில்முயற்சியுடன் அரசின் ஆதரவும், தூண்டுதலும் தேவைப்படுகின்றன. வாணிக விரிவாக்கமும், வளர்ச்சிப் போக்கும் அந்த அரசின் கொள்கைகளைப் பிரதிபலிக்கின்றன. வாணிகக் கொள்கையின்மூலம் ஒவ்வொரு நாடும் தனது பொருளாதார இலட்சியங்களை நிறைவேற்றிக்கொள்ளுகின்றது. சென்ற நூற்றாண்டில் இந்தியத் துணைக்கண்டத்தின் வாணிகக் கொள்கையும் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இந்தியா ஒரு 'காலனி' நாடாக இருந்தது என்பதை வாணிகக்

கொள்கையும், இந்தியாவின் வெளிநாட்டு வாணிகமும் பறை சாற்றுகின்றன. இவை ஏகாதிபத்திய நாட்டின் நலன்களைப் பாது காக்கும் சாதனங்களாக விளங்கின.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் இந்திய அரசாங்கம் தடையிலா வாணிகக் கொள்கையைப் பின்பற்றியது. இதன் காரணமாக இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சியடைவதற்குப் பதிலாக பிரிட்டனின் தொழில்வளர்ச்சி வேகம் அதிகரித்தது. இந்தியாவிலிருந்து உணவுப் பொருள்கள், கச்சாப் பொருள்கள், மலைத்தோட்டப் பயிர்ப்பொருள்கள் முதலியன பெருமளவுக்கு (சென்ற நூற்றாண்டின் இறுதியில்) ஏற்றுமதி செய்யப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களில் துணியும், செய்பொருள் களும் மிக முக்கியமானவை. இந்தியாவின் வாணிகம் அதிகரித்துச் சென்றது என்றாலும், ஒரு காலத்தில் கவின்மிகு கலைப்பொருள் களையும், சிறப்புத் தேர்ச்சி மிக்க பொருள்களையும் ஏற்றுமதி செய்த நிலை அடியோடு மாறிவிட்டது; அதற்குப் பதிலாகத் தொழில் துறையில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சாதாரண உணவுப் பொருள்களும், கச்சாப் பொருள்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.[1] இந்த மாற்றம் இந்தியக் கைவினைத் தொழில்கள் பொலிவி ழந்துள்ளதை விளக்குகிறது. இந்தியாவில் வாணிகப் பெருக் கம் பேரளவுத் தொழில்வளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்க வில்லை என்பதுடன், அதற்குத் தடையாகவும் இருந்தது.

பன்னாட்டு வாணிகத்தை ஆராய்வதற்குப் பொருளாதார முக்கியத்துவம் உள்ள நிகழ்ச்சிகள் அடிப்படையாக இருக்கின்றன. இவ்வடிப்படையில் 19ஆவது நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்களை முதலாவது கட்டமாகவும், இருபதாவது நூற்றாண்டில் முதல் உலகப்போர் வரை உள்ள பூரிப்பான காலத்தை இரண்டாவது கட்டமாவும், முதலாவது உலகப்போர் நடைபெற்ற ஆண்டுகளை மூன்றாவது கட்டமாகவும், அதன்பின்னர் உலகமந்தம் ஏற்படும் வரை உள்ள வளர்ச்சியை நான்காவது கட்டமாகவும், 1929 முதல் உலகமந்தம் தீவிரம் அடைந்து, அதன் பின் இரண்டாவது உலகப் போர் ஆரம்பமாகும் வரை உள்ள ஆண்டுகளை ஐந்தாவது கட்டமாகவும், இரண்டாவது உலகப்போரினால் வெளிநாட்டு வாணிகம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டது என்பதை ஆறாவது கட்டமாகவும், அதன்பின்னர் முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் தொடங்கும்வரை ஏழாவது கட்டமாகவும், 1951-க்குப் பின்னர்த் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி தொடங்கிய ஆண்டுகளை

[1] Vera Anstey-op. cit., p. 882.

எட்டாவது கட்டமாகவும் பிரித்து அவ் வாண்டுகளில் முறையே பன்னாட்டு வாணிகத்தில் தோன்றிய முக்கிய மாற்றங்களையும், இயல்புகளையும் ஆராய்ந்துள்ளோம்.

19ஆவது நூற்றாண்டில் இந்தியாவின் வெளிநாட்டு வாணிகம் (1857-1900)

கிழக்கு இந்தியக் கம்பெனி ஆட்சி முடியும் முன்னதாகவே, 1835-57 ஆண்டுகளில் இந்தியாவின் இறக்குமதி 6 மில்லியன் ஸ்டர்லிங்கிலிருந்து 29 மில்லியன் ஸ்டர்லிங் ஆகவும், ஏற்றுமதி 8 மில்லியனிலிருந்து 27 மில்லியன் ஸ்டர்லிங் ஆகவும் அதிகரித்தன.[2] இந்தியாவின் இறக்குமதியும், ஏற்றுமதியும் தொடர்ந்து 1857-லிருந்து 1893வரை உள்ள ஆண்டுகளில் அதிகரித்துச் சென்றன. இதற்குப் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்ட முன்னேற்றம் முக்கியக் காரணமாக இருந்தது. இருப்புப் பாதைகள் நாடெங்கிலுமமைக்கப்பட்டன. இதற்குத் துணையாக இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன. 1869-ல் சூயஸ் கால்வாய் திறக்கப் பட்டது. இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 4000 மைல்களுக்கும் அதிகமாகக் குறைக்கப்பட்டது. இதனால் கப்பல் போக்குவரத்து ஊக்குவிக்கப்பட்டுக் கப்பல் கட்டண விகிதம் குறைக்கப்பட்டது. வாணிக வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் வாணிகக் கொள்கையும்—தடையிலா வாணிகத் தத்துவம்—அந்நிய மூலதன இறக்குமதியும், பொதுவான அமைதியும் காரணமாக இருந்தன.

19ஆவது நூற்றாண்டில் நிகழ்ந்தவை அனைத்தும் வாணிக வளர்ச்சிக்குச் சாதகமாக இருந்தன என்று கூற முடியாது. இந்தியத் துணைக்கண்டத்தில் இக் காலத்தில் அடிக்கடி பஞ்சங்கள் ஏற்பட்டுள்ளன. பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டும் சுமார் 24 பஞ்சங்கள் ஏற்பட்டுள்ளன (பார்க்கவும் அட்டவணை 6.1). இதைத் தவிர உலகெங்கிலும் பொன், வெள்ளி ஆகிய இரு உலோகங்களின் கிடைப்பருமையும், பரிவர்த்தனை விகிதமும், இக் காலத்தில் பெருமளவுக்கு மாற்றம் அடைந்துள்ளன (அத்தியாயம் 24 பார்க்கவும்). இருந்தபோதிலும் இந்தியாவின் இறக்குமதியும், ஏற்றுமதியும் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. 1869—1874 ஆண்டுகளின் சராசரி இறக்குமதி ரூ. 41/- கோடியாக இருந்தது; 1889—1894 ஆண்டுகளில் (ஐந்தாண்டுச் சராசரி) ரூ. 89/- கோடியாக உயர்ந்

2 பார்க்கவும் R. L. Varshney—Foreign Trade, Ch. 19, in the Economic History of India, 1857-1956, (Ed.) V. B. Singh p. 444.

தது. இதே ஆண்டுகளில் ஏற்றுமதிப்பொருள்களின் மதிப்பு ரூ. 58/- கோடியிலிருந்து ரூ. 109/- கோடியாக உயர்ந்துள்ளது; இறக்குமதி 115%-ம், ஏற்றுமதி 88%-ம் உயர்ந்துள்ளன. இக் காலத்தில் வெளிநாட்டு வாணிகத்திற்காக எடுத்துச்செல்லப்பட்ட பொருள்களின் எடை 76% உயர்ந்துசென்றது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியில் உள்ள ஆறு ஆண்டுகளில் (*1894—1900*) இந்திய வெளிநாட்டு வாணிகத்தில் ஒருவிதத் தேக்க நிலைமை ஏற்பட்டது. இக் காலத்தில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இதற்குக் காரணமாக இருந்தன. இருந்தபோதிலும் *1893—4*-ல் இருந்ததைவிட *1899—1900*-ல் இறக்குமதி ரூ. *2*/- கோடிக்கு மட்டுமே குறைந்துள்ளது; ஏற்றுமதி ரூ. 2/- கோடிக்கு இறுதிநிலையில் அதிகரித்துள்ளது; இவை இந்தியப் பொருளாதார அமைப்பின் நிலையான தன்மையைக் காட்டுகின்றன எனலாம்.

1857—1900 ஆண்டுகளில் இந்தியாவின் வாணிகநிலை தொடர்ந்து சாதகமாக இருந்தது எனலாம். இந்தியாவின் ஏற்றுமதி நிகர அளவில் உபரியாக இருந்தபோதிலும் அதன் விளைவாக எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. ஏற்றுமதி உபரியால் ஈட்டிய வருமானம் இந்தியாவின் தோன்றா இறக்குமதி இனங்களுக்காகவும், வெளிநாட்டினருக்குச் செலுத்தவேண்டிய வட்டித் தொகைக்காகவும் பயன்படுத்தப்பட்டன.

சென்ற நூற்றாண்டில் கைவினைத்தொழில்கள் நசுக்கப்பட்டன என்றும், அதன்பின் அதிகக் காலதாமதத்துடன் பேரளவுத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன என்றும் கூறலாம். கைவினைத் தொழில்களின் நலிவை ஈடுசெய்யும் வகையில் பேரளவுத்தொழில்களின் வளர்ச்சி அமையவில்லை என்றாலும், அதன் விளைவாக இந்தியாவின் ஏற்றுமதியில் செய்பொருள்களின் விழுக்காடு உயர்ந்தும், இறக்குமதியில் இவற்றின் விழுக்காடு குறைந்தும் சென்றன. *1879*-ல் மொத்த இறக்குமதியில் செய்பொருள்களின் (manufactured goods) விழுக்காடு 65% ஆக இருந்தது; இது *1892*-ல் 57% ஆகவும், *1907*-ல் 53% ஆகவும் குறைந்துசென்றது. இப்பொருள்களின் ஏற்றுமதி விழுக்காடு இதே ஆண்டுகளில் 8% ஆகவும், 16% ஆகவும், 22% ஆகவும் படிப்படியாக உயர்ந்து சென்றது.[3]

[3] முன்கூறியபடி பக். 446.

இரண்டாவது கட்டம் (1900—1914)

இருபதாவது நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து முதலாவது உலகப்போர் ஆரம்பம்வரை உள்ள ஆண்டுகளில் இந்தியாவில் பொதுவாகப் பூரிப்பான நிலைமை காணப்பட்டது. வெளிநாட்டு வாணிகமும் அதுவரை கண்டிராத அளவிற்குப் பல்கிப் பெருகியது. இக் காலத்தில் உலகநாடுகள் அனைத்திலும் காணப்பட்ட பூரிப்பான பொருளாதார நடவடிக்கைகளும், இந்தியாவில் பருவ மழை தொடர்ந்து சாதகமாக இருந்ததும், இந்திய ரூபாயின் மதிப்பு ஸ்டர்லிங் அடிப்படையில் நிலைபேறுடன் இருந்ததும் முக்கியக் காரணங்கள் ஆகும். 1907–ல் இந்தியாவில் மழை சரிவரப் பெய்யவில்லை என்றாலும், உலகில் பின்னிறக்கத்திற்கான (Recession) அறிகுறிகள் காணப்பட்டன என்றாலும், இவற்றால் இந்தியாவின் வெளிநாட்டு வாணிகம் அதிக அளவிற்குப் பாதிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டவேண்டும். இவை யாவும் நீண்டகால அளவில் இந்தியப் பொருளாதார அமைப்பின் ஈடுகொடுக்கும் தன்மையையும், வலிமையையும் எடுத்துக்காட்டுகின்றன. எதிர்பாராத விதமாக ஏற்படும் அதிர்ச்சிகளைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இந்தியப் பொருளாதார அமைப்பிற்கு உண்டு என்பதை இது நிரூபித்துக் காட்டுகிறது.[4]

இக் காலத்தில் தோன்றிய பல முக்கிய மாறுதல்களையும் இந்தியாவின் வெளிநாட்டு வாணிகம் எடுத்துக்காட்டுகிறது. இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்து இருப்பதால் உணவுப் பொருள்களைவிட வர்த்தகப் பயிர்கள் பெருமளவுக்குப் பயிரிடப்பட்டன; இதனால் இந்தியாவின் உணவுத் தானிய உற்பத்தி இறுதி நிலையில் கிடைப்பருமையாக இருந்தது. இந்தியாவின் இறக்குமதி வாணிகம் உயர்ந்துசென்றதால் பேரளவு ஆலைத்தொழில்களின் வளர்ச்சி தடைப்பட்டது. இருந்தபோதிலும் சுதேசி இயக்கத்தின் தூண்டுதலால் பாங்குகள், பேரளவுத் தொழில்கள் முதலியன நிறுவப்பட்டன. இதன் விளைவாக மொத்த இறக்குமதியில் செய் பொருள்களின் விழுக்காடு தொடர்ந்து வீழ்ச்சி அடைந்தது; இந்தியாவின் ஏற்றுமதியில் நூல், துணி, பூர்த்தியான சணல் பொருள்கள் முதலியன அதிகரித்துச் சென்றன. வாணிகப் பொருள்களின் தராதர விழுக்காட்டில் ஏற்பட்ட மாற்றத்தைவிட இந்தியாவுடன் வாணிகத் தொடர்புடைய நாடுகளின் தராதர முக்கியத்துவம் மாற்றம் அடைந்தது குறிப்பிடத்தக்கது. இதை வாணிகத் திசைமாற்றம் (Change in the direction of Trade)

[4] R. L. Varshney: India's Foreign Trade, Kitab Mahal, 1954, pp. 10-11.

அட்டவணை—23-1

1900-14 இந்தியாவின் இறக்குமதி ஏற்றுமதி விவரங்கள் (கோடி ரூபாயில்)

ஆண்டுகள்	பதிவாகிய மதிப்பு (நடப்புவிலை) இறக்குமதி	பதிவாகிய மதிப்பு (நடப்புவிலை) ஏற்றுமதி	1900-01 விலையில் (சரிசெய்யப்பட்டது) இறக்குமதி திருத்த விலையில்	1900-01 விலையில் (சரிசெய்யப்பட்டது) ஏற்றுமதி திருத்த விலையில்
1900-01	(ஐந்தாண்டுச் சராசரி)		76·27	104·16
-02			81·52	129·56
-03	84·68	124·94	87·95	138·13
-04			92·53	180·14
1904-05	104·41	157·72	99·80	183·78
1905-06	112·11	161·84	103·08	169·10
1906-07	117·29	177·03	99·02	154·40
1907-08	136·65	177·48	107·50	148·45
1908-09	128·79	153·14	121·26	123·06
1909-10	122·65	187·98	113·51	172·01
1910-11	133·70	209·96	113·92	200·76
1911-12	144·05	227·99	117·72	202·24
1912-13	166·63	246·22	132·10	206·39
1913-14	191·31	249·01	150·35	116·62

Source:- 1. 'Review of Trade of India' and
2. Parimal Ray — India's Foreign Trade since 1870. (London, 1934): Quoted by R. L. Varshney-Foreign Trade, Ch. 19. p. 447

என்று வழங்குவார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளைவிட ஏனைய நாடுகளுடன் இந்தியா அதிக அளவு வாணிகம் செய்தது. இந்திய அங்காடியில் அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளுடன் அதிக அளவிற்கு பிரிட்டன் போட்டியிட வேண்டியிருந்தது. 1866-70-ல் இந்தியாவின் ஏற்றுமதியில் 53% ஆக இருந்த பிரிட்டனின் பங்கு 1909-13-ல் 26% ஆக வீழ்ந்தது; இந்தியாவின் இறக்குமதியில் 1900-14 ஆண்டுகளில் பிரிட்டனின் பங்கு 69%லிருந்து 64% ஆக வீழ்ச்சி அடைந்தது. இதே ஆண்டுகளில் ஜெர்மனியின் பங்கு (இறக்குமதியில்) 2.4%-லிருந்து 6.9% ஆக உயர்ந்தது.

மூன்றாவது கட்டம் (1914—19)

முதலாவது உலகப்போர் : முதல் உலகப்போரினுல் ஆரம்பத்தில் இந்தியாவின் வாணிகம் பாதிக்கப்பட்டது. பகை நாடுகளுடன் வாணிகத் தொடர்பு துண்டிக்கப்பட்டதை ஈடு செய்யும் அளவிற்கு நேசநாடுகளுடன், முக்கியமாக பிரிட்டன், மற்றும் ஏகாதிபத்திய நாடுகளுடன் வாணிகம் பெருகியது. ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களின் விலை பன்மடங்கு உயர்ந்துசென்றதால் பதிவாகிய வாணிகப் பொருள்களின் மதிப்புத் தொடர்ந்து அதிகரித்துள்ளது (பார்க்கவும் அட்டவணை 23·2) இருந்தபோதிலும் வாணிகப் பொருள்களின் அளவு அதிகரித்தது என்று கூறமுடியாது. 1914—15-ல் இறக்குமதி, ஏற்றுமதி அளவுகள் குறைந்தன. 1915—17-ல் ஏற்றுமதி அளவு (1914—15 ஐவிட) அதிகரித்தது. ஆனால், இறக்குமதி அளவு வீழ்ச்சி அடைந்தது. அதன் பின்னர் 1919 வரை இறக்குமதி அளவும், ஏற்றுமதி அளவும் குறைந்து சென்றன.[5]

இந்தியாவின் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் மிகவும் அதிவேகமாக உயர்ந்துசென்றன. அந்த அளவிற்கு ஏற்றுமதி விலை உயரவில்லை. அதனுல் வாணிக மாற்று விகிதம் (Terms of trade) பாதகம் அடைந்தது. இந்தியாவுடன் நெருங்கிய வாணிகத் தொடர்புடைய நாடுகள் தீவிரமாகப் போரில் ஈடுபட்டு இருந்தன. சரக்குகளை ஏற்றிச்செல்லும் கப்பல்கள் கிடைப்பருமையாக இருந்தன. எதிரியாக உள்ள நாடுகளைத் தவிர நடுநிலை நாடுகளுடன் வாணிகம் செய்வதும் பாதுகாப்பாக இல்லை. கப்பல் முற்றுகை, எதிரிக்கப்பல்களைப் பொதுவான மூன்றும் நாட்டின் கடற்கரையில் பறிமுதல் செய்தல் போன்ற போர் நடவடிக்கைகளுடன் நீர்மூழ்கிக் கப்பலின் தாக்குதல் முதலியன வெளிநாட்டு வாணிகத்தைப் பெருமளவுக்குப் பாதித்தன. இது போன்ற தடைகள் உலகநாடுகள் அனைத்திற்கும் இருந்தன என்றுலும், இந்தியா போன்ற நாடுகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டன. அமெரிக்கா, கானடா, ஜப்பான், அர்ஜென்டைனு போன்ற நாடுகள் பூரிப்பான வாணிகத்தின் காரணமாக அதிக இலாபம் அடைந்தன.

போரில் ஈடுபட்ட பிரிட்டனுக்கும், நேசநாடுகளுக்கும் வெடி மருந்துகள், துப்பாக்கித் தோட்டாக்கள், குண்டுகள் முதலியன தேவைப்பட்டன. இந்தியா தொழில்துறையில் வளர்ச்சி அடை

5 Vera Anstey, op. cit., p. 335.

அட்டவணை—23 – 2

1913 – 19 இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி விவரங்கள் (கோடி ரூபாயில்)

ஆண்டுகள்	பதிவாகிய மதிப்பு		1913–14 விலையில் திருத்தப்பட்டது		வாணிப நிலை
	இறக்குமதி	ஏற்றுமதி	ஏற்றுமதி மதிப்பு	இறக்குமதி மதிப்பு	
போருக்கு முன்பு சராசரி	151·67	224·23	—	—	72·56
1913–14	191·31	249·01	244·20	183·25	58·70
1914–15	144·93	182·17	194·85	137·23	37·24
1915–16	138·17	199·48	186·95	104·75	61·31
1916–17	160·25	247·36	202·65	88·02	87·11
1917–18	164·35	244·90	186·75	71·28	80·55
1918–19	170·26	256·57	159·55	63·07	86·31
போர்க்காலச் சராசரி	155·60	226·10	186·15	92·87	71·50

Source : 'Review of Trade of India,' Ray. P. op. cit., p. 91. Quoted by R. L. Varshney, p. 449.

யாத காரணத்தால் இவற்றை அதிக அளவுக்கு ஏற்றுமதி செய்ய முடியவில்லை. இவற்றைத் தயாரிப்பதற்கு வேண்டிய சாதனங்கள், நுட்பத் தேர்ச்சி பெற்றவர்கள் கிடைப்பருமையாக இருந்ததே முக்கியத் தடையாகும். இருந்தபோதிலும் இக் காலத்தில் ஏற்றுமதியில் செய்பொருள்களின் விழுக்காடு 23.6%-லிருந்து 32.1% ஆக உயர்ந்தது; இறக்குமதியில் இப் பொருள்களின் விழுக்காடு 76.6%-லிருந்து 73.4% ஆகக் குறைந்தது.

போரின் காரணமாக இந்தியாவின் வெளிநாட்டு வாணிகத்தில் திசைமாற்றம் ஏற்பட்டது. இந்திய ஏற்றுமதியில் பிரிட்டன், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள் ஆகியவற்றின் பங்கு 1914–19 ஆண்டுகளில் 24%, 41%–லிருந்து முறையே 28%, 52% ஆக உயர்ந்து சென்றது. போருக்கு முன்னர் ஏற்றுமதி வாணிகத்தில் 10% ஆக

இருந்த ஜெர்மனியின் பங்கு போரினால் முற்றிலும் துண்டிக்கப் பட்டது. இதனால் இந்திய விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இதை ஓரளவிற்கு அமெரிக்காவும், ஜப்பானும் ஈடுசெய்தன. இந்தியாவின் இறக்குமதியில் பிரிட்டனின் பங்கு இக் காலத்தில் 64%-லிருந்து 46% ஆக வீழ்ச்சி அடைந்தது. அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பங்கு (இந்தியாவின் இறக்குமதியில்) 1914-ல் 2.6% ஆக (தனித்தனியே) இருந்தது; 1919-ல் ஜப்பானின் பங்கு 20% ஆகவும், அமெரிக்காவின் பங்கு 10% ஆகவும் உயர்ந்தது. அமெரிக்கா உலோகத்தினால் தயாரிக்கப்பட்ட பொருள்களையும், ஜப்பான் அதிக அளவிற்குத் துணியையும் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தன.

நான்காவது கட்டம் (1919—1929)

முதல் உலகப்போருக்குப் பின்னர் உள்ள ஆண்டுகளை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். முதலில் உடனடியாக ஏற்றுமதி வாணிகம் அதிகரித்தது; அப்போது உலகஉற்பத்தியும் தொடர்ந்து அதிகரித்தது. அதன் பின்னர் உலக வாணிகத்தில் ஓரளவு சுணக்கம் ஏற்பட்டது. தேசியப் பொருளாதாரக் கருத்தின் ஆதிக்கத்தால் பன்னாட்டு வாணிகம் பாதிக்கப்பட்டது. 1925-க்குப் பின்னர் மீண்டும் வாணிகம் வளர்ச்சி அடைந்தது.

போர்க்காலத் தடைகள் அகற்றப்பட்டதாலும், உலக நாடு களிடையே கச்சாப்பொருள்களின் தேவை அதிகரித்ததாலும் இந்தியாவின் ஏற்றுமதி 1919—20-ல் வெகுவாக அதிகரித்தது; ஏற்றுமதியின் பூரிப்பான வளர்ச்சியைத் தொடர்ந்து இறக்குமதி அதிகரிக்கலாயிற்று. பல ஆண்டுகளாகப் பூர்த்திசெய்யப்படா மல் இருந்த இறக்குமதித் தேவையை நிறைவேற்ற விரும்பிய தாலும், இந்திய ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பை உயர்விகி தத்தில் நிர்ணயித்ததாலும், இந்தியாவின் மரபான ஏற்றுமதிப் பொருள்களுக்கான அங்காடி சுருங்கியது. இந்தியாவின் இறக்கு மதி நிகர அளவில் அதிகரித்தது. இதனால் இந்தியாவின் வாணிக நிலை பாதகம் அடைந்தது. 1920—22 வரை இந்த நிலை காணப் பட்டது.

1922—23-லிருந்து இந்தியாவின் வாணிகம் மறுபடியும் வளர லாயிற்று. ஐரோப்பிய நாடுகளுடன் மீண்டும் வாணிகம் ஏற் பட்டது. இந்தியாவின் ஏற்றுமதியில் 57%-ம் இறக்குமதியில் 78%-ம் ஐரோப்பிய நாடுகளின் பங்காக இருந்தன.[6] பிரிட்ட

6 இப் பகுதியில் கூறப்பட்ட புள்ளிவிவரங்கள் யாவும் R. L. Varshney—Article on Foreign Trade—Printed in Economic History of India, 1857—1956. (Ed.) V. B. Singh என்ற அத்தியாயத்திலிருந்து எடுக்கப்பட்டன.

வில் மீண்டும் பொன்திட்டம் ஏற்கப்பட்டதும் இறக்குமதிப் பொருள்களின் விலை வீழ்ச்சி அடைந்ததும் இந்தியாவின் வாணி கத்தை நிலையான அடிப்படையில் வளர உதவி செய்தன. இந்தியாவில் 1923-க்குப் பின்னர்த் தொடர்ந்து சாதகமான பருவ மழை பெய்ததாலும், இந்திய ரூபாயின் மதிப்பு 1 ஷி. 6 பெ. என்ற உயர்மட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டதாலும், தெரிவுக் காப்புக் கொள்கையின் பயனாக உயர்விகித இறக்குமதித் தீர்வை விதிக்கப்பட்டதாலும், சுதேசி இயக்கம் தீவிரமடைந்ததாலும், இந்தியப் பொருள்களை இயன்றவரை வாங்குவதன்மூலம் இந்தியத் தொழில்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்ற அரசின் கொள்கையாலும் இந்தியாவின் இறக்குமதி இந்த ஆண்டுகளில் மிகக் குறைந்த விகிதத்தில் மட்டுமே அதிகரித்தது. ஆனால், இந்தியாவின் ஏற்றுமதி வாணிகம் வெகு விரைவாக உயர்ந்து சென்றது. ஏற்றுமதிப் பொருள்களின் அளவு அதிகரித்தபோதிலும் 1924—25-க்குப் பின் விவசாயப் பொருள்களின் விலை உலக அங்காடியில் ஒப்புமையாக வீழ்ச்சி அடைந்த காரணத்தால், இந்தியாவின் வாணிக மாற்றுவிகிதம் பொதுவாகப் பாதகம் அடைந்தது.

ஐந்தாவது கட்டம் (1929—39)

உலகமந்தம் காரணமாக இந்தியாவின் வாணிகம் அதிக அளவிற்குக் குறைந்தது. காட்டாக, 1932-33 ஆம் ஆண்டில் நடைபெற்ற வாணிகத்தின் மதிப்பு 1929—30-ல் உள்ள அளவில் 50%-க்கும் குறைவாக இருந்தது. செய்பொருள்களின் விலையை விட வேளாண்பொருள்களின் விலை அதிவேகமாக வீழ்ச்சி அடைந்தது. எனவே, இந்தியர்களின் வாங்கும் சக்தி, பாதக வாணிக மாற்றுவிகிதத்தின் காரணமாகப் பெரிதும் குறைந்தது. உலக மந்தத்தின் கொடிய விளைவுகளால் தொழில்வளர்ச்சி அடைந்த நாடுகள் பாதிக்கப்பட்டன. எனவே, கச்சாப்பொருள்கள், மலைத் தோட்டப் பயிர்ப் பொருள்கள் முதலியவற்றின் தேவை வெளி நாடுகளில் சுருக்கம் அடைந்தது. பாதக வாணிக விகிதத்தால் அனைத்து வேளாண் நாடுகளும் பாதிக்கப்பட்டன. வேளாண் நாடான இந்தியாவின் வாணிக நிலையும், வாணிக மாற்றுவிகிதமும் உலகமந்தத்தால் எவ்வாறு பாதிக்கப்பட்டன என்பதைப் பின்வரும் அட்டவணைகள் (23-3, 23-4) தெளிவுபடுத்தும்.

உலகமந்தத்தின் காரணமாக, (இறக்குமதியிலும் ஏற்றுமதியிலும்) வாணிகப்பொருள்களின் விலையும், அளவும் இக் காலத்தில் வீழ்ச்சியடைந்தன. ஆனால், இந்தியா ஏற்றுமதி செய்த பொருள்களின் அளவைவிட இந்தியா இறக்குமதி செய்த

அட்டவணை—23-3

இறக்குமதி, ஏற்றுமதி அளவுகள் (1927-39)
(1927-28 = 100)

ஆண்டுகள்	அளவுகள்		விலைமட்டம்		வாணிக மாற்று விகிதக் குறியீட்டு எண்
	ஏற்றுமதி	இறக்குமதி	ஏற்றுமதி	இறக்குமதி	
1927–28	100·0	100·0	100·0	100·0	100·0
1928–29	106·1	105·2	97·5	96·4	101·1
1929–30	108·0	103·4	90·2	93·2	96·8
1930–31	97·6	82·5	71·5	80·0	89·4
1931–32	82·5	70·6	59·2	71·7	82·6
1932–33	74·9	81·4	55·3	65·2	84·8
1933–34	86·2	72·7	53·5	63·5	84·3
1934–35	87·8	84·1	54·1	63·0	85·9
1935–36	88·4	86·1	56·9	62·1	91·6
1936–37 *	109·9	86·1	57·2	62·8	91·1
1937–38 *	103·1	95·7	—	—	—
1938–39 *	102·2	88·7	—	—	—

*பர்மா நீங்கலாக

Quoted from R. L. Varshney, op. cit., p. 455.

பொருள்களின் அளவு (1932—33 நீங்கலாக) அதிகமாகக் குறைந்துள்ளது. இருந்தபோதிலும் இந்தியா ஒரு விவசாய நாடாக இருந்ததாலும், விவசாயப் பொருள்களின் விலை இக் காலத்தில் மிகவும் அதிக அளவுக்கு (ஒப்புமையாக) வீழ்ச்சி அடைந்ததாலும் இந்தியா ஏற்றுமதி செய்த பொருள்களின் விலை, இறக்குமதி செய்த பொருள்களின் விலையைவிட அதிகமாகக் குறைந்து இருப்பதைக் காணலாம் (பார்க்கவும் அட்டவணை 23-3). இந்தியா ஏற்றுமதி

அட்டவணை — 23-4

மந்தத்திற்கு முன்னும், பின்னும் இந்தியாவின் வாணிக நிலை

(ரூபாய் கோடியில்)

ஆண்டுகள்	இறக்குமதி	ஏற்றுமதி	மொத்தம்	வாணிக நிலை
1914–15 முதல் 1918–19	159·25	225·83	385·08	+66·58
1919–20 முதல் 1923–24	267·05	306·38	573·43	+39·33
1924–25 முதல் 1928–29	251·02	353·51	604·53	+102·49
1929–30	249·71	318·99	568·70	+69·28
1930–31	173·06	226·50	399·56	+53·44
1931–32	130·64	161·20	291·84	+30·56
1932–33	135·01	136·07	271·08	+ 1·06
1933–34	117·28	150·23	267·51	+32·95
1934–35	134·59	155·50	290·09	+20·91
1935–36	136·78	164·59	301·37	+27·81
1936–37	127·72	202·49	330·21	+74·67
1936–37 *	141·10	192·29	333·39	+51·19
1937–38 *	173·33	189·21	362·54	+15·88
1938–39 *	151·83	169·21	321·04	+17·38

Source : Quoted by R. L. Varshney, op. cit., p. 454.

*பர்மா நீங்கலாக

செய்த பொருள்களின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியைவிட, அவற்றின் விலையில் அதிக வீழ்ச்சி ஏற்பட்டதாலும், இறக்குமதிப் பொருள்களின் அளவு பெருமளவுக்குக் குறைந்துசென்ற போதிலும், இறக்குமதிப் பொருள்களின் விலை அந்த அளவுக்கு வீழ்ச்சியுறாமையால் வாணிகமாற்று விகிதம் இவ்வாண்டுகளில் இந்தியாவிற்குப் பாதகமாகவும், இதரத் தொழில் வளர்ச்சியுற்ற

நாடுகளுக்குச் சாதகமாகவும் மாறியது. இங்ஙனம் பாதகம் அடைந்த வாணிக நிலையை ஈடு செய்யும் வகையில் 1931-லிருந்து 1939 டிசம்பர் முடியச் சுமார் ரூ. 351.40 கோடி மதிப்புள்ள பொன் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

நாளடைவில் மந்தத்தின் தீவிரத்தன்மை படிப்படியாகக் குறைந்துசென்றது. 1934-லிருந்து விவசாயப் பொருள்களின் விலையும் உயரலாயிற்று. உலகநாடுகள் ஒவ்வொன்றாக மந்தத்தின் பிடிப்பிலிருந்து விடுபட்டன. இதைத் தொடர்ந்து இந்தியாவின் வாணிகமும் உயர்ந்துசென்றது. 1932-33-ல் ரூ.136/- கோடியாக இருந்த இந்தியாவின் ஏற்றுமதி 1936-37-ல் (பர்மா உள்பட) ரூ. 202- கோடியாக உயர்ந்துசென்றது. உலகநாடுகள் யாவும் ஜெர்மனியின் போர் ஆயத்த நடவடிக்கைகளால் உந்தப்பட்டுப் போர் முக்கியத்துவம் உள்ள பொருள்களை வாங்கிக் குவித்தன. உலகு எங்கிலும் அத்தியாவசியமான மூலப்பொருள்களின் கிடைப்பருமையால் விலைமட்டும் பொதுவாக மேல் நோக்கி உயர்ந்துசென்றது. இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்த அளவிற்கு இறக்குமதி உயராமையால் 1936-37-ல் நிகர ஏற்றுமதி உபரித்தொகை ரூ. 75 கோடியாக இருந்தது. இவ்வாறு மந்தத்திற்குப் பின்னர் இந்தியாவின் வாணிகம் ஓரளவு சீர்பட்டது என்றாலும், அதற்கு முன்பு உள்ள மட்டத்தைவிடக் குறைவாகவே இருந்தது.

இரு உலகப்போருக்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இந்தியாவின் வாணிகப் பொருள்களில் குறிப்பிடத்தக்க சில போக்குகளை இங்கே காண்போம். இறக்குமதியில் கச்சாப்பொருள்களின் விழுக்காடும், இயந்திர சாதனங்களின் விழுக்காடும் தொடர்ந்து அதிகரித்துள்ளன (பார்க்க அட்டவணை 23-5).

1925-26-ல் இவற்றின் விழுக்காடு (மொத்த இறக்குமதி மதிப்பில்) 38.8% ஆக இருந்தது. 1938-39-ல் இந்த விகிதம் 54.3% ஆக உயர்ந்தது. அதே சமயம் இந்த ஆண்டுகளில் நுகர்வுப் பொருள்களின் இறக்குமதி விகிதம் 54%-லிருந்து 33% ஆகக் குறைந்தது. உள்நாட்டில் நுகர்வுப் பொருள்களை உற்பத்திசெய்யும் ஆலைத் தொழில்களின் வளர்ச்சியை இவை மறைமுகமாக எடுத்துரைக்கின்றன.

இந்தியச் செய்பொருள்களின் ஏற்றுமதியில் படிப்படியாக முன்னேற்றம் காணப்பட்டது. சணல், எண்ணெய்வித்துகள், உரிவை, தோல், நூல் முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

அட்டவணை—23-5

1920–40 வாணிகப் பொருள்கள்

(சதவீதத்தில்)

ஆண்டுகள்	இறக்குமதி			ஏற்றுமதி		
	உணவு, பான வகை, புகையிலை	கச்சாப் பொருள்	செய் பொருள்	உணவு, பான வகை, புகையிலை	கச்சாப் பொருள்	செய் பொருள்
1920-25	14·1	7·4	76·7	24·0	50·2	24·8
1925-30	16·1	9·3	72·6	23·0	49·5	26·6
1930-35	13·1	14·4	70·3	26·4	45·6	26·9
1935-40	14·0	19·8	64·4	21·8	46·7	30·0

Source : Fiscal Commission Report, 1949-50.
Quoted by R. L. Varshney, p. 457.

வாணிகத்திசை

இந்தியா வாணிகத் தொடர்புகொண்ட நாடுகளின் முக்கியத்துவம் காலப்போக்கில் படிப்படியாக மாறுதல் அடைந்தது. இந்தியாவின் இறக்குமதியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளின் முக்கியத்துவம் குறைந்துசென்றது. முதல் உலகப்போருக்குப் பின்னர் இந்த நாடுகளின் முக்கியத்துவம் 70% ஆக இருந்தது. உலகப்போருக்குப் பின்னர் இந்த விகிதம் 65% ஆகவும் உலகமந்தத்திற்கு முன்னர் 54% ஆகவும், உலக மந்தத்தின் போது 45% ஆகவும் வீழ்ச்சிஅடைந்தது. இந்தியாவின் இறக்குமதியில் பிரிட்டனின் பங்கு அதிவேகமாக வீழ்ந்தது. *1913-14*-ல் 63% ஆக இருந்த இந்த விழுக்காடு *1923-24*-ல் 58% ஆகவும், *1928-29*-ல் 45% ஆகவும், *1931-32*-ல் 36% ஆகவும் வீழ்ந்தது (அட்டவணை 23-6, 23-7). உலகமந்தத்தின் காரணமாக இந்திய அங்காடியில் பல நாடுகளும் தீவிரமாகப் போட்டியிட்டன. இதனால் பிரிட்டன் பிரிட்டிஷ், ஏகாதிபத்தியத்தின்கீழ் உள்ள நாடுகள் ஆகியவற்றின் வாணிக முக்கியத்துவம் குறைந்துசென்றது. அதேசமயம் ஏனைய நாடுகளின் வாணிக அளவும், வாணிக மதிப்பும் தராதரமாக உயர்ந்துசென்றன. இந்தப் போக்கை ஓரளவிற்குக்

அட்டவணை—23–6

1913-14-ல் இந்தியாவின் வாணிக நிலை

(கோடி ரூபாயில்)

நாடுகள்	இறக்குமதி	ஏற்றுமதி	வாணிக நிலை
பிரிட்டன் (U.K.)	117	58	—59
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் உள்ள இதர நாடுகள்	11	36	+25
மொத்தம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள்	128	94	—34
ஐரோப்பா	30	85	+55
அமெரிக்கா	5	22	+17
ஜப்பான்	5	23	+18
இதர நாடுகள்	15	25	+10
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் புறம்பாக உள்ள அனைத்து நாடுகளும்	55	155	+100

Source : B. N. Ganguli, Reconstruction of India's Foreign Trade. Quoted by R. L. Varshney- முன்கூறியபடி p. 448.

கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு ஏகாதிபத்தியச் சலுகைகள் வழங்கவேண்டும் என்ற ஒப்பந்தம் 1932-ல் ஆட்டாவாவில் செய்து கொள்ளப்பட்டது. அதன் பயனைக் குறுகிய கால அளவில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ள போதிலும் நீண்டகால ரீதியில் இந்தியாவின் வெளிநாட்டு வாணிகத்திசையில் குறிப்பிடத்தக்க அளவிற்கு எவ்வித மாற்றத்தையும் தோற்றுவிக்க முடியவில்லை. பிரிட்டனிலிருந்து இந்தியா இறக்குமதி செய்யும் பொருள்களின் விகிதம் இந்த ஒப்பந்தத்தால் மாறுதல் அடையவில்லை. என்றாலும், ஏகாதிபத்திய நாடுகளின் பங்கு 1931-32-ல் 45% -லிருந்து (1938-39-ல்) 58% ஆக உயர இதுவே முக்கியக் காரணமாக இருந்தது எனலாம். இறக்குமதி வாணிகத்தில் ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறையவில்லை.

அட்டவணை—23.7

இந்தியாவுடன் வாணிபத் தொடர்புடைய நாடுகள் (சதவீதத்தில்)

நாடுகள்	1901–10 முதல் 1913–14 வரை சராசரி போருக்குமுன்	1919–20 முதல் 1923–24 வரை சராசரி போர்ப் பின்	1928–29	1931–32	1938–39
இறக்குமதி					
பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள்	69·7	65·2	53·9	44·8	58·1
பிரிட்டன் (U.K.)	62·8	57·6	44·7	35·5	30·5
ஜப்பான்	2·5	6·9	6·9	10·6	10·1
ஜெர்மனி	6·4	2·8	6·2	8·1	8·5
அமெரிக்கா	3·1	8·5	7·0	10·2	6·4
ஏகாதிபத்தியத்திற்குப் புறம்பாக உள்ள இதர நாடுகள்	18·3	16·6	26·0	26·3	16·9
ஏற்றுமதி					
பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள்	41·1	41·4	34·8	44·2	53·6
பிரிட்டன்	25·1	24·2	20·9	27·9	34·3
ஜப்பான்	7·5	13·3	10·4	8·7	8·8
ஜெர்மனி	9·8	4·9	9·7	6·3	5·0
அமெரிக்கா	7·5	12·0	11·8	8·9	8·4
ஏகாதிபத்தியத்திற்குப் புறம்பாக உள்ள இதர நாடுகள்	34·1	28·4	33·1	32·1	24·2

Source : Compiled from Reviews of Trade of India.
Quoted from R. L. Varshney. முன்கூறியபடி p. 459.

இந்தியாவின் ஏற்றுமதி வாணிகத்தில் ஏகாதிபத்திய நாடுளின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்துசென்றது. இந்த விகிதம் முதல் உலகப்போருக்கு முன்னர் 41% ஆக இருந்தது, *1928-29*-ல் 35% ஆக வீழ்ந்தது. அதன் பின்னர் *1938-39*-ல் 54% ஆக உயர்ந்துசென்றது. இந்திய ஏற்றுமதிப் பொருள்கள் முன்பு இருந்ததைவிட பிரிட்டிஷ் அங்காடியை அதிகம் நம்பி இருந்தன. முதல் உலகப்போருக்கு முன்னர், பிரிட்டனின் பங்கு (இந்திய ஏற்றுமதியில்) 25% ஆக இருந்தது. *1938-39*-ல் இவ் விகிதம் 34% ஆக உயர்ந்துசென்றது. ஜப்பானின் விகிதம் *1928-29*-ல் 10%-லிருந்து, *1938-39*-ல் 5% ஆக வீழ்ந்தது. ஜெர்மனியின் விகிதம் 10%-லிருந்து 5% ஆகவும், அமெரிக்காவின் பங்கு 12%-லிருந்து 8% ஆகவும் இதே ஆண்டுகளில் வீழ்ச்சியுற்றன.

அட்டவணை—23-8

1938-39-ல் இந்தியாவின் வாணிக நிலை

(கோடி ரூபாயில்)

நாடுகள்	இறக்குமதி	ஏற்றுமதி	வாணிக நிலை
பிரிட்டன்	46	58	+12
பிரிட்டிஷ் ஏகாதியத்தியத்தில் உள்ள இதர நாடுகள்	42	32	—10
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முழுவதும்	89	90	+1
ஐரோப்பா	28	32	+3
அமெரிக்கா	10	14	+4
ஜப்பான்	15	15	—
பிற நாடுகள்	10	18	+8
ஏகாதிபத்தியத்திற்குப் புறம்பாக உள்ள அனைத்து நாடுகளின் மொத்தம்	63	79	+16
ஆகமொத்தம்	152	169	+17

Quoted from R. L. Varshney. முன் கூறியபடி பக். 460.

ஏகாதிபத்திய நாடுகளுடன் இந்தியாவின் வாணிகச் செலுத்தல் நிலையைக் கருதுவோமாளுல் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அறியலாம். முதல் உலகப்போருக்கு முன்னர் இந்தியாவின் வாணிகநிலை பாதகமான நிலையிலிருந்தது; 1938-39-ல் இது இறுதிநிலையில் சமன் அடைந்தது. ஏனைய நாடுகளுடன் செய்த வாணிகத்தால் இந்தியா நிகர ஏற்றுமதி உபரியுடன் விளங்கியது. ஆனால், 1938-39-ல் இந்த ஏற்றுமதி உபரி பெரிதும் குறைக்கப்பட்டது. இதற்கு ஏகாதிபத்தியச் சலுகைகள் காரணமாக இருந்தன என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

ஆறுவது கட்டம் (1939—45)

இரண்டாவது உலகப்போர் : இரண்டாவது உலகப்போரினல் இந்தியாவின் வாணிகம் எந்த அளவிற்கு மாற்றம் அடைந்துள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகிறது. 1938-39-ல் ரூ. 169 கோடியாக இருந்த ஏற்றுமதி 1939-40-ல் ரூ. 214 கோடியாக அதிகரித்தது. போர் தொடங்கிய ஓராண்டில் 26% ஏற்றுமதி பெருகியது. ஏற்றுமதிப் பொருளின் அளவு 4.5%-மும், விலை 20%-மும் உயர்ந்து சென்றன. ஐரோப்பிய நாடுகளில் சண்டை பரவியதாலும் கப்பல் வசதிகள் கிடைக்காமையாலும் ஏற்றுமதி வாணிகம் 1940-41-ல் ரூ. 199 கோடியாகக் குறைந்தது. ஏற்றுமதி அளவு குறைந்ததை ஈடுசெய்யும் அளவிற்கு ஏற்றுமதிப் பொருள்களின் விலை உயர்ந்துசென்றதால், உண்மையில் எந்த அளவிற்கு ஏற்றுமதி பாதிக்கப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. 1941-42-ல் மீண்டும் இந்தியப் பொருள்களின் ஏற்றுமதி அதிகரித்தது. நேசநாடுகள் அனைத்திற்கும் போர்க்கருவிகள், மிகவும் அவசியமான பொருள்களை அளிக்கும் நாடாக இந்தியா விளங்கியது. முக்கியமாக, ஜப்பான் போரில் ஈடுபட்டதால் கீழ்த்திசைப் போர் அரங்கத்திற்கு அதிகஅளவு பொருள்களை அளிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த ஆண்டில் ஏற்றுமதிப்பொருள்களின் மதிப்பு 22% அதிகரித்தபோதிலும், ஏற்றுமதிப் பொருள்களின் அளவு 6.3% மட்டுமே உயர்ந்துசென்றது. 1942-43-ல் இந்தியாவின் ஏற்றுமதி மீண்டும் குறைந்தது. பர்மாவின் இழப்புடன் கிழக்கிந்திய அங்காடிகள் ஜப்பான்வசம் வந்ததால் இந்தியாவின் ஏற்றுமதி மிகவும் குறைந்தது. ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பு மேலும் வீழ்ச்சி அடைந்தது. போர் முடியும்வரை இந்தப் போக்குத் தொடர்ந்து நீடித்தது.

போர் ஆரம்பித்த முதல் ஆண்டில் இறக்குமதி 8.5% அதிகரித்தது. இறக்குமதி அளவு 2%-மும், இறக்குமதி விலை 6.4%-மும்

அட்டவணை—23-9

வாணிகப் போக்கு—1938-45

தனியார் வாணிகம்

(கோடி ரூபாயில்)

ஆண்டுகள்	பதிவாகிய மதிப்பு		அளவுக் குறியீடுகள்‡ 1938–39 = 100		வாணிக நிலை	விலைக் குறியீடுகள் 1938–39 = 100		வாணிக மாற்று விகிதம்
	இறக்குமதி	ஏற்றுமதி†	இறக்குமதி	ஏற்றுமதி		இறக்குமதி	ஏற்றுமதி	
1938–39	152·37	169·21	100·0	100·0	16·84	100·0	100·0	100·0
1939–40	165·29	213·57	102·0	104·5	48·28	106·4	119·8	112·6
1940–41	156·97	198·70	81·4	88·1	41·73	126·7	130·3	102·8
1941–42	173·14	252·89	74·2	93·7	79·75	153·4	155·9	101·6
1942–43	110·44	194·97	39·7	62·5	84·53	192·8	184·6	95·7
1943–44	117·77	210·84	44·6	54·0	93·07	195·5	227·4	116·3
1944–45	203·57	227·73	80·9	53·3	24·17	188·3	244·3	129·7

†மறு-ஏற்றுமதி உள்பட

‡இந்திய வாணிகப் பொருள்கள் மட்டும்

Quoted from R. L. Varshney, முன் கூறியபடி பக். 461

அதிகரித்தன. இரண்டாவது ஆண்டில் இறக்குமதி ரூ. 157–கோடியாகக் குறைந்தது. இறக்குமதி அளவு 20% குறைந்தது. இறக்குமதி விலைகள் 19% உயர்ந்தன. இறக்குமதிப் பொருள்களின் அளவு தொடர்ந்து குறைந்து சென்றபோதிலும், அவற்றின் விலை தொடர்ந்து உயர்ந்துசென்ற காரணத்தால் இறக்குமதிப் பொருள்களின் மதிப்பு உண்மைநிலையைப் பிரதிபலிக்கும் அளவிற்குக் குறைந்துசெல்லவில்லை. ஐரோப்பிய நாடுகளிடமிருந்து பொருள்களைத் தருவிக்க இயலாமையாலும், அந்த நாடுகள் ஏற்றுமதித் தடைகளை விதித்ததாலும் இந்தியாவின் இறக்குமதி குறைந்தது. ஜப்பான், பர்மா முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி முற்றிலும் நின்றுவிட்டது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற ஆண்டுகளில் இந்தியாவின் இறக்குமதி 34%-மும், ஏற்றுமதி 35%-மும் அதிகரித்தன. இறக்குமதிப் பொருள்களின் அளவு போர் ஆரம்பத்தில் இருந்ததைவிடக் குறைந்துசென்றது. *1943_44*–ல் 40% ஆகவும், *1944_45*–ல் 71% ஆகவும் இருந்தது. ஏற்றுமதி அளவு *1944_45*–ல் 53% ஆக இருந்தது. இறுதி ஆண்டைத்தவிர, போர்நடைபெற்ற ஆண்டுகளில் இறக்குமதி அதிகம் குறைந்திருப்பதைக் காணலாம். ஒருவகைக் கட்டாயமான சூழலில், அரசாங்க நிர்ப்பந்தத்தின் காரணமாக, ஏற்றுமதி அளவு குறையாமல் இருந்தது.

மிகவும் அவசியமான பொருள்களைக்கூட இறக்குமதி செய்ய இயலவில்லை; அரசாங்கத்தின் தூண்டுதல் காரணமாக ஏற்றுமதி வீழ்ச்சியுறாமல் (ஓரளவிற்கு) இருந்தது. இதனால் வாணிகநிலை இந்தியாவிற்குச் சாதகமாக இருந்தது. இறக்குமதி குறைவாக இருப்பதால் மக்களின் முக்கியத் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை *1944—45* நிரூபித்துக்காட்டியது. அந்த ஆண்டில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஓரளவிற்குத் தளர்த்தப்பட்டதால் (இறக்குமதி செய்யும் வாய்ப்புகள் நிலவிய காரணத்தால்), நிகர ஏற்றுமதி உபரி ரூ. 24– கோடியாகக் குறைந்தது (அட்டவணை *23–9*).

உலகப்போர் ஆரம்பித்த முதல் ஆண்டில் வாணிகமாற்று விகிதம் இந்தியாவிற்குச் சாதகமாக இருந்தது. ஆனால், அடுத்துள்ள மூன்று ஆண்டுகளில் இது பாதகமடைந்தது. முக்கியமாக, *1942—43*–ல் அதிகம் பாதகமடைந்தது. அதன்பின்னர் இரண்டு ஆண்டுகளிலும் மீண்டும் சாதகநிலையை அடைந்தது.

போர் நடைபெற்ற காலத்தில் தனியார் வாணிகத்தைவிட அரசின் கணக்கில்தான் அதிக அளவு வாணிகம் நடைபெற்றது.

அரசின் கணக்கில் இந்தியாவில் வாங்கிய பொருள்கள் யாவும் ஏற்றுமதி செய்யப்படவில்லை. பிரிட்டிஷ் துருப்புகளின் பராமரிப்பிற்கான செலவுகள், அமெரிக்க அரசாங்கத்தின் கடன் குத்தகைத் (lend-lease) திட்டத்தின்கீழ் உள்ள ஏற்றுமதி இறக்குமதி முதலியன போரின் தீவிரத்தன்மையால் ஆண்டுதோறும் அதிகரித்தன. ஆனால், இந்த வாணிகப்பேரங்கள் யாவும் இறக்குமதி ஏற்றுமதி ஏடுகளில் பதிவாகவில்லை. இவ்வாறு தனியார் கணக்கிலும், அரசாங்கக் கணக்கிலும் பெருமளவிற்கு ஏற்றுமதி உபரி ஏற்பட்டது. இதன் விளைவாக இந்தியாவின் கணக்கில் பெருமளவிற்கு ஸ்டர்லிங் செலாவணியில் சேமிப்பு இருப்புகள் அதிகரித்தன.

இரண்டாவது உலகப்போரினால் ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்தில் இடம்பெற்ற வாணிகப் பொருள்களின் முக்கியத்துவமும் மாறின. இந்தியாவில் தொழில்வளர்ச்சி ஏற்பட்டுள்ளதை இவை சுட்டிக்காட்டுகின்றன (அட்டவணை 23.10). இந்தியாவின் ஏற்றுமதியில் செய்பொருள்களும், இறக்குமதியில் கச்சாப்பொருள்களும் அதிகரித்துள்ளன; செய்பொருள் இறக்குமதியும், கச்சாப்பொருள் ஏற்றுமதியும் குறைந்துள்ளன. வெளிநாடுகளிலிருந்து செய்பொருள்களை இறக்குமதி செய்யமுடியாத காரணத்தால் அதன் விழுக்காடு குறைந்தது. போர் காரணமாகப் பெட்ரோலிய இறக்குமதி அதிகரித்தது. இதனால் இறக்குமதியான கச்சாப்பொருள்களின் விழுக்காடும் உயர்ந்துசென்றது. போர்க்களத்திற்கு மிகவும் தேவையான செய்பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் செய்பொருள்களின் விழுக்காடும் உயர்ந்துசென்றது. இந்தியாவின் தொழில்வளர்ச்சிக்கு ஓர் ஊக்கச் சக்தியாக இரண்டாவது உலகப்போர் விளங்கியது என்பதில் சந்தேகமில்லை. இத்தொழில்வளர்ச்சிக்காக மக்கள் அதிக அளவிற்கு நலஇழப்பை அடைந்தார்கள். இந்தியா இறக்குமதி செய்த முக்கியப் பொருள்களாவன: எண்ணெய் (பெட்ரோலியப் பொருள்கள்), பஞ்சு, இரசாயனப் பொருள்கள், சாயப்பொருள்கள் முதலியன. நூல், துணி ஆகியவற்றின் இறக்குமதி பெரிதும் குறைக்கப்பட்டது. பஞ்சு ஏற்றுமதி முற்றிலும் நிறுத்தப்பட்டது. கச்சாச் சணல், எண்ணெய்வித்துகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் (ஏற்றுமதியில்) குறைந்தது. இரண்டாவது உலகப்போர்க் காலத்தில் உணவுக் கிடைப்பருமையைச் சமாளிக்கவேண்டி வர்த்தகப் பயிர்கள் சாகுபடி செய்யும் நிலப்பரப்புப் பெரிதும் குன்றக்கப்பட்டதால், பஞ்சு, சணல் ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகம் குறைக்கப்பட்டுள்ளது. துணி ஏற்றுமதியின் முக்கியத்துவம் இக்காலத்தில் அதிகரித்தது

அட்டவணை—23-10

வாணிகப் பொருள்கள் (1938-45)

(கோடி ரூபாயில்)

ஆண்டு கள்	உணவு, பான வகை, புகையிலை		கச்சாப் பொருள்		செய்பொருள்	
	மதிப்பு	%	மதிப்பு	%	மதிப்பு	%
இறக்குமதி						
1938-39	24·00	15·7	33·18	21·7	92·79	60·9
1939-40	35·29	21·4	36·13	21·9	91·81	55·5
1940-41	23·81	15·2	42·10	26·8	89·51	57·0
1941-42	27·84	16·0	50·05	28·8	93·68	54·1
1942-43	7·62	6·9	51·95	47·0	49·52	44·8
1943-44	8·13	6·9	63·94	54·3	45·12	38·3
1944-45	18·85	9·4	117·26	58·3	62·47	31·1
ஏற்றுமதி						
1938-39	39·43	23·3	76·28	45·1	50·72	30·0
1939-40	40·66	19·0	91·53	42·9	79·08	37·0
1940-41	42·39	21·3	68·33	34·4	85·83	43·1
1941-42	60·44	23·9	73·04	28·9	115·08	45·5
1942-43	48·61	25·0	45·21	23·2	98·33	50·5
1943-44	48·14	22·9	53·53	25·5	105·89	50·2
1944-45	49·83	20·9	58·19	25·6	116·27	51·1

Quoted from R. L. Varshney, முன்கூறியபடி பக். 465

உலகப்போரினால் இந்திய வெளிநாட்டு வாணிகத்தின் திசையும் மாறியது; நேசநாடுகள் என்றும், பகைநாடுகள் என்றும் நாடுகள் பிரிக்கப்பட்டன; ஏற்றுமதி அல்லது இறக்குமதிக்கு வேண்டிய கப்பல்கள் கிடைப்பருமையாக இருந்தன. போர் காரணமாக ஏற்றுமதி, இறக்குமதி, அந்நியச் செலாவணி முதலியன அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டன; ஏகாதிபத்திய நாடுகளுடன் இந்தியாவின் வாணிகம் பெருகியது; பிரிட்டனின் பங்கு குறைந்துசென்றது; ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் ஆகியவற்றுடன் வாணிகம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டது; அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, மேற்கு ஆசியநாடுகள் ஆகியவற்றுடன் வாணிகம் பெருகியது.

இரண்டாவது உலகப்போர் ஆரம்பத்திலும் முடிவிலும் உள்ள நிலைமையை ஒப்பிடுவோமானால் இந்தியாவின் ஏற்றுமதியில் ஏகாதிபத்திய நாடுகளின் பங்கு 53·6%-லிருந்து 61·7% ஆக உயர்ந்திருப்பதைக் காணலாம். ஆனால், இந்தியாவின் இறக்குமதியில் ஏகாதிபத்திய நாடுகளின் பங்கு நிலையாக இல்லை. 1938–39-ல் 58·1% ஆக இருந்தது; இவ் விகிதம் 1941–42-ல் 61% ஆக உயர்ந்தது. போர் தொடர்ந்து தீவிரமடைந்த காரணத்தால் இந் நாடுகள் இந்தியாவிற்குச் சரக்குகளை அனுப்பமுடியவில்லை. ஆகையால், 1944-45–ல் இவ் விகிதம் 38.6% ஆக வீழ்ச்சி அடைந்தது. அடுத்தபடியாக, போர்க்காலத்தில் பிரிட்டனுடன் நடைபெற்ற வாணிகத்தைக் கருதுவோம். இந்தியாவின் இறக்குமதியிலும், ஏற்றுமதியிலும் பிரிட்டனின் பங்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. போர் ஆரம்பத்தில் இந்தியாவின் இறக்குமதியில் 30·5% ஆக இருந்த பிரிட்டனின் பங்கு, போர் முடிவில் 19·8% ஆகக் குறைந்தது; இதே ஆண்டுகளில் இந்தியாவின் ஏற்றுமதியில் பிரிட்டனின் பங்கு 34·3%-லிருந்து 27·8% ஆகக் குறைந்தது. போர் நடைபெற்ற காலத்தில் அமெரிக்கா இந்தியா வாணிகம் மூன்றிலிருந்து நான்கு மடங்குகள் வரை அதிகரித்தது. இந்தியாவின் ஏற்றுமதியில் 8·4% ஆக இருந்த அமெரிக்காவின் முக்கியத்துவம் போர் இறுதியில் 21·2% ஆகவும், இறக்குமதியில் 6·4%ல்-லிருந்து 25·7% ஆகவும் உயர்ந்துசென்றது. 1944-45–ல் மிகவும் அதிக அளவுக்கு இந்தியாவிற்குப் பொருள்களை அனுப்பிய நாடுகளில் அமெரிக்கா முதன்மையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிற்குக் கிழக்கிலும், மேற்கிலும் உள்ள அண்டை நாடுகளுடன் நடைபெற்ற வாணிகம் போர்க்காலத்தில் பெருகியது. இந்தியா ஓரளவிற்கு மட்டுமே தொழில்துறையில் வளர்ச்சியடைந்தது என்றாலும், போர்க்காலத்தில் தொழில்வளர்ச்சி அடைந்த நாடுகளின் போட்டி இல்லாமையால் இந்தியாவுடன் எகிப்து, ஈரான், அரே

பியா, ஈராக், கென்யா, ஜான்சிபார், ஆஸ்திரேலியா, இலங்கை ஆகிய நாடுகளில் வாணிகம் வளர்ந்தது. இந்தியாவின் இறக்குமதியில் 1938–39–ல் 12·5% ஆக இருந்த மேற்படி நாடுகளின் பங்கு 1944–45–ல் 45% ஆக உயர்ந்தது. இதே காலத்தில் இறக்குமதியில் இவற்றின் பங்கு 8%–லிருந்து 20% ஆக உயர்ந்தது.

ஏழாவது கட்டம், 1945–51

இந்தியாவின் வாணிகத்தில் பல முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. தன்னுரிமைபெற்ற பாரதம்–பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளாக இந்தியத் துணைக்கண்டம் பிரிக்கப்பட்டது. அதுவரை உள்நாட்டு வாணிகம் என்று கருதப்பட்டது, 1947–க்குப் பின்னர் வெளிநாட்டு வாணிகமாக மாறியது. 1949–ல் பிரிட்டனின் முன் மாதிரியைப் பின்பற்றி ரூபாயின் மதிப்பும் இறக்கம் செய்யப்பட்டது; அந்நியச் செலாவணி கட்டுப்படுத்தப்பட்டது. நெடுங்காலமாக ரூபாயைத் தடையின்றி ஸ்டர்லிங் ஆக மாற்றக்கூடிய வாய்ப்புகள் நீடித்துவந்தன. ஆனால், இந்த உரிமைகள் இக்காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டன. இதே ஆண்டுகளில்தாம் உலக பாங்கும், பன்னாட்டுப் பணநிதியும் நிறுவப்பட்டன. இக் கட்டத்தின் இறுதியில் பாரதத்தில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி ஆரம்பமாகிறது.

உலகப்போர் முடிந்ததும் இந்தியாவின் இறக்குமதியும், ஏற்றுமதியும் அதிகரித்தன என்றாலும், ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகரித்த விகிதம் அதிகமாக இருந்தது. ஏற்றுமதி உபரியாக இருந்த நிலைமை மாறி இறக்குமதி உபரி ஏற்பட்டது. இந்தியாவின் வாணிகநிலை பாதகம் அடைந்தபோதிலும் வாணிகமாற்று விகிதம் இக்காலத்தில் சாதகம் அடைந்தது. இவ் வாண்டுகளில் ஏற்றுமதிப் பொருள்களின் விலை அதிவேகமாக உயர்ந்துசென்றது. இதன் விளைவாக ஏற்றுமதிப் பொருள்கள் மிகவும் குறைவான அளவாக இருந்தபோதிலும், வாணிகநிலைமாற்றங்கள் அதை முழுமையாக வெளிப்படுத்தவில்லை. இவ் வாண்டுகளில் இறக்குமதிப் பொருள்களின் அளவு அதிகமாகவும், ஏற்றுமதிப் பொருள்களின் அளவு குறைவாகவும் அதிகரித்துள்ளன. இதை ஈடுசெய்யும் வகையில் ஏற்றுமதிப் பொருள்களின் விலை ஒப்புமையாக அதிவேகமாக உயர்ந்ததால், நடைமுறையில் பதிவாகிய இறக்குமதி உபரித்தொகை குறைந்து காணப்படுகிறது. போரினால் சீரழிந்த நிறுவனங்களின் உற்பத்தித்திறன் மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தது. போரினால் அதிக அளவுக்குத் தொழில்நிறுவனங்களின் அளவுத்திறன் பாதிக்கப்படவில்லை என்றாலும், ஐரோப்பிய நாடுகளுக்குக் கொடுக்கப்பட்டதைப்போல மார்ஷெல் உதவி பாரதத்

திற்கும், கொடுக்கப்பட்டிருக்குமாஞல் பாதகச் செலுத்தல்நிலை அதிகரிக்காமல் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.[7] பாரதத்தின் தொழில்வளர்ச்சி வேகம் மேலும் அதிகமாக இருந்திருக்கக்கூடும்.

உலகப்போர் நடைபெற்ற காலத்தில் நிறைவேற்றப்படாமல் இருந்த விருப்பங்களைப் பூர்த்திசெய்ய விரும்பிஞர்கள்; பதிலமர்த்த வேண்டிய இயந்திரங்களைப் புதுப்பிக்கக் கருதிஞர்கள்; பாரத - பாகிஸ்தான் பிரிவினையால் பாரதத்திற்குப் பெருமளவு கச்சாப் பொருள்கள் இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது; பாரதத்தின் உணவு உற்பத்தி போதுமனதாக இல்லை. எனவே, உணவு இறக்குமதி அவசியமாக இருந்தது. இக் காரணங்களிஞல் இறக்குமதி வாணிகம் அதிகரித்தது.

உலகப்போருக்குப் பின்னர்த் தாராளமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் கொள்கை சில மாதங்களுக்குப் பின்பற்றப்பட்டது. அதன் பின்னர் இறக்குமதியைக் கட்டுப்படுத்த நினைத்தார்கள். ஆண்டுதோறும் எந்த அளவுக்கு ஸ்டர்லிங் தொகையை பாரத அரசாங்கம் உபயோகிக்கலாம் என்பது குறித்து (இங்கிலாந்து அரசாங்கத்துடன்) ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் நடப்புக்கணக்கில் ஈட்டப்படும் வெளிநாட்டுச் செலாவணியும், பிரிட்டிஷ் அரசாங்கத்தால் ஒப்பந்தப்படி அனுமதிக்கப்பட்ட ஸ்டர்லிங் தொகையும் பாரதத்தின் உயர்ந்த அளவு அந்நியச் செலாவணிச் செலவுத்தொகையை நிர்ணயிக்கவேண்டும் என்று எண்ணினர். எனவே, 1947 ஜூலையில் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது. ஆஞல் இக் கட்டுப்பாடு உடனடியாகக் கைவிடப்பட்டது.

1948 முதல் புதிய அடிப்படையில் இறக்குமதி நிர்ணயிக்கப்பட்டது. வீக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு சாதனமாக இறக்குமதியைக் கருதிஞர்கள். இந்தத் திட்டம் 1949 ஜூன் வரை நீடித்தது. பாரதத்தில் நிலவிய வீக்கமும், இறக்குமதிக் கட்டுப்பாட்டின் நீக்கமும் இறக்குமதியைப் பெருமளவுக்கு அதிகரித்தன. இதே காரணத்திஞல் பாரதத்தின் ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க அளவிற்கு விரிவடையவில்லை.

7 பாரதம் நேசநாடுகளுடன் சேர்ந்து இரண்டாவது உலகப்போரின் போது தன்ஞல் இயன்றவரை ஒத்துழைப்புத் தந்துள்ளது. பேரளவு நல இழப்பின் காரணமாக நிகரஅளவில் ஏற்றுமதியை உயர்த்தியுள்ளது. போர்க்காலத்தில் கடன்-குத்தகைத் திட்டத்தில் இந்தியாவும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இவ்வாறு அனைத்து ஐரோப்பிய நேசநாடுகளைப்போல இந்தியா போர் முயற்சியில் ஈடுபட்டு இருந்தபோதிலும் அதற்குப் பிரதி உபகாரமாகப் போருக்குப் பின்னர் அமெரிக்கா உதவிசெய்யவில்லை. மார்ஷெல் திட்டம் என்று வழங்கப்படும் அமெரிக்காவின் 4 அம்சத் திட்டம் ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமே உதவி அளிக்க வழிசெய்தது.

அட்டவணை—23-11

1945-51 ஆண்டுகளில் பாரதத்தின் வாணிகம்

(கோடி ரூபாயில்)

ஆண்டுகள்	பதிவாகிய மதிப்பு (நடப்பு விலை)		வாணிக நிலை	அளவுக் குறியீடுகள் 1938-39 = 100		விலைக் குறியீடுகள் 1938-39 = 100		வாணிக மாற்று விகிதம்
	இறக்குமதி	ஏற்றுமதி		இறக்குமதி	ஏற்றுமதி	இறக்குமதி	ஏற்றுமதி	
1945—46	292·15	266·39	— 25·76	94·0	61·7	205·0	240·8	117·5
1946—47	330·21	320·34	— 9·86	84·0	64·2	262·2	284·9	108·7
1947—48	445·88	408·24	— 37·64	112·3	79·9	301·5	372·2	123·4
1948—49	642·17	458·72	—183·45	128·9	81·9	355·8	421·4	118·4
1949—50	624·91	506·02	—118·89	133·9	87·7	346·2	435·7	225·9
1950—51	623·36	601·35	— 22·01	114·6	94·5	387·8	482·9	124·5

Quoted from R. L. Varshney. முன்கூறியபடி பக். 468

தாராள இறக்குமதிக் கொள்கையால் பாரத வீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, வீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், ஏற்றுமதி வாணிகத்தை மீண்டும் உயர்த்தவும் முயன்றனர். இத் தருணத்தில் (1949–ல்) பிரிட்டன் தனது செலாவணியை மதிப்பிறக்கம் செய்தது. அதைத் தொடர்ந்து பாரதமும் ரூபாயை மதிப்பிறக்கம் செய்தது. பாகிஸ்தான் இவ்வாறு தனது ரூபாயை மதிப்பிறக்கம் செய்யாமையால், பாரத–பாகிஸ்தான் வாணிகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ரூபாயின் மதிப்பிறக்கம், இறக்குமதியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த உதவியதென்று சொல்லலாம். (அதுகூட வாதிடப்படுகிறது.) ஆனால், பாரதத்தின் ஏற்றுமதியை அதிகரிக்க இது போதுமானதாக இல்லை. 1950 ஜூன் மாதத்தில் பாரத ஏற்றுமதி மீண்டும் சுணக்கம் அடைந்தது. இத் தருணத்தில் கொரியப் போரின் காரணமாக உலகநாடுகள் யாவும் அவசியமான கச்சாப்பொருள்களையும், மூலப்பொருள்களையும் வாங்கிக் குவித்தன. இதன் விளைவாக பாரதத்தின் ஏற்றுமதியும் உயர்ந்துசென்றது.

இக்காலத்தில் இறக்குமதிக் கொள்கை, செலாவணிக் கட்டுப்பாடு முதலியன திட்டவட்டமான அடிப்படையில் நிருவகிக்கப்படவில்லை. நீண்டகாலக் குறிக்கோள் ஏதும் அப்போது உருவாக்கப்படவில்லை என்று தெரிகிறது. தாற்காலிக அடிப்படையிலும், தாராளமாகவும் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டதால் முக்கியத்துவம் இல்லாத பொருள்கள் 1948 ஜூலைக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டன.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியும், பன்னாட்டு வாணிகமும், 1951–71 முதல் திட்டகாலம் (1951–66)

முதல் திட்டகாலத்தில் இறக்குமதி மேலும் தொடர்ந்து அதிகரித்தது. ஐந்தாண்டிற்கான சராசரி இறக்குமதி ரூ. 730 கோடியாகவும், சராசரி ஏற்றுமதி ரூ. 622/– கோடியாகவும், இறக்குமதி உபரி சராசரியாக ரூ. 108 கோடியாகவும் உள்ளது. தொழில் வளர்ச்சிக்கான மூலதனப்பொருள்களின் இறக்குமதியும், உணவு, கச்சாப்பொருள்கள் ஆகியவற்றின் இறக்குமதியும் பெரிதும் அதிகரித்துள்ளமையால் ரூ. 542 கோடிக்கு (5 ஆண்டுகளில்) துண்டு விழுந்தது. இந்த ஆண்டுகளில் உணவுப்பொருள்கள் ரூ. 595 கோடியும், நுகர்பொருள்கள் ரூ. 878 கோடியும் இறக்குமதி செய்யப்பட்டன. ஏற்றுமதிப்பொருள்கள் பெரிதும் மரபானவை. சணல் பொருள்கள், துணி, தேயிலை முதலியன முக்கியமானவை. இம் மூன்றும் மொத்தத்தில 50%–க்கும் மேலாக இருந்தன.

அட்டவணை—23-12

பாரதத்தின் வாணிக நிலை (கோடி ரூபாயில்)

ஆண்டுகள்	இறக்குமதி	ஏற்றுமதி	வாணிக நிலை
1951—52	962·9	730·1	—232·8
1952—53	633·0	601·9	— 31·1
1953—54	591·8	539·7	— 52·1
1954—55	689·7	596·6	— 93·1
1955—56	773·1	640·3	—132·8
1956—57	1102·1	635·2	—466·9
1957—58	1233·2	594·2	—639·0
1958—59	1029·3	576·3	—453·0
1959—60	932·3	627·4	—304·9
1960—61	1105·7	630·5	—475·2
1961—62	1006·0	668·3	—337·7
1962—63	1096·8	680·9	—415·9
1963—64	1245·0	801·6	—443·4
1964—65	1420·8	800·9	—619·9
1965—66	1350·0	783·3	—566·7
1966—67	1885·6	1079·3	—806·3
1967—68	2042·8	1254·6	—788·2
1968—69	1740·5	1367·4	—373·1
1969—70	1582·3	1403·9	—178·4
1970—71	1720·4	1402·7	—317·7

Quoted from R. Datt and K. P. M. Sundharam. Indian Economy pp.638-39 (1970) also RBI Bulletins.

இரண்டாவது திட்டகாலம், 1956–57முதல் 1960-61

தொழில்துறையின் வளர்ச்சி இரண்டாவது திட்டத்தில் அதிகம் வற்புறுத்தப்பட்டது. முக்கியமாக எஃகு ஆலைகளை நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டது. இருப்புப்பாதைகளைப் பழுதுபார்க்கவும், பல ஆலைகளின் இயந்திரசாதனங்களைப் புதுப்பிக்கவும் இறக்குமதி அவசியமாக இருந்தது. வளர்ச்சிக்காகவும் பராமரிப்பிற்காகவும் இறக்குமதி தேவைப்பட்டது. இதனுடன் (உணவுப் பொருள்கள்) அத்தியாவசிய இறக்குமதியும் சேர்க்கப்பட்டன. இரண்டாவது திட்டகாலத்தில் உணவு இறக்குமதி ரூ. 805 கோடியாக இருந்தது. இக்காலத்தில் மொத்த இறக்குமதி உபரி ரூ. 2338 கோடியாக இருந்தது; அதாவது ஓர் ஆண்டிற்கான சராசரி இறக்குமதி உபரி ரூ. 467 கோடியாக இருந்தது. இரண்டாவது திட்டகாலத்தில் சராசரி இறக்குமதி ரூ. 1080 கோடியாகவும், சராசரி ஏற்றுமதி ரூ. 613 கோடியாகவும் இருந்தன.

மூன்றுவது திட்டகாலம், 1961–62 முதல் 1965–66

மூன்றுவது திட்டகாலத்தில் சராசரி ஏற்றுமதி வருமானம் ரூ. 747 கோடியாக இருந்தது. மொத்த இறக்குமதி உபரி ரூ. 2384 கோடியாகவும், சராசரி இறக்குமதி உபரி ரூ. 477 கோடியாகவும் இருந்தன. வளர்ச்சிக்காகவும், பராமரிப்புக்காகவும், அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் இறக்குமதி மேலும் மேலும் உயர்ந்துசென்றது. இதைத்தவிர இக்காலத்தில் நாட்டின் பாதுகாப்பிற்காகவும் பல முக்கியச் சாதனங்கள், பொருள்கள் முதலியன இறக்குமதி செய்யப்பட்டன.

வாணிகப் பொருள்கள்

பாரதத்தின் இறக்குமதிப் பொருள்களை நான்கு வகைப்படுத்தலாம். அவையாவன: மூலதனப்பொருள்கள், கச்சாப்பொருள்கள், நுகர்பொருள்கள், உணவுப்பொருள்கள் முதலியன. முதலாவது தலைப்பில் (மூலதனப்பொருள்களில்) உலோகங்கள் (இரும்பு, எஃகு, மற்றும் இரும்பு அல்லாத உலோகங்கள் முதலியன), போக்குவரத்துச் சாதனங்கள் முதலியன அடங்கும். இரண்டாவது தலைப்பில் (கச்சாப்பொருள்கள்) பெட்ரோலியம், பஞ்சு, சணல், சாயப் பொருள்கள், இரசாயனப்பொருள்கள் முதலியன சேர்க்கப்படும். நுகர்பொருள்களில் பூர்த்தியான நுகர்பொருள்கள் அனைத்தும் முக்கியமான மின்சார சாதனங்கள், மருந்து வகைகள், செயற்கை நூலாடைகள், காகிதம் முதலியன இடம்பெறுகின்றன. பூர்த்தியான செய்பொருள்களிலிருந்து உணவுத் தானியங்களை வேறுபடுத்தியுள்ளோம்.

அட்டவணை—23-13

திட்டகாலத்தில் இறக்குமதிப் பொருள்கள்

(கோடி ரூபாயில்)

	1951–1956		1956–1961		1961–1966		1966–1968		1968–1969*		1969–1970*		1970–1971*	
	மதிப்பு	%	மதிப்பு	%	மதிப்பு	%	மதிப்பு	%	மதிப்பு	%	மதிப்பு	%	மதிப்பு	%
மொத்த இறக்குமதி	3651	100·0	5399	100·0	6093	100·0	3903	100·0	1819	100	1512	100	1601	100
மூலதனப் பொருள்	1053·6	28·8	2283	42·2	2912	47·8	1445	37·0	702·48	38·6	559·0	36·9	659·8	41·2
கச்சாப் பொருள்	1060·8	27·5	918·8	17·7	1039	17·0	1022	26·0	323·09	17·8	314·7	20·8	336·3	21·0
நுகர்பொருள்	877·8	24·0	1074·2	19·8	938	15·4	331	8·6	390·6	21·5	317·7	21·0	332·9	20·8
உணவு தானியம்	595·2	16·3	804·7	14·9	1204	19·8	1105	28·3	403·06	22·2	320·7	21·2	271·8	17·0

*Source—RBI Bulletins. Quoted from R. Datt & K. P. M. Sundharam, op. cit., p. 641

முன் உள்ள அட்டவணையில்(23-13) 1951—52 முதல் 1970-71 வரை உள்ள ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மூலதனப்பொருள்களின் இறக்குமதி முதல் திட்ட காலத்தின் இறக்குமதியில் 28.8% ஆக இருந்தது. இந்த விகிதம் இரண்டாவது திட்டகாலத்தில் 42.2% ஆகவும், மூன்றுவது திட்டத்தில் 47.8% ஆகவும் உயர்ந்துசென்றது. கச்சாப்பொருள்கள், நுகர்பொருள்கள் ஆகியவற்றின் ஒப்புமையான விகிதம் ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் குறைந்துகொண்டே செல்கின்றது. உணவுப்பொருள்களின் விகிதம் இரண்டாவது திட்டத்தில் ஓரளவு குறைந்து காணப்பட்டபோதிலும் மூன்றுவது திட்டத்திலும், அதன் பின்னரும் ஒப்புமையாக அதிகரித்துள்ளது. 1966—67-லும், 1967—68-லும் உணவு தானிய உற்பத்தி பெருமளவுக்கு வீழ்ச்சி அடைந்த காரணத்தால் உணவுதானிய இறக்குமதி ரூ. 1105 கோடியாக உயர்ந்த அளவில் இருப்பதைக் காணலாம். மூன்றுவது திட்டத்திற்குப்பின் தோன்றிய பின்னிறக்க நிலைமை காரணமாக இவ் விரு ஆண்டுகளிலும் முதலீடும், அதன் காரணமாக மூலதன இறக்குமதியும் குறைந்துசென்றன.

ஏற்றுமதிப்பொருள்கள் மூவகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை யாவன நுகர்பொருள்கள், கச்சாப்பொருள்கள், இதரப் பொருள்கள் என்பன ஆகும். நுகர்பொருள்களில் தேயிலை, துணி, மிளகு, முந்திரிப்பருப்பு, புகையிலை, பிண்ணாக்கு முதலியன சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டாவதாகக் கச்சாப்பொருள்கள் என்ற பெயரில் இடைநிலைப்பொருள்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இங்குச் சணல் பொருள்கள், உரிவை, தோல் (பதனிட்டதும், பதனிடாததும்) உலோகத் தாதுப்பொருள்கள், பஞ்சு, தாவர எண்ணெய், எண்ணெய்வித்துகள் முதலியன சேர்க்கப்பட்டுள்ளன. மூன்றுவதாக உள்ள இதரப் பொருள்கள் என்ற பிரிவில் கம்பளம், அரக்கு, மசகு பொருள்கள், செயற்கைப்பட்டு, இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் முதலியன சேர்க்கப்பட்டுள்ளன. உண்மையில் இயந்திரங்கள், போக்குவரத்துச்சாதனங்கள் ஆகியவற்றைத் தனிப்பட்ட ஒரு பிரிவாக வைத்திருக்கவேண்டும். இப்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட ஆண்டுகளில் இவற்றின் ஏற்றுமதி விழுக்காடு மிகக் குறைந்து இருந்தபோதிலும், காலப்போக்கில் குறிப்பாக எதிர்காலத்தில் இந்தப் பொருளின் முக்கியத்துவம்—ஏற்றுமதி வாணிகத்தில்—உயர்ந்து செல்லக்கூடும்.

வாணிகம் செய்யும் நாடுகள்

பாரதத்துடன் வாணிகம் செய்யும் நாடுகள் யாவும் 4 முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலில் ஸ்டர்லிங்

அட்டவணை—23-14

திட்டகாலத்தில் பாரதத்தின் ஏற்றுமதிப் பொருள்கள்

(சதவீதத்தில்)

	1950—51	1955—56	1960—61	1965—66	1968—69	1969—70*	1970—71*
நுகர் பொருள்கள்	41	33	37	40	35·6	34·7	37·4
கச்சாப் பொருள்கள்	36	41	36	39	36·8	18·0	18·3
இதரப் பொருள்கள்	23	26	27	21	27·8	47·3	44·3
மொத்தம்	100	100	100	100	100·0	100·0	100·0

*Source R. B. k. Bulletins and R. Dutt and K. P. M. Sundharam முன்கூறியபடி 648

வட்ட நாடுகள், இரண்டாவது டாலர் வட்டநாடுகள், ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு நாடுகள், அதாவது O.E.E.C. நாடுகள் (Organization of European Economic Co-operation Countries)[8]. இறுதியாக ஸ்டர்லிங் வட்டத்திற்கு உட்படாத ஏனைய நாடுகள்.

பாரத ஏற்றுமதியில் ஸ்டர்லிங் வட்டார நாடுகளின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்துள்ளன. டாலர் வட்டார நாடுகளின் முக்கியத்துவம் கிட்டத்தட்ட மாற்றம் இன்றி உள்ளது. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு அமைப்பில் உள்ள நாடுகளின் முக்கியத்துவம் பாரதத்தின் ஏற்றுமதியில் இறுதிநிலையில் மட்டுமே வீழ்ச்சிஅடைந்தது. ஸ்டர்லிங் வட்டாரத்திற்கு உட்படாத ஏனைய நாடுகளின் வாணிக முக்கியத்துவம் ஒவ்வொரு திட்டத்திலும் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. இந்தத் தலைப்பில் உள்ள நாடுகளில் சோவியத் நாடு, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் (போலந்து, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, கிழக்குஜெர்மனி, செக்கோஸ்லோவேகியா, யுகோஸ்லோவியா முதலியன) சேர்க்கப்பட்டன. இந் நாடுகளுடன் ஏற்பட்ட வாணிகத்தொடர்பு மிகவும் அண்மைக்காலத்தில் தோன்றியது என்றாலும், அதன் வளர்ச்சி பிரமிக்கத்தக்க அளவிற்கு வளர்ந்து உள்ளது. இந்த நாடுகளுடன் நடைபெறும் வாணிகம் யாவும் ரூபாய் அடிப்படையில் நடைபெறுகின்றன, ரூபாய் அடிப்படையில் வாணிகம் நடைபெறுகிற ஒரே காரணத்திற்காக இது பாரதத்திற்குச் சாதகமாக இருக்கவேண்டிய அவசியமில்லை.

பாரதத்தின் இறக்குமதியிலும் ஸ்டர்லிங் வட்டார நாடுகளின் முக்கியத்துவம் நாளடைவில் குறைந்துள்ளது. டாலர் வட்டார நாடுகளின் முக்கியத்துவம் படிப்படியாக உயர்ந்துசென்றுள்ளது. ஐரோப்பியக் கூட்டுறவு நாடுகளின் விழுக்காடு இரண்டாவது திட்டத்திற்குப் பின்பு குறைந்துசென்றுள்ளது. ஸ்டர்லிங் வட்டாரத்திற்கு உட்படாத ஏனைய நாடுகளின் முக்கியத்துவம் (பாரதத்தின் இறக்குமதி வாணிகத்தில்) சீராக மேலோங்கி இருப்பதைக் காணலாம்.

பாரதத்தின் செலுத்தல் நிலை

பன்னாட்டு அளவில் இறக்குமதி, ஏற்றுமதி வாணிகப் பேரங்கள் முக்கியமானவை என்றாலும் அவை முழுமையானவை அல்ல.

8 இந்த அமைப்பில் இடம் பெற்ற நாடுகள் பின்வருமாறு : ஆஸ்திரியா, பெல்ஜியம், டென்மார்க், மேற்கு ஜெர்மனி, ஃபிரான்ஸ், இத்தாலி, லக்ஸம்பர்க், நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுகல், சுவீடன், ஸ்விட்ஸர்லாந்து, துருக்கி, ஸ்பெயின் முதலியன.

அட்டவணை—23.15

வாணிகத் திசை : நாடுகளின் முக்கியத்துவம்

(சதவீதத்தில்)

நாடுகள்	1951–56	1956–61	1961–66	1966–69	1969*	1970*
ஏற்றுமதி வாணிகம்						
1. ஸ்டர்லிங் வட்ட நாடுகள்	54·0	50·0	38·7	30·4	25·1	25·9
2. டாலர் வட்ட நாடுகள்	21·0	19·0	21·2	20·6	20·8	16·5
3. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு நாடுகள்	10·0	9·0	9·1	9·2	9·5	8·7
4. ஸ்டர்லிங் வட்டத்திற்கு உட்படாத ஏனைய நாடுகள்	15·0	22·0	30·9	39·8	44·6	49·0
மொத்தம்	100·0	100·0	99·9	100·0	100·0	100·1

வாணிகத் திசை : நாடுகளின் முக்கியத்துவம்

(சதவீதத்தில்)

நாடுகள்	1951–56	1956–61	1961–66	1966–69	1969*	1970*
இறக்குமதி வாணிகம்						
1. ஸ்டர்லிங் வட்ட நாடுகள்	46·0	38·0	22·2	17·4	16·3	16·0
2. டாலர் வட்ட நாடுகள்	24·0	26·0	36·2	38·3	31·6	35·0
3. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு நாடுகள்	16·0	21·0	15·4	13·8	12·4	14·6
4. ஸ்டர்லிங் வட்டத்திற்கு உட்படாத ஏனைய நாடுகள்	14·0	15·0	26·1	30·5	39·6	34·4
மொத்தம்	100·0	100·0	99·9	100·0	99·9	100·0

ஆதாரம் : RBI - Bulletin.

*ஜனவரி முதல் டிசம்பர் வருக உள்ள 12 மாதங்களுக்கும்

ஆகையால்தான் செலுத்தல் நிலையை ஆராயவேண்டியது அவசிய மாக உள்ளது. நாட்டின் செலுத்தல்களை இருவகைப்படுத்தலாம். ஒன்று, நடப்புச்செலுத்தல் கணக்கு அல்லது வருமானக் கணக்கு; இரண்டாவது, மூலதனக் கணக்குச் செலுத்தல்கள். பொருள்கள், பணிகள், ஒருமுக வருமான மாற்றுச்செலுத்தல்கள், நன்கொடை முதலியன நடப்புக்கணக்கில் இடம்பெறுகின்றன. ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்தை இந்தத் தலைப்பில்தான் பதிவு செய் கிறோம். உண்மையை முழுமையாக அறிவதற்கு மூலதனக் கணக் கில் ஏற்பட்ட மாறுதல்களையும் ஆராயவேண்டும். நடப்புக்கணக் கில் ஏற்படும் வணிகப் பேரங்களின் காரணமாக ஒரு நாட்டினருக்கு உரிமைகளும், மற்றொரு நாட்டினருக்குப் பொறுப்பும் ஏற்படு கின்றன. இவ்வாறு தோன்றிய உரிமைகளும், பொறுப்புகளும் மூலதனக் கணக்கில் இடம்பெறுகின்றன.

பாரதம் நடப்புக்கணக்கில் கூடுதலாக இறக்குமதி செய்துள்ள தால், அதன் பொறுப்பு அதிகரித்துள்ளதை மட்டும் இதுவரை கண்டோம். உண்மையில் வெளிநாட்டு உதவி—நீண்டகால மூலதனக்கடன்—பெற்றுள்ள காரணத்தால், மூலதனக் கணக்கில் பாரதத்தின் செலுத்தல்நிலை பாதகம் அடையவில்லை. ஆனால், மேற்படி அந்நிய மூலதனத்தைத் திருப்பித்தரும்போது பாரதத் தின் மூலதனக்கணக்குப் பாதகம் அடையும்.

முதல் திட்டகாலத்தில் வாணிகத்தின் காரணமாகப் பாரதத் தின் பொறுப்புகள் ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே சென்றன. இருந்தபோதிலும் தோன்றா இனங்களின் வரவு காரணமாக நிகரச் செலுத்தல் நிலை குறைந்த அளவிற்கே பாதகம் அடைந்துள்ளது.

முதல் திட்டகாலத்தில் பாரதத்தின் செலுத்தல் நிலையை மூன்று நிகழ்ச்சிகள் முக்கியமாகப் பாதித்துள்ளன. முதலில் கொரியாப் போர், 1953-ல் அமெரிக்க நாட்டின் பின்னிறக்கம், 1954-ல் சாதகமான பருவமழை முதலியன. முதல் திட்டத்தில் ஸ்டர்லிங் இருப்புகள் உபயோகிக்கப்பட்டதால் பாரதத்தின் நிகரச்செலுத்தல்நிலை ரூ. 42.3 கோடி அளவிற்கு மட்டுமே பாதகம் அடைந்தது. ஆனால், இரண்டாவது திட்டத்தில் ஆண்டுதோறும் செலுத்தல்நிலை தொடர்ந்து நிகர அளவில் பாதகம் அடைந்தது. இரண்டாவது திட்டகாலத்தில் மொத்தம் ரூ. 1721.6 கோடிக்குப் பாரதத்தின் பொறுப்புகள் அதிகரித்தன. கனரக இயந்திர சாதனங்களின் இறக்குமதியாலும், உள்நாட்டில் வேளாண்பொருள்கள்—உணவு, கச்சாப்பொருள் உற்பத்தி— கிடைப்பருமையாக இருந்ததாலும், பாரதத்தின் ஏற்றுமதி வாணி

கத்தை மேலும் அதிகரிக்க இயலாமையாலும், வளரும் நாட்டிற்குக் குறைந்தபட்சப் பராமரிப்பு இறக்குமதி மிகவும் அவசியமாக இருந்ததாலும் செலுத்தல்நிலை தொடர்ந்து பாதகம் அடைந்தது.

அட்டவணை—23–16

பாரதத்தின் செலுத்தல் நிலை

(கோடி ரூபாய்களில்)

ஆண்டுகள்	வாணிக நிலை	நிகரத் தோன்றா இனங்கள்	செலுத்தல நிலை (நடப்புக் கணக்கு)
1948—49	— 283·8	+ 31·7	—252·1
1949—50	— 89·9	+ 42·8	— 47·1
1950—51	— 3·5	+ 42·4	+ 38·9
1951—52	— 232·8	+ 70·2	—162·6
1952—53	— 31·1	+ 91·3	+ 60·2
1953—54	— 52·1	+ 99·5	+ 47·4
1954—55	— 93·1	+ 99·1	+ 6·0
1955—56	— 132·8	+ 139·5	+ 6·7
1956—57	— 466·9	+ 154·1	— 312·8
1957—58	— 639·0	+ 133·2	— 505·8
1958—59	— 453·0	+ 126·0	— 327·0
1959—60	— 304·9	+ 119·3	— 185·6
1960—61	— 475·2	+ 82·8	— 392·4
1961—62	— 337·7	+ 31·3	—306·4
1962—63	— 415·9	+ 61·9	—354·0
1963—64	— 443·4	+ 94·0	—349·0
1964—65	— 619.9	+ 167·9	—452·0
1965—66	— 566·7	+ 76·9	—489·8
1966—67	— 806·3	— 6·6	—812·9
1967—68	— 788·2	— 16·1	—804·3
1968—69	— 373·1	+ 7·9	—365·2
1969—70	— 178·4	— 38·6	—217·0
1970—71	— 317·7	— 13·7	—331·4

Source RBI-Bulletins and also figures taken from R. Dutt and K. P. M. Sundharam, Indian Economy, op cit., pp. 648—651

அட்டவணை—23-17

பாரதத்தின் பன்னாட்டுச் செலுத்துதல் நிலை

(கோடி ரூபாயில்)

ஆண்டுகள் (1)	நடப்புக் கணக்கில் இருப்பு (2)	விடு பட்டவை (3)	மூலதனக் கணக்கில் (4)	பிற செலாவணி இருப்பு மாற்றங்கள் =(2+3+4) (5)
1961—62	—306·4	+ 7·8	+292·3	— 6·3
1962—63	—354·0	+ 5·9	+345·8	— 2·3
1963—64	—349·4	— 54·6	+414·8	+10·8
1964—65	—452·0	— 48·8	+444·6	—56·2
1965—66	—489.8	+ 8·9	+529·2	+48·3
1966—67	—812·9	+ 16·0	+760·4	—36·5
1967—68	—804·3	— 85·6	+819·1	+70·8
1968—69	—365·2	— 113·7	+440·8	+38·1

Source RBI-Bulletins Quoted from R. Dutt and K. P. M. Sundharam, Indian Economy, (1970) p. 650.

இதர அந்நியச் செலாவணிக் காப்பு இருப்புகள் இல்லாத காரணத்தால் இறக்குமதியை முழுமையாகக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது: மூன்றாவது திட்டகாலத்தில் வாணிகத்தின் காரணமாகத் தோன்றிய பாதக நிலைமை மூலதனக் கணக்கிலுள்ள வரவு இனங்கள் காரணமாக ஓரளவு குறைக்கப்பட்டது.

செலுத்தல் நிலையும் வாணிகக்கொள்கையும்

விடுதலைக்குப்பின்னர்ப் பாரதத்தின் செலுத்தல்நிலை தொடர்ந்து பாதகம் அடைந்துள்ளது. ஆரம்பத்தில் இதை ஈடு செய்வதற்காக ஸ்டர்லிங் இருப்புகள் உபயோகிக்கப்பட்டன. அது முற்றிலும் கரைந்துவிட்டது. எனவே, இரண்டாவது திட்டத்திலிருந்து வாணிகக்கணக்கில் துண்டுவிழும் தொகையைப் பிறநாட்டுச் செலாவணிகளில் கடன் வாங்குவதன்மூலம் ஈடுசெய்ய

முடிந்தது. ஆனால், தொடர்ந்து பல்வேறு இனங்களுக்காக உயர்ந்துசெல்லும் இறக்குமதித் தேவைகளைக் கடன், உதவி முதலிய வற்றின் மூலம் முற்றிலும் சரிக்கட்ட முடியாது. நாளடைவில் பாரதத்தின் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிக்கொடுக்கவும் வட்டியை அவ்வப்போது செலுத்தத் தகுந்த ஏற்பாடுகளைத் திட்ட மிட்டுச் செய்யவேண்டும். பொருளாதார வளர்ச்சி தற்சார்பு அடிப் படையில் இருக்கவும், பெருகிச்செல்லும் பிறநாட்டுச் செலாவணிச் செலுத்தல்களை உரியகாலத்தில் நிறைவேற்றவும் திட்டமிட்ட வாணிகக் கொள்கை அவசியம். பாரதத்தின் நீண்டகால நலன் களைக் கருத்தில் கொண்டு பின்வரும் நிபந்தனைகளை வலியுறுத்த வேண்டும். முதலில் இறக்குமதி அனுமதி மிகவும் தவிர்க்கமுடியாத நிலையில் இன்றியமையாத இனங்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். இரண்டாவதாக, தற்சமயம் இறக்குமதி செய்யும் பொருள்களை—முக்கியமாகக் கச்சாப்பொருள்கள், இடைநிலைப் பொருள்கள்முதலியவற்றை—இயன்றவரை உள்நாட்டிலேயே உற் பத்தி செய்யவேண்டும். இறக்குமதிப் பதிலீடு வற்புறுத்தப்பட வேண்டும். மூன்றாவதாக, ஏற்றுமதி வாய்ப்புகளை உடைய தொழில் களை ஆதரிக்கவும் வேண்டும். வெளிநாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய தொழில்களை ஊக்குவிக்கவேண்டும். பொதுவான ஏற்றுமதிக்குச் சலுகைகள், முன்னுரிமைகள் வழங்கவேண்டும். உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தும், நுகர்வைக் கட்டுப் படுத்தியும், ஏற்றுமதித் துறையில் உபரியான பொருள்கள் கிடைக் கும்படி செய்யவேண்டும். இதற்கு ஆயத்தீர்வை சிறந்த சாதன மாகும். உள்நாட்டில் நியாயமான விலையில் அவசியமான பொருள்கள் கிடைக்க வழி வகுக்கவேண்டும்.

ஆனால், நீண்டகால வளர்ச்சியுடன் இணைத்துப் பாரதத்தின் வாணிகக் கொள்கையை உருவாக்கவில்லை. வாணிகநிலை, செலுத் தல்நிலை முதலியவற்றை மட்டும் கருத்தில்கொண்டு இறக்குமதிக் கொள்கையும், அந்நியச் செலாவணிக்கட்டுப்பாடும் தாற்காலிக அடிப்படையில் அமலாக்கப்பட்டன. 1957-க்குப் பின்னர்—அந் நியச் செலாவணித் தட்டுப்பாடு மிகவும் தீவிரமடைந்த பின்னர்— திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் ஒரு கூறாக வாணிகக் கொள்கை இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தனர். 1957-லிருந்து இறக்குமதிக் கட்டுப்பாடும், இறக்குமதிப் பதிலீடும், ஏற்றுமதி ஊக்குவிப்பும் தொழில்துறையின் வளர்ச்சிக்கான அடிப்படை களாக இருந்தன என்று கூறலாம். ஏற்றுமதியை ஊக்குவிப் பதற்காக 1957-ல் V. L. டிஸோஸா தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இரண்டாவது திட்டகாலத்தில் ஏற்றுமதியை ஊக்குவிக்க முடியவில்லை. பொருளாதார வளர்ச்சியின் ஒரு கூறாக

இது இல்லை என்பது மூன்றாவது திட்டத்தில் ஏற்கப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டத்தில் ஏற்றுமதியை உயர்த்துதல் முதன்மையான வாணிகநோக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதை மேலும் வலியுறுத்தும்வகையில் 1962-ல் இறக்குமதி ஏற்றுமதிக்கொள்கைக் கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டது. இதன் தலைவர் A. இராமசாமி முதலியார். ஆகையால், இதை முதலியார் கமிட்டி என்று பொதுவாக வழங்குவார்கள்.

பாரதத்தின் ஏற்றுமதியில் மூன்று முக்கியப் பொருள்கள் குறிப்பிடத்தக்கவை. தேயிலை, துணி, சணல் நெசவுப்பொருள்கள் முதலியன பாதிக்கும் (50%) அதிகமான முக்கியத்துவம் பெற்றுள்ளன. இவை உள்நாட்டு வரிவிதிப்பாலும், கட்டுப்பாட்டாலும் பாதிக்கப்பட்டு இருப்பதுடன், வெளிநாட்டுப் போட்டியை அதிக அளவுக்கு எதிர்நோக்க வேண்டியுள்ளன. இவற்றின் ஏற்றுமதிக்கு உச்சஅளவுக் கட்டுப்பாடுகள் உள்ளன. இதற்கான பதிலீட்டுப் பொருள்கள் அதிகரித்து வருகின்றன. எனவே, மரபான பொருள்களைக் கூடுதலாக ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் குறைவு.

ஏற்றுமதியை உயர்த்தவேண்டும் என்று முழக்கம் செய்வதுடன் நில்லாமல் ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய கச்சாப்பொருள்கள், இடைநிலைப் பொருள்கள் முதலியவற்றைப் பரிசீலனை செய்யவேண்டும். திட்டங்களில் உற்பத்திக் குறியளவை நிர்ணயிப்பதுடன் நில்லாமல் அதை நிறைவேற்றவும் முயற்சி செய்யவேண்டும். தனியார் துறையும், பொதுத்துறையும் ஏற்றுமதிப் பொருளின் உற்பத்தியை அதிகரிக்க ஒத்துழைக்கவேண்டும். அவற்றின்மீதான வரிகளைக் குறைக்கவோ, அகற்றவோ, விலக்கு அளிக்கவோ வேண்டும். ஏற்றுமதித் துறையின் முக்கியப் பிரச்சினையாகக் கச்சாப்பொருள்களின் கிடைப்பருமை உள்ளது. இதனால் தொழில் நிறுவனங்களின் உற்பத்தி அளவைத்திறனை முழுமையாகப் பயன்படுத்த முடிவதில்லை. எனவே, ஏற்றுமதித்துறைக்குத் தேவையான கச்சாப்பொருள்கள், இடைநிலைப் பொருள்கள் முதலியவற்றை உடனடியாக இறக்குமதி செய்ய அரசு முன்வர வேண்டும். இறுதிநிலையில் ஓரளவு இறக்குமதி செய்வதால் ஏற்றுமதி பன்மடங்கு உயர்ந்துசெல்லக்கூடும். இறக்குமதியாகும் கச்சாப்பொருள்கள் காலதாமதத்தை அகற்றுவதால் பாரதத் தொழில்களின் ஆக்கச்செலவைக் குறைக்கக்கூடும். தொழில்நிறுவனங்களின் அளவைத்திறனை முழுமையாகப் பயன்படுத்துவதாலும் ஆக்கச்செலவு குறையக்கூடும். இதைத்தவிர ஏற்றுமதியாளர்களுக்குச் சில முக்கியச் சலுகைகளும், நிவாரணமும் அளிக்க வேண்டும். இவர்களுக்குப் பணக்கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு

அளிக்கவும், முன்னுரிமை வழங்கவும் வேண்டும். ஏற்றுமதி யாளர்கள் தாங்கள் ஈட்டும் பிறநாட்டுச் செலாவணியில் ஒரு பகுதியை மேற்படி நிறுவனத்தின் விரிவாக்கத்திற்கும், கச்சாப் பொருள், இடைநிலைப்பொருள் முதலியவற்றை இறக்குமதி செய் வதற்காகவும் பயன்படுத்திக்கொள்ள அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று இக் கமிட்டி பரிந்துரைத்தது. இதைப்போன்ற சலுகைகள் ஜெர்மனி, ஜப்பான், ஃபிரான்ஸ் போன்ற நாடுகளில் வழங்கப்படுகின்றன.

முதலியார் கமிட்டியின் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. மைய அரசாங்கத்தில் பன்னாட்டு வாணிகத்திற்காகப் புதியதோர் அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டது. அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காக வாணிக வாரியம் (Board of Trade) நிறுவப்பட்டது. இவ் வாரியம் பன்னாட்டு வாணிகம் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும். இதைத்தவிர ஏற்றுமதி உயர்வு ஆலோசனைக் கவுன்சில் (Export Promotion Advisory Council) ஒன்றும் நிறுவப்பட்டது. இதில் வியாபாரிகள், தொழில் முயல்வோர், அரசாங்கம் (மைய) ஆகிய துறைகளின் பிரதிநிதிகள் இடம்பெறுவார்கள். தனித்தனியாக ஒவ்வோர் ஏற்றுமதிப் பொருளுக்கும் இதைப்போன்ற அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டன. இத்துணை முயற்சிகள் செய்த பின்னரும் பாரதத்தின் ஏற்றுமதி மட்டம் உயர்ந்து செல்லவில்லை. எனவே, ரூபாயை 1966–ல் மதிப்பிறக்கம் செய்தார்கள்.

மூன்றுவது திட்டகாலத்தில் இரு போர் நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. திட்ட இறுதியில் வளர்ச்சிவேகம் தேய்ந்துசென்றது. வளர்ச்சி நடவடிக்கைகள் தேக்கமுற்றன. 1966–ல் உணவுகிடைப் பருமையும் தீவிரமடைந்தது. ஏற்றுமதியை அதிகரிக்கவும், இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும் 1966 ஜூன் 5 ஆ யன்று ரூபாய் 36.5% மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. பாரதத்தின் செலுத்தல்நிலை தொடர்ந்து பாதகம்அடைந்ததைச் சரிசெய்யவும், தொடர்ந்து பிறநாட்டினர் உதவியைப் பெறுவதற்காகவும் மதிப் பிறக்கம் முன்நிபந்தனையாகக் கருதப்பட்டது. அரசாங்க அதிகாரி கள் இதை அவ்வப்போது மறுத்துள்ளார்கள் என்றாலும், அமெரிக்காவும், உலகபாங்கும் ரூபாயை மதிப்பிறக்கம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியது உண்மையேயாகும். ரூபாயின் மதிப்பிறக்கத்தைப் பொருளாதார நிபுணர்கள் ஏகமனதாக வரவேற்கவில்லை.

ரூபாயின் மதிப்பிறக்கத்தால் முழுமையான பலன்கள் உடனடியாக ஏற்படவில்லை என்றாலும், நாளடைவில் இறக்குமதியைக் குறைக்கவும், ஏற்றுமதியை உயர்த்தவும் இது உதவியுள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணையிலிருந்து (23-18) அறியலாம். 1968-69-லிருந்து பொருளாதார வளர்ச்சி வேகம் மீண்டும் உயர்ந்து சென்றது, இதற்கு ஒரு முக்கியக் காரணம் என்று கருதவும் இடமளிக்கிறது. இறக்குமதி குறைந்துள்ளதற்குத் தானிய உற்பத்தி உள்நாட்டில் அதிகரித்ததே முக்கியக் காரணமாகும். அதைத்தவிர 1968-ல் காணப்பட்ட பின்னிறக்க நிலை தொழில் துறையின் இறக்குமதித் தேவைகளைக் குறைத்துவிட்டது.

அட்டவணை—23-18

பாரதத்தின் வெளிநாட்டு வாணிகம்

(கோடி ரூபாயில்)

ஆண்டுகள்	இறக்குமதி	ஏற்றுமதி	ஏற்றுமதி / இறக்குமதி %	ஏற்றுமதியின் % மாற்றம்
1960—61	1767·2	1011·7	57·2	—
1961—62	1720·0	1040·8	60·5	2·9
1962—63	1782·8	1080·0	60·6	3·8
1963—64	1926·7	1249·8	64·9	15·7
1964—65	2125·5	1286·2	60·5	2·9
1965—66	2219·3	1269·4	57·2	— 1·2
1966—67	2078·4	1156·6	55·6	— 8·9
1967—68	1950·5	1197·0	61·4	3·5
1968—69	1790·0	1353·8	75·6	13·1
1969—70 (ஏப்ரல் டிசம்பர்)	1123·9	1040·9	92·6	—

Source—Director General of Commercial Intelligence and Statistics: Quoted by R. Dutt and K.P.M. Sundharam, Indian Economy, 1970, p. 664

பிறநாட்டு ஆலோசனை, மூலதனம் ஆகியவற்றை எதிர்பார்க்காமல் தற்சார்பு அடிப்படையில் பாரதத்தின் பொருளாதார வளர்ச்சி அமையவேண்டும். படிப்படியாகப் பிறநாட்டு மூலதன உதவியைக் குறைக்கவேண்டும். இயன்றவரை இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை உயர்த்தவேண்டும். இக் கருத்துகள் நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தின் மையமாக அமைந்துள்ளன. ஆண்டுதோறும் 7% ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பாரதத்தின் வெளிநாட்டுச் செலுத்தல் பிரச்சினைக்குத் தற்சார்புடைய பொருளாதார வளர்ச்சியே அனைவரும் ஏற்கக்கூடிய தீர்வாக இருக்கும்.

24. செலாவணி

பதினாறாவது நூற்றாண்டிலிருந்து இந்தியாவில் வெள்ளி ரூபாய் திட்டப்பணமாக உள்ளது. ஆஃப்கானிய வழியில் வந்த ஷெர்ஷா என்ற பேரரசர் முதன்முதலில் இந்தியாவில் வெள்ளி ரூபாயை வெளியிட்டார்.[1] இவர் 178 குன்றிமணி எடையில் வெள்ளி ரூபாய்க் காசுகளையும், 330 குன்றிமணி எடையில் 'டாம்' (dam) செப்புக்காசுகளையும் வெளியிட்டார். இவருக்குப் பின்வந்த மொகலாயப் பேரரசர்கள் காலத்திலும் இக் காசுகள் தொடர்ந்து வெளியிடப்பட்டன. அக்பர் காலத்தில் பொன் 'மொகரா'க்கள் வெளியிடப்பட்டன. எனவே பதினாறு, பதினேழாவது நூற்றாண்டுகளில் இந்தியாவில் பொற்காசுகளும், வெள்ளிக்காசுகளும் புழக்கத்தில் இருந்தன. மொகலாய ஆட்சிக்குப்பின்னர் இந்தியாவின் பல பகுதிகளிலும் பல குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். இவர்கள் வேறுபட்ட எடையிலும், தூய்மையிலும், வெவ்வேறான கா்சுகளை வெளியிட்டார்கள். எனவே, கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் வாணிகம் செய்யத்தொடங்கிய காலத்தில் 994 வகையான காசுகள்[2] புழக்கத்தில் இருந்தன. வெவ்வேறான காசுகளின் உண்மையான பரிவர்த்தனை மதிப்புகளை அறிந்து, ஒரு வகைக் காசுகளை மற்றொரு வகையான காசுகளாக மாற்றித்தரும் பணியில் 'ஷெராப்ஃ' ஈடுபட்டு இருந்தார்கள். இவர்களைப் பொறுத்தவரை பணத்தை மாற்றித்தரும் தொழில் முதன்மையாகவும் அதை அடுத்து லேவாதேவித் தொழில் முக்கியமாகவும் கருதப்பட்டன.

பலவகையான காசுகள் புழக்கத்தில் இருந்ததால் நாடெங்கிலும் சுலபமாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பயணம்

1 ஷெர்ஷாவை இந்திய வெள்ளி ரூபாயின் தந்தை எனப் பேராசிரியர் சத்தியநாத ஐயர் குறிப்பிடுகிறார். பார்க்கவும், R. Sathianatha Iyer—History of India—Vol. II (1952) p. 196.

2 Jathar, G. B., and Beri B. G.—Indian Economics, Vol. II, 9th Edition, Oxford, p. 225.

செய்வதும், வியாபாரம் செய்வதும் கடினமாக இருந்தது. வாணி கத்தை அதிகம் நம்பியிருந்த ஆங்கிலேயர்கள் பெருமளவிற்கு ஷெராப்ஃகளின் உதவியை நாடினார்கள். கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவை ஆளும் பொறுப்பை ஏற்றவுடன் முதல் பணியாகச் செலாவணிச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டது. ஆட்சியாளர் கள் இந்தியா முழுவதிலும் குறிப்பிட்ட ஒரு திட்டப்பணம் புழக் கத்தில் இருக்கவேண்டும் என்று விழைந்தார்கள். இதைச் செயல் படுத்தும் முதல் முயற்சியாக 1818-ல் சென்னை மாநிலத்தில் 180 குன்றிமணிகள் எடையுள்ள (11/12 தூய்மையில்) வெள்ளி ரூபாய்க் காசுகள் வெளியிடப்பட்டன. அதன் பின்னர் 1823-ல் பம்பா யிலும், 1835-ல் நாடெங்கிலும்—கிழக்கு இந்தியக் கம்பெனி ஆட்சி யின்கீழ் உள்ள பகுதிகள் அனைத்திலும்—மேற்படி வெள்ளி ரூபாய் திட்டப்பணமாக அறிவிக்கப்பட்டது. இங்ஙனம் அறிவிக்கப்பட்ட வெள்ளி ரூபாயின் எடையும், தூய்மையும் 1835-லிருந்து 1940 வரை இந்தியாவில் நீடித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் பெரும்பகுதியில் திட்டப்பணம் பழக்கத்திற்குக் கொண்டுவந்த பின்னர்ச் செலாவணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எளிதாக இருக்கும் என்று எண்ணியவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். இந்தியா ஏற்றுக்கொண்ட செலாவணித் திட்டம் காரணமாகவும், பன்னாட்டு அளவில் ஏற்பட்ட நிகழ்ச்சி களின் விளைவாகவும், அரசின் தெளிவற்ற கொள்கைகள் காரண மாகவும் இந்தியாவில் செலாவணி ஒரு நூற்றாண்டு காலத்திற்குத் தொடர்ந்து பிரச்சினையாகவே இருந்தது. இப் பிரச்சினைகள் வெவ்வேறு வடிவில் இந்திய ரிசர்வ் பாங்கு தோற்றுவிக்கப்படும் வரை நீடித்தன. இக் காலத்தில் இந்தியாவின் செலாவணித் திட்டம் ஒரு பொருளாதாரப் புதிராக விளங்கியது என்றால் மிகையாகாது.

இந்தியாவின் செலாவணிப் பிரச்சினையை ஆராயுமுன்னர் அதற்கு அடிப்படையான காரணங்களை முன்னுரையாகக் கூற விழைகிறோம். இந்தியாவில் வெள்ளி ரூபாய்களைப் போலவே பொன் 'மொகரா'க்களும், 'வராகன்'களும், 'கழஞ்சு'களும், 'பகோடா'க்களும் புழக்கத்தில் இருந்துள்ளன. மக்கள் வெள்ளித் திட்டத்தைவிட பொன்திட்டத்தை அதிகம் விரும்பினார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் இதற்கு உடன்படவில்லை. இந்தியாவில் பொன் திட்டத்தை ஏற்படுத்துவதற்குப் பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஓர் அரிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆட்சியாளர்கள் விரும்பியிருந்தால் இதைப் பயன்படுத்திக்கொண் டிருக்கலாம். இங்ஙனம் ஒருபுறம் மக்களின் விருப்பத்திற்கும்,

மற்றொருபுறம் ஆட்சியாளர்களின் உள்ளூறுன தீர்மானத்திற்கும் இடையே செலாவணிப் பிரச்சினை ஊசலாடிக்கொண்டிருந்தது. இதனால் இந்தியாவின் செலாவணித்திட்டம் தீர்வுகாண முடியாத ஒரு பொருளாதாரப் புதிராக மாறியது.

இப் பிரச்சினை இங்கே எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காண்போம். இந்தியாவில் ரிசர்வ் பாங்கு தோற்றுவிக்கப்படும் காலம் வரை ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகளை ஏழு முக்கியப் பிரிவுகளில் அமைத்துள்ளோம். முதலாவது பிரிவு, வெள்ளி ரூபாய் சட்டச் செலாவணியாகவும், திட்டப்பணமாகவும் விளங்கிய விவரத்தைக் கூறுகிறது. இரண்டாவதாக, இந்திய அரசு தாள் பணநோட்டுக்களை வெளியிட்ட வரலாறு கூறப்படுகிறது. மூன்றாவதாக, பொன், வெள்ளி ஆகிய இரு உலோகங்களின் அளிப்பிலும், தேவையிலும் பன்னாட்டு அளவில் தோன்றிய சமனற்ற போக்குகளின் விளைவும் இதனால் இந்தியாவின் செலாவணி மதிப்பு, செலுத்தல்நிலை ஆகியவை பாதிக்கப்பட்டதும் 'பொன் வெள்ளி விகிதம்' என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ளது. நான்காவதாக உள்ள பிரிவில் மேலே கூறிய பிரச்சினையின் தொடர்ச்சியாக ஏற்பட்ட செலாவணிப் பிரச்சினைகளும், அதற்குத் தீர்வுகாணும் முயற்சிகளும், 'ஹெர்ஷல் கமிட்டி' என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ளன. ஐந்தாவது பிரிவில் 'பொன் பரிவர்த்தனைத் திட்டம்' அமைக்கப்பட்டுள்ளது. 19ஆவது நூற்றாண்டிலிருந்து எதேச்சையாகவும், எதிர்பாராத வகையிலும் வரலாற்று நிகழ்ச்சிகளின் ஒரு கூறாகப் பொன் பரிவர்த்தனைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அடுத்து, நிருவாக அடிப்படையில் செயல்பட்ட செலாவணித்திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளைக் கண்டு அறியவும், அவற்றிற்குச் சட்ட ரீதியாகத் தீர்வுகாணவும் முற்பட்டது 'சேம்பர்லின் ஆணைக் குழு'. ஆனால், அதற்குள் முதலாவது உலகப்போர் ஆரம்பமாகியது; அதைத்தொடர்ந்து செலாவணி மதிப்பை நிலைபெறச்செய்யும் முயற்சிகள் தோல்வி அடைந்தன. இந் நிகழ்ச்சிகள் ஆறாவது பிரிவில் இடம் பெற்றுள்ளன. இறுதியாகச் செலாவணித் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கு 'ஹில்டன்-யங் ஆணைக்குழு' நியமிக்கப்பட்ட விவரத்தையும், அதன் பரிந்துரைகளையும், திறனாய்வையும் ஏழாவது பிரிவில் காணலாம்.

வெள்ளித்திட்டம்

நாடெங்கிலும் வெள்ளி ரூபாய் திட்டப்பணமாகவும், சட்டச் செலாவணியாகவும் அறிவிக்கப்பட்டபோதிலும், அரசாங்க அலுவலகங்களிலும், மற்றும் பொதுவான செலுத்தல்களிலும் பொன்மொகராக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒரு பொன்

மொகராவின் மதிப்புப் பதினைந்து வெள்ளி ரூபாய்கள் என 1841-ல் அரசாங்கம் அறிவித்தது. அரசாங்கம் பொற்காசுகளை ஏற்றுக் கொண்டதுடன், அவற்றைக் காசுச்சாலைகளில் (Mint) ஐந்து ரூபாய், பத்து ரூபாய், பதினைந்து ரூபாய், முப்பது ரூபாய் மதிப்பில் அச்சிடவும் அனுமதித்தது. வெள்ளி ரூபாய்களைப் போலவே பொற்காசுகளை அச்சிட முடிந்தது. இவை இரண்டும் பேதமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும் பொற்காசுகள் சட்டச்செலாவணியாகவும், அளவை அலகாகவும், திட்டப்பண மாகவும் செயல்படவில்லை. இப் பண்புகள் வெள்ளி ரூபாய்க்கு இருந்தமையால் அப்போது வெள்ளித்திட்டம் நிலவியது என்று கூறுகிறோம்.

1849-51 ஆம் ஆண்டுகளில் கலிபோர்னியாவிலும், ஆஸ்திரேலியாவிலும் புதிய பொற்சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனால் உலகப்பொன் உற்பத்தி திடீர் என்று உயர்ந்தது. இதனால் பொற்காசுகளின் மதிப்பு வெள்ளி அடிப்படையில் வீழ்ச்சி அடைந்தது. பொற்காசுகள் மிகை மதிப்புடைய காசுகளாகக் கருதப்பட்டன. மக்கள் பொற்காசுகளைக் கொண்டு அரசாங்கத்திற்கு (செலுத்த வேண்டிய) வரிகளையும், கட்டணங்களையும் செலுத்தினார்கள். பொற்காசுகளின் மதிப்பு வீழ்ந்துள்ள காரணத்தால் அரசாங்கம் பொன் மொகராக்களை 1853ஜனவரி முதல் தேதிக்குப்பின் ஏற்காதென்று டல்ஹௌஸி பிரபு அறிவித்தார். இருந்தபோதிலும் மக்களின் விருப்பத்திற்கு இணங்க அரசாங்கத்தின் காசுச் சாலைகளில் பொற்காசுகளும் பொன் மொகராக்களும் அச்சிடப்பட்டன.

1850-ல் வெள்ளி உலகெங்கிலும் கிடைப்பருமையான உலோகமாக இருந்தது. இந்தியாவின் பொற்காசுகளை அரசு ஏற்க மறுத்ததால், ஒரு நெருக்கடியான நிலைமை தோன்றியது. இந்தியாவில் உள்ள வெள்ளிக் காசுகளும் வெள்ளி உலோக இருப்பும் பணப் பரிவர்த்தனைத் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இல்லை. இதைத் தவிர இந்தியாவில் வெள்ளியைக்கொண்டு ஆபரணங்கள், பாத்திரங்கள் முதலியன செய்வதற்கான தேவையும் உயர்ந்தது. இக் காலத்தில் இந்தியாவின் வாணிகமும் பல காரணங்களினால் பெருக்கம் அடைந்தது. இங்ஙனம் பணத்தின் தேவை உயர்ந்துசென்ற காலத்தில் குறிப்பிட்ட பண உலோகத்தின் கிடைப்பருமையால் நடைமுறையில் ஒரு நெருக்கடி ஏற்பட்டது.

வெள்ளியின் கிடைப்பருமையால் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகள் முதலியன பாதிக்கப்பட்டன. அரசாங்கத்

திற்கும் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆனால், பொதுமக்கள் நெடுங்காலமாகப் 'பொன் பகோடா'க்களையும், பொன் 'மொகரா'க்களையும் உபயோகித்துள்ளமையால் இதை அதிகம் உணரவில்லை. முக்கியமாக வியாபாரிகள் தயக்கமின்றிப் பொற்காசுகளை ஏற்றுக்கொண்டார்கள்.

வெள்ளிப் பணத்தின் கிடைப்பருமையை பம்பாய் வணிகர்கள், புதியதொரு வழியில் சமாளித்தார்கள். பம்பாய் பாங்குகளால் முத்திரையிடப்பட்ட பொற் கட்டிகளை இவர்கள் செலுத்தல்களுக்கு உபயோகித்தார்கள் (ஏற்றுக்கொண்டார்கள்).[3] வெள்ளி ரூபாயின் கிடைப்பருமையை இது எடுத்துக்காட்டுவதுடன், பொன் ஒரு பண உலோகமாகத் தொடர்ந்து செயல்பட்டதையும் (இது) உணர்த்துகிறது.

இந்தியாவில் சட்ட ரீதியாக வெள்ளித் திட்டம் நிலவியது என்று கூறவேண்டும். வெள்ளி ரூபாய்க் காசுகள் திட்டப் பணமாகவும், முக்கிய அளவை அலகாகவும் செயல்பட்டன. இருந்தபோதிலும், பல காரணங்களினால் மக்கள் வெள்ளித் திட்டத்தைக் கொண்டு திருப்தி அடையவில்லை. பொன் திட்டத்தைக் காலப்போக்கில் ஏற்படுத்தவேண்டும் என்று விழைந்தார்கள். பொற்காசுகளைச் சட்டச் செலாவணியாக அறிவிக்கவேண்டும் என்றும், பொன் திட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும் என்றும் பல வணிகசபைகள் கேட்டுக்கொண்டன. பொன் திட்டத்தை ஏற்படுத்த அரசாங்கம் உடனடியாக மறுத்தபோதிலும் மக்களின் கோரிக்கைகளில் ஒன்றைமட்டும் செயல்படுத்த விரும்பியது. 1864-ல் அரசாங்கம் தனது கருவூலங்களில் பொற்காசுகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், ஒரு பொன் சவரனின் மதிப்பு ரூ. 10 ஆகவும் அரைச் சவரனின் மதிப்பு ரூ. 5 ஆகவும் இருக்கும் என்றும் அறிவித்தது.

தாள் செலாவணி

பத்தொன்பதாவது நூற்றாண்டில் வணிக பாங்குகள் யாவும் வெளியீட்டு பாங்குகளாக இருந்தன. அதாவது அக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட பாங்கிடம் நோட்டுகளை வெளியிடும் முற்றுரிமை கொடுக்கப்படவில்லை. ஆரம்ப காலத்தில் வணிக பாங்குகளின் வளர்ச்சிக்கு இது அவசியமாக இருந்தது. நோட்டுகளை வெளியிடும் உரிமை 1861 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி ரத்து செய்யப்பட்டது. மேற்படி தாள் செலாவணிச் சட்டத்தின்படி [Paper

3 பம்பாய் வர்த்தகசபை தனது அறிக்கையில் (1863—64) இவ் விவரத்தைக் கூறியுள்ளது. பார்க்கவும். M. D. Joshi—Currency—printed as chap. 17-in Economic History of India-1857. 1956 Ed. V.B. Singh.

Currency Act-1861] அரசாங்கமே நோட்டுகளை வெளியிடும் பொறுப்பை ஏற்றது. அரசாங்கம் வரையிட்ட நம்பிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் [Fixed Fiduciary System] நோட்டு களை வெளியிட்டு வரும். 1861-ல் மேற்படி நம்பிக்கை வெளியீட் டுத்தொகை ரூ. 4/-கோடியாக இருந்தது.

சாதாரணமாக நோட்டுகளை வெளியிடும் நிறுவனம் அல்லது அமைப்பு அரசாங்கப் பத்திரத்தின் காப்பின் பேரில் வெளியிடும் நோட்டுகளை நம்பிக்கை வெளியீடு என்று சொல்லுவார்கள். அரசாங்கமே நம்பிக்கை வெளியீட்டை நிர்ணயிப்பதாலும், அரசாங்கப் பத்திரங்கள் இதன் வெளியீட்டிற்குக் காப்பாக இருப்பதாலும், அரசாங்கமே இந்த நோட்டுகளை வெளியிடும் பொறுப்பை ஏற்றுள்ளதாலும் நம்பிக்கை வெளியீட்டை அவ்வப் போது உயர்த்துவதில் எவ்விதத் தடையும் இல்லை. நாட்டின் தாள் செலாவணித் தேவைக்கு ஏற்ப நம்பிக்கை வெளியீட்டுத் தொகை உயர்த்தப்பட்டது. 1861-ல் ரூ. 4 கோடியாக இருந்த நம்பிக்கை வெளியீட்டுத் தொகை 1871-ல் ரூ. 6 கோடியாகவும், 1890-ல் ரூ. 8 கோடியாகவும் உயர்த்தப்பட்டன. இத் தொகை 1897-ல் ரூ. 10 கோடியாகவும் 1911-ல் ரூ. 14 கோடியாகவும் இருந்தன.

கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய மூன்று நகரங் களிலும் ரூ. 10, ரூ. 20, ரூ. 50, ரூ. 100, ரூ. 500. ரூ. 1000, ரூ. 10,000, மதிப்புள்ள தாள் செலாவணி நோட்டுகள் வெளி யிடப்பட்டன. அரசாங்கம் மேற்படி நோட்டுகளைத் தங்குதடை யில்லாமல், உச்சவரம்பு இல்லாமல் எப்போதும் ஏற்றுக்கொள்ள முன்வந்தது. பாங்குகளும் இந்த நோட்டுகளை ஏற்றுக்கொண்டு மக்கள் விரும்புகின்ற உலோகக் காசுகளைக் கொடுக்க உறுதி அளித்தன. இருந்தபோதிலும் பொதுமக்களிடம் மேற்படி பண நோட்டுகள் அதிக அளவிற்குப் பிரபலமாக இல்லை. அக் காலத்தில் பணத்தின் மதிப்பு மிகவும் அதிகமாக இருந்ததும், பணநோட்டு களை முதன்முதலில் மக்கள் ஏற்கத் தயங்கியதும், குறைந்த மதிப் புள்ள நோட்டு ரூ. 10 ஆக இருந்ததும் இதற்கு முக்கியக் காரணங்கள் ஆகும். 1891-ல் முதலில் ரூ. 5 நோட்டுகள் வெளியிடப்பட்டன. ஆனால், தாள் பண நோட்டுகளைப் புழக்கத் திற்குக் கொண்டுவரும் முயற்சிகள் எதிர்பார்த்த பலன்களை அளிக்கவில்லை.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் தாள் பண வெளியீடு எதிர் பார்த்த அளவிற்கு ஏன் வெற்றி அடையவில்லை என்பதைக் காண்போம். அப்போது வெளியிட்ட நோட்டுகள் நாடெங்கி

லும் செல்லுபடியாகக் கூடியவையாக இல்லை. இவை வட்டார அடிப்படையில் வெளியிடப்பட்டன; வெளியிட்ட அலுவலகங்களில் மட்டுமே இவற்றை ரூபாய், காசுகளாக மாற்றிக்கொள்ள முடியும். ஆனால், இக் கட்டுப்பாடுகள் இருபதாவது நூற்றுண்டின் தொடக்கத்தில்தான் படிப்படியாக நீக்கப்பட்டன; அப்போது வெளியிட்ட நோட்டுகள் நாடெங்கிலும் செல்லுபடியாகும் என்றும், எல்லா அரசு கருவூலங்களிலும் இவற்றை ரூபாய், காசுகளாக மாற்றிக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டன. 1903-ல் முதன்முதலில் ரூ. 5 நோட்டுகளும், 1910-ல் ரூ. 10 ரூ. 50 நோட்டுகளும், 1911-ல், ரூ. 100 நோட்டுகளும் நாடெங்கிலும் ஏற்கக் கூடிய செலாவணி நோட்டுகளாக அறிவிக்கப்பட்டன.

1861-லிருந்து தாள் செலாவணி நோட்டுகள் வெளியிடப்படுகின்றன என்றும், 1864-லிருந்து மீண்டும் அரசாங்கத்தின் கருவூலங்களில் பொற்காசுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்றும் கூறினேம். இருந்தபோதிலும் செலாவணியில் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. இந்தியாவில் தாள் செலாவணி அமைப்பையும், அதை விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகளையும் கண்டு அறிவதற்கு 1866-ல் ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.[4] அதே ஆணைக்குழுவிடம் பொற்காசுகளைச் சட்டச் செலாவணியாக்கும் வழிமுறைகளை ஆராய்ந்து கூறுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ் வாணைக்குழு தாள் செலாவணியை விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகளைக் கூறியது. அதைத்தவிர பொற்காசுகளை மக்கள் விரும்புகின்றனர் என்றும், ரூ. 15, ரூ. 10, ரூ. 5 மதிப்புடைய பொற்காசுகளை வெளியிடுவதன் மூலம் எதிர்காலத்தில் இதே மதிப்புடைய தாள் பண நோட்டுக்களைப் புழக்கத்திற்குக் கொண்டுவருவது எளிதாக்கப்படும் என்றும் கூறியது. ஆனால், இதன் பரிந்துரைகளை அரசு ஏற்கவில்லை. அதற்குப் பதிலாகப் பொற்காசுகளின் உலோக மதிப்பை 5% உயர்த்தியது. இதனால் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

பொன் வெள்ளி விகிதம்

இந்தியாவில் பணமுறை அல்லது பணத்திட்டம் என்பது அரசாங்கத்தின் உறுதியான கொள்கைகளைப் பிரதிபலிக்கவில்லை. நீண்டகாலப் பொருளாதார நலன்களையும் அவை பாதுகாக்கவில்லை. நிலையற்றகொள்கையால், காலப்போக்கில் ஏற்படும் ஏதேச்சையான நிகழ்ச்சிகளின் அதிர்ச்சிகளுக்கெல்லாம் இந்தியப் பணத்

[4] Mansfield Commission.

திட்டம் உள்ளாக்கப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் நிலையற்ற பணத்திட்டக் கொள்கையைவிட, பன்னாட்டு அளவில் பண உலோகங்களின் அளிப்பிலும், தேவையிலும் தோன்றிய சமனற்ற தன்மைகள் இந்தியப் பணத்திட்டத்தை அலைக்கழித்தன. சென்ற நூற்றாண்டின் மையத்தில் பொன் உற்பத்தி பன்னாட்டு அளவில் உயர்ந்து சென்றதால், அதன் மதிப்பு வெள்ளி அடிப் படையில் வீழ்ந்தது. எனவே, இந்திய அரசாங்கம் அவற்றை ஏற்க மறுத்தது. இதைத் தொடர்ந்து பணத் தட்டுப்பாடும், நெருக்கடியும் தோன்றின. சென்ற நூற்றாண்டின் கடைசி 25 ஆண்டுகளில் இதற்கு நேர்மாறான சூழல் உருவாகியது. உலகெங்கிலும் வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சி அடைந்தது. பல ஐரோப்பிய நாடுகள்—காட்டாக, ஜெர்மனி, நார்வே, ஸ்வீடன், டென்மார்க், மற்றும் ஃபிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, பெல்ஜியம், இத்தாலி, கிரீஸ் முதலியன—வெள்ளியைப் பண உலோகமாக ஏற்க மறுத்தன. நெடுங்காலமாக வெள்ளி ஒரு பணஉலோகமாகச் செயல்பட்டதால் அதன் தேவையும் அதிகமாக இருந்தது. அதன் பணத்தேவை சுருங்கியதும், வெள்ளியின் மதிப்பும் வீழ்ச்சி அடைந்தது. அப்போது பொன் மதிப்பு, வெள்ளி அடிப்படையில் உயர்ந்தது. 1875-ல் 58 பென்ஸ் ஆக இருந்த ஓர் அவுன்ஸ் வெள்ளியின் மதிப்பு 1892-ல் 37½ பென்ஸ்ஆகவும், 1899-ல் 27 பென்ஸ் ஆகவும் வீழ்ந்தது. அதாவது கால் நூற்றாண்டுக் காலத்தில் வெள்ளியின் மதிப்பு பாதிக்கும் குறைவாக வீழ்ச்சி அடைந்தது,

பண உலோகத்தின் மதிப்புடன், அதன் அடிப்படையில் இணைக்கப்பட்ட செலாவணிகளின் மதிப்பும் மாற்றம் அடைந்தது. ஸ்டர்லிங் பொன்னுடன் இணைக்கப்பட்டு இருந்தது; அதைப்போலவே ரூபாய் வெள்ளியுடன் இணைக்கப்பட்டு இருந்தது. இதனால் பொன்-வெள்ளி விகித மாற்றங்கள் நேரிடையாக ஸ்டர்லிங்-ரூபாய் விகிதத்தைப் பாதித்தன. 1871-ல் ஒரு ரூபாயின் மதிப்பு 2 ஷி. ஆக இருந்தது. 1892-ல் இது 1ஷி. 2பெ. ஆக வீழ்ந்தது.

இந்திய அரசாங்கம் ஆண்டுதோறும் நிருவாகச் செலவிற்காக £ செலாவணியில் பிரிட்டனுக்குக் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தவேண்டும். இந்தியாவில் வரியாக வசூலித்த தொகையை £ ஆக மாற்ற வேண்டும். ஆனால் ஸ்டர்லிங்-ரூபாய் பரிவர்த்தனை விகிதம் நிலையற்று இருந்ததால் ஆண்டுதோறும் வசூலிக்க வேண்டிய வரித்தொகையிலும் ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டன. இதை 1888-93 ஆண்டுகளில் நிதி அமைச்சராக இருந்த ஸர் டேவிட் பார்பர் அழகாக விளக்கி உள்ளார். 'வரவுசெலவுத் திட்-

டத்தைச் சமர்ப்பிக்கும்போது ரூ. 15·95 இலட்சத்திற்குத் துண்டு விழும் என்று எதிர்பார்த்த நிலைமை ரூபாயின் (ஸ்டர்லிங்) மதிப்பு ஒரு பென்ஸ் உயருவதால் உபரியான வரவுசெலவுத் திட்டமாகி விடும்; மாறாக ரூபாயின் மதிப்பு ஒரு பென்ஸ் வீழ்ச்சி அடைந்தால் மூன்று கோடி ரூபாய்க்கும் அதிகமாகத் துண்டு விழுந்துவிடும்.' பொன்-வெள்ளி விகித அடிப்படையில் ஸ்டர்லிங்–ரூபாய்ப் பரிவர்த்தனை விகிதம் ஆண்டுதோறும் மாறிக்கொண்டேயிருந்தமையால் நிருவாகச் செலவிற்காகவும், இதர ஸ்டர்லிங் செலுத்துதல்களுக்காகவும் எந்த அளவுக்கு வரிவிதிக்க வேண்டும் என்பதை வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கும் போதே உறுதியாகக் கூற முடியவில்லை. இந்தியாவில் நிதித்துறையில் ஒரு நிலையற்ற தன்மை ஏற்பட்டது. இதைப்போலவே பன்னாட்டு வாணிகமும் நாடுகளுக்கு இடையே மூலதன முதலீடும் பெரிதும் பாதிக்கப் பட்டன.

ஹெர்ஷல் கமிட்டி

இந்தியாவின் பணத்துறையிலும் நிதித்துறையிலும் இதுவரை கண்டிராத ஒரு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது; இதனால் இந்திய அரசாங்கம், வரி செலுத்துபவர்கள், வியாபாரிகள், அரசாங்கத்திடம் பணியாற்றும் ஆங்கிலேய ஊழியர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டார்கள். இந்தியச் செலாவணி அமைப்பைச் சீர்படுத்துமாறு இந்திய அரசாங்கம் பிரிட்டனைக் கேட்டுக்கொண்டது. இதற்கிணங்க 1892-ல் ஹெர்ஷல் பிரபு தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இந்தியாவில் பொன் திட்டத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து கூறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

பொன் திட்டத்தை இந்தியாவில் ஏற்படுத்துவதில் எவ்விதப் பிரச்சினையும் தோன்றவில்லை என்று ஹெர்ஷல் கமிட்டி கூறியது. இந்தியாவில் நெடுங்காலமாகப் பொற்காசுகள் உபயோகிக்கப் பட்டுள்ளன. உண்மையில் பொற்காசுகள் உபயோகிக்காத காலத்தைக் குறிப்பிடுவதுதான் கடினம். இந்தியாவில் பொன் திட்டத்தை ஏற்படுத்துவதில் எவ்விதச் சிரமமும் ஏற்படாது என்றாலும் அதற்கு முன்னர் இந்திய ரூபாயின் செலாவணிப் பரிவர்த்தனை மதிப்பை நிலைபெறச் செய்ய வேண்டும் என்று கமிட்டி கூறியது.

பாதகச் செலுத்தல்நிலை காரணமாக இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்தது என்று கூறுவது தவறு. உண்மையில் வெள்ளி உலோகத்தின் மதிப்பு பொன் அடிப்படையில் வீழ்ச்சி

யுற்று இருப்பதே இதற்கு முக்கியக் காரணமாகும். எனவே, ரூபாயின் மதிப்பை நிலைபெறச் செய்வதற்கு வெள்ளி உலோக இறக்குமதியை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும். அதனுடன் காசு சாலைகளில் மக்கள் விரும்பியபோது பண உலோகத்தைக் காசுகளாக அச்சடித்துக்கொள்ளும் உரிமையையும் ரத்து செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் ரூபாயின் அளிப்பைக் கட்டுப்படுத்தவும், அதன் மதிப்பை நிலைபெறச் செய்யவும் முடியும் என்று கூறியது.

இந்திய ரூபாயின் செலாவணிப் பரிவர்த்தனை மதிப்பை 1ஷி. 4பெ. என்ற மட்டத்தில் நிலைபெறச் செய்யவேண்டும். அதாவது ஒரு ரூபாயின் தங்கச் சமன் மதிப்பு 7.53344 குன்றி மணிகளாக இருக்கும்; ஒரு சவரன் ரூ. 15–க்குச் சமமாக இருக்கும். இங்ஙனம் ரூபாயின் செலாவணி மதிப்பை நிலைபெறச் செய்யவும், நாளடைவில் பொற்காசுகளின் புழக்கத்தை விரிவுபடுத்தவும் அதிக அளவுக்குச் சவரன்களையும், அரைச் சவரன்களையும் உபயோகிக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

மேலே கூறிய பரிந்துரைகள் யாவும் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1893–ல் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி காசு சாலைகளில் பண உலோகத்தை மக்கள் விரும்பியபோது காசுகளாக அச்சிடும் உரிமை ரத்து செய்யப்பட்டது. 1835-லிருந்து மக்களுக்கு இந்த உரிமை கொடுக்கப்பட்டு இருந்தது. அதன்படி பொற்காசுகளையும் வெள்ளிக்காசுகளையும் மக்கள் அச்சிட்டு வந்தார்கள். 1893–ல் இவ் வுரிமை ரத்து செய்யப்பட்டதால், வெள்ளித்திட்டம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. 1893-க்குப் பின்னரும் வெள்ளி ரூபாய்கள் புழக்கத்தில் இருந்தன. அவை தொடர்ந்து அளவை அலகாகப் பயன்பட்டன. இருந்த போதிலும் வெள்ளி உலோக இறக்குமதி தடைப்பட்டதாலும், உலோகத்தைக் காசுகளாக மக்கள் அச்சிட முடியாமையாலும் 1893-ல் வெள்ளித்திட்டம் முடிவுபெற்றது என்று கூறுகிறோம்.

பொன் பரிவர்த்தனைத் திட்டம்[5]

இந்தியாவில் யாரும் திட்டமிட்ட வகையில் பொன் பரிவர்த்தனைத் திட்டத்தை ஏற்படுத்தவில்லை. இது அரசாங்கத்தின் இலட்சியமாகவோ மக்களின் விருப்பமாகவோ இல்லை. இதை நடைமுறையில் தோற்றுவிக்கக் காரணமாக இருந்த அதிகாரிகளும் இந்தியாவில் தாங்கள் செய்யும் முடிவினாலும் ஏற்பாட்டினு

5 ஆசிரியரின் 'பணவியற் பொருளாதாரம்' என்ற நூலில் அத்தி. 28-ன் சுருக்கம்.

லும் பொன் பரிவர்த்தனைத் திட்டம் ஏற்படப் போகிறது என்று உணரவில்லை. தற்செயலாகத் தோன்றும் வரலாற்று நிகழ்ச்சிகளில் இதையும் ஒன்றாகக் கருதவேண்டும்.

இந்தியாவில் அரசாங்கம், வர்த்தகச் சபைகள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் பொன் செலாவணித் திட்டத்தை ஏற்படுத்த விரும்பினார்கள். 1893 வரை வெள்ளித் திட்டம் நாட்டில் நிலவியது. வெள்ளித் திட்டத்தின் மறைவிற்கும், பொன் திட்டத்தின் தொடக்கத்திற்கும் இடையே கொஞ்சம் கால இடைவெளி இருக்கவேண்டியது அவசியம் என்று அரசாங்கம் கருதியது. இவ்விடைக்காலம் 1893–லிருந்து 1899 வரை நீடித்தது.[6]

ரூபாயின் செலாவணிப் பரிவர்த்தனை மதிப்பை நிலைபெறச் செய்து இந்தியாவில் பொன் திட்டத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து கூறுவதற்காக 1898-ல் ஃபௌலர் கமிட்டி (Fowler Committee) நியமிக்கப்பட்டது. இந்தியாவில் திருப்திகரமான செலாவணி முறையை ஏற்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாக இருக்கும். ஃபௌலர் கமிட்டியின் முக்கியப் பரிந்துரைகளாவன :

(1) இந்திய ரூபாயின் செலாவணிப் பரிவர்த்தனை மதிப்பை 1ஷி. 4பெ. ஆக நிலைபெறச் செய்தல்.

(2) இந்தியாவில் வெள்ளி ரூபாய்கள் தொடர்ந்து உச்ச வரையறை இல்லாமல் ஏற்கக்கூடிய சட்டச் செலாவணியாக இருக்கும்.

(3) பிரிட்டிஷ் சவரன்கள் (பொற்காசுகள்) இந்தியாவின் சட்டப் பணமாக அறிவிக்கப்படும். மேலே கூறிய விகிதத்தில் ரூபாயும் ஸ்டர்லிங்கும் பரிவர்த்தனை செய்யப்படும்.

(4) அரசாங்கம் மேலே குறிப்பிட்ட விலையில் பொற்காசுகளை வாங்க உறுதி அளித்தது. அதாவது பொற்காசுகளை ஏற்றுக் கொண்டு அவற்றுக்குப் பதிலாக வெள்ளி ரூபாய்களை அரசாங்கம் கொடுக்கும்.

(5) இந்திய அரசாங்கத்திடம் போதிய அளவு 'பொன் இருப்பு இல்லாத காரணத்தால் வெள்ளி ரூபாய்களை ஏற்றுக் கொண்டு பொற்காசுகளைத் தருவதற்கு உறுதி அளிக்கவில்லை.

6 பார்க்கவும் D. K. Malhotra—History and Problems of Indian Currency and Finance, 6th edition, Minerva—New Delhi–p. 8.

இருந்தபோதிலும் அரசாங்கத்திடம் போதிய அளவு பொற் குவிப்பு ஏற்பட்ட பின்னர் இப் பொறுப்பை ஏற்கலாம் என்று ஃபௌலர் கமிட்டி கருத்துத் தெரிவித்தது.

(6) அரசாங்கத்திடம் பொன் இருப்பை உருவாக்கும் நோக்கத்தோடு ஒரு சிறப்பு நிதியை ஏற்படுத்துமாறு பரிந்துரைத் தது. ரூபாய்க் காசுகளை அச்சிடுவதால் ஏற்படும் இலாபத்தைக் கொண்டு இந்தச் சிறப்பு நிதி ஏற்படுத்தப்படும்.

(7) இந்தியாவில் உள்நாட்டுத் தேவைகளுக்கு ரூபாயை ஏற்றுக்கொண்டு பொன் கொடுக்க வேண்டும் என்று கூறவில்லை என்றாலும், நாட்டின் வாணிகம் பாதகம் அடையும்போது பொன் ஏற்றுமதி செய்யவும், ரூபாயைப் பொன்னாக மாற்றவும் அரசாங்கம் உறுதி அளிக்கவேண்டும் என்று இக் கமிட்டி கூறியது. பாதகச் செலுத்தல் நிலையால் ரூபாயின் செலாவணி மதிப்பு வீழ்ச்சி அடையாமல் தடுக்க இது உதவும்.

ஃபௌலர் கமிட்டியின் பரிந்துரைகள் யாவும் ஏற்றுக்கொள் ளப்பட்டன. இவை 1899ஆம் ஆண்டுச் சட்டத்தால் செயல்படுத் தப்பட்டன. முழுச் சவரன்களும், அரைச் சவரன்களும் சட்டச் செலாவணிகளாக அறிவிக்கப்பட்டன. பொற்காசுகளை அதிக அளவிற்குப் புழக்கத்தில் விடவேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்க அலுவலகங்கள், தபால் நிலையங்கள், கருவூலங்கள் முதலிய பல அமைப்புகளும் பொற்காசுகளை வெளியிட்டன. திடீரென்று பொற்காசுகளின் புழக்கம் அதிகரித்ததால் அவற்றின் பரிவர்த்தனை மதிப்புக் குறைந்தது. ஒரு சவரனுக்குக் கால் ரூபாய் வரை கழிவுசெய்து ரூபாயாக மாற்றினார்கள். மக்கள் பொற் காசுகளை வைத்துக்கொள்ளாமல் திரும்பவும் அரசாங்கத்திடம் செலுத்திவிட்டார்கள். இதற்குப் பல காரணங்கள் இருந்தன என்றாலும் மக்கள் பொற்காசுகளை விரும்பவில்லை என்று தவறாக விளக்கம் கூறப்பட்டது. உண்மையில் அப்போது இருநத பொருளாதார நிலையுடன் இந் நிகழ்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்க வில்லை. நாடெங்கிலும் ஏற்பட்ட பஞ்சத்தால், மக்களின் வருமானம் மிகவும் குறைவாக இருந்தது. இந் நிலையில் 15 ரூபாய் மதிப்புள்ள சவரன்களை உபயோகிக்க முடியாதவர்களாக இருந் தார்கள். பொற் சவரன்களைவிடக் குறைந்த மதிப்பு உடைய ரூபாய்க் காசுகளுக்கும், துணைக் காசுகளுக்கும் புழக்கத்தில் அதி கத் தேவையிருந்தன. பொற்காசுகளை மக்கள் ஏற்க முடியாத நிலை யில்தான் அவை அரசாங்கத்திடம் திருப்பி அனுப்பப்பட்டன.

இத் தருணத்தில் வெள்ளி ரூபாய்களுக்கான தேவை உயர்ந்து சென்றது. அதை அரசாங்கம் அச்சிட ஆரம்பித்தது. வெள்ளியின்

உலோக மதிப்பு வீழ்ச்சி அடைந்ததாலும் ரூபாயின் பண மதிப்பு நிலைபெறச் செய்யப்பட்டதாலும் வெள்ளி ரூபாய்கள் இந்தியாவில் குறிக் காசுகளாக (Token coins) மாறிவிட்டன. குறிக் காசாக வெள்ளி ரூபாயை அரசாங்கம் வெளியிட்டதால் கிடைத்த இலாபத்தைக் கொண்டு ஒரு சிறப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. ஆனால், பொற்காசுகளை மீண்டும் புழக்கத்திற்குக் கொண்டுவர அரசாங்கம் முற்படவில்லை. இவ்வகையில் ஃபௌலர் கமிட்டியின் பரிந்துரைகள் 20ஆவது நூற்றாண்டு ஆரம்பமாகும் முன்னரே புறக்கணிக்கப்பட்டது எனலாம்.

கவுன்சில் பற்றோலைகள் (Council Drafts)

1893–க்கு முன்னதாக—அதாவது ஹெர்ஷல் கமிட்டிக்கு முன்னதாக—கவுன்சில் பற்றோலை என்று வழங்கப்படும் ரூபாய் உண்டியல்கள் வரையப்பட்டன. இந்தப் பற்றோலை அல்லது உண்டியலைக் கொண்டு வருபவர் வசம் இதில் குறிப்பிட்ட தொகையைக் (ரூபாயில்) கொடுக்குமாறு இந்திய அரசாங்கத்திற்கு இலண்டனில் உள்ள இந்தியாவிற்கான மந்திரி (Secretary of State for India) கட்டளையிடுவார். இந்தக் கட்டளையைத்தான் கவுன்சில் பற்றோலை அல்லது ரூபாய் உண்டியல் என்று வழங்குகின்றோம்.

இலண்டனில் உள்ள இந்தியாவிற்கான மந்திரியால் வரையப்பட்ட பற்றோலைகள் அங்குள்ள பாங்குகளுக்கும், வியாபாரிகளுக்கும், நிறுவனங்களுக்கும் '£' செலாவணிக்கு விற்கப்படுகின்றன. இதனால் இந்தியாவிற்கான மந்திரியிடம் ஸ்டர்லிங் இருப்புத் தொகை ஏற்படுகிறது.

கவுன்சில் பற்றோலையை விற்பதால் கிடைக்கும் ஸ்டர்லிங் தொகை 1893 வரை குறிப்பிட்ட இனங்களுக்காக மட்டுமே உபயோகிக்கப்பட்டன. காட்டாக, இந்திய அரசாங்கம் இங்கிலாந்து அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிருவாகச் செலவுகளுக்கு இதைப் பயன்படுத்தலாம். எனவே, ஆண்டு தோறும் நிருவாகச் செலவுகளுக்கான அளவிற்கு மட்டுமே ரூபாய் உண்டியல்கள் வரையப்பட்டன.

கவுன்சில் பற்றோலையினால் ஸ்டர்லிங் செலாவணியை ரூபாயாக மாற்றுவதும், ரூபாயை ஸ்டர்லிங்காக மாற்றுவதும் தவிர்க்கப்பட்டன. 1893–க்கு முன்னர்க் குறிப்பிட்ட அளவிற்கு மட்டும் வரையப்பட்ட ரூபாய் உண்டியல்கள், அதன் பின்னர் உச்சவரம்பு ஏதும் இல்லாமல் வரையப்பட்டன. 1893-ல் ஒரு ரூபாயின் மதிப்பு அதிகப் பட்சம் 1ஷி. $4\frac{1}{8}$ பென்ஸ் ஆக இருந்தது. எந்த

அளவிற்கு ரூபாய்த் தொகை தேவைப்பட்டாலும் ரூபாய் உண்டியல்களைத் தாம் வரையத் தயாராக இருப்பதாக இந்தியாவிற்கான மந்திரி அறிவித்தார்.

ரூபாய் உண்டியல்கள் ஏன் இலண்டனில் வரையப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிப்பதால், இந்தியப் பொருள்களை வெளிநாடுகளில் வாங்கியவர்கள், தாங்கள் கொடுக்கவேண்டிய தொகையை ரூபாயில் செலுத்த விரும்புகிறார்கள். எனவே, இலண்டனில் ரூபாய்த் தேவை அதிகரிக்கிறது. சாதகச் செலுத்துதல்நிலை ஏற்படுவதைத் தான் இது சுட்டிக்காட்டுகிறது. இந்தியாவின் செலுத்தல் நிலை சாதகம் அடைவதால் இரு விளைவுகள் ஏற்படலாம். ஒன்று, இந்தியாவில் பொன் இறக்குமதி செயயப்படலாம்; இரண்டு, இந்திய ரூபாயின் மதிப்பு வெளிநாட்டுச் செலாவணிகளின் அடிப்படையில் உயரலாம். ஆனால், கவுன்சில் பற்றேலை முறையினால் இந்த இரண்டும் தடைசெய்யப்படுகின்றன. கவுன்சில் பற்றேலை முறையினால் ஒரு ரூபாயின் ஸ்டார்லிங் மதிப்பு அதிகப்பட்சம் 1 ஷி. 4⅛பெ. ஆக இருக்கலாம். அதைவிட அதிகமாக அங்காடியில் ரூபாயின் மதிப்பு உயருமானால் இந்தியாவிற்கான மந்திரியிடம் ரூபாய் உண்டியல்களை வாங்கிக்கொள்ளுதல் இலாபகரமாக இருக்கும். இந்தியாவின் செலுத்தல்நிலை சாதகம் அடையும் காலங்களில் இம்முறை இந்தியாவிற்குப் பாதகமாக இருக்கும்; ஆனால், இந்தியாவின் செலுத்தல்நிலை பாதகம் அடைந்துள்ள காலங்களில் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியுறாமல் இருக்கும் என்று உறுதியாகக் கூற முடியவில்லை. காட்டாக, 1907-ல் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. அப்போது இந்தியாவில் மழை பெய்யாத காரணத்தால் விளைச்சலும் ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டன. அதே ஆண்டில் அமெரிக்காவில் ஒரு நிதி நெருக்கடி ஏற்பட்டது. இதனால் இந்திய ரூபாயின் தேவையும், அதன் மதிப்பும் உலக அங்காடியில் குறைந்து சென்றன. அவ்வாறு ரூபாயின் மதிப்புக் குறையும் காலங்களில் இலண்டனில் உள்ள பொன்திட்டக் காப்பிலிருந்து பொன் அல்லது ஸ்டார்லிங் செலாவணியை வெளியிட வேண்டும். ஆனால், மேற்படி காப்பு நீர்மையற்றதாக இருந்தது. அதில் போதிய அளவுக்குப் பொன் இருப்பாக இல்லை. இதனால் இந்திய ரூபாயின் மதிப்பை நிலைபெறச் செய்ய முடியவில்லை.[7]

இந்தியாவில் பொன் பரிவர்த்தனைத் திட்டம் ஏற்படுவதற்கு மறுகவுன்சில் பற்றேலை (Reverse Council Drafts) காரணமாக

[7] Vera Anstey, op. cit., p. 414

இருந்தது. இது இந்திய அரசாங்கத்தால் வரையப்பட்ட ஸ்டர்லிங் உண்டியல் ஆகும். இதை வைத்திருப்பவர்களுக்குக் குறிப்பிட்ட ஸ்டர்லிங் தொகையை இந்தியாவிற்கான மந்திரி இலண்டனில் கொடுக்க வேண்டும். அதற்குச் சமமான ரூபாய்த் தொகையை இந்திய அரசாங்கம் பெற்றுக் கொள்ளுகிறது.

இந்தியாவில் வரையப்படும் ஸ்டர்லிங் உண்டியல்கள் ஒரு ரூபாய்க்கு 1ஷி. $3\frac{29}{32}$ பென்ஸ் ஆக இருக்கும். அதாவது, ரூபாயின் குறைந்தபட்ச பரிவர்த்தனை விகிதமாக மேற்படி செலாவணி விகிதம் செயல்படும். பாதகச் செலுத்தல்நிலை காரணமாகவோ, இதர மாறுதல்கள் காரணமாகவோ இந்திய ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பு மேலும் வீழ்ச்சி அடையாமல் தடுக்கும் காப்பாக இது செயல்பட்டது.

கவுன்ஸில் பற்றுச்சீட்டு விகிதம் இந்திய ரூபாயின் உயர்ந்தபட்ச மதிப்பையும், மறுகவுன்சில் பற்றுச்சீட்டு விகிதம் ரூபாயின் குறைந்த பட்ச மதிப்பையும் முறையே பாதுகாக்க உறுதி அளித்தன. இவை முறையே பொன் இறக்குமதி எல்லை (Gold Import point), பொன் ஏற்றுமதி எல்லை (Gold Export point) ஆகவும் செயல் பட்டன. பொன் இறக்குமதிக்குப் பதிலாக இலண்டனில் ஸ்டர்லிங் இருப்பு உயர்ந்துசென்றது. பொன் ஏற்றுமதிக்குப் பதிலாக ரூபாயின் இருப்பு இந்தியாவில் உயரும். இவை ரூபாயின் ஸ்டர்லிங் மதிப்பை நிலைபெறச் செய்தன.

பொன் பரிவர்த்தனைத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன. முதலில் இந்திய ரூபாய் குறிப் பணமாகவும் மாற்றுரிமையற்ற பணமாகவும் இருக்கவேண்டும். வெள்ளியின் மதிப்புப் பன்னாட்டு அடிப்படையில் வீழ்ச்சியுற்றதால் இந்திய வெள்ளி ரூபாய் திட்டப் பணம் என்ற நிலையிலிருந்து வழுவி குறிப் பணமாகியது. இரண்டாவதாக, அறிவிக்கப்பட்ட விகிதத்தில் குறிப் பணத்தைப் பொன்திட்டத்தில் உள்ள செலாவணியாக மாற்றவேண்டும். இதற்கு ரூபாய் உண்டியல்களும் (கவுன்சில் பற்றுச்சீட்டுகளும்), ஸ்டர்லிங் உண்டியல்களும் (மறுகவுன்சில் பற்றுச்சீட்டுகளும்) வழிவகுத்தன. மூன்றாவதாக, பொன் அல்லது பொன்னாக மாற்றக்கூடிய செலாவணிக் காப்பை ஏற்படுத்த வேண்டும். இதைப் பொன்திட்டக் காப்பு என்ற பெயரில் ஏற்படுத்தினார்கள். இது இங்கிலாந்தில் இருந்தது.

பொன்திட்டக் காப்பில் ஒரு பகுதி இலண்டனிலும், மற்றொரு பகுதி இந்தியாவிலும் ஏற்படுத்தப்பட்டன. அதைத் தவிர மேலும் இரு முக்கிய நோக்கங்களுக்காகவும் அரசாங்கத்திடம்

காப்பு இருப்புகள் ஏற்பட்டன. இவை மூன்று முக்கியப் பணிகளுக்கானவை. முதலில் தாள் செலாவணி நோட்டுகளை வெளியிடுவதற்கான காப்புகள். இவை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏற்பட்டன. 1861-ல் பண நோட்டுகளை வெளியிடும் முற்றுரிமையை அரசாங்கம் எடுத்துக்கொண்டது முதல் 1898 வரை உலோகக் காப்புகள் யாவும் வெள்ளியாகவே (வெள்ளிக் காசுகளாகவே) இருந்தன. 1898-ல் உலோகக் காப்பில் ஒரு பகுதி பொற்காசுகளாக இருக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. 1900-ல் மேற்படி பொற்காசுகளின் இருப்பில் ஒரு பகுதியை இலண்டனில் வைத்துக்கொள்ளலாம் என்று அறிவித்தார்கள். இவ்வாறு பண நோட்டுகளை வெளியிடுவதற்கான காப்பு இருப்புகள் இந்தியாவிலும் இலண்டனிலும் ஏற்படுத்தப்பட்டன.

இரண்டாவதாக, பொன்திட்டக் காப்புகள். இவை இந்தியாவிலும் இலண்டனிலும் ஏற்படுத்தப்பட்டன. ஃபௌலர் கமிட்டியின் பரிந்துரைக்கு ஏற்பப் பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு ரூபாய்களைக் கொடுக்க அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டது. அரசாங்கத்திடம் உள்ள பொற்காசுகளின் இருப்பு அதிகரித்த பின்னர் இதைப் பொன்திட்டக் காப்பாகப் பயன்படுத்தலாம் என்றும் கூறப்பட்டது. நாளடைவில் மாற்று உரிமையை ஏற்படுத்தவேண்டுமானுல் இந்தியாவிலேயே பொற் காப்பு இருக்க வேண்டியது அவசியம். ஆனுல், இந்தியாவிற்கான மந்திரி இதற்கு அனுமதி அளிக்கவில்லை. எனவே, பொன்திட்டத்திற்கான பொன் இருப்பு இந்தியாவில் இருப்பதற்குப் பதிலாக இலண்டனில் ஏற்படுத்தப்பட்டது.

மூன்ருவதாக, ஆண்டுதோறும் ஏற்படும் நிருவாகச் செலவுகளுக்கான இருப்புத் தொகை. இது இலண்டனிலும், இந்திய அரசாங்கத்திடமும் இருக்கும். இவ்வாறு தனித்தனி நோக்கங்களுக்கான மூன்று நிதிகளையும் முறையாகப் பயன்படுத்தியிருப்பார்களேயானுல், பல குழப்பங்களும் ஐயப்பாடுகளும் ஏற்படாது இருந்திருக்கும். ஆனுல், இவை பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இதனுல் ஒரு தெளிவற்ற நிலைமை ஏற்பட்டது.

பொன் இருப்புகளை இந்தியாவிலேயே வைத்துக்கொள்ளவில்லை என்பதைத் தேசியப் பொருளாதாரக் கருத்தினர் திறனுய்வு செய்துள்ளனர். பொற்காப்புகளை இலண்டனில் வைத்துக் கொண்டதும், இந்தியாவிலிருந்து அவ்வப்போது பொற்காசுகளும், பொற்கட்டிகளும் இலண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதும்

இவர்களின் கவனத்தை ஈர்த்தன. இந்திய மக்கள், வணிகர்கள், அரசாங்கம் ஆகியோரின் நல இழப்பின் அடிப்படையில்தான் இப் பொற்காப்புகள் உருவாக்கப்பட்டன என்றாலும், இந்தியாவின் பொதுவான சமூக, பொருளாதார நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் இவை நிருவகிக்கப்படவில்லை என்பதுடன், இவற்றின் நிருவாகத்தில் இந்தியர்களுக்கோ இந்திய அரசாங்கத்திற்கோ உரிமை அல்லது வாய்ப்பு ஏதும் அளிக்கப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டினார்கள். இப் பொற்காப்புகள் இலண்டன் பண அங்காடியின் கூறாக இருந்தன. இதனால் இவற்றின் நிருவாகம் இங்கிலாந்து பாங்கின் நலன்களையும், இலண்டன் பண அங்காடியின் நலன்களையும் உயர்த்திய அளவிற்கு இந்திய மக்களின் நலன்களை மேம்படுத்தவில்லை. அதைத்தவிர நெருக்கடியான காலத்தில் இந்திய ரூபாயை நிலைபெறச் செய்வதற்குக்கூட இது பயன்படவில்லை.

பொன் திட்டத்தை ஏற்படுத்துவதற்காகப் பொன் காப்புத் திரட்டப்பட்டது. ஆனால், இந் நோக்கம் நிறைவேற்றப்படும் முன்னர் இடைக்கால ஏற்பாடாகச் செய்தமுடிவுகளும், நிருவாகத் தீர்மானங்களும் காலப்போக்கில் நிலைத்துவிட்டன. இங்ஙனம் அக்காலத்தில் நிலவிய பழக்கவழக்கங்கள், மரபுகள் நிருவாக வசதிக்காகச் செய்யப்பட்ட முடிவுகள் முதலியன பொன் பரிவர்த்தனைத் திட்டத்தை உருவாக்கக் காரணமாக இருந்தன. இதை யாரும் விரும்பி ஏற்கவில்லை. இது திட்டமிட்ட கொள்கையின் வெளிப்பாடாகவும் விளங்கவில்லை. எதேச்சையாகத் தோன்றிய வரலாற்று நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று.

பொன் பரிவர்த்தனைத் திட்டம் கிட்டத்தட்ட 1917 வரை இந்தியாவில் தொடர்ந்து நீடித்தது. இதைத் திறனாய்வு செய்தவர்கள் இது பொன் பரிவர்த்தனைத் திட்டமாகச் செயல்படவில்லை என்பதையும், உண்மையில் இது ஸ்டர்லிங் பரிவர்த்தனைத் திட்டமாகவே செயல்பட்டது என்றும் கூறுவார்கள்.[8] இப் பரிவர்த்தனை 1917–ல் முடிவு பெற்றதற்கான காரணத்தை இங்கே காண்போம். முதலாவது உலகப்போரின் காரணமாக, வெள்ளியின் உலோக மதிப்பு (பொன் அடிப்படையில்) உயர்ந்துசென்றது. ஓர் அவுன்சு வெள்ளியின் விலை 43 ஷி. என்ற மட்டத்தைக் கடந்தது. இந்த மட்டத்தில் ரூபாய் முழு மதிப்புடைய திட்டப்

[8] இங்ஙனம் திறனாய்வு செய்தவர்களில் Sir Basil Blackett என்பவர் முக்கியமானவர். 1927-ல் ஹில்டன்-யங் அரசு ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் கூறுகையில் இங்ஙனம் கூறியுள்ளார். பார்க்கவும் Vera Anstey முன் கூறியபடி பக். 425 fn. 5

பணமாக மாறியது. வெள்ளியின் விலை மேலும் உயர்ந்ததால் ரூபாயின் உலோக மதிப்பு அதன் பண மதிப்பைவிடப் பன்மடங்கு அதிகமாக உயர்ந்துசென்றது. இதனால் வெள்ளி ரூபாய்க் காசுகளை உருக்கி ஏற்றுமதி செய்வது இலாபகரமாக இருந்தது. 1917–ல் வெள்ளி ரூபாய், குறிப்பணம் என்ற நிலைமையிலிருந்து மாறித் திட்டப் பணம் என்ற நிலையைக் கடந்தவுடன், பொன் பரிவர்த்தனைத் திட்டமும் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

சேம்பர்லின் ஆணைக்குழு, 1913 (Chamberlain Commission)

இந்தியச் செலாவணி முறையைப் பலரும் திறனாய்வு செய்தார்கள். இந்தியாவிலும் இங்கிலாந்திலும் இதுபற்றிச் சந்தேகத்திற்கு இடமளிக்கும் பல கருத்துகள் வெளியிடப்பட்டன. எனவே, கவுன்சில் பற்றோலைகளை வெளியிடுதல், அவற்றை விற்பனை செய்தல், பரிவர்த்தனை செய்தல் முதலிய விவரங்களைக் கண்டு அறிதல், இந்திய அரசாங்கம், இந்தியாவிற்கான மந்திரி ஆகியோர் இந்திய ரூபாயை நிலைபெறச் செய்வதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் முதலியவற்றை ஆராய்ந்து கூறுதல், பொதுவாக இந்தியச் செலாவணி அமைப்பைச் சீர்படுத்துதல் முதலிய பொறுப்புகள் சேம்பர்லின் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

சேம்பர்லின் ஆணைக் குழு மீண்டும் பொன் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கூறவில்லை. மாறாக, அதுசமயம் நடைமுறையில் இருந்த பொன் பரிவர்த்தனைத் திட்டம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. இந்தியாவில் பொற்காசுகளை அச்சிட வேண்டிய அவசியம் இல்லை; தொடர்ந்து வெள்ளி ரூபாய்களும் நோட்டுகளும் புழக்கத்தில் இருக்க வேண்டியது அவசியம்; பொன் திட்டத்தால் ஏற்படக் கூடிய நன்மை—ரூபாய்-ஸ்டர்லிங் மதிப்பை நிலைபெறச் செய்தல்—அப்போதுள்ள அமைப்பால் உறுதி அளிக்கப்பட்டது. எனவே, இந்த அமைப்புத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் பொன் திட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பொற்காப்பு இலண்டனிலேயே இருக்க வேண்டும் என்றும் கூறியது.

சேம்பர்லின் ஆணைக் குழு இந்தியாவில் தாள் செலாவணியை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று கூறியது. இதன் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டு இருந்த சமயத்தில் முதல் உலகப்போர் ஆரம்பமாகிவிட்டது. அதைத் தொடர்ந்து எதிர்பாராத பல புதிய பிரச்சினைகள் ஏற்பட்டன.

முதல் உலகப்போர்

முதல் உலகப் போரினால் இந்திய ரூபாயின் வெளிநாட்டுத் தேவை பன்மடங்கு உயர்ந்தது. அதைத்தவிர உலக அங்காடியில் வெள்ளியின் விலை பொன் அடிப்படையில் தொடர்ந்து அதிகரித்தது. இதனால் வெள்ளி ரூபாயின் பண மதிப்பைவிட உலோக மதிப்பு அதிகரித்து, மக்கள் இதை உருக்கி வெள்ளியாக ஏற்றுமதி செய்யத் தலைப்பட்டார்கள். 1917 ஜூன் மாதத்தில் வெள்ளி ஏற்றுமதி தடை செய்யப்பட்டது. 1918-ல் இந்திய அரசாங்கம் 200 மில்லியன் அவு. வெள்ளியை அமெரிக்காவிடமிருந்து வாங்கியது. இந்தியாவின் பணத்தேவையைப் பூர்த்திசெய்ய இது உதவும் என்று கருதினார்கள். 1918-ல் 2 அணா, 4 அணா, 8 அணா நிக்கல் காசுகள் முதன்முதலில் வெளியிடப்பட்டன.

வெள்ளியின் மதிப்பு அதிவேகமாக உயர்ந்து சென்றதாலும், போர்க்காலத்தில் இந்தியாவின் ஏற்றுமதி நிகர அளவில் அதிகரித்து இருந்ததாலும் ரூபாய்-ஸ்டர்லிங் மதிப்பில் அடிப்படையான மாற்றம் ஏற்பட்டது. 1919 டிசம்பரில் ஒரு ரூபாயின் ஸ்டர்லிங் பரிவர்த்தனை மதிப்பு 2ஷி. 4பெ. ஆக உயர்ந்தது.

பாபிங்டன் ஸ்மித் கமிட்டி

ஸ்டர்லிங்–ரூபாய்ச் செலாவணி விகிதத்தை நிலைபெறச் செய்வதற்கு ஆர்வம்கொண்ட இந்தியாவிற்கான மந்திரி அதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து கூறுமாறு ஸர் எச். பாபிங்டன் ஸ்மித் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தார். இக் கமிட்டியின் அறிக்கை 1919-ல் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் இடம் பெற்ற கருத்துகளாவன: (1) அப்போது புழக்கத்தில் உள்ள வெள்ளி ரூபாய்கள், அதே எடையில், அதே தூய்மையில் தொடர்ந்து வெளியிடப்பட வேண்டும்; (2) ரூபாயின் தங்கச் சமன் மதிப்பை 11·30016 குன்றி மணிகள் எடையாக உயர்த்த வேண்டும்; இச் சமன் மதிப்பில் ஒரு பொன் சவரனின் மதிப்புப் பத்து ரூபாயாக உயர்ந்துவிடும் (ரூ. 1 = 2ஷி.); (3) பம்பாயில் மீண்டும் பொற்காசுகளை வெளியிட அனுமதி வழங்க வேண்டும்; (4) வெள்ளி உலோகத்தை ஏற்றுமதி செய்யவும், இறக்குமதி செய்யவும் வழிசெய்யவேண்டும்; வெள்ளி உலோகத்தை எடுத்துச்செல்லுதல், இடம் பெயர்த்துதல்மீது விதிக்கப்பட்ட தடைகளை அகற்றவேண்டும்.

இக் கமிட்டியின் பரிந்துரைகள் யாவும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்திய ரூபாயின் ஸ்டர்லிங் மதிப்பை 2 ஷி. ஆக அரசாங்கம் நிர்ணயித்தது. இக் கமிட்டியின்

பரிந்துரைகளில் மிகவும் பலவீனமான பகுதியாக இதைக் கருத வேண்டும். தாற்காலிகமாகவும் அசாதாரணமாகவும் தோன்றிய நிகழ்ச்சிகளின் காரணமாக அங்காடியில் ரூபாயின் மதிப்பு 2 ஷி. ஆகவும், அதைவிட அதிகமாகவும் உயர்ந்துசென்றது. போருக்குப் பின்னர்த் தோன்றிய சாதாரணநிலைமையில் மேற்படிபரிவர்த்தனை விகிதத்தில் ரூபாயின் மதிப்பை நிலைபெறச் செய்ய முடியவில்லை. 1920 ஜூன் மாதத்தில் ஒரு ரூபாயின் மதிப்பு 2 ஷி. ஆகச் சட்ட பூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், 1921 ஆரம்பத்திலேயே இவ் விகிதம் 1 ஷி. 3 பெ. ஆக அங்காடியில் வீழ்ச்சியடைந்தது. பின்னர் நாளடைவில் நிலைமை சீர்பட்டதும், ரூபாயின் மதிப்பு மீண்டும் உயரத் தொடங்கியது. 1923–ல் 1 ஷி. 4 பெ. ஆகவும் 1924–ல் 1 ஷி. 6 பெ. ஆகவும் உயர்ந்தது.

இங்ஙனம் இந்திய ரூபாயின் மதிப்பை உயர்மட்டத்தில் நிலை பெறச் செய்த முயற்சிகள் எதிர்பார்த்த பலனை நல்கவில்லை; முதல் உலகப்போருக்குப் பின்னர் 1927வரை அங்காடிச் சக்தி களின் ஏற்ற இறக்கங்களின் விளைவாக ரூபாயின் செலாவணி மதிப்பு அலைக்கழிக்கப்பட்டது.

ஹில்டன்–யங் அரசு ஆணைக்குழு

இந்தியாவின் செலாவணி அமைப்மையும், பணமுறையையும் ஆதியோடு அந்தமாக ஆராயவேண்டும் என்ற கட்டாயம் ஏற் பட்டது. முதல் உலகப்போருக்குப் பின்னர், செலாவணி விகிதத் தில் காணப்பட்ட நிலையற்ற தன்மை இதன் அவசியத்தை மேலும் வலியுறுத்தியது. இந் நோக்குடன் 1925–ல் ஹில்டன்–யங் அரசு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ்வாணைக் குழுவின் அறிக்கை 1926–ல் வெளியிடப்பட்டது.

ஹில்டன்–யங் அரசு ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மூவகைப் படுத்தலாம்: (1) அச் சமயம் நிலவிய ஸ்டர்லிங்–பரிவர்த்தனைத் திட்டத்தை அகற்றி அதற்குப் பதிவாக புதியதொரு பொன் திட்டத்தை உருவாக்குதல்; (2) ரூபாய்–ஸ்டர்லிங் விகிதத்தைச் சட்டப்படி, புதியதொரு மட்டத்தில் நிர்ணயித்தல்; அதை நிலை பெறச் செய்தல்; (3) இந்தியாவில் ஒரு மத்திய பாங்கை—ரிசர்வ் பாங்கை—நிறுவுதல்.[9]

இவ் வாணைக் குழுவின் பரிசீலனைக்கு மூவகைப் பணத்திட்டங் கள் கொண்டுவரப்பட்டன: (1) அதுவரை நிலவிய ஸ்டர்லிங்

9 ரிசர்வ் பாங்கு நிறுவுதல் குறித்து இவ் வாணைக்குழுவின் பரிந்துரைகளை யும், அவற்றின் திறனாய்வுகளையும் 25 ஆவது அத்தியாயத்தில் ரிசர்வ் பாங்கு என்ற பிரிவில் கூறியுள்ளோம்.

பரிவர்த்தனைத் திட்டம்; (2) பொற்காசுகளைப் புழக்கத்திற்குக் கொண்டுவரும் பொன் செலாவணித் திட்டம்; (3) பொற்காசுகளைப் புழக்கத்திற்குக்கொண்டு வராமல் (உண்மையான) பொன் பரிவர்த்தனை/பொற்கட்டித் திட்டத்தைத் தோற்றுவித்தல். இவற்றுள் முதலில் கூறப்பட்ட ஸ்டர்லிங்-பரிவர்த்தனைத் திட்டத்தை ஆணைக்குழு ஏற்கவில்லை. இத் திட்டத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்று ஆணைக்குழு கருதியது. ஆகையால், இந்திய ரூபாயை ஸ்டர்லிங்செலாவணியுடன் தொடர்ந்து இணைப்பதற்குப் பதிலாக, புதிய அடிப்படையில், மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமாறு பொன்மதிப்புடன் நேரிடையாக இணைக்கவேண்டும் என்று கூறியது.

அடுத்துப் பொன் செலாவணித் திட்டம். இதை ஏற்படுத்துவதற்கு ஆணைக்குழு உடன்படவில்லை. இத் திட்டத்தால் அதிகச் செலவும், நல இழப்பும் ஏற்படும் என்றும், இந்தியர்களின் பொன்னுசை காரணமாக இது வெற்றிகரமாகச் செயல்படுமா என்ற ஐயப்பாட்டையும் வெளியிட்டது. அன்றைய நிலைமையில் இந்தியாவில் பொன் செலாவணித் திட்டத்தை ஏற்படுத்துவதால், பொன்னிற்கான தேவை பன்னாட்டு அளவில் உயர்ந்துசெல்லும்; அதையடுத்து ஸ்டர்லிங் செலாவணியின் மதிப்பும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இருப்பாக உள்ள பொன் இருப்பு அளவும் பாதிக்கப்படலாம். பன்னாட்டு அளவில் சமனற்ற நிலையைத் தோற்றுவிக்கும் ஒரு செயலுக்கு ஆணைக்குழு உடந்தையாக இருக்க விரும்பவில்லை. இந்தியர்களிடையே கட்டுக்கடங்காத பொன்னுசை காணப்படும்வரை பொன் செலாவணித் திட்டத்தை ஏற்படுத்த இயலாது என்றும் கூறியது. இந்தியர்களின் மனப்பாங்கு மாறவேண்டும் என்று கூறியதன்மூலம் பொன்திட்டத்தை என்றென்றும் இந்தியாவில் ஏற்படுத்த முடியாது என்ற கருத்தை வலியுறுத்தி உள்ளதை நோக்க வேண்டும்.[10]

ஸ்டர்லிங்-பரிவர்த்தனைத் திட்டத்தை அகற்றி அதற்குப் பதிலாகப் பொன்திட்டம் ஒன்றை ஏற்படுத்துமாறு அரசு ஆணைக்குழு பரிந்துரைத்தது. இத் திட்டத்தில் பொற்காசுகள் செலாவணியில் காணப்படமாட்டா. அக் காலத்தில் பிரிட்டனில் நிலவிய பொற்கட்டித் திட்டத்தைப்போல இந்தியாவிலும் ஏற்படுத்த விழைந்த ஹில்டன்-யங் ஆணைக்குழு, அரசாங்கம் முன்னதாக

[10] ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஆரம்பம் முதல் பொன் திட்டத்தை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை. உலகப் பொன் இருப்பில் பெரும்பகுதி பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் இருந்தன. இவ் விரு நாடுகளின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பில்லாமல் இந்தியாவில் பொன் திட்டத்தை ஏற்படுத்த முடியாது.

அறிவித்துள்ள விலையில் 400 அவு. எடையுள்ள பொற்கட்டிகளை வாங்கவும், விற்கவும் உறுதி அளிக்கவேண்டும் என்றும், அதற்காக மத்திய பாங்கு ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்றும் கூறியது. இத் திட்டத்தில் வரையிட்ட மாற்றுரிமைக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தொடர்ந்து வெள்ளி ரூபாய்க் காசுகளும், தாள் செலாவணியும் சட்டப்பணமாகப் புழக்கத்தில் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டது. அப்போது புழக்கத்தில் இருந்த சவரன்களும், அரைச் சவரன்களும் செலா வணியிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

அரசாங்கம் ஹில்டன்-யங் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டபோதிலும், அவற்றை உடனடியாகச் செயல் படுத்த முன்வரவில்லை. ஆகையால், பொற்கட்டித் திட்டம் ஏட்டளவில் நின்றுவிட்டது.

ஸ்டர்லிங்-பரிவர்த்தனைத் திட்டத்தைக் குறைகூறி அதை அகற்றிவிட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்த ஹில்டன்-யங் ஆணைக்குழு, அதற்குப் பதிலாகப் பொற்கட்டித் திட்டத்தைப் பரிந்துரைத்தது. ஆனல், அரசு ஆணைக்குழு பரிந்துரைத்த பணத்திட்டம் எந்த வகையில் ஸ்டர்லிங்-பரிவர்த்தனைத் திட்டத்தைவிட மேலானது என்பது தெளிவாக்கப்படவில்லை. அதைத்தவிர ஸ்டர்லிங்-பரிவர்த்தனைத் திட்டம் முற்றிலும் பழுதுடையது என்ற கருத்தைத் திருமதி வீரா அன்ஸ்டே ஏற்க வில்லை. உண்மையில் எந்தப் பணத்திட்டமும் உலக நிகழ்ச்சி களின் செல்வாக்கால் பாதிக்கப்படும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஸ்டர்லிங் ஒரு நர்ட்டின் செலாவணியாக இருப்பதால் அந் நாட்டில் ஏற்படும் பொருளாதார மாற்றங்கள் இதர நாடு களுக்கும் எடுத்துச் செல்லப்படும். காட்டாக, ஸ்டர்லிங் அக் காலத்தில் பன்னாட்டு அளவில் ஏற்கக்கூடிய ஒரு செலாவணியாக விளங்கியது. இதனுடன் இந்திய ரூபாயை இணைப்பதன்மூலம் உலக நாடுகளில் ஏற்படும் விலைமட்ட மாற்றங்கள் இந்தியாவிற் கும் எடுத்துச் செல்லப்பட்டன. அவ்வகையில் இந்தியாவில உள் நாட்டுப் பொருளாதாரச் சக்திகள் சமநிலையில் இருந்தபோதிலும், ஸ்டர்லிங்-ரூபாய் இணைப்பின் காரணமாக, பன்னாட்டு விலைப் போக்கின் அலைவுகளால் இந்திய ரூபாயின் மதிப்பும், இந்தியப் பொருளாதார நடவடிக்கைகளும் ஏற்ற இறக்கங்களை ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்படக்கூடும். ஆனல், இம்மாதிரியான சூழல் அசாதாரணமானவை; இங்ஙனம் அடிக்கடி ஏற்படுவதில்லை. நடைமுறையில் சாதாரண காலங்களில் ஸ்டர்லிங்-ரூபாய் இணைப்பு நம்பிக்கை ஊட்டக் கூடியதாகவும், நலன் பயக்கக் கூடியதாகவும் இருந்தது என்பதை மறுக்க முடியாது.

இரண்டாவதாக, இந்திய ரூபாயின் செலாவணி மதிப்பும், செலாவணி நிருவாகமும் முற்றிலும் இந்திய அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தபோதிலும், அரசின் கொள்கை என்ன என்பதைத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. ஆகையால், இந்தியாவில் பண அமைப்பு முறையைச் சீர்படுத்தவும், செலாவணி நிருவாகப் பொறுப்பைத் தகுந்த அமைப்பிடம் ஒப்புவிக்கவும் ஹில்டன்-யங் அரசு ஆணைக்குழு விரும்பியது. இதன் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ரூபாயின் மதிப்பை 1ஷி. 6 பெ. என்ற மட்டத்தில் நிர்ணயிக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆனால், அதன் உறுப்பினராக இருந்த சர் புருஷோத்தம தாஸ் தாக்கூர்தாஸ் இதற்கு உடன்படவில்லை. இந்திய உற்பத்தியாளர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டுமானால், ரூபாயின் மதிப்பை 1ஷி. 4 பெ. ஆக நிர்ணயிக்க வேண்டுமென்று கூறினார். ஆனால், அரசு ஆணைக்குழுவின் பெரும்பான்மையினர் 1 ஷி. 6 பெ. என்று பரிந்துரைத்ததால், அதையே அரசும் ஏற்றுக்கொண்டது. அதனால் இந்திய ரூபாய் மிகைமதிப்புடைய செலாவணியாக விளங்கியது. இந்தியப் பொருள்களின் ஏற்றுமதி வெளிநாடுகளில் விலைமிக்கதாகவும், வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதி இந்தியாவில் மலிவாகவும் இருந்தன. இந்திய விவசாயிகளின் வருமானமும், புதிய ஆலைத் தொழில்களின் வளர்ச்சியும் இதனால் பாதிக்கப்பட்டன: செலாவணி மதிப்பு உயர்மட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டதால் தோன்றிய பாதக விளைவுகளை ஓரளவிற்கு ஈடு செய்யும் வகையில் தொழில்காப்புத் தீர்வைகள் இருந்தன.

இந்திய ரூபாய் மிகைமதிப்புடைய செலாவணியாக விளங்கியது என்பதைப் பின்வரும் செய்தி நிரூபிக்கக் கூடும். இந்தியா நெடுங்காலமாகப் பொன் இறக்குமதி செய்யும் நாடாக இருந்தது. ஆனால், 1931–37 ஆண்டுகளில் சுமார் 36 மில்லியன் அவுன்ஸ் பொன் (சுமார் ரூ. 300/– கோடி மதிப்புள்ளது) ஏற்றுமதி செய்யப்பட்டது. இதற்குச் சிலர் வேறு காரணம் கூற முற்படலாம். உலகமந்தம் தீவிரம் அடைந்த ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளைவிட, விவசாய நாடுகளின் வாணிக மாற்று விகிதம் (Terms of Trade) பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டதால், இந்தியா பொன் ஏற்றுமதி செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று கூறலாம். மொத்தத்தில் செலாவணியின் மிகைமதிப்பும், உலக மந்தமும் இந்தியாவிற்குப் பாதகமாகச் செயல்பட்டன.

பாரத ரிசர்வ் பாங்கு

இந்தியாவின் பணத்துறை நிருவாகத்திற்குச் சிறப்புத் தேர்ச்சிபெற்ற மத்திய பாங்கு அவசியம் என்பதைத்தான் செலா

வணித் துறையில் காணப்பட்ட நிலையற்ற போக்கு எடுத்துக் காட்டியது. ஹில்டன்–யங் அரசு ஆணைக்குழு ரிசர்வ் பாங்கு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்த போதிலும் அதைச் செயல்படுத்துவதில் பல இடையூறுகள்[11] ஏற்பட்டன. இறுதியில் ரிசர்வ் பாங்குச் சட்டம் 1934-ல் நிறைவேற்றப்பட்டு, 1935 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து ரிசர்வ் பாங்கு செயல்படத் தொடங்கியது.

தாள் செலாவணியை வெளியிடும் பணியை அரசாங்கத்திடமிருந்து ரிசர்வ் பாங்கு ஏற்றுக்கொண்டது. நோட்டுகளை வெளியிடுவதற்காகத் தொடக்கத்தில் விகிதக் காப்புமுறை ஏற்பட்டது. அதன் பின்னர் 1956-லிருந்து (இன்றுவரை) குறைந்த அளவு காப்புமுறை பின்பற்றப்படுகிறது. ரிசர்வ் பாங்கு 1949–லிருந்து அரசுடைமையாக்கப்பட்ட பாங்காகச் செயல்பட்டு வருகிறது. சட்டரீதியாகக் கீழே குறிக்கப்பட்ட மதிப்பில் ரூபாய் நோட்டுகளை வெளியிடும் உரிமை பெற்றுள்ளது. அவையாவன : ரூ. 2, 5, 10, 20, 50, 100, 500, 1000, 5000 முதலியன. ஆனால், தற்சமயம் ரூ. 50, 500/—ஆகிய மதிப்புகளில் நோட்டுகளை வெளியிடவில்லை. தற்சமயம் புழக்கத்தில் உள்ள பணத் தொகையில் ஐந்தில் நான்கு பங்கு மதிப்பிற்குப் பத்து ரூபாய் நோட்டுகளும், 100 ரூபாய் நோட்டுகளும் இருக்கின்றன.[12] மொத்தப் பணத்தொகையில் 46% 100 ரூபாய் நோட்டுகளாகவும், 35% பத்து ரூபாய் நோட்டுகளாகவும், 7% தொகை ஐந்து ரூபாய் நோட்டுகளாகவும், 6% தொகை ஒரு ரூபாய் நோட்டுகளாகவும், காசுகளாகவும் உள்ளன. துணைக்காசுகளின் விழுக்காடு 5% ஆகும்.

1971 நவம்பரில் நாட்டில் மொத்தப் பண அளிப்பு ரூ. 7484.34 கோடியாகும். இதில் ரொக்கமாகப் பொதுமக்களிடம் உள்ள தொகை ரூ. 4490.02 கோடியாகும். பாங்கு (நடப்பு) வைப்புகளாக உள்ள தொகை ரூ. 2994.32 கோடியாகும்[13]. கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டின் மொத்தப் பண அளிப்பு இரண்டு மடங்கிற்கும் மேலாக உயர்ந்துள்ளது.

11 இவை அடுத்த அத்தியாயத்தில் ரிசர்வ் பாங்கு என்ற பிரிவில் விளக்கப்பட்டுள்ளன.

12 ஆதாரம்: Reserve Bank of India, Functions and working 1970, p. 10. (விவரங்கள் 1969 மார்ச் மாதத்திற்கானவை)

13 RBI-Bulletin, Dec. 1971. Table. No. 18, p. 2024.

மதிப்பிறக்கம் (Devaluation)

விடுதலைக்குப் பின்னர் ரூபாயின் மதிப்பு இதுவரை இரு முறைகள் குறைக்கப்பட்டுள்ளது. 1947–ல் (செப்டம்பர் மாதம்) ஸ்டர்லிங் செலாவணியுடன் இந்திய ரூபாயின் மதிப்பும் குறைக்கப்பட்டது. இரண்டாவது உலகப்போரினுல் பிரிட்டனின் பொருளாதார வலிமை குறையவும் அமெரிக்காவின் பொருளாதார வலிமை ஓங்கவும் செய்தன. அமெரிக்கா நிகர அளவில் பொருள்களையும், பணிகளையும் ஏற்றுமதி செய்தது. இதனுல் டாலரின் கிடைப்பருமை அதிகரித்தது. இதைச் சமாளிப்பதற்காக பிரிட்டனும், அதன் ஏகாதிபத்தியத்தின்கீழ் உள்ள நாடுகளும் ஒன்றுசேர்ந்து டாலர் கூட்டு (Dollar Pool) அமைப்பை ஏற்படுத்திக்கொண்டன. அமெரிக்காவின் ஆக்கச்செலவு மிகவும் சாதகமாகவும் (குறைவாகவும்), பிரிட்டனின் ஆக்கச்செலவு பாதகமாகவும் (உயர்வாகவும்) இருந்தன. இவ் விரு நாடுகளின் ஆக்கச் செலவின் கட்டமைப்பில் அடிப்படையாகக் காணப்பட்ட உயர்வுதாழ்வுகளை அகற்றுவதற்கு ஸ்டர்லிங் செலாவணியை மதிப்பிறக்கம் செய்வது ஒன்றுதான் வழியாக இருந்தது. பிரிட்டன் தனது செலாவணியை (ஸ்டர்லிங்கை) மதிப்பிறக்கம் செய்தபோது அதனுடன் நெருங்கிய வாணிகத் தொடர்புடைய பல நாடுகள் தங்கள் செலாவணியின் மதிப்பைக் குறைத்துக் கொண்டன. அப்போது நிலவிய சூழலில் இது கட்டாயமான ஒன்ருகிவிட்டது. 1949–ல் பாரதம் செய்த முடிவு சரியானது என்பதை வரலாறு நிரூபித்துக் காட்டியது. அச் சமயம் பாகிஸ்தான் தனது ரூபாயை மதிப்பிறக்கம் செய்யாமையால் அதன் ஏற்றுமதி குறைந்து, செலுத்தல் நிலை பாதகம் அடைந்தது. இறுதியில் 1955–ல் பாகிஸ்தானும் ரூபாயை மதிப்பிறக்கம் செய்துகொண்டது.

1949–க்கு முன்னர் ஒரு ரூபாயின் மதிப்பு 30.225 (அமெரிக்க) சென்டுகளாக இருந்தது. மதிப்பிறக்கத்திற்குப் பின்னர் ஒரு ரூபாயின் மதிப்பு, அமெரிக்க டாலர் அடிப்படையில் 21 சென்டுகளாகக் குறைக்கப்பட்டது. ஒரு ரூபாயின் பொன் சமன் மதிப்பு 0.268691 கிராம் எடையிலிருந்து 0.186621 கிராம் எடையாகக் குறைக்கப்பட்டது. ஒரு ரூபாயின் ஸ்டர்லிங் மதிப்பு 1 ஷி. 6பெ. என்ற மட்டத்தில் மாருமல் இருந்தது.

1966 ஜூன் மாதம் 5 ஆம் தேதியன்று ரூபாயின் மதிப்பு இரண்டாவது தடவையாகக் குறைக்கப்பட்டது. பாரத ரூபாயின் மதிப்புப் பொன் அல்லது டாலர் அடிப்படையில் 36.5% குறைக்கப்பட்டது. ஒரு டாலரின் ரூபாய் விலை ரூ. 4.76–லிருந்து 7.50

ஆகவும், ஒரு பவுன் ஸ்டர்லிங்கின் ரூபாய் விலை ரூ. 13.3-லிருந்து ரூ.21.00[14] ஆகவும் உயர்ந்துவிட்டன. இதன் காரணமாக அந்நியச் செலாவணியின் விலை 57.5% அதிகரித்துவிட்டது. ஒரு ரூபாயின் பொன் சமன் மதிப்பு 0.118489 கிராம் ஆகக் குறைந்துவிட்டது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் எதிர்பாராத பல நிகழ்ச்சிகள் பொருளாதார வளர்ச்சியைக் கட்டுப்படுத்தின. உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்படவில்லை. வளர்ச்சிப் போக்கை நிலைபெறச் செய்வதற்குப் பெருமளவு அயல்நாட்டு மூல தனம் தேவைப்பட்டது. பாரதத்திற்கு அதிக அளவு அந்நியச் செலாவணிக் கடன் வழங்கிய அமெரிக்காவும், உலக பாங்கும் இந்திய ரூபாயை மதிப்பிறக்கம் செய்யவேண்டியதன் அவசி யத்தை வலியுறுத்தின. மதிப்பிறக்கம் செய்யவில்லையானல் தொடர்ந்து உதவியளிக்க இயலாது என்றும் கூறின. அப்போது முக்கியமாக உணவுப் பிரச்சினைக்கு அமெரிக்கப் பொதுச் சட்டம் 480-ன்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட உணவுத் தானியங்களைப் பாரதம் எதிர்நோக்கியிருந்தது. பாரதம் தனது உணவுத் தேவைக்கும், மூலதன ஆக்கத்திற்கும் இறக்குமதியை முக்கியமாக எதிர்பார்க்காமல் இருந்திருக்குமானல் ரூபாயை மதிப்பிறக்கம் செய்யாமல் தடுத்திருக்க முடியும்.

1966-ல் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதைப் பலரும் திறனாய்வு செய்துள்ளார்கள். பாரதம் உலகநாடுகளிலிருந்து அதிக அளவுக்குக் கடன் வாங்கியுள்ளது. மதிப்பிறக்கம் காரண மாக ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய வட்டிச் சுமையும் மூலதனமும் (ரூபாய் அடிப்படையில்) அதிகரித்துவிட்டன. அதைத் தவிர மதிப்பிறக்கம், வளரும் நாடுகளின் பிரச்சினைகளை முழுமை யாகத் தீர்க்கும் சாதனமாக இல்லை. இவை தமது மூலதன ஆக்கத்திற்கு இறக்குமதி உபரியை எதிர்நோக்கியிருக்கின்றன. எனவே, மதிப்பிறக்கம் மூலதன ஆக்கத்தின் செலவை உயர்த்தி விட்டது.

பாரதம் மூலதனத்துடன் கச்சாப் பொருள்களையும், இயந்திர சாதனங்களையும் பதிலமர்த்தும் (இயந்திரங்களின்) உறுப்புகளை யும் தொடர்ந்து இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால் மதிப் பிறக்கத்தால் நேரிடையாகத் தொழில்துறையின் ஆக்கச் செலவு உயர்ந்துசெல்லும்.

14 1967 அக்டோபரில் ஸ்டர்லிங் மதிப்புக் குறைக்கப்பட்டதால் ஒரு பவுன் ஸ்டர்லிங்கின் ரூபாய் விலை ரூ. 18-00 ஆகக் குறைந்துவிட்டது.

பொதுவாக, மதிப்பிறக்கம் என்பது தொகுஅளவுச் செலவுத் தொகையின் (தேவையின்) திசை-திருப்பும் (Expenditure switching operation) நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. உள்நாட்டிலும், உலக நாடுகளிலும் நிலவக்கூடிய ஆக்கச் செலவு-விலை விகிதங்கள் பெருமளவுக்குப் பாதகம் அடைந்துள்ள நிலைமையில் செலவுத் திசை மாற்றும் நடவடிக்கையின்மூலம் உள்நாட்டுப் பொருள்களுக்கு உள்நாட்டு அங்காடியிலும், வெளிநாட்டு அங்காடியிலும் திடீர் என்று தேவைமட்டத்தை உயர்த்த முடியும். ஆனால், பாரதத்தின் பிரச்சினை அவ்வாறு இல்லை; உற்பத்தியின் அளவுக்குத் தேவையை உயர்த்துவதற்குப் பதிலாக, தேவையின் அளவுக்கு உற்பத்தியை உயர்த்துவதே பிரச்சினையாக உள்ளது.

அடுத்து, பாரதம் ஏற்றுமதி செய்யும் பொருள்களில் துணி, சணல்பொருள்கள், தேயிலை ஆகிய மூன்றும் முக்கியமானவை. இவற்றின் வெளிநாட்டுத் தேவைநெகிழ்ச்சி குறைவாக இருக்கின்றது. எனவே, மதிப்பிறக்கம் செய்வதால் கூடுதலான அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும் என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. இங்ஙனம் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்தாலும் ரூபாயின் மதிப்பிறக்கம் அவசியம்தானா? என்ற கேள்விக் குறி மேலோங்கி நிற்கிறது. இதன் நோக்கம் அந்நியச் செலாவணியை நடப்புக் கணக்கில் திரட்டுவதாக இருக்குமேயானால், அதற்கு ஏற்றுமதிக் கொடையும், இறக்குமதித் தீர்வையும் சிறந்த மாற்று நடவடிக்கைகளாக இருந்திருக்கும். இறுதியாக ரூபாயின் இரண்டாவது மதிப்பிறக்கத்தை ஓர் அவசர முடிவாகக் கருத வேண்டுமேயல்லாமல் அவசியமான முடிவாக ஏற்க முடியாது.

25. பாங்கு அமைப்பு

இந்தியாவில் நவீன வணிக பாங்குகள் சென்ற நூற்றாண்டில் தான் ஏற்பட்டன என்றாலும், சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே சுதேச பாங்கர்கள் (Indigenous Bankers) கீர்த்தியுடன் செயல்பட்டு வந்தனர். இவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணத்தை அனுப்பவும், உண்டியல்களை வரையவும், அவற்றைக் கழிவு செய்யவும், ஒருவகைப் பணத்தை மற்றொரு வகைப் பணமாக மாற்றித்தரவும், அரசர்களுக்கும், வணிகர்களுக்கும் பெருந்தொகையைக் கடனாகக் கொடுத்து உதவவும் செய்தார்கள். சுதேச பாங்கர்களில் மிகவும் செல்வாக் கானவர்கள் ஜெகத்சேத், நகர்சேத் என்ற பட்டப் பெயருடன் விளங்கினார்கள். இவர்களது செல்வச் சிறப்பையும், தொழில் நேர்த்தியையும் திரு எட்மண்ட் பர்க் தமது (பிரிட்டனில்) நாடாளு மன்ற உரைகளில் கூறியுள்ளார். இவ்வாறு சீரோடும், சிறப் போடும் விளங்கிய சுதேச பாங்கர்கள் நாளடைவில் பல காரணங் களினால் தங்கள் செல்வாக்கை இழந்தார்கள். இவர்கள் நெடுங் காலமாகப் பணத்தை மாற்றித்தரும் பணியை முக்கியமாகச் செய்துவந்தார்கள். கிழக்கு இந்தியக் கம்பெனி ஆட்சியின் ஆரம் பத்தில் 994 வகையான காசுகள் புழக்கத்தில் இருந்துவந்தன என்பதை நினைவுகூர்வோமானால் இவர்களின் முக்கியத்துவத்தை ஓரளவிற்கு அறிந்துகொள்ள முடியும். 1835-ல் கம்பெனி ஆட்சியாளர்கள் கொண்டுவந்த செலாவணிச் சீரமைப்பின் விளைவாகச் சுதேச பாங்கர்களின் முக்கியத்துவம் பெரிதும் குறைந்தது. இதைத்தவிர, போக்குவரத்து வசதிகளின் பெருக்கத் தால் நாடெங்கிலும் புதிய அடிப்படையில், புது வகையான பொருள்களின் வாணிகம் பேரளவில் நடைபெற்றன. இவ் வாணிகத்தில் இந்தியர்கள் அதிக அளவிற்குப் பங்கு பெறவில்லை; ஆகையால், சுதேச பாங்கர்களின் தொழில் தேக்கமுற்றது.

கம்பெனி ஆட்சியாளர்கள் சுதேச பாங்கர்களின் செல்வாக் கிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளும் நோக்கத்தோடு

பதிலாளி நிலையங்களை (Agency houses) ஏற்படுத்திக் கொண்டார்கள். இந் நிலையங்கள் இந்தியாவில் வணிக பாங்குகளின் முன்னோடி அமைப்புகளாக விளங்கின.[1]

பதிலாளி நிலையங்கள் இந்தியாவில் வைப்பாகத் திரட்டிய மூலதனத்தைக் கொண்டு, வணிகப் பொருள்களை இந்தியாவில் சாருபடி செய்வதற்கும் உள்நாட்டில் விளைந்த பொருள்களைக் கடற்கரைவரை (துறைமுகங்கள் வரை) எடுத்துச் செல்லுவதற்கும் பண உதவி செய்தன. இதைத் தவிர இவை பாங்குகளாகவும் செயல்பட்டன; அவ்வகையில் பாங்கு நோட்டுகளையும் வெளியிட்டன. இவை பாங்குத் தொழிலுடன், வாணிகத்தையும் இணைத்துள்ள காரணத்தால் அதிக அளவு இடர் இழப்புகளை எதிர்நோக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கிழக்கு இந்தியக் கம்பெனியின் பட்டயத்துடன் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாங்கு (1770-ல்) இந்துஸ்தான் பாங்கு ஆகும். இக்காலத்தில் இதைப்போன்று மேலும் சில பாங்குகள் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால் அவை நேரிடையாகவும், மறைமுகமாகவும் பதிலாளி நிலையங்களுடனும், ஊக வாணிக நடவடிக்கையிலும் அதிகம் ஈடுபட்டு இருந்தன. ஆகையால், இக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாங்குகளில் பெரும்பாலானவை நிலைத்து இருக்கவில்லை.

மாநில பாங்குகள்

இந்தியாவில் பாங்கு அமைப்பையும் அதன் வளர்ச்சியையும் ஆராய்ந்து பார்ப்பதற்காக அவற்றை எண்வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றையும் ஒரு பிரிவில் விளக்கியுள்ளோம். முதலாவது பிரிவில் மாநில பாங்குகள் (Presidency Banks) எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாவது பிரிவில் இடம்பெறுவது கூட்டுப் பங்கு பாங்குகள். இது முக்கியமாக 19ஆவது நூற்றாண்டிலிருந்து இரண்டாவது உலகப்போர் வரையில் ஏற்பட்ட வளர்ச்சியைக் கூறுகிறது. மூன்றாவது பிரிவில் செலாவணி பாங்குகள்பற்றிக் கூறப்பட்டுள்ளது. நான்காவதாக, ரிசர்வ் பாங்கின் தோற்றமும், பணிகளும், அதிகாரங்களும், முக்கியத்துவமும் விவரிக்கப்பட்டுள்ளன. ரிசர்வ் பாங்கு, அமைப்புடைய பண அங்காடியின் தலைமைப் பீடத்தில் வீற்றுள்ளது என்பதையும் கூற வேண்டும். அதற்குப் பின்னர், ஐந்தாவது பிரிவில், 'ஸ்டேட் பாங்கு'ம் அதன் துணைபாங்குகளும், அவற்றின் முக்கியத்துவமும் கூறப்பட்டுள்ளன.

1 S. G. Panandikar, 'Banking' Chap. 18. in the book Economic History of India, (Ed) V. B. Singh.

தொடக்கத்திலிருந்து பாங்கு அமைப்பில் ஸ்டேட் பாங்கு ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. ஆகையால், இன்றைய தினமும் ரிசர்வ் பாங்கிற்கு அடுத்தபடியாக முக்கிய அமைப்பாகக் கருதப் படுகிறது. ஆறுவது பிரிவில், பட்டியல் (ஷெட்யூல்) பாங்குகள் இடம் பெறுகின்றன. பாங்கு அமைப்பில் இவை மூன்ருவது முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. 1969-க்குப் பின்னர், இவற்றின் வளர்ச்சிப் பணியும், பொருளாதார முக்கியத்துவமும் பன்மடங்கு உயர்ந்துள்ளன என்ருல் மிகையாகாது. ஏழாவது பிரிவில் கூட்டுறவு பாங்குகள் உள்ளன. கூட்டுறவு அமைப்பின் வளர்ச்சியாலும், அரசின் ஆதரவாலும் கூட்டுறவு பாங்குகளின் பணிகளும், செல்வாக்கும் உயர்ந்து வருகின்றன. இறுதியாக, எட்டாவது பிரிவில் பண அங்காடியின் இரு முக்கியக் கூறுகள், அதன் தன்மை முதலியன கூறப்பட்டுள்ளன.

பத்தொன்பதாவது நூற்ருண்டில் இந்தியச் சட்டமன்றங் களின் அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்ட பாங்குகளை இருவகைப் படுத்தலாம். அவையாவன: மாநில பாங்குகள், கூட்டுப் பங்கு பாங்குகள் என்பனவாகும். 1809-ல் வங்காள மாநில பாங்கும், 1840-ல் பம்பாய் மாநில பாங்கும், 1843-ல் சென்னை மாநில பாங்கும் ஆரம்பிக்கப்பட்டன. இவை கிழக்கு இந்தியக் கம்பெனியின் பாங்காகப் பணிபுரியும் முற்றுரிமை பெற்று விளங் கின. இவற்றிற்கான மூலதனத்தின் ஒரு பகுதியைக் கம்பெனி செலுத்தியது; இவற்றின் பெரும்பாலான பங்குதாரர்கள் ஐரோப் பியர்களாகவே இருந்தனர். இந்த பாங்குகள் 1861-ல் தாள் செலாவணிச் சட்டம் இயற்றப்படும்வரை பாங்கு நோட்டுகளை வெளியிட்டு வந்தன.

அரசாங்கத்தின் மூலதனம் இந்த பாங்குகளிடம் ஒப்படைக்கப் படுவதால், மூன்று மாநில பாங்குகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு மாநில பாங்குச் சட்டம் இயற் றப்பட்டது. இச் சட்டம் மாநில பாங்குகள் செலாவணிப் பரிவர்த் தனை மற்றும் ஊக வாணிகத்தில் ஈடுபடுவதைத் தடுத்தது; குறுகிய காலக் கடன்களை மட்டுமே வழங்க வேண்டும் என்றும், நிலையான சொத்துகளை ஈடாக ஏற்றுக்கொண்டு கடன் கொடுத்த லாகாது என்றும் கூறப்பட்டன.

1862—67 ஆண்டுகளில், அமெரிக்க உள்நாட்டுப் போரின் விளைவாக, இங்கிலாந்தில் பஞ்சு கிடைப்பருமையாகியது. எனவே, இந்தியப் பஞ்சின் விலை உயர்ந்தது. இதைத் தொடர்ந்து பம்பாயில் ஊக வாணிகம் அதிகரித்தது. இதன் விளைவாகப் பேரிழப்பு

ஏற்பட்டு 1868-ல் பம்பாய் மாநில பாங்கு மூடப்பட்டது. ஆனால், அதே ஆண்டில் ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன் அதே பெயரில் (பம்பாய் மாநில பாங்கு) ஒரு பாங்கு ஆரம்பிக்கப் பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அரசாங்கம் தனது பங்கு மூலதனத்தைத் திரும்பவும் எடுத்துக்கொண்டது. இருந்த போதிலும் மாநில பாங்குகள் தொடர்ந்து அரசாங்கத்தின் பாங்கு களாகச் செயல்பட்டன.

மூன்று மாநில பாங்குகளும் தனித்தனியாகச் செயல்படுவதற் குப் பதிலாக இவை ஒன்றாக இணைக்கப்படுமானால் மேலும் சிறப் பாக இருக்கும் என்று கருதினார்கள். ஆனால், அப்போது அரசாங்கம் இந்த ஐக்கியத்தை ஆதரிக்கவில்லை. மூன்று பாங்குகளும் தனித் தனி நிறுவனங்களாக இல்லாமல் ஒரே நிறுவனமாக இருக்கு மானால், மிக அதிக வலிமைபெற்று இருக்கும்—அரசாங்கத்தை விடச் சக்திவாய்ந்த அமைப்பாக இருக்கும்—என்று அஞ்சினார்கள். ஆனால், முதல் உலகப்போர் நடைபெற்றபோது இம் மூன்று பாங்குகளும் ஒருமுகப்படுத்திய அளவில் செயல்பட்டன. அப் போதுதான் இந்த பாங்குகளை ஒன்றாக இணைக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்தது. மக்களும் இதற்கு ஆதரவு அளித்தார்கள். இந்த மாறுபட்ட சூழலில்தான் மூன்று மாநில பாங்குகளின் ஐக்கியத்திற்கும் சட்டம் இயற்றப்பட்டது. ஆரம் பத்தில் இவை கிழக்கு இந்தியக் கம்பெனியின் பட்டயத்துடன் தோற்றுவிக்கப்பட்டன; பின்னர் இவற்றைக் கட்டுப்படுத்துவதற் காக மாநில பாங்குச் சட்டம் இயற்றப்பட்டது. ஆகையால், மூன்று மாநில பாங்குகளின் ஐக்கியத்திற்கும் பிரத்தியேகமான சட்டம் அவசியமாக இருந்தது. இச் சட்டம் 1920-ல் இந்திய இம் பீரியல் பாங்குச் சட்டம் என்ற பெயரில் இயற்றப்பட்டது. 1921 ஜனவரி முதல் தேதியிலிருந்து இம்பீரியல் பாங்கு செயல்பட ஆரம்பித்தது. இந்தியாவிலேயே மிகப் பெரிய வணிக பாங்காக வும், செல்வாக்கான பாங்காகவும் ஆரம்பம் முதல் இம்பீரியல் பாங்கு செயல்பட்டுள்ளது.

கூட்டுப் பங்கு பாங்குகள்

கூட்டுப் பங்கு அமைப்பு உடைய வணிக பாங்குகளை ஏற் படுத்துவதில் ஆரம்பத்தில் சில தடைகள் இருந்தன. முக்கியமாக, ஐரோப்பியர்கள் இந்த முயற்சிகளில் ஈடுபட முடியாத அளவிற்குக் கிழக்கு இந்தியக் கம்பெனியின் சட்டதிட்டங்கள் கட்டுப்படுத் தின. ஐரோப்பிய அலுவலர்கள் 1813-ல்தான் இந்தியாவில் நிலையான சொத்துகளை வாங்க அனுமதிக்கப்பட்டனர். அதன் பின்னரே இந்தியாவில் கூட்டுப் பங்கு பாங்கு தோன்ற ஆரம்பித்

தன. தொடக்கத்தில் ஐரோப்பியர்களால் நிறுவப்பட்ட இந்த பாங்குகளின் பொறுப்புகள் வரையறுக்கப்படாமல் இருந்தன. இவை நோட்டுகளை வெளியிடும் வணிக பாங்குகளாகச் செயல் பட்டன. பாங்குத் தொழிலுடன் ஊக வாணிகத்தையும் ஏற்றுக் கொண்டதால் பலவித மோசடிகளுக்கும், ஊழல்களுக்கும் பலி யாகின. இந்த பாங்குகளால் சாதாரண நெருக்கடியைக்கூடச் சமாளிக்க முடியவில்லை. 1829–33 ஆண்டுகளில் தோன்றிய நெருக்கடிகளில் பல பாங்குகள் மூடப்பட்டன. இக் காலத்தில் தோன்றிய பாங்குகளில் 50% மூடப்பட்டன என்று திரு. பனந்தீகர் கூறுகிறார்.[2] இருந்தபோதிலும் ஐரோப்பியர்களால் தோற்று விக்கப்பட்டு, நிருவகிக்கப்பட்ட பல பாங்குகள் சிறந்த முறையில் செயல்பட்டன. கூட்டுப் பங்கு பாங்குகளின் வளர்ச்சியில் இதை முதல் கட்டமாகக் கருத வேண்டும்.

பாங்குகளின் மூலதன அடிப்படையை விரிவுபடுத்துவதற் காக அவற்றின் பொறுப்புகள் (1860) வரையறுக்கப்பட்டன. 1861–ல் நோட்டுகளை வெளியிடும் உரிமை ரத்துசெய்யப்பட்ட தால், இவை வைப்பு பாங்குகளாகச் செயல்பட ஆரம்பித்தன. வணிக பாங்குகளின் வளர்ச்சியில் இதை இரண்டாவது கட்ட மாகக் கருத வேண்டும். இக் காலத்தில் பல பெரிய வணிக பாங்கு கள் நிறுவப்பட்டன. ஐரோப்பியர்கள்மட்டுமன்றி இந்தியர் களும் பாங்குத் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தார்கள். 1865–ல் அலகாபாத் பாங்கும் 1875–ல் சிம்லா அலையன்ஸ் பாங்கும் ஐரோப்பியர்களின் நிருவாகத்தில் இயங்கின. 1881–ல் ஆரம்பிக் கப்பட்ட அயோத்தி பாங்கும், 1894–ல் பஞ்சாப் நேஷனல் பாங்கும் இந்தியர்களின் மூலதனத்தைக் கொண்டு, இந்தியர் களால் நிறுவப்பட்ட, நிருவகிக்கப்பட்ட பாங்குகள் ஆகும். இவற்றுள் அலையன்ஸ் பாங்கும், அயோத்தி பாங்கும் மூடப் பட்டன. மற்ற இரண்டு பாங்குகளும் இன்றைய தினமும் (1971) செயல்பட்டு வருகின்றன.

பாங்குகளின் வளர்ச்சியில் தோன்றிய இரண்டாவது கட்டம் முதல் உலகப்போர்வரை நீடித்து உள்ளது. இக்காலத்தில் சுதேசிக் கருத்துகள் நாடெங்கிலும் பரவலாயின. தொழில்துறையிலும், பாங்குத் துறையிலும் ஆங்கிலேயர்கள் அல்லது ஐரோப்பியர் களுக்கு இந்தியர்கள் எவ்விதத்திலும் சளைத்தவர்கள் இல்லை என்று நிரூபிக்க விரும்பினார்கள். இவ்வாறு சுதேசி இயக்கத்தின் காரணமாகத் தோன்றிய பாங்குகளில் பின்வருவன முக்கிய

2 S. G. Panandikar—'Banking in India' (1966) p.9.

மானவை : பாங்கு ஆஃப் இந்தியா, இந்தியன் பாங்கு, சென்ட்ரல் பாங்கு, பாங்கு ஆஃப் பரோடா, பாங்கு ஆஃப் மைசூர் முதலியன. மேலே கூறிய பாங்குகள் 1906–13 ஆண்டுகளில் ஆரம்பிக்கப் பட்டவை.

முதல் உலகப்போருக்கு முன் காணப்பட்ட பூரிப்பான பாங்கு வளர்ச்சி நாளடைவில் மறைந்தது; 1913–17 ஆண்டுகளில் இவை நெருக்கடியைக் கடக்க வேண்டியிருந்தன. இந்த ஆண்டு களில் சுமார் 87 வணிக பாங்குகள் மூழ்கின. இவற்றின் செலுத் திய மூலதனம் ரூ. 1.75 கோடியாகும். 1917–ல் தொடர்ந்து செயல்பட்ட வணிக பாங்குகளின் மொத்த மூலதனத்தில் இது சுமார் 50% ஆக இருந்தது. இப் பாங்குகளில் பல குறைந்த மூல தனத்தை உடையவை. 6 பெரிய பாங்குகளும் மூடப்பட்டன. இப் பாங்குகளின் அனுமதித்த மூலதனம் மிக அதிகமாகவும், செலுத்திய மூலதனம் மிகக் குறைவாகவும் இருந்தன. மிகக் குறைந்த மூலதன அடிப்படையாலும், தவறான நிருவாகத்தாலும் பாங்குகள் தோல்வி அடைந்தன எனலாம். இந்த பாங்குகளின் தோல்வி பொதுமக்களிடையே நம்பிக்கை இன்மையை ஏற்படுத் தின. வணிக பாங்கின் வளர்ச்சியில் ஒருவிதத் தேக்க நிலைமை உருவாகியது.

இவ்வாறு மூடப்பட்ட பாங்குகளில் பல ஐரோப்பியர்களால் நிறுவப்பட்டு, நிருவகிக்கப்பட்ட பாங்குகள் ஆகும். வணிக பாங்கின் தோல்விகளுக்கு அமைப்புமுறை ஒரு முக்கியக் காரண மாக இருந்தது. இந்த பாங்குகள் தங்களுக்குள் ஒற்றுமையின்றிப் போட்டியிட்டு வந்தன. இவை ஒற்றுமையாகவும், ஒருங்கு இணைந்து அல்லது ஒருமுகப்படுத்திய அளவில் செயல்பட்டிருக்கு மானால் ஓரளவு தோல்வியின் விழுக்காட்டைக் குறைத்து இருக்க முடியும். இந்திய பாங்குகளை நெறிப்படுத்தவும், பாதுகாக்கவும் மைய பாங்கு அமைப்பு இல்லாதது ஒரு குறைபாடாகக் கருதப் பட்டது.

1921–க்குப் பின்னர் பாங்குத் தோல்விகள் மேலும் அதிகரித் தன. 1922–36 ஆண்டுகளில் 373 பாங்குகள் மூடப்பட்டன. இவற்றின் செலுத்திய மூலதனம் ரூ. 6·8 கோடியாகும். உலகு எங்கிலும் தோன்றிய மந்தம் இந்தியாவையும் பாதித்தது. பலகீனமான மூலதன அடிப்படையைக் கொண்ட பாங்கு அமைப்பால் பொருளாதார மந்தம் என்ற புயல்காற்றைத் தாங்க முடியவில்லை.

இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற காலத்தில் பொதுவான கிடைப்பருமை அதிகமாக இருந்தது; நாட்டில்

பணப் புழக்கமும், நீர்மையும் அதுவரை கண்டிராத அளவிற்கு உயர்ந்துசென்றன. அங்காடி விற்பனையாளர் ஆதிக்கத்தில் இருந்தது. பூரிப்பான சூழலில் காளான்களைப்போலப் பல புதிய பாங்குகள் தோன்றின. ஆனால், இவை நிலைத்து நிற்க வில்லை; இவை காளான்களைப் போலவே மறைந்தன. இவற்றின் நிருவாக அடிப்படை திருப்தி அளிக்கக் கூடியதாகவோ, தொழில், நெறிகளுக்கு ஏற்பவோ அமையவில்லை. ஆகையால், இக்காலத்தில் மூடப்பட்ட பாங்குகளின் விழுக்காடு உயர்ந்து காணப்பட்டது. 1937–48 ஆண்டுகளில் 620 வணிக பாங்குகளும், 1949–57-ல் 309 பாங்குகளும் மூடப்பட்டன. வணிக பாங்குகளின் கட்ட மைப்பைச் சீர்படுத்துவது முக்கியப் பிரச்சினையாக மாறியது.

செலாவணி பாங்குகள்

கிழக்கு இந்தியக் கம்பெனியின் பட்டயம் இந்தியச் சட்ட மன்றத்தின் சட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆரம்பித்த வணிக பாங்குகளைத் தவிர, இந்தியாவில் வேறுசில பாங்குகளும் பணியாற்றி வந்தன. இந்த பாங்குகளின் தலைமையகம் வெளி நாடுகளில் இருந்தன. இந்த பாங்குகள் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்தில் அதிகம் ஈடுபட்டு இருந்தன. வெளி நாட்டு வாணிகத்தின் பயனாகத் தோன்றும் உண்டியல்களை ஏற்கவும், கழிவு செய்யவும், மற்றும் இதர வழிகளில் பன்னாட்டு வாணிகத்திற்கு உதவியாகவும் செயல்பட்டன. இவற்றின் முக்கியப் பணி ஒரு நாட்டுச் செலாவணியை வேறொரு நாட்டின் செலாவணியாகப் பரிவர்த்தனை செய்வதேயாகும்.

இந்தியாவின் பெரும்பான்மையான வெளிநாட்டு வாணிகம் இங்கிலாந்துடன் நடைபெற்றது. எனவே, இங்கிலாந்தில் தலைமை யகத்தை உடைய பாங்குகள் அதிக அளவிற்கு இந்தியாவின் வெளி நாட்டு வாணிகத்துடன் தொடர்புகொண்டு இருந்தன.

வெளிநாட்டு வாணிகத்தில் இந்தியர்கள் கலந்துகொள்வதை யும், இந்திய பாங்குகள் இதில் ஈடுபடுவதையும் ஆங்கிலேயர்கள் ஆதரிக்கவில்லை. அதைத்தவிர, இதர நாட்டினரும் இத் துறையில் ஈடுபடுவதை விரும்பவில்லை. எனவே, இந்தியாவில் உள்ள செலாவணி பாங்குகள் யாவும் கிட்டத்தட்ட ஆங்கிலேயர்களின் சர்வாதீனக் கட்டுப்பாட்டில் அல்லது செல்வாக்கில் இருந்தன என்றால் மிகையாகாது.

இந்தியாவில் செலாவணி பாங்கை ஏற்படுத்த இங்கிலாந்து அரசின் பட்டயம் தேவைப்பட்டது. இங்கிலாந்து அரசின் பட்டயம் ஆங்கிலேயர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடும். 1842-ல்

முதலில் இங்கிலாந்து அரசின் பட்டயத்துடன் ஓரியன்டல் பாங்கிங் கார்ப்பொரேஷன் (Oriental Banking Corporation) என்ற செலாவணி பாங்கு நிறுவப்பட்டது. 1853-ல் மேலும் இரு செலாவணி பாங்குகளுக்குப் பட்டயம் வழங்கப்பட்டன. அவை யாவன: ஒன்று இந்தியா, ஆஸ்திரேலியா, சீன சார்ட்டேட் பாங்கு (Chartered Bank of India, Australia and China); மற்றொன்று இந்தியா, இலண்டன், சீன மர்க்கென்டைல் பாங்கு (Mercantile Bank of India, London and China). ஆனல், 1884-ல் ஓரியன்டல் பாங்கும், 1893-ல் மர்கென்டைல் பாங்கும் மூடப் பட்டன.

அதன்பின்னர் இங்கிலாந்து அரசின் பட்டயம் வாங்குவதற்குப் பதிலாக, இங்கிலாந்தில் உள்ள மிகப் பெரிய பாங்குகள் இந்தியா வில் மிகவும் முக்கியத் துறைமுகங்களில் தங்கள் கிளை அலுவலகங் களை ஏற்படுத்தின. இந்த முன்மாதிரியைப் பின்பற்றி ஏனைய ஐரோப்பிய நாட்டு பாங்குகளும் ஜப்பானிய பாங்கும் இந்தியா வில் தங்கள் அலுவலகங்களை ஏற்படுத்தின. ஆனல், உலகப்போர் ஏற்பட்ட ஆண்டுகளில் இந்த பாங்குகளை மூடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் பின்னர் இவை திறக்கப்பட வில்லை.

இந்திய வணிக பாங்குகள் பல காரணங்களினல் (இருபதாவது நூற்றுண்டிலும்) வெளிநாட்டு வாணிகத்தில் ஈடுபட முடிய வில்லை. 1935 வரை இம்பீரியல் பாங்கு வெளிநாட்டு உண்டியல் களை ஏற்கவும், கழிவு செய்யவும் தடைசெய்யப்பட்டு இருந்தது. ஏனைய வணிக பாங்குகளின் மூலதன அடிப்படை மிகவும் பலகீன மாக இருந்தது. இவற்றல் வெளிநாட்டு பாங்குடன் போட்டி யிட முடியவில்லை. வெளிநாட்டு பாங்குகள் இலண்டன் அங்காடி யில் குறைந்த வட்டியில் பெருமளவு மூலதனத்தைத் திரட்ட முடியும். இந்திய வணிக பாங்குகளிடம் செலாவணி மாற்றுத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் இல்லை. இந்த பாங்குகள் வெளி நாடுகளில் கிளையலுவலகங்களை ஏற்படுத்தவில்லை. இதனல் செலா வணிப் பரிவர்த்தனையில், அந்நியச் செலாவணி உண்டியல்களைக் கழிவு செய்வதும் முடியவில்லை. இந்திய வணிக பாங்குகள் தங்கள் மூலதனம் முழுவதையும் உள்நாட்டு வாணிகத்திற்கே ஈடுபடுத் தின. வெளிநாட்டு வாணிகத்திற்கு உதவும் அளவிற்கு உபரியான பெருமளவு மூலதனம் இந்த பாங்குகளிடம் இல்லை.

செலாவணி பாங்குகள் முற்றிலும் வெளிநாட்டவர் செல்வாக் கில் இருப்பதால் இந்தியாவின் தொழில்வளர்ச்சியும், இந்தியர்கள் வாணிகத்தில் ஈடுபடுவதும் தடைபட்டுள்ளன என்று குறை கூறப்

பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகளை 1930-ல் மத்திய மாநில பாங்குக் கமிட்டிகள் ஆராய்ந்தன. அவையாவன : இந்திய வணிக பாங்குகளைப் போல வெளிநாட்டுச் செலாவணி பாங்குகளின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படவில்லை; இந்தியாவின் வெளிநாட்டு வாணிகத்திற்கு நிதி அளிக்கும் சர்வாதீன அமைப்பாக இவை விளங்குகின்றன; இந்தியர்கள் வெளிநாட்டு வாணிகத்தில் ஈடுபட முடியாமல் இவை தடுப்பதுடன், வெளிநாட்டவர்கள் இந்தியாவின் வெளிநாட்டு வாணிகத்தில் அதிகச் சலுகைகளைப் பெறுவதற்கு இவை உதவி செய்தன. இந்திய வியாபாரிகள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் இவர்களின் நிதிநிலைமை குறித்து குறைவாக மதிப்பீடு செய்து, வெளிநாட்டு நிறுவனங்களிடம் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளன. வெளிநாட்டு வாணிகத்திற்கான உண்டியலை ஸ்டர்லிங் செலாவணியில் வரைவதன்மூலம் இந்தியர்களின் ஈடுபாட்டைக் கட்டுப்படுத்தின. இதைத்தவிர வெளிநாட்டு வாணிகத்துடன் தொடர்புடைய துறைகளில் இந்தியர்கள் ஈடுபடுவதையும் இந்திய நிறுவனங்கள் ஏற்படுவதையும் தடைசெய்துள்ளன. இந்தியத் தரகர்கள், இந்திய பாங்குகள், இந்தியக் கப்பல் கம்பெனிகள், இந்திய ஈட்டுறுதிக் கம்பெனிகள் வளராமல் தடைசெய்துள்ளன. அதைத் தவிர மேற்படி செலாவணி பாங்குகளில் இந்தியர்கள் முக்கியப் பதவிகளில் அமர்த்தப்படவில்லை.

இக் குறைபாடுகளை அகற்ற வேண்டுமானால் வெளிநாட்டு பாங்குகள் இந்தியாவில் கிளை அலுவலகங்களை ஏற்படுத்துவதற்கு ரிசர்வ் பாங்கின் முன்அனுமதியைப் பெறவேண்டும் என்றும், அவற்றின் கணக்குகளை ரிசர்வ் பாங்கு தணிக்கை செய்யும் என்றும், இந்தியர்களைக் கட்டாயமாக ஒவ்வொரு வெளிநாட்டு பாங்கும் வேலையில் அமர்த்தவேண்டும் என்றும் மத்திய பாங்கு ஆய்வுக் கமிட்டி பரிந்துரைத்தது.

ரிசர்வ் பாங்கு ஏற்பட்டதாலும், பாரதம் தன்னுரிமை எய்தியதாலும் இந்தியர்கள் வெளிநாட்டு வாணிகத்தில் அதிகமாக ஈடுபட ஆரம்பித்தார்கள். இந்திய வணிக பாங்குகள் வெளிநாடுகளில் கிளை அலுவலகங்களைத் திறக்க ஆரம்பித்தன.

பாரதத்தில் தற்சமயம் (1971 இறுதியில்) 14 வெளிநாட்டு பாங்குகள் பணியாற்றுகின்றன. இவை ஏனைய (ஷெட்யூல்) பட்டியல் பாங்குகளைப்போல ரிசர்வ் பாங்கிடம் 3% ரொக்கக் காப்பை ஏற்படுத்தவேண்டும். இந்த பாங்கின் மொத்தச் சொத்துகளில் 75% அல்லது அதற்கும் அதிகமானதை பாரதத்திலேயே

முதலீடு செய்யவேண்டும். செலாவணி பாங்கின் குறைந்தபட்ச மூலதனம் ரூ. 15 இலட்சமாக இருக்கவேண்டும். பம்பாய் அல்லது கல்கத்தாவில் இவற்றின் அலுவலகம் இருக்க வேண்டு மானல் குறைந்தது ரூ. 20 இலட்சம் மூலதனம் இருக்க வேண்டும்.

1969 ஜூலை மாதம் பாரதத்தில் மிகப்பெரிய வணிக பாங்கு கள் நாட்டுடைமையாக்கப்பட்டபோது அந்நியச் செலாவணி பாங்குகள் கூடுதலான வைப்புத் தொகையை ஏற்கக் கூடாது என்று கட்டுப்படுத்தப்பட்டன. மேற்படி தேதிக்கு முன்பு இருந்த வைப்புத்தொகை இந்தச் செலாவணி பாங்குகளின் உச்ச அளவு வைப்புகளாக இருக்கும்.

ரிசர்வ் பாங்கு

இந்திய ரிசர்வ் பாங்கு 1935 ஏப்ரல் 1-லிருந்து செயல்பட்டு வருகிறது. ஆனல், இதை ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்து நெடுங்காலமாக நிலவி வந்துள்ளது. இந்தியாவிற்கு ஒரு மைய பாங்கு அவசியம் என்று 1773-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் பரிந்துரைத் தார். ஆனல். இவரது கருத்துகளை வரவேற்பவர் யாருமில்லை. அதன் பின்னர் 1867-ல் கல்கத்தா பாங்கின் செயலரும், பொரு ளாளருமாகப் பணியாற்றிய ஒருவர் மூன்று மாநில பாங்குகளையும் இணைத்து வலிமை பொருந்திய ஒரு பாங்கை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினர். அதன் பின்னர் 1920-ல் இம்பீரியல் பாங்கை ஏற்படுத்தும் போதும் மக்கள் எல்லோரும் இதுவே இந்தியாவின் மைய பாங்காக மாறும் என்று எண்ணினர்கள். இறுதியாக 1925-ல் நியமிக்கப்பட்ட ஹில்டன் யங் அரச ஆணைக்குழு இந்தியாவிற்கு ஒரு மைய பாங்கு அவசியம் என்றும், புதிதாக ரிசர்வ் பாங்கு ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்றும் பரிந்துரைத்தது. இம்பீரியல் பாங்கு மிகப் பெரிய வணிக பாங்காக இருப்பதால் பாங்குக் கட்டமைப்பின் வலிமை இதனல் அதிகரிக்கும் என்று கூறியது. அதைத்தவிர மைய பாங்கு வணிக பாங்கின் பணிகளை மேற் கொள்ள வேண்டாம் என்றும் கருத்துத் தெரிவித்தது.

இந்தியாவிற்கு மைய பாங்கை ஏற்படுத்துவதில் தேசியப் பொருளாதாரக் கருத்தினரும், ஆட்சியாளர்களும் (ஏகாதிபத்திய வாதிகளும்) அக்கறை காட்டினர்கள். ரிசர்வ் பாங்கு அரசு பாங்காக இருக்கவேண்டும் என்றும், நாட்டின் பொருளாதார நலன்களைப் பாதுகாக்கும் வகையில் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் தேசியவாதிகள் கூறினர்கள்.

ஆனல், ஏகாதிபத்திய நலன்களைக் கட்டிக்காக்கும் ஆட்சி யாளர்கள் இக்கோரிக்கைகளை ஏற்கவில்லை. இவ் வடிப்படையில்

தான் ஹில்டன்-யங் அரச ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும், மேற்கொண்டு அதைச் செயல்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும் நோக்க வேண்டும்.

1927-ல் டில்லிச் சட்டசபையில் ரிசர்வ் பாங்கு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. தேசியவாதிகள் இந்த மசோதாவிற்கு இரு திருத்தங்களைக் கொண்டுவந்தார்கள். முதல் திருத்தத்தில் ரிசர்வ் பாங்கு ஓர் அரசு பாங்காக இருக்க வேண்டும் என்றும், இரண்டாது திருத்தத்தில் ரிசர்வ் பாங்கின் நிருவாக அமைப்பில் இந்தியர்கள் பெரும்பான்மையினராக இருக்க வேண்டும் என்றும், இதன் ஆளுநர் அல்லது உதவி ஆளுநர் இந்தியராக இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டன. ஆனால், ஆட்சியாளர்கள் இத் திருத்தங்களை ஏற்கவில்லை. ஒரு கட்டத்தில் ரிசர்வ் பாங்கை அரசு பாங்காக ஏற்படுத்துவதற்குக்கூட இசைந்தார்கள். ஆனால், ரிசர்வ் பாங்கின் நிருவாக அமைப்பில் இந்தியர்களைச் சேர்க்க உடன்படவில்லை. இக் கருத்து வேறுபாடு காரணமாக 1928 பிப்ரவரியில் மசோதா வாபஸ் பெறப்பட்டது. ரிசர்வ் பாங்கு 'அரசியல் செல்வாக்கிற்கு எட்டாத தூரத்தில் இருக்கவேண்டும்' என்று ஆட்சியாளர்கள் எண்ணியதே இதற்கு முக்கியக் காரணம்.[3]

இதற்கிடையில் இந்தியாவில் இணைப்பாட்சி அமைப்பை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதுபற்றி ஆராய்ந்த ஒரு கமிட்டியின் அறிக்கை 1931ஜனவரியில் வெளிவந்தது. அதில் சட்டசபைக்குப் பொறுப்பானவராக நிதி அமைச்சர் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அதன் பின்னர்த்தான் ரிசர்வ் பாங்கை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேலும் தீவிரம் அடைந்தன. புதிய இணைப்பு ஆட்சி முறை ஏற்படும் முன்னர், இந்திய ரூபாயின் மதிப்பை நிலைபெறச் செய்யவும், திறமையான நிருவாகத்திற்கு உறுதியான அடித்தளத்தை அமைக்கவும், ரிசர்வ் பாங்கைத் தனியார் துறையில் ஏற்படுத்தத் திட்டமிட்டார்கள்.

தேசியவாதிகளின் குறுக்கீடு இல்லாமல் இருப்பதும், அவர்களின் செல்வாக்கிற்கு அப்பால் இருப்பதும் திறமையான நிருவாகத்திற்கான உறுதியான அடித்தளமாகக் கருதினார்கள். 1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் 153ஆம் பிரிவின்படி இந்திய ரூபாய், பண நிருவாகம், ரிசர்வ் பாங்கு அமைப்பு முதலிய துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் மசோதாக்களை மத்திய சட்டசபையில் தாக்கல் செய்வதற்கு முன்னர் கவர்னர் ஜெனரலின் அனுமதியைப் பெறவேண்டும். இதற்கு அனுமதி

3 S. K. Muranjan—Modern Banking, (1952) pp. 246-7.

வழங்குவதும், மறுப்பதும் கவர்னர்-ஜெனரலின் உசிதமான அதிகாரமாக இருக்கும். இவ்வாறு நிதி நிருவாகமும், பண நிருவாகமும் பிரிக்கப்பட்டன. 'தேசியவாதிகளின் செல்வாக்கிற்கு அப்பாற்பட்டதாக' ரிசர்வ் பாங்கு செயல்படத் தொடங்கியது.

ரிசர்வ் பாங்கைத் தனியார் துறையில் அமைக்கும் மசோதா 1933 செப்டம்பர் 8உ-யன்று தாக்கல் செய்யப்பட்டு, 1934 மார்ச் 6உ-யன்று கவர்னர்ஜெனரலின் கையொப்பத்துடன் சட்டமாகியது. இது 1935ஏப்ரல் 1உ-யிலிருந்து செயல்படத் தொடங்கியது. 1934-35-ல் உலகில் உள்ள மொத்தம் 28 மைய பாங்குகளில் 22 மைய பாங்குகள் தனியார் துறையில் இருந்தன.[4]

ரிசர்வ் பாங்கின் செலுத்திய மூலதனம் ரூ. 5 கோடியாகும். ஒவ்வொரு பங்கும் ரூ. 10 0ஆக இருக்கும். இது தனியார் நிருவாகத்தில் இருக்கும் என்றாலும், அரசாங்கம் ரூ. 2·2 இலட்சம் மூலதனம் கொடுத்துள்ளது. இதன் பங்குகள் பரவலாக இருப்பதற்குச் சில முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பங்குதாரர்களின் உயர்ந்த அளவு வாக்குரிமைக்கு ஒரு வரம்பு நிர்ணயிக்கப்பட்டது; இலாப ஈவு கட்டுப்படுத்தப்பட்டது.

இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் உலகில் உள்ள அனைத்து மைய பாங்குகளும் நாட்டுடைமையாக்கப்பட்டன. இங்கிலாந்து பாங்கு 1946-ல் நாட்டுடைமையாக்கப்பட்டது. இந்தியாவை அதுசமயம் பாரதம், பாகிஸ்தான் என்று பிரிவினை செய்தார்கள். 1948வரை (பாகிஸ்தானில் தனியாக ஒரு மைய பாங்கு ஏற்படும் வரை) இந்திய ரிசர்வ் பாங்கு அந் நாட்டிற்கும் மைய பாங்காகச் செயல்பட்டது. எனவே, 1948 இறுதியில் ரிசர்வ் பாங்கை அரசு உடைமையாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் பங்குதாரர்களுக்கு அங்காடி விலையில் பங்கு ஒன்றுக்கு ரூ. 118-10-0 வீதம் ஈட்டுத்தொகை கொடுக்கப்பட்டது. 1949 ஜனவரி 1உ-யிலிருந்து இது அரசுக்குச் சொந்தமான மைய பாங்காகச் செயல்பட்டு வருகிறது.

ரிசர்வ் பாங்கு நாட்டுடைமையாக்கப்பட்ட போதிலும், அதன் அன்றாட நிருவாகத்தில் அரசு தலையிடுவதில்லை. பணக் கொள்கையை உருவாக்கும் நிலையில் அரசாங்கம் ரிசர்வ் பாங்கின் கருத்தைத் தெரிந்துகொள்ளும். பொதுவாக (மைய அரசின்) நிதி அமைச்சரின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகவே ரிசர்வ் பாங்கின் ஆளுநர் (கவர்னர்) செயல்படுவார்.

[4] S. G. Panadikar-Banking in India, 1966, p. 378.

ரிசர்வ் பாங்கின் கொள்கைகளேயும், நிருவாகநெறிகளேயும் உருவாக்கும் உச்ச அமைப்பாக மைய இயக்குநர்வாரியம் உள்ளது. இதன் தலைவராக ரிசர்வ் பாங்கின் ஆளுநர் இருப்பார். இவருக்கு உதவி செய்வதற்காக 4 உதவி ஆளுநர்களும், நான்கு வட்டார வாரியங்களின் பிரதிநிதிகளாக நால்வரும்[5] நாட்டின் பல்வேறு தொழில், வாணிக நலன்களேப் பிரதிபலிக்கும் நோக்கத்தோடு 10 இயக்குநர்களும் நியமிக்கப்படுவார்கள். இவை தவிர மைய அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஓர் அதிகாரியும் இதில் இடம் பெறுவார். மைய வாரியத்தில் உள்ள இயக்குநர்கள் 4 ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுவார்கள்; பதவிக்காலம் முடிந்த பின்னர் மீண்டும் நியமிக்கப்படலாம்.

ரிசர்வ் பாங்கின் தலைமையகம் பம்பாயில் இருக்கும். இதன் வட்டார வாரியங்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை, புது டில்லி ஆகிய இடங்களில் இருக்கும். இவற்றுள் (ஒவ்வொன்றிலும்) 5 இயக்குநர்கள் இடம்பெற்று இருப்பார்கள். இவை ஆலோசனைக் குழுக்களாகவே செயல்படுகின்றன.

உலகில் உள்ள ஏனைய மைய பாங்குகளேப் போல ரிசர்வ் பாங்கும் முக்கியமான பல பணிகளேச் செய்துவருகின்றது. இதன் பணிகளில் மிகவும் முக்கியமானது நோட்டுகளே வெளியிடுதல் ஆகும். 1934ஆம் ஆண்டு ரிசர்வ் பாங்குச் சட்டப்படி நோட்டுகளே வெளியிடுவதற்குக் குறைந்தது ரூ. 40 கோடி மதிப்புள்ள பொற்காசுகள், பொற்கட்டிகள் இருக்கவேண்டும். அப்போது ரிசர்வ் பாங்கு விகிதக் காப்புமுறையைப் பின்பற்றிவந்தது. ரிசர்வ் பாங்கு வெளியிடும் நோட்டுகளில் 40%-க்குப் பொன், வெளிநாட்டுச் செலாவணிகள் முதலியன இருப்பாக இருக்க வேண்டும். எக் காலத்திலும் குறைந்தது ரூ. 40 கோடிக்குக் குறையாமல் பொன் காப்பாக இருக்கவேண்டும்.

விடுதலேக்குப்பின்னர் ரிசர்வ் பாங்கு அதிக அளவு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுவருகிறது. வளரும் பொருளாதார அமைப்பிற்கு அதிகப் பணம் தேவைப்படும். இதை நிறைவேற்றுவதற்காக 1956-ல் பணவெளியீட்டுமுறைத் திருத்தம் செய்யப்பட்டது. 1935-56 ஆண்டுகளில் நிலவிய விகிதக் காப்புமுறை அகற்றப்பட்டு, குறைந்த அளவு காப்புமுறை (Minimum Reserve System) கொண்டுவரப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்தில் வெளிநாட்டுச் செலாவணித் தட்டுப்பாடு ஏற்பட்டது. உணவுப்

5 1964 ஜூலே 1 லிருந்து அமலில் உள்ளது. பார்க்கவும் Reserve Bank of India, Functions and working 1970, p.p. 189-190

பொருள்களை இறக்குமதி செய்யவும், தொழில்துறைக்கான கச்சாப்பொருள்களை இறக்குமதி செய்யவும், முதலீட்டிற்கான இயந்திரச் சாதனங்களைத் தருவிக்கவும் அந்நியச் செலாவணி தேவைப்பட்டது. இரண்டாவது உலகப்போர்ச் சமயத்தில் குவிந்த ஸ்டர்லிங் இருப்புகள் முற்றிலும் உபயோகிக்கப்பட்டுவிட்டன. நாட்டில் உபரியான பொன் இருப்போ, அந்நியச் செலாவணி இருப்போ இல்லாத சூழ்நிலையில் விகிதக் காப்புமுறையைப் பின்பற்றுவது சாத்தியமாக இல்லை. 2 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் ரூ. 1200 கோடி பற்றாக்குறை நிதியாக்கத்தின் (Deficit financing) வாயிலாகத் திரட்ட எண்ணினார்கள். விகிதக் காப்பு முறையைக் கடைப்பிடித்தோமானால் ரூ. 1200/–கோடி (ரூபாய் நோட்டுகளை) அச்சடிப்பதற்கு ரூ. 480 கோடி அந்நியச் செலாவணி தேவைப்பட்டிருக்கும்.

இச் சூழ்நிலையில்தான் விகிதக் காப்புமுறை அகற்றப்பட்டு, குறைந்த அளவு காப்புமுறை ஏற்படுத்தப்பட்டது. 1956 அக்டோபர் 6வயிலிருந்து இந்த முறை அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன்படி ரிசர்வ் பாங்கிடம் குறைந்தது ரூ. 400 கோடி மதிப்புள்ள அந்நியச் செலாவணி (வெளிநாட்டுப் பத்திரங்கள், அந்நியச் செலாவணி உண்டியல்கள் முதலியன) இருக்கும்; அதைத்தவிரப் பொன் இருப்பு ரூ. 115 கோடியாக இருக்கும். அதாவது மொத்த இருப்புகள் ரூ. 515 கோடியாக இருக்க வேண்டும்.

ரிசர்வ் பாங்கிடம் உள்ள பொன் இருப்பை மறுமதிப்பீடு செய்தார்கள். ஒரு ரூபாயின் தங்கச் சமன்மதிப்பு 8.47512 குன்றிமணி எடையிலிருந்து 2.88 குன்றிமணியாகக் குறைக்கப்பட்டது. அதாவது ஒரு தோலாத் தங்கத்தின் மதிப்பு ரூ. 21.24-லிருந்து ரூ. 62.50 ஆக உயர்த்தப்பட்டது. எனவே, ரூ. 40 கோடியாக இருந்த பொன் இருப்பு 1956-ல் ரூ. 118 கோடியாக உயர்ந்துசென்றது.

1957–ல் அந்நியச் செலாவணிக் கிடைப்பருமை மேலும் அதிகரித்தது. இதனால் குறைந்த அளவு அந்நியச் செலாவணிக் காப்பு அளவு ரூ. 400 கோடியிலிருந்து ரூ. 85 கோடியாகக் குறைக்கப்பட்டது. குறைந்த அளவு பொன்இருப்புத் தொடர்ந்து ரூ. 115 கோடியாகவே இருந்தது[6]. இதைத்தவிர நெருக்கடியான காலங்

6. 1966-ல் ரூபாயை மதிப்பிறக்கம் செய்த பின்னர் அதன் அடிப்படையில் ரிசர்வ் பாங்கிடம் உள்ள பொன் இருப்பை 1969-ல் மறுமதிப்பீடு செய்தார்கள் (1969-லிருந்து). 10 கிராம் பொன்னின் மதிப்பு ரூ. 84—39 என்ற விகிதத்தில் தற்சமயம் (1972-ல்) ரிசர்வ் பாங்கிடம் ரூ. 182.53 கோடிக்கும் பொன் இருப்பாக உள்ளது.

களில் இந்த ரூ. 85 கோடி அந்நியச் செலாவணிக்காப்பு இருப்பு தியதியையும் அரசாங்கத்தின் அனுமதியுடன் ரத்துச் செய்யலாம்.

ரிசர்வ் பாங்கின் வெளியீட்டுப் பிரிவின்கீழ் நாடெங்கிலும் செலாவணிப் பெட்டகங்கள் (Currency Chests) அமைக்கப் பட்டுள்ளன. நாடெங்கிலும் பணத்தொகையை இடம் பெயர்த்தாமல் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பு வதற்கு இச் செலாவணிப் பெட்டகங்கள் வழிசெய்கின்றன.

ரிசர்வ் பாங்கு மைய அரசின் பாங்கராகவும், மாநில அரசு களின் பாங்கராகவும் செயல்பட்டுவருகிறது. பண நிருவாகம், கடன் வெளியீடு, கடன் நிருவாகம் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. மாநில அரசுகளுக்கு வழிவகைக் கடன்களை வழங்கும். இவை தவிர மிகவும் முக்கியமான பணத்துறை நிருவாகத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வகையில் வணிக பாங்குகளையும் கூட்டுறவு பாங்குகளையும், செலாவணி பாங்குகளையும் கட்டுப்படுத்தும் உச்ச அமைப்பாக ரிசர்வ் பாங்கு செயல்படுகிறது.

ரிசர்வ் பாங்கின் முக்கியப் பணியாக நாணயக் கட்டுப்பாட் டைக் கூறவேண்டும். நாணயத் தொகைக் கட்டுப்பாடு, நாணயத் தேர்வுக் கட்டுப்பாடு ஆகிய இரண்டையும் திறம்பட நிருவகித்து வருகின்றது. இதைச் செயல்படுத்துவதற்காக பாங்கு விகிதங்கள், அங்காடி நடவடிக்கைகள் (Open Market Operations), ரொக்கக் காப்பு விகித மாற்றங்கள் (Variable Reserve Ratios) முதலியன (நாணயத்தொகைக் கட்டுப்பாட்டிற்காக) பயன்படுத்தப்படுகின் றன. அவைதவிர சட்டரீதியான நீர்மைவிகிதம் (Statutory Liquidity Ratio), நிகர நீர்மைவிகிதம் (Net Liquidity Ratio) முதலிய விகிதங்களின் அடிப்படையில் வணிக பாங்குகளின் நாணய ஆக்கம் (Creation of Credit) கட்டுப்படுத்தப்படுகின்றன.

ரிசர்வ் பாங்கு ரொக்கக் காப்பு விகிதங்களை உயர்த்துகின்ற காலங்களில் வணிக பாங்குகள் தங்களிடம் உள்ள அரசு பத்திரங்களை விற்றுத் தங்கள் நீர்மை நிலைமையை அதிகரித்துக் கொள்ளுவதைத் தடுக்கவே சட்டரீதியான நீர்மைவிகிதம் அவசியமாக உள்ளது. வணிக பாங்கின் நீர்மைச் சொத்து களாவன: ரொக்கம், பொன், அரசுபத்திரங்கள் முதலியன. இது ஆரம்பத்தில் 20% ஆக இருந்தது. 1962-ல் இது 25% ஆக உயர்த்தப்பட்டது. ரிசர்வ் பாங்கிடம் சட்டக் காப்பாக வைத்துள்ள ரொக்கத்தொகை இதில் சேர்க்கப்படுவதில்லை. சட்ட நீர்மைவிகிதத்தின் காரணமாக வணிக பாங்கிடம் வைப்புகள் அதிகரிக்கும்போது அதில் கணிசமான விகிதத்தை

அரசு பத்திரங்களில் முதலீடு செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பொருளாதார வளர்ச்சியாலும், கிளை அலுவலகங்களை நாடெங்கிலும் ஏற்படுத்துவதாலும் வணிக பாங்குகளிடம் வைப்புத்தொகை அதிகரித்துச் செல்லுகின்றது. அப்போது அரசு பத்திரங்களுக்குக் கூடுதலான தேவை ஏற்படுகிறது. 1970 ஆகஸ்ட் மாதத்திலிருந்து சட்ட நீர்மைவிகிதம் 28% ஆக உயர்த்தப்பட்டது. நான்காவது திட்டத்திற்குத் தேவையான மூலதனத்தைத் திரட்ட அரசாங்கத்திற்கு உதவி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

நிகர நீர்மைவிகிதம் என்பது வகையீட்டு வட்டி விகித அமைப்பின் (Differential Rates System] ஒரு கூறாக உள்ளது. ரிசர்வ் பாங்குக் கடைநிலைக் கடன் ஈவோனாகப் (Lender of last resort) பணியாற்றுவதைப் பயன்படுத்தி வணிக பாங்குகள் தங்களுடைய நீர்மை நிலையைச் சரிசெய்து கொள்ளுகின்றன. அதிக அளவு நாணய ஆக்கம் செய்யும் வணிகபாங்குகள் சட்டரீதியான ரொக்க விகிதத்தைக் கடைப்பிடிப்பதற்காக ரிசர்வ் பாங்கிடம் கடன் வாங்கிக்கொள்ளுகின்றன. இதனால் நாணயக் கட்டுப்பாடு வலிவிழந்த சாதனமாக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்காக நிகர நீர்மைவிகிதம் வலியுறுத்தப்படுகிறது.

நிகர நீர்மைவிகிதம் பின்வருமாறு கணிக்கப்படுகிறது. வணிக பாங்கிடம் உள்ள மொத்த ரொக்கத் தொகை, பாங்கின் கணக்கில் ரிசர்வ் பாங்கிடம் உள்ள ரொக்க இருப்புகள், ஸ்டேட் பாங்கு உட்பட ஏனைய பாங்குகளிடம் நடப்புக் கணக்கில் உள்ள வைப்புகள், அரசாங்கப் பத்திரங்கள் (மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்கள்) ஆகியவற்றின் கூட்டுத் தொகையிலிருந்து ரிசர்வ் பாங்கு, ஸ்டேட் பாங்கு, தொழில்வளர்ச்சி பாங்கு ஆகியவற்றிடமிருந்து கடனாக வாங்கிய தொகையைக் கழிக்கவேண்டும். இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட தொகையை மேற்படி பாங்கின் மொத்த வைப்புகளின் விகிதமாக வெளியிட வேண்டும். இதைத்தான் நிகர நீர்மைவிகிதம் என்று வழங்குகிறோம். 1964-ல் முதன்முதலில் இதனை அமலாக்கியபோது நீர்மைவிகிதம் 28% ஆக இருந்தது. ஒரு பாங்கின் நிகர நீர்மைவிகிதம் 28% ஆக இருக்குமானால், அந்த பாங்கு நிலவுகின்ற பாங்கு விகிதத்தில் உச்சவரம்பு ஏதுமில்லாமல் கடன் வாங்கலாம். பாங்கின் நிகர நீர்மை விகிதம் 1% குறைவாக இருந்தால் (27% ஆக இருந்தால்) பாங்கு விகிதத்தைவிடக் கூடுதலாக ½% வட்டி செலுத்தவேண்டும். இவ்வாறு நிகர நீர்மைவிகிதம் குறையக் குறைய வணிக பாங்கு செலுத்தவேண்டிய வட்டி விகிதமும் உயர்ந்துகொண்டே செல்லும்.

1970 ஆரம்பத்தில் நிகர நீர்மைவிகிதம் 32%ஆக இருந்தது. அதில் குறையும் ஒவ்வொரு சதவீத நீர்மை நிலைமைக்கும், பாங்கு விகிதத்தைவிட அதிகப்படியாக ஒரு சதவீத வட்டியை வணிக பாங்கு செலுத்த வேண்டும். 1970 ஆகஸ்ட் மாதத்தில் நிகர நீர்மை நிலைமை 33%ஆகவும், 1971 ஜனவரியில் இவ் விகிதம் 34% ஆகவும் உயர்த்தப்பட்டது.

இதனால் தனது நீர்மை நிலையைப் பராமரித்துக் கொள்ளுகின்றவரை எந்த வணிக பாங்கும் கூடுதலான வட்டி விகிதத்தைச் செலுத்த வேண்டியதில்லை. பாங்கு விகிதம் எல்லா பாங்குகளுக்கும் ஒன்றாக இருந்தபோதிலும், ரிசர்வ் பாங்கிடம் கடன் வாங்கும் பாங்கின் நிகர நீர்மை நிலைமைக்கு ஏற்ப வட்டிவிகிதம் வேறுபடும். கடன் வாங்குவதற்கான வட்டி விகிதம் பாங்கிற்கு பாங்கு வேறுபடுகிறது. ஆகையால், இதை வகையீட்டு வட்டி அமைப்புமுறை என்று வழங்குகிறோம்.

பாரத ரிசர்வ் பாங்கின் பணக் கொள்கை, கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பணப் பெருக்கமாக உள்ளது. வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி செய்யவும், பணப் புழக்கத்தை நாட்டில் அதிகரிக்கவும், பண்டமாற்றுப் பேரங்களை நாட்டிலிருந்து அகற்றவும், பெருகிச் செல்லும் வணிகப் பேரங்களுக்குத் தேவையான பணத்தை ஏற்படுத்தவும் பணப் பெருக்கம் அவசியமாக உள்ளது. அதே சமயம் பொதுவாக வீக்கம் ஏற்படாமல் கட்டுப்படுத்துவதும், அதற்காக நாணயத்தொகை, நாணய உபயோகம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதும் இதன் பணியாகும். எனவே, ரிசர்வ் பாங்கின் பணக் கொள்கை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பணப் பெருக்கம் என்று வழங்கப்படுகிறது.

பாரத 'ஸ்டேட்' பாங்கு

பாரத 'ஸ்டேட்' பாங்கு என்பது அதன் வளர்ச்சியில் சூட்டப்படும் மூன்றாவது பெயராகும். 19ஆவது நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பட்டயத்துடன் மூன்று மாநில பாங்குகளாகத் தோற்றுவிக்கப்பட்டதை முதல் கட்டமாகக் கருதலாம். அதே கட்டத்தில் 1861-ல் அரசின் சிறப்பான சலுகைகளுக்கும், கட்டுப்பாட்டிற்கும் இவை உட்பட்டன. 1921-ல் இவை மூன்றும் ஒன்றாக இணைக்கப்பட்டு 'இம்பீரியல் பாங்கு' என்ற பெயரில் வழங்கப்பட்டதை இதன் வளர்ச்சியில் இரண்டாவது கட்டமாகக் கூறவேண்டும். 1955-ல் நாட்டுடைமையாக்கப்பட்டதால் இதை பாரத ஸ்டேட் பாங்கு என்று தற்சமயம் வழங்குகிறார்கள். இது இப் பாங்கின் வளர்ச்சியில் மூன்றாவது கட்ட

னாகும். இம் மூன்று கட்டங்களிலும் ஸ்டேட் பாங்கு சாதாரண வணிக பாங்குகளிடமிருந்து மாறுபட்டு, தனிச்சிறப்புடன், தனிச் சலுகையுடன் விளங்கியது. இப் பாங்கு ஆரம்ப முதல்—முதலில் கிழக்கிந்தியக் கம்பெனி, இரண்டாவது (பிரிட்டிஷ்) இந்திய அரசாங்கம், தற்சமயம் பாரத அரசாங்கம்—அரசாங்கத்தின் பாங்காகச் செயல்பட்டு வருகிறது.[7]

இம்பீரியல் பாங்கு ஏன் நாட்டுடைமையாக்கப்பட்டது என்பதை இங்கே சுருக்கமாகக் கூறுவோம். (இது) ஆரம்பம் முதல் மூலதனம், வைப்புத்தொகை, கிளை அலுவலகங்கள் என்ற அடிப்படையில் பெரிய வணிக பாங்காக இருந்தது; அரசாங்கத்தின் ஆதரவையும் பெற்றிருந்தது. இது ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. இந்தியர்களுக்குப் பாதகமாகவும், இவர்களைப் பேதப்படுத்தும் அளவிலும் நடந்துகொண்டதாகச் சிலர் கூறுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று திரு. முரஞ்சன் கூறியுள்ளார்.[8] கிராமிய பாங்கு ஆய்வுக் கமிட்டி (1949) இதை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று பரிந்துரைக்கவில்லை என்றாலும், 1954–ல் கிராமிய நாணய சர்வேக் கமிட்டி உடனடியாக நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கூறியது. கிராமங்களுக்கு பாங்கு வசதியை ஏற்படுத்தும் வலிமைபொருந்திய பாங்காக இம்பீரியல் பாங்கு ஒன்றுதான் இருந்தது. தனியார் நிறுவனமாக உள்ள இம்பீரியல் பாங்கை இப் பணிக்கு ஈடுபடுத்துவதால் இதன் பங்குதாரர்களின் இலாப ஈவு குறைந்துசெல்லும். எனவே, நாட்டின் பொருளாதார மேம்பாட்டைக் கருதி இது அரசுதுறையில் செயல்பட வேண்டும் என்று கூறியது. 1954-ல் நாடாளுமன்றத்தில் 'சோஷலிஸ பாணி'யில் பாரத சமுதாயத்தை உருவாக்கத் தீர்மானித்தார்கள். அதைச் செயல்படுத்தும் முதல் நடவடிக்கையாக இம்பீரியல் பாங்கை நாட்டுடைமையாக்கினார்கள். பாரத ஸ்டேட் பாங்கு 1955 ஜூலை 1உ யிலிருந்து செயல்பட்டு வருகிறது.

கிராமிய நாணய சர்வேக் கமிட்டியின் பரிந்துரைகளுக்கு இணங்க 1959 செப்டம்பர் மாதத்தில் பாரத ஸ்டேட் பாங்குச் (துணை பாங்குகள்) சட்டம் இயற்றப்பட்டது. பிரிட்டிஷாரின் நேரிடையான ஆட்சியில் இருந்த பகுதிகளில்தாம் இம்பீரியல்

7 1935-55 ஆண்டுகளில்தாம் அவ்விதம் செயல்படவில்லை என்று கூறலாம். 1935-க்கு முன்னர் இது அரசாங்கத்தின் பாங்காகவும், 1955-லிருந்து அரசாங்கத்திற்குச் சொந்தமான பாங்காகவும் செயல்பட்டு வருகிறது.

8 S. K. Muranjan, op, cit., pp. 112—113.

பாங்கின் அலுவலகங்கள் இருந்தன. சுதேச மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளின் கிராமிய முன்னேற்றத்திற்கும், கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கும் அந்தந்தச் சமஸ்தானங்களுடன் தொடர்புகொண்ட எட்டு பாங்குகள் நாட்டுடைமையாக்கப் பட்டன. அவையாவன: சௌராஷ்டிரா ஸ்டேட் பாங்கு, பாட்டியாலா ஸ்டேட் பாங்கு, பிகானிர் ஸ்டேட் பயங்கு, இராஜஸ்தான் ஸ்டேட் பாங்கு, இந்தோர் ஸ்டேட் பாங்கு, மைசூர் ஸ்டேட் பாங்கு, ஐதராபாத் ஸ்டேட் பாங்கு, திருவாங்கூர் ஸ்டேட் பாங்கு ஆகியன.

ஸ்டேட் பாங்கும், அதன் துணை பாங்குகளும், மிகப் பெரிய வணிக பாங்குகளாக இருப்பதுடன், ரிசர்வ் பாங்கின் பதிலாளியாகவும் செயல்படுகின்றன. நாடெங்கிலும் கிளை அலுவலகங்களை ஏற்படுத்துதல் இவற்றின் முக்கியப் பணியாக இருக்கும். 1960 ஜூன் மாதத்திற்குள் 400-க்கும் அதிகமான கிளை அலுவலகங்களை நிறுவியுள்ளது. 1965-க்குள் மேலும் 319 அலுவலகங்களைத் திறந்துள்ளன. 1967 டிசம்பர் 31வ யன்று பாரத ஸ்டேட் பாங்கின் மொத்தக் கிளை அலுவலகங்கள் 1466 ஆகும். ஸ்டேட் பாங்கு, அதன் துணைபாங்குகள் ஆகியவற்றின் அலுவலகங்கள் மொத்த பாங்கு அலுவலகங்களில் 32·3% ஆக உள்ளன. 1972 ஜூன் மாத இறுதியில் இவ் விழுக்காடு 29.0%ஆகக் குறைந்துவிட்டது என்றாலும் இவற்றின் அலுவலகங்கள் 3958 ஆக உயர்ந்துள்ளன.

கூட்டுறவு பாங்குகளுக்கும், கூட்டுறவுத் தொழில்முயற்சிக்கும் ஆதரவு அளிப்பதே இதன் முக்கிய நோக்கம் ஆகும். ஸ்டேட் பாங்கு வேளாண்மைக்கு நேரிடையாக நாணயம் வழங்க முன் வரவில்லை. ஆனால், கூட்டுறவு பாங்குகளின்மூலம் இதைச் செய்து வரும். அதைத் தவிரக் கிராமியத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களின் வளர்ச்சியிலும் அதிக அக்கறை கொண்டுள்ளது. சிறுதொழில்களுக்கு நிதி உதவி அளிக்கும் சோதனைத் திட்டம் வெற்றி அடைந்ததைத் (1956-ல்) தொடர்ந்து இது மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஸ்டேட் பாங்கு வெளி நாடுகளில் கிளை அலுவலகங்களை ஏற்படுத்தி அந்நியச் செலாவணியுடன் தொடர்புடைய அனைத்துப் பணிகளையும் செய்து வருகின்றது. பாரதத்தின் மிக முக்கியச் செலாவணி பாங்காக எதிர்காலத்தில் இது செயல்படும்.

பட்டியல் பாங்குகள் (நாட்டுடைமையாதல்)

பாரதத்தில் கூட்டுப்பங்கு பாங்குகளைத்தாம் வணிக பாங்குகள் என்று வழங்குகிறார்கள். ரிசர்வ் பாங்கு தோன்றியவுடன் இந்தியா

வில் உள்ள கூட்டுப் பங்கு பாங்குகள் யாவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அவையாவன: ஷெட்யூல் (Schedule) பாங்குகள் என்று வழங்கப்படும் பட்டியல் பாங்குகள்; இரண்டாவதாக, 'ஷெட்யூலில்' இடம்பெறாத பாங்குகள். அமெரிக்காவில் உள்ள உறுப்பினர் பாங்குகளைப் போன்று இந்திய 'ஷெட்யூல்' (பட்டியல்) பாங்குகள் விளங்குகின்றன. இந்திய ரிசர்வ் பாங்குச் சட்டத்தின் இரண்டாவது பட்டியலில் (ஷெட்யூலில்) இடம்பெற்ற பாங்குகளைத்தாம் ஷெட்யூல் பாங்குகள் அல்லது பட்டியல் பாங்குகள் என்று வழங்குகிறோம். இவ்வாறு இரண்டாவது பட்டியலில் சேர்க்கப்படுவதற்குச் சில தகுதிகளைப் பெற்றிருக்கவேண்டும். இந்த பாங்கின் செலுத்திய மூலதனமும், காப்பு நிதியும் ரூ. 5 இலட்சத்திற்குக் குறையாமல் இருக்கவேண்டும். மேற்படி பாங்கின் நிருவாகம் 'திருப்தி' அளிப்பதாக இருக்கவேண்டும். 1956ஆம் ஆண்டு பாங்குச் சட்டத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு இருக்க வேண்டும். (அதற்கு முன்பு இந்தியக் கம்பெனிச் சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.) வெளிநாடுகளில் பதிவாகிய பாங்குகளாக இருந்தால் அவை பாரத அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும். அந்த நாட்டுச் சட்டங்கள் பாரத பாங்குகளைப் பேதப்படுத்தாமல் இருக்கவேண்டும்.

'ஷெட்யூல்' பாங்குகளின் மூலதன அடிப்படை வைப்புத் தொகை முதலியன ஒரு சீராக இல்லை. இவற்றின் மூலதனம் குறைந்தது ரூ. 5 இலட்சமாகவும், அதிக அளவு ரூ, 25 கோடியாகவும் இருக்கின்றது. சில பாங்குகளின் வைப்புகள் ரூ. 100 கோடிக்கு அதிகமாகவும் வேறு சில பட்டியல் பாங்குகளின் வைப்புத்தொகை சில இலட்ச ரூபாய்களாகவும் இருக்கின்றன. சில 'ஷெட்யூல்' பாங்குகள் பாரதம் முழுவதும் அலுவலகங்களை ஏற்படுத்தியுள்ளன. இன்னும் சில 'ஷெட்யூல்' பாங்குகள் குறிப்பிட்ட ஒன்று அல்லது இரண்டு மாநிலங்களில் மட்டுமே செயல்படுகின்றன. ஓரளவிற்கு அண்மையில் இந்தப் போக்குகள் மாறிக் கொண்டே வருகின்றன.

1969 டிசம்பரில் 73 ஷெட்யூல் பாங்குகள் இருந்தன. இந்த ஷெட்யூல் பாங்குகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவில் ஸ்டேட் பாங்கும் அதன் ஏழு துணை பாங்குகளும் உள்ளன. இதன் வசம் ரூ. 1018 கோடி வைப்புகள் உள்ளன. அதாவது ஷெட்யூல் பாங்குகளில் உள்ள மொத்த வைப்புகளில் 21% ஸ்டேட் பாங்கில்மட்டும் உள்ளன. ஸ்டேட் பாங்கின் ஏழு துணைபாங்குகளிலும் 6% வைப்புகள் உள்ளன. 1969 ஜூலையில் நாட்டுடைமையாக்கிய 14 பெரிய வணிக பாங்குகளில்

ரூ. 2735 கோடி அதாவது 56% வைப்புகள் இருந்தன. எனவே, பொதுத்துறை வணிக பாங்குகளிடம் 83% வைப்புகள் உள்ளன. இரண்டாவதாக உள்ள பிரிவில் வெளிநாட்டு பாங்குகள் உள்ளன. இவற்றைப் பெரும்பாலும் செலாவணி பாங்குகள் என்று வழங்குவார்கள். 1969 இறுதியில் 15 வெளிநாட்டு பாங்குகள் இருந்தன. இவற்றின் மொத்த வைப்புத்தொகை ரூ. 481 கோடியாகும். இது மொத்த வைப்புத்தொகையில் 10% ஆக இருந்தது. மூன்றாவதாக உள்ளவை தனியார் துறையில் தொடர்ந்து செயல்பட்டு வரும் மிகச் சிறிய ஷெட்யூல் பாங்குகள் ஆகும். 36 சிறிய ஷெட்யூல் பாங்குகளிடம் ரூ. 314 கோடி வைப்புத்தொகை மட்டுமே உள்ளது. இது மொத்த பாங்கு வைப்புகளில் 7% ஆகும்.

ஷெட்யூலில் இடம்பெறாத பாங்குகளின் எண்ணிக்கை நாள் தோறும் குறைந்துகொண்டே வருகின்றது. 1960-ல் 335 ஆக இருந்த ஷெட்யூலில் இடம்பெறாத பாங்குகள், 1969 டிசம்பரில் 14 ஆகத் தேய்ந்துவிட்டன. இவற்றின் வைப்புத்தொகை ரூ. 25 கோடிக்கும் குறைவாக இருந்தது.

1972 ஜூன் மாத இறுதியில் பாரதம் முழுவதிலும் மொத்தம் 13,620 பாங்கு அலுவலகங்கள் இருந்தன. அவற்றுள் ஸ்டேட் பாங்கிற்கு மட்டும் 2575 அலுவலகங்களும், அதன் ஏழு துணை பாங்குகளுக்கு 1383 அலுவலகங்களும், 14 (பெரிய) நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்குகளுக்கு 7189 அலுவலகங்களும் இருந்தன. மொத்தத்தில் பொதுத்துறை பாங்குகளுக்கு 11,147 (பாங்கு) அலுவலகங்கள் இருந்தன. பாங்கு அமைப்பில் பொதுத் துறையின் செல்வாக்கை இது எடுத்துக்காட்டும்.

பாங்குகளை நாட்டுடைமையாக்குதல்[9]

வணிக பாங்குகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற எண்ணம் அரசியல் ஆதரவைப் பெற்ற ஒரு கருத்தாக மாறியது. 1967-ல் நாட்டுடைமைக்கு முன்னோடியாக அவை சமூகக் கட்டுப்பாட்டின்கீழ் (Social control) கொண்டுவரப்பட்டன. அரசாங்கம் நேரிடையாகவும், மறைமுகமாகவும் தனியார் துறையில் உள்ள பாங்குகளின் நிருவாகத்தையும், அவை பின்பற்ற வேண்டிய கொள்கைகளையும் நிர்ணயித்தல் அல்லது கட்டுப்படுத்துதல் சமூகக் கட்டுப்பாடு என்று வழங்கப்பட்டது.

9 பார்க்கவும்: ஆசிரியரின் 'பணவியற் பொருளாதாரம்' 1972, அத்தியாயம் 19.

சமூகக்கட்டுப்பாட்டின் முக்கிய நோக்கங்கள்:

(1) தொழில் அதிபர்களின் செல்வாக்கிலிருந்து பாங்குகளின் நிருவாகப் பொறுப்பை அகற்றி, தேர்ச்சிபெற்ற நிபுணர்களிடம் அதை ஒப்படைத்தல்,

(2) பாங்குகளின் முக்கிய நோக்கம் சமூகத்தின் பொதுவான நலன்களை மேம்படுத்துவதாக இருக்கும்,

(3) பாங்கு வசதிகள் இதுவரை ஏற்படாத ஊர்களில் எல்லாம் அவற்றை ஏற்படுத்துதல்,

(4) பாங்கு நாணயத்தில் மிகப் பெரிய தொழில்நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் நாணய விழுக்காட்டைப் படிப்படியாகக் குறைத்தல்,

(5) சிறுதொழில்கள், விவசாயம், ஏற்றுமதித் தொழில்கள் தனிநபர் தொழில்முயல்வோர் ஆகியோரின் தொழில் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பாங்கு நாணயத்தைப் பகிர்ந்து அளித்தல்.

பாங்குகளைச் சமூகக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரும் மசோதா 1967 டிசம்பரில் தாக்கல் செய்யப்பட்டபோதிலும், அது 1969 பிப்ரவரியிலிருந்துதான் அமலுக்குக் கொண்டுவரப் பட்டது. இச் சட்டம் நிறைவேற்றப்படும் முன்னதாகவே இதன் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் ஒரு கூறாகத் **தேசிய நாணயக் கவுன்சில்** (National Credit Council) நிறுவப்பட்டது. பாரத நிதி அமைச்சர் இதன் தலைவராகவும், ரிசர்வ் பாங்கின் ஆளுநர் இதன் துணைத்தலைவராகவும் இருப்பர். தேசிய நாணயக் கவுன்சிலின் முக்கியப் பணிகளாவன:

பாரதத்தில் மூலதனம் கிடைப்பருமையாக இருப்பதால், தேசிய அளவில் இதை முக்கியத்துவம் பெற்ற துறைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான நெறிமுறைகளை நிர்ணயித்தல், முக்கியத்துவம் பெற்ற துறைகளின் வரிசைப்பட்டியலைத் தயாரித்து அத் துறைகளின் நாணயத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை வகுத்தல், பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் வட்டார ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல் முதலியன.

பாங்குகளின் நடவடிக்கைகள் அனைத்தையும் சமூகக் கட்டுப்பாட்டின் வாயிலாகக் கட்டுப்படுத்த முடிந்தது என்றாலும், அதைச் செயல்படுத்துவதில் அதிக அளவிற்குக் காலதாமதம் ஏற்பட்டது. ஆகையால், பாங்குகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்தது.

பாரத பாங்கு அமைப்பின் வளர்ச்சியில் 1969 ஜூலை மாதம் 19ஆம் நாள் ஒரு பொன்னான நாளாகும். அன்றைய தினம் ரூ. 50 கோடிக்கும் அதிகமான வைப்புத்தொகையை உடைய, இந்தியர்களுக்குச் சொந்தமான வணிக பாங்குகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டதாக ஜனாதிபதியின் பிரகடனம் அறிவித்தது. அதன்படி 14 பெரிய வணிக பாங்குகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. அவையாவன:

(1) சென்ட்ரல் பாங்கு ஆஃப் இந்தியா,
(2) பாங்கு ஆஃப் இந்தியா,
(3) பஞ்சாப் நேஷனல் பாங்கு,
(4) பாங்கு ஆஃப் பரோடா,
(5) யுனைடெட் கமர்ஷியல் பாங்கு,
(6) கானரா பாங்கு,
(7) யுனைடெட் பாங்கு ஆஃப் இந்தியா,
(8) தேனா பாங்கு,
(9) சிண்டிகேட் பாங்கு,
(10) யூனியன் பாங்கு ஆஃப் இந்தியா,
(11) அலகாபாத் பாங்கு,
(12) இந்தியன் பாங்கு,
(13) பாங்கு ஆஃப் மஹாராஷ்டிரா,
(14) இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு.

பாங்குகளை நாட்டுடைமையாக்கும் முயற்சி எளிதில் முற்றுப்பெறவில்லை. இப் பாங்குகளின் பங்குதாரர்களும், இயக்குநர்களும் முதலில் ஜனாதிபதியின் அறிக்கையை எதிர்த்தும், பின்னர் நாடாளுமன்றத்தின் மேற்படி சட்டத்தை எதிர்த்தும் உச்ச (சுப்ரீம்) நீதிமன்றத்தில் வழக்காடினார்கள். பாங்குகளில் சிலவற்றைமட்டும் நாட்டுடைமை ஆக்கியதால் இது பதப்படுத்துவதற்குச் சமமாக உள்ளது என்பதாலும், நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்குகளுக்கு இழப்பு ஈட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை குறையுடையதாக இருந்ததாலும், சட்டத்தின் ஒரு பகுதியைமட்டும் செல்லுபடியாகாது என்று அறிவிப்பதற்கு இயலாத காரணத்தால் அச் சட்டத்தை முழுமையாக ஏற்பதற்கில்லை என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இருந்தபோதிலும் நாடாளுமன்றத்திற்கு பாங்குகளை நாட்டுடைமையாக்கும் உரிமையுண்டு என்பதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. அதன் அடிப்படையில் 1970 பிப்ரவரி மாதத்தில் மீண்டும் மேற்படி 14 பாங்குகளை நாட்டுடைமையாக்குவதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டு, மார்ச் மாதத்தில் சட்டமாக்கப்

பட்டது. (இதில் சுட்டுத்தொகை அறிவிக்கப்பட்டதேயல்லாமல் அதனை நிர்ணயிப்பதற்கான முறை குறிப்பிடப்படவில்லை.)

பாங்குகளின் நாட்டுடைமையை மக்கள் அனைவரும் ஏகமனதாக வரவேற்றனர். ஏழைமக்கள், சிறுதொழில் முயலுநர், விவசாயிகள், ஏற்றுமதியாளர்கள், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்கள், சிறப்புத் தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் ஆகியோர்களுக்கு நம்பிக்கையூட்டும் முயற்சியாகவும், வாழ்வு அளிக்கும் வளர்ச்சியாகவும் இது கருதப்பட்டது. பாங்குகள் பேரளவுத் தொழில்களுக்குமட்டும் உதவி செய்துவந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடிய ஓர் அமைப்புமுறையாகக் கருதப்பட்டது. கிராமங்களிலும், இதர ஊர்களிலும் பாங்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஒரு புதிய முயற்சி தீவிரமாக மேற்கொள்ளப்படும். பாங்கு வசதிகளை நாடு முழுவதற்கும், அனைத்து மக்களுக்கும் கிடைக்கும்படி செய்வதால் பாரதப் பொருளாதார அமைப்பில் இதுவரை நிலவிவந்த இரட்டைத் தன்மைக்கு ஒரு முடிவு கட்டமுடியும். அமைப்புடைய பண அங்காடியின் செல்வாக்கில் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் கொண்டுவர இது உதவியாக இருக்கும். நாட்டுடைமைக்குப் பின்னர் ஆண்டுதோறும் திறக்கப்பட்ட பாங்கு அலுவலகங்களின் விவரம் பின்வருமாறு: 1969-ல் 1369, 1970-ல் 2137, 1971-ல் 1805 ஆக மூன்றாண்டுகளில் 5311 கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. 1972, 1973, 1974 ஆகிய மூன்றாண்டுகளில் இதைப்போல மேலும் 5,000 புதிய அலுவலகங்களைத் திறக்கத் திட்டமிட்டுள்ளார்கள். இத்தகைய நடவடிக்கைகள் நீண்டகால வளர்ச்சிக்கு அடிப்படையானவை என்பதுடன், வளர்ச்சிவேகத்தை உந்தக்கூடிய சக்தியாகவும் இவை செயல்படக்கூடும்.

பாங்கு அமைப்பின் அடிப்படை நாள்தோறும் விரிவாக்கப்படுகிறது. நாட்டின் பல பகுதிகளுக்கும், பலநிலையில் உள்ள மக்களுக்கும் பாங்குப் பணிகள் இன்றியமையாத ஒரு முன்னிபந்தனையாகிவிட்டன. உயர்ந்துசெல்லும் விவசாயத்துறையின் நாணயத் தேவையை நிறைவுசெய்யும் பணியும் வணிக பாங்குகளிடம் ஒப்படைக்கப்பட்டன. கிராமிய வளர்ச்சிக்குக் கூட்டுறவு அமைப்புகள், கூட்டுறவு பாங்குகள் ஆகியவற்றின் பணிகள் போதுமானவையாக இல்லை. ஆகையால், வணிக பாங்குகள் நேரிடையாக இத் துறைகளில் ஈடுபட வேண்டியது அவசியமாயிற்று.

கிராமிய வளர்ச்சியுடன், வட்டார வளர்ச்சிவேகத்தைச் சமநிலைப்படுத்தவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றவும்

பாங்குகள் பொறுப்பு ஏற்றுள்ளன. பொருளாதார வளர்ச்சியுடன், வட்டார வளர்ச்சியும் முக்கியக் குறிக்கோளாக வற்புறுத்தப்பட வேண்டும். எனவே, ஒவ்வொரு பொதுத்துறை பாங்கும் ஒன்றுக்கும் அதிகமான மாவட்டங்களின் வளர்ச்சிக்குப் பொறுப்பு ஏற்கவேண்டும். இத் திட்டத்தைத் தலைமை பாங்குத் திட்டம் (Lead Bank Scheme) என்பர்.[10] வளர்ச்சித் திட்டங்களை வட்டார அடிப்படையில் தயாரிக்கவும், பல அலுவலகங்களின் வளர்ச்சிப் பணிகளை ஒருமுகப்படுத்தவும், தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளைச் சர்வேக்களின்மூலம் கண்டறியவும், கிளை அலுவலகங்கள் ஏற்படுத்துவதற்கான ஊர்களைத் தேர்ந்து எடுக்கவும், மற்றும் விவசாயப் பொருள்களின் விற்பனை வசதி, கிடங்கு வசதி முதலியவற்றைக் கண்டு அறியவும் தலைமை பாங்கு பொறுப்பு ஏற்கும். அம் மாவட்டத்தில் உள்ள இதர பாங்குகளின் ஒத்துழைப்புடன் இது செயல்படும். இம் முயற்சிகள் யாவும் அனைத்து வட்டாரங்களும் சமநிலை அடிப்படையில் வளர வாய்ப்பு அளிக்கும்.

கூட்டுறவு பாங்குகள்

சமத்துவ அடிப்படையில் தமது விருப்பத்திற்கிணங்க உறுப்பினர்கள் கூட்டுறவு அமைப்பை உருவாக்குகின்றனர். அவ் வுறுப்பினர்களின் பொருளாதார நலன்களை மேம்படுத்திக்கொள்வது கூட்டுறவு அமைப்புகளின் முக்கிய நோக்கமாகும். இந்தியாவில் 1904-ல் முதன்முதலில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. நாளடைவில் கூட்டுறவு பாங்குகள் ஏற்பட்டன. அவற்றை நகரக் கூட்டுறவு பாங்குகள் என்றும், கிராமியக் கூட்டுறவு பாங்குகள் என்றும் இருவகைப்படுத்தலாம்.

கூட்டுறவு பாங்குகளின் அமைப்பு மூன்று நிலைகளில் உள்ளன. முதலில் முதல்நிலைச் சங்கங்கள். இவற்றை முதல்நிலை நாணயச் சங்கங்கள் என்று வழங்குவார்கள். இரண்டாவதாக மத்தியக் கூட்டுறவு பாங்குகள். மூன்றாவதாக மேல்மட்டத்தில் செயல்படும் மாநிலக் கூட்டுறவு பாங்கு. அநேகமாக பாங்குஇயல் அடிப்படையில் நிருவகிக்கப்படும் அமைப்பாக இவற்றைக் கருதலாம்.

10 1968-ல் நடைபெற்ற தேசிய நாணயக்கவுன்சில் கூட்டத்தில் திரு. D.R. காட்கில் தலைமையில் ஓர் ஆய்வுக்குழு (Study Group) நியமிக்கப்பட்டது. நாட்டுடைமைக்குப்பின்னர் 1969-ஆகஸ்ட் மாதத்தில், பாங்குகளின் நடவடிக்கைகளை வளர்ச்சித் திட்டங்களுடன் ஒருமுகப்படுத்தும் வகையில் திரு F.K.F. நாரிமான் (F.K.F. Nariman) தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இவ் விரு கமிட்டிகளும் வட்டார அடிப்படையில் வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறின: நாரிமன் கமிட்டி மாவட்டங்களின் வளர்ச்சிக்கான பொறுப்பை பாங்குகள் ஏற்கவேண்டும் என்று கூறியது. பார்க்கவும். RBI. Annual Report, Aug. 1970, p. 62.

கூட்டுறவு பாங்குகளுக்கும் பண அங்காடிக்கும் ஓர் இணைப்பாக இவை செயல்படுகின்றன. அரசாங்கம், ரிசர்வ் பாங்கு இதர ஷெட்யூல் பாங்குகள் ஆகியவற்றிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், கூட்டுறவு பாங்குகளுக்குத் தேவையான தொகையைத் திரட்டும் பொறுப்பை ஒவ்வொரு மாநில பாங்கும் ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்சமயம் கூட்டுறவு பாங்குகள் அதிக அளவிற்கு அரசு உதவியையும் ஆதரவையும் நம்பியிருக்கின்றன. கூட்டுறவு நிறுவனங்களைத் தணிக்கை செய்தல், மேற்பார்வையிடுதல், பண உதவி செய்தல் முதலிய உதவிகளை அரசாங்கம் செய்துவருகிறது. கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சேரவேண்டிய தொகையை வசூலிப்பதில் அரசாங்க வரித்தொகைக்கு அடுத்து முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

வேளாண்துறையில் நாணயத்தைப் பகிர்ந்து அளிக்கும் பொறுப்பு முழுவதையும் கூட்டுறவு பாங்கிடம் ஒப்புவிக்க எண்ணி அதை வலுப்படுத்தவேண்டும் என்று 1954–ல் கிராமிய நாணயச் சர்வேக் கமிட்டி பரிந்துரைத்தது. ஆனால், கிராமிய நாணயம் முழுவதையும் கொடுக்கும் அளவிற்குக் கூட்டுறவு பாங்குகளும், நாணய சங்கங்களும் வளரவில்லை. முக்கியமாகப் பசுமைப் புரட்சியுடன் இணைந்து காணப்பட்ட தீவிரச் சாகுபடித் திட்டத்தை அமலாக்குவதற்குக் கூட்டுறவு பாங்குகளுடன் வாணிக பாங்குகளும் உதவி செய்யவேண்டும் என்று தீர்மானித்தார்கள். அதன் விளைவாகவே வணிக பாங்குகளைச் சமூகக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரவும் பின்னர் நாட்டுடைமையாக்கவும் செய்தனர்.

வேளாண்துறைக்கு நீண்டகாலக் கடன் கொடுக்கும் பாங்குகளை முதலில் நில அடைமானபாங்கு என்று வழங்கினர். தற்சமயம் அவற்றை நிலவள பாங்குகள் என்று வழங்குகிறார்கள். நிலத்தை அடைமானமாக வைத்துக்கொண்டு கடன்கொடுத்த போதிலும் இதன் நோக்கம் நிலவளர்ச்சியாக உள்ளதை இப் பெயர்மாற்றம் வலியுறுத்துகிறது.

கூட்டுறவு பாங்குகள் தற்காலத்தில் பொருளாதார முக்கியத்துவம் பெற்றுவருகின்றன. இந்த பாங்குகளிடம் கணிசமான தொகை வைப்புகளாக இருக்கின்றன. எனவே, கூட்டுறவு பாங்குகளையும் ரிசர்வ் பாங்கின் நேரடியான தணிக்கை, பரிசீலனைக்குக் கொண்டுவரக் கருதிச் சட்டத் திருத்தம் செய்தார்கள். அதன்படி 1949 பாங்கு கம்பெனிச் சட்ட விதிகள் 1966–ல் கூட்டுறவு பாங்குகளுக்கும் நீட்டிக்கப்பட்டன. இதன்படி மாநிலக் கூட்டுறவு பாங்குகள், ஷெட்யூல் வணிக பாங்குகளாகக் கருதப்

படும். அப்போது ஷெட்யூல் பாங்குகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப் பாடுகள் மாநிலக் கூட்டுறவு பாங்குகளுக்கும் பொருந்தும்.

மாநிலக் கூட்டுறவு பாங்குகளைத் தவிர, மத்தியக் கூட்டுறவு பாங்குகளும், ஒரு லட்சத்திற்குமேல் மூலதனம் உடையதும் விவசாயத் துறைகளில் ஈடுபடாததுமான முதல்நிலை பாங்குகளும் மேற்படி சட்டத்தால் ரிசர்வ் பாங்கின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன.

பண அங்காடி

பண அங்காடி என்ற சொல் பணத்துறைச் சொத்துகளை விற்கவும், வாங்கவும் செய்கிறவர்களின் பேரங்களை முக்கியமாகக் குறிப்பிடுகிறது. ரொக்கமாக உள்ள பணத்தை வெவ்வேறு மட்டத்தில் நீர்மைத்தன்மை உடைய பணத்துறைச் சொத்து களாகப் பரிவர்த்தனை செய்வதும், மேற்படி பணச் சொத்து களை ரொக்கமாக மாற்றுவதும் பணஅங்காடியின் முக்கியப் பணிகளாகும்.

பொருளாதார நடவடிக்கைகள் யாவும் பண அடிப்படையில் ஏற்படுமானால், பண அங்காடியின்மூலம் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது எளிதாக இருக்கும். பாரதத் தில் பொருளாதாரப் பேரங்கள் யாவும் பணத்தின் உதவியால் நடைபெறுகின்றன என்று கூறமுடியவில்லை; கணிசமான பேரங் கள் பண்டமாற்று அடிப்படையில் நடைபெறுகின்றன. அடுத்துப் பண அங்காடி முழுவதும் அமைப்புடைய ஒருங்கிணைக்கப் பட்ட அங்காடியாக இல்லை. ஏனைய குறைவளர்ச்சியுள்ள நாடு களில் இருப்பதைப்போல பாரதத்திலும் பண அங்காடி, அமைப் புடைய அங்காடி என்றும், அமைப்பு இல்லாத அங்காடி என்றும் இரு பிரிவுகளாக உள்ளது. அமைப்புடைய பண அங்காடியில் ரிசர்வ் பாங்கு, ஸ்டேட் பாங்கு. நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக பாங்குகள், மற்றும் தனியார் துறையில் உள்ள வணிக பாங்குகள், அந்நியச் செலாவணி பாங்குகள், கூட்டுறவு பாங்குகள் முதலியன முக்கியமானவை. இவைதவிர அரசாங்கமும், கூட்டுப் பாங்கு நிறுவனங்களும் பண அங்காடியில் பங்குகொள்ளுகின்றன.

அமைப்பில்லாத பண அங்காடியில் பண வணிகரும், சுதேச பாங்கரும் முக்கியமானவர்கள். இவர்கள் அமைப்புடைய பண அங்காடியுடன் முழுமையான தொடர்புகொள்ளவில்லை. இவர் களை அமைப்புடைய அங்காடியுடன் இணைப்பது பாரத ரிசர்வ் பாங்கின் முக்கியக் குறிக்கோளாக இருந்துவருகிறது. அந்தக் குறிக்கோள் இன்றுவரை (1971 வரை) நிறைவேற்றப்படவில்லை. ஆனால், கூடிய விரைவில் இது சாத்தியமாகலாம்.

26. இணைப்பு அரசு அமைப்பில் நிதித்தொடர்புகள்

இணைப்பு அரசு அமைப்பில் மைய அரசும், மாநில அரசுகளும் தங்களுக்குள் இறைமையைப் (Sovereignty) பகிர்ந்து கொள்ளுகின்றன.[1] இவ் விரு அரசுகளும் ஒற்றுமை, ஒத்துழைப்பு என்ற அடிப்படையில் அதிகாரங்களையும், பொறுப்புகளையும் பங்கிட்டுக் கொள்ளுகின்றன. ஓர் அரசிற்கு என்று ஒதுக்கப்பட்ட இனங்களில்கூட அதன் அதிகாரமும், இறைமை உரிமையும் முழுமையாக இல்லை. ஏனெனில், ஒவ்வோர் அரசிற்கும் ஒவ்வொரு துறையிலும் உரிமையும் பொறுப்பும் உண்டு. எனவே, இணைப்பு அரசு அமைப்பில் ஈரடுக்கு அரசுமுறை காணப்படுகிறது. இவ் விரு அரசுகளும் அனைத்துப் பணிகளையும், பொறுப்புகளையும் ஒருங்கிணைந்து செயல்படுத்துகின்றன. அதாவது ஒவ்வொரு துறையிலும், அடுக்கடுக்காக இரு அரசுகளும் ஒரேசமயத்தில் செயல்படுவதைக் காணலாம்.[2]

மாநில அரசுகளின் முழு இறைமைக் கோரிக்கையும், தன்னாட்சிக் கோரிக்கையும் இணைப்பு அரசு அமைப்பின் அடிப்படையான நியதிகளுக்குப் புறம்பானவை; இவை வரலாற்று நிகழ்ச்சிகளின் போக்கிற்கும் மாறுபட்டவை. காட்டாக, முழு இறைமை உரிமைகளையுடைய அமெரிக்க அரசுகள் தனித்து இயங்க முடியாமையால்தான் இணைப்பு அரசு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டன. அந் நாட்டின் அரசு அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதைவிட நடைமுறையில் இணைப்பு அரசிற்குக் கூடுதலான அதிகாரங்களும் உரிமைகளும் ஏற்பட்டுள்ளன. இதற்குப் பல நிகழ்ச்சிகள் காரணமாக உள்ளன. முதலில் பேரளவு உற்பத்தியால் ஏற்படும் சிக்கனநலன்களைக் கூறலாம்; இதனால் நாடு முழுவதும் ஒரு பொருளாதார

[1] R.N. Bhargava—The Theory and Working of Union Finance in India, (1967) Chaitanya, p. 59.

[2] Ibid, p. 60.

அலகாக மாற்றப்படுகிறது. இதைத்தவிரத் தேசிய உணர்ச்சி, நாட்டுப்பற்று, பிற்பட்ட வகுப்பினர்களின் பாதுகாப்பு முதலியன; இறுதியாக நாட்டின் பாதுகாப்பு, உலகப் போர்கள், மற்றும் உலகமந்தம் ஆகியவை. இதரக் காரணிகளைவிட உலகப் போர்களும் உலக மந்தமும் பரந்த நிலப்பரப்பின் இணைப்பையும், இணைப்பு அரசின் கட்டாயத்தையும் மிகவும் தெளிவாக வலியுறுத்தியுள்ளன.

ஐரோப்பாவில் தனித்தனி நாடுகள் இறைமை உரிமையுடன் நெடுங்காலமாக இருந்தபோதிலும், அவை தொழில்வளர்ச்சியிலும், நுட்பமுறையிலும் முன்னணியில் இருந்தபோதிலும் அவற்றின் நிலப்பரப்பு, மக்கள்தொகை, (பொருளாதார) அங்காடி முதலியன மிகவும் சிறு அளவில் இருக்கின்ற காரணத்தால் அமெரிக்காவிற்கு இணையாகச் செல்வாக்கான நிலையை எய்த முடியவில்லை. இதை ஒரளவிற்கு ஈடுசெய்யும் நோக்கத்தோடு, பொருளாதாரத் துறையில் ஒற்றுமையாகச் செயல்படுவதற்கு ஐரோப்பியப் பொது அங்காடியை (European Common Market) ஏற்படுத்தியுள்ளன. இங்ஙனம் மண்டல அடிப்படையில் நாடுகள் ஒன்றுசேர்ந்து பொதுவான அங்காடியை ஏற்படுத்திக்கொள்வதால் அவற்றின் தொழில்வளர்ச்சியும், வருமானமும் உயர்ந்து செல்கின்றன. பேரளவு உற்பத்தியாலும், புறச்சிக்கன நலன்களினாலும்[3] ஏற்படும் ஆதாயங்களை அடைவதற்குப் பொருளாதாரக் கூட்டு அமைப்புகள் அவசியமாக உள்ளன.

இந்தியாவில் இணைப்பு அரசு அமைப்புத் தோன்றிய விதம் ஏனைய நாடுகளின் வரலாற்றிலிருந்து வேறுபடுகிறது. பிற நாடுகளில் முழு இறைமைபெற்ற தனித்தனி அரசுகள் தாமாக ஒன்றுசேர்ந்து இணைப்பரசைத் தோற்றுவித்துள்ளன. மாறாக, இந்தியாவில் அதிகாரக்குவிப்பு உடைய ஒற்றை அரசிலிருந்து நாளடைவில் நிருவாக எளிமைக்காகவும், அவ்வப்போது எழுந்த அரசியல் கோரிக்கைகளுக்குத் தீர்வாகவும் மாநிலங்களுக்குக் கூடுதலான உரிமைகளும், பொறுப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தியா ஒரு துணைக்கண்டமாக விளங்குகிறது. மக்களின் இனம், மொழி, மதம், உணவுப் பழக்கவழக்கங்கள் முதலியன வேறுபடுகின்றன. இவ்வாறு பன்மைப் பண்புகள் உடைய நாட்டின் அரசியல் நிலைபேறுக்கத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும் ஒற்றை அரசு அமைப்பு அரசைவிட இணைப்பு அரசு

3 Tibor Scitovsky—'Two Concepts of External Economics'—Reprinted in 'Economics of Under development' (Ed) Agarwalla, A.N. and Singh, S.P. (Oxford), 1958.

அமைப்பே சிறந்தது. மக்களின் உள்ளீடான ஆற்றல்களையும், சிறப்பு இயல்புகளையும் வெளிப்படுத்த இவ் வமைப்பு இன்றி யமையாதது.

இணைப்பு ஆட்சியில் ஈரடுக்கு அரசுமுறை காணப்படுகிறது. இவ் விரு அரசுகளின் உரிமைகளையும், பொறுப்புகளையும் இயன்ற வரை வரையறுத்துக் கூறவேண்டும். இங்ஙனம் வரையறுக்கப் பட்ட உரிமைகளும், பணிகளும் காலத்திற்குக் காலம் மாறுபடக் கூடும். காட்டாக, வரி வசூலிக்கும் உரிமைகள் ஒன்றாக இருந் தாலும் அவற்றின் முக்கியத்துவம் மாநிலத்திற்கு மாநிலம், காலத்திற்குக் காலம், தொழில்வளர்ச்சி அடிப்படையில் வேறு படலாம். இதனால் ஒவ்வோர்அரசின் உரிமைகளும், பொறுப்பு களும் எப்பொழுதும் சமநிலையில் இருக்க முடியாது. அங்ஙனம் சமன்பாட்டைத் தோற்றுவிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். பாரத அரசு அமைப்பில் இதற்காக நிதி ஆணைக்குழுக்கள், குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நியமிக்கப்படுகின்றன; உதவிக்கொடைகள், மானியங்கள் முதலியன வழங்கப்படுகின்றன.

இப்போது இவ் வத்தியாயத்தின் அமைப்பைச் சுருக்கமாகக் காண்போம். இந்தியாவில் இணைப்பு ஆட்சி முறையின் ஆரம்ப கால வளர்ச்சி முதலாவது பிரிவிலும், 1919ஆம் ஆண்டு மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகள் இரண்டாவது பிரிவிலும், 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி தோன்றிய மாற்றங்கள் மூன்றாவது பிரிவிலும், பாரத-பாகிஸ்தான் பிரிவினை, சுதேச சமஸ்தானங் களின் இணைப்பு, அரசு அமைப்புத் திட்டம் இயற்றப்படுதல், அதைச் செயலுக்குக் கொண்டுவருதல் ஆகிய இடைக்கால நிகழ்ச்சிகள் நான்காவது பிரிவிலும் இடம்பெற்றுள்ளன. அடுத்து ஐந்தாவது பிரிவிலிருந்து ஒன்பதாவது பிரிவுவரை ஒவ்வொன்றிலும் ஒரு நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளும், பத்தாவது பிரிவில் மைய-மாநில அரசுகளுக்கு இடையே உள்ள இதர அடிப்படையான பிரச்சினைகளும், அவற்றின் விளைவுகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இந்தியாவில் இணைப்பு ஆட்சியின் ஆரம்பம்

1971 உடன் இணைப்பு ஆட்சிமுறை நூறாண்டு நிறைவு பெற்றுள்ளது. பாரத இணைப்பு அரசு அமைப்பைத் திறனாய்வு செய்வதற்கு முன்னதாக, இது நூறாண்டு கால வரலாற்று உண்மைகளையும், அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

மொகலாயப் பேரரசர்கள் காலத்திலும், கிழக்கு இந்தியக் கம்பெனி ஆட்சியிலும் இந்தியாவில் அதிகாரக் குவிப்புடைய ஒற்றை ஆட்சிமுறைதான் நிலவியது. மாநிலங்கள் யாவும் நிருவாக அலகுகளாகமட்டுமே செயல்பட்டன. இவ் வுண்மையை 1833 ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டம் (Charter Act) எடுத்துரைக்கும். இந்தியாவை ஆளுவதற்கான முழு அரசியல் உரிமையும், நிருவாகப் பொறுப்பும் கவர்னர்-ஜெனரலிடமும், அவரது ஆலோசனைக் குழுவிடமும் ஒப்படைக்கப்பட்டன. வரிவிதித்தல், நிதி வசூலித்தல், அதைச் செலவு செய்தல் போன்ற உரிமைகள் அனைத்தும் மைய அரசின் முற்றுரிமையாக இருந்தன. மாநிலங்களிடம் தனி உரிமைகளோ, தனிப் பொறுப்புகளோ ஒப்படைக்கப்படவில்லை.

1858-ல் கிழக்கு இந்தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஆட்சிப் பொறுப்பு மாற்றப்பட்டது. அப்போது இந்தியாவில் உள்ள கவர்னர்-ஜெனரலுக்கும் மேலான அதிகாரங்களையுடைய, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புடைய இந்தியாவிற்கான அமைச்சர் (Secretary of State for India) ஒருவர் நியமிக்கப்பட்டார்.

1858-ல் மாநிலங்களுக்கு நிருவாக உரிமைகள் அளிக்கப்பட்டனவே தவிர நிதி உரிமைகள் கொடுக்கப்படவில்லை. மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதரவும், நிருவாகத்தைச் சீர்திருத்தவும் பெயரளவுக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தபோதிலும், நடைமுறையில் மாநில அரசுகளின் ஒவ்வொரு செலவுக் கோரிக்கைகளும் மைய அரசின் அனுமதியுடன்தான் நடைபெற வேண்டும். மாநிலங்களுக்குக் குறித்தஅளவு தொகை ஒதுக்கப்பட்டதாலும், தனியாக மாநிலங்களுக்குப் பொறுப்போ, உரிமையோ கொடுக்காத காரணத்தாலும் அவை சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவில்லை. 1869-ல் மைய அரசின் நிதி அமைச்சராகப் பதவி ஏற்ற மேயோ பிரபு இதற்கு ஒரு தீர்வுகாண விழைந்தார். மாநிலங்களுக்குப் பொறுப்பு ஏற்படவேண்டும் என்றும், அப்போதுதான் அவை சிக்கனமாகவும் திறமையாகவும் செயல்படும் என்றும் கருதிய மேயோ பிரபு மாநிலங்களின் பணிகளை வரையறுத்து ஓர் அறிக்கையை 1870 இறுதியில்[4] வெளியிட்டார். இத்திட்டம் 1871-72-லிருந்து செயல்படுத்தப்பட்டது. இவ்வாறு மாநிலங்களின் சிறப்புப் பணிகளை வரையறுத்துக் கூறியதால்

4 Shailendra Singh—Inter-Govt. Fiscal Relations—Printed as Chap. 21—Economic History of India 1857-1956. (Ed) V.B. Singh, p. 533.

முதன்முதலில் அதிகாரப் பரவல் கருத்தைச் செயல்படுத்திய பெருமை மேயோ பிரபுவைச் சாரும்[5].

மாநிலங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட துறைகள் பின்வரும் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டன. மைய அரசாங்கத்தால் எந்தத் துறைகளில் எல்லாம் முழுமையான அதிகாரங்களைப் பயன் படுத்த முடியவில்லையோ அந்தத் துறைகள் யாவும் மாநிலங் களுக்குச் சாட்டப்பட்டன. மாநிலங்களுக்குச் சிறை, பதிவு செய்தல், போலீஸ், கல்வி, மருத்துவம், அச்சிடுதல், சாலைகள், கட்டடங்கள், மராமத்து (பொதுப்பணி) முதலிய துறைகள் ஒப்படைக்கப்பட்டன. இத் துறைகளிலிருந்து கிடைக்கும் வருவாய் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டது. இச் சீர்திருத்தங் களில் மிகவும் முக்கியமானது மாநிலங்களுக்குத் தனிப்பட்ட முறை யில் வரி வசூலிக்கும் உரிமை கொடுக்கப்பட்டதேயாகும். இந்த இனங்களிலிருந்து கிடைக்கும் வரித்தொகை மாநிலத்தின் பணிகள் அனைத்திற்கும் போதுமானதாக இல்லை என்றாலும், முதன்முறையாகச் சில இனங்களில் வரி வசூலிக்கும் உரிமை வழங் கப்பட்டதால் இச் சீர்திருத்தங்களை இணைப்பு அரசு அமைப்பின் தொடக்க நிலையாகக் கருதலாம்.

மாநில அரசுகளின் நிதித் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகக் குறித்த அளவில் நெகிழ்வற்ற அடிப்படையில் மானியத்தொகை வழங்கப்பட்டது. மாநிலத்தின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்ய இது போதுமானதாக இல்லை. இதனால் மாநிலங்கள் கூடுத லாக வரிகளை விதிக்கத் தலைப்பட்டன. மாநிலத்தின் பணிகளால் நன்மை அடைகிறவர்களுக்கும், மாநில அரசிற்கு வரி செலுத்து பவர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதுடன், இவ் வரி விதிப்புகள் நேரியதாகவும் இல்லை (in equitous)[6].

மாநில அரசுகளுக்கு அதிக உரிமைகளும், பொறுப்புகளும் அளிப்பதன்மூலம் இந்தியர்கள் நிருவாகத்தில் அதிக அளவு பங்கு கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்றும், ஊராட்சி அமைப்புகள் சிறப்பாகச் செயல்பட இது வழிகோலும் என்றும் நம்பினார்கள். இந்த நம்பிக்கை வீண்போகவில்லை.

மாநிலங்களுக்கு அதிகாரங்களை மேலும் வழங்கும் இரண்டா வது கட்டம் 1877-ல் ஏற்பட்டது. அப்போது மைய அரசும்,

5 மேயோ பிரபுவிற்கு முன்னர் ஜேம்ஸ் வில்ஸன், சாமுவேல் லைங், வில்லியம் மாஸே முதலியோர் நிதி உரிமைகளைப் பரவலாக்க வேண்டும் என்று கூறினார்கள். இவர்களது முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

6 Ibid, p. 535.

மாநில அரசுகளும் தனித்தனியாக நிதி ஒப்பந்தம் செய்துகொண்டன. மாநில அரசுகளுக்குக் கூடுதலான பொறுப்புகளும், பணிகளும் வழங்கப்பட்டன. 1877-ல் மேலும் சில துறைகளின் நிருவாகமும், நிதி வசூலிக்கும் உரிமையும் கிடைத்தன. அவை யாவன: ஆயத் தீர்வை; பத்திரக் கட்டணங்கள் (முத்திரைகள்), சட்டம், நீதி முதலியன. மொத்தத்தில் மைய அரசின் வரிகள் என்றும், மாநில அரசின் வரிகள் என்றும் இரு தலைப்புகள் இருந்தன. மாநில அரசின் நிதிப் பற்றுக்குறையைப் போக்குவதற்குக் குறித்த மானியத்தொகை மைய அரசால் வழங்கப்பட்டது. மைய அரசின் வருவாய் பெருகிச் சென்றதாலும், மாநில அரசின் பொறுப்புகளுக்கு ஏற்ற நிதி திரட்டும் உரிமை இல்லாத காரணத்தாலும் ஒவ்வொரு மாநிலமும் கூடுதலான மானியத் தொகை வேண்டும் என்று கோரியது. மாநிலங்களின் செலவுத்தொகையைக் கட்டுப்படுத்தவும், சிக்கனச் சீரமைப்பிற்கு வழிவகுக்கவும், வரி வசூலிக்கும் திறன், வரி நிருவாகம் ஆகியவற்றை மேம்படுத்தவும் முடியவில்லை. ஆண்டுதோறும் மானியம் வழங்குவதால் மாநில அரசின் வரவுசெலவுத் திட்டங்களில் நிலையற்ற தன்மை காணப்பட்டது. மாநிலங்களுக்குள் போட்டியும் மனக்கசப்பும் ஏற்பட்டன. இவை தவிர மைய அரசிற்கான வரித் தொகையை வசூலிப்பதில் எவ்வித அக்கறையும் அவை காட்டவில்லை.

பர்மாவும், அஸ்ஸாமும் மிகவும் பின்தங்கிய மாநிலங்களாக இருந்தன. இவற்றிற்குக் குறித்த மானியத்தொகை அளிப்பதற்குப் பதிலாக, அவை வசூலிக்கும் நிலவரியில் ஒருபகுதியைப் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட்டன. இதனால் மாநில அரசின் வரி நிருவாகம் சீர்பட்டது. இம் முறை நல்ல பலனை அளித்தமையால் அனைத்து மாநிலங்களுக்கும் இதை விரிவுபடுத்தினார்கள். 1882–ல் மேஜர் பாரிங் என்ற நிதி அமைச்சரின் உதவியால் ரிப்பன் பிரபு (வைஸ்ராய்) ஒரு புதிய நிதி அமைப்பு முறையைத் தோற்றுவித்தார். நாட்டில் உள்ள வரிகள் யாவும் மூன்று தலைப்பில் பிரிக்கப்பட்டன.[7] அதுவரை நிலவிய மைய அரசு வரிகள், மாநில அரசு வரிகள் என்ற இரு தலைப்புகளுடன் பகிர்ந்துகொள்ளப்பட்ட வரிகள் என்ற மூன்றாவது தலைப்பும்

7 அவையாவன: (1) மைய அரசின் வரிகள்: சுங்கம், அபின், உப்பு, தபால், தந்தி, வணிக நிறுவனங்கள் முதலியன.

(2) மாநில அரசுகளின் வரிகள் : நிருவாகத் துறைகள், மாநிலப் பொதுப் பணிகள், கல்வி, காவல், அச்சிடுதல், மருத்துவம், நீதி முதலியன.

(3) பகிர்ந்துகொள்ளப்பட்ட வரிகள் : ஆயத்தீர்வை; அனுமதிவரி (Licence Tax), வருமானவரி, பத்திரக் கட்டணம் (அல்லது முத்திரைகள்), காடுகள், பதிவுசெய்தல் முதலியன.

சேர்க்கப்பட்டது. இப்பிரிவில் வசூலிக்கப்பட்ட வரித்தொகையை மைய அரசும், மாநில அரசுகளும் சமவிகிதத்தில் பகிர்ந்து கொண்டன.

இவ்வாறு கூடுதலாக வரிகள் ஒதுக்கப்பட்டபோதிலும் மாநிலங்களின் நிதிப் பற்றுக்குறை தொடர்ந்து நீடித்தது. எனவே, குறித்த அளவு மானியத்தை ரொக்கமாகத் தொடர்ந்து கொடுக்க வேண்டியதாயிற்று. மாநிலங்களின் நிதித்தேவையையும், நிதி அளிப்பையும் சமன்செய்யும் காரணிகளாக நிலவரிப் பங்கீட்டு விகிதமும், குறித்த அளவு ரொக்கமானியமும் பயன்படுத்தப்பட்டன.

மாநிலங்களுடன் செய்துகொண்ட நிதி ஒப்பந்தங்கள் ஒவ்வோர் ஐந்தாண்டிற்கும் ஒரு முறை புதுப்பிக்கப்பட்டன. இவ்வகையில் 1882-க்குப் பின்னர் 1887, 1892, 1897 ஆகிய ஆண்டுகளில் இவ்வொப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டன. நிதி ஒப்பந்தங்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அதற்கு முன்னோடியாக 1904-ல் இடைக்கால நிரந்தர ஒப்பந்தமும் (Quasi-Permanent Settlement) 1912-ல் நிரந்தர ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டன.

1912–ல் மூன்று முக்கியத் தலைப்புகளில் வரிகள் அனைத்தும் வகைப்படுத்தப்பட்டாலும் அவற்றுள் சேர்க்கப்பட்ட இனங்களில் சில மாறுதல்கள் இருந்தன[8]. பகிர்ந்து கொள்ளப்பட்ட வரிகள் யாவும் எல்லா மாநிலங்களுக்கும் சம அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படவில்லை. இவ் விகிதங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டன. நிரந்தர நிதி ஏற்பாட்டிற்குப் பின்னரும் மைய அரசு அவ்வப்போது உபரியான தொகையை ரொக்கமானியமாகக் கொடுத்துவந்தது. மாநிலங்களுக்கு இடையேஉள்ள உயர்வுதாழ்வுகள் தொடர்ந்து நீடித்தன. பகிர்ந்துகொண்ட வரி இனங்களின் நிதிக் கண்காணிப்பு மைய அரசின் பொறுப்பாக இருந்தது. மாநில அரசின் வரவுசெலவுகளைத் தணிக்கை செய்வதால், மைய அரசின் குறுக்கீடு அதிகமாக இருந்தது.

[8] (1) மைய அரசின் (இம்பீரியல் அரசின்) வருவாய்த் தலைப்புகள்: அபின், இருப்புப்பாதை, சுங்கம், உப்பு, காசுசாலை (Mint), செலாவணி, தபால், தந்தி, இராணுவம், இந்தியச் சுதேச மன்னர்களின் திறை முதலியன.

(2) மாநில வருவாய்த் தலைப்புகள்: காடுகள், ஆயத்தீர்வை (பம்பாய், வங்காளம் ஆகிய இரு மாநிலங்களுக்கு மட்டும்), பதிவு செய்தல், கல்வி, சட்டம், நீதி, சுகாதாரம் முதலியன.

(3) பகிர்ந்து கொள்ளப்பட்ட தலைப்புகள்: நிலவரி, வருமானவரி, ஆயத்தீர்வை (பம்பாய், வங்காளம் நீங்கலாக), பாசனம், பத்திரக் கட்டணம் (முத்திரை) முதலியன.

1919 மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள்

1917-ல் இந்தியாவிற்கான அமைச்சர் திரு. மான்டேகு ஒரு நிருவாகச் சீரமைப்புத் திட்டம் ஒன்றை அறிவித்தார். இந்தியர்கள் நிருவாகப் பணிகளில் அதிக அளவிற்கு ஈடுபட வழி செய்யவும், நாளடைவில் (இந்திய) மக்களுக்குப் பொறுப்புடைய சுய ஆட்சி அமைப்புகளை ஏற்படுத்தவும், இந்தியா தொடர்ந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் முக்கிய உறுப்பினராகச் செயல்படவும் வேண்டும் என்று அறிவித்தார். அப்போது இந்தியாவில் அரசு பிரதிநிதியாக (வைஸ்ராயாக) இருந்த செம்ஸ்ஃபோர்டு பிரபு மேற்படி திட்டத்தை உருவாக்குவதிலும், செயல்படுத்துவதிலும் அதிகப் பங்குகொண்டமையால் இத் திட்டத்தை **மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள்** என்று வழங்குகிறார்கள். அரசு அமைப்புச் சீர்திருத்தங்களையும் உள்ளடக்கிய இவை 1919-ல் இந்திய அரசாங்கச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

இச் சட்டத்தில் மாநிலங்களுக்கு முன்பு இருந்ததைவிட ஓரளவிற்குக் கூடுதலான உரிமைகளும், பொறுப்புகளும் கொடுக்கப்பட்டன. நிதி உரிமையும், சட்டம் இயற்றும் உரிமையும் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டபோதிலும் அவற்றில் இந்தியர்கள் அதிக அளவு பங்குபெறமுடியாதபடி **இரட்டை ஆட்சி** அமைப்புத் தடைசெய்தது. மாநிலங்களின் பொறுப்பில் உள்ள தலைப்புகளை இருவகையாகப் பிரிக்கலாம்: ஒன்று, மாநில ஆளுநருக்காக **ஒதுக்கப்பட்ட இனங்கள்.** மற்றொன்று, ஆளுநரிடமிருந்து **மாற்றப்பட்ட இனங்கள்.** ஒதுக்கப்பட்ட இனங்களில் இடம்பெற்ற நிதி, சட்டம், அமைதி முதலிய தலைப்புகளில் அடங்கிய நிகழ்ச்சிகளைச் சட்டசபையில் விவாதிக்க முடியாது; இவற்றைப் பொறுத்தவரை மாநிலக் கவர்னரின் முடிவுகள் இறுதியானவை. இரண்டாவதாக உள்ள 'மாற்றப்பட்ட இனங்கள்' என்ற தலைப்பில் அமைந்தவை இந்திய அமைச்சர்களின் பொறுப்பில் விடப்பட்டன. இவர்கள் மாநிலச் சட்டசபைக்குப் பொறுப்புடையவர்கள். 'மாற்றப்பட்ட இனங்களை'த்தாம் சட்டசபையில் விவாதிக்க முடியும்.

அடுத்து மைய அரசு அமைப்பில், அரசு பிரதிநிதிக்கு (வைஸ்ராய்க்கு) ஆலோசனை கூறுவதற்கு ஒரு சட்டமன்றம் தோற்றுவிக்கப்பட்டது. இதில் பெரும்பான்மையானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; சிறுபான்மையினர் நியமிக்கப்பட்டார்கள். இச் சட்டமன்றத்திற்குச் சட்டம் இயற்றும் அதிகாரம் பெயரளவுக்கே இருந்தது. உண்மையில் நிருவாக உரிமையுடன், சட்டமியற்றும் உரிமையையும் அரசப்பிரதிநிதி பெற்றிருந்தார். இதில் வரிவிதிக்கும் உரிமைகளும் இடம்பெற்றன.

1919 ஆம் ஆண்டுச் சட்டப்படி பகிர்ந்து அளிக்கப்பட்ட வரித் தலைப்புகள் முற்றிலும் அகற்றப்பட்டன.[9] எனவே, வரிகள் யாவும் மைய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் புதிய அடிப்படையில் ஒதுக்கப்பட்டன. முன்பு பகிர்ந்து அளிக்கப்பட்ட தலைப்பில் இருந்த வருமான வரி மைய அரசிற்கும், ஏனைய வரிகள்—பத்திரக் கட்டணங்கள், நிலவரி, ஆயத்தீர்வை முதலியன—மாநிலங் களுக்கும் மாற்றப்பட்டன. தொழில்வளர்ச்சி அடைந்திருந்த பம்பாய், வங்காளம் ஆகிய இரு மாநிலங்களும் வருமானவரியில் ஒரு பகுதியை மைய அரசுடன் முன்பு பகிர்ந்து கொண்டிருந்தன. 1919 ஆம் ஆண்டுச் சட்டத்தில் இது முழுவதும் மைய அரசிற்கே மாற்றப்பட்டது. ஆகையால், மேற்படி இரு மாநிலங்களின் வருவாய் குறைந்துசென்றது. அதற்காக அவை ஆர்ப்பாட்டங் கள் நடத்தின. அதன் பின்னர் அவ்வாண்டில் வசூலான வருமான வரியைவிடக் கூடுதலான தொகை வசூலிக்கப்படுமானல் அம் மாநிலத்திற்கு ஒரு பகுதியைக் (கூடுதல் தொகையில் $\frac{1}{64}$ பகுதியை) கொடுக்க மைய அரசு முன்வந்தது.

மெஸ்டன் தீர்ப்பு

மாநிலங்களுக்குக் கூடுதலான வரிகளை ஒதுக்கியதாலும், பகிர்ந்துஅளிக்கப்பட்ட தலைப்பை அகற்றியதாலும், 1919-20-ல் மைய அரசிற்கு ரூ. 9.83 கோடி பற்றுக்குறை ஏற்பட்டது. இதை ஈடு செய்வதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து கூறுவதற்கு, 1920-ல், மெஸ்டன் பிரபுவின் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இக் கமிட்டியின் பரிந்துரைகளைத்தாம் மெஸ் டன் தீர்ப்பு என்று வழங்குகிறோம். வருமானவரியில் மாநிலங் களுக்குரிய உரிமைகளை மெஸ்டன் கமிட்டி கருத்தளவில் ஏற்றுக் கொண்டது. ஆனல், உடனடியாக வருமானவரியை மாநிலங் களுடன் பகிர்ந்துகொள்ள இயலாது என்று கூறியது.

இணைப்பு அரசு அமைப்பில் ஓர் அரசின் நிதித்தேவை ஒப்புமை யாக உயர்ந்தும், மற்றோர் அரசின் (அரசுகளின்) நிதி திரட்டும் வாய்ப்புகள் உயர்வாகவும் காணப்படுமானல் இதற்கு இரு வழி களில் தீர்வுகாணமுடியும். ஒன்று, புதிய அடிப்படையில் இவ் விரு அரசுகளும் தங்களுக்குள் வரித்தலைப்புகளைப் பகிர்ந்துகொள்ளுதல்; இரண்டு, வசூலிக்கப்பட்டபின்னர் வரித்தொகையைத் தங்களுக்

9 (க) மைய அரசின் வரிகள் : அபின், உப்பு, சுங்கம், வருமானவரி, இருப்புப் பாதை, தபால்-தந்தி.

(஖) மாநில அரசின் வரிகள் : நிலவரி, பாசனம், பத்திரக் கட்டணம், (வணிகத்துறை, நீதித்துறை இரண்டும்) பதிவு செய்தல், ஆயத்தீர்வை, காடுகள் முதலியன.

குள் பகிர்ந்து கொள்ளுதல். இவ்விரு வழிகளில் இரண்டாவது வழியே சிறப்பானது என்று கருதியதால், மாநில அரசுகள் தங்களுடைய வரித்தொகையில் ஒரு பகுதியை மைய அரசிற்கு அளிக்க வேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. ஆனால், மெஸ்டன் தீர்ப்பிற்கு மாநிலங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன. இறுதியில் 1927-28-ல் மாநிலங்கள் மைய அரசிற்கு நிதி திரட்டித்தரும் முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

மெஸ்டன் தீர்ப்பு நடைமுறையில் அமலாக்கப்பட்ட போதிலும், வருமானவரியில் மாநிலங்களுக்குரிய உரிமைகளை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள் தோன்றின. 1924-25-ல் வரி விதிப்பு ஆய்வுக்கமிட்டி (Taxation Enquiry Committee) நியமிக்கப்பட்டது. 1930-ல் திரு சைமன் (Simon) தலைமையில் சட்ட ஆணைக்குழு (Statutory Commission) நியமிக்கப்பட்டது. அதன் உறுப்பினராக இருந்த லேடன் (Layton) என்பவர் வருமான வரியை (இணைப்பு அரசு அமைப்பில்) சமன்செய்யும் சாதனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று கூறினார்.

மைய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் ஒதுக்கப்பட்ட வரித்தலைப்புகளில் அடிப்படையான சமன்பாடின்மை காணப்பட்டது. மாநிலத்தின் நிதிதிரட்டும் வாய்ப்புகள் வேளாண் துறையுடன் நின்றுவிட்டன; ஒரளவிற்குமேல் நிலவரியை உயர்த்துவது இயலாத காரியம். ஆனால், மைய அரசின் நிதி வாய்ப்புகள் தொழில்துறை, வாணிகம் முதலியவற்றின் வளர்ச்சியால் தொடர்ந்து உயர்ந்துசெல்லக் கூடியவை. ஆகையால், நாட்டின் வருமான வளர்ச்சியுடன் மைய அரசின் நிதியும் உயர்ந்துசெல்வதால் இவை நெகிழ்வுடைய வரித்தலைப்புகளாகக் கருதப்பட்டன. மாறாக, மாநில அரசுகளின் நிதிவசூல் நெகிழ்வற்றதாக இருந்தது. இச் சமன்பாடின்மையை அகற்ற வேண்டுமானால் வருமான வரியைப் பகிர்ந்து அளிக்கும் வரித்தலைப்பாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. காட்டாக, வைகௌன்ட் பீல் குழு இவ் வரித்தொகையை முழுமையாக மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று பரிந்துரைத்தது.

1935 இந்திய அரசாங்கச் சட்டம்

இரட்டைஆட்சி முறையால் தோன்றிய அவலநிலையை அறிந்த மக்கள் அடிப்படையான அரசுஅமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தக் கோரினார்கள். இரட்டைஆட்சி முறையை அகற்றவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு

முற்றிலும் பொறுப்புடைய அமைச்சரவையை ஏற்படுத்தவும் விரும்பினார்கள். நாடெங்கிலும் 'சுய ஆட்சி' (Home Rule) உரிமைக்கான இயக்கம் வலுவடைந்தது. மக்களின் இக் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் இயற்றப்பட்டது, இச் சட்டத்தின்கீழ் இந்தியச் சுதேச சமஸ்தானங்களையும் இணைப்பு ஆட்சி அமைப்பில் ஒரு கூறாக மாற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால், அது வெற்றி அடையவில்லை.

1935ஆம் ஆண்டுச் சட்டப்படி இந்தியாவில் இணைப்பு அரசு அமைப்புமுறை செம்மைப்பட்டது. மைய-மாநில நிதி உறவுகள் சீரமைக்கப்பட்டன. அப்போதுள்ள வரித்தலைப்புகளை ஐவகைப் படுத்தலாம். ஒன்று, முற்றிலும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிகள்[10]; இரண்டு, முற்றிலும் மைய அரசிற்கு ஒதுக்கப்பட்ட வரிகள் [11]; மூன்று, சிலவரிகளை மைய அரசு விதிக்கவும், வசூலிக்கவும் செய்தாலும் அவற்றினின்று கிடைக்கும் தொகை முழுவதும் மாநிலங்களையே சாரும்;[12] நான்கு, சில வரிகளை மைய அரசு விதிக்கவும், வசூலிக்கவும் செய்தாலும், அவ்வாறு திரட்டப்பட்ட தொகையை இவ் விரு அரசுகளும் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளும்;[13] ஐந்து, புதிய வரித் தலைப்புகள் யாவும் மைய அரசைச் சாரும்; தவிரவும், வரித் தொகைமீது விதிக்கப்படும் மேல்வரி (Surcharge) மைய அரசின் உரிமையாகக் கருதப்படும். மைய அரசு மாநில அரசுகளுக்குத் தொடர்ந்து உதவி மானியத் தொகை அளிக்கலாம்.

10 மாநில அரசின் வரிகள் : நிலவரி, பாசனத்தீர்வைகள், ஆல்கஹால், சாராயம் அபின்மீதான ஆயத் தீர்வைகள், மருந்துகளின்மீதான தீர்வைகள், வேளாண் வருமானவரி, பத்திரக் கட்டணம், பதிவுக் கட்டணம் முதலியன.

11 மைய அரசிற்காக (முற்றிலும்) ஒதுக்கப்பட்டவை : கார்ப்பொரேஷன் வரி (கம்பெனிகளின் வருமான வரி), சுங்கத்தீர்வைகள், இருப்புப் பாதைகள், தபால், தொலைபேசி, தந்தி, செய்தி ஒலிபரப்பு, செலாவணி, காசு அச்சிடுதல், இராணுவச் செலுத்தல்கள் முதலியன.

12 மைய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, ஆனால் மாநில அரசுகளுக்கு முழுவதும் ஒதுக்கப்பட்ட இனங்கள் : சாகுபடி நிலம் நீங்கலாக உள்ள சொத்துகளின் வாரிசுரிமைத் தீர்வைகள், உண்டியல்கள், பணஓலைகள் (Cheques) மீதான கட்டணங்கள், இருப்புப் பாதைகளின் வழியாகவும், விமானம் வழியாகவும் எடுத்துச் செல்லப்படும் சரக்குகள், பயணிகள்மீது விதிக்கப்படும் (பயண முடிவு) வரிகள், மேற்படி கட்டணங்களின் மீதானவரிகள் முதலியன.

13 மைய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு ஆனால் மாநில அரசுகளுடன் பகிர்ந்துகொள்ளப்பட்ட இனங்கள் : வருமானவரி (வேளாண் வருமானம் நீங்கலாக உள்ளவை) உப்புத்தீர்வை, புகையிலை, செய்பொருள் (manufactured goods) மீதான ஆயத்தீர்வைகள், சணல் ஏற்றுமதித் தீர்வை முதலியன.

நீமியர் தீர்ப்பு

1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் மாநிலங்களுக்கு முதன்முதலாகச் சுயஆட்சி உரிமைகளை வழங்கியது. இதில் மைய அரசும், மாநில அரசுகளும் குறிப்பிட்ட தலைப்புகளில் வசூலாகும் நிதியைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. இவ்விரு அரசுகளின் நிதித்தேவைகளையும், வாய்ப்புகளையும் கருத்தில் கொண்டு, அவற்றைப் பகிர்ந்துகொள்வதற்கான அடிப்படையை நிர்ணயிக்குமாறு, 1936-ல் ஆஸ்திரேலியப் பொருளாதார நிபுணரான ஸர் ஆட்டோ நீமியரை (Sir Otto Niemeyer) இந்திய அரசு கேட்டுக்கொண்டது. இவரது பரிந்துரைகளை **நீமியர் தீர்ப்பு** என்பர். இத் தீர்ப்பை இந்திய அரசு முழுமையாக ஏற்றுக்கொண்டது.

வருமான வரியில் வசூலிக்கப்படும் நிகரத் தொகையில் 50% மாநிலங்களுக்கு ஒதுக்கவேண்டும் என்றும், வசூலிக்கப்படும் இடம், மக்கள்தொகை ஆகிய அடிப்படையில் அவற்றைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் கூறினர். அதேசமயம் தமது பரிந்துரைகளைச் செயல்படுத்துவதால் இந்திய அரசின் நிதிநிலைமை பாதிக்கக்கூடாது என்று எண்ணியதால் சில நிபந்தனைகளையும் விதித்தார்.[14] ஒன்று, இரயில்வே இலாக்காவிலிருந்து பொதுநிதிக்குச்(இந்திய அரசு) செலுத்தப்படும் தொகை (மந்தத்திற்குப்பின்) உயர்ந்துசெல்ல வேண்டும்; இரண்டு, மாநிலங்களுக்குச் சேர வேண்டிய தொகை ரூ. 13 கோடியாக உயரும் வரையிலோ, அல்லது (மூன்று) ஐந்தாண்டுகள் வரையிலோ இதைத் தள்ளிப் போடலாம் என்றும் கூறப்பட்டது. மைய அரசின் நிதி கவலைக்கிடமாக இருந்தால் மாநிலங்களுக்கு நிதியை ஒதுக்கிடத் தேவையில்லை என்றும் கூறப்பட்டது. ஆனால், மந்தத்தின் பிடிப்பிலிருந்து இந்தியப் பொருளாதார அமைப்பு விரைவில் விடுபட்ட காரணத்தால், மைய அரசின் வருவாய் கணிசமாக உயர்ந்துசென்றது. எனவே, மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகையைத் தாமதம் இன்றி, தீர்ப்புக் கூறப்பட்ட மறு ஆண்டிலிருந்தே மைய அரசு பகிர்ந்து கொடுத்தது.

சணல் ஏற்றுமதித் தீர்வையில் சணல் விளையும் மாநிலங்களுக்குக் கிடைத்து வந்த விகிதத்தை 50%-லிருந்து 66⅔%ஆக உயர்த்தக் கோரினர். இவ் விகிதம் 1937-லிருந்து 1947வரை அமலாக்கப்பட்டது. 1936வரை மைய அரசிற்குக் கடன்

[14] 1919ஆம் ஆண்டுச் சட்டத்தால் இந்திய அரசின் நிதிநிலைமை பாதிக்கப்பட்டதை நினைவுகூர வேண்டும்.

பட்டிருந்த வங்காளம், பீகார், அஸ்ஸாம், வடமேற்கு எல்லை மாகாணம், ஒரிஸ்ஸா முதலிய மாநிலங்களின் கடன்தொகையை முழுமையாக வஜா செய்யவும், மத்திய மாநிலத்தின் கடன் தொகையைக் குறைக்கவும் பரிந்துரைத்தார். இவை யாவும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பாரதத்தின் விடுதலை

இந்தியத் துணைக்கண்டம் பாரதம், பாகிஸ்தான் என்று பிரிக்கப்பட்டதால் பல நிதிப் பிரச்சினைகள் தோன்றின. உடனடியாக உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமாறு திரு. N. R. சர்க்கார் என்ற நிபுணர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. சர்க்கார் கமிட்டியின் அறிக்கை ஓர் இடைக்கால ஏற்பாடாகும். அதில் மாநிலங்களுக்கு வருமான வரியிலிருந்து கூடுதலான விழுக்காட்டுத்தொகையை ஒதுக்கவேண்டும் என்றும், சணல் ஏற்றுமதி வரியில் மாநிலங்களுக்குப் (முக்கியமாக மேற்கு வங்காளத்திற்கு) பங்கிட்டுத்தருவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும், அதற்குப் பதிலாகக் கூடுதல் மானியத் தொகை வழங்கலாம் என்றும் சர்க்கார் கமிட்டி கூறியதை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது.

பிரிட்டிஷ் மன்னரின் முடியாட்சி முடிவு பெற்றதும் இந்தியச் சுதேச மன்னர்கள் தங்களுடைய முழுமையான அரசியல் உரிமைகளைத் திரும்பப் பெற்றனர். இந்தச் சமஸ்தானங்கட்குப் பாரதம் அல்லது பாகிஸ்தானுடன் சேருவதற்கும், தனியாக இருப்பதற்கும் உரிமை அளிக்கப்பட்டன. பாரதப் பகுதிகளில் சுமார் 555 சுதேச சமஸ்தானங்கள் இருந்தன. அவற்றைப் பாரதத்துடன் இணைக்கும் பணி மிகவும் தீவிரமாக நடைபெற்றது.[15] பெரும்பாலான சுதேச மன்னர்கள் தங்கள் சமஸ்தானங்களை பாரதத்துடன் இணைப்பதற்கான ஒப்பந்தத்தில் 1947 ஜூலை மாதத்திலேயே கையொப்பம் இட்டார்கள். காஷ்மீர் மன்னர் இவ்வொப்பந்தத்தில் 1947 அக்டோபரில் கையொப்பம் இட்டார். இவ்வாறு இணைக்கப்பட்ட சமஸ்தானங்கள் (சிறியவை) அடுத்துள்ள மாநிலங்களுடன் இணைக்கப்பட்டன; சிலவற்றை ஒன்றுசேர்த்து (அல்லது தனியாக) ஒரு மாநிலமாக அமைத்தார்கள். இங்ஙனம் இணைக்கப்பட்ட மாநிலங்கள் பாரத இணைப்பு அரசு அமைப்பின் ஒரு கூறாக மாற்றப்பட்டன. இவற்றின் நிதி உரிமைகளையும், பொறுப்புகளையும் வரையறுக்கவும், இணைப்பு அரசு அமைப்பின்

15 இப் பணியில் காலம்சென்ற சர்தார் வல்லபாய் பட்டேல் மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். இவருக்குத் திரு. வி. பி. மேனன் அதிக அளவு உதவியுள்ளார்.

நிதிப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் திரு வி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இதன் பரிந்துரைகள் விரைவாக மாறியுள்ள சூழலில் தோன்றிய நிருவாகப் பிரச்சினைகளுக்கான தீர்வாக அமைந்தன. சுதேச சமஸ்தானங்களைக் கொண்டு தோற்றுவித்த மாநிலங்கள் 'B' பிரிவு மாநிலங்கள் என்று வழங்கப்பட்டன. அதுவரை சுதேச அரசின் வருவாயாக இருந்த இனங்கள், காட்டாக, வருமானவரி இணைப்பின் காரணமாக மைய அரசின் வருமானமாக மாறியது. மாநிலங்களிடையே வரித்தொகையினைப் பகிர்ந்து கொள்வதற்கான அடிப்படையை நிர்ணயிப்பதற்கும், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 'B' பிரிவு மாநிலங்களின் சிறப்பான நிதித் தேவைகளை நிறைவு செய்யவும் கிருஷ்ணமாச்சாரி கமிட்டியின் அறிக்கை வழிவகுத்தது. அடுத்து 'A' பிரிவு மாநிலங்களுடன் சுதேச சமஸ்தானங்கள் இணைக்கப்படுவதால் அவற்றின் நிருவாகச் செலவுகளும், பொறுப்புகளும் உயர்ந்துவிட்டன என்றும், அதற்காக அம் மாநிலங்களுக்குச் சிறப்பான ரொக்கமானியம் வழங்கவேண்டும் என்றும் கமிட்டி கூறியது.

பாரத அரசு அமைப்பு

இந்திய அரசுகளின் (States) ஒன்றியந்தான் (Union of Indian States) பாரதம் என்று வழங்கப்படுகிறது. பாரத அரசு அமைப்பு 1950-ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு 1935ஆம் ஆண்டுச் சட்டம் அடிப்படையாக இருந்தது. பாரத அரசு அமைப்பில் இணைப்பு அரசுகளின் நிதித் தொடர்புகள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டுள்ளன. இவ் வரசுகளின் நிதி உரிமைகளும், பொறுப்புகளும் தனித்தனியாகக் கூறப்பட்டதுடன், காலப்போக்கில் ஏற்படக்கூடிய சமனற்ற நிலையைச் சரி செய்வதற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மைய, மாநில அரசுகளின் பணிகளை அடிப்படையாகக்கொண்டு அவ் வரசுகளின் நிதி உரிமைகளைப் புதிதாக மாற்றி அமைக்கவும், சரி செய்யவும் வழிசெய்யப்பட்டுள்ளன.

மொத்தத்தில் அனைத்து வரிகளும் மூவகைப்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது பிரிவில் மைய அரசிடம் ஒப்படைக்கப்பட்ட வரிகளும், இரண்டாவது பிரிவில் மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்ட வரிகளும் இடம்பெற்றுள்ளன. இவ் விரு அரசுகளுக்கும் பொதுவான வரித்தலைப்புகள் மூன்றாவது பிரிவில் உள்ளன. இம் மூன்று பிரிவுகளிலும் இடம்பெறாத புதிய வரிகள் அனைத்தும் மைய அரசையே சாரும். மாநிலங்களின் நிதித் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக, மைய அரசு குறிப்பிட்ட

வரித்தலைப்புகளில் வசூலாகும் தொகையை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறது. அதைத்தவிர மாநில அரசுகளுக்கு மானியமாக ரொக்கத்தொகை அளிக்கவும் வகைசெய்யப் பட்டுள்ளது; மைய அரசிடமிருந்து அவ்வப்போது மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குதல் தற்போதைய நிதித்தொடர்புகளின் முக்கியக் கூறுகும்.

மைய அரசின் வரித் தலைப்புகள்

(அ) வருமான வரி (வேளாண்மை வருமானம் நீங்கலாக),

(ஆ) கம்பெனிகளின் வருமான வரி,

(இ) ஆல்கஹால், சாராயம் நீங்கலாக உள்ள பொருள்களின் மீதான ஆயத் தீர்வைகள்,

(ஈ) சுங்கத் தீர்வைகள்,

(உ) (வேளாண்மை நிலம் நீங்கலான) சொத்துகளின் வாரிசுரிமை வரியும், 'எஸ்டேட்' (Estate) தீர்வை களும்,

(ஊ) தனிநபர்களுக்கும், கம்பெனிகளுக்கும் சொந்தமான சொத்துகளின் மூலதன மதிப்பில் விதிக்கப்படும் வரி (இதிலிருந்து சாகுபடி நிலத்திற்கு விலக்கு அளிக்கப் படும்),

(எ) நிதிப்பத்திரங்களுக்கான (முத்திரைக்) கட்டணங்கள்,

(ஏ) பங்கு அங்காடிப் பேரங்கள், முன்னேக்கிய பேரங்கள் ஆகியவற்றின் மீதான வரிகள் (முத்திரைக் கட்டணம் நீங்கலாக),

(ஐ) செய்தித்தாள்களின் விற்பனை அல்லது கொள்முதல், செய்தித்தாள் விளம்பரம் ஆகியவற்றின் மீதான வரிகள்,

(ஒ) இரயில் சீட்டுகள், இரயில் கட்டணங்கள் மீதான வரிகள்,

(ஓ) இருப்புப் பாதை, ஆகாய விமானம், கப்பல் ஆகிய வற்றில் பயணம் செல்பவர்கள், இடம் பெயர்த்தப் படும் சரக்குகள் ஆகியவற்றின்மீதான முடிவிடத்து வரிகள் (Terminal taxes],

(ஔ) மாநில எல்லையைக் கடந்து எடுத்துச்செல்லப்படும் வாணிகப் பொருள்களின் விற்பனை அல்லது கொள் முதல்மீதான வரிகள்.

இங்ஙனம் மைய அரசின் பொறுப்பில் 12 வரித் தலைப்புகள் இருந்தபோதிலும் இவற்றிலிருந்து கிடைக்கும் வரிவருவாய் மைய அரசின் முற்றுரிமையாக இல்லை.

வரிகளின்மீது விதிக்கப்படும் மேல்வரியினால் கிடைக்கும் தொகை மைய அரசிற்கே உரியதாகும்.

இரண்டாவதாக, மாநில அரசுகளுக்காக ஒதுக்கப்பட்ட வரித் தலைப்புகள். இதில் இடம்பெற்ற வரிகளாவன!

(க) நிலவரி,

(ங) விற்பனை வரி,

(ச) வேளாண்மை வருமான வரி,

(ஞ) மனை, கட்டடம் மீதான வரிகள்,

(ட) சாகுபடி நிலத்திற்கான வாரிசுரிமை மற்றும் 'எஸ்டேட்' வரிகள்,

(ண) சாராயம், மற்றும் போதைப் பொருள்கள் மீதான ஆயத் தீர்வைகள்,

(த) ஊர்ச் சுங்க வரி (Octroi)

(ந) சுரங்க உரிமைகள்மீதான வரிகள் (நாடாளுமன்ற இசைவுடன்),

(ப) மின்சார நுகர்விலும், மின்சார விற்பனையிலும் விதிக்கப்படும் வரிகள்,

(ம) வாகனங்கள், மிருகங்கள், படகுகள்மீதான வரிகள்,

(ய) நிதிப்பத்திரங்கள் நீங்கலாக உள்ள முத்திரைக் கட்டணங்கள்,

(ர) சாலைகள், கால்வாய்களின் போக்குவரத்து, பயணங்கள் மீதான வரிகள்,

(ல) ஆடம்பரப் பொருள்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், சூதாடுதல், பந்தயம் கட்டுதல் ஆகியவற்றின் மீதான வரிகள்,

(வ) சந்தை வரி (அல்லது ஊர்ச் சாவடி வரி–tolls),

(ழ) தொழில் வரி, வேலை வரி முதலியன,

(ள) தலைவரி (ஆள்வரி–Capitation tax),

(ற) விளம்பர வரி (செய்தித்தாள் விளம்பரம் நீங்கலாக).

மேலே கூறிய 17 வரித்தலைப்புகளும் மாநிலத்தின் உரிமைகளாக உள்ளன. மாநிலங்களுக்காக ஒதுக்கப்பட்ட வரித்தலைப்புகளை மாநிலங்களே நிருவகிக்க வேண்டிய கட்டாயமில்லை.

மூன்றாவதாக உள்ள வரித்தலைப்புகள் பொதுவானவை. இத் தலைப்பில் அடங்கிய வரிகளை நிர்ணயிப்பதிலும், நிருவகிப்பதிலும் மைய அரசும், மாநில அரசுகளும் சம உரிமை பெற்றுள்ளன. இவ் விரு அரசுகளும் ஒன்றாகச் சேர்ந்து மோட்டார் வாகனங்கள்மீதான வரிகளையும், அதற்கான அடிப்படையையும், நிதித்துறை நீங்கலாக உள்ள முத்திரைக் கட்டணங்களையும் தீர்மானிக்கும் பொறுப்பு ஏற்றுள்ளன. இதைத்தவிர மைய அரசின் சொத்துகள் மாநில அரசின் வரிவிதிப்பிலிருந்தும், மாநில அரசுகளின் சொத்துகள் மைய அரசின் வரிவிதிப்பினிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், மாநில அரசு உற்பத்தி, பகிர்வுபோன்ற நடவடிக்கைகளிலும், இலாபம் நல்கும் தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்குமானால் அவற்றின்மீது (அல்லது அவ் வமைப்புகளின்மீது) மைய அரசு வரிவிதிக்கும். அதைத் தவிரச் சீரான வரிவிகிதங்கள், நிருவாக எளிமை முதலியவற்றிற்காக மாநிலங்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வரித்தலைப்புகளில் வரி விதித்து வசூலித்துத் தருமாறு மைய அரசைக் கேட்கலாம்.

இதுவரை பாரத அரசு அமைப்பில் கண்டுள்ளபடி வரித்தலைப்புகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பார்த்தோம். ஆனால், வரி நிருவாகமும் இதே அடிப்படையில் அமைந்திருக்கும் என்று கருதுவதற்கு இல்லை. மைய அரசின் நிதியை மாநில அரசுகள் பகிர்ந்துகொள்கின்றன. அதைத்தவிர மாநில அரசுகளுக்குச் சொந்தமான சில வரித்தலைப்புகளின் நிருவாகத்தை மைய அரசே செய்து வருகிறது.

எனவே, மைய அரசால் நிருவகிக்கப்படும் வரித்தலைப்புகளை நால்வகைப்படுத்தலாம். முதலில், மைய அரசிற்கு முற்றிலும் சொந்தமான வரிகள்; இவற்றை விதித்தல், வசூலித்தல், பின் அவற்றைச் செலவிடுதல் ஆகிய மூன்று செயல்களையும் மைய அரசே மேற்கொள்ளும். காட்டாக, கம்பெனி வருமான வரி, சுங்கத் தீர்வைகள் முதலியன (அரசு அமைப்புப் பிரிவு 267).

இரண்டாவதாக, மைய அரசு வரிகளை விதிப்பதுடன் நின்று விடுகிறது. ஆனால் அவற்றை வசூலிப்பதும், செலவிடுவதும் மாநில அரசுகளின் பொறுப்பாக உள்ளன. இவ்வாறு முத்திரைக்

கட்டணங்கள், ஆல்கஹால், சாராயம் கலந்த மருந்துவகை மீதான ஆயத்தீர்வைகள் முதலியன உள்ளன (அரசு அமைப்புப் பி. 268).

மூன்றாவதாக, மைய அரசு சில வரிகளை விதிக்கவும், வசூலிக்கவும் செய்கின்றது. ஆனால், இதனால் கிடைக்கும் வரித்தொகை மாநில அரசுகளுக்கு முழுமையாக ஒதுக்கப்படுகின்றன. காட்டாக, சொத்து வாரிசுரிமை வரிகள், 'எஸ்டேட்' வரிகள், பயண முடிவு அல்லது போக்குவரத்து முடிவிடத்து வரிகள், பங்கு அங்காடிப் பேரங்கள், முன்னோக்கிய பேரங்கள் ஆகியவற்றின் மீதான வரிகள், செய்தித்தாள் விற்பனை அவற்றின் விளம்பரங்கள் மீதான வரிகள் முதலியன (அரசு அமைப்புப் பிரிவு 269). இங்ஙனம் வசூலிக்கப்பட்ட தொகையை நாடாளுமன்ற இசைவுடன் மாநிலங்களுக்கு மைய அரசு பங்கிட்டுக் கொடுக்கும்.

நான்காவதாக, மைய அரசு வரிகளை விதிக்கவும், வசூலிக்கவும் செய்யும்; ஆனால், மேற்படி வரித்தொகையை மாநில அரசுகளுடன் பகிர்ந்துகொள்ளும். இங்ஙனம் வேளாண்மை நீங்கலாக உள்ள இதர வருமானங்களின் மீதான வரி, மாநிலங்களுக்குச் சாட்டப்படாத ஆயத் தீர்வைகள் ஆகியவற்றினால் வசூலிக்கப்படும் தொகையை இரு அரசுகளும் பகிர்ந்துகொள்ளுகின்றன (அரசு அமைப்புப் பிரிவு 270). இதற்கான அடிப்படையை நிதி ஆணைக் குழுக்கள் தீர்மானிக்கும்.

மானியங்கள்

மைய அரசு பல்வேறு நோக்கங்களுக்காக மாநில அரசுகளுக்கு ரொக்க உதவி மானியங்கள் வழங்கலாம். இவை பெரும்பாலும் நடப்புக்கணக்கில் அமைந்த நிதி ஒதுக்குதல்களாக உள்ளன [அரசு அமைப்புப் பிரிவுகள் 273 முதல் 278 வரை].

பாரதத்தில் மாநிலத்திற்கு மாநிலம் அதிக அளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. மக்களின் தலா வருமானம், அவர்கள் ஈடுபட்டுள்ள தொழில்கள், மக்களின் திறன்கள், பழக்கவழக்கங்கள், அமைப்புமுறைகள், இதர வசதிகள் முதலியன வேறுபடுகின்றன. இதனால் சில மாநிலங்களுக்குக் கூடுதலான நிதித்தேவை ஏற்படலாம்; அல்லது சில வரித்தலைப்புகளிலிருந்து (மற்ற மாநிலங்களுக்குக் கிடைப்பதைவிட) மிகக் குறைந்த வரித்தொகை கிடைக்கலாம். இந்த உயர்வுதாழ்வுகளை அகற்றுவதற்குச் சிறப்பு மானியங்கள் அவசியமாக இருக்கின்றன. சில மாநிலங்கள் பாரதத்தின் எல்லையோரமாக இருப்பதால் அவை எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அதிகம் செலவிட வேண்டியிருக்கும்.

இன்னும் சில மாநிலங்களில் பழங்குடி மக்கள் செறிந்து காணப்படலாம். சில மாநிலங்களில் பொதுவான போக்குவரத்து வசதிகள், கல்வி, மின்சக்தி உற்பத்தி, பாசன வசதிகள் முதலியன மிகவும் குறைவாக இருக்கலாம். தேசிய முக்கியத்துவம் பெற்ற பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுதற்குத் தேவையான வளங்களை மேற்படி மாநிலத்தால் திரட்ட இயலாதபோது மைய அரசு மானியம்/கடன் வழங்கலாம். வட்டார அளவில் பின்தங்கிய பகுதியின் முன்னேற்றத்திற்காக மானியம் வழங்கப்படும். இந்த மானியங்கள் பலவகைப்படும். இவை நிபந்தனையின் பேரிலும், நிபந்தனை இல்லாமலும் கொடுக்கப்படலாம். மானியம் வழங்குவதற்கான அடிப்படையும், மானியமாகக் கொடுக்க வேண்டிய தொகையும், நிதி ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படும். மைய அரசு மானியமாக உதவி செய்யும்போது, நடப்புக் கணக்கில் வசூலாகும் வரித்தொகையில் ஒரு பகுதியைத்தான் மாநிலங்களுக்கு மாற்றித்தருகிறது.

கடன்கள்

மாநில அரசுகள் அங்காடியில் நேரிடையாகக் கடன் எழுப்பும் உரிமை பெற்றுள்ள போதிலும், அவை மைய அரசிடமிருந்து பெருமளவுக்குக் கடன் வாங்கியுள்ளன. இதனால் சில நிருவாகச் சிக்கல்கள் தவிர்க்கப்படுகின்றன என்றாலும், மைய அரசின் செல்வாக்கு அளவுக்கும் அதிகமாக ஓங்குவதற்கும் இதுவே காரணமாயுள்ளது. வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதால் மாநில அரசுகளின் மூலதனத் தேவைகள் உயர்ந்துசெல்கின்றன. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் மைய அரசிடமிருந்து மாற்றப்பட்ட தொகையில் கடன் என்ற தலைப்பில் கணிசமான தொகை மாற்றப்பட்டு இருப்பதைப் பின்னர்வரும் அட்டவணை எடுத்துக்காட்டும் (அட்டவணை 26–1).

நிதி ஆணைக்குழுக்கள்

முதலாவது நிதி ஆணைக்குழு

பாரத அரசு அமைப்பின் 280ஆவது பிரிவின்படி குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை, அல்லது அதற்கு முன்னர் ஒரு நிதி ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும். நிதி ஆணைக்குழுவில் மொத்தம் 5 உறுப்பினர்கள் இருப்பார்கள். அதில் ஒருவர் அதன் தலைவராக இருப்பார். (இவரை நாடாளுமன்றம் நியமிக்கும்.) நிதி ஆணைக்குழுவிடம் பின்வரும் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். மைய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே பகிர்ந்தளிக்க வேண்டிய வரிகள், அதற்கான அடிப்படை

அட்டவணை—26-1

மைய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பட்ட நிதி

(கோடி ரூபாய்களில்)

தலைப்பு	முதல் திட்டம்	இரண்டாவது திட்டம்	மூன்றாவது திட்டம்
(1) மாநிலங்களின் மொத்தச் செலவு [நடப்புக் கணக்கிலும், மூலதனக் கணக்கிலும்]	3,352	5,846	10,720
(2) பகிர்ந்துகொள்ளப்பட்ட வரிகள்	353	710	1,196
(3) மைய அரசின் மானியத் தொகை	215	700	1,303
(4) மைய அரசிடமிருந்து கடனாகப் பெற்ற தொகை	822	1,424	3,101
(5) மைய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்பட்ட மொத்தத் தொகை	1,390	2,834	5,600
(6) 5ஆவது தலைப்பு முதல் தலைப்பின் சதவீதமாக	41	49	52

ஆதாரம்: R. Datt and K.P.M. Sundharam, op. cit., p. 728 (Compiled from RBI Bulletins)

முதலியன. இரண்டாவதாக, மாநிலங்களுக்கு அளிக்கவேண்டிய சட்டரீதியான மானியத்தொகைகள், இதர நிதித்தொடர்பான பிரச்சினைகள் நிதி ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அவற்றையும் ஆராய்ந்து பரிந்துரைக்கும். அரசு அமைப்பின் அடிப்படையில் நிதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுகின்ற காரணத்தால் அவற்றின் பரிந்துரைகள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாவது நிதி ஆணைக்குழு நியமிக்கப்படும் முன்னர் ஓர் இடைக்கால ஏற்பாடு அவசியமாக இருந்தது. எனவே, [illegible]-ல் ரிசர்வ் பாங்கின் ஆளுநராக இருந்த திரு. C. D. தேஷ்முக்கைத்

தீர்ப்புக் கூறுமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டது. இவரது தீர்ப்பு 1920-ல் பாரத அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1952 வரை அமலாக்கப்பட்டது.

முதலாவது நிதி ஆணைக்குழு 1951 நவம்பரில் திரு. K. C. நியோகி தலைமையில் நியமிக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள் 1952 டிசம்பரில் வெளியிடப்பட்டன.

மாநிலங்களின் நிதித்தேவை உயர்ந்து செல்லும்போது அவற்றின் நிதிதிரட்டும் வாய்ப்புகள் உயர்ந்துசெல்லாமல் இருப்பதால் வருமானவரியில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் விழுக்காட்டை 50-லிருந்து 55 ஆக உயர்த்தவேண்டும் என்று ஆணைக்குழு கூறியது.

மாநிலங்களுச்கு இடையே இத் தொகையைப் பகிர்ந்தளிப்பதற்காக இருவேறு அடிப்படைகள் பரிந்துரைக்கப்படுகின்றன; ஒன்று, மக்கள்தொகை அடிப்படை; இரண்டு, வரித்தொகை வசூலாகும் மாநில அடிப்படை.[16] இவற்றுள் மக்கள்தொகைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் எனக் கருதிய நியோகி ஆணைக்குழு 80% தொகை மக்கள்தொகை அடிப்படையிலும், 20% வசூலிசகப்படும் இட அடிப்படையிலும் பகிர்ந்து அளிக்கப்படும் என்று கூறியது.

புகையிலை (சிகரெட் உட்பட) தீப்பெட்டி, தாவரப் பொருள்கள் (Vegetable products) ஆகிய மூன்றின் ஆயத்தீர்வையிலிருந்து கிடைக்கும் நிகர வரித்தொகையில் 40% தொகையை மாநிலங்களுக்கு ஒதுக்கவேண்டும் என்று ஆணைக்குழு பரிந்துரைத்தது. இத் தொகையை 'A' பிரிவு 'B' பிரிவு மாநிலங்கள் அனைத்தும் மக்கள்தொகை அடிப்படையில் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளும்.

16 மக்கள்தொகை அடிப்படையில் பகிர்ந்து கொடுக்கப்படுமானல் மாநிலங்களுக்கு இடையே உள்ள உயர்வுதாழ்வுகளை அகற்றுவதற்கும், பின் தங்கிய மாநிலங்களுக்குக் கூடுதலாக உதவி அளிக்கவும் முடியும். ஆனல், தொழில்துறையில் முன்னணியில் உள்ள மாநிலங்கள் சில சிறப்பான பொறுப்புகளை ஏற்றுள்ளன; குடியிருப்பு வசதிகள், பொதுச்சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து முதலிய வசதிகளை ஏற்படுத்த வேண்டியுள்ளன என்றும் இதனல் அவற்றின் நிருவாகச் செலவுகள் கூடுதலாகி உள்ளன என்றும் கூறப்படுகின்றன. ஆனல், இக் கூற்றை மற்றவர்கள் மறுத்துள்ளார்கள். ஒரு தொழில் நிறுவனம் அல்லது அதன் தலைமையகம் ஒரு மாநிலத்திலும், அதன் உற்பத்தி ஏனைய மாநிலங்களிலும் நடைபெறலாம். அத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்கள், உற்பத்திக் காரணிகள் முதலியன பிற மாநிலங்களிலிருந்து கிடைக்கின்றன. இவை உற்பத்து செய்த பொருள்களை நாடெங்கிலும் விற்கின்றன. நாடு முழுவதும் ஒரு பொருளாதார அலகாக இருப்பதால் பேரளவு சிக்கன நலன்கள் ஏற்படுகின்றன என்றும், ஆகையால் வசூல் அடிப்படையில் வரித்தொகையைப் பகிர்ந்து அளிப்பதைவிட மக்கள் தொகையே சிறந்தது என்றும் கூறப்படுகிறது.

சுதேச அரசுகளின் இணைப்பு, வரிவிதிப்பு அதிகாரமாற்றங்கள் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்பட்ட (வரி) இழப்பை ஈடு செய்யும் வகையில் சிறப்பு மானியங்கள் வழங்கப்பட்டன. அகதிகளின் வருகையாலும், ஏற்றுமதித் தீர்வையின் இழப்பாலும் பாதிக்கப்பட்ட மேற்கு வங்காளத்தின் கோரிக்கையை ஏற்றுக் கூடுதலான (ரூ. 105-லிருந்து ரூ. 150 இலட்சம் ஆக) மானியம் வழங்கியுள்ளது. மாநிலங்களின் வரவுசெலவுத் திட்டம், பொது நலப் பணிகள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புப் பணிகள், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் மானியங் கள் (நிபந்தனையுடனும் நிபந்தனையில்லாமலும்) வழங்கப்பட்டன. இவை தவிர ஆரம்பக் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு பீகார், மத்தியப் பிரதேசம், மத்திய பாரதம், ஐதராபாத், இராஜஸ்தான், ஒரிஸ்ஸா, பஞ்சாப், பெப்ஸு (PEPSU) ஆகிய மாநிலங்களுக்குச் சிறப்பு மானியங்கள் அளிக்கப்பட்டன.

இணைப்பு அரசு அமைப்பில் நிதி ஆணைக்குழுக்களின் பரிந் துரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற கருத் தோடு முதலாவது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் யாவும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இரண்டாவது நிதி ஆணைக்குழு

1956 ஜூன் மாதத்தில் திரு. கே. சந்தானம் தலைமையில் இரண்டாவது நிதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ் வாணைக் குழுவின் பரிந்துரைகள் 1957 செப்டம்பரில் வெளியிடப்பட்டன. இரண்டாவது நிதி ஆணைக்குழு நியமிக்கும் சமயத்தில் பாரதத் தில் மாநிலங்கள் அனைத்தும் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டன. அதன் விளைவாக மாநிலங்கள் என்றும், யூனியன் பிரதேசங்கள் என்றும் இரு பிரிவுகளாக ஆயின. (இதற்கு முன்பு 4 பிரிவுகளாக இருந்தன.) எனவே, சந்தானம் ஆணைக்குழுவின் பரிந்துரை கள் மொழிவாரி மாநில அமைப்பை அடிப்படையாகக்கொண்டு இருந்தன.

மாநிலங்களின் நிதித்தேவைகள் பெருகிச் சென்ற விகிதத்தில் மாநிலங்களின் நிதிவசதிகள் உயர்ந்துசெல்லவில்லை. எனவே, வருமான வரியில் மாநிலங்களின் பங்கை 55%-லிருந்து 60% ஆக உயர்த்தவேண்டும் என்று கூறியது; மாநிலங்களிடையே மேற்படி தொகையைப் பகிர்ந்தளிப்பதற்கு மக்கள்தொகைக்கு மேலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று கூறியது. எனவே, மக்கள்தொகை அடிப்படையில் 90%-மும், வசூல் அடிப் படையில் 10%-மும் மாநிலங்களுக்கு (வருமான வரியில்) கிடைக்

கும். இங்ஙனம் பரிந்துரைக்கும்போது நீண்டகால ரீதியில் மக்கள்தொகை அடிப்படையில் மட்டுமே வரித்தொகை பகிர்ந்து அளிக்கவேண்டும் என்று இவ் வாணைக்குழு கருத்துத் தெரிவித்தது.

மாநிலங்களின் கூடுதல் நிதித்தேவையைக் கருத்தில்கொண்டு பகிர்ந்து கொள்ளப்படும் ஆயத் தீர்வைகளை 3-லிருந்து 8ஆக உயர்த்தியது. (கூடுதலாகச் சேர்க்கப்பட்ட பொருள்களாவன: சர்க்கரை, தேயிலை, காப்பி, காகிதம், சிலவகைத் தாவர எண்ணெய் முதலியன.) பகிர்ந்துகொள்ளப்படும் ஆயத்தீர்வைகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு இருப்பதால், வசூலிக்கப்பட்ட ஆயத்தீர்வைகளில் மாநிலங்களின் பங்கு 40%-லிருந்து 25% ஆகக் குறைக்கப்பட்டது. இது மக்கள்தொகை அடிப்படையில் 90%-மும், வசூல் அடிப்படையில் 10%-மும் ஆக மாநிலங்களுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்படும்.

இரண்டாவது ஆணைக்குழுவிடம் மேலும் சில சிறப்பு ஆலோசனைகள் கோரப்பட்டன. ஆலைத்துணி, சர்க்கரை, புகையிலை (புகையிலையில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் உட்பட) ஆகியவற்றின் மீதான விற்பனை வரிக்குப் பதிலாகக் கூடுதல் ஆயத் தீர்வை நாடெங்கிலும் ஒரே விகிதத்தில் விதிப்பது என்று முடிவு செய்யப்பட்டதால், அதைப் பகிர்ந்து அளிப்பதற்கான அடிப்படையை ஆணைக்குழு பரிந்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. கூடுதல் ஆயத்தீர்வையின் நிகர வசூலில் 1% யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்கவேண்டும் என்றும், $1\frac{1}{4}$% ஜம்மு-காஷ்மீருக்கு ஒதுக்கவேண்டும் என்றும், எஞ்சியுள்ள தொகையை மேற்படி பொருள்களின் நுகர்வு அடிப்படையில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரைத்தது.

பாரதத்தில் 1953-ல் முதன்முதலில் எஸ்டேட் தீர்வைகள் விதிக்கப்பட்டன. இதனின்று கிடைக்கும் தொகை மாநிலங்களுக்கு முழுமையாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேற்படி தீர்வையால் வசூலிக்கப்பட்ட தொகையைப் பகிர்ந்து அளிக்கும் அடிப்படையை இந்த ஆணைக்குழு பரிந்துரைத்தது. 'எஸ்டேட்' தீர்வையின் நிகர வசூலில் 1% யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்றும், எஞ்சியுள்ளதை மாநிலங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் கூறியது. 'எஸ்டேட்'கள் இருவகைப் படுத்தப்பட்டன. 'அசைவிலா'ச் (ஸ்தாவர) சொத்துகளின் அடிப்படையில் விதிக்கப்படும் எஸ்டேட் தீர்வைகள், மேற்படி சொத்துகளின் பகிர்வு அடிப்படையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப் படும் இதர 'அசையும்' (சங்கம) சொத்துகளிலிருந்து வசூலிக்கப்

படும் 'எஸ்டேட்' தீர்வைகள் மக்கள்தொகை அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படும்.

இரயில் கட்டணத்தின்மீதான வரியைப்பற்றி ஆணைக்குழுவின் கருத்துப் பின்வருமாறு. இதில் ¼% யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்டது. எஞ்சிய தொகையை மாநிலவாரியாக இரயில் பயண அடிப்படையில் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று கூறியது.

மானியங்கள் வழங்குவதற்கு இந்த ஆணைக்குழு எவ்விதப் புதிய யோசனையையும் தெரிவிக்கவில்லை. முதல் ஆணைக்குழு கூறியதைவிடச் சில மாநிலங்களுக்குக் கூடுதலான மானியம் வழங்க வேண்டும் என்று இந்த ஆணைக்குழு பரிந்துரைத்தது.

இரண்டாவது நிதி ஆணைக்குழு மாநிலங்களுக்கு மைய அரசு கொடுக்கும் கடன் தொகைக்கான வட்டிவிகிதத்தைச் சீரமைக்கக் கூறிய கருத்துரைகளை அரசு ஏற்கவில்லை. முக்கியமாக அகதிகளின் மறுவாழ்விற்காக மாநில அரசுகள் பெற்ற கடன்தொகைக்கான வட்டிவிகிதத்தை ரத்துசெய்ய வேண்டும் என்று கூறியதையும் மைய அரசு ஏற்கவில்லை. இதரப் பரிந்துரைகள் மைய அரசால் ஏற்கப்பட்டன.

மூன்றாவது நிதி ஆணைக்குழு

1960 டிசம்பரில் திரு. A. K. சந்தா தலைமையில் மூன்றாவது நிதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதன் அறிக்கை 1961 டிசம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் அறிக்கை ஏகமனதாக இல்லை. இதன் செயலர் திரு. G. R. காமத் மாறுபட்ட தனிக் குறிப்பு ஒன்றை வழங்கியுள்ளார்.

வருமான வரியில் மாநிலங்களின் பங்கு 60% ஆக இருந்ததை இவ் வாணைக்குழு 66⅔% ஆக உயர்த்தியது. மாநிலங்களின் நிதித் தேவையை இது ஓரளவுக்கு ஈடுசெய்யும். அடுத்து மாநிலங்களுக்கு இடையே, இரண்டாவது ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி 90% தொகை மக்கள்தொகை அடிப்படையில் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று இருந்ததை 80%ஆகக் குறைத்தது. செல்வ வருமான உயர்வுதாழ்வுகள் அதிகமுள்ள இணைப்பு அரசு அமைப்பில் மைய அரசிடமிருந்து பகிர்ந்துகொள்ளப்படும் நிதி இனங்கள் எந்த அளவிற்கு மக்கள்தொகை அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படுகின்றனவோ அந்த அளவிற்கு உயர்வு தாழ்வுகள் அகற்றப்படுகின்றன. இவ்வகையில் இரண்டாவது ஆணைக்குழுவின் முற்போக்கான கருத்துகளைப் புறக்கணித்து,

முதல் ஆணைக்குழுவின் கருத்துகளை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று சந்தா ஆணைக்குழு கூறியது ஏமாற்றத்தை அளிக்கிறது.

யூனியன் பிரதேசங்களுக்கு நிகர வருமானவரியில் 1% கொடுக்கவேண்டும் என்று இரண்டாவது ஆணைக்குழு கூறியிருந்தது. இவ் விகிதம் மூன்றாவது ஆணைக்குழுவால் 2½% ஆக உயர்த்தப்பட்டது.

மாநிலங்களின் நிதித்தேவை உயர்ந்துசெல்வதை மூன்றாவது நிதி ஆணைக்குழு முற்றிலும் உணர்ந்து இருந்தது. எனவே, மோட்டார் ஸ்பிரிட் நீங்கலாக, மைய அரசு ஆயத்தீர்வை விதித்த 35 பொருள்களையும் பகிர்ந்து அளிக்கப்படும் இனமாக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. இருந்தபோதிலும் மாநிலங்களின் உரிமையை 25%-லிருந்து 20%ஆகக் குறைத்தது. ஆயத்தீர்வையை மாநிலங்களுக்கு இடையே பகிர்ந்து அளிப்பதற்குத் திட்டவட்டமான அடிப்படை எதையும் மூன்றாவது நிதி ஆணைக்குழு வழங்கவில்லை. மக்கள்தொகைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்றாலும் ஒவ்வொரு மாநிலத்தின் நிதிநிலைமை, பொருளாதார வளர்ச்சி, மாநிலங்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் முதலியனவும் கருத்தில் கொள்ளப் பட்டன.

கூடுதல் ஆயத்தீர்வையில் ஜம்மு-காஷ்மீருக்கு 1¼%-மும், யூனியன் பிரதேசங்களுக்கு 1%-மும் கொடுக்க வேண்டும் என்று இரண்டாவது ஆணைக்குழு கூறியது. மூன்றாவது நிதி ஆணைக்குழு ஜம்மு-காஷ்மீரின் விழுக்காட்டை 1½% ஆக உயர்த்தியது; யூனியன் பகுதிகளின் விழுக்காட்டை மாற்றவில்லை.

'எஸ்டேட்' தீர்வைகளைப் பகிர்ந்து அளிக்கும் அடிப்படையில் மூன்றாவது நிதி ஆணைக்குழு எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

1961-ல் இரயில் கட்டணங்களின் மீதான வரிகள் நீக்கப் பட்டன. இதனால் மாநிலங்களுக்கு ரூ. 12.5 கோடி இழப்பு ஏற் பட்டது. அதை மைய அரசு ஈடுசெய்ய வேண்டும் என்று ஆணைக் குழு கூறியது.

மாநில அரசுகளின் வரவுசெலவுத் திட்டத்தில், நடப்புக் கணக்கில்—துண்டுவிழும் ரூ. 52 கோடியையும், மைய அரசு மானியமாக உதவி செய்ய வேண்டும் என்று கூறியது. இதைத் தவிர வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதால் ஏற்படும்

பற்றுக்குறையில் 75% அதாவது சுமார் ரூ. 58.25 கோடியை மைய அரசு மானியமாகக் கொடுக்கவேண்டும் என்றும் கூறியது. பொதுவான உதவிமானியங்கள் வழங்கவும், போக்குவரத்து, செய்தித்தொடர்பு வசதிகளை விரிவுபடுத்தச் சிறப்பு மானியங்கள் வழங்கவும் இவ் வாணைக் குழு பரிந்துரைத்தது. மூன்றாவது ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. வளர்ச்சித் திட்டங்களினால், மாநில வரவு செலவுகளில் ஏற்படும் பற்றுக்குறையை ஈடு செய்வதற்குச் சட்ட ரீதியாக மானியம் வழங்க அரசு மறுத்துவிட்டது. திட்டமிட்ட வளர்ச்சியில் மாநிலங்களும் நிதிதிரட்டும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட வேண்டியது அவசியம் என்று பாரத அரசு கருதியது.

நான்காவது நிதி ஆணைக்குழு

1964 மே மாதத்தில் திரு. பி. வி. ராஜமன்னார் தலைமையில் நான்காவது நிதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. 1965 ஆகஸ்ட் மாதத்தில் இதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆணைக் குழுவின் தீர்ப்புகள் 1966 ஏப்ரல் முதல் 5 ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும் என்று கருதப்பட்டது. இக் காலம் முடியும் முன்னதாகவே ஐந்தாவது நிதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

வருமானவரியில் தனிநபர்கள், குடும்பங்கள்மீதான வருமான வரிகள்மட்டுமே பகிர்ந்து கொள்ளப்படும் இனமாக உள்ளது. மைய அரசிற்கு மட்டும் கிடைக்கக்கூடிய கம்பெனிகளின் வருமான வரி (கார்ப்பொரேஷன் வரி) முதல் திட்டத் தொடக்கத்திற்குப் பின்னர் (1965வரை) சுமார் 12 மடங்கு அதிகரித்துள்ளது என்றும், அதே சமயம் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட வருமான வரிப் பகிர்வுத்தொகை 50% மட்டுமே உயர்ந்துள்ளது என்றும் மாநிலங்கள் புகார் செய்தன.[17] இதில் நியாயம் இருப்பதாகக் கருதிய நான்காவது நிதி ஆணைக்குழு மாநிலங்களுக்கான (வருமான வரியில் பங்கு) விகிதத்தை $66\frac{2}{3}$%-லிருந்து 75%ஆக உயர்த்தியது. மாநிலங்களுக்குள் மேற்படி தொகையைப் பகிர்ந்துகொள்ள வேண்டிய அடிப்படையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தக் கோரவில்லை. அதாவது மாநிலங்கள் வருமானவரியை மக்கள் தொகை அடிப்படையில் 80%-யும், வசூல் அடிப்படையில் 20%-யும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்றும் கூறியது. வருமான வரியில் யூனியன் பகுதிகளுக்கு 2·5% ஒதுக்கப்படும். வருமான வரியைப் பொறுத்தவரை மாநிலங்களுக்கு 75% ஒதுக்கவேண்டும்

17 K. K. Andley and K.P.M. Sundharam-Public Finance and Public Economics (1966), p. 386.

என்பதைத் தவிர, நான்காவது நிதி ஆணைக்குழு புதிதாக எவ்விதக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

ஆயத் தீர்வைகளைப் பற்றிய 4 ஆவது ஆணைக்குழுவின் பரிந்துரைகள் போற்றுதற்குரியவை. ஆயத்தீர்வைகளை ஆறு வகைப் படுத்தலாம். அவையாவன: (1) ஆதாரமான ஆயத்தீர்வைகள்; (2) குறிப்பிட்ட நோக்கத்திற்காக விதிக்கப்படும் ஆயத்தீர்வைகள்; (3) விற்பனை வரிக்குப் பதிலாக விதிக்கப்படும் கூடுதல் ஆயத்தீர்வைகள்; (4) மண்ணெண்ணெய், மோட்டார் ஸ்பிரிட் முதலிய ஆவியாகக் கூடிய எண்ணெய் வகைகளின்மீதான கூடுதல் ஆயத் தீர்வைகள்; (5) ஆதாரத் தீர்வைகளின்மீது மேல்வரியாக (Surcharge) விதிக்கப்படும் சிறப்பு ஆயத்தீர்வைகள்; இறுதியாக (6) முறைப்படுத்துவதற்கான ஆயத்தீர்வைகள் என்பனவாகும். இவற்றுள் 1964-65-ல் ஆறாவது வகையில் உள்ள முறைப்படுத்தும் தீர்வைகள் அதிக வரித்தொகையை ஈட்டவில்லை. முறைப் படுத்தும் ஆயத்தீர்வைகள், குறித்த நோக்கத்திற்கான ஆயத் தீர்வைகள் (2ஆவது பிரிவு), சிறப்பு ஆயத்தீர்வைகள் (5ஆவது பிரிவு) ஆகியவை நீங்கலாக உள்ள அனைத்து ஆயத் தீர்வைகளையும் ஆதார ஆயத்தீர்வைகளுக்கு ஒப்பாகக் கருதி அவற்றைப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று கூறியது.

கூடுதல் ஆயத் தீர்வையில் 1 % யூனியன் பகுதிகளுக்கும், $1\frac{1}{2}$ % ஜம்மு–காஷ்மீருக்கும், $\frac{1}{20}$ % நாகாலாந்துக்கும் ஒதுக்கவேண்டும் என்று நான்காவது ஆணைக்குழு கூறியது.

எஸ்டேட் வரிகளினால் கிடைக்கும் தொகையில் 2 % யூனியன் பகுதிகளுக்கு ஒதுக்கவேண்டும் என்று கூறியது. அதைத் தவிர மாநிலங்களுக்கு அத் தொகையைப் பகிர்ந்தளிப்பதற்கான அடிப் படையில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை.

ஐந்தாவது நிதி ஆணைக்குழு

1968 செப்டம்பரில் திரு. மகாவீர் தியாகி தலைமையில் 5 ஆவது நிதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதன் அறிக்கை 1969 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டது.

இக் காலத்தில் பல குறிப்பிடத் தக்க அரசியல்–பொருளா தார மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பல மாநிலங்கள் நிலவரியைப் பெரும் அளவுக்கு நீக்கிவிட்டன அல்லது நீக்க விரும்பின. மாநில அரசுகள் பெற்றிருந்த கடன் தொகையை உரிய காலத்தில் திருப்பிக்கொடுக்கவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

3 ஆண்டுக் காலதாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. 1967 பொதுத் தேர்தலில் மாநிலங்களில் பல காங்கிரஸ் அல்லாத அரசியல் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றின. இவை மாநிலத் தன்னாட்சியும், நிதித் துறையில் தன்னுரிமையும் கோரின. திட்ட ஆணைக் குழுவின் அமைப்பில் பல அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன. அடுத்து ரிசர்வ் பாங்கு, மாநிலங்களுக்கு அளித்து வந்த மிகைப் பற்றுத்தொகை உயர்ந்துசென்றது. இம் மாதிரியான பல புதிய நிகழ்ச்சிகள் 5 ஆவது நிதி ஆணைக்குழுவின் நியமனத்திற்கும் அதன் பரிந்துரைகளுக்கும் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தின.

வருமான வரியில் மாநிலங்களின் பங்கு 75% ஆகத் தொடர்ந்து நீடிக்கும், இதில் 2·6 % யூனியன் பகுதிகளுக்கானவை. மாநிலங்களிடையே இத் தொகையைப் பகிர்ந்து அளிக்கையில் மக்கள் தொகைக்குக் கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று தியாகி ஆணைக்குழு கூறியது. அதன்படி, 90% மக்கள் தொகை அடிப்படையிலும் 10 % வசூல் அடிப்படையிலும் பகிர்ந்து அளிக்கலாம்.

மைய அரசு விதிக்கும் ஆயத்தீர்வைகள் யாவும் பகிர்ந்து கொள்ளப்படும் இனமாக இருக்கும். ஆயத்தீர்வையில் 20% மாநிலங்களின் பங்காக இருக்கும். இத் தொகையில் 80% மக்கள் தொகை அடிப்படையிலும் 20% இதரக் காரணிகளின் அடிப்படையிலும் பகிர்ந்து அளிக்கப்படும். அதாவது, நாட்டின் சராசரி வருமானத்தைவிடக் குறைவான தலா வருமானத்தையுடைய மாநிலங்களுக்கு $13\frac{1}{3}$%-மும், எஞ்சியுள்ள $6\frac{2}{3}$% பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய நிலையைக் குறிக்கும் குறியீட்டு எண்கள் அடிப்படையில் அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும். ஷெட்யூல்டு வகுப்பு மக்கள்தொகை, ஆலைத் தொழிலாளர்கள், பாசன வசதி உடைய நிலப்பரப்பு, சாலை, மற்றும் இருப்புப்பாதைப் போக்குவரத்து, பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர்கள், மருத்துவ வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலத்தின் பின்தங்கிய (பொருளாதார) நிலை நிர்ணயிக்கப்படும்.

கூடுதல் ஆயத்தீர்வையைப் பகிர்ந்துகொள்ளும் அடிப்படையை எவ்விதத்திலும் ஐந்தாவது ஆணைக்குழு மாற்றவில்லை என்றாலும், யூனியன் பகுதிகளுக்கான விகிதத்தை 1%-லிருந்து 2.05%-ஆகவும் நாகாலாந்திற்கான விகிதத்தை 0.05%-லிருந்து 0.09%-ஆகவும் உயர்த்தியது. ஆனால், ஜம்மு-காஷ்மீரத்திற்கான விழுக்காடு 1.5%-லிருந்து 0.83% ஆகக் குறைந்துவிட்டது.

எஸ்டேட் தீர்வைகளில் யூனியன் பகுதிகளின் பங்கு 3%ஆக உயர்த்தப்பட்டது. இப் பகுதிகளின் மக்கள்தொகை, அசையாச் சொத்துகளின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் யூனியன் பகுதிகளுக்கிடையே இத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

திறனாய்வு

ஐந்தாவது நிதி ஆணைக்குழு வருமான உயர்வுதாழ்வுகளை அகற்றுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. மக்கள் தொகை செறிந்துள்ள மாநிலங்களுக்குக் கூடுதலான விழுக்காட்டுத்தொகை ஒதுக்குவதற்கும், தொழில்துறையில் பின்தங்கிய, சராசரி வருமானம் குறைந்துள்ள மாநிலங்களுக்குக் கூடுதலான பங்கு கிடைப்பதற்கும் வழிசெய்துள்ளது. இதன் பரிந்துரைகளால் பீகார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், ராஜஸ்தானம், மத்தியப்பிரதேசம் முதலிய மாநிலங்கள் அதிக அளவிற்கு ஆதாயம் அடைந்தன. மைசூர், கேரளம், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன. முக்கியமாக, மைசூர் மாநிலத்திற்கு (வரிகள் மானியம் ஆகிய வழிகளில்) மைய அரசிடமிருந்து கிடைத்துவந்த ரூ. 215 கோடித் தொகை இப்போது ரூ. 197 கோடியாகக் குறைந்துவிட்டது. ஆனால், பீகாருக்குக் கிடைத்த தொகை ரூ. 197 கோடியிலிருந்து ரூ. 407 கோடியாகவும், உத்தரப் பிரதேசத்திற்கான தொகை ரூ. 373 கோடியிலிருந்து ரூ. 620 கோடியாகவும், மத்தியப் பிரதேசத்திற்கு ரூ. 162 கோடியிலிருந்து ரூ. 274 கோடியாகவும் உயர்ந்துள்ளன.

இவ் வாணைக் குழுவால் 1969–74 ஆகிய ஆண்டுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மானிய உதவித்தொகை ரூ. 637·85 கோடியாகும். இது 4ஆவது ஆணைக்குழு பரிந்துரைத்த தொகையை விடச் சற்றுக் (ரூ. 65.20கோடி) குறைவாக இருக்கிறது. அதே சமயம் வரிகளின்மூலம் மைய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பட்ட தொகை ரூ. 3628 கோடியாக உள்ளது. இது முன்புள்ளதைவிட ரூ. 1445 கோடி உயர்வாக உள்ளது. மானியத்தின் மூலம் மாற்றப்படுவதைவிட, வரிகளின் மூலம் கூடுதலாக மாற்றம் செய்வதற்கு இது வழிவகுத்துள்ளது. இது நீண்டகால ரீதியில் வரவேற்கக் கூடிய ஒரு போக்கு என்பதைக் குறிப்பிடவேண்டும்.

இவ் வாணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் மாநில அரசுகள் ரிசர்வ் பாங்கிடம் மிகைப்பற்றுப் பெறுவதையும், அனுமதியில்லாமல், கூடுதலான அளவு வழிவகைக் கடன்களைப் பெற்றுக்கொள்வதையும் குறைகூறியுள்ளது. மாநில அரசுகள்

நிதித்துறையில் கட்டுப்பாட்டுடன் சில நியதிகளுக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியது. எனவே, மாநில அரசுகள் இதுவரை பெற்றுக்கொண்ட மிகைப்பற்றுகளை யும், அனுமதியில்லாமல் பெற்ற வழிவகைக் கடன்களையும் உடனடியாகத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றும், அவற்றை வளம் திரட்டும் சாதனமாகக் கருதக்கூடாது என்றும் கூறியது.

ஐந்தாவது ஆணைக்குழு பின்தங்கிய மாநிலங்களுக்கு அதிகச் சலுகைகள் வழங்கியதைப் பலரும் முழுமையாக வரவேற்கவில்லை. தொழில்துறையில் வளர்ந்து செல்லும் மாநிலங்களின் நியாயமான நிதிக் கோரிக்கைகள் இதனால் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்றும், பின்தங்கிய மாநிலங்கள் தங்கள் பொறுப்பில் உள்ள வளங்களை வளர்ச்சிக்காக முழுவதும் திரட்டவில்லை என்றும், வளர்ச்சிக்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்துவதில் இவை அக்கறை காட்டவில்லை என்றும், ஆகையால், பின்தங்கிய மாநிலங்களுக்குக் கொடுக்கும் கூடுதலான சலுகைகள் அவற்றைத் தொடர்ந்து அதே நிலைமையில் வைத்திருக்கக் காரணமாக இருக்கின்றன என்றும் கூறுகிறார்கள்.

மைய அரசும் மாநில அரசுகளும்

பாரத அரசு அமைப்பு நிதி ஆணைக்குழுவின் நியமனத்திற்கு வழிசெய்துள்ளதே யல்லாமல், திட்ட ஆணைக்குழுவிற்கு அதில் இடம் அளிக்கவில்லை. இங்ஙனம் அரசு அமைப்புத்திட்டத்தில் இடம் பெறாத திட்ட ஆணைக்குழுவின் செல்வாக்கு நாளடைவில் உயர்ந்துவிட்டது. இதனால் நிதி ஆணைக்குழுவின் செல்வாக்குக் குறைந்துவிட்டது. தவிர, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையால் நடப்புக்கணக்கில் வரி வருவாயில் ஒரு பகுதியை மைய அரசு (மானியமாகவும், வரிப்பகிர்வாகவும்) மாநிலங்களுக்கு மாற்றித் தர வழிசெய்யப்படுகிறது. ஆனால், நடப்புக் கணக்கில் மாற்றித் தரப்படும் தொகையைவிடப் பன்மடங்கு கூடுதலான தொகை மூலதனக்கணக்கில், திட்டக்கமிஷன் பரிந்துரைகளுக்கு இணங்க வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மைய அரசால் ஒதுக்கப்படுகின்றன. இதனால், நிதி ஆணைக்குழுவின் செல்வாக்குக் குறைக்கப்படுகிறது [பார்க்கவும் 26-1 அட்டவணை].

நிதி ஆணைக்குழுக்கள் அரசு அமைப்பு விதிகளின்படி நியமிக்கப்பட்டவை. இவற்றின் செல்வாக்கு நடைமுறையில் குறைந்து செல்வதால் மாநிலங்களின் நிதி வலிமையும், செல்வாக்கும், அவற்றுடன் குறைந்துவிடுகின்றன. மானியமாகத் தொகையை வழங்குவதாலும், மூலதனக் கணக்கில் பெருந்தொகையைக் கடனாக கொடுப்பதாலும் மைய அரசின் செல்வாக்கு உயர்ந்து

செல்லும் அதே சமயத்தில் மாநில அரசுகளின் வலிமையும், செல்வாக்கும் தேய்ந்துவிட்டன. இது ஓர் அடிப்படையான சமனற்றதன்மையை எடுத்துக்காட்டுகிறது.

பாரதத்தில் மைய அரசு வலிமை உடையதாகவும், நிலைபேறு உடையதாகவும் இருக்கவேண்டும் என்ற நோக்கம் அரசு அமைப்பாளர்களின் உட்கிடக்கையாகும். 1947-ல் ஏற்பட்டதைப் போல எதிர்காலத்தில் நாடு பிரிவினைக்குட்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டு மைய அரசின் செல்வாக்கை அதிகரிக்கும் அமைப்புமுறையை உருவாக்கினார்கள். ஆனால், இன்றைய நிலையில் மைய அரசைப்போலவே, மாநில அரசுகளும் வலிமை மிக்கனவாக இருக்கவேண்டும் என்றும், இவை சம அளவு முக்கியத்துவம் பெற்று விளங்கவேண்டும் என்றும் கூறப்படுகிறது. இவ் வடிப்படையில்தான் மாநிலங்களின் கூடுதலான நிதிக் கோரிக்கைகளுக்கு ஆதரவு தரப்படுகின்றது.

மாநிலங்களின் வளர்ச்சிப் பணிகளுடன் ஒப்பிடும்போது அவற்றின் நிதிதிரட்டும் வாய்ப்புகள் கிட்டத்தட்டத் தேக்கமுற்ற இனங்களாகவே இருக்கின்றன எனலாம். நெகிழ்வான வருமான வாய்ப்புகளை உடைய மைய அரசு காலப்போக்கில் வலிமை மிக்க அமைப்பாக உருவாகியுள்ளதில் வியப்பொன்றும் இல்லை. இதனால் ஒருபுறம் மாநில அரசுகளின் நிதி நிலைமையில் தொடர்ந்து சமனற்ற பற்றுக்குறையான நிலை நீடிக்கவும் மற்றொரு புறம் மைய அரசின் ஆதிக்கம் மேலோங்கவும் செய்கின்றன. இதற்குத் தீர்வு காண வேண்டுமானால், நெகிழ்வான வருவாய் வாய்ப்புகளை உடைய வரித்தலைப்புகள் அனைத்தையும் மாநிலங்களுடன் மைய அரசு பகிர்ந்துகொள்ள வேண்டும். காட்டாக, இதுவரை மைய அரசின் முற்றுரிமையாக உள்ள கம்பெனி வருமான வரியைப் (வருமான வரியைப் போல) பகிர்ந்து கொள்ளப்படும் வரித்தலைப்பாக மாற்ற வேண்டும்.[18] எதிர்காலத்தில் மானியமாகக் கொடுக்கப்படும் தொகையைப் படிப்படியாகக் குறைத்து, பகிர்ந்துகொள்ளப்படும் வரித்தொகையை உயர்த்தவேண்டுவது அவசியம். அவ்வகையில் தியாகி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் வரவேற்கக்கூடிய ஒரு மாற்றத்தைத் தோற்றுவித்துள்ளன.

முடிவுரை

மைய-மாநில அரசின் நிதித்தொடர்புகள், அரசியல் அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் முக்கியத்துவம்

[18] மைய-மாநில உறவு ஆய்வுக்குழு அறிக்கை, 1971; பக். 287-288.

வாய்ந்த ஒரு துறையாகும். இவ்விரு அரசுகளுக்கும் இடையே சுமுகமான உறவும் ஒற்றுமையும் காணப்படும் வரையில், அவை நாட்டின் பொதுவான வளர்ச்சிக்குச் (சிறப்பாகத் தொழில் வளர்ச்சிக்கு) உதவியாகச் செயல்பட முடியும். இவ்வரசுகளின் முயற்சிகளை ஒருமுகப்படுத்துவது இன்றியமையாதது. அப்போது தான் மக்களின் நல்வாழ்விற்கு ஆவனசெய்ய இயலும். இவ்வரசுகள் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டுள்ள பணிகளுக்கு ஏற்ப நிதி திரட்டும் வாய்ப்பினைப் பெற்று இருக்கவேண்டும் என்பதற்காகவும் இவை என்றென்றும் சமத்துவ அடிப்படையில் செயல்பட வேண்டும் என்பதற்காகவும் இவற்றின் நிதி உரிமைகளையும், பொறுப்புகளையும் அவ்வப்போது சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

மேற்கோள் நூற்பட்டியல்
(BIBLOGRAPHY)

1. Adelman, Irma—Theories of Economic Growth and Development, OUP, London.
2. Agarwalla, A.N. and Singh, S.P. (Ed)—The Economics of Underdevelopment, Bombay, OUP, 1958.
3. All India Rural Credit Survey, Vol. I. RBI.
4. Ambedkar, B.R.—The Problem of Rupee, London, 1923.
5. Ambedkar, B.R.—Evolution of Provincial Finance in British India, London.
6. Ambedkar, B.R.—Who were the Sudhras? Thacker & Co., Bombay.
7. Andley, K.K. and Sundharam, K.P.M.—Public Finance and Public Economics, 19?0.
8. Anstey, Vera—The Economic Development of India, Longman's Green & Co., London, 195?.
9. Baden-Powell, B.H.—Origin and Growth of Village Communities in India, London, 1899.
10. Baden-Powell, B.H.—The Indian Village Community (189?).
11. Balakrishna, R.—Review of Economic Growth in India, 1961.
12. Balakrishna, R.—Studies in Indian Economic Problems (1954).
13. Balakrishna, R.—Recent Trends in Indian Finance, University of Madras, 1955.
14. Baljit Singh—The Economics of Small Scale Industries—A Case Study, Asia, 1961.
15. Basu, S.K.—Place and Problems of Small Industries, Calcutta, 1957.
16. Basu, S.K.—Industrial Finance in India, Calcutta University, 1958.
17. Basu, S.K.—The Managing Agency System in Prospect and Retrospect, Calcutta, 1958.
18. Bhargava, R.N.—The Theory and Working of Union Finance in India, Chaitanya, Allahabad, 1967.
19. Bhatia, B.M.—Famines in India since 1860, Bombay, 1962.
20. Bhatt, V.V.—Aspects of Economic Change and Policy in India, Allied Publishers, 1963.

21. Bhattacharyya, Dhires—Understanding India's Economy Part I & II, Progressive Publishers, Calcutta, 1962.

22. Blyn, George—A Statistical Study of Output and Trends (1951)

23. Chandrasekhar, S.—Hungry People and Empty Lands. Baroda, 1952.

24. Chandrasekhar, S.—Population and Planned Parenthood in India, London, 1955. (Allen & Unwin)

25. Chavan, B.W. and Chavan, Anita—National Income in India, Sindhu Publishers, Bombay, 1970.

26. Clark, Colin—The Conditions of Economic Progress, Third Edition, Macmillan, 1957, New York.

27. Coale, A.J. and Hoover, E.M.—Population and Economic Development in Low Income Countries (1958).

28. CSO—Estimate of National Product–Revised Series.

29. Coyajee, J.C.—The Indian Currency System, University of Madras, 1930.

30. Dhadabhai Naoroji—Poverty and Un-British Rule in India, London, 1901.

31. Das, R.K.—Labour Movement in India, Berlin, 1923.

32. Das Gupta, A.K.—War and Postwar Inflation in India, Calcutta, 1950.

33. Datta, B.—The Economics of Industrialization, Third Edition, World Press, 1960.

34. Davis, Kingsley—Population of India and Pakistan.

35. Deshmukh, C.D.—Economic Development in India, 1946 —1956, Asia, 1957.

36. Dhar, D.N.—Small Scale Industries in Delhi, Asia, 195[illegible].

37. Dorfman, R., Samuelson, P, Solow, R.—Linear Programming and Economic Analysis, 1958.

38. Eastern Economist—Annual Numbers, 1972, 1971 & 1970.

39. Gadgil, D.R.—The Industrial Evolution of India, OUP, 1946.

40. Ganguli, B.N.—Reconstruction of India's Foreign Trade, New Delhi, 1946.

41. Ganguli B.N. (Ed)—Readings in Economic History, 1964, Asia.

42. Gazetteer of India, Vol. I, 1965.

43. Ghosh, Alak—Indian Economy, 1971, World Press, Calcutta.

44. Ghosh, Alak—New Horizons in Planning, Second edition, 1960, World Press, Calcutta.

45. Giri, V.V.—Labour Problems in Indian Industry (1958)

46. Government of India—Indian Industrial Commission Report-1919, Calcutta.

47. Government of India—First Five Year Plan.

48. Government of India—Second Five Year Plan.

49. Government of India—Third Five Year Plan.

50. Government of India—Fourth Five Year Plan.

51. Government of India—A Review of the Indian Government Railways, 1963.

52. Gyan Chand—Socialist Transformation of Indian Economy, 1965.

53. Haavelmo, Trygve,—A Study in the Theory of Investment, University of Chicago, 1960.

54. Higgins. Benjamins—Economic Development, Principles, Problems and Policies, New York, 1959.

55. Hough, E.M.—The Cooperative Movement in India, OUP, 1966.

56. Indian Currency Committee-Report, Calcutta, 1931.

57. Indian Economic Conference Numbers 1968, 1969, 1970 & 1971.

58. Jathar G.B. and Beri, S.G.—Indian Economics, Vol. I & II, Nineth edition, OUP, 1952.

59. Jathar, G.B. and Jathar, K.G.—Indian Economics, OUP, 1957.

60. Karnic, V.B.—Indian Trade Unions-A Survey, Manaktala & Sons, Bombay, 1966.

61. Kidron, Michael—Foreign Investment in India, OUP, London, 1965.

62. Kuidleberger, C.P.—Economic Development (1965).

63. Krishnamachari, V.T.—Planning in India, 1961, Orient Longmans.

64. Kuchhal, S.C.—The Industrial Economy of India, 1969.

65. Kulkarni, M.R.—Industrial Development, National Book Trust, 1971.

66. Lakdawalla, D.T.—Taxation and the Plan, Popular, Bombay, 1956.

67. Leibenstein, Harvey—Economic Backwardness and Economic Growth, 1965.

68. Lewis. John, P.—Quiet Crisis in India.

69. Lewis, W. Arthur—Economic Development with Unlimited Supply of Labour-(article)

70. Lewis, W. Arthur—The Theory of Economic Growth, ELBS, 1963.

71. Madan, B.K.—Aspects of Economic Development and Policy, 1964.

72. Mahalanobis, P.C.—The Approach of Operational Research to Planning in India, Asia, 1963.

73. Malenbaum, Wilfred—Prospects for Indian Development, George Allen & Unwin London, 1962.

74. Malhotra, D.K.—History and Problems of Indian Currency and Finance.

75. Marx, Karl—Das Capital, Vol, I, II, & III.

76. Mathur, A.S. and Mathur, J.S.—Trade Union Movement in India, 1957.

77. Meier, G.M. and Baldwin R.E.—Economic Development, New York, 1957.

78. Memoria, C.B.—Agricultural Problems of India, 1966.

79. Muranjan, S.K.—Modern Banking (1952).

80. Myrdal, Gunnar,—Asian Drama, Vol. I, II, & III 1968.

81. Namioshi, M.—Monopolies in India, Lalvani, Bombay, 1966.

82. Nanavathi, M.B. and Anjaria, J.J.—The Indian Rural Problem, 1965.

83. NCAER—The Managing Agency System, Asia, Bombay, 1959.

84. Nurkse, Ragnar—Problems of Capital Formation in Underdeveloped Countries, Oxford, 1953.

85. O'Malley-LSS—India's Social Heritage, OUP, 1934.

86. Panandikar, S.G.—Banking in India, Orient Longmans, 1969.

87. Patel, S.J.—Essays on Economic Transition, Asia, 1965.

88. Patel, H.M.—A Policy for Foreign Trade, Bombay, Asia, 1963.

89. Radha Kamal Mukerjee—Foundations of Indian Economics, 1916.

90. Radha Kamal Mukerjee (Ed)—Economic Problems of Modern India, Macmillan 1939.

91. Radha Kamal Mukerjee—Democracies of the East, (1923)

92. Radha Kamal Mukerjee—Land Problems of India (1933)

93. Radha Kamal Mukerjee—Economic History of India 1600-1800.

94. Raghubans Dev. Bedi—Theorey, History and Practice of Cooperation—Loyal Book Depot, 1969.

95. Ramakrishna Iyer, V.G.—Public Finance.

96. Ranade, M.G.—Essays in Indian Economics, Madras, 1916.

97. Rangnekar, D.K.—Poverty and Capital Development in India OUP, 1958.

98. Rao, B.S.—Survay of Indian Industries, Vol. I & II.

99. Rao, V.K.R.V.—National Income of British India, 1939.

100. Reddaway, W.B.—The Development of the Indian Economy, George Allen and Unwin, 1962.

101. Reserve Bank of India—Annual Survey Reports.

102. Reserve Bank of India—Bulletins.

103. Reserve Bank of India—Functions and Working, 1970.

104. Robbins, Lord—The Theory of Economic Development

105. Robinson, EAG, (Ed.)—Problems in Economic Development, Macurillan, 1966.

106. Romesh Dutt—The Economic History of India under the Early British Rule, London, 1956.

107. Romesh Dutt—The Economic History of India in the Victorian Age, London, 1956.

108. Rosen, George—Industrial change in India, Asia, 1961.

109. Rosen, George—Democracy and Economic change in India, 1966.

110. Rostow, W.W.—The Process of Economic Growth.

111. Rostow, W.W.—The Stages of Economic Growth Cambridge, 1960.

112. Rostow, W.W. (Ed)—The Economics of Take off into Sustained Growth, Macmillan, 1965.

113. Roy, M.N.—India in Transition.

114. Ruddar Dutt and Sundharam, K.P.M.—Indian Economy, 1971. New Delhi.

115. Sahota, G.S.—Indian Tax Structure and Economic Development, Asia, 1961.

116. Samuelson, Paul A.—Economics, 8th edition.

117. Sarada Raju, A.—Economic Conditions in the Madras Presidency, 1800–1850, University of Madras.

118. Sathianatha Iyer, R.—History of India, Vol. I, II & III.

119. Saxena, K.K.—Indian Railways—Problems and Prospects, Bombay, Vora & Co, 1961.

120. Sen, S.R.—The Strategy for Agricultural Development, Asia, 1962.

121. Sen, A.K.—Choice of Technique.

122. Sethi, J.D.—Problems of Monetary Policy in an Underdeveloped Country, Bombay, Asia, 1962.

123. Shenoy, B.R.—Indian Planning and Economic Development, Asia, 1963.

124. Sharma, K.S.—The Institutional Structure of Capital Market in India (1969).

125. Shenoy, B.R.—Indian Economic Policy, Popular, Bombay, 1968.

126. Shetty, M.C.—Small Scale and Household Industries in a Developing Economy, Asia, 1963.

127. Simha, S.L.N.—Capital Market of India, Bombay, Vora & Co, 1961.

128. சிங், வி.பி.—இந்தியப் பொருளாதார வரலாறு-1857–1956 தமிழ் வெளியீட்டுக் கழகம்.

129. Singh, V.B.—The Indian Economy, Yesterday and Today, 1970.

130. Singh, V.B. (Ed)—The Economic History of India 1857–1956, Allied, 1965.

131. Singh, V.B.—Climate for Industrial Relations, Allied, 1968.

132. Sinha, M.R. (Ed)—A Decade of Economic Development and Planning in India, 1962.

133. Streeten, Paul and Lipton, Michael—The Crisis of Indian Planning OUP, Bombay, 1968.

134. Surveys of Economic Theory, Vol. II, Macmillan, 1966.

135. தமிழ் நாடு அரசு—மைய-மாநில உறவு ஆய்வுக்குழு அறிக்கை, 1971.

136. The Hindu—Annual Survey of Indian Industries 1968, 1969, 1970 and 1971.

137. திருநாவுக்கரசு, ம.—பணவியற் பொருளாதாரம், 1972.

138. Tripathy, R.N.—Federal Finance in a Developing Economy, World Press, Calcutta, 1960.

139. Vakil, C.N. and Brahmanand, P.R.—Planning for an Expanding Economy, 1956.

140. Varshney, R.L.—India's Foreign Trade, Kitab Mahal, 1954.

141. Venkatasubbiah, H.—India's Foreign Trade upto 1940.

142. Venkatasubbiah, H.—Indian Economy since Independence.

143. Wadia, P.A. and Merchant, K.T.—Our Economic Problems, 1959.

144. Wilson, H.H.—History of British India.

145. Zacharias, C.W.B.—Agricultural Planning for Madras, University of Madras, 1953.

கலைச்சொற்கள்

அகம்சார்ந்த காரணி	—	Endogenous factor
அயல்நாட்டு (அந்நிய) மூலதனம்	—	Foreign capital
அரசு அமைப்புத் திட்டம்	—	Constitution
அரசுதுறை	—	Government sector
ஆட்டக் கோட்பாடுகள்	—	Game Theories
ஆதாரத் தொழில்கள்	—	Basic Industries
இணைப்பரசு நிதியியல்	—	Federal Finance
இணை உறவால் விரிந்த குடும்பம்	—	Collaterally extended family
இயக்கச் சமநிலை	—	Dynamic equilibrium
இயங்காப் பொருளாதார அமைப்பு	—	Static Economy
இரட்டை ஆட்சி	—	Diarchy
இரட்டைத்தன்மை	—	Dualism
இரண்டாம்நிலைத் துறை	—	Secondary sector
இருப்புவிலைத் திட்டம்	—	Retention price scheme
இறப்பு விகிதம்	—	Death rate
இறைமை	—	Sovereignity
உசிதமான அதிகாரங்கள்	—	Discretionary Powers
உத்தம மக்கள்தொகைக் கோட்பாடு	—	Optimum Theory of Population
உலக மந்தம்	—	World depression
உள்ளமைப்பு வசதிகள் அல்லது துறைகள்	—	Infrastructure
உள்ளிடு பொருள்கள்	—	Inputs
உறுதி அளித்தல்	—	Under writing
உற்பத்தி அளவுத்திறன்	—	Production capacity
உற்பத்தித்திறன்	—	Productivity
உற்பத்தி வாய்ப்புச் செலவு	—	Opportunity cost
ஊர்ச் சுங்கவரி	—	Octroi

எழுநிலை	—	Take-off stage
ஏகக்குடும்பம்	—	Undivided family (Joint family,
ஏழ்மை நச்சுச்சுழல்	—	Vicious circle of poverty
ஐரோப்பியப் பொது அங்காடி	—	European Common Market
ஒப்புமையாக	—	Relatively (Comparatively)
கடவுச்சீட்டு	—	Passport
கடன்-குத்தகைத் திட்டம்	—	Lend-lease scheme
கடைநிலைக் கடன் ஈவோன்	—	Lender of last resort
கட்டமைப்பு	—	Structure
கரந்துறை வேலையின்மை	—	Disguised unemployment
கருவள விகிதம்	—	Fertility rate
கலப்புப் பொருளாதார அமைப்பு	—	Mixed Economy
கவுன்சில் பற்றோலை	—	Council drafts
கவுன்சில் பற்றோலை, மறு	—	Reverse Council drafts
கடைசல் பொறி	—	Lathe
கனரக முதலீட்டுத்துறை	—	Heavy investment sector
காசு	—	Coin
காசுசாலை	—	Mint
கிராமச் சமுதாயம்	—	Village community
குடும்ப அமைப்பு	—	Household
குலம்	—	Clan
குறிக்காசுகள்	—	Token coins
குறியீட்டு எண்கள்	—	Index numbers
குறியீட்டு எண்கள், எடையிட்ட	—	Weighted index numbers
குறைந்த அளவுக் காப்புமுறை	—	Minimum reserve system
சந்தைவரி	—	Toll
சரக்குப் பெட்டிகள்	—	Containers
சர்வாதீனக் (முற்றுரிமை) கட்டுப்பாடு	—	Monopolistic control
சர்வாதீன ஆய்வு ஆணைக்குழு	—	Monopolies Enquiry Commission
சிறப்புப்பயிற்சி	—	Specialization

சுங்க ஆணைக்குழு	—	Tariff Commission
சுங்க ஆணைக்குழுப் பரிசீலனைக் கமிட்டி	—	Tariff Commission Review Committee
சுங்க வாரியம்	—	Tariff Board
சுதேச பாங்கர்	—	Indigenous Banker
சுத்திகரிப்பு ஆலை	—	Refinery
செலவிடுதல் (வரித்தொகை)	—	Appropriation (Tax Revenue)
செலவுத் திசைமாற்ற நடவடிக்கைகள்	—	Expenditure switching operations
செலாவணிப் பெட்டகங்கள்	—	Currency chests
செலுத்தல் நிலை	—	Balance of payments
சேம நல அரசு	—	Welfare State
தலா வருமானம்	—	Per capita income
தலைமைப்பாங்குத் திட்டம்	—	Lead Bank scheme
தலைவரி-(ஆள்வரி)	—	Capitation tax
தனித்த	—	Absolutely
தன் ஆற்றலில் தொடர்ந்த வளர்ச்சி	—	Self sustaining growth
தாராள இறக்குமதி	—	Liberalized imports
தானியங்கு (தன்மை உடைய) பொருளாதார வளர்ச்சி	—	Self generating economic growth
தீர்ப்பு	—	Award
துணைத்தொழில்கள்	—	Ancillary industries
தெரிவுக்காப்பு	—	Discriminating protection
தேக்கச் சமநிலை	—	Static equilibrium
தேசியச் சிறுதொழில்கள் கழகம்	—	National Small Industries Corporation
தேசியத் தொழில்வளர்ச்சிக் கழகம்	—	National Industrial Development Corporation
தொடர் மதிப்பீடு	—	Series estimate
தொடர்வட்டி விகித வளர்ச்சி	—	Compound interest rate growth
தொழில் அனுமதிக்கொள்கை	—	Industrial Licensing Policy
தொழில் கணிப்பு	—	Industrial census
தொழிற்கொள்கை	—	Industrial Policy

தொழில் சீரமைப்பு	—	Rationalization of industries
தொழில்நுட்ப இடைவெளி	—	Technological discontinuity
தொழில்நுட்பத் தேர்வு	—	Choice of technique
தொழிற்பேட்டை	—	Industrial Estate
தொழில் வரி	—	Professional tax
நடப்புக்கணக்கு (வருமானக் கணக்கு)	—	Current Account
நடுத்துறை	—	Middle sector
நம்பிக்கை வெளியீடு	—	Fiduciary issue
நாட்டு மொத்த உற்பத்தி	—	Gross National Product
நாணயம்	—	Credit
நாணய உறுதித்திட்டம்	—	Credit guarantee scheme
நிகர ஆதாய ஆட்டம்	—	Positive sum game
நிகர நாட்டு உற்பத்தி	—	Net National Product
நிகர நீர்மை விகிதம்	—	Net liquidity ratio
நிதி ஆணைக்குழு	—	Finance Commission (Fiscal Commission)
நிருவாகப் பதிலாளி முறை	—	Managing Agency system
நில அடிமைமுறை	—	Serfdom
நிலம்—ஆள்விகிதம்	—	Land-man ratio
நீர்மை விகிதம், சட்ட	—	Statutory liquidity ratio
பசுமைப் புரட்சி	—	Green revolution
பட்டயம்	—	Charter
பதிலாளி நிலையங்கள்	—	Agency houses
படைமானியம்	—	Feudalism
பட்டறை	—	Foundry
பண அங்காடி	—	Money market
பண ஓலை	—	Cheque
பண வணிகர்	—	Money lender
பற்றுக்குறை நிதியாக்கம்	—	Deficit financing
பாரதத்தொழில் நாணய முதலீட்டுக் கழகம்	—	Industrial Credit and Investment Corporation
பாரதத் தொழில் நிதிக்கழகம்	—	Industrial Finance Corporation of India

பாரதத்தொழில் வளர்ச்சி பாங்கு	—	Industrial Development Bank of India
பிறப்பு விகிதம்	—	Birth rate
பின் இணைப்பு (தொழில்)	—	Backward linkage
புதுமை புகுத்தல்	—	Innovation
புள்ளி மதிப்பீடு	—	Point estimate
புறச்சிக்கன நலன்கள்	—	External economics
புறச்சிக்கன விளைவுகள்	—	External economy effects
புறம்சார்ந்த காரணி	—	Exogenous factor
பூஜ்ய ஆதாய ஆட்டம்	—	Zero-sum games
பொருளாதாரத் தேக்கம்	—	Economic stagnation
பொருளாதார மக்கள் தொகைக் கோட்பாடு	—	Economic Theory of Population Growth
பொருளாதார வளர்ச்சி நிலைகள்	—	Stages of Economic growth
பொற்கட்டித் திட்டம்	—	Gold bullion standard
பொன் இறக்குமதி எல்லை	—	Gold import point
பொன் பரிவர்த்தனைத் திட்டம்	—	Gold exchange standard
பொன் ஏற்றுமதி எல்லை	—	Gold export point
போர் முக்கியத் தொழில்கள்	—	Strategic industries
மக்கள்தொகை நிலைமாற்றக் கோட்பாடு	—	Theory of Demographic Transition
மக்கள் செல்வம்	—	Manpower
மதிப்பு இறக்கம் (செலாவணி)	—	Devaluation
மறுநிதிக் கழகம்	—	Refinance Corporation
மாநில பாங்குகள்	—	Presidency Banks
மாநில நிதிக்கழகங்கள்	—	State Finance Corporations
மாற்று உபயோகச் செலவு	—	Transfer cost
மாற்றுரிமை	—	Convertibility
மானிய-உதவி	—	Grants-in-aid
முக்கியத் தொழில்கள்	—	Key industries
முடக்குதல்	—	Dumping
முடிவிடத்து வரிகள்	—	Terminal taxes
முதல்நிலைத் துறை	—	Primary sector
முதல்நிலைப் பொருள்கள்	—	Primary products

முறிவுச் சமநிலை	—	Break even
முன்னுரிமை	—	Priority
முன்னோடியான துறை	—	Leading sector
மூலதன ஆக்கம்	—	Capital formation
மூலதனக் கணக்கு	—	Capital account
மூலதனச் சுரண்டல்	—	Capital drain
மூலதன உற்பத்தி விகிதம்	—	Capital-output ratio
மூலதனத் தொழிலாளர் விகிதம்	—	Capital coefficient of labour
மூலத்தொழில்கள்	—	Core industries
மூன்றும்நிலைத் துறை	—	Tertiary sector
மேல்வரி	—	Surcharge
ரொக்கப்பயிர்	—	Cash crops
வகையீட்டு வட்டிவிகித அமைப்பு	—	Differential rates system
வணிகப்பயிர்	—	Commercial crops
வம்சாவளிமூலம் விரிவடைந்த குடும்பம்	—	Lineally extended family
வரிக்கொள்கை	—	Tax Policy
வரி விதிப்பு	—	Tax levy
வரி வசூலித்தல்	—	Tax collection
வரையிட்ட பொதுக் கம்பெனிகள்	—	Public Limited Companies
வரையிட்ட தனிக் கம்பெனிகள்	—	Private Limited Companies
வளரும் நாடுகள்	—	Developing countries
வளர்ச்சி உதவிநிதி	—	Development Assistance Fund
வளர்ச்சி குறைந்த நாடுகள்	—	Underdeveloped countries
வாங்கும் சக்தி	—	Purchasing power
வாணிகக் கொள்கை	—	Commercial Policy
வாணிக வாரியம்	—	Board of Trade
வாணிகத் திசை	—	Direction of Trade
வெள்ளித் திட்டம்	—	Silver standard